# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1975 அக்டோபர் 28

**Tuesday 28th October 1975**

தொகுதி LXXIV—எண் 1

**Volume LXXIV—No. 1**

©

*தமிழ் நாடு அரசு*
*1976*

GOVERNMENT OF TAMIL NADU
1976

*சட்டமன்றப் பேரவைத் துறை*
*சென்னை-600009.*

*Fort St. George, Madras-600009.*
*Legislative Assembly Department*

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise]

D
VR11, 31 N75
31N76. 64.32

61720

# Tamil Nadu Legislative Assembly Debates.

FOURTEENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA

*28th to 31st October* 1975.

VOLUME LXXIV (Nos. 1 to 4.)

TABLE OF CONTENTS.

*Tuesday, 28th October* 1975.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... ... | i—vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies ... ... | ix—xvi |
| 1. Questions and Answers ... ... ... | 1—40 |
| 2. Adjournment Motion— | |
| Deaths due to stampede in Madurai in the Saurashtra High School campus and the alleged failure of the Police to regulate the crowd .. .. .. .. .. | 41—52 |
| 3. Point of Information— | |
| Seizure of daily 'Makkal Kural' ... ... | 53 |
| 4. Announcement— | |
| Bills passed by the Legislative Councils .. | 53—54 |
| 5. Government Bill— | |
| The Tamil Nadu District Development Councils (Amendment) Bill, 1975 ... .. .. | 54 |
| 6. Motion disapproving the policy of the Ministry .. | 55—137 |
| 7. Papers laid on the Table ... ... | 137 |

PAGES

*Wednesday, 29th October* 1975.

1. Questions and Answers .. .. .. 157—189
2. Announcement—
Bills passed by the Legislative Council .. 189—190
3. Point of Order—
Releasing to press the report of the Ramaprasad Rao Commission before placing it on the Table of the House .. .. .. 190—195
4. Government Bills—
(i) The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Second Amendment Bill, 1974 ... ... ... 195
(ii) The Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1975 ... 195—196
5. Motion disapproving the policy of the Ministry 196—294
6. Papers laid on the Table ... ... ... ... 294—295

*Thursday, 30th October* 1975.

1. Questions and Answers ... ... ... 303—336
2. Calling Attention—
New Policy for procurement of paddy .. 336—339
3. Announcement—
Bills passed by the Legislative Council .. 339—340
4. Motion disapproving the policy of the Ministry ... 340—477
5. Papers laid on the Table ... ... ... ... 478

*Friday, 31st October* 1975.

1. Obituary Reference—
Demise of Thiru K. Thirupathy, ex-M.L.A. .. 481
2. Questions and Answers ... ... ... 482—523
3. Privilege matter—
Alleged misleading statement to the House by the Chief Minister regarding grant of concessions to the Harijans already converted to Christianity ... ... ... ... ... 523—545



PAGES

*Friday, 31st October* 1975—cont.

4. Adjournment Motions—
(i) Death of a staff nurse in the Eye Hospital, Madras on administering an injection ... 545—550
(ii) Collapse of a bridge at Chetpet causing injuries to some labourers ... ... ... 551—560
5. Calling Attention—
(i) Outbreak of cholera in Kanniyakumari district and consequent loss of lives .. .. 560—563
(ii) Inadequate supply of water in the Karungal distributary of the Chittar Pattanamkal in Kanniyakumari district .. .. .. .. 563—564
6. Announcements—
(i) Bills passed by the Legislative Council ... ... 565
(ii) Election to the Madurai University Senate .. 566
(iii) The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1975 ... ... ... 566
(iv) The Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1975 ... ... ... ... 567
7. Government Bills—
(i) The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1975 ... ... ... 566
(ii) The Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1975 ... ... ... ... 568
8. Points of Order—
(i) Failure to give sufficient notice as per rules for consideration of Bills ... ... ... 567—568
(ii) Consideration of Government business on the day set apart for Private Members' business .. 569
9. Non-official Business—
The Tamil Nadu Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 ... 570—616
10. Papers laid on the Table ... ... ... 616—617

# தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

---

## தமிழ் நாடு ஆளுநர்

**மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.**

---

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதல் அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:** பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.) இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை, பின்தங்கிய வகுப்பினர் நலன்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:** தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், நகர அமைப்பு, குடிநீர் வாரியம்.

4. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:** பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

5. **மாண்புமிகு திரு. செ. மாதவன்** (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய்த் துறை, உணவு, வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், பூமிதான் —கிராம தானம் இயக்கங்கள் ஆலைத் துணிகள், ஜவுளி நூல், கைத்தறி, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், பத்திரப், பதிவு, நிலச் சீர்திருத்தங்கள்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU.

His Excellency Thiru KODARDAS KALIDAS SHAH

### Members of the Council of Ministers.

1. THE HON. DR. M. KARUNANIDHI : (Chief Minister) in-charge of Pubilc, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service Officers and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Excise and Backward Classes.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN : (Minister for Health) in-charge of Public Health, Medicine, Town Planning and Water Board.

4. THE HON. THIRU P. U. SHANMUGAM. (Minister for Public Works) in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports

5. THE HON. THIRU S. MADHAVAN : (Minister for Revenue) in-charge of Revenue, Food, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Bhoodhan and Gramdhan, Textiles; Yarn, Handlooms, Law, Courts and Prisons, Registration and Land Reforms

6. THE HON. THIRU S. J. SADIQ PASHA : (Minister for Industries) in-charge of Industries, Electricity, Mines and Minerals, Iron and Steel Control, Companies and Waqfs.

7. THE HON. THIRU Si. Pa. ADITANAR : (Minister for Agriculture) in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Services Co-operative Societies at the Block, District and apex level including the Federation.

8. THE HON. THIRU Mannai P. NARAYANASWAMY: (Minister for Co-operation) in-charge of Co-operation, Agricultural Refinance, Housing including Slum Clearance Board and Accommodation Control.

9. THE HON. THIRU K. RAJARAM: (Minister for Labour and Transport) in-charge of Labour, Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Ex-Servicemen.

10. THE HON. THIRU C. V. M. ANNAMALAI: (Minister for Social Welfare) in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

11. THE HON. THIRU O. P. RAMAN: (Minister for Commercial Taxes) in-charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money Lending, Rural Indebtedness and Legislation on Chits.

12. THE HON. THIRU S. RAMACHANDRAN: (Minister for Local Administration) in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions, Stationery and Printing and Government Press.

13. THE HON. THIRU M. KANNAPPAN: (Minister for Religious Endowments) in-charge of Religious Endowments, Khadi and Village Industries, Rural Industries Project, Milk, Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations, Film Technology, Youth Service Corps and Prosperity Brigade.

14. THE HON. THIRU N. RAJANGAM: (Minister for Harijan Welfare) in-charge of Harijan Welfare, Indian Overseas and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

---

பேரவைத் தலைவர்

**மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம். ஏ**

பேரவைத் துணைத் தலைவர்

திரு. நா. கணபதி, ஏ.எஸ்.ஸி., பி எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**திரு. மா. வே. நாராயணசாமி.**

திரு. எ. ஆர். சுப்பையா.

திரு .முனு. ஆதி

திரு. ஜே. ஜேம்ஸ்

திரு. எ. சுப்பிரமணியம்

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

.. துணைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

குழு அலுவலர்

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

உதவிச் செயலாளர்கள்

**திரு. த. இராதாகிருஷ்ணன்.**

திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.

திரு. இரா. பாலகுரு, பி.ஏ.

விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்

.. எஸ்டேட் அதிகாரி

திரு. வி. சீதாராமன், பி.காம்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்புத்தூர்–மேற்கு |
| 6 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்கத் தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி ரு. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம் |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ வ.) |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம் |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு அ. .. .. .. | எடப்பாடி |
| 18 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 19 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம். |
| 20 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர் |
| 21 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 22 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம் |
| 23 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை |
| 24 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 25 இராசாராம், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | சேலம் 2. |
| 26 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ.வ.). |
| 27 இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். .. | தண்டராம்பட்டு. |
| 28 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 29 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்) | பண்ருட்டி. |
| 30 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 31 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 32 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 33 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.) |
| 34 இராமன், திரு. மு. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 35 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். .. (அமைச்சர்). | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 36 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 37 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 38 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 39 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பேரணமல்லூர். |
| 40 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 41 கணபதி, மாண்புமிகு திரு. என். .. (பேரவைத் துணைத் தலைவர்). | பாபநாசம். |
| 42 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 43 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 44 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 45 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 46 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 47 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 48 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 49 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம். |
| 50 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 51 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 52 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 53 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 54 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 55 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 56 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ |
| 57 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 58 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 59 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர. |
| 60 கார்த்திகேசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 61 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம் |
| 62 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 63 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 64 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ வ.) |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 67 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 68 குப்பல் இராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 69 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 70 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 71 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 72 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 73 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 74 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.) |
| 75 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 76 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை |
| 79 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம் |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை |
| 86 சண்முகம், திரு. பெரி. .. .. ... | திருவாடானை |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 89 சத்தியவாணிமுத்து, திருமதி .. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 90 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 158 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி. எ. கே. | முகையூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 163 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 174 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 79 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 80 பெரியசாமி, திரு. தி. ஓ. | அவிநாசி. |
| 81 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 82 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 83 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 34 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 35 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 36 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 37 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 8 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 9 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 190 மதியழகன், திரு. கே. எ. | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ | இளையாங்குடி. |
| 193 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்), |
| 197 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிரி. |
| 205 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 206 முத்தையா, திரு. கே. கே | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில் |
| 214 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 215 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வடஆர்க்காடு மாவட்டம்). |
| 217 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 218 இராஜா, திரு. எ. எம். | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 221 லத்தீப், திரு. எம். எ. .. .. .. | வாணியம்பாடி. |
| 222 வகாப், திரு. கே. எ. .. .. .. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சீ. க. .. .. | தொட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். .. .. .. | சீர்காழி (செ. வ.) |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. .. | செங்கற்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. .. .. .. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. .. .. | ஹோசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. .. .. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை, (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. .. .. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. .. .. | கும்மிடிப்பூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. .. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. .. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 234 ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் .. .. .. .. | வீரபாண்டி. |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்:—

1 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
2 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1975 அக்டோபர் 28.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

*Social Security Scheme.*

* 86 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Social Security Scheme has been introduced by the Tamil Nadu Government; and

(b) if so, whether the details of the Scheme will be placed on the table of the House ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் முழு விபரங்கள் அடங்கிய சிறு வெளியீட்டின் நகல் ஒன்று *பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : இந்தத் திட்டம் 1974 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை இந்தத் திட்டத்தின் கீழ் எத்தனை பேர் சேர்ந்திருக்கிறார்கள் ? அவர்களிடமிருந்து வரக் கூடிய பணம் வங்கிகளில் டெபாசிட் செய்யப்படுகிறதா ? அல்லது சர்க்கார் காரியங்களுக்காக உபயோகப்படுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் முதலில் வங்கிகளின் மூலமாகப் பணம் செலுத்துகிற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வங்கிகள்

*138-142-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.

சொன்னார்கள். இன்னும் கூடுதலாக நபர்களைச் சேர்க்க அரசாங்கம் தனி முயற்சி ஏதாவது எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாதந்தோறும் பத்து ரூபாய் கட்ட வேண்டுமென்பது மிகச் சுலபமான ஒன்றுதான். இருந்தாலும், நம்முடைய சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு இப்படிப்பட்ட ஊக்க உணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு மற்றவர்கள் தூண்டுதலாக இருந்திட வேண்டும். மாதந்தோறும் பத்து ரூபாய் வீதம் பத்து ஆண்டுகளுக்குக் கட்டினால் ரூ. 1,200 தான் ஒருவர் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆனால், அவருக்கு பத்தாண்டுகள் கழித்து மாதந்தோறும் ரூ. 20 ஓய்வூதியம் கிடைக்கும். இப்படி முப்பதாண்டுகளுக்கு மாதம் 20 ரூபாய் வீதம் ரூபாய் 7,200 அவருக்குக் கிடைக்கிறது. இந்த முப்பதாண்டு காலத்திற்கு மாதந்தோறும் 20 ரூபாய் வீதம் பெற்றுக்கொண்டதற்குப் பிறகு, மொத்தமாக ரூபாய் 1,500-ம் தரப்படுகிறது. ஆகவே, 1,200 ரூபாய் செலுத்திய ஒருவருக்கு 8,700 ரூபாய் கிடைக்கிறது. இதெல்லாம் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் பிரச்சாரம் செய்யவேண்டும் என்று அண்மையில் கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் ஆட்சித் தலைவர்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, இந்தச் சமூக நல பாதுகாப்புத் திட்டத்தைவிட இன்னும் மிகச் சிறப்பான திட்டமான குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தை இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. அதன்படி அரசாங்க ஊழியர் ஒருவர் இறந்துவிட்டால் பத்தாயிரம் ரூபாய் தரப்படுகிறது. இந்தத் திட்டத்தின்படி எத்தனை அரசு ஊழியர் குடும்பங்கள் தமிழக அரசின் சார்பாக பத்தாயிரம் ரூபாய் வீதம் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அரசாங்க ஊழியர் இறந்துவிட்டால் அவர் குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் தரும் திட்டம் 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரையில் அதன் மூலமாக பத்தாயிரம் ரூபாய் வீதம் ஆறுதல் தொகை 2,200 குடும்பங்கள் பெற்றிருக்கிறார்கள்.

**திரு. கே. ஏ. வகாப்:** தலைவர் அவர்களே, இந்த நல்ல சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை பொதுமக்கள் இன்னும் சரியாகப் புரிந்து





கொள்ள முடியாத நிலை இருக்கிறது. அதற்குத் தீவிரமாக ஏற்பாடு செய்து பிரச்சாரம் செய்வதோடு, சமூகப் பாதுகாப்புத் திட்டத்திலே ஈடுபட்டவர்கள் தாங்கள் கட்டிய தொகையிலிருந்து, ஐந்தாண்டுகள், பத்தாண்டுகள் கழித்து மொத்தமாக தங்களுடைய தேவைக்கு கடனைப் பெற வசதி இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதற்கென தனி படம் எடுத்து வெளியிடப்பட்டது. அதன் மூலம் பிரச்சாரமெல்லாம் செய்யப்பட்டிருக்கிறது. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினர்களெல்லாம் கூட ஒவ்வொரு உறுப்பினரும் 20 பேரை இந்தத் திட்டத்தில் சேர்த்து விடுவது என்று முயற்சித்தால் ஒருவகையில் சமுதாயத்திற்கும் அவர்கள் தொண்டு செய்தவர்களாவார்கள். அந்த முயற்சி எடுக்கவேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் பத்து ரூபாயோ, இருபது ரூபாயோ கட்டி இத்திட்டத்தில் சேரலாம். சம்பளமெல்லாம் இரட்டிப்பாகியிருக்கிறது. ஆக, அவர்களெல்லாம் கூட, பத்து, இருபது, அறுபது ரூபாய் என்று திட்டத்திலே சேர்ந்து அவர்களும் முன்வரலாம். பத்தாண்டுக் காலத்திற்குப் பிறகு மாதம் 100 ரூபாய் அளவுக்குக்கூட இப்பொழுது கொடுக்கிற பென்ஷனோடு அதுவும் கிடைக்க வசதியாக இருக்கும். அந்த வகையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அரசாங்கச் சிப்பந்திகள் மட்டும் கட்ட வேண்டுமா? சாதாரண விவசாயத் தொழிலாளிகள், சிறு விவசாயிகள் போன்றவர்கள் கட்டினால் அவர்களும் அதில் பயன் அடைவார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் போன்றவர்களே இந்தத் திட்டத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் இருப்பதற்காக நான் வருந்தப்படுகிறேன். குடும்பப் பாதுகாப்புத் திட்டம்தான் அரசாங்க ஊழியர்களுக்கு இருக்கிற திட்டமாகும். அந்தத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்கள் தவிர வேறு சாதாரண பொதுமக்கள் சேர முடியவில்லை என்பதற்காக சாதாரண பொதுமக்களுக்காகவும், அரசாங்க ஊழியர்கள் அல்லாத மற்ற பொது மக்களுக்காகவும் சமுதாயப் பாதுகாப்புத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பொது மக்களுக்காகக் கொண்டுவரப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் அரசாங்க

ஊழியர்கள் சேர்ந்துகொள்ளலாம். ஆனால், அரசாங்க ஊழியர்களுக்காக உள்ள திட்டத்தில் பொதுமக்கள் இணைந்திட முடியாது.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, இந்த அருமையான சமுதாயப் பாதுகாப்புத் திட்டம் இன்று நகர்ப்புறங்களில் ஓரளவுக்குப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. ஆனால், கிராமப்புறங்களில் அத்தகைய பிரச்சாரம் செய்யாததால் அங்குள்ளவர்களுக்குப் புரியவில்லை. மேலும், இன்று நம்முடைய அரசாங்கம் ஷெட்யூல்ட் பாங்குகள் மூலமும், நம்முடைய மத்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஷெட்யூல்ட் பாங்குகள் மூலமும்தான் இந்தத் திட்டத்தை அமல் செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே, கிராமப் பகுதிகளில் விவசாயிகள் அடிக்கடி சென்று வருகிற கூட்டுறவு வங்கிகளின் மூலம் அந்தத் திட்டத்தை அமல்படுத்தினால் நிச்சயமாக அவர்கள் அதில் சேர்ந்து பலன் அடைய முடியும். அத்தகைய முயற்சியினை அமைச்சர் அவர்கள் செயல்படுத்துவார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முதலில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வந்தோம். இப்போது துணைக் கருவூலங்கள் மூலமும் அந்தத் திட்டத்தை நாம் அமல்படுத்தத் தொடங்கியதன் காரணமாக மேலும், 5,000 பேருக்கு மேல் இப்போது சேர்ந்து இருக்கிறார்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** இந்த சமூகப் பாதுகாப்புத் திட்டம் 1974-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படி ஆரம்பிக்கப்படுகிறபோது, ஒவ்வொரு வருஷத்திலும் எவ்வளவு பேர் சேரக்கூடும் என்று கணக்கிட்டு, இவ்வளவு பேரைச் சேர்க்க வேண்டுமென்று திட்டம் வகுத்து, அந்த முறையில் ஏற்பாடு செய்யப்படுகிறதா? அல்லது சமூக நலத் திட்டம் அறிவித்த உடனே எவ்வளவு பேர் சேருகிறார்களோ, அவ்வளவு பேர் சேர்ந்துகொள்ளட்டும் என்ற முறையில் அமல்படுத்தப்படுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதில் யாரையும் கட்டாயப்படுத்தி சேர்க்க முடியாது. அப்படிக் கட்டாயப்படுத்தி சேர்த்தால்கூட, அவர்கள் 2 மாதம் கட்டிவிட்டு பின்னால் கட்டாமல் விட்டுவிட்டால், கட்டிய பணம் வீணாகப் போய்விடும். இதில் சேருவதற்கு அவர்களாகவே ஊக்கமும், ஆக்கமும் பெற்றுச் சேர





வேண்டும். எதிர்காலத்தை மனதில் கொண்டு, 10 ஆண்டுகள், 20 ஆண்டுகளுக்குப் பிறகு தாங்கள் மாதம் மாதம் கட்டக்கூடிய ரூ. 10, ரூ. 20 இருபது ஆண்டுக்குப் பின் தங்கள் குழந்தைகளுக்குப் பயன்படும் என்ற அளவுக்கு ஒரு தொகை கட்டினால் அது பயன் உள்ளதாக இருக்கும்.

இதைக் கட்டாயப்படுத்தி, ஒவ்வொருவரும் கட்டித் தீரவேண்டும் என்று கணக்கிட்டு, ஒரு ஆண்டில் 1,000 பேர், 2,000 பேர் சேர்க்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட்டு விடலாம். அது எங்கே போய் முடியும் என்றால், அந்த அதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டு அவர்கள் சேர்ந்துவிட்டு, 2 மாதங்கள், 3 மாதங்கள் கட்டிவிட்டு, பிறகு அவர்கள் கட்டாமல் அதிலே தொய்வு ஏற்பட்டு விடுமானால், அந்தப் பணத்தை அவர்கள் இழந்து விடுவார்கள். ஆகவே, கட்டாயப்படுத்த வழியில்லை.

**திரு. ந. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, இன்ஷூரன்ஸ் திட்டத்தில் சேர்ந்தவர்களுக்கு கட்டப்பட்ட தொகையில் குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பிறகு கடன் வழங்குவது போல், இந்தச் சமூக நலத் திட்டத்திலும் தேவைப்படும்போது குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அரசு கடன் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படிக் கடன் வழங்கப்படுமானால், ஒரு குறிப்பிட்ட காலம் முடிந்த பிறகு அவர்களுக்கு மாதா மாதம் கிடைக்கும் நிதித் தொகையை அவர்கள் பெற முடியாது. அந்தப் பயனை இழந்து விடுவார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இந்த சமூக நலத்திட்டம் நகர்ப்புறங்களில் அதிகமாகப் பயன் அளிக்கிறது, கிராமப்புறங்களில் இருக்கும் மக்களை அதிகமாக ஈர்க்கவில்லை என்ற கருத்து நிலவுகிறது. அதற்குக் காரணம், பொதுவாக கிராமப்புறங்களில் இருக்கும் மக்களுக்கு மாதா மாதம் ரூ. 10 கட்டுவதற்கு சிரமமாக இருப்பதால் அந்தத் தொகையைக் குறைந்த அளவுக்குக் கட்ட அரசாங்கம் ஒரு பகுதியை சப்சிடியாகக் கொடுத்து பொருளாதாரத்தில் தாழ்ந்திருக்கும் கிராமப்புற மக்களை ஈர்ப்பதற்கு. . .

MR. DEPUTY SPEAKER: When you ask a question, Sir, be brief.

[1975 அக்டோபர் 28

திரு. ஜே. ஜேம்ஸ்: சப்சிடி தொகை அரசாங்கத்திலிருந்து அளித்து, கிராமப்புறங்களில் இருக்கும் மக்களை அந்தத் திட்டத்தில் ஈர்ப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாதம் ஒரு ரூ. 10 சேமிக்கக்கூடியவர்களுக்கு இந்தத் திட்டம் இருக்கிறது. ரூ. 10 சேமிக்க முடியாதவர்கள் இருக்க முடியாது என்றே நான் கருதுகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், 'ஏ' பிரிவின்படி ரூ. 10 கட்டினால், 10 ஆண்டுகள் கட்டியவர்கள் 30 ஆண்டுகளுக்கு ரூ. 20 பெறுகிறார்கள். அதோடு 30 ஆண்டுகள் முடிந்த பிறகு ரூ. 1,500 பெறுகிறார்கள்.

பத்து ரூபாய் 15 ஆண்டுகள் கட்டினால் ரூ. 35 அவர்கள் 30 ஆண்டுகள் பெறுவதோடு அந்தக் கால இறுதியில் ரூ. 2,500 பெறுகிறார்கள். ரூ. 10 அவர்கள் 20 ஆண்டுகள் கட்டினால், 30 ஆண்டுகளுக்கு மாதம ரூ. 60 பெறுகிறார்கள். அந்தக் கால இறுதியில் ரூ. 1,000 பெறுகிறார்கள்.

இதிலே ரூ. 60 கட்டக்கூடியவர்கள் யாராவது இருப்பார்களானால் 10 ஆண்டுகள் கட்டினால் போதும், மாதம் ரூ. 100,30 ஆண்டுகள் கிடைப்பதோடு, காலம் முடிந்த பிறகு ரூ. 9,500 பெறுகிறார்கள். இந்த நல்ல ஊக்கமான திட்டத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கிராம மக்களிடத்தில் எடுத்துச் சொல்லி, அவர்கள் எல்லாம் தாமாகவே வந்து சேரும் உணர்வை உண்டாக்கவேண்டும்.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை பெரிய தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களை கட்டாயப் படுத்திச் சேரச் சொல்லி, சம்பளம் வாங்கும் நேரத்தில் அதைப் பிடித்துக்கொள்ளும் முறையில், இதை வெற்றிகரமாக நடத்த இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நல்ல யோசனை. ஆனால், அந்தந்த தொழிலாளர் யூனியனின் தலைவர்கள் தொழிலாளர்களை ஒன்றுபடுத்தி, அவர்களை இதில் சேர்ந்து கொள்ளச் சொல்வார்களானால் தொழிலாளர்களுக்கு அது நல்ல ஊதியமாக எதிர்காலத்தில் அமையும்.



1975 அக்டோபர் 28]

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, இந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் அரிசன மக்களுக்கென தனிச் சலுகை காட்ட முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதில் தனிச் சலுகை யாருக்கும் காட்ட இயலாது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்தத் திட்டம் சாதாரணமாக கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்குப் பயன் உள்ள திட்டமாகும். கட்டாயப்படுத்தாவிட்டால் முடியாது. கட்டாயப்படுத்தினால் ஓரளவிற்கு வெற்றிகரமாக இதைச் செய்ய முடியும். ரூ. 10 கட்டுவதற்கு யாராலும் முடியும். ஆகவே, கட்டாயப்படுத்திச் செய்வது நல்லது என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து, அதைச் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கட்டாயப்படுத்துவதற்கு சட்டம் இடம் தருகிறதா என்று பார்க்கவேண்டும். அதுவும் இந்தியாவை ஆளுகிற கட்சியின் உறுப்பினர் ஒருவரே இப்படிப் பட்ட யோசனையைத் தெரிவிக்கிற காரணத்தால், அதுபற்றி ஏதாவது அவசரச் சட்டம் கொண்டு வரமுடியுமா என்பதை நாம் எண்ணிப் பார்க்கலாம்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் கிராமப் புறங்களில் இருக்கும் மக்களுக்குச் சரியாகப் புரியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரம் செய்வதுபோல், ஆங்காங்கு இந்தத் திட்டத்திற்கு நாம் பிரச்சாரம் செய்தால், கல்வி அறிவு அதிகம் இல்லாத கிராம மக்கள் இதன் பயனை உணர்ந்து இவற்றை ஏற்றுக் கொள்வார்கள். ஆகவே, நல்ல முறையில் பிரச்சாரம் செய்ய அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதற்கு மேலும் பிரச்சாரம் செய்யப்பட வேண்டுமென்ற கருத்து ஏற்றுக்கொள்ளப் பட்டு, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

திரு. அ. பரந்தாமன்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தில் சேர கட்டாயப்படுத்தக் கூடாது என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உண்மைதான். ஆனால், சிறு சிறு விவசாயிகள் கிராமப்புறங்களில் ஆண்டுதோறும் செலுத்துகிற நில வரியோடு

[1975 அக்டோபர் 28

சேர்த்து அதை வசூல் செய்வதன் மூலம், அதைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதை அவர்களுடைய விருப்பத்திற்கு விட்டு விடவேண்டுமேயல்லாமல், நில வரியோடு சேர்ப்பது சரியல்ல. அவர்களுடைய மன வருத்தத்தை உருவாக்குவதற்கான நிலையில்தான் இதுபோய் முடியுமே ஒழிய நம்முடைய நல்ல நோக்கம் நிறைவேறுவதற்கான வழி வகையாக இருக்காது.

### *Accident at Keezhathattapparai*

* 87 Q.—THIRU N. K. PALANISWAMY
THIRU A. SUBRAMANIAM
THIRU R. PONNAPPA NADAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of people died during June 1975 near the check post in Tirunelveli district as a result of explosion at Keezhathattapparai (Tuticorin); and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) 9—6—75 அன்று கீழத்தட்டப்பாறையில் உள்ள தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தைச் சார்ந்த தணிக்கைச் சாவடிக் கொட்டகையில் வெடி விபத்து ஏற்பட்டு அதன் காரணமாக 18 பேர் உயிர் இழந்தனர். 43 பேர் காயமுற்றனர். இதன் தொடர்பாக வழக்கு ஒன்று பதிவாகி அது புலனாய்வில் உள்ளது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த வெடி விபத்திற்கு என்ன காரணம், அதற்கு யார் யார் உடந்தையாக இருந்தார்கள், அவர்கள் கைது செய்யப்பட்டார்களா? அந்த வழக்கு என்ன நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்தத் திட்டத்திலே பணிபுரிகிற சிலர், குறிப்பாக கல் உடைத்தல் தணிக்கைச் சாவடி என்று கொட்டகை இருக்கிறது. அதிலே பணி புரிகிற ஊழியர்கள் சிலர் திருட்டுத்தனமாக மறைத்து வைத்திருந்த வெடி மருந்து வெடித்து, அந்தச் சேதம் ஏற்பட்டது. இதன் காரணமாக, சின்னக்



1975 அக்டோபர் 28]

கலியப் பிள்ளை, உதவிப் பொறியாளர், தூத்துக்குடி துறைமுகத் திட்டம்; சுந்தரம், இளநிலைப் பொறியாளர், தூத்துக்குடி துறைமுகத் திட்டம்; என். மகராஜன், மேலாளர், தட்டப்பாறை தணிக்கைச் சாவடி, தூத்துக்குடி துறைமுகத் திட்டம்; ஆர். அழகிரிசாமி; காவற்காரம், தட்டப்பாறை தணிக்கைச் சாவடி, தூத்துக்குடி துறைமுகத் திட்டம் ஆகியோர் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. அவர்கள் ஜாமீனில் விடப்பட்டு இருக்கிறார்கள்.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவரவர்களே, இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்த விபத்தில் உயிர் இழந்தவர்களுடைய குடும்பங்களுக்கு முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 25 ஆயிரம் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, உயிர் இழந்தவர்கள் எண்ணிக்கை 18 என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த விபத்திலே காயம் அடைந்தவர்களும் இருக்கக்கூடும். இதிலே சம்பந்தப்படாத வெளி ஆட்களும் இருக்கக்கூடும். அவர்கள் எவ்வளவு பேர்? அவர்களிலே யாராவது இதனால் உடல் ஊனமுற்று இருந்தால் அவர்களுக்கு இப்போது இந்த உதவி கொடுப்பதோடு மேலும் எதாவது வேலை வாய்ப்பினையும் பெற்றுக் கொடுக்க அரசு முனையுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இறந்தவர்களுடைய குடும்பத்திற்காகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 25 ஆயிரத்தில், பெரியவர்களை இழந்த ஏழு குடும்பங்களுக்கு தலா 2,000 ரூபாய் என்றும், மற்றும் இளைஞர்களை இழந்த பதினொரு குடும்பங்களுக்கு தலா ரூபாய் ஆயிரம் என்றும் மொத்தம் ரூ. 25 ஆயிரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது அன்னியில் காயமுற்ற 43 பேர் விஷயத்தில் மத்திய அரசு பிரதமர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 வழங்கப் போவதாக அண்மையில் செய்தி வந்துள்ளது. மிக அதிகமாகக் காயமுற்றோருக்கு தலா ரூ. 840 என்றும், சற்றுக் காயம் குறைவாக உள்ளவர்கள் விஷயத்தில் ரூ. 300 என்றும்

சாதாரணக் காயமுற்றோர் 28 பேருக்கு தலா ரூ. 100 என்றும் அளிக்கப்பட இருக்கின்றது.

**திரு. இரா. இராமலிங்கம்:** தலைவரவர்களே, மத்திய அரசின் பொறுப்பிலுள்ள துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள விபத்தில் நஷ்ட ஈடு கொடுக்கும் பொறுப்பினை மத்திய அரசு ஏற்க வேண்டாமா? அவர்களுக்கு மத்திய அரசு நஷ்ட ஈடு கொடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதைத் தான் நான் ஏற்கெனவே சொன்னேன். நமது அரசின் சார்பில் இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு மொத்தமாக ரூ. 25,000 முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்பட்டு இருக்கின்றது. காயமுற்றோர் 43 பேருக்கு மத்திய அரசின் சார்பில் ரூ. 10,000 அளிக்கப்பட்டிருக்கின்றது.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பாதிக்கப்பட்ட பெரியவர்களுடைய குடும்பங்களுக்குத் தலா ரூ. 2,000 அளிக்கப்பட்டது என்று. மாநில அரசும், மத்திய அரசுமாகச் சேர்ந்து, இப்படி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தலா ரூ. 5,000 கொடுக்க ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நமது நிதித் திறனை மனதில் வைத்து, மனிதாபிமான உணர்ச்சியோடு இந்த அளவிற்கு நிதி உதவி, நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கின்றது. ரூபாய் 2,000 கொடுக்கும்போது ரூ. 5,000 கொடுத்தால், ரூ. 5,000 கொடுக்கும் போது ரூ. 10,000 கொடுக்க இயலுமா என்று கேட்கக்கூடும். நம்மால் இயன்ற அளவிற்குக் கொடுத்திருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, விபத்திற்குக் காரணமான இந்த வெடி மருந்து, அது சேமித்து வைக்கப்பட்ட இடத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும் என்று சொன்னார்கள். அரசுக்குச் சொந்தமான இந்த வெடி மருந்து, எந்த அளவிற்குத் திருட்டுப் போயிருக்கின்றது என்ற விவரங்கள் அரசிடம் உள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இது தூத்துக்குடி துறைமுகத்திற்குச் சொந்தமான பொருளாகும். இதை அங்கே பணி புரிகின்ற சில அதிகாரிகளும் மற்ற சில மேஸ்திரிகளும், காவலர்களில் சிலரும் சேர்ந்து எடுத்து, வெளியில் விற்பதற்காக மறைத்து வைத்திருந்தார்கள். அந்த நேரத்தில் இந்த விபத்து ஏற்பட்டது.



**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, வெடி விபத்திற்குக் காரணமான பொருளைக் கள்ளத்தனமாக மறைத்து வைத்திருந்தார்கள் என்று சொல்லுகின்றார்கள். இது சம்பந்தமாக வழக்கு இருக்கின்றதா? விசாரணை நடைபெறுகின்றதா? யாராவது கைது செய்யப்பட்டிருக்கின்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, முதலிலேயே சொன்னேன். நான்கு பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த விபத்து சம்மந்தமாக தட்டப்பாறை காவல் நிலையத்தில் குற்ற எண் 78/75-ல் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையும் முடிந்துவிட்டது. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த விபத்திற்குக் காரணமான வெடி மருந்து எந்த அதிகாரியின் பொறுப்பில் இருந்தது? வெடி மருந்துச் சட்டத்தின்கீழ் (எக்ஸ்ப்ளோஸிவ்ஸ் ஆக்ட்) எடுத்துக்கொள்ள வேண்டிய பாதுகாப்பினை அந்த அதிகாரி முறையாக எடுத்திருந்தாரா என்பது போன்ற விவரங்கள் அரசிடம் உள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அந்த விவரங்கள் இல்லை. ஆனால் முக்கியமாக, அந்தப் பொறுப்பில் இருந்த உதவிப் பொறியாளரும் இதில் ஈடுபட்டிருந்த காரணமாக அவரும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

*Text books in Telugu*

*88 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the details of Text books in Telugu printed by this Government for various classes in the Primary and High Schools in the State?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தெலுங்கு மொழியில் பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டு வெளியிடப் பட்டவை:

1. வரலாறு பாடப் புத்தகங்கள், நான்கு, ஐந்து, ஆறு, ஏழு வகுப்புகளுக்கு.

2. புவியியல் பாடப் புத்தகங்கள், நான்கு, ஐந்து, ஆறு வகுப்புகளுக்கு.

3. அறிவியல் பாடப் புத்தகங்கள் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு வகுப்புகளுக்கு.

4. கணித பாடப் புத்தகங்கள் மூன்று, நான்கு வகுப்புகளுக்கு.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, though a few books have been published in Telugu for History and Geography, the following text books for the following Standards have not been published so far :

Science for VII, VIII and IX Standards.

Mathematics for VII, VIII and IX Standards.

History for VIII and IX Standards.

Geography for VI, VII, VIII and IX Standards.

Further, the exact Telugu text book for VIII Standard has not been announced yet. So, many people are using the books published by the Andhra Government; Others have no books at all. I have already brought this to the notice of the Department. May I know from the Hon. Minister whether quick action will be taken to supply these text books to students ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கணக்குப் புத்தகங்களைப் பொறுத்தமட்டில், 5, 6 வகுப்புகளுக்கான புத்தகங்கள் அச்சிலிருந்து விரைவில் வெளிவர இருக்கின்றன. அது போன்றே 7-வது வகுப்பிற்கான ஜியாக்ரஃபி, புவியியல் பாடப் புத்தகங்களும் விரைவில் வெளிவர இருக்கின்றன. மற்ற, மற்றப் புத்தகங்களும் படிப்படியாக ஒவ்வொரு வகுப்பிற்கும் விரைவில் கொண்டுவர முயற்சிக்கின்றோம். இப்போது எந்த எந்தப் புத்தகங்கள் இல்லையோ அவற்றை ஆந்திரப் பிரதேசத்திலிருந்து அங்கே கொண்டுவருவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதுபற்றி விரைவில் ஆராயும்படி கல்வித் துறையினர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, தமிழகத்திலே கல்வித் துறையில், தெலுங்கு மொழி பேசும் சிறுபான்மையோருக்கு நல்ல



விதத்தில் பாதுகாப்பு அளிக்கப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய முறையில் தனிப் பிரிவுகள் அல்லது பள்ளிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். ஆனால் பக்கத்திலுள்ள ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த சித்தூர் மாவட்டத்தில், பல்வேறு கிராமங்களிலே தமிழ் மொழி பேசுகின்றவர்களாகவே இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட கிராமங்களிலே தமிழ்மொழி பாட மொழியாக இருக்க வேண்டும் என்று அந்த அரசினை பல ஆண்டு காலமாகக் கேட்டுக்கொண்டும் அவர்களுக்கு அந்த வசதியினை ஏற்படுத்தித் தருவதாகத் தெரியவில்லை. அண்மையில்கூட நாகலாபுரத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் தமிழைப் பாட மொழியாக ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். வைத்தார்களா இல்லையா என்று தெரியவில்லை. நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் கூட அவர்கள் இதுபற்றி வேண்டுகோள் விடுத்ததாகத் தெரிகின்றது. இந்த நிலையில், இதுபற்றி ஆந்திர அரசினை நேரடியாகவோ அல்லது மத்திய அரசின் மூலமோ அணுகி அம் மாநிலத்தில் தமிழ் மொழி பேசும் பெரும்பான்மைப் பகுதியினர் உள்ள பள்ளிகளில் அவர்களுக்குக் கல்விப் பாதுகாப்புத் தர வேண்டும் என்பதை நமது அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தென் மாநிலங்களைப் பொறுத்தமட்டில், கல்வித் துறையில் சிறுபான்மையோருக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பது பற்றி நான்கு மாநிலங்களைச் சேர்ந்த அமைச்சர்களும் கூடிப் பேசியிருக்கின்றார்கள். இதில் தமிழகத்தில் சிறுபான்மையோருக்கு எப்படி வசதி வாய்ப்புகளைச் செய்து தருகின்றோமோ அதுபோன்றே ஆந்திரத்தில் உள்ள தமிழ்மொழி பேசும் சிறுபான்மையோருக்கும் அவர்கள் தக்கப் பாதுகாப்பினைக் கொடுத்திருக்கின்றார்கள். ஆந்திரக் கல்வி அமைச்சர் அவர்களிடமும் இதுபற்றிப் பேசியிருக்கின்றேன். அவர்களும் நம்மிடம், அங்குள்ள சில குறைகள் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவற்றைப் போக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். அவர்களும் அங்குள்ள சிறுபான்மையோருக்குள்ள பாதுகாப்பினை அளிக்க தவைம் செலுத்துவதாக வாக்குறுதி அளித்திருக்கின்றார்கள்.

THIRU B. VENKATASWAMY : Sir, from the answer given by the Hon. Minister, lot of Telugu books have not yet been printed even though half-yearly examination is fast approaching. May I

know from the Hon. Minister whether quick action to print all the text books which are required by the Telugu students in the State will be taken ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, இப்போது துவக்கப்பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளிகள் வரையில் அவற்றுக்கான பாடப் புத்தகங்களை வகுப்பு வாரியாக நாம் வெளியிட்டு வருகின்றோம். விரைவில் எல்லாப் புத்தகங்களும் வெளியிடப்பட வேண்டும் என்ற முறையில்தான் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம். இன்னும் சில ஆண்டுகளில் இப்படி அரசே அனைத்தையும் வெளியிடும் தன்மை முற்றுப்பெறும்.

### ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு கோடை விடுமுறை

* 89 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் கோடை விடுமுறையை அனுபவிப்பதற்கு தடை ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், தடையைப் போக்கிட அரசு ஏதேனும் முயற்சி மேற்கொண்டுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா** : தலைவரவர்களே, ஒரே இடத்தில் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றவர்களுக்கும் அதே இடத்தில் ஆசிரியர் அல்லாத ஊழியர் என்ற முறையில் பணியாற்றுகின்றவர்களுக்கும் இடையிலுள்ள சில நடைமுறை வித்தியாசங்களை நீக்குவதற்கு அரசு ஏதாவது வழிவகை காணுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, இந்த இரண்டு தரப்பினருக்கும் இடையிலுள்ள சில நடைமுறை வித்தியாசங்களைப் போக்க வேண்டும் என்று கூறுவது சரியில்லை. ஆனால் தமிழ் நாட்டில் அரசுத் துறையில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடுப்புச் சலுகைகளை தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களல்லாத ஊழியர்களுக்கும் பொருந்தும் என்று ஆணை பிறப்பித்து இருக்கிறோம்.





அந்த வகையில் அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு உள்ள நடைமுறை விதிகளை, விடுப்பு போன்ற சில விதிமுறைகளை அனுபவிக்க தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும் உரிமை உண்டு என்று அளிக்கப்பட்டிருக்கின்றது.

### *Agrarian History of Tamil Nadu.*

*90 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Historical Research Commission has conducted a Seminar on " Agrarian History of Tamil Nadu " in October, 1974; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : (அ) ஆம்.

(இ) 18 ஆம் நூற்றாண்டு நடுப் பகுதியிலிருந்து 20 ஆம் நூற்றாண்டு நடுப்பகுதி வரையிலான தமிழ்நாட்டின் வேளாண்மை வரலாறு இக் கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது. இன்றைய வேளாண்மை அமைப்புக்கும் அன்றைய சென்னை ராஜதானியில் நிலவி வந்த அரசியல், சமூக வரலாற்றுக்கும் உள்ள தொடர்புகளை வெளிப்படுத்துவதே இக்கருத்தரங்கின் நோக்கமாகும்.

(முற்பகல் 9-30)

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister for Education when they are going to publish these articles?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, இந்தக் கருத்தரங்கு 1974 அக்டோபர் 23, 24 ஆம் நாட்களில் நடைபெற்றது. தமிழ்நாடு வரலாறு ஆராய்ச்சி மன்றம் இக்கருத்தரங்கை நடத்தியது. கருத்தரங்கைத் தொடங்கி வைத்து ஆணையாளர் நல்கிய கருத்துகள், டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷையாவின் தொடக்க உரை, டாக்டர் சாரதா ராஜு அவர்களின் ஆராய்ச்சி அறிக்கை, டாக்டர் தருமகுமார் அவர்களின் ஆராய்ச்சி அறிக்கை, டாக்டர் அருண் பந்தோபாத்தியாயா அவர்களின் ஆராய்ச்சி அறிக்கை, பேராசிரியர் இர்ஃபன் ஹபீப் அவர்களின் ஆராய்ச்சி அறிக்கை, கருத்தரங்கு அளித்த பரிந்துரைகள் ஆகியவை அந்தக் கருத்தரங்கில் படிக்கப்பட்டன. அதன்மீது இனி ஆராய்ச்சி நடத்த இருக்கிறார்கள். அதற்கு ஆராய்ச்சி மாணவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

[1975 அக்டோபர் 23

அவர்கள் ரயத்துவாரி முறையின் பொருளாதார விளைவுகள் பற்றி பகுப்பாய்வு செய்யத் தொடங்குமுன் ஆங்கில அமைப்பினால் புகுத்தப்பட்ட மாறுதல்களை முழு அளவில் அறிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது என்பதையும், விலைவாசிகள், வரி வசூல், நில விற்பனை விலைகள், சராசரி மக்கள் தொகை போன்றவை குறித்த விவரங்களைத் தொகுக்க வேண்டியதன் அவசியத்தையும் இக்கருத்தரங்கு வலியுறுத்தியது. அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ள விவசாயிகள் இயக்கம் பற்றிய ஆய்வை மேற்கொள்ள வேண்டும் எனவும் சமூகச் சீர்திருத்தம், அரசியல், வேளாண்மை நோக்கில் இயக்கங்கள் ஆகியவற்றை ஆராய வேண்டும் எனவும் இக்கருத்தரங்கு பரிவுரை செய்தது. அந்தப் பரிவுரைகளின் அடிப்படையில் ஆராய்ச்சிகள் நடைபெறும்.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, அந்தக் காலத்தினுடைய உழவர்கள், விவசாயிகள், வேளாண்மை முறைகளைப்பற்றி எல்லாம் ஆராய்ந்து சொல்வதற்காக கருத்தரங்கிலே நடைபெற்ற விவாதங்கள் அடிப்படையிலே ஆராய்ச்சி நடைபெறுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தக் காலத்தில் ஆறு கடமைகளில் ஒன்றைத்தான் அரசன் வைத்துக்கொண்டான். மீதி 5 கடமைகளை விவசாயிகளிடம் விட்டுவிட்டான் என்று வரலாறு சொல்கிறது. அப்படிப்பட்ட வரலாறுகளை எல்லாம் தொகுத்து, புதிய கால முறைகளையும் தொகுத்து, நூல் வடிவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கிடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பண்டைக் காலத்தில் இருந்த தன்மைகளைப் பற்றிச் சொல்கிறார்கள். ஆனால் நான் குறிப்பிடுவது 1750 முதல் 1947 வரை இருக்கிற எல்லா முறைகளையும் பற்றி ஆராய்ந்து சொல்வதற்குரிய ஒரு ஏற்பாடு. அதுபற்றி கருத்தரங்கு நடைபெற்றது. அந்தக் கருத்தரங்கிலே பல பரிந்துரைகளை வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகள் மீது ஆராய்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவர்களுடைய ஆராய்ச்சிக் குறிப்புகள் நூல் வடிவில் கிடைக்குமானால், அதைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் அரசுக்கு இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இந்த ஆராய்ச்சியானது அந்தக் காலக்கட்டத்தின் விவசாய முறை, பொருளாதாரத்



1975 அக்டோபர் 28]

தன்மை போன்றவைகளைப் பற்றி நடப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கு அரசாங்கம் நிதி உதவி செய்திருக்கிறதா? இது கடந்த கால ஆராய்ச்சி பற்றியது; தற்காலத்தில் நம்முடைய வேளாண்மைத் துறைக்கு இதனால் பயன் இருக்குமா? அப்படியானால் அதன்மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ள 3, 4 ஆராய்ச்சி மாணவர்களுக்கு உதவிப் பணம் தந்து, தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் ஆராய்ச்சிக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அப்படி நடைபெறுகின்ற ஆராய்ச்சியானது ஒரு நாட்டின் தொழில் முறை, அதன் மேம்பாடு, பொருளாதாரத் தன்மை, அதன் வளர்ச்சி தற்காலத்தில் எந்த எந்த வகைகளிலே அதிலிருந்து மாறுபட்டிருக்கிறது என்பன போன்ற வரலாற்று உண்மைகளை வெளிப்படுத்துவதாக இருக்கும். அதைக் கருதித்தான் 1750 முதல் 1947 வரையிலான காலகட்டத்திற்குரிய ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆராய்ச்சியின் மூலம் வேளாண்மை முறைகள், சமூக சீர்திருத்தங்கள், பொருளாதார மேம்பாடு, தற்காலத்தில் ஏற்பட்டிருக்கிற மாற்றங்கள் ஆகியவை கண்டறியப்படும். அது எதிர்காலத்தில் நம்முடைய திட்டங்களை வகுக்கப் பயன்படும். ஆராய்ந்து அளிக்கப்படும் ஆய்வுரை கிடைத்த பின்னால் என்னென்ன நடவடிக்கைகள் எடுப்பது, என்னென்ன வகைகளில் பயன்படும் என்பதுபற்றி ஆலோசிக்கப்படும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, நம்முடைய முன்னவர்கள் "யானை கட்டி போர் அடித்தார்கள்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு அந்தக் காலத்திலேயே பசுமைப் புரட்சியில் முன்னேறியிருக்கிறார்கள். தற்காலத்தில் நாம் விஞ்ஞான அடிப்படையிலே பசுமைப் புரட்சி செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த பசுமைப் புரட்சியில் நம்முடைய முன்னவர்கள் சிறந்து விளங்கினார்களா அல்லது நாம் சிறந்து விளங்குகிறோமா என்ற ஆராய்ச்சியும் இடம் பெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, புலவர்கள் பல்வேறு வகைகளில் பாடும்போது உயர்வு நவிற்சி அணியில் பாடுவார்கள். அப்படிப் பாடும்போது 'யானை கட்டி போர் அடித்தார்கள்' என்று நாட்டின் வளத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம்கூட வேண்டுமானால் ஒரு இடத்தில் போர் அடித்துக் காட்டலாம். (சிரிப்பு) யானை கட்டி போர் அடித்-

[1975 அக்டோபர் 28

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆறாயிரத்து எண்பது பேர்.

(இ) ஆண்களுக்கானக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களின் புள்ளிவிவரங்கள் சமய வாரியாக வருமாறு :—

| | |
|---|---|
| இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் | 5,340 |
| இஸ்லாமிய சமயத்தைச் சேர்ந்தவர்கள் | 316 |
| கிருத்துவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் | 424 |
| மொத்தம் | 6,080 |

## *Drugs Stores*

* 93 *Q*.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether there are proposals under the consideration of the Government to require Drugs Stores being kept open during nights also; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.**

(இ) இம்மாநிலத்தில் இரவு-பகல் எந்நேரமும் மருந்து விற்பனையையும் மருந்தாக்குதல் பணியையும் செய்து வந்த சில மருந்துக் கடைகள் இந்திய அரசு பிறப்பித்த 1970 ஆம் ஆண்டு மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு ஆணையின் மூலம் அனுமதித்த குறைந்தளவு ஆதாயத் தொகை காரணமாக அப்பணியை நிறுத்திவிட்டன. கூடுதல் பணியாளர்களை நியமிப்பதன் மூலம் இரவு நேரத்தில் மருந்து விற்பனை செய்வதற்காக மருந்தாக்குநர்களுக்கு ஊக்கத் தொகை அளிப்பது குறித்து இந்திய மருந்துப்பொருள் கட்டுப்பாட்டு அதிகாரி ஆய்வு செய்தார். எனினும், அது கைவிடப்பட்டது. முறைமாற்றுப் பணியில் மருந்தாக்குநர்களை நியமிப்பதன் மூலம் ஆதாயம் உள்ள முறையில் இப்பணியை நடத்த இயலும் வகையில், இரவு நேரத்தில் மருந்துப் பொருட்களை விற்பனை செய்யும் மருந்துக் கடைகளுக்கு, கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின் விதித் துறைகளிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று மருந்துப்



1975 அக்டோபர் 28]

பொருள் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்த கருத்துரை தொழிலாளர் நல ஆணையாளரைக் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

மருந்துப் பொருட்கள், குழந்தை உணவுகள் ஆகியவற்றை மட்டுமே விற்பனை செய்துவரும் வணிகர்களுக்கு வாராந்திர விடுமுறை பற்றிய விதியினின்றும் ஏற்கெனவே விதி விலக்களிக்கப்பட்டுள்ளது.

THIRU B. VENKATASWAMY: At certain times, medicine are not available during night times. Will the Hon. Minister for Public Health take steps to reduce profits and open more drugs stores to cater to the needs of the people during nights?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, பெரும்பாலான மருந்துக் கடைகள் வைத்திருப்பவர்கள் தனிப்பட்டவர்கள். அவர்களுக்குக் கிடைக்கிற குறைந்த லாபத்தை வைத்துக்கொண்டு மருந்துகள் விலையை மத்திய அரசு கட்டுப்பாடு செய்திருப்பதால் இரவு நேரங்களில் ஆகிற அதிகச் செலவை தாக்குப்பிடிக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதைக் கருதிப் பார்க்கும் போது மத்திய அரசு மருந்து விலைக்கட்டுப்பாட்டைச் சிறிது தளர்த்த வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் அவர்கள் எந்தவகையிலும் தளர்த்துவது இல்லை என்று சொல்லி விட்டார்கள். அண்மையில் சூப்பர் மார்க்கெட் போன்ற இடங்களில் இரவு நேரங்களில் மருந்துக் கடைகளை வைத்துக் கொள்ளலாம் என்ற செய்தியைப் பார்த்தேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, கோவையிலே சூப்பர் மார்க்கெட்டிலே மருந்துக் கடை வைத்திருக்கிறார்கள். பெரிய நகரங்களிலே, மாவட்டத் தலைநகரங்களிலே கூட்டுறவுக் கடைகள் இருக்கமானால் அவைகள் அல்லது பெரிய கடைகள், சென்னை நகரத்தில் சில பெரிய கடைகள் சாஉறிப் சிங் கடை போல 24 மணி நேரமும் திறந்து வைத்திருக்கிறார்களே, அப்படி அதிக மூலதனம் போட்டு நடத்துகிற கடைகளையாவது 24 மணி நேரம் நடத்த செய்ய அரசு ஆவன செய்யுமா? இந்தப் பெரிய கடைகளுக்குக் கட்டுப்படி ஆகாமல் போகாது. ஆகவே அரசு இதற்கு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

[1975 அக்டோபர் 28

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அவர்களிடத்தில் கலந்து பேசியதில் மருந்துக்கு ஒரு சிறு கட்டண உயர்வுக்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதைச் சட்டப்படி ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இரவு நேரத்தில் பணியாற்றுகிறவர்களுக்குப் பணி செய்கிறவர்கள் சட்டம் இருக்கிறதே, அதில் சில தடைகள் இருக்கின்றன. இதைப் பற்றி லேபர் கமிஷனர் அவர்களுக்குத் தெரிவித்து இதற்கு விதி விலக்கு அளிக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறது. அது முடிவாகவில்லை. சூப்பர் மார்க்கெட்கள் பொதுமக்களின் நன்மைக்காக நடத்தப்படுகின்றவை. எங்கெங்கே இரவு நேரங்களில் வைக்க வசதி இருக்கிறதோ அந்த இடங்களில் மருந்து விநியோகத்தை மேற்கொள்ள வேண்டுமென்று நானும் இந்த நேரத்தில் ஆலோசனையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Transportation Plan for Coimbatore.*

* 94 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether the traffic and transportation studies to evolve a suitable transportation plan for Coimbatore have been completed; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆய்வுகள் இன்னமும் நடந்து வருகின்றன.

(இ) கோயம்புத்தூர் பெருநகர்ப் பகுதிக்கான பயணப் போக்குவரவு, சரக்கேற்றுப் போக்குவரத்து ஆய்வுபற்றிய அடங்கல் திட்டத்தைத் தயாரிப்பதற்கான பல்வேறு ஆய்வுகளை தமிழக அரசு நகர—நாட்டுப்புற அமைப்பு இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த சிறப்பாய்வுப் பிரிவு ஒன்று நடத்தி வருகிறது. இப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கோயம்புத்தூர் பெருநகரப் பகுதியின் பரப்பு 760.76 சதுர கிலோ மீட்டராகும். இதில் கோயம்புத்தூர், சிங்காநல்லூர் நகராட்சிகளும், கோயம்புத்தூர் நகரைச் சுற்றியுள்ள சிறந்த நகர்ப்புறப் பகுதிகளான பெரியநாயக்கன்பாளையம், கணபதி, குறிச்சி, குனியமுத்தூர், மதுக்கரை ஆகியவையும் அடங்கும்.



1975 அக்டோபர் 28]

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவரவர்களே, இப்போது கோயம்புத்தூரை கார்ப்பரேஷனாக மாற்றியிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டம் மிகவும் அவசியமும், அவசரமுமாக இருக்கிறது. லாரிப் போக்குவரத்து, பஸ் போக்குவரத்து இவைகளை எந்தெந்த முறையில் மாற்றியமைக்க வேண்டுமென்று இந்தக் குழு சர்க்காருக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறதா? அதன் விவரம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, எதையும் மாற்றுவதற்கு முன்னாலே, உண்மையான நிலவரம் என்ன என்பதைப் பற்றிய புள்ளி விவரத்தைச் சேகரிக்கவேண்டும். இப்படிப் புள்ளி விவரங்களை ஏராளமாகச் சேகரித்த பின்னால் புள்ளி விவரங்களை கம்ப்யூட்டருக்குக் கொடுத்து இவைகளை ஒழுங்குபடுத்திப் போக்குவரத்து நெரிசல் எந்தப் பகுதியில் வளரும், எங்கே வளருவதற்கு வாய்ப்பு இருக்கிறது, எங்கே வாய்ப்பாக இருக்கும், என்ன இடத்தில் என்ன மாற்றம் செய்ய வேண்டுமென்று விரிவாக ஆராயவேண்டும். புள்ளிவிவரங்களை தொகுக்கிற பணி முடிந்த பிறகு ஆராயவேண்டிய கட்டாயம் இருக்கிறது. இது ஒரு ஆண்டு ஆனாலும் ஆகும். மாநகராட்சியாக இருந்தாலும், வெறும் நகராட்சியாக இருந்தாலும் இந்தக் கடமை தனிக் கடமை. இந்தக் கடமை முறைப்படி நடக்கும்.

## குத்தகை தள்ளுபடி மாற்றம் குறித்த வழக்குகள்

* 97 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970 முதல் 1974 வரையான காலண்டர் ஆண்டுகளில், திருநெல்வேலி மாவட்டத்தில் தாசில்தார் அவர்களிடம் குத்தகைத் தள்ளுபடி அல்லது ரெவிஷன் போட்டு மனு கொடுத்த வழக்குகள் இதுவரை எத்தனை முடிவடையாமல் இருக்கிறது?

(இ) காலதாமதத்தைத் தவிர்க்க அரசு எடுத்துக்கொண்ட முயற்சி யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

@ 143–145-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 அக்டோபர் 28

(இ) திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட வட்ட ஆட்சியர்களுக்கு, நிலுவையிலுள்ள கோப்புகளை விரைவில் முடிவு செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். திடீர் சோதனைக்குச் செல்லும்போது இது சம்பந்தப்பட்ட கோப்புகளையும் பரிசீலிக்குமாறு கோட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : கேள்வி எண்கள் 95, 96 ஒத்திவைக்கப்படுகின்றன.

**திரு. ச. சங்குமுத்து தேவர்** : தலைவரவர்களே, இது மாதிரிப் போடக் கூடிய மனுக்களை விரைவில் முடிப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? குறிப்பாக, 1971 ஆம் ஆண்டிலே போடப்பட்ட மனுக்கள் 11, 1972-ம் ஆண்டிலே 4, 1973 ஆம் ஆண்டிலே 3, 1974 ஆம் ஆண்டிலே 14 ஆகிய இந்த மனுக்களெல்லாம் கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன, அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவரவர்களே, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதற்கு மூலக் கேள்வியிலேயே பதில் சொன்னேன். 1970 இலே 50 மனுக்களில் 4 மனுக்கள் தான் நிலுவையில் உள்ளன.

**திரு. சோ. அழகர்சாமி** : தலைவரவர்களே, இந்த நிலை திருநெல்வேலி மாவட்டத்தில் மாத்திரமல்ல. எல்லா மாவட்டங்களிலும் இவைகள் நடந்து கொண்டு வருகின்றன. இப்படி வறட்சி ஏற்பட்டவுடனே நிலச் சொந்தக்காரர்களுக்கு நில வரி, மற்ற வரிகளெல்லாம் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறதே, கடனையெல்லாம் ஒத்தி வைக்கிறோமே, சாகுபடி செய்யக் கூடிய குத்தகையையும் வறட்சி காரணமாகத் தள்ளுபடி செய்யக் கூடிய நடவடிக்கைகள் எடுத்தால் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவரவர்களே, வறட்சியின் காரணமாக விளையாவிட்டால் வாரம் கொடுக்கவேண்டியதில்லை என்று சட்டத்தில் இருக்கிறது.

### திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்

* 98. வினா—**திரு. எம். முத்தையா** : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



1975 அக்டோபர் 28]

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இல்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா** : தலைவரவர்களே, இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக நிலச் சொந்தக்காரர்களுக்கு . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அந்தக் கேள்வி முடிந்து, அடுத்த கேள்வி 98-ம் கேட்கப்பட்டு, பதில் சொல்லியாகி விட்டது.

### ஒகேனக்கல் நீர்மின் திட்டம்

* 99. வினா—**திரு. என். மாணிக்கம்**:

**திரு. என். கே. பழனிசாமி** :

**திரு.** ரா. ரா. முனுசாமி :

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கலில் புதிய நீர் மின் நிலையம் ஏற்படுத்துவது சம்பந்தமாக கர்நாடக அரசின் சார்பிலும் தமிழ்நாடு அரசின் சார்பிலும் பேச்சு வார்த்தை நடைபெற்றதா?

(இ) ஆம் எனில் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : (அ) ஆம்.

(இ) தமிழகப் பொதுப் பணித் துறை அமைச்சருக்கும் கர்நாடக பொதுப்பணி மின்சக்தி அமைச்சருக்கும் இடையே 5—6—1974 அன்று அமைச்சர்கள் நிலையில் ஹொகேனக்கலில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது சில முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆற்றின் பல்வேறு பகுதிகளிலிருந்து மின் சக்தி உற்பத்தி செய்வதற்கான தகுந்த செயற் குறிப்புகளை இரு மாநிலங்களும் வகுக்க வேண்டும். அந்தந்த வட்டாரத்தின் நலனை நிறைவு செய்யும் வகையில் மிகவும் ஆதாயம் தரத்தக்க.

[1975 அக்டோபர் 28

சிக்கனமான திட்டத்தை வகுப்பதற்கான கருத்துப் பரிமாற்றங்கள் அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் என்பவையே மேற்சொன்ன முடிவுகளாகும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, இது வரை நடத்திய பேச்சு வார்த்தைகளில் முடிவு ஏதேனும் எடுக்கப்பட்டிருக்கிறதா? இந்தப் பணி எப்போது தொடங்கப்படும் என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இது பற்றி முடிவு எடுக்கப்படவில்லை. காவிரி ஆற்றில் இருக்கக் கூடிய மின் சக்தியை இரு மாநிலங்களுக்கும் உபயோகப் படுத்திக் கொள்ள பேச்சுவார்த்தை நடைபெற்றது. இப்போது இதிலே 100 டி.எம்.சி. முதல் 400 டி.எம்.சி. வரை ஆற்றின் பல்வேறு பகுதிகளில் மின் சக்தி உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இரு மாநில அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு வார்த்தை முடிந்த பிறகு, இரண்டு மாநில அதிகாரிகள் அளவில் பேச்சுவார்த்தை நடைபெற்றிருக்கிறது. இது மேலும் பேச்சு வார்த்தைகள் நடத்தி முடிவு எடுக்க வேண்டிய விஷயமாகும்.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, ஹோகனேக்கல் திட்டத்தோடு இன்னொரு திட்டத்தைச் சேர்த்துத்தான் இதிலே பவர் ஹவுஸ் கட்டுவதான திட்டம் இருக்கிறது என்று கருதுகிறேன். இதனால் எவ்வளவு மெகா வாட் பவர் கிடைக்கும். எவ்வளவு செலவாகும் என்று உத்தேசமாக மதிப்பிட்டிருக்கிறதா? இந்த சர்க்கார் மைசூர் சர்க்காரோடு சேர்ந்து செய்யக் கூடிய திட்டம் என்று சொல்வதைக் கேட்டு வரவேற்கிறோம். பேச்சு வார்த்தை நடந்து ஒரு ஆண்டு ஆயிற்று. ஒரு ஆண்டு கழித்தும் முடிவு ஏற்படவில்லை என்றால் சர்க்கார் மெதுவாக இதில் செயல் படக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இந்த விஷயம் குறித்து மேற்கொண்டு விவாதங்கள் மின் சக்தி வாரிய அதிகாரிகளால் கர்நாடக தலைவர்களுடனும், மின் சக்தி கார்ப்பரேஷனுடனும் நடத்தப்பட்டது. பொறியாளர்களும் பல்வேறு குறிப்புகளைத் தயாரித்து வருகிறார்கள். இறுதி வடிவம்



1975 அக்டோபர் 28]

அளிக்க இன்னும் சிறிது காலம் ஆகும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இதற்கிடையில் கீழ் காவிரி வளர்ச்சித் திட்டம் பற்றிக் கலந்து விவாதிக்கப்பட்டது. காவிரி நீர் குறித்து அரசுகளின் நிலையில் விவாதம் நடப்பதற்கு முன்னாலே பொறியாளர் கூட்டம் நடைபெறவில்லை. இதில் நம் மாநிலத்தின் நிலை, இந்தத் திட்டத்திற்கு ஏற்படக்கூடிய செலவினை அறிந்து அதில் பங்கு கொள்வதற்குத் தயார் என்று நம் அரசு கருத்து தெரிவித்திருக்கிறது. இது இரண்டு மாநிலங்களுக்கும் பயன் தரத் தக்க திட்டமாகும். இதனால் நம் மாநிலத்தில் மின்சாரப் பற்றாக்குறை நீங்கும். இது பெரிய திட்டம் என்ற அளவிலே இரண்டு மாநிலங்களும் சேர்ந்து நிறைவேற்றலாம். நாம் பங்கு கொள்ளத் தயார். தேவையான நிதிக்கு, மத்திய அரசும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இந்த ஹோகனேக்கல் திட்டம் பற்றி 10 ஆண்டுகளுக்கு முன்னாலே நம் தமிழக அரசும், மைசூர் அரசும் பேச்சு வார்த்தை நடத்தி, அங்கேயிருக்கிற தலைமைச் செயலாளர் சென்னை நகரத்திற்கு வந்து பேச்சு வார்த்தையெல்லாம் நடத்தி மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களால் கைவிடப்பட்டது. அப்போதே 80 கோடி ரூபாய்க்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஆயிரம் மெகாவாட் தயாரிக்கக்கூடும் என்று என்ஜினியர்களால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் தொழில் வளம் பெருகி வருகிற நேரத்தில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகிற காரணத்தினால் இப்போதாவது அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து இந்த ஆயிரம் மெகாவாட் கிடைக்கக் கூடிய திட்டத்தைப் பற்றி மைசூர் மாநில முதலமைச்சரவர்களோடு கலந்து பேசி விரைவாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இது பெரிய திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக நம்முடைய மாநில அரசினுடைய மின்சாரப் பற்றாக் குறை நீங்கும். இந்தத் திட்டத்தைப் பற்றி ஏற்கெனவே நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். மீண்டும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தவிருக்கிறோம். அதிகாரிகள் மட்டத்தில்,

அதிகாரிகள் விவரங்களைச் சேகரித்திருக்கிறார்கள். மீண்டும் தொடர்ந்து மைசூர் மாநிலத்தோடு தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : ஒகேனக்கல் திட்டம் சம்பந்தமாக சர்வே செய்யப்பட்டு, எவ்வளவு மதிப்பீடு என்பதெல்லாம் திரு. பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்தபோதே செய்யப் பட்டதே, அப்போது போடப்பட்ட திட்டத்தின் மதிப்பீடு என்ன? அதில் எவ்வளவு ஏரியா அடங்கும், பாசனத்திற்குப் பயன்படுமா ? நம் அரசாங்கம் எந்த வகையில் அதை அமைக்க இருக்கிறது என்பதை எல்லாம் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னிடத்தி லுள்ள புள்ளி விவரங்களின்படி இது சம்பந்தப்பட்ட பல்வேறு ஏற்பாடுகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்தே இறுதி வடிவம் கொடுப்பது பற்றி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதாகும். மற்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

THIRU B. VENKATASWAMY : We are in large deficit of electricity. May I know from the Hon. Minister whether there is any proposal to expedite the Hogenakkal programme and see that it is implemented early ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கருநாடக மாநில அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தியே முடிவு செய்ய வேண்டும்.

திரு. அ. ஆறுமுகம் : காவேரி ஆற்றில் மேட்டூருக்கும், பவானிக்கும் இடையில் நீர் மின்விசைத் திட்டம் அமைக்க ஆராய்ச்சி செய்யப்பட்டது. அதற்காக 40 ஏக்கரா கூட நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது, எப்போது முடியும் என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

*Upper Thambaraparani Electricity Scheme.*

* 100 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :

(a) whether Upper Thambaraparani Hydro Electricity Scheme has been included in the 5th Five Year Plan; and

(b) if so, the details of the same?





மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) மேல் தாம்பிரபரணித் திட்டம் என்னும் திட்டத்தில் ஆறு மின் விசை உற்பத்தி நிலையங்களை நிறுவும் பணியை மேற்கொள்ளக் கருதப் பட்டுள்ளது. அந்த ஆறு மின் விசை உற்பத்தி நிலையங்களில், ஐந்தாவது மின்விசை உற்பத்தி நிலையமான சேர்வலாறு நிலையத் திற்கு மத்தியத் திட்ட ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத் திட்டப் பணிகளுடன் ஒன்றாக அதனை நிறைவேற்ற அப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) 20 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் அமைக்கப்பட விருக்கும் சேர்வலாறு மின் விசை உற்பத்தி நிலையத்துக்கு ரூ. 681.02 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், அதாவது 1979-80-ல் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. என். கே. பழனிசாமி : சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய திட்டம்—மின்சார அமைச்சர் கொடுத்துள்ள பட்ஜெட்டில் சேர்க்கப்படவில்லையே ? இதற்கு என்ன காரணம் ? இதற்கு பிளானிங் கமிஷன் ஒப்புதல் அளித்திருக்கிறதா ? சர்க்கார் சமீபத்தில் ரூ. 75 லட்சம் இதற்காக ஒதுக்கியிருப்பதாகச் சொல்லி யிருப்பது, ஏன் மின்சார பட்ஜெட்டில் சேர்க்கப்படவில்லை ?

மாண்மிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத் திற்கு ப்ளானிங் கமிஷன் ஒப்புதல் அளித்திருக்கிறது. அவர்களது அனுமதி பெற்ற பிறகே வேலை துவங்கியிருக்கிறது. இதன் மதிப்பு ஆறேமுக்கால் கோடி ரூபாய்.

திரு. ஆ. பரந்தாமன் : நமது அரசு கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக ஒரு பத்து மின்சாரத் திட்டங்களுக்கு ஒப்புதல் தரவேண்டுமென்று மத்திய அரசிடம் வற்புறுத்தி வந்ததே, அதில் எத்தனை திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் தந்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

[1975 அக்டோபர் 28

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.**

**திரு. என். கிட்டப்பா :** இந்த விவர அறிக்கையில் சிறு உழவர் மேம்பாட்டு நிறுவனம் சிறு உழவர்கள் நலனுக்கான பல்வேறு திட்டங்களுக்கு உதவித் தொகைகள் வழங்குகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தெந்தத் திட்டங்களுக்கு உதவி வழங்கப்பட்டு வருகின்றது என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** சிறு உழவர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாகச் சிறிய உழவர்களுக்கு ஆடுமாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவற்றுக்கு எல்லாம் மானியத் தொகை வழங்கப்படுகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சிறு விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கிற முறையில் ஆடுமாடு, கோழி வளர்க்க உதவித்தொகை வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு உழவுக் கருவிகள் வாங்கவும் ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா ? மேலும் நல்ல ரகமான மாடுகளை, ஆடுகளை வாங்கவும் என்ன சிறப்பான ஏற்பாட்டை அரசாங்கம் கையாண்டு இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நான் உழவுக் கருவிகள் வாங்கவும் உதவி செய்கிறது என்று சொல்லியிருக்க வேண்டும். காரணம் உழவுக் கருவிகள் வாங்கவும் உதவி செய்யப்படுகிறது. இப்போதே தரமான மாடுகளைத் தான் வாங்கிக் கொடுக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சிறு உழவர் மேம்பாட்டு நிறுவனம் சிறு உழவர்களுக்கு என்ன என்ன உதவிகளைச் செய்து வருகிறது என்பதை தினத்தந்தியிலாவது விளம்பரம் செய்ய முயற்சி செய்வார்களா ?

(விடை இல்லை.)

---

@ 150 156-ம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1975 அக்டோபர் 28]

**திரு. ந. நாச்சியப்பன் :** சிறு விவசாயிகளின் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிலவள வங்கிகள்மூலம் ஆயில் என்ஜின் போன்றவை வாங்குவதற்கு மானியம் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படுகிற மானியம் ஆறு மாதம், ஏழு மாதம் என்று கால தாமதமாவதால் அவர்களால் உடனே வழங்க முடியவில்லை. இந்த மானியத்தை விரைவாக வழங்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** விரைவாகக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** சிறு விவசாயிகளுக்கு உதவுவதோடு கூட, நிலம் இல்லாத விவசாயக் கூலிகளுக்கும் — நிலமில்லாதவர்களுக்கும் இந்தத் திட்டத்தின்கீழ் உதவி செய்யப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** சிறு விவசாயிகளை இரண்டு விதமாகப் பிரித்திருக்கிறோம். நாம் பிரித்திருக்கிறோம் என்று சொல்வதைவிட மத்திய அரசு பிரித்திருக்கிறது, ஸ்மால் பார்மர்ஸ், மார்ஜினல் பார்மர்ஸ் என்று. இரண்டு பேர்களுக்குமே உதவி செய்யப்பட்டு வருகிறது. இது சென்னை, தர்மபுரி, இராமநாதபுரம் ஆகிய மூன்றைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் இதுபோல உதவி செய்யப்படுகிற திட்டம் செயல்பட்டு வருகிறது.

(முற்பகல் 10.00)

**திரு. மு. சண்முகம் :** தலைவர்களே, சிறு விவசாயிகளுடைய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், அவர்களுக்கு விவசாயத்தைத் தவிர்த்து சிறு குடிசைத் தொழில் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வர அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** என்ன குடிசைத் தொழில் என்று குறிப்பிட்டால் நல்லது. ஆனால், வேளாண்மையை யொட்டிய சிறு தொழில்களுக்கு உதவி செய்யப்படுகிறது.

**திரு. மு. சத்தியமூர்த்தி :** பேரவைத் துணைத் தலைவர்களே, இந்தச் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்

[திரு. மு. சத்தியமூர்த்தி] [1975 அக்டோபர் 28

கடன் வழங்குவதிலே, கூட்டுறவுச் சங்கங்கள், நிலவள வங்கிகள், நாஷனலைஸ்ட் வங்கிகள், இவைகள் மூலமாகக் கடன் பெறுவதிலே தாமதம் ஏற்படுகிறது. அதன் காரணமாக, உதவித் தொகையைப் பெறுவதிலே சிறு விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். இதைக் கவனிப்பதற்குச் சர்க்கார் ஆவன செய்யுமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, கூட்டுறவு வங்கிகள்மூலம் கடன் கொடுப்பதிலே தாமதம் இருக்க வழியில்லை. ஏனென்றால், அந்த வங்கிகளுக்கு ரிஸ்க் ஃபண்டிலிருந்து உதவி பெற வாய்ப்பிருக்கிறது. அதாவது, இத்திட்டத்தினால் அவர்களுக்கு நட்டம் ஏற்படுமானால் அதை ஈடு செய்ய வேண்டுமென்று தனியாக சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டத்திலே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிதி ஒதுக்கப்படுகிறது. ஒரு மாவட்டத்திலே ரூ. 10 இலட்சம் என்ற அளவுக்குக்கூட கொடுக்கப்படுகிறது. தாமதம் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தந்த வங்கிகளுக்குத் தெரிவித்து தொகையினைப் பெற்றுத் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சு. துரைசாமி:** தலைவரவர்களே, விவர அறிக்கை வைத்திருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். எங்களுடைய பகுதியில் விவர அறிக்கை வைக்கப்படவில்லை. இனி மேலாவது அதைக் கவனிப்பார்களா என்று கேட்டு . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்டசபைத் துறை தான் அதற்குப் பொறுப்பு.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, இந்தச் சிறு விவசாய மேம்பாட்டுத் திட்டம் நல்ல திட்டம். ஏனென்றால் 1 ஏக்கர், 2 ஏக்கர், 3 ஏக்கர் நிலம் வைத்துள்ள சாதாரண விவசாயிகள் கறவை மாடு வாங்கவும், விவசாயத்தை மேம்பாடு செய்யவும் மானியம் பெற வாய்ப்பிருக்கிறது. ஓரிடத்தில் ரூ. 1.6 கோடியளவுகூட செலவு செய்யப்பட்டிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திலே பல வட்டாரங்களில் இம்முறை அமல் நடத்தப்பட்டு வருகிறது. அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது டிலே ஆகவில்லையென்று சொன்னார்கள். கிராம சேவக்கு



1975 அக்டோபர் 28]

களின் மூலமாகக் கடன் பெறும்போது, ஏற்கனவே விவசாயிகள் கடன் பாக்கி வைத்திருப்பதால், கூட்டுறவு வங்கிகளிலிருந்து கடன் பெற முடியவில்லை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. சோ. அழகர்சாமி:** ஒதுக்கப்பட்ட பணத்திலே பெரும் பகுதியை ரோடு போடுவதற்குச் செலவு செய்கிறார்கள், மானியமாகப் பெற்றதை. அது சிறு விவசாயிகளுக்கு எந்தவிதமாகவும் உதவி செய்யாது. அந்த உதவியைச் செய்தால் நன்றாக இருக்கும் என்று அமைச்சரவர்கள் சொல்வார்களா? எனது வட்டாரத்தில் இருக்கிற சிறு விவசாயிகளை . . . .

MR. DEPUTY SPEAKER: No, this question is disallowed.

**திரு. சு. துரைசாமி:** சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களைக் கட்டுவதற்கு, மத்திய அரசாங்கத்திலிருந்து மாநில அரசாங்கத்தின் மூலமாக மானியம் தரப்படுகிறது. அதில், தமிழ் நாட்டிற்கு எவ்வளவு கிடைக்கிறது? தமிழ்நாட்டிற்குத் தேவையானதைப் பெற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் கட்டுவதற்கும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து மானியம் கொடுக்கப்படுகிறது. எனக்குத் தெரிந்து ஒரு மாவட்டத்தில் ரூ. 6 இலட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எந்த மாவட்டத்திலாவது, குறிப்பாக இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களைக் கட்ட பணம் கொடுக்கப்படவில்லையென்றால் அதைக் கவனிக்க முடியும். அதோடு மத்திய சர்க்கார் தனியாக வேறு அறிவித்திருக்கிறார்கள். தனியாக, இந்தியா முழுவதற்கும் ரூ. 12 கோடி, கிரான்ட்-இன்-எய்டாக, மானியமாகக் கொடுக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலும் தமிழ் நாட்டிற்குப் பங்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

[1975 அக்டோபர் 28

### சாமல்பட்டி—விருதுவிளங்கினான் பேருந்துப்பணி

*104. **வினா—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் :** மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாமல்பட்டியிலிருந்து திருவண்ணாமலை வழியாக விருது விளங்கினான் கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து நிறுத்தப்பட்டு விட்டதா ?

(இ) ஆம் எனில், அந்த வழித்தடத்தில் புதிய பஸ் விடுவதற்கு அனுமதி அளிக்கும் செயற்குறிப்பு ஆய்விலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ) இல்லை.

**திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் :** தலைவரவர்களே, ஏற்கனவே அந்த விருதுவிளங்கினான் பகுதியில் 10 கிராமங்களுக்கு மேலிருக்கின்றன. நீண்ட காலம் முயற்சித்துத் தனியார் பஸ்ஸுக்கு ஏற்பாடு செய்து கொண்டுவந்தோம். தற்சமயம் 5 மைலுக்கு இந்தப் புறத்திலேயே பஸ்ஸை நிறுத்திவிடுகிறார்கள். எனவே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்தை யாவது விட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அதைத் தந்தைபெரியார் போக்குவரத்துக் கழகம் ஆராயும்.

### மையப் பேருந்து நிலையம் — மதுரை கிழக்கு இரயில் நிலையம் பேருந்துப்பணி

*105. **வினா—திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் :** மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில், மத்திய பேருந்து நிலையத்திற்கும், கிழக்கு மதுரை இரயில்வே ஸ்டேஷனுக்கும் இடையே பேருந்துப் பணியினைத் தொடங்கக் கோரி பாண்டியன் போக்கு வரத்துக் கழகத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



1975 அக்டோபர் 28]

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ஆம். மதுரை, மையப் பேருந்து நிலையத்திலிருந்து கிழக்கு ரயில் நிலையம்வரை தனியாக நகரப் பேருந்து ஒன்று விடுவதற்கு உண்மையாகவே தேவை யில்லை என்று பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் கருது கிறது. மையப் பேருந்து நிலையத்திற்கும் கிழக்கு மதுரை இரயில் நிலையத்திற்கும் இடையே காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரையிலும் மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையிலும் தேவைப் படுமேயானால் நெரிசல் நேரப் பேருந்துகள் விடுவது குறித்து இக் கழகம் ஆராயும்.

**திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் :** இப்போழுது கிழக்கு இரயில்வே ஸ்டேஷன் பக்கத்தில் மிகப்பெரிய பல தியேட்டர்களும், காமராஜர்புரம், இந்திரா நகர் போன்ற ஏழைகள் வாழக்கூடிய பல பகுதிகளும் இருக்கின்றன. அவர்க ளெல்லாம் போக்குவரத்துக்குக் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னபிறகு இப்பொழுது ஒரு பஸ்ஸை அரேஞ்ச் பண்ணி யிருக்கிறார்கள். ஆனால் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் தேவையில்லை என்று சொல்லியிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. உண்மையிலே அங்கு மிகமிக அவசியமாகத் தேவைப்படுகிறது. அதை ஆராய்ந்து, பாண்டியன் பஸ் போக்கு வரத்துக் கழக பஸ்களை விட அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, அந்த, வழித் தடத்தில் நிறைய நெரிசல் இல்லை. போக்குவரத்து பஸ்களை அதிகமாக விட்டாலும் ஆட்கள் இல்லை. ஆகவேதான், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அதை ஆராய்ந்து, சில பஸ்களை மட்டும் விட்டுக் கொண்டிருக்கிறது. அதிகப் பேருந்துகளை விட வழியில்லையென்று தெரிவித்துக் கொள் கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அந்தக் கிழக்கு மதுரைப் பகுதியிலே ஏற்கனவே 4-ம் நெம்பர் பஸ் போய்க் கொண்டிருக் கிறது. ஆனால், அதில் அதிகக் கூட்டமிருக்கிறது. ஆகவே,

[1975 அக்டோபர் 28

அந்தப் பகுதிக்குப் போக 4-எ என்று இன்னொரு பஸ் விட்டால் உதவிகரமாக இருக்கும் என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நான் ஏற்கனவே பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன். ஆராய்ச்சியிலே வந்த முடிவு, அதிக நெரிசல் இல்லையென்பது. பஸ்களுக்குப் போதுமான பயணிகள் கிடைக்கவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் வேண்டுமானால் ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஓடிக்கொண்டிருக்கிற இடங்களிலே பஸ்களை நிறுத்தலாமா?

It is against the interests of the public

அந்தக் கொள்கையை அரசாங்கம் கைவிடுமா? இனிமேல், புதிதாக வேண்டுமானால் அவ்வாறு செய்யலாம். ஆகவே, ஓடிக்கொண்டிருக்கிற இடங்களில் நிறுத்துவது

against the interest of the public

என்ற வகையில் காலதாமதம் செய்யாமல் மீண்டும் பஸ்களை விடுவார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அந்த இடத்திலே ஓடிக்கொண்டிருந்ததை நிறுத்தவில்லை. ஆகவே, கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் **சரிபார்க்கப் பட்டது** என்பதைக் குறிக்கும்.]



1975 அக்டோபர் 28]

## (2) ஒத்திவைப்புத் தீர்மானம்

**மதுரை சௌராஷ்டிரா உயர்நிலைப்பள்ளி வளவுக்குள் ஜன நெரிசலில் பலர் இறந்ததும் காவல்துறையினர் கூட்டத்தை ஒழுங்குபடுத்தத் தவறியதும் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கே. டி. கே. தங்கமணி, ஏ. ஆர். மாரிமுத்து, என். கே. பழனிசாமி, ஜே. ஜேம்ஸ், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் கீழ்க்கண்ட பொருள் குறித்து விவாதிக்கப் பேரவையின் 42-வது விதியின்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

"Death due to stampede of 19 women yesterday, 26th October 1975, in Madurai in the Sourashtra High School campus and failure of police to regulate the crowd and panic in the east area of Madurai City."

இதே பொருள்குறித்து, பேரவையின் 41-வது விதியின்கீழ் திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள் அரசின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசரப்பொது முக்கியம் வாய்ந்தது என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி: துணை சபாநாயகர் அவர்களே,** இந்தப் பிரச்னை சம்பந்தமான விவரங்களை ஏற்கனவே மேலவையிலே முதலமைச்சர் அவர்கள் சொன்னதாகத் தெரிகிறது. பத்திரிகைகளிலும் பல செய்திகள் எல்லாம் வந்துள்ளன. நேற்றைய மாலை வெளி வந்த பத்திரிகைகள், குறிப்பாக மாலை முரசு போன்ற பத்திரிகைகள் எல்லாம் யார், யார் இறந்தவர்கள். அவர்களுடைய வயது என்ன, அவர்களுடைய குடும்பத்தின் நிலை என்ன என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கின்றன. அதை அனலைஸ் பண்ணிப் பார்த்தால், அந்தத் தொழிலாளிகள் பூராவும் கைத்தறி நெசவுத் தொழிலாளிகள் என்று தெரிகிறது. கைத்தறி நெசவுத் தொழிலாளிகள் என்பது மாத்திரமல்லாமல், பெண்களாகவும் இருக்கிறார்கள்.

அந்தக் குறிப்பிட்ட நிறுவனம், சித்தாலட்சுமி மில்லுக்கு, உரிமையாளராக இருக்கக்கூடிய இராமாச்சாரி வருஷா வருஷம் இந்த மாதிரி தீபாவளிக்கு முன்னுல் கொடுப்பது என்றும் இந்த வருஷம் சாதாரணமாகச் செய்வதைப்போல், அவரவர்கள் வீட்டுக்குச் சென்று டோக்கன் கொடுப்பதற்குப் பதிலாக, சௌராஷ்டிரா ஹைஸ்கூலிலே, அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் விவரம் வந்திருக்கிறது. அதைப்பற்றி அல்ல பிரச்னை.

இன்றைக்கு அரசுக்கு ஏற்பட்டிருந்த பொறுப்பு—அதை அவர்கள் சரியாக ஏற்று நடத்தவில்லையென்பதைப் பற்றித்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது சாதாரணமாக, எங்காவது கூட்டம் இருந்தால், உடனடியாகப் போலீசார் அங்கு செல்கிருர்கள். அதுவும் அவசர நிலைக்குப் பின்னுலே, பெரிய ஊர்வலங்களே இல்லை, அந்த மாதிரியான நிலையில்லை. ஆகவே போலீசாருக்கு அதிகமாக வேலையிருக்கிறது என்று சொல்வதும் பொருத்தமில்லாத விஷயம்.

அப்படியிருக்கும்போது மதுரை நகரத்திலே இது முதல் விபத்து அல்ல. ஆறு மாத காலத்திற்கு முன்னுலே ஒரு சினிமாக் கொட்டகையிலே இதேமாதிரி நெரிசல் ஏற்பட்டு 2, 3 பேர்கள் இறந்துவிட்டனர். ரேஷன் கடைக்குப் பக்கத்திலே நெருப்புப் பற்றி அதிலே பத்துப் பேர்கள் இறந்திருக்கிருர்கள். இப்படிப் பட்டப்பகலில் மதுரை நகரத்தில் நடைபெறுகிறது என்றுல் இது பற்றி நம்முடைய அதிகாரிகள், அங்கே இருக்கக்கூடிய ஜில்லா போலீஸ் அதிகாரிகள் சரியாகக் கவனிக்கவில்லை என்பதுதான்.

முதலிலே கூட்டம் வந்தபோது போலீஸ் வேண்டுமென்று கேட்டதாகவும் அதற்கு அந்தக் கூட்டத்தைச் சமாளிப்பதற்கு நான்கு போலீஸார்கள் அனுப்பப்பட்டதாகவும் தெரிகிறது. இந்தச் சம்பவம் அஜாக்கிரதை காரணமாக இருந்திருக்கிறது என்பதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். மதுரை நகரத்திலே தொடர்ச்சியாக இப்படி நடைபெறுவதால்—தூங்காவிலிருந்து ஆக்ராவரையில் போகக்கூடிய ரயில் பாதையிலே அதிகமாகத்



திருட்டு நடக்கிறது என்று சொல்லி விசேஷப் போலீஸ் போட்டார்கள். மதுரை நகரத்திலே பட்டப்பகலிலே இப்படிப் பட்ட சம்பவம் ஏற்பட்டு ஜனங்கள் சாகிருர்கள் என்றுல் அதற்கு அரசாங்கத்தின் அஜாக்கிரதைதான் காரணம் என்றுதான் சொல்லவேண்டும். இதற்கு ஆர்.டி.ஓ.-வை வைத்து விசாரணை நடத்துவதால் பிரச்னை தீரும் என்று நான் நினைக்கவில்லை. ஆகவே நான் சொன்ன இந்த அம்சங்களையெல்லாம் கவனிக்க வேண்டுமென்ற முறையிலே விவாதிக்க இந்த மன்றத்தின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, மதுரையிலே நடந்த இந்த சம்பவம் ரொம்ப வேதனைக்குரிய ஒன்று. பட்டப் பகலிலே பெருவாரியான மக்கள் கூடியிருக்கக்கூடிய இடத்திலே தானமாகத் துணி கொடுக்கப்படுகிறது என்பதை வாங்குவதற் காக வறுமையிலே வந்து கூடியிருந்த மக்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்தாத காரணத்தால் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதை ஏற்பாடு செய்தவர்களினுல் ஏற்பட்ட தவறு அல்லது அவர்கள் போலீஸ் உதவி கேட்டும் வேண்டிய உதவி போலீஸ் தரப்பிலே கொடுக்கப்படாத காரணத்தால் நடந்திருக்கிறதா என்பதை விசாரிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதைவிட இன்னும் வருந்தத்தக்கது 20 ரூபாய், 25 ரூபாய் பெறுமானமுள்ள புடவை அல்லது துணியை வாங்குவதற்கு அங்கே வந்து காத்துக் கிடந்த கூட்டத்தினர் எங்கே நாம் பிந்திவிட்டால் நமக்குக் கிடைக்காதோ என்ற அச்சத்தால் எல்லோரும் ஒருவரோடொருவர் முந்திச் செல்கையில் முன்னுலே சென்றவர்களைப் பின்னுலே சென்ற கூட்டத்தினர் மிதித்ததால் 19 பேர்கள் இறந்தவிட்ட செய்தியைக் காணுகிறபோது நாம் எல்லாம் வெட்கித் தலைகுனியவேண்டிய நிலைமையிலே இருக் கிறோம். ஏனென்றுல் சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ள நெசவாளர்கள் மத்தியிலே எவ்வளவு பெரிய வறுமை இருக்கிறது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

நெசவாளர்களுக்கு வேண்டிய எத்தனையோ நடவடிக்கைகளை நாம் எடுத்திருந்தாலும் அவர்களுக்கு அவையெல்லாம் போய் சரியாகச் சேரவில்லை என்பதைத்தான் இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது. இந்தச் சம்பவம் எப்படி நடந்தது, ஏன் நடந்தது என்று விசாரிப்பதோடுகூட அடிமட்டத்தில் உள்ளவர்களிடம் இவ்வளவு மோசமான வறுமை இருப்பதால் அதைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதையும் கருத்திலே கொண்டு ஆராயவேண்டும், வறுமையைப் போக்க எடுக்கிற நடவடிக்கைகளை முடுக்கிவிடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு 19 பேர் இறந்துவிட்ட முக்கியமான சம்பவம் என்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, மதுரையிலே 26—10—1975 ஆம் நாள் நடைபெற்ற இந்தச் சம்பவமானது நமது மாநிலத்திலே இருக்கிற அனைவருடைய நெஞ்சையும் உருக்குகின்ற ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிந்து இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கூறும்போது இந்த நிகழ்ச்சியில் மாண்டவர்கள் பலரும் தொழிலாளர்கள் என்று குறிப்பிட்டார்கள். முதல் நாள் செய்தியில் 18 பேர்கள் இறந்ததாகவும் அதிலே 17 பேர்கள் பெண்கள் என்றும் 1 ஆண் என்றும் செய்தி வந்தது. அடுத்த நாள் 19 பேர்கள் இறந்தார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. இன்னும் பலர் காயமுற்று ஆஸ்பத்திரியிலே சிகிச்சைபெற்று வந்துகொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியும் வந்திருக்கிறது. இவ்வளவு பெரிய அகோரமான நிகழ்ச்சி நடைபெறுகிறது என்று சொன்னால் இதற்குக் காரணம் என்ன என்று விசாரித்து அறிய வேண்டிய அவசியம் இருக்கிறது. பல்வேறு இடங்களில் தவறு என்று காரணம் சொன்னாலும்கூட அடிப்படைக் காரணம் நாட்டிலே எந்த அளவிற்கு வறுமை இருக்கிறது, இலவசமாக



ஏதோ பொருள் கொடுக்கிறார்கள் என்று சொன்னவுடன் மக்களிடத்திலே இருக்கிற வறுமையின் காரணமாக உயிரையும் தியாகம் செய்து அந்தப் பொருளைப் பெறுவதற்கு மக்கள் அங்கே கூடியிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. ஒரு வேளை நெரிசல் ஏற்படக்கூடிய கூட்டம் கூடியிருக்கிறது என்று தெரிந்தும்கூட போலீஸ் அதிகாரிகள் இந்த மாதிரியான ஒரு நிகழ்ச்சி நடைபெறாத முறையிலே தடுப்பு ஏற்பாடுகளைச் செய்யத் தவறியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டையும் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். இந்தத் தொழிலாளர்களுக்குச் சாதாரணமாக தீபாவளிப் பண்டிகை வரும்போது பல்வேறு நிறுவனங்களிலிருந்து போனஸ் தாராளமாகப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு மத்திய அரசாங்கமானது அவசரச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி இது வரையிலும் பெற்றுகொண்டு வந்த போனஸ் கிடையாது இனி மேல் 4 சதவீதம்தான் போனஸ் என்று கூறியதன் காரணமாகத் தொழிலதிபர்கள் குறிப்பாக இந்த சிதாலட்சுமி மில்லை நடத்திக் கொண்டிருக்கின்ற பெரியவர் அரசாங்கத்தின் உத்திரவை மீறிச் செயல்பட வழியில்லாமல்—போனஸ் மார்க்கமாக—தனக்குக் கிடைத்த லாபத்தை தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேறு மார்க்கம் இல்லாத காரணத்தால்—இலவசமாகத் துணி என்ற பெயரால் மக்களை எல்லாம் கூடி வரச்செய்து இந்த மாதிரிக் கொடுத்திருக்கிறார். வருஷா வருஷம் அவர் கொடுத்தாலும்கூட இம்மாதிரி மதுரையிலே நடந்ததாக இதுவரையில் நம்முடைய காதுகளில் எட்டவில்லை. இந்த ஆண்டு நடந்திருக்கிறது.

ஆகவே போனஸ் சட்டமும்கூட இந்த நிகழ்ச்சிக்கு ஒரு காரணமாக இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது தொழிலாளர்கள் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் இந்தச் சட்டத்தால் என்பதைச் சிந்திக்கக் கடமைப்பட்டு இருக்கிறோம். ஒரு வேளை இலகுவாக எண்ணி இதைத் தள்ளிவிடக்கூடும். அடிப்படைக் காரணம் எதுவாக இருக்கக்கூடும் என்று

என்னும்போது மத்திய அரசாங்கத்தினுடைய சட்டமும் மாநில அரசாங்கத்தினுடைய நிர்வாகச் சீர்கேடும்தான் இந்த நிகழ்ச்சிக்குக் காரணம் என்று கூறி இதனை விசாரணைசெய்து காரணத்தை அறிய மக்கள் ஆவலாக இருக்கிறார்கள் என்பதைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்த வரையிலே இங்கே ஒரு முக்கியமான பிரச்சினையை நாங்கள் நன்றாக உணர்ந்து கொண்டு வந்திருக்கிறோம். மதுரை நகரத்திலே இலவசமாகப் புடவைகள் கொடுக்கிறோம் என்று சொன்ன நேரத்திலே அதை வாங்குவதற்காக ஏராளமான தாய்மார்கள் கூடியிருந்து அந்தக் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது எல்லோருக்கும் தெரிந்தது. இதற்கு யார் காரணம் என்று பார்க்கிறபோது இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் முக்கியமானதாக இருக்கிறது. எந்த ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் கொண்டுவந்து பேசுகின்ற நேரத்திலே அரசாங்கத்தின் பொறுப்பை நாங்கள் சுட்டிக்காட்டினால்தான் அது ஒத்திவைப்புத் தீர்மானத்தின் எல்லைக்குள் வரும். இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கத்திற்கு நேரடியாகப் பொறுப்பு இருக்கிறது என்று சொல்வதற்குக் காரணம், அங்கே இவ்வளவு கூட்டம் கூடியிருந்தும்கூட அந்த நெரிசலைக் கட்டுப்படுத்த வேண்டிய அளவிற்குப் போலீஸ் படை அனுப்பப்படவில்லை

"The Government has failed in its duty."
என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

சென்ற ஆண்டிலே அந்த நெசவாளத் தாய்மார்களுக்கு முதலில் கூப்பன் கொடுத்துத் தரப்பட்டது. அந்த நேரத்தில் பல தவறுகள் நடைபெறுகின்றன என்ற காரணத்திற்காகச் சென்ற ஆண்டு கையாண்ட முறையை மாற்றியமைத்து அங்கேயே கூப்பன்கள் கொடுத்து விட்டால் அந்தத் தவறு நடக்காது என்ற முறையிலே பழைய முறையை மாற்றியமைத்துக் கொடுத்ததால் இப்படிப்பட்ட பயங்கரமான சம்பவங்கள் ஏற்பட்டன என்ற ஒரு





விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாத அளவிற்கு, அப்படியிருந்தால் அரசாங்கத்திற்கு முன்கூட்டியே தெரிந்திருக்க வேண்டும், பாதுகாப்பிற்குப் போலீஸ் படையை அனுப்ப வேண்டுமென்று தெரிந்திருக்க வேண்டும்.

அது ஒரு புறத்தில் இருக்க, இன்னொரு புறத்தில் நெசவாளர்கள் எவ்வளவு கஷ்டத்தில் இருக்கிறார்கள், ஆயிரக் கணக்கான, இலட்சக் கணக்கான நெசவாளர்கள் எவ்வளவு பயங்கரமான வறுமையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்வதற்கும் ஆக இந்த இரண்டு கருத்துக்களையும் விளக்கிச் சொல்ல இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த வேதனையோடு நானும் பங்கு கொள்கிறேன். 19 உயிர்கள், மதுரை நகரத்தில், தங்களுக்கு வேட்டிகளும், சேலைகளும் இனமாக வழங்கப்படுகின்றன, அவைகளைப் பெறலாம் என்கின்ற ஆவலோடு ஒருவரையொருவர் முந்திக்கொள்ள வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையில் ஏற்பட்ட அசம்பாவித சம்பவத்தில் இன்றைக்கு நாமெல்லாம் துயர் கொள்ளும் அளவிற்கு உயிர் இழந்திருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம்.

ஆனால், இதை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று விரும்பிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், இதற்கெல்லாம் காரணம் மாநில அரசின் நிர்வாகச் சீர்கேடுதான் என்று எடுத்துக்காட்டினார்கள். நண்பர் மாரிமுத்து அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்குச் செய்கின்ற உதவிகள் எதுவும் அவர்களுக்குப் போய்ச் சேராத காரணத்தினால் இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்பட்டன என்று சொன்னார்கள். போனஸ்

சட்டத்தின் காரணமாக இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்பட்டன என்று இன்னும் கொஞ்சம் ஆழமான காரணத்தை திரு. ஜேம்ஸ் அவர்கள் கண்டுபிடித்தார்கள். அவரவர்களுடைய கோணத்தில் இதை அணுகியிருக்கிறார்கள் என்றாலும் இது எதுவும் காரணம் அல்ல என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்தவொரு இடத்திலும் மக்கள் தாங்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு-கட்டுப்பாடு இவைகளைக் கடைப்பிடிப்பதற்கான முறைகளை வகுத்துக் கொள்ளாத காரணத்தினால், காவல் துறையினர்தான் இவைகளைக் கட்டுப்படுத்த வேண்டும், இல்லாவிட்டால் நம்மை நாமே கட்டுப்படுத்திக்கொள்ளத் தயாராய் இல்லை என்ற ஒரு நிலை வளர்ந்து வருகின்ற காரணத்தினால் இதைப் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. போலீசார் அந்த இடத்திற்குச் செல்லவில்லை, பாதுகாப்புக் கோரியிருந்தும்கூட போலீசார் அங்கே செல்லாதது வருந்தத் தக்கது, 4 போலீசார்தான் சென்றார்கள் என்பது வருந்தத் தக்கது என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் போலீஸ் அதிகாரிகளை விசாரித்த வரையில், அப்படிப் போலீஸ் உதவி எதுவும் அந்த நிறுவனத்தால் கேட்கப்படவில்லை என்ற தகவல்தான் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. 4 போலீசார் போனது எப்பொழுது என்றால், இப்படிப்பட்ட ஒரு அசம்பாவிதம் ஏற்பட்டுவிட்டது என்றதும் உடனடியாக பி-2 போலீஸ் ஸ்டேஷனில் இருந்து போலீசார் ஓடியிருக்கிறார்கள், சம்பவம் நடந்த பிறகு, அது தானே தவிர வேறெதுவும் இல்லை. நேற்றுப் பத்திரிகைகளில் வந்த செய்திகளுக்கு இன்றைய 'இந்து' பத்திரிகையில் டி.ஐ.ஜி. மூலம் மறுப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. போலீஸ் பாதுகாப்பு எதுவும் கோரவில்லை.

கடந்த சில ஆண்டுகளில் சீதாலட்சுமி அறக்கட்டளையின் சார்பாக இதுபோல ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேட்டிகள், **புடவைகள் தருவது** என்று திட்டமிட்டு அதற்கான **அடையாள**



**வில்லைகள்** அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே சில தவறுகள் ஏற்பட்டதாகவும், அந்த வில்லைகள் உரியவர்களுக்குப் போய்ச் சேராமல் அல்லது வில்லைகளைப் பெற்றவர்கள் மற்றவர்களுக்கு அதை ஏதோவொரு கட்டணத்திற்கு விற்று, அதன் காரணமாக உண்மையான ஏழை எளியவர்கள் அதன் பயனைப் பெற முடியாமல் யாரோ பெற்றுக் **கொண்டிருந்தார்கள் என்றும் அது கண்டுபிடிக்கப்பட்டு இந்த** ஆண்டு அடையாள வில்லைகளைப் பெறுவதற்கு 26 ஆம் தேதி காலை—சௌராஷ்டிரா உயர்நிலைப் பள்ளிக்கு வருமாறு அந்த ஏழை எளிய மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வந்து கூடியிருக்கிறார்கள். அப்படிக் கூடியிருந்தபொழுது திடீரென்று அந்த உயர்நிலைப் பள்ளியின் நுழைவாயில் கதவு திறக்கப்பட்டு அனைவரும் உள்ளே வரலாம் என்று அறிவிக்கப்பட்டதும், நான் முந்தி நீ முந்தி என்று ஒருவரையொருவர் முந்துகின்ற முயற்சியில் சிலர் அந்த நுழைவாயிலிலே விழுந்துவிட்டார்கள். அப்படி விழுந்தவர்களை மற்றவர்கள்—பின்னால் போனவர்கள்—அதைப்பற்றிக் கவலைப்படாமல், விழுந்திருப்பவர்களைக் காணாமல் அவர்கள் மீது ஏறி மிதித்துச் சென்ற காரணத்தினால் மிக மோசமான சூழ்நிலையில் 19 பேர் உயிரிழக்க வேண்டிய பரிதாபச் சம்பவம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தையொட்டிப் போலீசார் முன்கூட்டியே ஏன் செல்லவில்லை என்று கேட்பவர்கள், போலீசார் சென்றிருந்தால் இந்தப் பழி முழுவதையும் போலீசார்மீது போட்டிருக்கத் துணிந்திருப்பார்கள். போலீசார் சென்று, கூட்டம் கட்டுக்கடங்காமல் இருந்து அதைத் தடுத்து நிறுத்த முயற்சி செய்து அதன்காரணமாக கல்லெறிதல், பிறகு தடியடிப் பிரயோகம் செய்து, நிலைமை முற்றி அதிலே நான்கைந்துபேர் செத்திருந்தால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கோணமே, அணுகுமுறையே வேறாக மாறியிருக்கும்.

இதுமட்டுமல்லாமல், பொதுவாகவே இதுபோன்ற கட்டுத்திட்டங்களை எந்த இடத்திலும் இன்றைக்கு மீறுகின்ற ஒரு

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 அக்டோபர் 28

முயற்சியிலே ஊக்கம் காட்டுகிறார்கள். இங்கு மட்டுமல்ல, கும்பமேளா திருவிழாவிலே நூற்றுக்கணக்கான பேர் சாகிறார்கள் என்ற செய்தி வருகிறது. தேர்த் திருவிழாவிலே பலர் சாகிறார்கள் என்ற செய்தி வந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு தென்னார்க்காடு மாவட்டத்திலே, விருத்தாசலத்தில், கொரக்கவாடி என்ற இடத்திலுள்ள கோயிலில் தேவையில்லாமல், மதில் சுவர்மீது ஏறி நின்று அது இடிந்து விழுந்து 15 பேர் செத்திருக்கிறார்கள்.

பலத்த போலீஸ் பாதுகாப்பு இருந்தது, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மறைந்த நேரத்தில். இராணுவம்கூட வந்திருந்தது. போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. அப்படியிருந்தும், மக்கள் அமைதியாக இருந்தால் க்யூ வரிசையில் நின்றால் உடலைக் கண்டு செல்ல முடியும் என்று தெரிந்திருந்தும் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள வேண்டுமென்ற முயற்சியின் காரணமாக ஏற்பட்ட அசம்பாவிதங்களை நாம் அறிவோம்.

ஆகவே, 4 கோடி மக்கள் இருக்கின்ற மாநிலத்தில் 30,000, 40,000 போலீசார்தான் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு இடத்திலும் நடக்கும் சூழ்நிலையில் நடக்கக் கூடும் என்று ஒவ்வொன்றையும் ஆருடம் பார்த்துச் சென்று அவைகளைக் கண்காணிப்பது என்பது இயலாத காரியம். ஆகவே, மக்களே தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு அவர்கள் வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சம்பவம் நடைபெற்றபொழுது நான் கோவையிலிருந்து திண்டுக்கல்லுக்குச் சென்று கொண்டிருந்தேன். வழியில் எனக்கு இந்தச் செய்தி கிடைத்தது. உடனடியாக அமைச்சர் ஓ. பி. இராமன் அவர்களை அந்த இடத்திற்குச் சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறுமாறு கேட்டுக் கொண்டது மட்டுமல்லாமல் நம்முடைய அரசின் சார்பாக முதலமைச்சர் நிதியிலிருந்து அந்தக் குடும்பங்களுக்கு 40,000 ரூபாய் அளவிற்கு அவர்களது குடும்பங்களுக்கு, ஆறுதல் நிதி வழங்கப்பட்டிருக்



1975 அக்டோபர் 28] [டாக்டர் மு. கருணாநிதி]

கிறது. மதுரை சௌராஷ்டிரா சபையின் சார்பாக எனக்கும், மதுரை நகரச் சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துத் தந்திகளை அனுப்பியிருக்கிறார்கள்.

மேலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள நாம் அனைவருமே கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை எடுத்துக்கூறி இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் மூலம் நம்முடைய துயரத்தை இறந்தவர்களுக்கு இணைத்திருக்கிறோம் என்ற வகையில் இதை மேலும் விவாதிக்க வேண்டுமென்ற அவசியமில்லை என்று கூறி இந்த அளவில் அமர்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்த வருந்தத் தக்க சம்பவம் பற்றி எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. * *

(முற்பகல் 10-30)

**திருமதி சத்தியவாணிமுத்து:** இந்தச் சம்பவம் . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** * * * அந்த இஷ்யூவைப் பொறுத்தவரை திரு. கே. டி. கே. அவர்கள் ரெய்ஸ் பண்ணியது அவைக் குறிப்பில் இருப்பது நல்லது அல்லவென்று நினைக்கிறேன். எனவே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** முதல்வர் அவர்கள் கூறியது போல் மதுரையில் நடைபெற்ற சம்பவம் மிகவும் வருந்தத்தக்கது. அதுவும் இண்டர்நேஷனல் விமன்ஸ் இயரில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் நோட்டீஸ் கொடுக்கவில்லை. கிளாரிபிகேஷன் எப்படிக் கேட்க முடியும்?

---

[* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.]

திருமதி சத்தியவாணிமுத்து: இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் மன்றம் ஒரு நிமிடம் எழுந்து நின்று அனுதாபத்தைத் தெரிவிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது சம்பந்தம் இல்லாதது.

THIRU K. T. K. TANGAMANI: My point is, Sir, I would like to know whether a particular newspaper publishing this or something else was seized yesterday. That is my point. I have the right to ask. Every evening, I used to read certain newspapers. Yesterday, I asked for this paper and I was told that it was missing. I was told that this paper has been seized. I would like to know whether that particular paper has been seized. Otherwise, certain things will happen without the knowledge of the House. How are we to know and how are we to elicit information? The information given to me was that this paper has been seized. I would like to know from the Hon. Chief Minister whether that particular paper has been seized yesterday.

MR. DEPUTY SPEAKER: The right to elicit information as to whether a particular paper was seized under the Censorship is within the limits. But the hon. Member cannot ask for the reasons for the seizure.

THIRU K. T. K. TANGAMANI: I am not askng for the reason. My information is that particular paper has been seized. If that paper is not seized, the House may be informed. I would like to know this information.

MR. DEPUTY SPEAKER: This may be raised as a separate point of order after the disposal of the adjournment motion.

THIRU K. T. K. TANGAMANI: It is connected with the adjournment motion. You are pleased to make some order. In any case, my position is this. I want to mention about this. After your ruling, I may be permitted to mention about this.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து, அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து, விவாதிக்கத் தேவையில்லை. ஆகவே, இத்தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.



3. தகவல் கோரல்

'மக்கள் குரல்' நாளிதழ் பறிமுதல் செய்யப்பட்டதா என்பது குறித்து.

THIRU K. T. K. TANGAMANI: I would like to know whether any newspaper, particularly 'Makkal Kural' was seized yesterday.

MR. DEPUTY SPEAKER: That information should be given to the House. It is for the Government to say whether that particular paper was seized yesterday or not. If the Government so pleases, they may furnish the information to the House.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவசர நிலைக்குப் பிறகு தமிழகத்திலே சில பத்திரிகைகள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. 'மக்கள் குரல்' பத்திரிகை மாத்திரமல்ல—ஆளும் கட்சிச் சார்புடைய பத்திரிகைகள்கூட பல நேரங்களில் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. 'முரசொலி' பத்திரிகைகூட பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆட்சேபகரமான செய்திகள் இருந்தால் பறிமுதல் செய்யப்படுகிறது. அவைகளிலே 'மக்கள் குரல்' பத்திரிகையும் ஒன்று.

DR. H. V. HANDE: Sir, whenever a question is raised, a clear answer should be given. Now I want to know whether the State Government are exercising the emergency powers ......

MR. DEPUTY SPEAKER: The Government have already answered this question. We should not go further into the matter.

(4) அறிவிப்பு.

மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:—

தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/75) 24—10—1975 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1975 அக்டோபர் 28

மேலும் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள், 24—10—1975 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு திருத்தம் ஏதுமின்றி, ஒப்புதலளித்து நிறைவேற்றப்பட்ட தாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது:—

1. தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/75);

2. தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/75);

3. தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு ஹோமியோபதி முறை மருத்துவம்—ஹோமியோபதி மருத்துவர்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/75);

4. தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (பிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/75);

5. 1975 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துப் பணியா ளர்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/75);

### (5) அரசினர் சட்ட முன்வடிவு.

### தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபி விருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



### (6) அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் பிறப்பிக்கப்பட் டுள்ள அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு, மத்திய அரசு அறி வித்துள்ள 20 அம்சத் திட்டத்தைச் சரிவர இந்த அரசு அமல் படுத்தத் தவறியதால், தமிழ்நாடு அமைச்சரவைமீது இப்பேரவை தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது." என்ற தீர் மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இத் தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகப் பலரால் பாராட்டக்கூடிய, ஆனால் மிகச் சிலரால் விமர்சிக்கக்கூடிய ஒரு அரசியல் சூழ்நிலையிலே இங்கே நாம் கூடியிருக்கின்றோம். பாரதக் குடியரசுத் தலைவர் அவர்களால் ஜூன் மாதம் 26-ம் தேதி அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்ட தைப் பற்றி இந்த அவைக்கு வெளியிலே இந்த ஆட்சியை நடத்திக் கொண்டு வருகிற அமைச்சரவையிலே இருக்கின்ற உறுப்பினர்களே கூட மிகக் கடுமையாக விமர்சித்து வந்தும், அரசாங்கத்திலே இருந்துகொண்டு அவசர நிலைப் பிரகடனத்தை, அதனால் ஏற்படும் உத்தரவுகளை நாங்கள் அமலாக்குவோம் என்று சொல்லிக்கொண்டு வரக்கூடிய இந்த அமைச்சரவையின்மீது எங்களால் கொண்டு **வரப்பட்டிருக்கும் இந்தக் கண்டனத் தீர்மானத்தின்மீது என்னு** டைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

இந்த அவசர நிலைப் பிரகடனத்திற்கு முன்னால் நாட்டிலே எங்கும் ஓர் அமைதியற்ற சூழ்நிலை இருந்தது என்பதை நாமெல் லாம் உணருவோம். தமிழகத்திலேகூட அம்மாதிரியான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடுமோ என்று சங்கடப்பட்டுக் கொண்டிருந்த அமைச்சரவைக்கே—"இன்றைக்கு அமைதியான சூழ்நிலையிலே அரசை நடத்துங்கள்"—என்ற அளவிலே இந்த அவசர நிலைப் பிரகடனம் அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்திருக் கிறது.

இராமலிங்க அடிகளார் பாடினார்கள்—'மதியார்க்கும் மதிப்ப வர்க்கும் மதி கொடுக்கும் மதியே' என்று. இந்த அவசர நிலைப் பிரகடனத்தை நீங்கள் எதிர்த்தாலும்கூட 'உங்களுக்குப்

பாதுகாப்பு அளிப்போம். நீங்கள் நிம்மதியாக இந்த ஆட்சியை நடத்துங்கள்; சங்கடம் இல்லாமல் அரசாங்கக் காரியங்களைக் கவனியுங்கள்' என்ற அளவிலே சமய சஞ்சீவியாக வந்தது, ஆபத்பாந்தவனாக வந்த இந்த அவசர நிலைப் பிரகடனம் தமிழக அரசுக்கும் பாதுகாப்பு அளித்திருக்கிறது என்ற உண்மையை இந்த அமைச்சரவை மறுக்காது; ஆட்சியில் இருக்கும் கட்சியின் உறுப்பினர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நிச்சயமாக நான் நம்புகிறேன்.

இன்று இந்த அமைச்சரவையின் தலைவர் என்ற முறையில் நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த அமைச்சரவையின் தலைவராகவும் இருக்கிறார்கள், அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும் இருக்கிறார்கள். ஒரு பாராளுமன்ற ஜனநாயக அமைப்பில் அரசியல் கட்சிகள் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. கொள்கை ரீதியாக இருக்கவேண்டிய ஒன்று. எந்தவொரு அரசியல் கட்சியும் தன்னுடைய கட்சியின்மூலம் சில திட்டங்களை வகுக்கிறது, சில கொள்கைகளை வகுக்கிறது. அந்தக் கொள்கையை அரசாங்கத்தின்மூலம் அமலாக்க முயற்சி எடுக்கவேண்டியது அந்தக் கட்சியின், அமைச்சரவையின் பொறுப்பு.

இந்த அவசர நிலைப் பிரகடனத்தை வெளியில் கட்சி ரீதியாக, அரசாங்க ரீதியாக அல்ல, கட்சி ரீதியாக மிகக் கடுமையாக எதிர்க்கிறோம் என்று கூறுகிறார்கள். அந்தக் கட்சியின் கொள்கைகளை அமலாக்கும் அரசாங்கத்தில் இருக்கும் நீங்கள் அதே வழியில் செல்ல மறுக்கிறீர்கள், காரணம் என்ன? மறுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. நான் சொல்ல வருவது என்னவென்றால்—அவசர நிலைப் பிரகடனத்தை ஆதரிக்கிறோம், அதன்படியுள்ள உத்தரவுகளை அமலாக்குகிறோம் என்று கூறுகிற நீங்கள் வெளியிலே அவசர நிலைப் பிரகடனத்தை ஆதரிக்காததற்குக் காரணம் என்ன? ஒரு கட்சி அல்லது கட்சியின் தலைமை இரண்டு கொள்கைகளை ஒரே நேரத்தில் அமலாக்குவதற்கு முயற்சிப்பது உலகத்திலேயே எங்குமே காணாத ஒரு விநோதம் என்றுதான் நான் கூறுவேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை இரண்டு குதிரைகளின் மேல் ஏக காலத்தில் சவாரி செய்ய முயற்சிக்கிறது. அது கொண்டுபோய் சேரவேண்டிய இடத்தில் சேர்க்காது. கீழேதான் தள்ளும். ஆகவே, ஒரே குதிரையில் சவாரி செய்யுங்கள், ஒரே கொள்கையை அமலாக்குங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.



நாட்டில் அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இந்த அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டிருப்பது நியாயம்தானா, அவசியம்தானா என்பதைப் பற்றிச் சிந்திக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த நாட்டில் தனி மனிதனுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது, அரசியல் சட்டத்தின் மூலமாக. ஒரு மனிதன் சுதந்திரமாகத் தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு, சுதந்திரமாகச் செயல்படுவதற்கு, சுதந்திரமாகத் தொழில் செய்வதற்கு, சுதந்திரமாக அரசியல் கட்சிகளை, அசோசியேஷன்களை அமைத்துக் கொள்வதற்கு அரசியலமைப்புச் சட்டம் பரிபூர்ண சுதந்திரம் வழங்கியிருக்கிறது. ஒரு மனிதனுக்கு சுதந்திரம் இருக்கிறது என்ற காரணத்தினால் எந்தவிதத்திலும் நடந்துகொள்ளலாம் என்று ஒருவன் நினைப்பானேயாகில் அது மிகவும் தவறு. அந்த சுதந்திரம் பிறருக்குக் கெடுதலை ஏற்படுத்தாவண்ணம் பிறருடைய சுதந்திரத்தைப் பாதிக்காவண்ணம் நடந்துகொள்வதுதான் சுதந்திரமே தவிர எனக்கு சுதந்திரம் இருக்கிறது என்று சொல்லி ரோடு விதிகளைப் பார்க்காமல் கார் ஓட்டுவேன் என்றால் அந்த சுதந்திரம் அவனை எங்கே கொண்டுபோய் விடும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த சுதந்திரத்தின் பயனாக நாம் ஒரு ஜனநாயக அரசியலமைப்பு முறையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் அரசியல் சட்ட ரீதியாக. இந்த ஜனநாயக அரசியலமைப்பு முறையைப் பல்வேறு நாடுகளில் பல்வேறு முறைகளில் அமைத்துக்கொண்டிருந்தாலும் கூட அந்த ஜனநாயக அரசியலமைப்பு முறை என்பதும் சில கட்டுத்திட்டங்களுக்கு, சில வரம்புகளுக்கு, சில விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டுமே தவிர வரம்பை மீறிச் செயல்படுவதை எந்த ஜனநாயக அமைப்பும் அனுமதிப்பதும் கிடையாது. அனுமதிக்கவும் முடியாது. அந்த வரம்புகளை மீறி எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்ளலாம், எப்படி வேண்டுமானாலும் செயல்படலாம் என்றதொரு நிலை ஒரு நாட்டில்

ஜனநாயக அமைப்பில் சுதந்திரம் என்ற பெயரால் அனுமதிக்கப் படுமானால் அந்த நாட்டில் உண்மையான ஜனநாயகம் இருக்க முடியாது, சுதந்திரம் இருக்க முடியாது.

ஆகவே, நாம் ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, சில வழிமுறைகளுக்கு உட்பட்டு, விதிமுறைகளுக்கு உட்பட்டு எந்தக் காரியத்தையும் செய்யவேண்டும் என்பதுதான் ஜனநாயகம் கொடுக்கிற வரம்பு. இப்படிப்பட்ட ஜனநாயக அமைப்பு முறை, சட்ட திட்டங்கள் இவை எல்லாம் ஏற்படுவதற்கு முன்னால் நம் முன்னோர்கள் **தனி மனிதனுக்குச் சில விதிமுறைகளை வகுத்திருந்தார்கள்.** எப்படி வாழ்க்கை நடத்த வேண்டும் எப்படி வாழ வேண்டும் என்பதுபற்றிச் சில விதிமுறைகளை வகுத்திருந்தார்கள். அ வழிமுறைகளைப்பற்றி வள்ளுவர் சொல்கிறபோது மிக உன்ன மான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள் :

> "பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்"

தனி மனிதன் எப்படி நாகரிகம் உள்ளவனாக இருக்க வேண்டும், நாகரிகம் என்றால் என்ன என்பதைப் பற்றித் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

ஆகவே, மனிதன் தனக்குத்தானே சில கட்டுப்பாடுகளை விதித்துக்கொண்டு பிறருக்குச் சிரமம் கொடுக்காமல் வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டான் சுகமாக வாழ்ந்தான். அதில் பலவிதமான சிக்கல்கள், சமுதாயத்தில் சில சங்கடங்கள் ஏற்பட்டு அரசுகள் ஏற்பட்டு, பல சட்டதிட்டங்கள் எல்லாம் வகுக்கப் பட்டன. அது ஒரு பெரிய வரலாறு.

இன்றைய தினம் நாம் பாராளுமன்ற ஜனநாயக அமைப்பு முறையை ஏற்றுக்கொண்டிருக்கிறபோது பாராளுமன்ற ஜனநாயக அமைப்பு முறை என்ன கூறுகிறது என்றால் இந்த அமைப்பு முறையில் மக்களுக்கு வோட்டு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வோட்டு உரிமையைப் பயன்படுத்தி அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டி போடலாம். மக்களுக்கு வோட்டு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. தேர்தல்களைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறோம். மக்கள் எந்தக் கொள்கையை விரும்பு கிறார்களோ, அந்தக் கொள்கை உடையவர்களுக்கு வோட்டு அளிக்கிறார்கள். பெரும்பான்மையான வோட்டுகளைப் பெற்ற கட்சி





ஆட்சி பீடத்திற்கு வருகிறது. பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆட்சிக்கு வருகிறது. அந்தக் கட்சியின் தலைவரைக் கூப்பிட்டு அமைச்சரவை அமைத்துக்கொள்ளுங்கள் என்று கூறுகிறார்கள். அமைச்சரவையை அமைத்துக் கொள்ளும் போது, எந்தக் கட்சி அமைச்சரவையை அமைக்கிறதோ அந்தக் கட்சியின் கொள்கைகளை அந்த அமைச்சரவை அமலாக்க முயற்சிக்கிறது, சட்டப்படி. அந்த அமைச்சரவை சட்டபூர்வமான வரம்புகளுக்குள் மாற்றத்தைக் காண வேண்டும் என்ற முறையில் இந்தமாதிரியான அமைப்பு முறையை நம் முன்னோர்கள் நமக்கு வழங்கியிருக்கிறார்கள். பாராளுமன்ற ஜனநாயக அமைப்பு முறையின் மூலமாக நாம் மாற்றங்களைக் கண்டுவிட முடியும் என்று நம் தலைவர்கள் கருதியிருக்கிறார்கள். அந்த அமைப்பு முறை மூலமாக சோஷலிஸ சமுதாயத்தை, வர்க்க பேதமற்ற அமைப்பை ஏற்படுத்தப் போகிறோம் என்று கூறிவந்திருக்கிறார்கள்.

நமது பிரதமர் அவர்களும், முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களும் பாராளுமன்ற ஜனநாயக அமைப்பு முறை மூலம் வர்க்கபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கலாம், ஒரு சமதர்ம சமுதாய அமைப்பை ஏற்படுத்த முடியும் என்று கூறிவந்திருக்கிறார்கள். உலகத்திலேயே அப்படிப்பட்ட வர்க்கபேதமற்ற சமுதாயத்தை பாராளுமன்ற ஜனநாயக அமைப்பு முறை மூலமாக நாம்தான் நிறைவேற்ற முடியும், இந்திய நாடுதான் அதை பக்குவமான முறையில் செய்யமுடியும் என்று கருதித்தான் பாராளுமன்ற ஜனநாயக அமைப்பு முறையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

ஆளும் கட்சியில் இருப்பவர்களை எதிர்த்தரப்பில் இருக்கிறவர்களுக்குப் பிடிக்காமலிருக்கலாம், அவர்களின் கொள்கைகள் தவறு என்று படலாம். அப்படி தவறு என்று படுமானால் பாராளுமன்றத்தில் அல்லது சட்டப் பேரவையில் அந்தக் கொள்கைகளை எதிர்த்துப் பேசுவதற்கு உரிமை தரப்பட்டிருக்கிறது. எதிர்த்துச் சொல்வதற்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி பேசும்போதுகூட தாக்கிச் சொல்லப்படுகிற கருத்துக்கள் பத்திரிகைகளில் அதிகமாக வெளிவருவதற்கான வாய்ப்புகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆக, இம்மாதிரி கருத்துமோதல்கள் வெளியில் இருக்கிற மக்களை அரசியல் ரீதியாக படிப்பிக்கச் செய்கிறது.

அப்படி அரசியல் ரீதியாக மக்கள் பிரச்னைகளை அணுகும்போது தேர்தல்கள் வரும்போது ஆட்சியில் இருக்கிற கட்சியின் கொள்கைகள் சரியாக இல்லை என்றால், அல்லது நாட்டுமக்களுக்கு நல்ல பலன் அளிக்கவில்லை என்று கருதினால், அல்லது வேறு ஏதாவது சங்கடங்கள் ஏற்பட்டுவிட்டன என்று மக்கள் கருதினால் அந்த ஆட்சியை மாற்ற எதிர்த்து நிற்கும் கட்சிக்கு வோட்டு போடுவதில் எந்தவிதமான தடையும் கிடையாது.

ஆகையினால், அம்மாதிரியான ஒரு உரிமை, அம்மாதிரியான ஒரு சந்தர்ப்பம் இந்த நாட்டிலே இருக்கிற மக்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த நிலையை விட்டுவிட்டு, இதற்காக இருக்கும் சட்ட வரம்பு முறைகளை மீறி, அரசியல் சட்ட வரம்புகளை மீறி, நாட்டிலே உள்ள ஜனநாயக அமைப்பு முறைகளை மீறி, ஜனநாயக முறைப்படி ஆட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் அரசாங்கத்தைக் கவிழ்த்து விடவேண்டுமென்று, அரசியல் சட்ட விதிக்கு முரணாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுமானால், அதனால் இந்த நாட்டிலே ஜனநாயகம் உயிர் பிழைக்குமா என்பதை சிந்திக்கும்படி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய கொள்கைகள் பிடிக்காமல் இருக்கலாம், எங்களுடைய கொள்கைகளை எதிர்த்துப் பிரசாரம் செய்ய பரிபூர்ண உரிமை கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதைப் பயன் படுத்தி, மக்கள் மத்தியிலே பிரசாரம் செய்து, இந்த அரசாங்கத்தை கீழே இறக்கச்செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, இந்தச் சட்டவிதிமுறைகளுக்குப் புறம்பாக ஒரு ஆட்சியைக் கீழே இறக்குவதற்கு முற்படுவார்களானால், இந்த நாட்டிலே உண்மையான ஜனநாயகம் இருக்குமா என்று நீங்கள் எல்லாம் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். மனதிற்குள் சிந்தித்துப்பாருங்கள். வெளியில் சொல்ல முடியாமல் இருக்கலாம். கட்சிக் கட்டுப்பாடு இருக்கும். மனதிற்குள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நாட்டிலே பொருளாதார அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால் உள்நாட்டிலே அமைதி நிலவவேண்டும். உள்நாட்டில் அமைதி இல்லையென்றால், உள்நாட்டிலே ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிற எந்தக் கட்சியும் சரிவர மக்களுடைய நலனைக் கவனிக்க இயலாது. நான் திராவிட முன்னேற்றக் கழக அரசின் தலைவரைப் பார்த்துக்கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே





அம்மாதிரி சட்டத்திற்குப் புறம்பாக செயல்படக்கூடிய எதிர்க் கட்சிகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் சதா. தினமும் ஒரு கலவரம். சட்டசபைக்கு எதிரே தர்ணா, முதலமைச்சர் வீட்டிற்கு முன்பு தர்ணா, கிளர்ச்சி, பஸ்களைக் கொளுத்துவது, போன்ற வன்முறைச்செயல்களில் ஈடுபடுவார்களானால், உங்களுடைய கொள்கைகளை, நீங்கள் எண்ணிப் பார்க்கும் எண்ணங்களை நிறைவேற்றுவதற்கு இயலுமா? இந்தக் கலவரங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு, அதை எப்படிச் சமாளிக்கலாம் என்று எண்ணம் இருக்குமே அல்லாமல் வேறு எதுவும் செய்ய முடியாது. அந்த நிலைமைதான் இந்தியாவில் ஏற்பட்டு இருக்கிறது. வளர்ந்த ஜனநாயகத்தைக் குலைக்கும் சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதை மட்டும் நான் குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஆட்சியின் மீது ஏன் இத்தகைய வெறுப்பு ஏற்பட்டது? ஏன் இப்படி வன்முறையால் ஆட்சியிலிருந்து அந்தக் கட்சியை இறக்கவேண்டுமென்று கருதுகிறார்கள் என்று கேட்கிறேன். காங்கிரஸ் கட்சி இந்த நாட்டிலே ஒரு சோசலிச சமூக அமைப்பை ஏற்படுத்தவேண்டுமென்று கூறுகிறது. வர்க்க பேதமற்ற சமூக அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற லட்சியத்தைக் கூறுகிறது. அந்த லட்சியத்தை அடைவதற்கான வகையில் சில மாறுதல்களைச் செய்து கொண்டு இருக்கிறது. இப்படிச் செய்கிறபோது, பாதிக்கப் படக்கூடியவர்கள் இந்த மாறுதல்களை எதிர்க்கிறார்கள். இந்த நாட்டிலே இருக்கிற கட்சியை ஆட்சியை விட்டு விரட்டவேண்டும். அவர்களைப் பதவியில் இருக்கச் செய்யக்கூடாது. நமக்கு இருக்கும் உரிமைகள் பறிக்கப்படக்கூடாது. அதைக் காத்துக்கொள்கிற வகையில் சில முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அது என்னவென்றால், ஜனநாயகத்தைக் காப்பாற்றுகிறேன் என்ற பெயராலே இந்த நாட்டிலே ஒரு கிளர்ச்சியை செய்து, ஜனநாயகத்தை அழிக்கும் சூழ்நிலை ஏற்பட்ட பிறகுதான், அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டது என்பதை நீங்கள் எல்லாம் ஒப்புக் கொள்வீர்கள் என்பதில் எனக்குக் கொஞ்சம் கூட சந்தேகம் கிடையாது. இப்படி முற்போக்கான கொள்கைகளை உருவாக்குகிற போது. முற்போக்கான கொள்கைகளை அமல்படுத்துகிறபோது அதை முளையிலே கிள்ளி எறிய பிற்போக்குச் சக்திகள், வலதுசாரி சக்திகள் கங்கணம் கட்டிக்கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம். இதற்கு அடிப்படையாக இந்திய நாட்டிலே ஏற்பட்ட பல பொருளாதார சங்கடங்கள் சாதகமாக அமைந்துவிட்டன என்பதை நாம் மறந்து விடுவதற்கு இல்லை.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 அக்டோபர் 28

என்பதையாவது சிறிதாவது எண்ணிப் பார்க்க வேண்டாமா நாட்டுப் பற்றுக்கொண்ட ஒவ்வொருவரும்? நாட்டில் உணவு தானியப் பற்றாக்குறை இருக்கிறது. உள்ள தானியத்தையும் ஒரு இடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்குக் கொண்டு செல்ல ரெயில் வாகன்கள் பற்றாக்குறை. தமிழ் நாட்டில்கூட தானியப் பற்றாக் குறை ஏற்பட்டதைப் பார்த்தோம். தமிழகத்தில் தண்ணீர் இல்லாத காரணத்தினால், வானம் பொய்த்த காரணத்தினால் வறட்சி நிலை, மின்சாரத் தட்டுப்பாடு. பெருமளவிற்கு மின்சாரம் நிலக்கரியினை உபயோகித்துத்தான் உற்பத்தி செய்யப்பட்ட நிலைமை. அந்த நிலக்கரி வந்து சேரவில்லை என்றால் மின்சாரம் இல்லை. மின்சாரம் இல்லை என்றால் தொழிற்சாலைகள் கொஞ்சம் கொஞ்சமாக நின்று விடக்கூடிய நிலைமை. நாட்டிற்குத் தேவையான மிகமிக முக்கியமான தொழிற்சாலைகள்கூட நின்றுவிடக்கூடிய நிலை மின்சாரம் இல்லை என்றால். ஒருபுறம் உணவு தானியம் கிடையாது. மறுபுறத்தில் மின்சார உற்பத்தி நின்று விடுவதால் தொழிலாளர் களுக்கு வேலைபோய், வருமானம் இழந்து பெரும் நெருக்கடி ஏற்படக்கூடிய நிலைமை. இத்தகைய நிலைமைகள் உருவானால் நாட்டின் பொருளாதார நிலை என்ன ஆகும்? ஏற்கெனவே நாம் ஒரு சிக்கலான பொருளாதார நிலையில் இருக்கிறோம் என்றால், இதையும் மேற்கொண்டு செய்தால் நெருக்கடி எந்த அளவிற்கு முற்றும் என்றும் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட தொரு பொருளாதாரச் சீரழிவை ஏற்படுத்தி, அதன் விளைவாக ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டு, இறுதியாக பிரதமர் இந்திரா அவர்கள் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட வேண்டும் என்ற அந்த ஒரே காரணத்திற்காகத்தான் 'நாடு தழுவிய போராட்டம்' என்றார்கள்.

மார்ச் 9, 1974-ல் ஜார்ஜ் பெர்னாண்டெஸ் அவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதியினை, தலைவர் அவர்களுடைய அனுமதியோடு இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். "ஏழு நாள் ரெயில்வே ஸ்ட்ரைக் என்றால் தெர்மல் ஸ்டேஷன்கள் எல்லாம் நின்றுவிடும். பத்து நாள் ஸ்ட்ரைக் என்றால் எல்லா எஃகு ஆலைகளும் மூடப்பட்டுவிடும். பிறகு அவற்றை மீண்டும் ஓடச்செய்ய 12 மாதங்கள் ஆகும். 15 நாள் நீடித்தால் நாடு பட்டினி கிடக்கும் . . .' இது ஒரு இரகசிய கூட்டத்தில் அவர் பேசிய



1975 அக்டோபர் 28] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

பேச்சு. இப்படிப்பட்டதொரு சூழ்நிலையில் தொழிலாளர்களைத் தள்ள வேண்டும் என்று . . .

THIRU R. PONNAPPA NADAR: Certain things are brought into records of this House. The hon. Member says that he has got them secretly. How he came into possession of those records? Does he vouch for the correctness of those statements? That is the matter which we have to consider. We can also say ......

THIRU A. R. MARIMUTHU: Government of India Publication இது. அதிலிருந்துதான் எடுத்துப் படிக்கின்றேன் இதை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இவ்வளவு பயங்கரமான விளைவினைக் கொடுக்கக்கூடிய ஒரு வேலை நிறுத்தத்தினை இன்று மாரிமுத்து அவர்கள் சார்ந்துள்ள கட்சியோடு சேர்ந்துள்ள இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினரும் முன்நின்று ஆரம்பித்தது உண்மையா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அப்படிப்பட்ட பயங்கரமான ரெயில்வே ஸ்ட்ரைக் ஓரளவிற்குச் சமாளிக்கப்பட்டது. மிக ராஜதந்திர முறையில் சமாளிக்கப்பட்டது. அது போகட்டும்.

நாடு தழுவியதொரு போராட்டம் என்ற முறையில் ஜனதா முன்னணி என்று அவர்களுக்கு இடையில் எந்தவிதமான கொள்கைப் பிடிப்போ சம்பந்தமோ இல்லாதவர்கள் எல்லாம் இந்திரா காந்தி அவர்களைப் பதவியிலிருந்து இறக்க வேண்டும் என்ற ஒரே லட்சியத்தின் அடிப்படையில் ஒன்று சேர்ந்து அப்படிப்பட்டதொரு போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று முயற்சித்தார்கள். அந்தமாதிரி முன்னணிக் கூட்டங்களிலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டு பேசினார்கள். இது உண்மை. ஆனால் அவர்கள் எந்தவிதமான போராட்டங்களிலும் கலந்து கொள்ளவில்லை, வட மாநிலங்களிலே அவர்களுக்கு கழகம் என்ற முறையில் பிடிப்பே இல்லாத காரணத்தினால் என்று கருதுகிறேன். ஆனால் ஆலோசனைகளிலே கலந்து கொண்டார்கள்.

பெங்களூரில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பத்திரிகை நிருபர்கள் கேட்டார்கள், 'பிகாரில் ஜே.பி. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசினை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை நிர்ப்பந்தமான முறையில் இராஜினாமா செய்ய

வேண்டும் என்று கோருகின்றார்களே, சட்ட மன்றத்தைக் கலைக்க வேண்டும் என்றும் அதற்காக ஒரு கிளர்ச்சியை நடத்த வேண்டும் என்றும் கோருகின்றாரே, அது பற்றி உங்கள் கருத்து என்ன' என்று கேட்டதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசினை பலாத்கார மான வழிகளிலே பார்லிமெண்டரி முறைகளுக்கு மாறான வழியில் மாற்றும் முயற்சிகளை நான் விரும்பவில்லை, ஆதரிக்கவில்லை' என்று சொல்லிவிட்டார்கள். ஆதரிக்கவில்லை என்று இருக்கும்போது அது நாடு முழுவதற்கும்தானே பொருந்தும்? பிறகு ஏன் இந்தக் கமிட்டிக் கூட்டங்களிலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும்? இது வன்முறை களுக்கு வித்திடும் என்று சொல்லிவிட்டு வெளியே வருவதுதானே? பிறகு அலகாபாத் கோர்ட்டின் தீர்ப்பு வந்தது. அந்தத் தீர்ப்பிற்குள் புகுந்து எது பற்றியும் நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அவர் விளக்கம் கொடுக்கும் காரணத்தினால் அது தவறாக இருந்துவிடக் கூடாதே என்ற முறையில் சொல்ல விரும்புகிறேன், அந்தக் கமிட்டியில் இருந்த செழியன் அவர்கள் போராட்ட கமிட்டி ஆலோசனை செய்த நேரத்தில், 'நாங்கள் போராட்டங்களில் கலந்து கொள்ளுவதற்கு இல்லை. அது எங்கள் கட்சி எடுக்க வேண்டிய முடிவு' என்று சொல்லி, பின்னர் கட்சியும் அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்பதையும் அவர் அந்த விபரத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** ரொம்பவும் நன்றி. ஆக இப்படி சட்ட மன்றங்கள் கலைக்கப்பட வேண்டும், பார்லிமெண்டு கலைக்கப்பட வேண்டும் என்று சொன்னது போக, அலகாபாத் உயர்நீதி மன்றத் தீர்ப்பிற்குப் பிறகு அனைவரும் ஒருமித்த குரலில், பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பதவியிலிருந்து கீழே இறங்க வேண்டும் என்று அந்தக் கோரிக்கையில் கவனம் செலுத்த ஆரம்பித்தார்கள். அலகாபாத் உயர்நீதி மன்றம் தன் தீர்ப்பில் என்ன சொல்லிற்று? ஒரு தாப்பில் தேர்தல் செல்லாது என்று சொன்னாலும் அவர் பிரதமராக நீடிப்பதற்கு உரிமை உண்டு என்று சொல்லியிருக் கின்றது. ஆனால் ஒரு பக்கத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, மறுபக்கத்தில் அந்த ஜட்ஜ்மெண்டில் என்ன சொல்லியிருக் கின்றது என்பதைப் பார்க்க முயற்சிக்கவே இல்லை இவர்கள். அதைவிட்டுவிட்டு, நீடிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்களே,





அது ஏன் என்று யோசித்தார்களா? அதைப்பற்றிக் கவலைப்படாமல் 'கீழே இறங்கு, கீழே இறங்கு' என்று சொல்லிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இறங்கு, இறங்கு என்று சொல்வதன் நோக்கம் என்ன? எண்ணிப்பார்க்க வேண்டாமா?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நேற்றோ அதற்கு முன்தினமோ வெளிநாட்டுக்காரர்கள் பிரதம அமைச்சரைச் சந்தித்துக் கேட்டார்கள். இந்த ஜட்ஜ்மெண்டை கேட்டபோது உங்கள் மனநிலை எப்படி இருந்தது என்று கேட்டார்கள். "நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை, எங்கள் கட்சியில் எனக்குப் பரிபூரண ஆதரவு இருக்கிறது; மக்களுக்கு என்மேல் முழு நம்பிக்கை இருக்கிறது; என் தலைமைதான் இருக்க வேண்டுமென்று எங்கள் கட்சி விரும்புகிறது; மக்களும் விரும்பு கிறார்கள்; ஆகவே நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை; ஜட்ஜ்மென்டிலும் ஒரு பகுதியில் நீடித்து இருக்கலாம் என்று இருக்கிறது; அப்படி இருக்கும்போது எப்படி ராஜிநாமா செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும்?" என்று கூறியிருக்கிறார்கள்.

பிரதம அமைச்சர் இறங்கிவிட்டால் நாட்டிலே என்ன நிலைமை ஏற்படும் என்று யாரும் சிந்திக்கவில்லை. எப்படியாவது அவர் கீழே இறங்க வேண்டும். அதுதான் அவர்களின் எண்ணம். அதற்கு இப்படி ஒரு போராட்டம். 25-ம் தேதி ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். அதிலே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 20 அம்சத் திட்டத்திற்கு வரவில்லை போலிருக்கிறதே.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இருபது அம்சத் திட்டத்திற்கு, அவசரநிலைக்கு அடிப்படையாக இருக்கக்கூடிய மற்ற காரணங் களையும் சொல்லிவிட்டு, பிறகு வருகிறேன்.

அவர்கள் எல்லாம் எப்படியாவது இந்திரா காந்தியைக் கீழே இறங்க வேண்டுமென்று திட்டமிட்டார்கள். அதற்கு இந்திரா காந்தி ராஜிநாமா செய்ய வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை எடுத்தார்கள். இந்திரா ராஜிநாமா செய்ய மாட்டார் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகையால் நாடு தழுவிய சத்தியாகிரகம் செய்வது, நாடு

"ஜனநாயகக் கன்னியின் குடுமியை அறுத்து, முகத்திலே சூடு போட்டது" போல் தெரிந்திருக்கிறது. கடற்கரைக் கூட்டத்திலே அப்படிப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் தூரத்தில் இருந்து பார்த்ததால் அப்படித் தெரிந்திருக்கிறது. அந்தப் பார்வை சரியானதல்ல. ஜனநாயகக் கன்னிக்கு ஏற்படுத்தப்பட்ட கடுமையான நோய்க்காகச் செய்யப்பட்ட ஆப்பரேஷனை தவிர, குடுமியை அறுக்கவுமில்லை; முகத்திலே சூடு போடவுமில்லை. எட்டியிருந்து பார்த்ததால் அப்படி உங்களுக்குத் தெரிந்திருக்கிறது; அவ்வளவு தான். இப்போது ஜனநாயகப் பெண்ணுக்கு ஆப்பரேஷன் முடிந்து, 'ஸ்டிச்சஸ்' போடப்பட்டிருக்கிறது. ஸ்டிச்சஸ் எடுக்கப்பட்டவுடன் அந்த ஜனநாயகக் கன்னி முன்போலவே காட்சியளிப்பாள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படியானால் இப்போது ஜனநாயகக் கன்னி ஆஸ்பத்திரியில்தான் இருக்கிறாள்; இன்னும் வரவில்லை. (சிரிப்பு).

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** ஜனநாயகக் கன்னி உயிரோடு இருக்கிறாள். ஆப்பரேஷன் செய்து, ஸ்டிச்சஸ் போடாவிட்டால் இறந்துபோயிருப்பாள்; இப்போது உயிரோடு இருக்கிறாள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இன்னும் ஆஸ்பத்திரியில் தான் இருக்கிறாள், வெளியே வரவில்லை; அவ்வளவுதான்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** ஜனநாயகக் கன்னி உயிரோடு இருக்கிறாள். அவளுக்கு ஏற்பட்டிருந்த கொடிய நோய் அகற்றப்பட்டுவிட்டது. நாட்டிலே இன்னும் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அவைதான் ஸ்டிச்சஸ். புண் ஆறிய உடன், ஸ்டிச்சஸ் எடுக்கப்பட்டவுடன் ஜனநாயகக் கன்னி முன்போலவே உலாவுவாள்.

ஜூன் 26-ந்தேதிக்கு முன்னால் இந்த நாட்டிலே ஜனநாயகம் இல்லை; அராஜகம்தான் இருந்தது. சாதாரண மக்கள்கூட அதை விரும்பவில்லை. இந்த நாட்டுக்கு ராணுவம்தான் ஏற்றது என்று கூடச் சொன்னார்கள். அதை எல்லாம் கேட்டு வேதனைப் பட்டோம். ஆனால் பாராளுமன்றத்திலே ஜனநாயக அமைப்பு மூலம் இதைத் தீர்க்க முடியும் என்று நம்புகிறோம். ஜனநாயக அமைப்பு முறை காப்பாற்றப்படும். காப்பாற்றப்பட்டிருக்கிறது இப்போது.

ஜனநாயக முறையை மீறியதால், சட்ட திட்டங்களை மீறியதால், வரம்புக்கு மேலே போனதால் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சட்டத்திற்கு உட்பட்டு நடந்தவர்களை ஒன்றும் செய்யவில்லை. சட்டத்தை





மீறியவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். கள்ளமார்க்கெட்காரர்கள் உள்ளே இருக்கிறார்கள். கள்ளக்கடத்தல்காரர்கள் இன்றைக்கு உள்ளே இருக்கிறார்கள். கருப்புப்பணக்காரர்கள் உள்ளே இருக்கிறார்கள். கள்ளச்சாராயம் காய்ச்சியவர்கள் உள்ளே இருக்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகளைச் செய்தவர்கள் ரௌடிகள் உள்ளே இருக்கிறார்கள். இந்த அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டதனால் ஜனநாயகம் இன்றைக்குக் காப்பாற்றப்பட்டிருக்கிறது. இல்லை என்றால் பல்வேறு விளைவுகள் ஏற்பட்டிருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக் கொள்வார்கள்.

இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், அவர்களின் திட்டப்படி பள்ளிக்குப் போகும் மாணவர்கள் பள்ளிக்குப் போக மாட்டார்கள். தொழிலாளர்கள் தொழிற்சாலைக்குப் போகமாட்டார்கள். இவ்வளவு சம்பளம் வாங்கியும் அதிகாரிகள், அரசாங்க ஊழியர்கள் அலுவலகத்திற்கு ஒழுங்காகப் போக மாட்டார்கள், இன்னும் சம்பளம் கொடு என்று கேட்பார்கள்; அவர்களுக்குக் கீழே இருக்கின்ற மக்களைப்பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை. கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களைப்பிடித்து உள்ளே போட்டால் கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கிவிட்டு வெளியே வந்துவிடுவார்கள். அவைகளை எல்லாம் முன்னால் நாம் தடுக்க முடியவில்லை. இந்த அவசர நிலைப் பிரகடனம் வந்த பிறகுதான் கள்ளுக்கடை குறைந்திருக்கிறது. முன்பு இருக்கிற சட்டத்தை வைத்து ஒன்றும் பண்ண முடியவில்லையே.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஒரு விளக்கம். கள்ளச் சாராயம் காய்ச்சிய பெரிய வியாபாரிகளை யெல்லாம் மிசா சட்டத்தின் கீழே கைது செய்யவேண்டுமென்று கைது செய்தோம். 126 பேர்களை கைது செய்தோம். அவர்களை விடவேண்டுமென்று மத்திய சர்க்கார் உத்திரவிட்டு விட்டது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இருக்கலாம். எனக்குத் தெரியாது. இம்மாதிரி பல்வேறு சமூக விரோதச் செயல்கள் செய்கிறவர்கள் அவசரச் சட்டத்தினால் அடக்கப்பட்டு, சமுதாயத்தில் ஒரு ஒழுக்கம், கட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இப்போது தான், தங்கள் கடமை என்னவென்று எண்ணக் கூடிய நிலை சமுதாயத்தின் எல்லா பிரிவினர்களுக்கும் வந்திருக்கிறது. அரசாங்க இயந்திரம் முடுக்கி விடப்பட்டிருக்கிறது. இதற்குத் தொழிலாளர்

களெல்லாம் பெரிய ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். இதை எல்லாம் பார்க்கிறோம்.

இந்த அவசரநிலை தீர்மானம் போட்டவுடனே, இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் அதைக் குறித்து தீர்மானம் போட்டதை இந்த நேரத்தில் சொல்லவேண்டும். அதைச் சொல்லவில்லையென்றால் முடிவு பெறாது, முற்றுப் பெறாது. அந்தத் தீர்மானத்தைப் பூராவும் படிக்க விரும்பவில்லை. ஒரு வரியை நான் படிக்கிறேன். அதற்கு மேலே இல்லை. பாரதக் குடியரசு தலைவர் அவர்கள் வெளியிட்ட இந்த அவசர நிலை பிரகடனத்தினால் ஏற்பட்ட நிகழ்ச்சியைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் கலந்து யோசித்து ஒரு தீர்மானம் போட்டார்கள். அதிலே "அடக்குமுறையைக் கண்டு நாடு குமுறி எழுந்துள்ளது" என்று உள்ளது.

இந்த அவசர நிலைப் பிரகடனத்தைப் படித்தவுடனே பெரிய புரட்சி வரும் என்று எதிர்பார்த்துப் போட்டார்கள். என்ன எதிர்பார்த்தார்கள்? ஜெயப்பிரகாச நாராயணன் அவர்களை சிறைக்குள்ளே போட்டவுடனே நாடே குமுறப் போகிறது. அந்தச் சமயத்தில் நாமும் பங்கெடுத்துக் கொண்டு விடவேண்டும். இல்லாவிட்டால் பின்தங்கி விடுவோம், இரயிலைக் கோட்டை விட்டு விடுவோம் என்று தீர்மானம் போட்டு இந்தக் கருத்தில் வெளியிட்டார்கள். நாடே குமுறப் போகிறது என்று போட்டார்கள். குமுறவும் இல்லை, நிமிரவும் இல்லை. அந்தந்த வேலை, அதது ஒழுங்காக நடந்து கொண்டிருக்கிறது. எங்கேயும் ராணுவத்தை நாடு பூராவிலும் பரவலாக, போலீசை பரவலாக வைக்கவில்லை. அதற்குப் பதிலாக என்ன நிலைமை ஏற்பட்டது? தொழிலாளர்கள் பூராவும் ஆதரவு கொடுத்தார்கள். விவசாயிகள் ஆதரவு கொடுத்தார்கள். உழைக்கக்கூடிய மக்கள் ஆதரவு கொடுத்தார்கள். காரணம் என்ன? தவறு செய்கிறவர்கள், சமுதாய விரோதிகள் உள்ளே அடைக்கப்பட்டிருக்கிறார்கள், நமக்கு விமோசனம் கிடைக்குமென்ற நம்பிக்கையில் பெரும் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அவசர நிலைப் பிரகடனத்திற்கு மக்கள் எந்த விதமான வேறுபாடும் இல்லாமல் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். இதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கிறவர்கள் கூட அனைவரும் கொடுத்திருக்கிறார்கள்.



அப்படியே மனதுக்குள்ளாக இந்த அவையில் இருக்கிற உறுப்பினர்கள் நினைக்கிறார்கள். வெளியில் சொல்ல மாட்டார்கள். சங்கடம் கட்சிக் கட்டுப்பாடு. அதை வரவேற்கிறேன். ஆறரை கோடி மக்கள் சார்பில் என்று பெரிய தீர்மானத்தைப் போட்டு விட்டு ஒன்றையுமே காணோம், என்னடா செய்வது என்று புரியாத நிலைமையில் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் என்ன சொல்வது என்று சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தீர்மானத்தைப் போட்டு விட்டு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னொரு 5 நிமிஷத்தில் முடித்து விடுங்கள். 50 நிமிஷம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, இது சென்சார் மோஷன். பேச சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சென்சார் மோஷன் அல்ல. சென்ஷர் மோஷன். 50 நிமிஷம் பேசியிருக்கிறீர்கள். பத்து நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** உங்களுக்குச் சங்கடம் இல்லாமல் சீக்கிரம் முடிக்கிறேன். நான் கருத்துக்களைப் பூராவும் சொல்லவில்லையென்றால் என்ன பிரயோசனம்? அரசியல் ரீதியாக விமரிசனம் செய்வதற்கு நேரம் கொடுக்கவேண்டும். எனக்குக் குறைக்க வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் 10-35-இல் ஆரம்பித்தீர்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** பத்து நிமிஷம் கூடக் கொடுத்தால் என்ன கெட்டுப்போச்சு?

ஆகையினாலே, இந்த தீர்மானத்திற்குப் பிறகு நாட்டின் நிலைமையைப் பார்க்கவேண்டும். தமிழகத்தில் இருக்கிற மக்களோடு பேசிப் பார்க்கிறபோது சாதாரண மக்கள் அவசர நிலையை ஆதரிக்கிறார்கள். ஆனால் என்ன குறிப்பிடுகிறார்கள் என்றால் திராவிட முன்னேற்றக் கழக அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்காத காரணத்தினால் விலைவாசி சரியாக இறங்கவில்லை. இந்தக் கருத்து பொது மக்களிடத்தில் பரவலாக இருக்கின்றது. அது உண்மையும் கூட.

நேரத்தில் பிரமியாக இருக்கிற நிலங்களை எடுக்க முடியாதா? ஏன் எடுக்கவில்லை?

குத்தகை நிலங்கள் சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற சட்டம் இங்கே நிறைவேற்றப்பட்டது. குடியரசுத் தலைவர் அதை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று திருப்பி அனுப்பப்பட்டு இங்கே கொண்டு வரப்பட்டது. அது பரிசீலனையோடு இருக்கிறதே தவிர மறு முறை இந்த மசோதாவை விவாதிப்பதற்கு கமிட்டி கூட்டப் படவில்லை. நிலைமை என்னுனது? இந்தச் சட்டம் மிகமுக்கிய மானது. பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இரண்டு வித மான உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளதால் யாருக்கும் அக்கறை இல்லாமல் அபிவிருத்தி செய்யப்படாமல் அப்படியே இருக்கின்றன. இந்த நிலங்களை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பைக் கொடுப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கவில்லை யென்றுல் இதை விட வேறு எந்தக் காரியத்தைச் செய்யப் போகிறது? குத்தகைக்காரர் ஒருவர், அவருக்கு நிலம் சொந்தம் இல்லையாகையால் அக்கறை கிடையாது. நிலச்சொந்தக்காரர் மற்றொருவர். அவர் நிலத்தில் பிரவேசிக்க முடியாது. ஆனுல், குத்தகையை வாங்கிக் கொள்ள முடியும். ஆக அவருக்கும் அக் கறை கிடையாது. இந்த நிலையில் பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அபிவிருத்தி ஆகாமலே கிடக்கின்றன.

(முற்பகல் 11.30)

கிணறுகள் வெட்ட முடியவில்லை. பம்புசெட்டுகள் போட முடியவில்லை. உடனடியாக 2 மாதத்தில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்துவிடுவோம் என்று என்னிடமும், திரு. கே. டி. கே. அவர்களிடமும் உறுதி கொடுக்கப்பட்டது. உறுதி நிறைவேற்றப் பட்டிருக்கிறதா என்றுல் இல்லை.

இன்னும் உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்து அதிகமாக இருந்த நிலங்கள் எல்லாம் எடுக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருப்ப தாகச் சொன்னுர்கள். கொடுக்கப்பட்டிருக்கிறது, உண்மை. ஆனுல், ஒழுங்கான முறையில் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. அதையும் மறுபரிசீலனை செய்ய வேண்டு மென்று கூறியிருக்கிறேன். உதாரணமாக, தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு தாலுக்காவில் வடக்குகோட்டை கிராமத்தில்





சிலரிடம் இருந்து நிலத்தை எடுத்தார்கள். ஆனுல் அந்த நிலம் அந்த ஊரில் உள்ள அரிசனங்களுக்கோ, நிலம் அற்றவர்களுக்கோ கொடுக்கப்பட்டதா என்றுல் இல்லை. வேறு ஊர்களில் உள்ள யாருக்கோ கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிய மனுவும் டி.ஆர்.ஓ. விடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் பட்டுக்கோட்டை தாலுக்காவில் சிரமேல்குடி என்ற ஊரில் எடுக்கப்பட்ட நிலம் அந்த ஊரில் இருக்கிற அரிசனங் களுக்கோ, நிலமற்றவர்களுக்கோ கொடுக்கப்படவில்லை. இன்னும் ஒரத்தநாட்டில் பரவத்தூரில் இருபது ஆண்டுகளாகப் புறம்போக்கு நிலங்களில் சாகுபடி செய்து வந்த 17 விவசாயிகளை விட்டு விட்டு அந்த நிலம் வேறு சிலருக்குப் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக் கிறது. அதுபற்றி அதிகாரிகளிடத்தில் அப்பீல் செய்யப்பட்டிருக் கிறது. நடைமுறையில் இது எல்லாம் கணக்கில் சேர்ந்திருக் கிறது.

இப்படி ஆழ்ந்து ஆராய்ந்து இதன் விளைவுகளை எல்லாம் பரிசீலிக்காது, அதிகாரிகளை நம்பிக்கொண்டு செயல்பட்ட காரணத் தினுல் இதுபோல பலவிடங்களில் சரியான முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்படவேயில்லை. 1963 ஆம் ஆண்டில் இருந்து கொடுக்கப்பட்ட பட்டா நிலங்கள் அனைத்தும் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும் என்பது என்னுடைய ஆலோசனையாக இருக்கிறது.

அடுத்து, குடியிருப்பு மனை வழங்குவது—பல லட்சம் மனைக் கட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. உண்மைதான்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நிலச்சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் அகில இந்தியாவில் அனைத்து மாநிலங் களோடு ஒப்பிடுகிறபோது தமிழ்நாட்டில்தான் சிறப்பாகப் பணி யாற்றப்பட்டிருக்கிறது என்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியே ஒப்புக்கொண்டிருக்கிருர்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அது ஓரளவு உண்மைதான். அதற்குக் காரணம் அகில இந்திய ரீதியில் இருந்தவர்கள் செய்ததன் விளைவு, உங்களுக்கு முன்னுல் இருந்தவர்கள் செய்ததன் விளைவு என்று எடுத்துக்கொள்ளலாம். அதைத் தொடர்ந்தே நீங்களும் செய்து நல்லபேர் வாங்கியிருக்கலாமே என்று சொல்ல வந்தேன்.

எல்லாம் செய்தாகிவிட்டது என்று மௌனமாக இருந்துவிடாதீர்கள். இன்னும் வேகமாகச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு மனைக்கட்டுகளைப் பட்டா செய்து கொடுக்க ஒரு சட்டத்தை நிறைவேற்றினோம். அதற்கு முன்பே திரு. ராஜகோபாலாச்சாரியார் காலத்தில் அவர்கள் குடியிருந்து வருகிற மனைக்கட்டுகளில் இருந்து அவர்களை வெளியேற்றக் கூடாது என்று சட்டத்தைக் கொண்டுவந்துவிட்டார். அந்தச் சட்டத்தின் பாதுகாப்பைப் பெற்று அவர்கள் அந்த நிலத்தை அனுபவித்துக் கொண்டுதான் வந்தார்கள். நீங்கள் அந்த மனையைச் சட்டப்பூர்வமாக அவர்களுக்கே கொடுக்கத்தான் முன்வந்தீர்கள். ஆனால் நீங்கள் சட்டம் கொண்டுவந்தபோதாவது நிலமற்ற அனைவருக்கும் அதை விஸ்தரிப்புச் செய்தீர்களா? ரொம்ப ஜாக்கிரதையாக விவசாய நிலத்தைத்தான் கொடுக்கலாம். மனைக்கட்டுகளாக இருந்தால் அதைக் கொடுக்க முடியாது என்று செய்தீர்கள். கேரளா சட்டத்தில் கார்ப்பரேஷனாக இருந்தாலும், முனிசிபாலிட்டியாக இருந்தாலும், பஞ்சாயத்தாக இருந்தாலும்—எந்த இடத்தில் இருந்தாலும் அதை அவர்களுக்குக் கொடுக்க வகை செய்தார்கள். அதை ஒப்பிடும்போது நாம் மிகக் குறைந்த அளவில்தான் செய்திருக்கிறோம்.

அடுத்து, அடிமைத் தொழிலாளர் முறை. அது தமிழ் நாட்டில் இல்லவே இல்லையென்று கூறியிருக்கிறார்கள். இன்னும் கிராமங்களில் அரிசனங்களில் பலர் கோவில்களில் நுழையவே முடியவில்லை. பறை அடிப்பது, மாடு தூக்குவது போன்ற கொடுமைகள். அதையெல்லாம் போக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எல்லாப் பணிகளுமே முடிந்துவிட்டன என்று வாளா இருப்பது சரியல்ல.

கிராமக் கடன் பளுவை நீக்குதல் என்பதனை எடுத்துக்கொண்டால் நாம் அவசரச் சட்டத்தின் மூலம் ஓராண்டுக்குத்தான் ஒத்தி வைத்திருக்கிறோம். மகாராஷ்டிரா மாநிலத்தில் 500 ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்கள் யாராக இருந்தாலும்—விவசாயியாக இருந்தாலும், சிறு வியாபாரியாக இருந்தாலும், அரசாங்க சிப்பந்தியாக இருந்தாலும்—தனிப்பட்டவர்கள் இவர்களுக்குக் கொடுத்த கடன் அனைத்தையும் ரத்து செய்தே அவசரச்சட்டம்





போட்டுவிட்டார்கள். ஆனால் இங்கே நீங்கள் ஒத்திப்போட்டிருக்கிறீர்களே தவிர என்ன செய்யப்போகிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அடுத்து, விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்பது. இதற்காக ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறோம் என்று சொல்லிவிட்டார்கள். இப்போதே நடவு ஆகி, அறுவடை ஆகி, நடவு ஆரம்பித்துவிட்டது. இந்தக் கமிட்டி எப்போது அறிக்கை கொடுக்கும் என்று தெரியாது. நீங்கள் அவசரநிலைப் பிரகடனத்தை வைத்துக்கொண்டு விவசாயக் கூலிகளின் குறைந்த பட்ச கூலியை அதிகப்படுத்திச் சட்டம் போட்டிருக்கலாம்; செய்யவில்லை.

இம்மாதிரிக் கவனமற்ற, வேகமற்ற நிலையில் நீங்கள் காரியங்களைச் செய்து கொண்டு போகிறீர்கள். அவசரச் சட்டத்தின் பலனை மக்கள் அனுபவிக்க முடியாமல் செய்கிறீர்கள். அவசரச் சட்டத்தையொட்டி அறிவிக்கப்பட்ட இருபது அம்சத் திட்டத்தினை நீங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதை நடைமுறைப்படுத்த வேகமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்கிற குற்றச்சாட்டை முன்வைக்கிறேன்.

நான் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய நண்பர் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தேன். தமிழக அரசுதான் ரிக்ஷா வாங்கிக்கொடுக்கிறது, விதவைகளுக்குப் பென்ஷன் கொடுக்கிறது, தையல் மிஷின் வாங்கிக்கொடுக்கிறது. இவை எல்லாம் நல்ல காரியம் தானே என்று நான் கேட்டதற்கு அவர் சொன்னார். ஒரு குழந்தை அழுகின்றது. அதற்குப் பசி—வயிற்று வலி, வயிற்று வலியைப்போக்க—அதன் பசியை நீக்க முயற்சி செய்யாது, அதனிடம் ஒரு கிலுகிலுப்பையைக் கொடுத்து அதைச் சிரிக்க வைக்க முயற்சிப்பது போன்ற காரியங்கள்தான் இவை என்றார். அப்படி தமிழக அரசு செய்கிற காரியங்கள் மக்களைச் சிரிக்க வைப்பதற்கான முயற்சியாக இருக்கிறதே தவிர—சமுதாயத்தின் அடித்தட்டிலுள்ள ஏழைமக்களைப் போக்குவதற்கான முயற்சிகளாக இல்லை. அவசரநிலைப் பிரகடனத்தைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அதை இங்கே எதிர்க்கவில்லையே தவிர வெளியில் அமைச்சர்களே அவசரநிலைப் பிரகடனத்திற்கு எதிராக வேகமாகப்

பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் போக்கு சரியானது அல்ல என்று சொல்லி இந்தத் தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன். வணக்கம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** உதவி சபாநாயகர் அவர்களே, "இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டுள்ள அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு, மத்திய அரசு அறிவித்துள்ள 20 அம்சத் திட்டத்தைச் சரிவர இந்த அரசு அமல்படுத்தத் தவறியதால், தமிழ்நாடு அமைச்சரவைமீது இப்பேரவை தனது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது" என்கிற தீர்மானத்தை ஆதரித்து, எங்களுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

அவசர நிலையை ஜூன் மாதம் 26 ஆம் தேதி அறிவித்ததோடு நிற்காமல், ஆறு நாட்களுக்குப் பின்பு ரேடியோவில் பிரதமர் அவர்கள் ஒரு பிரசங்கத்தை நிகழ்த்தினார்கள். அந்தப் பிரசங்கத்தில் சொல்லப்பட்டவைகளே இப்போது 20 அம்சத் திட்டம் என்று சாதாரணமாகச் சொல்லப்படுகிறது. 20 அம்சத் திட்டம் என்று கொடுக்கப்பட்டிருந்தாலும் அந்தத் திட்டத்தின் பின்னணி என்ன என்பதையும் பின்னால் என்ன வரப்போகிறது என்பதையும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். என் பிரசங்கத்தின் மத்தியில் அவர்களது கருத்தோட்டம் என்ன என்பதை நான் இடையிடையே எடுத்து வாசிக்க தாங்கள் அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இருபது அம்சத் திட்டம் வெளிவந்தவுடனே அந்தத் திட்டத்தின் பல அம்சங்களையும் அமல் நடத்த வேண்டிய பொறுப்பு மாநில அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. ஒன்றிரண்டு விதிவிலக்கு இருக்கலாம். ஜூலை மாதம் 1 ஆம் தேதி அன்று இந்தத் திட்டம் பிரகடனப்படுத்தப்பட்டவுடன், ஜூலை 3 ஆம் தேதி நான், இந்த மன்றத்தை உடனடியாக அழைக்க வேண்டும், இந்த மன்றத்தில் அந்த 20 அம்சத் திட்டத்தை எந்த எந்த முறையில் அமல்படுத்துவது என்பதைப் பற்றி விவாதித்து அரசு முடிவு எடுத்து செயல்படுத்தவேண்டும்—அதற்கு சபையில் உள்ளவர்கள் கருத்துச் சொல்ல வாய்ப்புக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி இந்த மன்றத்தைக் கூட்டவேண்டுமென்று கடிதம் எழுதியிருந்தேன்.





அதை நான் யாருக்கு எழுத முடியும்? சபாநாயகருக்குத்தான் எழுதி இருந்தேன். சபாநாயகர் அதற்கு இப்பொழுது புரொரோகேஷன் ஆகியிருக்கிற காரணத்தினால், கவர்னருக்குத்தான் எழுத வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். இதற்கிடையிலே, நான் சட்டமன்றத்தைக் கூட்ட வேண்டுமென்று சொன்னேன் என்று செய்தி வந்தவுடனே, சட்டமன்றத்தைக் கூட்டுவதற்குத் தமிழ்நாடு அரசாங்கத்தைக் கேட்கக் கூடிய தங்கமணிக்கு இந்திரா காந்தியை, பார்லிமெண்டைக் கூட்டுவதற்காகக் கேட்பதற்குத் தைரியம் இருக்குமா என்று ஆளுங் கட்சியினுடைய ஏடாக இருக்கக்கூடிய முரசொலி பத்திரிகையிலே ஒரு சவால் மாதிரி வந்திருந்தது.

ஆனால், அதே ஜூலை மாதத்தில் பார்லிமெண்ட் கூடிவிட்டது. அந்த பார்லிமெண்ட் கூடியவுடனே, இரண்டு அரசியல் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திருத்தங்களுக்கு மாநிலச் சட்டசபைகளுடைய அங்கீகாரங்கள் தேவை. மாநிலச் சட்டசபைகள் என்றால், 22 மாநிலச் சட்டசபைகளிலே, பாதி சட்டசபைகளாவது அங்கீகாரம் கொடுக்கவேண்டும். அப்படி அங்கீகாரம் கொடுக்க வேண்டுமென்று வருகிறபொழுது, நாம் ரொம்பப் பிரதானமான மாநிலம், ரொம்பப் பெரிய மாநிலம், ரொம்பப் பாரம்பரியமுள்ள மாநிலம். அப்படிப்பட்ட மாநிலங்கள் என்றால், மேற்கு வங்கத்தைச் சொல்லலாம். மகாராஷ்டிர மாநிலத்தைச் சொல்லலாம், தமிழ்நாட்டைச் சொல்லலாம். அப்படிப்பட்ட மாநிலங்கள் அவசர அவசரமாகக் கூடி இதற்கான தீர்மானங்களை நிறைவேற்றும் என்று நான் எதிர்பார்த்தேன். அதையும் நான் வலியுறுத்திக் கேட்டேன். அதற்கு எந்தவிதமான பதிலும் இல்லை. அரசியல் சட்டத்தினுடைய பின்னணியிலே வேண்டுமானால் கொஞ்சம் ஒதுங்கிக்கொள்ளலாம். 12 மாநிலங்கள் ஏற்கனவே ஒத்துக்கொண்டு விட்டன. ஆகவே, அதற்கு அவசியமில்லையென்று சொல்லலாம். 12 மாநிலங்கள் ஒத்துக்கொண்ட பிறகுதான் கேரளச் சட்டமன்றம் ஒத்துக்கொண்டு தீர்மானங்களை நிறைவேற்றியது என்பதை இந்த மன்றம் அறியும். ஆகவே, இவர்களுக்கு ஏதோ தடங்கலாக இருக்கிறது, ஏதோ ஒன்று இடைஞ்சலாக இருக்கிறது. சட்டமன்றத்தைக் கூட்டுவதற்கு ரொம்பத் தயக்கம்.

இதே அரசு சட்டமன்றத்தை முன்னால்—அவ்வாறு சொல்வதை விட, இந்தச் சட்டமன்றத்தைக் கூட்டக் கூடிய அதிகாரம்

படைத்தவர்கள்தான் இதற்கு முன்னால் எப்ரல் மாதம் 20-ந் தேதி தான் சட்டமன்றம் கூடி முடிந்தது. அதற்குப் பிறகு, அவசர அவசரமாகத் தந்தியைக் கொடுத்து மே மாதம் 2-ம் தேதியன்று சபை கூடுகிறது. 'இப்பொழுது சிக்கிம் மாநிலத்தை இணைக்கக் கூடிய திருத்தம் வந்திருக்கிறது. ஆகவே, கண்டிப்பாக வர வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்கள். அவ்வளவு அவசர மாகத் தந்தி கொடுத்து, சிக்கிம் மாநிலம் இணைக்கப்பட்டது என்ற திருத்தத்திற்கு அவசரம் காட்டிய இந்த அரசு, இது மிக முக்கிய மான விஷயம்—புதிதாக உள்நாட்டு அபாயத்தின் காரணமாக, அவசர நிலைமை வந்திருக்கிறது ; இப்பொழுது உள்நாட்டிலே என்ன அபாய நிலைமை வந்திருக்கிறது என்பதை விவாதிப்பதற்கு எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்காதது கண்டிக்கக் கூடியது மட்டுமல்ல, அப்படிச் செய்யாது விட்டு, நாங்களும் ஆட்சி நடத்து கிறோம் என்று சொல்லக்கூடிய அரசை என்ன பெயர் சொல்லி அழைப்பது என்று தெரியவில்லை. எற்கனவே, பார்லிமென்டரி ஜனநாயகத்தைப் பற்றித் தெரிந்த தலைவர்கள் சில பதப் பிரயோகங்களை உபயோகித்து அதைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். நான் அவற்றைச் சபையினுடைய யோசனைக்கு விட்டு விடுகிறேன்.

இப்பொழுது, கிட்டத்தட்ட 6 மாதத்திற்குப் பிறகுதான் கூடு கிறோம். நவம்பர் மாதம் 2-ந் தேதிக்குப் பிறகு அதுவரை கூடாமலிருந்தால் 6 மாதத்திற்கு மேல் சட்டமன்றத்தைக் கூட்டா மலிருந்தோம் என்ற காரணத்தினால் அரசியல் சட்ட அமைப்பு முறையை அமுல்படுத்தாத காரணத்தினால், சட்டசபை கலைக்கப் படும். அமைச்சரவை கலைக்கப்படும் என்று அப்படிப்பட்ட கட்டத்தில்தான், இப்பொழுது சட்ட மன்றத்தை நீங்கள் கூட்டி யிருக்கிறீர்கள். ஆகவே, இவ்வளவு காலதாமதத்திற்குப் பிறகு கூட்டியுள்ளது என்பது—இந்த அவசர நிலைமைபற்றிக் கூட நான் சொல்ல வரவில்லை—அவசர நிலைமையையொட்டிச் சில பொரு ளாதாரத் திட்டங்களை அமல்படுத்த வேண்டுமென்ற ஒரு தாக்கீதை மத்திய அரசு கொடுத்திருப்பதை, நீங்கள் அமல் நடத்தத் தயாரா யில்லை, அதற்குத் தயக்கம் காட்டுகிறீர்கள் என்று காட்டுகிறது.

**பத்திரிகைகளைப் பார்த்தால் நமக்கே வியப்பாக இருக்கிறது. '7** ஆண்டுக்காலத்தில் எங்களுடைய சாதனை' என்று **வருகிறது. 7 ஆண்டுக்** கால சாதனையை அடுத்த தேர்தலில் **வைத்துக்கொள்**





வோம். ஜூன் மாதம் 26-ந் தேதிக்குப் பிறகு, ஜூலை மாதம் 1-ம் தேதிக்குப் பிறகு இந்த 20 அம்சத் திட்டங்களிலே என்ன செய் தீர்கள்? இந்த 20 அம்சத் திட்டங்கள் எல்லாம் புரட்சிகரமான திட்டங்களா? கம்யூனிஸ்ட் கட்சியினர், இந்தத் திட்டங்களை அமல் நடத்தியவுடனே சோஷலிசம் வந்து விடும் என்று நினைக்கிறார்களா என்ற ஐயப்பாடு உடனடியாக வந்துவிடும். அதற்கு அம்மையார் அவர்களே பதில் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம் புதிய திட்டங்கள் அல்ல. பல பழைய திட்டங்களிருக் கின்றன. புதிய திட்டங்கள் சில இருக்கலாம். ஆனால், பழைய திட்டங்களையெல்லாம் முனைப்பாக அமல் நடத்தவேண்டும் ;

with firmness and determination. Those are the words she ha used. Carry it out with firmness and determination.

முனைப்போடும் உறுதியோடும் நாம் அமல் நடத்த வேண்டு மென்ற நிலை இருக்கவேண்டும், இங்கு அமல் நடத்துவதில் ஒரு அனுபவத்தை நாம் பார்த்தோமே? எப்ரல் மாதத்திலே அறிவித்தது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரெயில்வே பாஸ் கிடைக்கும், என்பது. 6 மாதத்திற்குப் பிறகு அதை அமல் நடத்தக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. இப்படிச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமைகளை 6 மாதத்திற்குப் பிறகுதான் **அமல் நடத்தக் கூடிய முறை வரும் என்று சொன்னால். . . .**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்படிச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்ததை 6 மாதங்களுக்குப் பிறகு அமல் படுத்தியதற்காக நாங்கள் மிகவும் வருத்தப்படுகிறோம். அதற்காக, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் அதைப்பொருட்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இனிமேல், சட்டமன்ற உறுப்பினர்களுடைய குறைகள் உடனடியாக, அவசரமாகத் தீர்த்து வைக்கப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** I am only developing the point how belated a particular action is.

**கவர்ன்மெண்டினுடைய டென்டன்ஸியே—அறிவிப்பார்கள். அறி** வித்ததற்கும் அமல் நடத்துவதற்கும் 6 மாத காலம் தேவைப் படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலைமை என்று சொல்கிறேன். ஆகவேதான் இந்தக் குறிப்பிட்ட விஷயம் இருக் கிறதே, அந்த 20 அம்சத் திட்டம் இருக்கிறதே, அதை அறிவித்

ததற்குப் பிறகு, அமல் நடத்துவதற்காக நாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்ன என்பதைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினேன்.

உண்மையிலே இந்த அரசு 20 அம்சத் திட்டம் என்று சொல்லி அவர்களே விவாதத்தைத் துவக்கியிருப்பார்களானால் நான் உண்மையிலேயே வரவேற்றிருப்பேன். பாராளுமன்றத்திலே அதைச் செய்தார்கள். 20 அம்சத் திட்டம் என்று போட்டு அதைச் செய்தார்கள். பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகின்ற ஆளுங்கட்சி, அதோடு சேர்ந்திருக்கிற சில கட்சிகள் பார்லி மெண்டுக்கே போகவில்லை. பார்லிமெண்டுக்கே போகவில்லையென்று சொல்லக் கூடாது. பார்லிமெண்டுக்குப் போனார்கள். ஆனால், விவாதத்தில் பங்கெடுக்கவில்லை. இன்றைக்கு ஆளுங்கட்சியோடு சேர்ந்திருக்கிற அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியும், அகில இந்திய முஸ்லிம் லீக் கட்சியும் அந்த அளவுக்கு இல்லாமல், விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள். இங்கே அவர்கள் இவர்களை ஆதரிப்பதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், எதிர்க்கட்சிகளாக இருப்பவர்கள் நிரந்தரமாக பாய்காட் செய்திருக்கிறார்கள்.

'Is permanent boycott part of a parliamentary democracy'.

உண்மையிலே எங்களைப் பொறுத்தவரையிலே, பேசிய முழு விவரங்களும் பத்திரிகையிலே வரவேண்டும். அதுவும் இந்த 20 அம்சத் திட்டத்தை அமல் நடத்தவேண்டும், நாட்டுக்கு அபாய மிருக்கிறது என்பதை மனதிலே கொண்டிருப்பவர்களுடைய பிரசங்கங்கள் பத்திரிகையிலே வரவேண்டும். நாட்டையே காட்டிக் கொடுப்போம், நாட்டுக்கு அபாயமே இல்லையென்று சொல்லக் கூடியவர்களது பிரசங்கங்களை வேண்டுமென்றால் சென்சார் செய்தால் பொருத்தமாக இருக்கும். நாட்டினுடைய ஒட்டு மொத்தமான நிலைமையை வைத்துப் பார்த்தால் அதைக்கூட செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலும் கண்டிப்பாக எங்களுக்கு வெறுப்பு உண்டு, எதிர்ப்பு உண்டு. உங்களுடைய சஞ்சிகையிலும் அதை எழுதிக் கொண்டிருக்கிறோம், அது தவறு என்று சொல்லி யிருக்கிறோம்.

பார்லிமெண்டுக்கே போகவில்லை. அடுத்த மாதம், நவம்பர் மாதம் நடக்கவிருக்கும் பார்லிமெண்ட் கூட்டத்திற்கும் போவார் களா இல்லையா என்று சொன்னால் உதவிகரமாக இருக்கும்.





இவர்கள் சொல்லுக்கும் செயலுக்கும் மிகப் பெரிய மாறுபாடு இருக் கிறது என்பதால்தான் இதை எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமிருக்கிறது.

பார்லிமெண்ட்டைப் பொறுத்தவரையிலும் அங்கு பேசியவர் களின் பேச்சுக்கள் எல்லாம் ரெக்கார்ட் செய்யப்பட்டிருக்கின்றன, சபாநாயகர் ரெக்கார்ட் செய்கிறார். அப்படியே பத்திரிகைகளுக்கு விடுவதற்கு அவர்களுக்குத் தயக்கம் இருக்கலாம். அப்படிப் பத்திரிகைகளுக்கு விடுவதாலே அராஜகமான நிலைமை வரும் என்று நினைக்கலாம். சாதாரணமாக, அனார்க்கிஸம்—

Anarchism is also known as radico syndicalism.

இந்த அனார்க்கிஸம் பற்றி ஷேக்ஸ்பியர் சொன்னார். . . .

"Mischief thou art afoot take what course thou wilt."

அது ஒரு அரசாங்கத்தினுடைய அமைப்பாக இருக்க முடியாது. அரசாங்கம் சில தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கலாம். அதை எதிர்த்துச் சிலர் தீவிரமாகக் கிளர்ச்சிகள் செய்யலாம். ஆனால், அது நாம் போட்டிருக்கிற சட்ட வரம்புக்குட்பட்டு நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும். அது எந்த ஆட்சியாக இருந் தாலும் சரி. பத்திரிகை வெளியிடுவது அராஜகத்தைத் தூண்டி விடக்கூடிய நிலையிலிருக்கும் என்று அவர் கருதியிருக்கலாம். நான் அதற்கொன்றும் வக்காலத்து வாங்கவில்லை. நான் யாருக்கும் வக்காலத்து வாங்கவேண்டியதில்லை. ஆனால், பார்லிமெண்டிலும் சட்டமன்றத்திலும் நடக்கக் கூடிய விவாதங்கள் கண்டிப்பாக மக்களுக்குத் தெரியவேண்டும்.

20 அம்சத் திட்டத்திற்குப் போவதற்கு முன்னாலே சென்சாரைப் பற்றி இந்த இடத்திலே சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன். பத்திரிகைகளை சென்சார் பண்ணுகிறார்கள்.

There is dual power.

மத்திய சர்க்காரது சென்சார் அதிகாரி ஒருவர் இருக்கிறார். மாநில சர்க்காரது சென்சார் அதிகாரி ஒருவர் இருக்கிறார். மத்திய சர்க்கார் அதிகாரி வெளியிடலாம் என்று சொன்னபிறகு, இவர்கள் தடுத்துவிடுகிறார்கள். காலையிலேயே சொன்னேன்; தெரிந்தே சொல்கிறேன். மக்கள் குரல் பத்திரிகை யிலே வந்த எந்தக் கட்டுரையையும் மத்தியிலே இருக்கக்கூடிய—

சென்சார் அதிகாரி சென்சார் பண்ணவில்லை. அப்படிப்பட்ட நிலையில் மாநில சர்க்கார் என்ன செய்கிறது என்று சொன்னால், இந்த அவசர நிலையிலே தங்களுக்கு ஏதாவது கெடுதி ஏற்படும் விஷயங்களை விமர்சிக்கிறார்கள் என்ற நிலை வரும்போது தடுத்து விடுகிறார்கள்.

It is clearly a defamatory statement

டெபமேட்டரி ஸ்டேட்மெண்ட் வந்தது என்று சொல்லி நடவடிக்கை எடுக்கலாம். டெபமேட்டரி ஸ்டேட்மெண்ட் என்று சொல்லி நடவடிக்கை எடுக்கக்கூடிய பெரிய பாரம்பரியம் நம்முடைய தமிழக அரசுக்கு இருக்கிறது. அப்படிச் செய்யாமல் அரசியலை அரசியலில் தான் சந்திக்கவேண்டுமென்ற நிலைமை இல்லை, என்னைப் பற்றி ஆளுங் கட்சிப் பத்திரிகையான முரசொலியில் வந்தது, என்னைப்பற்றிய விளக்கம் நம்முடைய முதலமைச்சர் கையிலி ருந்தே வந்தது. அதைப் பார்த்துவிட்டு வக்கீல்கள் எல்லாம் அது ஒரு, டெபமேட்டரி ஸ்டேட்மெண்ட் என்று சொன்னார்கள். நாங்கள் அதைப்பற்றிப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை, நாங்கள் டச்சியாக அதையெல்லாம் எடுத்துக்கொள்வதில்லை. டெபமேட்டரி ஸ்டேட்மெண்ட் என்றால் பத்திரிகையைப் பறிமுதல் செய்வது என்ற நிலைமை இருக்கிறது. இந்த அரசு அப்படிச் செய்துகொண்டிருக்கிறது. இந்த மாதிரியான போக்கு கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

அடுத்தபடியாக 20 அம்சத் திட்டம். நான் ரொம்ப விஷயங் களைச் சேகரித்து வைத்திருக்கிறேன். கூடியவரையிலும் எலி மினேட் செய்வதற்குத்தான் முயற்சிக்கிறேன், திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களே பல விஷயங்களைச் சொல்லமுடியவில்லை. 6, 7 மாதங்களாகச் சேகரித்து வைத்திருக்கக்கூடிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன. அக்யுமிலேஷன் ஆகியிருக்கிறது. இந்திரா காந்தியினுடைய திட்டத்தின் ஒரு அம்சம் நல்ல அம்சம் என்று நான் நினைக்கிறேன். கிராமத்திலே உள்ள மக்கள் குறிப்பாக விவசாயத்திலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிற மக்கள். நம்முடைய நாடு விவசாய நாடு. விவசாய நாட்டிலே இன்றைக்கும் இறக்குமதி செய்யக்கூடிய துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது. 5, 6 வருஷங்களுக்கு முன்னதாக நான் தொழிலாளர்களுடைய மாநாட்டிற்காக ஜெனிவாவுக்குச் சென்றபோது பரோகுவா ஒரு தென் அமெரிக்கா நாடு, அந்த நாட்டைச் சேர்ந்த வாலிபன்





என்னிடத்திலே சொன்னார், அவருக்கு ஸ்பானிஷ்தான் தெரியும், ஆங்கிலத்திலே என்னிடத்திலே சொன்னார்.

" Your country agricultural country. Sun twelve months a year. You borrow food. No shame, no shame?

என்று சொன்னார். ரொம்ப எனக்கு வருத்தமாக இருந்தது. இப்பேர்ப்பட்ட நாடு நம்முடைய நாடு, 12 மாதம் சூரியன் நமக்கு கிடைக்கிறது, அவர்களுக்கு 12 மாதமும் சூரியன் கிடைப்பது கிடையாது. உக்ரேன் அதிகமாக உற்பத்திசெய் கிறது, நம்மிடத்திலே அதிகமாக உற்பத்திசெய்யக்கூடிய ஹரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களை வைத்துக்கொண்டு இறக்குமதி செய்துகொண்டிருக்கிறோம் என்றால் என்ன நிலைமை என்பதைப் பார்க்கவேண்டும். தமிழ்நாடு தன்னிறைவு பெற்றிருக்கக்கூடிய மாநிலம். இந்த மாநிலத்திலே இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக் கக்கூடிய மக்களை உற்சாகப்படுத்தியிருக்கவேண்டும் இந்த அரசு. அதைத்தான் விரிந்த அளவில் சொல்லவேண்டுமென்று சொன்னால் நாம் லேண்ட் ரிபார்ம்ஸ் என்று சொல்கிறோம், அந்தத் திட்டத்திலே இருக்கக்கூடிய முதல் அம்சம் லேண்ட் ரிபார்ம்ஸ்.

நிலத்திலே வேலைசெய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு நிலத்திலே குத்தகை செய்யக்கூடிய விவசாயிகளுக்கு வேண்டிய திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள் அதிலே. சில மாநிலங்களிலே செய்திருக் கிறார்கள். ஏற்கனவே செய்திருக்கிறோம் என்றால் 25 வருஷமாக ஒன்றுமே செய்யாமலா இருந்திருப்பார்கள், கொஞ்சம் செய்திருப் பார்கள், அப்படிச் செய்யாமல் விட்டதைப் பூர்த்தி செய்வதற்கும், செய்தவற்றில் இருக்கக்கூடிய தவறுகளை நிவர்த்திசெய்வதற்கும், இருக்கக்கூடிய லூப்ஹோல்ஸ் அகற்றப்படவும் தான் கொண்டு வந்திருக்கிறார்கள். நிலச் சீர்திருத்தங்களைப் பொறுத்தவரையில் நாம் கேரளாவைத்தான் மாடலாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

From 1970 landlordism has been abolished.

அங்கே குத்தகை விவசாயிகள் கிடையாது. யாருக்கு நிலம் இருக்கிறதோ அவன்தான் உழுது பயிரிட வேண்டும், நிலத்தை ஒருவர் வைத்துக் கொண்டு மற்றொருவர் அந்த நிலத்தை உழுது பயிரிட்டு உழக்கூடிய நிலைமையை ஒழித்துவிட்டார்கள் அங்கே. அதற்குள்ளே குறைகள் இருக்கலாம், நான் அதற்குள் போக விரும்பவில்லை. அந்த கன்சப்ஷனை, கருத்தோட்டத்தைதான் நான் சொல்கிறேன். நம்முடைய தமிழ்நாட்டிலே நில உச்சவரம்புச் சட்டம் காங்கிரஸ் ஆட்சியிலே வந்தது. அதற்குப் பிறகு நில

ளத்தை உயர்த்தவேண்டுமென்று சொல்லப்பட்டது. இந்திராவின் கட்டளை சம்பளம் அவர்களுக்கு உயர்த்தப்பட வேண்டுமென்பது தான். பல இடங்களிலே உயர்த்தியிருக்கிறார்கள்.

கேரளாவிலே 4½ ரூபாயாக இருந்தது 8 ரூபாய் என்றும் 6⅓ ரூபாய் என்றும் இதற்குப் பிறகு வந்திருக்கிறது.

அரியானாவிலே இதற்குப் பிறகு 6 ரூபாய் என்று வந்திருக்கிறது.

பஞ்சாபிலே இதற்குப் பிறகு 6.70 என்றும் 7.70 என்றும் வந்திருக்கிறது.

நாகாலாந்திலே இதற்குப் பிறகு 8 ரூபாய் என்றும் 10 ரூபாய் என்றும் வந்திருக்கிறது.

குஜராத்திலே இதை நாங்கள் 72-ல் 3 ரூபாய் என்று பிக்ஸ் பண்ணிவிட்டோம், உயர்த்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

கர்நாடகத்திலே ஏற்கனவே இருந்ததில் 30 சதவீதம் உயர்த்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள், அவ்வளவு ஜாஸ்தியாக இல்லை, இருந்தாலும் உடனடியாகக் கூட்டுகிறோம் என்று சொன்னார்கள்.

நீங்கள் என்ன செய்தீர்கள். நீங்கள் என்றால் உங்களைச் சொல்லவில்லை, நம்முடைய அரசு என்ன செய்தது? குறைந்த பட்சச் சம்பளச் சட்டத்தின் அடிப்படையில் ஒரு கமிட்டி. அது ஊர் ஊராகச் சுற்றி எப்போது வருவது, என்றைக்கு உயர்த்திக் கொடுப்பது? அதற்குள் விவசாயி அறுவடை முடித்துவிட்டு வீட்டுக்குப் போய்விடுவான், என்ன பிரயோசனம்? இன்றைக்கு கேரளா செய்த மாதிரியாவது கர்நாடகா செய்த மாதிரியாவது உடனடியாக விவசாயத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு

(நண்பகல் 12.00)

என்று சொல்லியிருக்க வேண்டும். கீழத்தஞ்சையிலே இருக்கும் அளவிற்கு எல்லாத் தொழிலாளர்களுக்கும் கிடைக்க வேண்டும். கீழத்தட்டிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு மேம்பாடுகளைச் செய்ய வேண்டும். அவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை என்றால் அந்த நிலத்தை எடுப்போம். சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது.





If there is any unit which is not able to pay minimum wages, better it is closed. நாம் ஜனங்களுக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று சம்பளம் வாங்கி வைத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அவர்களே பரவாயில்லை என்று நினைக்கும் அளவிற்குக் கீழ்த்தட்டிலே உள்ளவர்கள் இருக்கிறார்கள், ஏழு அம்சத் திட்டத்தை எடுத்துக் கொண்டால், it is big shake up.

இன்னொன்றையும் 7 அம்சத்திலே சொல்லியிருக்கிறார்கள். உடனடியாகப் பதிய வைக்க வேண்டும். இன்றைக்கு குத்தகை விவசாயிகளுக்குப் பதியாமல் இருக்கிறது. பதிந்த பிறகும் வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று தந்திகள் வருகின்றன.

சமீபத்தில் ஒரு விஷயத்தைப் பார்த்தோம். எங்கெங்கு புறம்போக்கு நிலங்கள் சர்க்காருக்கு இருக்கின்றனவோ அந்த நிலங்களைப் பெரிய ஆட்கள் பட்டா போட்டுக் கொள்கிறார்கள். பட்டா போட்ட நிலங்களைத் திரும்பவும் கிராம விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுங்கள் என்ற கருத்து பிறப்பிக்கப்படுகிறது. எத்தனை பெரிய ஆட்கள் பட்டா போட்டிருந்த நிலத்தை எடுத்து விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறோம்? எத்தனை பேரிடத்திலிருந்து எடுத்திருக்கிறோம்? என்று சொல்லுங்கள்.

கொடைக்கானலில் ஒரு பெரிய புள்ளி, அவரிடம் ஏற்கனவே 200 ஏக்கர் இருக்கிறது, இன்னும் 100 ஏக்கரை எடுத்து விவசாயிகளை வெளியேற்றுகிறார்கள். பெரிய தந்தி வந்திருக்கிறது. பிறகு அமைச்சர் மாதவன் அவர்களிடத்திலும், முதலமைச்சரவர்களிடத்திலும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். இதற்குப் பிறகும் கூட நீங்கள் இந்தக் காரியங்களைச் செய்வதற்கு ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள். தயக்கம் காட்டுகிறீர்கள் என்று சொல்வதைவிட வேறு முறையிலே சொல்லப் போனால், இந்த நேரத்திலே ஏதாவது அடிப்படை மாறுதல்களைத் தருவோமேயானால் அது இந்திராவுக்குப் பெருமை, மத்திய சர்க்காருக்குப் பெருமை என்ற அலர்ஜி இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். இல்லை என்று சொல்லட்டும். இல்லாது போனால் விளம்பரத்திலே இந்தச் சர்க்காரை மிஞ்சியவர்கள் யாராவது உண்டா? நான் கேட்கிறேன் . . .

[1975 அக்டோபர் 28

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மத்திய அரசாங்கத்திலிருந்து தினசரி விளம்பரங்கள் வந்து கொண்டிருக்கின்றன, அது கே.டி.கே. தங்கமணி அவர்களுக்கும் வருகிறதா ?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் சொல்லும் பாயிண்டை விட்டு விடுகிறார்கள்.

He is also a lawyer, I am developing a point.

விளம்பரத்திலே சிறப்பாக இருக்கும் இந்த அரசு, 20 அம்சத் திட்டத்தைத் தமிழிலே மொழி பெயர்த்து வெளியிட்டார்களா ? இன்றைக்காவது வெளியிடுவார்களா ? இன்று வரையில் அப்படி வெளியிடவில்லை. இது எதைக் காட்டுகிறது? விவசாயிகளா, "பாருங்கள், இதோ ஏழு அம்சத் திட்டம்" என்று 7 விதமான படங்களைப் போட்டு இருப்பார்களே, கைத்தறி நெசவாளர்களா, "இதோ பாருங்கள், இந்தந்த விஷயங்களை நாங்கள் செய்திருக்கிறோம் அல்லது செய்யவில்லை" என்று செய்வார்களே, இப்படி ஏன் செய்யவில்லை ?

There is an attitude. There is an attitude of emergency. If there is an attitude of emergency I can understand. There is an attitude of economic programme which is something which Tamil Nadu people cannot forgive.

என்ற ஒரேயொரு அம்சம்தான் இந்த சென்ஷுர் மோஷனில் இருக்கும் முக்கிய அம்சம். இந்தக் காரியத்தை நீங்கள் செய்யத் தயாராக இல்லை. தயாராக இல்லை என்று சொல்லும்பொழுது அரசியல் கட்சி என்ற முறையில் எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்வது என்னுடைய கடமை அல்ல, ஒவ்வொரு அரசியல் கட்சியும் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதைப் பொறுத்தவரையில். ஆனால் இந்தியா பூராவிலும் ஒரு நிலை ஏற்பட்டு இந்திய மக்களுக்காக இப்படிப் பொருளாதாரத் திட்டம் வந்திருக்கிறதாமே, இந்தத் திட்டத்திலே நமக்கு ஏதாவது செய்ய வேண்டுமாமே என்ற நிலை இருக்கும் நேரத்திலே அதை நீங்கள் செய்யத் தவறியிருக்கிறீர்கள்.

இன்னொரு இடத்தில்,

Government will take a series of steps to stimulate production and step up production and streamline distribution of essential commodities.





இது ஒரு முக்கியமான விஷயம். ஏற்கனவே சொன்னேன், நாம் செய்ய வேண்டிய காரியத்தை முனைப்போடு செய்ய வேண்டும். ஆனால் ஒவ்வொரு விஷயத்திலும் முனைப்போடு செய்ய வேண்டுமென்ற நோக்கம் வரவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எப்படி உங்கள் திட்டம் இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். சர்க்கரையை எடுத்துக்கொண்டால் 17 ஆலைகள். அரசாங்கம் சொல்கிறது, 1974-75-ல் ஒன்றே முக்கால் இலட்சம் ஏக்கரில் கரும்புச் சாகுபடி செய்ய வேண்டுமென்று. 1975-76-ல் 1,55,000 ஏக்கர்களில் சாகுபடி செய்யப்படுமென்று சொல்லியாகிவிட்டது. ஆனால் நிலைமை என்ன ? 50,000 ஏக்கர்களில் சாகுபடி செய்யவில்லை. இதிலிருந்து social problems எப்படியிருக்கிறது என்பதைப் பாருங்கள். போன வருஷத்தைவிட சர்க்கரை உற்பத்தியானது அதைவிட அதிக உற்பத்தியாக வேண்டுமென்பது அர்த்தம். ஆனால் நிலைமை என்னவென்றால் இன்றைக்கு அவர்கள் உற்பத்தி செய்த அந்தக் கரும்பு குறைந்துவிட்டது. அந்தக் கரும்பு குறைந்தது மட்டுமல்லாமல் எட்டு மாதங்கள் வேலை செய்யும் தொழிலாளர்கள் இரண்டு மாதங்கள்தான் வேலை செய்ய முடிகிறது. இப்படி சோஷியல் ப்ராப்ளம் எவ்வளவோ இருக்கிறது. அகில இந்திய ரீதியிலே வேஜ் போர்டு

seasonal workers, skilled 50 per cent semi-skilled 25 per cent and unskilled workers 15 per cent

என்று வாங்கிக்கொண்டிருந்தார்கள்.

கரும்பு விவசாயிகளைப் பொறுத்தவரையில் வெறும் சர்க்கரை மட்டுமல்ல, கரும்பு உற்பத்தியையும் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் கண்ணோட்டம் என்ன ? கரும்பின் விலையைப் பொறுத்த வரையில் மற்ற மாநிலங்களில் இருப்பவர்கள் அதற்கு 30 ரூபாய், 40 ரூபாய் அதிகம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே அம்மாதிரி இல்லை. நான் விபரங்களையெல்லாம் வைத்திருக்கிறேன். கரும்புக்கு 100 ரூபாய்தான் ஜாஸ்தி என்று நாம் தயங்கித் தயங்கிக் கொடுக்கிறோம். இப்பொழுது அரசாங்கம் மூன்று தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப் போகிறார்கள். அதை எதிர்க்க முடியாது.

அரசாங்கத்தின் கொள்கையை, அவர்கள் ஏதாவது செய்தால் அதை எதிர்த்தால் எப்படியிருக்கும் என்பதற்கு ஒரு உதாரணம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 11-37-க்கு ஆரம்பித்தீர்கள். 12-20-க்கு முடித்துவிடுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பேச்சின் தொடர்ச்சி போய்விடும். அரசினர்தான் நடுவில் தலையிடுகிறார்கள் என்றால் ஸ்பீக்கரும் தலையிட்டால் என்ன பண்ணுவது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் 'ஃபுல் ஸ்டாப்'புக்கு வரும்போதுதான் தலையிட்டேன். 'கமா'வில் தலையிடவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: அடுத்தது 'பிரைஸ் பாலிசி'. 'பிரைஸ் பாலிசி'யில் பல விஷயங்கள் 'ஆல் இந்தியா பாலிசி'யைப் பொறுத்தது. ஆனால் இங்கு, அரிசி விலை சம்பந்தமாகவும், உணவுப் பொருள் சம்பந்தமாகவும் அரசாங்கத்தின் கொள்கை என்ன? உங்கள் பாலிசி என்ன? ப்ரொக்யூர்மென்டில்
I do not support the Central Government
அவர்கள் ப்ரொக்யூர்மென்ட் டார்கெட்டைக் குறைத்து விட்டார்கள். அவர்கள் குறைத்து விட்டார்கள் என்று நம்முடைய மாதவன் அவர்களும் குறைத்து விட்டார்கள். இரண்டு லட்சத்தை ஒன்றரை லட்சமாகக் குறைத்து விட்டார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மூன்று லட்சம் இரண்டு லட்சமாகக் குறைக்கப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஏதோ குறைத்து விட்டீர்கள். எங்கே குறைக்கச் சான்ஸ் கிடைக்கிறதோ அங்கே குறைத்து விடுகிறீர்கள்— Where will be the end?
அவர்கள் செய்கிற தவறை எல்லாம் 'காப்பி' பண்ணுகிறீர்கள். அவர்கள் செய்கின்ற நல்லதை விட்டு விடுகிறீர்கள்.

உணவுப் ப்ரொக்யூர்மென்டைப் பொறுத்தவரை தைரியமாக அரசே நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதற்கு ஃபுல் சப்போர்ட் தருகிறோம்.—



All the marketable surpluses must be taken over by the Government.
எடுங்கள். நம்முடைய ஜனங்களுக்குக் குறைந்த விலையில் கொடுங்கள். ஒரு அட்ஜர்ன்மென்ட் மோஷன் கூடக் கொடுத்தேன். மதுரையில் அரிசி விலை நிரந்தரமாக 5 ரூபாய்க்குக் குறைய மாட்டேன் என்கிறது. அரிசியை விநியோகம் பண்ணும் இடங்களும் ஒரே ரோடில் இருக்கின்றன. எல்லாம் இராமநாதபுரம் ரோட்டில் இருக்கின்றன. இராமநாதபுரம் ரோட்டில்தான் மனிதன் சாகிறான். இராமநாதபுரம் ரோட்டில் ரைஸ் க்யூவில் நாளைக்கு இந்த மாதிரிச் சம்பவம் ஏற்படாது என்று எப்படிச் சொல்ல முடியும். இன்றைக்கு ப்ரொக்யூர் பண்ணுவது என்பதில்—
You must procure all the marketable surpluses
எந்த ஒரு ஜில்லாவுக்குமிடையே பாகுபாடு இல்லையென்ற நிலை ஏற்பட வேண்டும்.

Proven underground resources must be immediately harnessed and further surveys taken up for irrigation and for the provision of drinking water, especially in drought prone areas.
என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இங்கே நமக்குத் தெரிகிறது. தண்ணீர் வேண்டுமென்று சொன்னால் இங்கே நீரூற்றுக்கள் அதிகமாக இருக்கின்றன சமீபத்தில் தஞ்சை அம்மாப்பேட்டையில் ஒரு 'போர்' போட்டார்கள். அங்கு 'ஆர்டிஷன் வெல்' வந்து விட்டது. அந்த பெல்டில் ஆர்டிஷன் வெல்கள் மேலும் இருக்கலாம். அதை எக்ஸ்ப்ளோர் பண்ண என்ன உதவிகள் செய்திருக்கிறீர்கள்? மாநில சர்க்கார் செய்யக்கூடிய உதவிகளைச் செய்யுங்கள். மாநில சர்க்காரால் முடியவில்லை என்றால் மத்திய சர்க்கார் உதவி தேவை என்று ஸ்பெசிபிக்காகச் சொல்லுங்கள். சண்டை போடுவோம்.

கிழக்கு இராமநாதபுரத்தில் 57 சிறு சிறு கிணறுகள் 'பாண்டியன் கிணறுகள்' இருக்கின்றன. அவற்றிலே நல்ல தண்ணீர் இருக்கிறது. நான்கு கிணறுகள் வறட்சி நிவாரணப் பணிகளை நிறைவேற்றும்போது எடுத்துக் கொள்ளப்பட்டு ஆழப்படுத்தப்பட்டிருக்கின்றன. இருக்கின்ற 57 கிணறுகளையும் ஆழப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.—

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 28

Why don't you energise all these things? வாட்டர் போர்டு உடனே நடவடிக்கை எடுக்கட்டும். அந்த மாதிரி தண்ணீர் எல்லோருக்கும் கிடைக்கட்டும். அந்த மாதிரி முறையில் போனால் எடுத்த காரியத்தை உடனே செய்கிற ஆட்சி இருக்குமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஹாண்ட்லூம் இண்டஸ்ட்ரியைப் பொறுத்தவரை சட்டம் வந்திருக்கிறது. பரவாயில்லை. அந்தச் சட்டம் நிறைவேறு கிறதா என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். நாம் கொடுத்திருக்கும் பாதுகாப்பு கைத்தறி நெசவாளர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, நம்முடைய எஜுகேஷன் டிப்பார்ட்மென்டைப் பற்றிச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நான் சொல்லுகிறேன் என்று எஜுகேஷன் மினிஸ்டர் வருத்தப்படக் கூடாது.—

Is there any basic change in education? பத்துப் பதினைந்து வருஷங்கள் ஆகிவிட்டன. நான் ரொம்ப வேதனைப்பட்டுச் சொல்லுகிறேன். காங்கிரஸ் ஆட்சி இருந்தது. காங்கிரஸ் ஆட்சியில் கிராமத்திற்கு ஒரு பள்ளி, புதிய உயர் நிலைப் பள்ளிகள், பத்தாவது வரை இலவசப் படிப்பு என்றெல்லாம் சொன்னார்கள். இப்போது என்ன நிலை? பத்தாவது என்பதற்கு பதிலாக 13 வது வரை இலவசக் கல்வி என்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைதான் இருக்கிறதே. தவிர, 'பேசிக்' நிலையை மாற்ற என்ன செய்தீர்கள்.

ஒரு காரியம் செய்தீர்கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். பாடப் புத்தகங்களைப் பூராவும் அரசாங்கம் வெளியிடுவது நல்ல அம்சம். அதை எந்த இடத்திலும் பாராட்டத் தயார். இந்திரா காந்தியிடம் 'நாங்கள் இதை ஏற்கனவே செய்து விட்டோம்' என்று சொல்லலாம். 'செய்து விட்டோம்' என்று சொன்னால் போதாது, அதைக் குறைந்த விலையில் கொடுக்க வேண்டும். 'புக் பாங்க்' வைக்க வேண்டும். அந்த மாதிரிக் காரியங்கள் செய்ய வேண்டும்.



1975 அக்டோபர் 28] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நேற்று கல்வியமைச்சர் சொல்லுகிறபோது 12,000 பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை கிடையாது, 58 பயிற்சிப் பள்ளிகளை போன வருஷம் மூடிவிட்டோம்; இந்த வருஷத்தில் அதிலே பாதியை மூடுவோம் என்றார்கள். இதுதான் 'எம்ப்ளாய் மென்ட் ஆப்பர்சுனிடிஸ்' கொடுப்பதா? அந்த அம்மையார் என்ன சொன்னார்கள்?—

V2,11,31 N75 61720

Employment opportunities must be given to Scheduled Castes and Backward Classes.

3,N76.6452

மேற்கொண்டு, இது வந்ததற்குப் பிறகு இன்னின்ன காரியங் களைச் செய்தோம் என்று செய்திருக்க வேண்டாமா? 29 பயிற்சிப் பள்ளிகளை மூடுவோம்; 12,000 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்று சொல்லக்கூடிய முறைதான் இருக்கிறது. கல்வியில் பணத்தைக் கொட்டுகிறோம். எந்த அளவுக்கு அது சேருகிறது? அரசாங்கம் கொஞ்சம் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். 140 கோடியில் 10 கோடி ரூபாய்க்கு ரி-அப்ரோப்பியேஷன் வருகிறது.— There is something basically wrong.

சப்ளிமென்டரி டிமாண்டில் எஜுகேஷனுக்கு 80 லட்ச ரூபாய் ஒதுக்கப்படுகிறது. சேர்விசுக்கு கூட ஆயிரம் ரூபாய் போடலாம். கல்வி இலாகா இருக்கிறதே. . . அது சரி இல்லை. அந்த இலாகாவை ரொம்பத் தூய்மைப்படுத்த வேண்டும். சில சமயங்களில் முதலமைச்சர் அவர்கள் தங்கமணி போன்றவர்கள் ஆலோசனை கூறினால் ஏற்றுக்கொள்வேன் என்று சொல்லு வார்கள். நான் ஒன்று சொல்கிறேன், அரசியல் சட்டத்தில் இருக்கக்கூடிய அளவு 14 வயதுப் பிள்ளைகள் எல்லோருக்கும் கட்டாய இலவசக் கல்வி கொடுக்க 1975 முடிவதற்குள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

It is not compulsory primary education

கட்டாய இலவசக் கல்வி—கண்டிப்பாகப் பிள்ளைகளைப் படிக்க வைத்தாக வேண்டும்; 8வது வகுப்பு வரை படிக்கவைத்தாக வேண்டும் என்ற நிலைமை உருவாக வேண்டும். இப்போது 5வது வரை 50 சதவிகிதத்தினர் படிக்கிறார்கள்; 5வது வரை படிக் கிறார்கள் என்ற நிலைதான் இருக்கிறது. ஆண்கள், பெண்கள்,

தமிழ்நாட்டில் பிறந்தவர்கள் எல்லோருக்கும் இலவசக் கல்வி மட்டுமல்ல, கட்டாயக் கல்வி என்ற அந்த அம்சத்தைச் செயல் படுத்த வேண்டும்.

**கல்வி என்று வரக்கூடிய காலத்தில் கிராமத்திலிருந்து வரக்கூடிய மாணவர்கள் தங்கக்கூடிய இடம் நல்ல** இடமாக இருக்க வேண்டும். ஹரிஜன் அண்டு பாக்வார்டு கிளாசஸ் ஹாஸ்டல்களைப் பார்த்தேன். அதை ஹாஸ்டல் என்ற பெயரில் சொல்ல வேண்டாம். பழைய காலத்தில் சத்திரங்கள் கூட நன்றாக இருந்தன. இந்த மாதிரி இருக்கின்ற அரிஜன, பாக்வார்டு கிளாசஸ் ஹாஸ்டல்களைத் தரைமட்டமாக்க வேண்டும். அந்த மாணவர்களுக்கு, அரிசன் அண்டு பாக்வார்டு கிளாசஸ் மாணவர்களுக்கு, உயர்ந்த பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர் களுக்கு, பிள்ளைகளுக்கு எந்த அளவுக்கு வசதியுடன் ஹாஸ்டல்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த அளவுக்கு வசதியுடன் ஷெல்ட்யூல்டு கிளாஸஸ் அண்டு பாக்வார்டு கிளாஸஸ் மாணவர்களுடைய ஹாஸ்டல்களும் அமைக்கப்பட வேண்டு மென்ற முறையில் சிந்திக்க வேண்டும்.

நான் ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். அது தொழிலாளர்கள் பற்றிய விஷயம். தொழி லாளர்கள் பற்றிச் சொல்லும்போது நம் முதல் அமைச்சர் அவர்கள் ஒன்று கேட்பார்கள். நீங்கள் மத்திய அரசாங்கத்தை ஆதரிக்கிறீர்களே, அவர்கள் போனஸ் சட்டத்தைக் கொண்டு வந்து விட்டார்களே என்று கேட்பார்கள். அதுபற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். அதை வாசிக்கிறேன். 'இது ஜனநாய கத்திற்கு கிடைத்த அடி, ஏகபோக மூலதனத்திற்கு கிடைத்த பரிசு, வலதுசாரி பிற்போக்குக்குக் கிடைத்த போனஸ்'. வலது சாரி பிற்போக்கை முறியடிக்கவேண்டும் என்பதற்காக வந்தது இந்த அவசர நிலை. ஏகபோக முதலாளிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த இரண்டு பேர்களுக்கும் வெளியில் உள்ள சி.ஐ.ஏ. யுடன் லேசான உறவாம். எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவுக்கு எதிர்க்கப்படுகிறது. நான் சொல்கிறேன். பத்திரிகையில் வரவில்லை. தமிழ்நாட்டில் இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் 24-ம் தேதி ஒரு நாள் வேலைநிறுத்தம் செய்திருக் கிறார்கள். மதுரையில் 25,000 தொழிலாளர்கள், கோவையில்





60,000 தொழிலாளர்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன். சென்னையிலும் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டது.

ஒரு தடவை கேட்டார்கள் இந்திரா காந்தி அவர்களிடம், நீங்கள் கம்யூனிஸ்ட்கள் சொல்கிறபடி நடக்கிறீர்கள் என்று சொல்கிறார்களே என்று. அப்போது அவர்கள் சொன்னார்கள். 1972-ல் பாரிஸில் பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்தார்கள். தின மணி 29—9—1972. மதுரை எடிஷன். பக்கம் 4. "உள்நாட்டில் நமது முக்கிய எதிரிகளாக இருப்பவர்கள் தனியார் நல வாதிகள். பெரிய நிலச்சுவாந்தார்கள், தொழிலதிபர்கள், வர்த்தகர்கள். அவர்களுக்கு இந்திய மக்களின் நலன்கள் இரண்டாம் பட்ச மானதே. நான் கம்யூனிஸ்ட் அல்ல. ஆனால் கம்யூனிஸ்ட்கள் கூறும் கருத்துக்களுக்கு நான் செவிசாய்க்கக் கூடாது என்று எதிர்பார்ப்பதும் அவர்களை ஒழித்துவிட முடியும் என்று நினைப்பதும் பரிகசிக்கத்தக்கதாகும். நல்வாழ்வு காண்பதற்கு சுலபமான வழி கம்யூனிஸமே என்று மிகவும் ஏழைகளான மக்கள் நினைக்கக்கூடும். ஆனால் என் கருத்து அதுவல்ல", என்று கூறியிருக்கிறார்கள். இந்தமாதிரி கருத்து பிரதமர் அவர் களுக்கு இருக்கிறது. கட்சி என்று வரும்போது ஒரு நிலை எடுக்கப்படுகிறது.

அப்ரென்டிஸ் ஆக்ட், அதை கொஞ்சம் விரிவுபடுத்துங்கள். தமிழ் நாட்டில் நல்ல காரியம் ஒன்றைச் செய்தார்கள். அப்ரென்டிஸ் டீச்சேர்ஸ். அது இப்போது இருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. இருந்த ஒரு நல்ல காரியமும் போய் விட்டது. அப்ரென்டீஸ் டீச்சேர்ஸ் போடுங்கள். இன்று 12,000 பேர்களுக்கு வேலை இல்லை. அவர்களுக்கு மாதம் ரூ. 100 கொடுங்கள். அதேபோல் புதிதாக மேலும் மேலும் ட்ரெயினிங் ஆகும் டீச்சேர்ஸை கொண்டு வந்து ரூ. 100 மாதம் கொடுங்கள். அப்போது மத்திய அரசாங்கத்தைப் பார்த்துச் சொல்லலாம், அப்பரென்டிஸ் டீச்சேர்ஸ் என்ற திட்டம் மாதவன் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்டது, இடையில் கைவிட்டோம், இப்போது மீண்டும் கொண்டுவந்திருக் கிறோம் என்று.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 28

The Communists have got a policy. That policy is to unite and fight. When they unite, they fight. This is their policy all along. Workers participation in the industry at the top level. இதை எங்கள் கட்சி இருபது ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இப்போது அந்த இலாகா மாறிவிட்டது. அப்போது திரு. ராமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள், நாங்கள் தொழிலாளர்களுக்கு பங்கு கொடுத்திருக்கிறோம் என்று. தொழிலாளர்களிடம் பங்கு வாங்குவதே தப்பு.

It is a wrong conception of socialism.

ஒரு பொதுத்துறையில் தொழிலாளர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு பங்குதாரர்களாகச் சேர்ப்பது என்பது என்ன ஏற்பாடு? சர்க்காருக்குச் சொந்தமான சொத்து, அந்த நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கு பங்கு இருக்கவேண்டும். அவர்களிடம் பங்குதாரர்களாக ஆவதற்கு பணம் வாங்குவது தவறு, அப்படி வாங்குவது டபிள் ஏற்பாடு. தொழிலாளர்களுக்கு உற்பத்தியில் பங்கு இருக்கவேண்டும். அதை மின்சார இலாகாவில் செய்து காட்டுங்கள். அதற்கு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். மின்சார வாரியத்தைப் பற்றி விவாதிக்க இருக்கிறோம். அதன் நிர்வாகம், ரொம்ப ரொம்பக் கோளாறாக இருக்கிறது. அதிகப் பணத்தைப் போட்டிருக்கக்கூடிய இலாகா. முதலில் மின்சார இலாகாவில் இருக்கக்கூடிய வொர்க்கேர்ஸ்க்கு வொர்க்கேர்ஸ் பார்ட்டிஸிபேஷன் கொண்டு வாருங்கள். பின் தனி முதலாளிகளை வற்புறுத்த வேண்டும். போன ஆண்டுக்கு இந்த ஆண்டு அதிகம் உற்பத்தியாகியிருக்கிறது. 4 -- சதவிகிதம் போனஸ் கொடுக்கிறேன் என்கிறார்கள். அதிக வருவாய் இருக்கும்போது அதிகம் கொடுப்பதுதானே.

இந்த மிஸா இருக்கிறது. ஆட்களை அரஸ்ட் செய்கிறார்கள். ஆனந்தமார்க்காரர்களை அரெஸ்ட் செய்யுங்கள். ஆர்.எஸ்.எஸ். காரர்களை அரெஸ்ட் செய்யுங்கள். ஸி.ஐ.ஏ. வுடன் உறவிருந்தால் அரெஸ்ட் செய்யுங்கள். சட்டத்தை ஏமாற்றக்கூடிய சமுதாய விரோதிகளை அரெஸ்ட் செய்யுங்கள். சட்டம் வந்து விட்டது என்பதால் கடன் கொடுக்கமாட்டேன் என்று சொல்லக்கூடிய



1975 அக்டோபர் 28] [திரு. கே. டி. கே. தங்கமணி]

சமுதாய விரோதிகளை அரெஸ்ட் செய்யாது பிழைப்பிற்காக கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை பிடிக்கிறார்கள்.

I am not defending them. Your approach is basically wrong. இவர்கள் கருத்துப்படி, ஏழைகளாக இருப்பவர்கள் அன்சோஷியல் எலிமென்ட்ஸ், பஸ் ஸ்டான்ட்களில் அழுக்குச் சட்டை போட்டுக் கொண்டிருப்பவர்களை பிடித்துப் போட்டு விடுகிறார்கள் இன்றும் கூட. அன்சோஷியல் எலிமென்ட்ஸ், இருபது அம்சத் திட்டத்தை அமல் நடத்த இடைஞ்சலாக இருக்கக்கூடிய அன்சோஷியல் எலிமென்ட்ஸை மிஸாவில் பிடிக்க வேண்டுமே தவிர அரசியல் காரணங்களுக்காக அல்லது வேறு காரணங்களுக்காகச் செய்யக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் எங்கள் பத்திரிகை பாதிக்கப்பட்டிருக்கிறது. ஜனசக்தியை ஒரு தடவை பிடித்தாகி விட்டது. மக்கள் குரலை மூன்று தடவை பிடித்தாகி விட்டது. தென்னகம் ஒரு தடவை. பத்திரிகைகளை ஸீல் செய்ய உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அதை வேகமாக அமல் படுத்துகிறீர்கள். அப்படிச் செய்ய வேண்டாம். நான் முன்பு கூறியதை கவனத்தில் எடுத்துக்கொண்டு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் அரசாங்கம்.

You will meet the consequences.

இந்த இருபது அம்சத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த சர்க்கார் அமல் நடத்துவதற்கு மிகப் பெரிய தயக்கம் காட்டுகிறது. இந்த ஆறுமாத காலத்தில் நீங்கள் இந்த இருபது அம்சத் திட்டத்தை அமல் நடத்தவே இல்லை, இல்லை என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. இராம அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் பேசியநேரத்தில் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இந்திரா காந்தி அவர்கள் என்று சொன்னால் ஒரு அலர்ஜியாக இருக்கிறது, அவர்கள் எவ்வளவு நல்லது சொன்னாலும் கேட்கக் கூடாது, அந்தப் பெருமை இந்திரா காந்தி அவர்களைச் சேர்ந்து விடக்கூடாது என்று கருதுகிறார்கள், அப்படிப்பட்ட அலர்ஜி இல்லை என்று அவர்கள் சொன்னால் நான் ஒத்துக்கொள்கிறேன் என்று

[திரு. இராம அரங்கண்ணல்]

சொன்னார்கள். நான் நண்பர் தங்கமணி அவர்களுக்கும் அவர்கள் வாயிலாக மற்றவர்களுக்கும் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். அப்படி எந்தவிதமான அலர்ஜியும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடையாது. அப்படி அலர்ஜியோ அல்லது இன்னொரு அரசியல் கட்சிக்கு செல்வாக்கு வந்துவிடும் என்று பயந்தோ திராவிட முன்னேற்றக் கழகம் தன் கொள்கை களை நிர்ணயம் செய்கிற கட்சி அல்ல.

எதிர்க்கட்சி சார்பில் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை ஓரளவிற்கு வரவேற்கலாமா என்று கூட நான் கருதுகிறேன். இல்லை என்றால் திராவிட முன்னேற்றக் கழகம் செய்திருக்கிற சாதனைகளையெல்லாம் விளக்கிச் சொல்கிற நல்ல வாய்ப்பு எங்களுக்கெல்லாம் இல்லாமல் போய்விட்டிருக்கும்.

(பிற்பகல் 12.30)

காங்கிரஸ் தலைவர் நண்பர் மாரிமுத்து அவர்கள் பேசிய நேரத்தில், அவர்கள் எதைப்பற்றிப் பேசுகிறார்கள் என்பதைப் பற்றி எனக்குச் சந்தேகமாக இருந்தது. அவசர நிலைப் பிரகடனத்தைப் பற்றி அவர்கள் அதிகமாக ஆராய்ந்தார்கள். அவசர நிலைப் பிரகடனம் வந்தவுடனே, அந்த அவசர நிலைப் பிரகடனத்தை திராவிட முன்னேற்றக்கழகம் கட்சி ரீதியில் அந்த அவசர நிலையைக் கண்டித்தது. ஆனால் ஆட்சி ரீதியில் கண்டிக் காமல் இருந்தது. அது அவர்களுடைய குறை.

அதே நேரத்தில் அவர்கள் ஜனநாயகத்தைப்பற்றி அதிக மாகச் சொன்னார்கள். இந்திய நாடு சர்வாதிகார நாடாக ஆக்கப்படவில்லை என்று சொன்னார்கள். தங்கமணி கூட 'அனார்கிசம்' பற்றிப் பேசினார்கள். கம்யூனிஸ்ட் தத்துவம் என்னவென்றால், எந்த வழியில் அராஜகம் உருவானாலும் (ஒரு வேளை அந்தத் தத்துவம் இப்போது மாற்றப்பட்டு இருக்கிறதோ என்னவோ தெரியாது), அந்த அராஜகத்தை வைத்துக்கொண்டு புரட்சி என்ற மலரைப்பிடித்து கொய்துவிடலாம் என்பதாகும்.





இந்தியா சர்வாதிகார நாடாக டிக்ளேர் செய்யப்படுமானால், ஜனநாயக உரிமைகளின் அடிப்படையில் எந்தக் கருத்தையும் யாரும் சொல்லக்கூடாது. எதிர்க்கட்சிகள் என்று இருக்கின்ற வைகள் காங்கிரஸ் எதைச் சொல்கிறதோ அதற்கே தாளம் போட வேண்டுமென்று டிக்ளேர் செய்து விடுவோமானால் அது வேறு விஷயம்.

இந்த ஜனநாயக நாட்டில் எங்களுக்கு என்று—திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்று—தனிக் கொள்கை உண்டு, சமுதாய சீர்திருத்தக் கொள்கை உண்டு, பொருளாதாரக் கொள்கை உண்டு. எங்களுக்கு என்று தனிக்கொள்கை இல்லை என்றால், நீங்கள் சொல்வதை ஏற்றுக்கொண்டு விடலாம். எங்களுக்கு என்று தனிக்கொள்கை இருக்கும்போது, எங்களுக்கு என்று தனிக்கருத்து இருக்கிறபோது அப்படிச் செய்யமுடியாது.

அலகாபாத் தீர்ப்பைப் பற்றிப் பேசினார்கள். அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. அது நான் பேசுவதற்கு விரும்பாத ஒரு விஷயம். ஆனால், அந்தத் தீர்ப்புக்கு முன்பே இந்த அவசர கால நிலைமை கொண்டு வந்து இருக்கக்கூடாதா? கேட்கிறார்கள் மக்கள். அதற்குப் பிறகு கொண்டு வரவேண்டிய அவசியம் என்ன? என்ன அவசர நிலை ஏற்பட்டது? இதையெல்லாம் கேட்டு ஒரு விவாதத்தை எழுப்ப விரும்பவில்லை.

இன்னொரு கருத்தையும் கூட, எங்கள் தலைவர்களும், நானும் அடிக்கடி சொல்லி வருகிறோம். இந்திய நாட்டிலே இருக்கின்ற பழைய பரம்பரை ஒன்று போய்விட்டது. இன்னும் போய்க் கொண்டு இருக்கிறது. இருக்கிற பரம்பரையில் இந்திரா காந்தி அளவுக்குச் செல்வாக்கு உள்ளவர்கள் யாரும் இல்லை. அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். மறந்து விடவில்லை. பண்டித நேரு அவர்கள் செய்த தியாகம், அவருடைய தந்தை மோதிலால் நேரு செய்த தியாகம், அவர்களுடைய பரம்பரையில் வந்த இந்திராகாந்தி, அவர்களை உருவாக்கிய அந்த மாளிகை, அந்த மாளிகையிலே பூத்த அந்த சோசலிசம் அவைகளைப்பற்றி நாம் பாராட்டி இருக்கிறோம். அவர்களைப் போன்ற அளவுக்கு செல்வாக்கு படைத்த வல்லமை படைத்த இன்னொரு தலைவர

யார் இருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கிற நேரத்தில், அவர்களுடைய காலத்தில் சில காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று நாங்கள் பெரிதும் எதிர்பார்த்தோம்.

ஒரு ஐந்தாறு ஆண்டுகளுக்குப் முன்பு காங்கிரஸ் கட்சியை திராவிட முன்னேற்றக்கழகம் ஆதரித்தது. ஏதோ அப்போது மெஜாரிட்டி இல்லை அதனால் ஆதரித்தோம் என்று அர்த்தம் அல்ல. ஒரு கொள்கையின் அடிப்படையில் ஆதரித்தோம். என்ன கொள்கை. அப்போது தான் அவர்கள் பிரதமராக வந்து இருக்கிறார்கள். ஒரு பெரிய பரம்பரை செல்வாக்கு, உள்ளபடியே சோசலிச சமுதாயத்தை உருவாக்க முனைவார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதி, நட்புறவு வைத்துக் கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்பினோம். அன்றையதினம் நட்புறவு கொண்ட நேரத்தில் இந்திரா காந்தி என்ன செய்தார்கள், வங்கிகளை தேசியமயமாக்கினார்கள். 7 ஆண்டுகளுக்கு முன்பு அதைச் செய்தார்கள். அதை எதிர்க்கவில்லை. ஆதரித்தோம். அப்போதே அவசர நிலை பிரகடனப் படுத்தி, இன்றையதினம் சொல்கிறவைகளை—இந்த 20 அம்ச திட்டங்களைச் செய்து இருக்கலாம். ஒரு சமுதாயம் 20 அம்ச திட்டத்தோடு முடிந்து விடுகிறதா, 25 அம்ச திட்டத்தோடு முடிந்து விடுகிறதா என்று தெரியவில்லை.

(திரு. எ. ஆர். சுப்பையா—தலைமை)

* THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a point of order. Our Prime Minister herself has stated that this list is not an exhaustive one. . . . . .

திரு. இராம அரங்கண்ணல்: பிரைம் மினிஸ்டர், இன்று மட்டும் பிரைம் மினிஸ்டர் அல்ல. 7 வருஷத்திற்கு முன்னாலே கூட பிரைம் மினிஸ்டர் தான். வங்கிகளை தேசியமயம் செய்த போதே என் இதைக் கொண்டு வரவில்லை.

நான் காங்கிரஸ் சரித்திரத்திற்குள் புக விரும்பவில்லை. புவனேஸ்வர மாநாட்டில் என்ன தீர்மானம் செய்தார்கள், ஆவடி





மாநாட்டில் என்ன தீர்மானம் செய்தார்கள், 40 வருஷத்திற்கு முன்பு என்ன தீர்மானம் செய்தார்கள்? அது எல்லாம் எப்படியிருந்தாலும், நான் காங்கிரஸ் கட்சியைப் பற்றி விமர்சிக்க விரும்பவில்லை. காங்கிரஸ் கட்சிக்கு இந்த நாட்டு மக்கள் அளித்த அதிகாரம், காங்கிரஸ் கட்சிக்கு இந்த நாட்டு மக்கள் அளித்த நம்பிக்கை, இந்த 30 ஆண்டுகாலத்தில் எவ்வளவோ செய்து இருக்கலாம். அவைகளையெல்லாம் செய்யாமல் ஏன் இருந்து வந்தார்கள். நம்முடைய அருமைத்தலைவர்—அருமைத் தலைவர் என்றே சொல்கிறேன்—இந்திரா காந்தி அவர்கள் இன்றையதினம் சொல்கிற இந்தத் திட்டங்களை பாங்குகளை தேசியமயமாக்கிய அன்றே கொண்டு வந்து இருக்கலாம். எது தடுத்தது அவர்களை?

இன்றையதினம் சொல்கிற அந்த 20 அம்ச திட்டம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், எங்களைப் பொறுத்தவரையில், இவைகள் எல்லாம் சாதாரணத் திட்டங்கள் என்றே கருதுகிறேன். நான் சோசலிசம் அறிந்தவன் என்ற காரணத்தால், சொல்கிறேன், இது எல்லாம் பாதைகள். இது எல்லாம் பாதைகள் என்ற காரணத்தால், நம்முடைய அரசாங்கம் 7 ஆண்டு காலமாக, உள்ளபடியே அவற்றையெல்லாம் நிறைவேற்றி நடைமுறைக்குக் கொண்டு வர முயற்சி எடுத்து வருகிறது. நான் கேட்பது எல்லாம், அவசரகால நிலை பற்றி அதிகமாக எடுத்துச் சொல்லி, அந்த அவசர கால நிலையை திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிக்கலாமா, என்று கேட்டதால் சொல்கிறேன். அவசரகால நிலை தேவையா? நான் கேட்கிறேன். நீங்கள் கருதினாலும், நான் இந்த நாட்டின் குடிமகன், ஜனநாயக குடிமகன். அவசர கால நிலைமையைக் காரணமாகச் சொல்லி, இன்னின்ன காரியங்கள் செய்யவேண்டும், அது தேவை என்று சொல்கிறீர்களே அந்தக் காரியங்களை, அந்த 20 அம்ச திட்டங்களை தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நாங்கள் ஏற்கனவே செய்து கொண்டு வருகிறோம். அதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் இந்தியா என்பது தமிழ் நாட்டோடு நின்று விடுவது அல்ல. இங்கே பேசிய நண்பர் மாரிமுத்து அவர்கள் அந்த

நன்றாக அறிவார்கள். பம்பாய் பிரச்னை வேறு, மத்திய பிரதேச பிரச்னை வேறு, உ.பி. பிரச்னை வேறு, வங்கத்தின் பிரச்னை வேறு, கருநாடகத்தின் பிரச்னை வேறு, தமிழ் நாட்டுப் பிரச்னை வேறு.

உதாரணத்திற்காக ஒன்று சொல்கிறேன், இங்கே கம்யூனல் ஜி.ஓ. தமிழ் நாட்டில் இருக்கிறது. நீண்டகாலமாக இருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சியில் ஆரம்பித்து, காங்கிரஸ் கட்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அது இன்றைக்கும் நடைமுறையில் இருந்து வருகிறது. அந்தக் கம்யூனல் ஜி.ஓ. எதற்காக வந்தது? அது 20 அம்ச திட்டத்தில் இல்லை. வசதி இல்லாத மக்கள் இங்கே மட்டுமா இருக்கிறார்கள்? வீக்கர் செக்ஷன் ஆப் தி சொசை டிக்குத் தானே செய்யவேண்டும். அதைத்தான் 20 அம்ச திட்டத்தில் சொல்கிறீர்கள், இந்தக் கம்யூனல் ஜி.ஓ. பீகாரில் உண்டா, அங்கேயும் பல ஜாதிகள் இருக்கின்றன, வீக்கர் செக்ஷன், வீக்கர் கம்யூனிட்டீஸ் அத்தனைபேருக்கும் உதவும் வகையில் இந்த கம்யூனல் ஜி.ஓ. இருக்கிறது. இந்தக் கம்யூனல் ஜி.ஓ. பீகாரில் இல்லை. உ.பி.யில் வீக்கர் செக்ஷன் இல்லையா, அங்கே வீக்கர் கம்யூனிட்டீஸ் இல்லையா, ஆனால் அங்கே கம்யூனல் ஜி.ஓ. இருக்கிறதா என்றால் இல்லை. மத்தியப் பிரதேசத்திலும் இல்லை. நாம் படித்து இருக்கிறோம். சாம்பல் நதிப் பள்ளத்தாக்கு—தங்கமணி அவர்கள் இங்கே இல்லை—அங்கேயும் ஏராளமான ஏழைகள் இருக்கிறார்கள்—கொள்ளைக்காரர்கள் உருவாகும் இடமே அங்கே தான்—அங்கே கம்யூனல் ஜி.ஓ. இருக்கிறதா என்றால் இல்லை. இதையெல்லாம் நாம் கூறுவதற்குக் காரணம், நமக்குத் தேவையான நல்ல காரியங்களை செய்வதில் தமிழ்நாடு பின்தங் காது. பல நல்ல காரியங்களை நமக்குத் தேவையான காரியங்களை நாம் செய்து இருக்கிறோம். செய்து கொண்டு வருகிறோம்.

போன மாதம் 25 எம்.எல்.ஏ.-க்கள் மத்தியப் பிரதேசத் திலிருந்து—உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்—மற்ற கட்சி எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் ஜெயிலில் இருப்பதாகச் சொன்னார்கள் —காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ.க்கள்—தமிழ் நாட்டிற்கு வந்தார்கள். தமிழ் நாட்டிற்கு வந்து எப்படி நாம் எல்லாம் இருக்கிறோம் என்று பார்ப்பதற்காக வரவில்லை. இங்கே நாம் கட்டியிருக்கக்கூடிய குடிசை மாற்றுப் பணிகளைப் பார்வையிட,



வந்திருந்தார்கள். அங்கேயும் அது போன்ற சட்டம் கொண்டு வருவதற்காக செலக்ட் கமிட்டி போட்டு இருக்கிறார்கள், அந்த செலக்ட் கமிட்டி தலைவர், 25 எம். எல். ஏ.க்கள் வந்தார்கள். அவர் களோடு பேசிக்கொண்டு இருந்தபோது சொன்னார்கள், குடிசை மாற்றுப் பணி பெரிய பணி / என்று, சொன்னார்கள். போன வாரம் கருநாடக மாநிலத்திலிருந்து நம்முடைய சட்டத்தைக்கொண்டு போய் அங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் குடிசை மாற்று வாரியத்தின் தலைவர் வந்தார்கள். குடிசை மாற்று வாரியம் தமிழ் நாட்டில் செய்தது போல இந்தியாவில் எங்கும் செய்யப்படவில்லை யென்று சொன்னார்கள். பம்பாயில் பெரிய தலைவர், இன்றையதினம் காங்கிரஸ் கட்சியின் முதுகெலும்பு என்று சொல்லக்கூடிய தலைவர், ரஜனி படேல் அவர்கள் 'இல்லஸ்டிரேட் வீக்கிலி'யில் பம்பாயை எப்படி சீர் திருத்தம் செய்ய வேண்டுமென்று சொல்லி எழுதியிருந்தார்கள். எவ்வளவு குடிசைப் பகுதிகள் அங்கே இருக்கின்றன என்பதைக் குறித்து ஒரு கட்டுரை எழுதியிருந்தார்கள். நான் அவர் களுக்குக் கடிதம் எழுதினேன்.

"நீங்கள் ஏழைகளுக்காகப் பரிதாபப்படுகிறோம் என்று சொல்லுகின்றீர்களே, அங்கே பம்பாய் பெருநகரில் குடிசை வாழ்ப் பகுதிகள் எவ்வளவு மோசமாக இருக்கின்றன, ஏன் அங்கே சீர்திருத்தம் செய்யக்கூடாது" என்று கடிதம் எழுதினேன். நான் எழுதிய கடிதத்திற்குப் பதில் வரவில்லை. ஆனால், அவர் முக்கியமான காரியம் என்று—திருமணம்—செய்ததாக ஏடுகளில் படித்தேன்.

பொதுவாழ்க்கையில் உள்ளவர்கள் மனதாரக் கொள்கைகளை நினைத்தாலும், அதைச் செயலில் செய்ய வேண்டும் என்ற உறுதிப் பாடு இருக்க வேண்டும். எண்ணுகின்றவற்றுக்குச் செயல் வடிவம் கொடுக்க வேண்டும் என்ற உறுதி உள்ளவர்கள் இருந்தாலும் அங்கே பிரதமரைச் சுற்றி நாலுபேர் நடித்துக் கொண்டு, இப்படி யெல்லாம் எங்கள் கட்சி செய்கிறது என்று சொல்லிச் சொல்லித் தான் இந்திய நாட்டினை ஆண்ட காங்கிரஸ் கட்சி, இன்று ஆண்டு

வரும் காங்கிரஸ் கட்சி இந்நிலைக்கு நாட்டைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் அன்றையதினம் அவர்கள் கெடுத்த வைக்குப் பரிகாரம் தேட வேண்டும் என்பதற்காக. அவர்கள் சொன்னதை எல்லாம் நாங்கள் ஏற்று நடத்துகிறோம். இன்றைய தினம் பல கட்டடங்களிலே யோக்கியத்தன்மை இல்லாது போய் விட்டதை பார்க்க முடிகிறது. அரசியலிலும் சரி அதிகாரிகள் மத்தியிலும் சரி. எந்த இடத்திலும் அதைக் காண முடியாத சூழ் நிலை ஏற்பட்டு இருக்கின்றது. யார் தடுத்தார்கள், அவற்றுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்பதை ?

பொது மக்களுக்கு நல்ல பல காரியங்களைச் செய்ய வேண்டுமா ? செய்ய வேண்டும். செய்வதுதானே ? யார் எதிர்த் தார்கள் ? நிலச் சீர்திருத்தங்கள் நல்ல முறையில் இருக்க வேண்டுமா ? வேண்டும். யார் வேண்டாம் என்று எதிர்த்தார்கள் ? தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுப்பதை யார் எதிர்க்க முடியும் ? அவை எதிர்க்கக்கூடாத காரணங்களாக இருப்பதால் தான், அவை நல்ல காரியங்களாக இருப்பதால்தான், நமது அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் அமுல் செய்தோம். அதே அடிப்படையில்தான் பிரதமர் அவர்கள் வெளியிட்ட 20 அம்ச திட்டங்களையும் பெரிதும் வரவேற்றோம். அவற்றை ஏற்றுக்கொண்டு செயல்படுத்துகிறோம். அதிலே என்ன தவறு இருக்க முடியும் ?

கழகத்தினைப் பொறுத்தவரையில் நாங்கள் ஒரு கட்சி, எங்களுக்கும் ஜனநாயக உணர்வு உண்டு. இந்த நாடு ஜனநாயகத்தின் அடிப்படையில் ஆளப்பட வேண்டும் என்று சொல்லுகிறோம்.

எங்கள் மாரிமுத்து அவர்கள் கூடச் சொன்னார்கள், தஞ்சையைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையில் எங்கள் மாரி மாரி முத்து என்று சொல்லுகிறேன். குத்தலாகச் சொல்ல அவருக்குத் தெரியாது, அவர் சொன்னார், ஜே. பி. அவர்களோடு எங்கள் கட்சித் தலைவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்



என்று. என்ன தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாத பாவியா அவர் ? தொடர்பு வைத்துக் கொண்டால் என்ன தவறு ? எவ்வளவு முறை நீங்களே அவரை வானளாவப் புகழ்ந்திருப்பீர்கள் ? அவரோடு பேசக்கூடாதா ?

அதைப் போல மொரார்ஜி தேசாய் அவர்கள் என்ன பாபியா ? அவரோடு பேசக்கூடாதா ? அவரும் இந்திய நாட்டின் ஜனநாயகக் குடி மகன்தானே? அன்று மொரார்ஜி அவர்கள் குஜராத்தில் சட்ட மன்றம் கலைக்கப்பட வேண்டும் என்று, அவருக்கே உரித்தான முறையில் அதற்கான உண்ணாவிரதம் என்றெல்லாம் போராட்டம் நடத்தினார். ஏன் அன்றையதினம் அவசர நிலைமையைப் பிரகடனம் செய்திருக்கக் கூடாது? குஜராத்திலே சட்ட சபையைக் கலைத்து, தேர்தலை நடத்தி தேர்தலில் ஆளுங் காங்கிரஸ் தோற்றது என்றதும் அவசரப் பிரகடனமா ? கேட்கலாம் அல்லவா ? ஏன் ஆரம்பத்திலேயே அவசர நிலையைப் பிரகடனம் செய்திருக்கக்கூடாது ?

அதைப் போலவே பீகாரிலும் எலெக்ஷனை வைத்துவிட்டுப் போவதுதானே ? இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வரப்போகும் தேர்தல் ஒரு ஆண்டு காலத்தில் வந்துவிட்டுப் போகிறது. நமது பிரதமர் அவர்கள்மீது எங்களுக்குத் தனிப்பட்ட முறையில் பெருத்த நம்பிக்கை இருக்கின்றது. அவரது அரசியல் தலைமையையும் வெகுவாக மதிக்கிறோம். ஆளும் தலைமையையும் நாங்கள் பெரிதும் மதிக்கிறோம். காரணம், அவர்களுக்குப் பிறகு யார் என்பதில் எங்களுக்கும் குழப்பம் இருக்கின்றது. ஆனால் இன்றைக்கு அவரைச் சுற்றியுள்ள பலரும் அவருக்குத் தவறான யோசனைகளைச் சொல்லிக்கொண்டே அனைத்தையும் கெடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது இங்கே இல்லை அவர். அவர் பேசும் கம்யூனிஸ தத்துவத்தையும் நான் படித்திருக்கின்றேன். ஆனால் இன்று அவர் கட்சி எந்தப் போக்கில் இருக்கின்றது, இதைச் சொல்லுவது, அதைச் சொல்லுவது, அங்கே சேருவது, இங்கே சேருவது என்று எல்லாவற்றையும் குழப்பிவிட்டுவிட்டு,

என்றைக்குப் பூரண குழப்பம் உண்டாகின்றதோ அன்றைக்கு எல்லாவற்றையும் தூக்கியெறிந்துவிட்டு தம் கட்சி அங்கே போய் உட்கார வேண்டும் என்பதுதானே? தொழிலாளர்கள் நிலை பற்றிக் கண்ணீர் வடிக்கின்றார்கள். ஏதோ கம்யூனிஸ்டு கட்சி ஒன்றுக்குத்தான் தொழிலாளர்கள் பின்னால் இருப்பதைப் போலவும் வேறு எந்தக் கட்சிக்கும் அவர்களுடைய ஆதரவு இல்லை என்பதைப் போலவும் குறிப்பிட்டார்கள். ஒரு நாள் டோக்கன் ஸ்ட்ரைக் என்றார்கள். பெருமையாகச் சொன்னார்கள். அந்தக் கட்சித் தலைவர் திரு. எம். கலியாணசுந்தரம் அவர்கள் எங்கே போனார்கள்? அன்றையதினம் முன் நின்று நடத்தியிருக்க வேண்டாமா? நான் அவர்களையும் சேர்த்துத்தான் கேட்கிறேன்.

இன்றைக்குப் பொது வாழ்க்கையில், அரசியல் வாழ்க்கையில் உள்ளவர்கள் மனத்துக்குள் ஒன்றை வைத்துக்கொண்டு வெளியே அதைச் சொல்லாமல் வேறு எதையாவது சொல்லிச் சொல்லி, எல்லோரையும் மயக்கும் அல்லது பசப்புகின்ற ஒரு சுபாவம் உருவாகி வருகின்றதைப் பார்க்கிறோம். அம்மையார் அவர்கள் என்னைப் பார்க்கின்றார்கள் (திருமதி த. ந. அனந்தநாயகி அவர்களைப் பார்த்து) அவர்களுக்கும், உங்களுக்கும், எனக்கும் எல்லோருக்குமாகத்தான் சொல்லுகிறேன் இதை. மக்களுக்காக ஒன்றைச் செய்ய வேண்டும் என்றால் அதை நம்பிக்கையோடு உறுதியோடு செயல்படுத்த வேண்டும்.

இருபது அம்சத்-திட்டத்தைப் பற்றிப் பேச வேண்டும் என்று கருதினால் அநேகமாக எல்லாவற்றுக்கும் பதில் சொல்லிவிடுவேன். ஏன் என்றால் அவர்கள் சொல்லியிருக்கிற 20 அம்சத் திட்டங்களின் விவரங்கள் அநேகமாக எல்லா உறுப்பினர்களுக்கும் நன்கு தெரியும் என்று கருதுகிறேன். ஏன் இதற்கு முன்பே பிரதமர் இந்த 20-அம்ச திட்டங்கள் பற்றி எண்ணிப் பார்த்திருக்கக் கூடாது? திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் என்ன சொல்லப் போகின்றார்கள்? அவர் பழைய சுயமரியாதைக்காரர். அவர் பேசும்போது சுயமரியாதையை விட்டுவிடக்கூடாது என்ற கருத்தோடு பேசினார். ஆனால் பட்ஜெட்டின்போது என்ன பேசுவாரோ அதைத்தான் இப்போதும் பேசினார்கள். திராவிட முன்னேற்றக்





கழக அரசு நிலச் சீர்திருத்தம் செய்யவில்லை, எனவே இது பிரபுத்துவச் சர்க்கார் என்று சொல்லிவிட முடியுமா? கல்வியில் ஏழை எளியவர்களுக்குச் சலுகைகளைத் தரவில்லை; எனவே இந்த அரசு பிரபுத்துவ அரசு என்று சொல்லிவிட முடியுமா? தொழிலாளர்களுக்கு நன்மை ஏதும் செய்யவில்லை, ஆகவே பிரபுத்துவச் சர்க்கார் என்றோ, வீடற்றவர்களுக்கு வீட்டு மனைகளைக் கொடுக்கத் தவறி விட்டது ஆகவே பிரபுத்துவச் சர்க்கார் என்றோ சொல்லிவிட முடியுமா? சொல்ல மாட்டார்கள், சொல்லவும் முடியாது.

ஆனால் இடையில் சி.ஐ.ஏ. என்று எதையோ சொல்லுகின்றார்கள். எங்கே இருக்கின்றார்கள் சி.ஐ.ஏ? ஆனால் அவரது கட்சியினைப் பற்றி, இன்றையதினம் வளர்ந்து வரும் சிறந்த அரசியல்வாதியான திரு. ஸஞ்சேய் காந்தி சொன்னதாகக் கேள்விப்பட்டேன். 'இன்று இந்தியாவிலுள்ள கட்சிகளிலேயே பணக்காரக் கட்சி எது என்று சொன்னால், பணக்காரர்களோடு சேர்ந்துள்ள கட்சி எது என்று சொன்னால் அது கம்யூனிஸ்டு கட்சித்தான். அந்தக் கட்சியில்தான் தேசத்தின் பெரும் பணக்காரர்கள் இருக்கின்றார்கள்' என்று திருவாளர் ஸஞ்சேய் காந்தி அவர்கள் சொன்னதாகப் பத்திரிகையில் பார்த்தேன். இப்படி அவர் சொன்னதை இதுவரையில் அந்தக் கட்சியிலும் யாரும் மறுத்ததாகத் தெரியவில்லை.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியை எடுத்துக்கொண்டால் கடந்த இருபத்தைந்தாண்டு காலத்தில் அவர்கள் கடைப்பிடித்துவந்த கொள்கைகளை எப்படி எப்படியெல்லாம் மாற்றிக் கொண்டார்கள் என்று பார்க்கும்போது இன்னும் 20 ஆண்டு காலத்திற்குப் பிறகு இந்த நாட்டில் கம்யூனிஸ்டு கட்சியே இருக்காது. காரணம், அந்த அளவிற்கு அவர்கள் தங்கள் கொள்கைகளை சமயத்திற்கு ஏற்றவாறு மாற்றிக்கொண்டு வருகின்றார்கள்.

இந்திரா காந்தி அவர்கள் தமது 20-அம்சத் திட்டங்களிலே தொழில் முதலீடுகளுக்கான நடைமுறைகள் எளிமைப்படுத்தப் பட வேண்டும் என்கின்றார்கள். தொழில்களில் தொழிலாளர்

களுக்கு உரிமை இருக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். அதை இந்த சர்க்கார் எதிர்க்கின்றது, ஆகவே இந்த அரசு பிரபுத்துவ அரசு என்று சொல்லிவிட முடியுமா? அப்படிப் பேச மாட்டார் நமது நண்பர். காரணம், அதையெல்லாம் நாங்கள் செய்திருக்கிறோம், செய்து வருகிறோம். இன்னும் கொஞ்சம் செய்யக் கூடாதா என்று வேண்டுமானால் கேட்கலாம். அதற்கு இடமிருக்கின்றது, மறுக்கவில்லை.

உதாரணத்திற்குச் சொல்லப்போனால், முன்பு இருந்த நில உச்சவரம்புச் சட்டத்தில் 30 ஏக்கர் என்று இருந்தது. இம் மன்றத்திலுள்ள மாரிமுத்து அவர்களுக்கு அப்போது இது தெரியாதா? பொன்னப்ப நாடார் அவர்களுக்கு அது தெரியாமல் இருந்ததா? தெரியும். யார் அன்றைக்கு 30 ஏக்கருக்கும் குறைவாக இருக்க வேண்டாம் என்று சொன்னார்கள்? மன்றாடியார்களுக்கும் கௌண்டர்களுக்கும் யார் சலுகைகளைக் கொடுத்தது அன்றைக்கு? நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் பல சலுகைகளை ரத்து செய்தோம். 30 ஏக்கர் என்று இருந்ததை 15 ஏக்கர் என்று குறைத்தோம். தமிழ் நாட்டில் அப்படி 15 ஏக்கர்தான் என்று சட்டம் கொண்டு வந்த நேரத்தில் உத்திரப் பிரதேசத்தில் அப்படி ஒரு சட்டம் இருந்ததா? இல்லையே? போன வாரம் வந்திருக்கலாம் அங்கே அந்தச் சட்டம். மத்தியப் பிரதேசத்தில் அப்போது அந்தச் சட்டம் இருந்ததா? இல்லையே? பதினைந்து நாட்களுக்கு முன்பு வந்திருக்கலாம். ஆனால் ஆறு ஆண்டுகளுக்கு முன்பே நாங்கள் இதைக் கொண்டு வந்தோம் தமிழகத்தில்.

ஒவ்வொரு அம்சமாக இதையெல்லாம் எடுத்துச் சொல்ல முடியும். ஆனால் இவை அனைத்தும் உறுப்பினர்கள் அவ்வளவு பேருக்கும் நன்கு தெரியும். எதிரே உள்ள பத்திரிகை நிருபர்களுக்கும் நன்றாகத் தெரியும். உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள் 20 அம்சத் திட்டத்தில். பெருக்கியிருக்கிறோம். ஆனால் ஏற்றுமதியைப் பெருக்க வேண்டும் அல்லது இம்போர்ட்டுக்கு லைசென்ஸ் வேண்டும் என்றால் அவற்றை நாங்கள் செய்ய முடியாது. இம்போர்ட்டுக்கு லைசென்ஸ் டெல்லியில். தமிழகத்தில் எங்கள் அரசினால் என்ன செய்ய முடியுமோ





அவ்வளவு காரியங்களையும் நாங்கள் திறம்படச் செய்திருக்கிறோம்.

கிரௌண்டு வாட்டர் பற்றிச் சொன்னார்கள். தரிசு நிலங்களையெல்லாம் பசுமை நிலங்களாக மாற்ற வேண்டும் என்று. ஏழாண்டு காலத்திற்கு முன்பே, அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்த நேரத்திலேயே ஃபோர்டு ஃபௌண்டேஷன் சார்பிலே இதற்காக நமக்கு ரூ. 25 கோடி வேண்டும் என்று கேட்டார்கள். பணம் வேண்டும் என்றால், உதவி வேண்டும் என்றால் அமெரிக்கா வேண்டும். நமக்கு கோதுமை வேண்டும் என்றால் ரஷ்யாவிற்குக்கூட அமெரிக்கா வேண்டும், கணக்கு என்று வந்தால் சி.ஐ.ஏ. என்று எதையாவது சொல்லுவார்கள். தஞ்சை மாவட்டத்தில் ஒரு திட்டம் போட்டு அதற்காக 25 கோடி ரூபாய் அந்த நிதியிலிருந்து வேண்டும் என்றார். அதை உபயோகித்து, அதைப் பயன்படுத்தி தஞ்சாவூரில் தீவிர சாகுபடித் திட்டத்தை செயல்படுத்தவில்லையா? எவ்வளவு தரிசு நிலம் இருந்தது தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்னால்? கிட்டத்தட்ட 5 லட்சம் ஏக்கர் இருந்தது என்று எனக்கு ஞாபகம். அத்தனையையும் விவசாயத்திற்குக் கொண்டுவந்தோம். ஒரு போக நிலம் எவ்வளவு இருந்தது, இரு போக நிலம் எவ்வளவு இருந்தது, இன்றைக்கு நிலைமை என்ன? ஒரு போகம் இரு போகமாகவும், இரு போகம் முப்போகமாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது. இன்று ஏதேதோ பேசுகிறார்கள். 20 அம்சத் திட்டம் என்கிறார்கள், அவசரப் பிரகடனம் என்கிறார்கள், இன்னும் என்னென்னமோ சொல்கிறார்கள். இதை எங்கு சொல்ல வேண்டும்? மத்தியப் பிரதேசத்தில் சொல்ல வேண்டும், உத்தரப் பிரதேசத்தில் சொல்ல வேண்டும். வேண்டுமானால் எங்களையும் அழைத்துச் சொல்லச் சொல்லுங்கள். நாங்கள் போய்ச் சொல்கிறோம். உத்திரப் பிரதேச மக்களே, எங்கள் தமிழ்நாட்டில் இந்த மாதிரி செய்திருக்கிறோம்; நீங்களும் செய்யுங்கள் என்று சொல்கிறோம். இப்படி ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டே போனால் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரம் போதாது.

திடீரென்று ஒரு அறிவிப்பு வருகிறது. என்ன அறிவிப்பு தெரியுமா? ஸ்டான்டர்டு கிளாத். இதைப்பற்றி நான் பெரிதாக

நினைக்க மாட்டேன்; என் பிள்ளை நினைப்பான். இது என்ன புதிய அனௌன்ஸ்மென்ட்? ஏற்கெனவே வெள்ளைக்காரன் காலத்தில் இராமசாமி முதலியார் இந்த ஸ்டான்டர்டு கிளாத் ஸ்கீமைக் கொண்டு வந்தார். அப்போது வைஸ்ராய் காலம். போர்க் காலத்தில் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார். வேட்டி, புடவைகள் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று கொண்டு வந்தார். நல்ல 'பின்லே' வேட்டி வேண்டுமென்று கேட்டால் கிடைக்காது. வேண்டுமென்றால் எங்காவது பிளாக் மார்க்கெட்டில் தான் கிடைக்கும். அந்த ஸ்டான்டர்டு கிளாத் திட்டம் இந்த 20 அம்சத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது என்ன பெரிய திட்டம்? இதை என் ஆளுங்காங்கிரஸ் மாற்றியது? இப்போது அறிவிக்கிறது.

இந்தியாவிலேயே அதிகமாக கைத்தறி இருப்பது தமிழ் நாட்டில் தான். இன்றைக்கு 25 கோடி ரூபாய்க்கான கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கிறது. கைத்தறி மட்டும் இப்படித் தேங்கிக் கிடக்கவில்லை; கதரும் தேங்கிக் கிடக்கிறது. அதை என்ன செய்வது? அதுபற்றி என்ன சொல்கிறார்கள்? தமிழ்நாட்டிலே சொல்லிக் கொண்டிருக்கலாம்; வேறு என்ன செய்ய முடியும்? பாராளுமன்றத்தைக் கூட்டு, கூட்டு என்று சொன்னார்கள். கூட்டினார்கள். என்ன நடந்தது? அங்கே இதைப்பற்றிக் கேட்கக் கூடாதா? இதை எல்லாம் எதற்குச் சொல்கிறேன் என்றால் ஏதோ இந்தப் பக்கம் இருக்கும்போது ஒன்று, அந்தப் பக்கம் இருக்கும்போது ஒன்று, இன்னொரு பக்கம் போனால் வேறொன்று—இப்படிப் பேசிக் கொண்டிருக்கக்கூடாது. அரசியல் வாழ்விலே ஈடுபட்டவர்கள், பொது வாழ்க்கைக்கு வந்தவர்கள் இதய சுத்தியோடு செயல்பட வேண்டும். அப்படி நடந்து கொள்கிறார்களா என்று கொஞ்சம் இருதயத்திலே தொட்டுப் பார்த்துச் சொல்ல வேண்டும்.

இந்தக் கட்சியில் போய்ச் சேர்ந்தால் நாளை மந்திரி சபையில் இடம் கிடைக்கும் என்று எண்ணிக்கொண்டு போகக்கூடாது. அப்படிப்பட்டவர்களுடைய வாழ்வு நீண்டகாலம் நடக்காது (குறுக்கீடு). நான் வாழ்வு என்று சொல்வது, அரசியல் வாழ்வு, பொது வாழ்வு. ஒரே கொள்கையுடைய இரண்டு கட்சிகளும்



வருகின்றன. அது வேறு விஷயம். ஒரு கட்சி என்றால் அதற்கு என்று ஒரு குறிப்பிட்ட கொள்கை இருக்க வேண்டும். ஒரு கட்சியில் இருப்பவர் அந்தக் கட்சியின் கொள்கை பிடிக்கவில்லை என்றால், இன்னொரு கட்சியின் கொள்கைதான் மக்களுக்கு ஏற்றது, தனக்கும் அதில் நாட்டம் இருக்கிறது என்றால் உண்மை யிலேயே அந்தக் கொள்கைக்காகப் பாடுபட வேண்டும். அதல்லாமல் எந்தக் கட்சியில் போய்ச் சேர்ந்தால் மந்திரி பதவி கிடைக்கும் என்ற எண்ணத்தோடு போகக்கூடாது.

எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், எங்கள் கொள்கைக் காக நாங்கள் பாடுபட்டு வருகிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் எங்கள் கொள்கை சமதர்ம சமுதாயம்; ஏழைகளுக்கு நல்வாழ்வு வழங்குவது, அடிமட்டத் திலே அழுந்திக் கிடப்பவர்களை மேல் நிலைக்குக் கொண்டுவர பாடு படுவது. இதில் ஏதாவது அக்கிரமம் நடக்கிறது என்றால் அதை வெளிப்படையாகவே சொல்லிவிடுகிறோம். ஆனால் சிலபேர் அதை மூடிமறைத்துவிட்டு, எப்போது கழுத்தறுக்கலாம் என்று திட்ட மிட்டுக் கொண்டிருப்பார்கள். திரு. மாரிமுத்து, திரு. தங்கமணி போன்றவர்களுக்கு அது தெரியும். அவர்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை.

இந்தியா ஒரு பெரிய நாடு. பல்வேறு அமைப்புகளைக் கொண்ட ஒரு பெரிய நாடு. எல்லா தலைவலிக்கும் ஒரே அமிர்தாஞ்சனம் போதாது. தமிழ் நாட்டுக்கு இது போதும். உத்தரப்பிரதேசத்திற்கு வேறு மருந்து தேவைப்படும்.

இங்கே பேசியவர்கள் 'சென்ஷுர், சென்ஷுர்' என்று சொன்னார்கள். சுரேந்திரன் அவர்கள் 'சென்சார்' மோஷன் என்று சொன்னார்கள். அவர்களை இப்போது இங்கே காண வில்லை.

பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள், அரசியல் வாழ்வுக்கு வந்து விட்டவர்கள் அதற்குரிய வரன்முறையோடு நடந்துகொள்ள வேண்டும். உள்ளத்திலே ஒன்றை நினைத்துக்கொண்டு, பெயரளவில் எதையோ சொல்லிக் கொண்டிருப்பது நல்ல

அரசியல் வாழ்வு ஆகாது. தூய உணர்வு இருக்க வேண்டும்; அதற்குரிய செயல் வடிவம் இருக்க வேண்டும். ஜனநாயக உணர்வுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். என்னுடைய ஜனநாயக உரிமையைப் பறித்துவிட்ட பிறகு வேண்டுமானால் இப்படிச் சொல்லாதே என்று தடுக்கலாம். தவறு எந்த இடத்தில் நடந்தாலும் சுட்டிக்காட்ட வேண்டும். நல்லது எங்கே நடைபெற்றாலும் ஆதரவு காட்ட வேண்டும்.

இந்திய தலைமைப் பீடத்தில் இருக்கிற பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நான் பேசுவது எந்த பத்திரிகையிலும் வரப்போவதில்லை. சென்சார் இருக்கிறது. மக்கள் குரல் பத்திரிகை வரக்கூடாது என்று தடை விதித் திருக்கிறார்கள் என்றால் வரவே கூடாது என்று சொல்லியிருக் கிறார்கள். பத்திரிகைக்குரிய இலக்கணத்தோடு வந்தால் ஏன் தடை செய்கிறார்கள்?

பிரதம அமைச்சருக்கு நான் தெரிவித்துக்கொள்வது, தமிழ் நாடு சர்வாதிகார போக்கில் என்றும் இறங்காது; உங்களுடைய நல்ல நோக்கங்களை தமிழ் நாடு அரசு வரவேற்கிறது; உங்கள் தலைமை டில்லியில் நீடிப்பதை தமிழ் நாடு அரசு ஏற்றுக்கொள்ளத் தயங்காது; ஆனால் உங்களைச் சுற்றி இருக்கிறவர்களுடைய யோசனைகளைக் கேட்டு, சர்வாதிகாரப் போக்கில் ஈடுபடாதீர்கள். எல்லா மாநிலங்களையும் ஒன்றுபோல் நினைக்காதீர்கள்; உங்கள் நடவடிக்கை மத்தியப் பிரதேசத்திற்குச் சரியாக இருக்கலாம்; உ.பி.-க்குச் சரியாக இருக்கலாம். அதேமுறை தமிழ்நாட்டுக்கும் பொருந்தும் என்று நினைக்காதீர்கள். இங்கிருக்கும்போது ஒன்று, அங்கிருக்கும்போது ஒன்று சொல்லக் கூடியவர்களை நம்பாதீர்கள்.

இன்றையதினம் பிரதமர் அமைச்சரவையில் தமிழகத் திலிருந்து ஒருவர் போயிருக்கிறார். அவரை ஒரு தமிழன் என்று ஏற்றுக்கொள்ள நான் தயாராயில்லை. அவருடைய போக்கு உகந்ததாக இல்லை. மக்கள் நன்மையைக் கருதி, நீங்கள் 20 அம்சத் திட்டமல்ல; 50 அம்சத் திட்டமல்ல; 100 அம்சத்





திட்டத்தைக் கொண்டுவந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் அதை ஆதரிக்கும். இவைகளை எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கெனவே ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று கூறி, இந்தத் தீர்மானத்தை வன்மையாக எதிர்க்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

* **டாக்டர் எச். வி. ஹாண்டே:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற ஆசைப்படுகிறேன்.

இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரை, ஏற்கெனவே நமது நண்பர்கள் திரு. மாரிமுத்து அவர்களும், திரு. தங்கமணி அவர்களும் எந்தப் பின்னணியிலே இப்போப்பட்ட ஒரு அவசரச் சட்டம் நம்முடைய நாட்டில் வந்திருக்கிறது என்று தெளிவாக எடுத்துரைத்தார்கள். இந்த அவசரச் சட்டம் வருவதற்கு முன்னால் தமிழ்நாட்டில் பல வேலைகள், குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடந்து கொண்டிருந்தன. அதற்கு முன்னால்—அவசரச் சட்டம் வருவதற்கு முன்னால் இங்கே ஜெயபிரகாஷ் நாராயண் வந்தார். அந்த நேரத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஜெயபிரகாஷ் நாராயணனுடன் உறவு வைத்துக்கொண்டு இருந்தார்கள். அதற்குப் பின்னால் ஏகோபித்த ஒரு கருத்தாக மத்திய அரசை எதிர்க்கலாம் என்று திட்டங்களை வகுத்தார்கள்.

அந்த அடிப்படையில்தான் ஜெயபிரகாஷ் நாராயண் அவர் களுக்குக் கடற்கரையில் ஒரு கூட்டத்தை நடத்துவதற்கு அனுமதி வழங்கினார்கள். வேறொரு நிகழ்ச்சிக்கு அங்கே அனுமதி அளிக்கப் பட்டிருந்தாலும் கூட தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, அன்றைக்குக் கடற்கரையில் ஜெயபிரகாஷ் நாராயண் பேசுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். அப்போது இளைஞர் காங்கிரஸார் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக கறுப்புக்கொடி காட்ட முன் வந்தார்கள். அப்போது தமிழக அரசு கையாண்ட முறைகள் வருந்தத்தக்கவை, மிகவும் கண்டிக்கத்தக்கவை. கறுப்புக் கொடி காட்ட வந்தவர்களை காட்டுமிராண்டித்தனமாக, அந்தப் பொதுக் கூட்டத்திலே இருந்த ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் போலீசார் உதவியுடன் அடித்து நொறுக்கி, ரத்தம் சொட்டச் சொட்ட போலீஸ் வானிலே ஏற்றினார்கள்.

அது நடந்து முடிந்த சில நாட்களுக்குப் பிறகு எங்கள் கட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதைக் கண்டிக்கும் வகையில் ஒரு கூட்டத்தைக் கன்னைப்பர் திடலில் நடத்தினார். அதன் பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், ஜெயபிரகாஷ் நாராயணனுக்குக் கறுப்புக்கொடி காட்டச் சென்றவர்களை காட்டு மிராண்டித்தனமாக அடித்து நொறுக்கிய இந்த ஆட்சியைக் கண்டிக்கும் வகையில் இங்குள்ள அமைச்சர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில் கறுப்புக்கொடி காட்டுவோம் என்று அறிவித்தார்கள்.

அதன் பிறகு முதலமைச்சர் செங்கற்பட்டுக்குச் செல்கிறார். செங்கற்பட்டில் ஊழியர் கூட்டம் என்ற ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; அதற்குச் சென்றார். அங்கே சென்று கொண்டிருக்கும்போது எங்களுடைய கட்சியின் சார்பில் முனு ஆதி அவர்களும், எஸ். எம். துரைராஜ் அவர்களும் கறுப்புக்கொடி காட்ட முயற்சித்தார்கள். ஜனநாயகம் என்பதைப் பற்றி

(பிற்பகல் 1-00)

மதிப்பிற்குரிய அரங்கண்ணலும் முதலமைச்சர் போன்றவர்களும் இன்றையதினம் தமிழகத்தில் ஜனநாயகம் காப்பாற்றப்படுகிறது என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு பேசுகிறார்களே அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறேன். நியாயமான வழியில், ஜனநாயக ரீதியாக வன்முறையின்றி, குச்சி எதுவுமின்றி, கருப்புத்துணி தான் காட்டவேண்டுமென்று எம்.ஜி.ஆர். அவர்களது கட்டளையை ஏற்றுக் கொண்டு எஸ். எம். துரைராஜ் போன்றவர்கள் அங்கே அண்ணா சிலைக்கு மாலை போட்டு சாலையில் வருகிறார்கள்; முதலமைச்சரவர்களுக்குக் கருப்புக் கொடி காட்டுவதற்காக வருகிறார்கள். அப்போது ஏற்பட்ட நிலைமைகள் என்ன? இந்த மன்றத்தில் உறுப்பினராக இருக்கிற, ஏறத்தாழ 20, 30 ஆண்டுகளாக பொது வாழ்க்கையில் நேரடியாகத் தீவிரமாக ஈடுபட்டிருக்கிற, இரண்டு தலைமுறையாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்திருக்கக் கூடிய பாரம்பரையில் வந்த எஸ். எம். துரைராஜ் அவர்களை, காட்டமாகக்கூட பேசத் தெரியாத துரைராஜ் அவர்களை, நமது சட்டமன்ற உறுப்பினராக உள்ள அவர்களை, அங்கே மிகத் தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்தி அடித்தார்கள். இது அவசரச் சட்டம் வருவதற்கு முன்பாக, "மேக் டிராப்பாக" இப்படி நடைபெற்றது.





அது மட்டுமல்லாமல், அவரை அடித்து, அவர் தரையில் விழுந்ததற்குப் பிறகு, ஆஸ்பத்திரியில் அவரைச் சேர்ப்பதற்குக் காலதாமதம் செய்து, பின்னர் ஆஸ்பத்திரியில் எஸ். எம். துரைராஜ் அவர்களைச் சேர்த்துள்ளார்கள்.

இந்நிலையில் இன்றையதினம் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவதற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்ன உரிமை இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். என்ன உரிமை, என்ன யோக்கியதை, என்ன தகுதி இருக்கிறது என்று கேட்கிறேன். ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவதற்கு அவர்களுக்கு யோக்கியதையும் இல்லை, உரிமையும் இல்லை என்பதைச் சொல்வதற்காக நான் இதை எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன்.

எஸ். எம். துரைராஜ் அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நேரத்தில் அவருடைய தாயார் அவரைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. அது மட்டுமல்லாமல் அன்றையதினம் நான் திருக்கோயிலூரிலிருந்து. . .

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் நிறைய விஷயங்கள் பேச வேண்டியுள்ளது. எதற்காகச் சொல்கிறேன் என்றால் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்கிறார். என்ன என்று கேட்கவேண்டும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் வன்முறையில் ஈடுபட்டது, இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்தன என்று தவறான தகவலை மன்றத்திற்குத் தருகிறார்கள். எஸ். எம். துரைராஜ் அவர்கள் அடிபட்ட விவரங்கள் பத்திரிகையில் வந்துள்ளன. ஓட்டலில் சென்று ஏற்பட்ட கலவரத்தால் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மொத்தத்தில், டாக்டர் ஹாண்டே துரைராஜ் சம்பவத்தைப் பற்றிப் பேசினது, வீராசாமி பேசினது இரண்டுமே சரியில்லை. இது கோர்ட்டில் இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** உறுப்பினர் தவறான தகவலை இந்த மன்றத்தில் தரக் கூடாது. ஏற்கெனவே பத்திரிகையில் வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் வன்முறையை தூண்டிவிட்டதென்று சொன்னால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் இதே சென்னை நகரத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது இந்த நாட்டில் இருக்கிற முதலமைச்சர் வீட்டிற்குச் செல்வேன் . . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் கொடுக்கலாம் அல்லவா? அவர் இதற்குப் பதில் சொல்வார் இல்லையா? இவர் முதலமைச்சரா? முதலமைச்சர் பதில் கொடுப்பார்.

**திரு. நா. வீராசாமி :** வன்முறையை யார் தூண்டிவிடுகிறார்கள் என்று தெரியவேண்டுமல்லவா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** என் நேரத்தில் குறுக்கிட்டுப் பேச வேண்டும். அவ்வளவு தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டு பேரும் இந்த மேட்டரை அவாய்ட் செய்வது நல்லது.
The matter is *subjudice.*

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சப் ஜூடிஸ் என்றாலும் பத்திரிகையில் வந்த செய்திகளைச் சொல்லலாம். வீராசாமி அவர்கள் சொன்னது மாதிரி கிடையாது. ஆதாரங்கள் இருக்கின்றன. சாட்சியம் கூட மிகத் தெளிவாக உள்ளது. ஃபோட்டோ வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே, நான் சொல்வது,
The matter is *subjudice.* The matter is pending befor the Court.

நீங்கள் சொல்வது சரியா, தவறா, அவர் சொல்வது சரியா, தவறா என்று கோர்ட் முடிவு பண்ணிய பிறகு தெரியும். இப்போது அந்தப் பேச்சு இடம்பெற வேண்டாம். அடுத்த பாயின்டிற்குப் போங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** எஸ். எம். துரைராஜ் அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பிறகு நடைபெற்ற சம்பவங்களைச் சொல்கிறேன். ஆஸ்பத்திரியில் நடைபெற்ற





சம்பவங்கள் பற்றிப்பேச எந்தவித ஆட்சேபனையும் இருக்க முடியாது. அவருடைய தாயார் பார்க்கவேண்டுமென்று விரும்பினார்கள். அவர் தாயாருக்குக் கூட அனுமதி மறுக்கப்பட்டது. அவருடைய தாயார் எனக்குக் காலையில் நான் திருக்கோயிலூரிலிருந்து வந்த நேரத்தில் ஃபோன் செய்தார்கள். என்னுடைய மகனை நான் பார்ப்பதற்கு வாய்ப்பு தரப்படவில்லை. மறுக்கப்படுகிறது. இதை உடனடியாகக் கவனிக்கவேண்டும், மிக வேதனையாக இருக்கிறது, எஸ். எம். துரைராஜ் அவர்கள் எந்த கண்டிஷனில் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. கவலைக்குரிய நிலைமையாக இருக்கிறதென்று சொன்னார்கள். அதற்குப் பிறகு நான் ஐ.ஜி. அவர்களுக்கு ஃபோன் செய்தேன். அதற்குப் பிறகு பார்ப்பதற்கு ஆட்சேபணை கிடையாது என்று சொல்லி அதற்குப் பிறகு கூட, ஐ.ஜி. உத்திரவிட்டதற்குப் பிறகு கூட அங்கே இருக்கக் கூடிய இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ் எனக்கு ஐ.ஜி.-யை விட பெரிய இடத்திலிருந்து உத்திரவு வந்திருக்கிறது, பார்ப்பதற்கு அனுமதிக்க முடியாது என்று சொல்லி, பிறகு ஒரு முறை பார்க்க முடியும் என்று அனுமதிக்கப்பட்டது. அங்கே இப்படி பயங்கரமான நிலைமை யாருக்கு ஏற்பட்டிருக்கிறது? ஜனநாயகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்களே, மதிப்பிற்குரிய அரங்கண்ணல் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் போன்றவர்களும். இப்படி ஜனநாயகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறவர்கள் ஆட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் அடிபட்ட நேரத்தில் அவர் தாயார் அவரைப் பார்க்க முடியவில்லை. மனைவி பார்க்கவேண்டுமென்றால் பல முறை முறையீடு செய்து விட்டுப் பார்க்கவேண்டிய நிலை. சபாநாயகர் அவர்களோடு தொடர்பு கொண்டு முயற்சித்தோம். அந்த நேரத்தில் அவர் எவ்வளவு வேதனைப் பட்டார் என்று சொல்ல முடியாது. சொல்வதும் பொருத்தமாக இருக்காது. அந்த அளவிற்கு ஜனநாயகம், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மிகத் தீவிரமான திட்டங்களுடைய விளைவாக, செயல்கள் மூலமாகக் குழி தோண்டி புதைக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் சொல்கிறேன்.

இப்படிப்பட்ட பின்னணியிலே ஜனநாயகத்திற்கு ஆபத்து வந்திருக்கிறது. பிரதமர் ராஜினாமா செய்யவேண்டும் என்று அலகாபாத் கோர்ட் தீர்ப்பு வந்ததற்குப் பிறகு சொன்னார்கள். ஜனநாயகத்திற்கு ஆபத்து வந்தது என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் எங்கெங்கு செல்கிறார்களோ அது குடந்தையாக இருந்தாலும் சரி, மதுரையாக இருந்தாலும்

சரி, ஸ்ரீவில்லிபுத்தூராக இருந்தாலும் சரி, முதலமைச்சர் ஒரு இடத்திற்குச் செல்கிறார் என்றால் அங்கே

தான். அவர் போகிற வழிநெடுக எங்கெங்கே

Scorched earth policy

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் சிறையில் தள்ளவேண்டு மென்று. இது தான் அரசாங்கத்தினுடைய கட்டளை என்று போலீஸ்காரர்கள் சிறையில் தள்ளவில்லையா? குண்டர்களை வைத்து, அடித்து நொறுக்கிறார்கள். இதுதான் அவசரச் சட்டம் வருவதற்கு முன்பாக இருந்த நிலைமை.

குடந்தை ராதாவை உங்களுக்குத் தெரியும். முதலமைச்சரவர்களுக்கு அவர் புதிதல்ல. முதலமைச்சர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். கட்சியில் இருந்தவர். தி.மு.க. பொதுக் குழுவில் உறுப்பினராக இருந்தவர். 31—5—1975 அன்று மாண்புமிகு முதலமைச்சர் குடந்தைக்குச் செல்கிறார்கள். ராதா அச்சகம் நொறுக்கப்பட்டது. மூன்று முறை நொறுக்கப்பட்டது. இது நியாயமா என்று நான் கேட்கிறேன். ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறது என்பதை நான் மீண்டும் சொல்வதற்குக் காரணம் இப்படி ஒரு நபரை, அவருடைய அச்சகத்தைத் தூள் தூளாக்கிறார்கள். பிறகு அதற்காக நாங்கள் எவ்வளவோ கஷ்டப் பட்டு அதைப் புதுப்பித்ததற்குப் பிறகு மீண்டும் முதலமைச்சர் அங்கே செல்கிற நேரத்தில் முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களாக வரவேண்டுமென்று 1971-ம் ஆண்டில் தேர்தலில் கஷ்டப்பட்டு, கழகத்திற்காக உயிர் உடலைக் கொடுப்பதற்குத், தயாராக இருந்தவர், அவருக்கு இப்படி செய்தார்களே, எப்படி மனசு வருகிறது என்பதை வேதனையோடு இந்த நேரத்தில் குறிப்பிடவேண்டிய நிலைமையில் இருக்கிறேன்.

இப்போது அவசரச் சட்டம் வந்து விட்டது. அது போகட்டும். அதற்கு முன்பாக அலகாபாத் தீர்ப்பு வந்தது. அப்போது நம்முடைய முதலமைச்சர் என்ன சொன்னார்? ஜனநாயகத்தில் நம்பிக்கை இருப்பவராக பிரதமர் இருக்கிறார் என்றால், ராஜினாமா செய்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்றார். இதுதான் அவருடைய ஒரிஜினல் ஸ்டாண்டு. பத்திரிகையில் வந்திருக்கிறது. மறுக்கவில்லை.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இல்லாததைத் திரித்துப் பேசிக் கொண்டிருப்பதைப் போல இதையும் திரித்துப் பேசுகிறார். நான் என்ன சொன்னேன் என்று படித்துக் காட்டுங்கள். நான் பேசியது வேறு. இது திரித்துப் பேசிய பேச்சு, இதையும் திரித்துப் பேசவேண்டாம். நான் சொன்னதைப் படித்துக் காட்டவேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** உண்மையைத் தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். திரித்துப் பேசுகிற பழக்கம் எனக்குக் கிடையாது. அந்தத் திறமையும் எனக்குக் கிடையாது. முதலமைச்சர் பேசியது இங்கே இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இருந்தால் படித்துக் காட்டுங்கள். இல்லாவிட்டால் சரியாகச் சொல்லுங்கள், நான் என்ன சொன்னேன் என்று.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** கண்டிப்பாகக் காட்டுகிறேன். உங்களுடைய பத்திரிகை முரசொலியில் வந்திருக்கிறது.

ஆகவே, இந்த மாதிரியாக, ஒரு நிலைமை, ஒட்டுமொத்தமாக அலகாபாத் நீதி மன்றம் உத்திரவு போட்ட நேரத்தில் இருந்தது. இவருடைய எண்ணமெல்லாம் இந்திரா காந்தி அவர்களுக்கு அலகாபாத் தீர்ப்பில் தோல்வி ஏற்பட்டிருக்கிறது, இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர் தோல்வி அப்படியே இருக்கும், அவர் மீண்டும் பொறுப்புக்கு வர முடியாது என்று தன்னுடைய செல்வாக்கை அதிகப்படுத்திக் கொள்ள முடியுமாவென்று இப்படிப் பேசியிருக்கிறார்கள். இது ஒரு கட்டம்.

இதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற் குழுக் கூட்டம் கூட்டியிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் போட்டார்கள். அந்தத் தீர்மானத்தினுடைய நோக்கம் என்ன? சாராம்சம் என்ன? மொரார்ஜி தேசாய் போன்ற பெரிய தலைவர்களைச் சிறையில் போட்டிருக்கிறார்கள். வாஜ்பாய், மொரார்ஜி தேசாய், ஜெயப்பிரகாச நாராயணன் போன்றவர்களுடைய ஃபோட்டோக்கள் எல்லாம் முரசொலியில் வந்திருக்கின்றன. சிறையில் வைத்திருக்கக்கூடியவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்பது செயற்குழுவில் போடப்பட்ட தீர்மானம்.

உதாரணத்திற்காக மீண்டும் சொல்கிறேன். இந்த அவசரச் சட்டத்தைப் பயன்படுத்தி நமது நண்பர் துரைராஜ், முனு ஆதி போன்றவர்களைச் சிறையில் பிடித்துப் போட்டலாம். அவர்களைச் சேர்ந்தவர்கள் அதுப்பற்றி என்ன ஸ்டேட்மெண்டு கொடுத்தாலும் பத்திரிகையில் வராது. ஆளுங்கட்சிக்கு எதிராக இருக்கிறவர்களை —காரணங்களை சொல்லாமல் தைரியமாக அவசரச் சட்டத்தை வைத்து சிறையில் பிடித்துப் போட்டுவிடலாம்—சட்டமன்றத்தில் கூட யாரும் பேச முடியாது — சட்டமன்றம் இப்போது கூடியிருக்கிறது, பேசிக்கொண்டிருக்கிறோம் — சட்டமன்றமே கூடுமா என்று இருந்த நிலை அப்போது இருந்தது—ஆகவே திரு. கருணாநிதி தம்முடைய சுயநலத்திற்கு, தன்னுடைய கட்சியின் நலத்திற்கு, அண்ணா தி.மு.க.-வை அடக்கி ஒடுக்குவதற்கு அந்த அவசர நிலையைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில் ப்ரோ-சென்டர் போல நடந்துகொள்ள ஆரம்பித்தார்கள்.

இப்படி இந்த அவசர நிலையைத் தங்களுடைய சுயநலத்திற்காக பயன்படுத்திக்கொள்ளத் தொடங்கிய பிறகு என்ன என்ன செய்திருக்கிறார்கள் என்பதற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. ஒரே ஒரு ஆதாரம்—ஒரு இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ்—ஈரோடு அருகில்—ஏறத்தாழ இருபது இருபத்தைந்து முறை சம்மன் அனுப்பியும் கோர்ட்டில் ஆஜராகாமல் இருக்கிறார்—நான் எதற்காக கோர்ட்டுக்கு வர வேண்டும், எல்லா ரெக்கார்டுகளையும்தான் கொடுத்தாகிவிட்டதே என்று மறுத்திருக்கிறார். இங்கு செங்கற்பட்டில் ஒரு கோர்ட்டில் ஒரு இன்ஸ்பெக்டர் ஒரு விட்னசை அவரது சொந்த ஜாமீனில் போகச் சொல்கிறார். அந்த கோர்ட்டில் இருக்கிற ஜட்ஜ் மிக வருத்தப்படுகிறார். ஆளும் கட்சியில் இருந்துவிட்டால் அப்படியெல்லாம் செய்யலாம் என்ற நிலைமை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில் முதலமைச்சர் ஜனநாயகத்தைப்பற்றிப் பேசுகிறார். திரு. எஸ். எம். துரைராஜ் தாக்கப்பட்ட நேரத்தில் எங்கள் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது. கட்சி அலுவலர்களை அநாவசியமாக போலீசார் பிடித்துச் சென்றுள்ளனர்.

MR. DEPUTY SPEAKER: How are these things relevant to the debate?

DR. H. V. HANDE: Emergency is being abused.



MR. DEPUTY SPEAKER: Emergency is not there in question. The twenty-point programme is in question.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் பேசுவது உங்களுக்குக் கஷ்டமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசுவதில் கஷ்டம் இல்லை. ரெலவெண்டாகப் பேசுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் ரெலவெண்ட் இல்லாமல் பேசுவதே இல்லை. என்னை மிரட்டுகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கே உட்கார்ந்திருப்பதே உத்தரவு போடத்தான். ரிக்வெஸ்ட் பண்ணிக்கொள்ள இல்லை.

திரு. பெ. சீனிவாசன்: அரசாங்கத்தைப்பற்றி கண்டனத் தீர்மானம் வருகிறபோது இருபது அம்சத் திட்டத்தை எப்படி நிறைவேற்றாமல் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிற போதே, அவசரநிலையை எப்படி எப்படித் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதையும் எப்படிச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியும்?

டாக்டர் எச். வி. ஹாண்டே: எப்படி இருபது அம்சத் திட்டத்தை செயல்படுத்தாமல் இருக்கிறார்கள் என்பதை திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். அதை நிறைவேற்றவில்லை, என்றாலும் அவசர நிலையை எப்படி தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதுதான் என்னுடைய வாதம். நான் 21—5—1975-லேயே அண்ணா தி.மு.க. அலுவலகம் தாக்கப்பட்டது குறித்து மத்திய அரசு உள்துறை அமைச்சர் திரு. பிரும்மானந்த ரெட்டிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். ரெயின் ஆஃப் டெர்ரர்—இங்கே எப்படி இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

A reign of terror has been unleashed on the workers of Anna DMK in our State. Though I can cite a number of such heart-rending instances, I am bringing to your kind attention, a specific case to prove my point. On 18th May 1975 without any provocation, a police party entered the office of the headquarters of Anna DMK during my absence.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1975 அக்டோபர் 28

இதை நான் மனசாட்சியோடு பேசுகிறேன்—

and arrested our party manager Mr. Duraiarasan, typist Mr. Swaminathan and peons Mr. Dandapani and Mr. Anandan, in addition to all other persons who had come to the office on routine

ரொட்டீன் ஒர்க்கிற்காக திரு. பி. எஸ். பாண்டியன் என்று ஒரு அட்வகேட் அங்கு வந்திருக்கிறார். யார், யாரை நாங்கள் ஜாமீனில் எடுக்க வேண்டுமென்ற விவரத்தை எடுக்க வந்திருந்தார்.

But for the fact that Mr. S. D. Somasundaram, M.P., had accidentally come to the office, no one in the party office would have been left behind, and all the important papers, typewriters, etc., would have been taken away.

இதுவரையிலே நம்முடைய வரலாற்றிலேயே இப்படி ஒரு நிலைமை இல்லை. ஒரு பார்ட்டியினுடைய ஹெட்குவார்ட்டர்ஸ், நியாயமான முறையிலே, நல்ல வகையிலே தன்னுடைய பணிகளைச் செய்து கொண்டிருக்கிற பார்ட்டியினுடைய ஹெட்குவார்ட்டர்ஸ்— அதனுள் இந்த அரசினுடைய, கருணாநிதியினுடைய போலீஸ் படை நுழைந்து அங்குள்ளவர்கள் மீது பொய் கேஸ் போட்டு, அதுவும் தெருவிலே பிடித்தோம் என்று பொய் கேஸ் போட்டிருக்கிறார்கள். எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமைக் கழக அலுவலகத்திலிருந்து போலீஸ் கமிஷனரிடம் தொலைபேசியில் பேசி இருக்கிறார்கள், அப்பொழுது போலீஸ் கமிஷனர் அவர்கள், அவர்களை பார்ட்டி ஆஃபீஸுக்குள்ளே பிடித்தோம் என்று சொன்னார். அப்படியிருக்க, இவர்களையெல்லாம் தெருவிலே பிடித்தோம் என்று உண்மைக்கு மாறாக கேஸ் போட்டிருக்கிறார்கள், பத்திரிகைக்குச் செய்தி கொடுத்தார்கள்.

என்னுடைய வாதமெல்லாம், இந்த 20 அம்சத் திட்டங்களின் நல்ல பலன்களைத் தமிழகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறதா என்றால் இல்லை. விலைவாசி குறைந்ததா என்றால் கிடையாது. மற்ற மாநிலங்களில் எல்லாம் விலைவாசி குறைந்திருக்கிறது. ஆனால், நம்முடைய மாநிலத்தில் அப்படி விலைவாசி குறைந்திருக்கிறதா என்றால் கிடையாது. அதற்குப் பல உதாரணங்களிருக்கின்றன. நான் புள்ளி விவரத்தோடு எடுத்துக் காட்டமுடியும். இருபது அம்சத் திட்டம் வந்ததற்கு முன்னாலிருந்த விலைவாசிகளைவிட, இப்பொழுது தமிழகத்தில் விலைவாசிகள் ஜாஸ்தியாக இருக்கின்றன.

There has been absolutely no dent made on the soaring prices of all essential commodities.



1975 அக்டோபர் 28] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

அதே நேரத்தில் இந்த எமர்ஜன்ஸி என்கிற ஒரு கருவியைத் தங்களுக்கு சாதகமாக இவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள், எந்தப் பேப்பரையும் சீல் செய்யலாம் என்று. அதற்காக ஒரு சட்டத்தை இவர்கள் புதிதாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். மத்திய அரசாங்கம் போட்டிருக்கக்கூடிய சென்சார் சட்டத்தைப் பொறுத்தவரையிலே, புதிதாகப் போடப்பட்டிருக்கிற சட்டம். ஆனால், இவர்கள் என்ன செய்கிறார்கள்? முதலமைச்சருடைய சாமார்த்தியம் இது. இங்குதான் அத்தனைபேரும் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். ஏற்கனவே 1971-இல் ஒரு சட்டமிருக்கிறது. கேள்வி நேரத்திலே அதைத்தான் கேட்டேன்.

எடுத்துக்காட்டாக, தென்னகம் நாளிதழிற்கு ஒரு தாக்கீது அரசிடமிருந்து வந்துள்ளது. அதை நான் படிக்கிறேன்.

Now, therefore, in exercise of the powers conferred by Rule 47 (1) of Defence of India and Internal Security Rules, 1971, the Government of Tamil Nadu hereby prohibit the sale and distribution of the said Tamil Daily 'Tennagam' dated 14th and 15th October 1975, or any extract thereof.

என்று தென்னகம் பத்திரிகை ஆசிரியர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, எம்.பி. அவர்களுக்கு, ஒரு உத்திரவு வந்திருக்கிறது. அந்த உத்தரவின் கீழ் சென்சார் செய்திருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கிறது—

Defence of India and Internal Security Rules, 1971.

1971 ஆம் ஆண்டு போட்ட சட்டத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தின்கீழ் இத்தனை ஆண்டுகளாக யாருடைய பத்திரிகையையும் பறிமுதல் செய்யவில்லை. இப்பொழுது ஒழுங்காக பத்திரிகை வரவில்லை எனில், பொதுமக்கள் என்ன நினைப்பார்கள்? It is an act of Central Government என்று நினைப்பார்கள். மத்திய அரசாங்கம்தான் செய்திருக்கிறது என்று நினைப்பார்கள்.

தங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் உடனடியாக அந்தப் பத்திரிகையைப் பறிமுதல் செய்கிற நிலையிருக்கிறது. அப்ஜக்ஷனபிள் மேட்டர் என்ன என்பதற்கு கைட்லைன்ஸ் கிடையாது. அந்த அடிப்படையிலே, நான் மிக்க வருத்தத்தோடு

சொல்கிறேன், செப்டம்பர் 1-ம் தேதி, அக்டோபர் 1-ம் தேதி, அக்டோபர் 15-ம் தேதி தென்னகம் பத்திரிகைகளும் அப்படியே பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. அவசரச் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யக் கூடாது என்று பிரதம அமைச்சர். எல்லா முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதி இருக்கிறார்கள். Let it not be abused. என்ற அளவுக்கு அத்தனை பேருக்கும் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

ஆனால், இங்கு நிலைமை இப்படியிருக்கிறது.

20-ந் தேதி தி.மு.க. செயற்குழு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அதைப்பற்றி மக்கள் குரல் பத்திரிகையிலே விமரிசனம் வந்திருக்கிறது. அதிலே அப்ஜக்ஷனபிள் மாட்டர்ஸ் என்ன? அவை அந்தப் பத்திரிகையிலே வந்திருக்கிறது இவர்களுக்குப் பிடிக்கவில்லை, ஜார்ஜ் பெர்னாண்டஸ் பற்றியும் வந்திருக்கிறது. அந்த மக்கள் குரல் பத்திரிகை பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. யாருமே தி.மு.க. அரசாங்கம் செய்ததைப் போல் செய்யவில்லை. 21—7—1975-ம் தேதியன்று மக்கள் குரல் பத்திரிகையிலே எம்.ஜி.ஆர்.-உடைய கரூர் பேச்சு வந்திருந்தது. அவர் அங்கு பேசும்பொழுது நானும் உடனிருந்தேன். அந்தப் பேச்சு முழுமையாகப் பத்திரிகையிலே வந்திருந்தது. அது உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டது என்று எனக்குத் தகவல் வந்தது. 6—8—1975-ம் தேதியன்று அமைச்சர் ஒருவரின் உறவினர் பங்களாவை வருமான வரி அதிகாரிகள் சோதனையிட்டார்கள் என்று வெளியிட்டதற்காக 'மக்கள் குரல்' மீண்டும் பறிமுதல் செய்யப்பட்டது. இத்தனை ஆண்டுகளாக, இப்படி அவசரச் சட்டம் வருவதற்கு முன்பு, செய்தி போட்ட நேரத்தில் பறிமுதல் செய்யவில்லை. இப்பொழுதுதான் இந்த ஆயுதத்தைப் பயன்படுத்து கிறார்கள்.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், இந்து பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது.

Upward trend in prices of rice in Madrsa 'Hindu', dated 23rd July 1975. என்று செய்தி வந்திருக்கிறது. இதைத் தமிழிலே மக்கள் குரல் என்கிற பத்திரிகை போட்டிருக்கிறது. உடனே போடக் கூடாது என்று உத்தரவு வருகிறது அது இந்து பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தி. அந்தச் செய்தியைத்தான் மக்கள் குரல் பத்திரிகை தமிழிலே போட்டிருக்





கிறது. அப்படி போட்டவுடனே நீங்கள் பிரிண்ட் செய்யக் கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இந்துவிலே வந்த செய்திதான் அது. மக்கள் குரல் பத்திரிகை ஆன்டி (Anti) கவர்ன்மென்ட்டாக இருக்கிறது என்பதற்காக அதைச் செய்திருக் கிறார்கள்.

அதே நேரத்தில், இந்தியா முழுவதும் அமைதி நிலவுவதாக உத்தரவு வந்திருக்கிறது என்று முரசொலியில் கார்ட்டூன் போட்டு மத்திய அரசாங்கத்தை கேலி செய்திருக்கிறார்கள். அந்தக் கார்ட்டூன் வந்திருக்கிறது, எல்லா பத்திரிகைகளிலும். ஆனால், இந்துவிலே போட்டிருக்கக்கூடிய செய்தியினுடைய தமிழ் மொழி பெயர்ப்பு தடுக்கப்பட்டிருக்கிறது.

பருவ மழை வந்திருக்கிறது என்று சொன்ன காலத்தில், பெரிய, பெரிய தலைவர்கள் எல்லாம் கண்ணீர் விட்டுக் கொண்டிருக் கிறார்கள் என்று சொல்லி, கார்ட்டூன் போட்டிருக்கிறார்கள். இந்த எல்லா கார்ட்டூன்களையும் நான் இங்கே காட்டுகிறேன். சொல்வது யார்? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, எதிரிகளாகக் கருதக்கூடியவர்கள், எதிர்க் கட்சி என்று கருதாமல், நேர் எதிரி என்று கருதக் கூடியவர்கள்: ஜனநாயகத்தைப்பற்றி கார்ட்டூன் போடுகிறார்கள்.

சர்வாதிகாரத்தை எப்படி நடத்துகிறார்கள் என்பதற்கு உதாரணம் சொன்னேன். சர்வாதிகாரி இந்திரா இட்லராக மாறி விட்டார் என்று கொட்டை எழுத்துக்களிலே வந்திருக்கிறது, அதற்கு சென்சார் கிடையாது. " (குறுக்கீடு) அரங்கண்ணல் பதில் சொல்லட்டும், முதலமைச்சர் பதில் சொல்லட்டும் என்ன சென்சார் இங்கே நடந்து கொண்டிருக்கிறதென்று சொல்வதற்கு இதை விட உங்களுக்கு வேறென்ன ஆதாரம் வேண்டும்?

கடைசியாக, இப்படியெல்லாம் செய்துவிட்டு, தங்களுக்குச் சாதகமாக இருக்க இன்னொன்றும் செய்கிறார்கள். ரொம்ப சாமர்த்தியமாகச் செய்கிறார்கள். ஒரு மாநாட்டிலே பேசிய பேச்சு சின்ன கட்டுரையாக எழுதப்பட்டு, பிரிண்ட் செய்யப்பட்டு, முரசொலி பத்திரிகையுடன் தனியாக இணைத்து கடைகளுக்கு அனுப்புகிறார்கள். முரசொலிக்கு சென்சார் வருகிறது என் றெல்லாம் சொல்கிறார்கள். என்னுடைய பத்திரிகைக்கே சென்சார் வருகிறது என்றெல்லாம் சொல்லக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர்

பத்திரிகை என்ன செய்கிறது? தன்னுடைய கருத்துக்களை, மத்திய அரசாங்கத்திற்கு எதிராக உள்ளதை இவ்வாறு தனியாகக் கட்டுரையாக பிரின்ட் செய்து கொடுக்கிறது. முரசொலியை வாங்குபவர்கள், அதையும் வாங்கிக் கொண்டு செல்கிறார்கள்.

எந்த அரசாங்கத்திற்காகவும் வாதாடத் தேவையில்லை, என்னைப் பொறுத்தவரையில். ஆனால், எப்படி ஒருவருக்கு ஒரு நியாயம், இன்னொருவருக்கு இன்னொரு நியாயம் என்ற வகையில் நடந்து கொள்கிறார்கள் என்பதைக் குறிக்கத்தான் இதைச் சொல்கிறேன். சென்சார்ஷிப் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதற்காக சொல்கிறேன். அந்த அளவுக்கு பழைய உத்தரவை வைத்துக் கொண்டு இந்த மாநிலத்திலே ஆளுங்கட்சிக்கு எதிராக இருக்கக் கூடியவர்களை அடக்கப் பயன்படுத்துகிறார்கள்.

இன்னொரு மாயையை ஆரம்பித்து இருக்கிறார்கள் —, இங்கே முதலமைச்சர் தெரிவிக்கிறார், இங்கு தேர்தல் வருமா? இந்திரா காந்தி தேர்தலைக் கொண்டு வருவார்களா என்று? தேர்தல் வரும் என்பது அவருக்குத் தெரியும். ஆனால் அவருடைய உள்நோக்கம் என்ன? தேர்தல் வராது, வராது என்கிற தவறான பிரச்சாரத்தை செய்து தன்னுடைய ராங்க் அண்ட் ஃபைலைக் கட்டிக்காக்க வேண்டுமென்பதுதான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நீங்கள் வரும், வரும் என்று சொல்வது உங்களுடைய ராங்க் அண்ட் ஃபைலைக் கட்டிக் காப்பதற்காகவா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அதுதான் உண்மை. ஏனென்றால், எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் மக்களை நம்பிக் கொண்டிருக்கிறோம். உங்களைப் போல் தேர்தலில் அவநம்பிக்கை கொண்டிருக்கவில்லை. மக்களுக்குச் சேவை செய்ய கட்சியைக் கருவியாக வைத்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் எங்களுடைய லட்சியம். ஆகவே, தங்களுடைய ராங்க் அண்ட் ஃபைலை ஸ்டெடி பண்ணுவதற்காக, தனக்குத் தெரிந்திருந்தாலும் கூட, தேர்தல் வராது, வராது என்ற மாயையை உண்டாக்கி. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, எல்லா முரசொலி பத்திரிகையையும் பார்த்திருக்கிறார், நேற்று, இன்று





முரசொலிப் பத்திரிகைகளை அவர் படிக்காதது்காக நான் வருத்தப் படுகிறேன். தேர்தல் வரும், ஆயத்தமாக இருப்போம் என்று பேசியிருக்கிறேன், வந்திருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அது for official consumption.

உங்களுடைய சாமர்த்தியத்தை எத்தனை நாளாக நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

This is only for official consumption—But a whispering campaign is being steadily conducted by our Hon. Chief Minister among his rank and file that there is not going to be election.

இப்படி ஒரு மாயையை உண்டாக்கி நீங்கள் செய்வது நியாயம் அல்ல. அதே நேரத்தில் நான் மீண்டும் சொல்கிறேன், அவசர சட்டம் என்ற ஒரு கருவியைப் பயன்படுத்திக் கொண்டு, நீங்கள் இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒடுக்க முடியும், அடக்க முடியும், பழி வாங்க முடியும் என்று நினைப்பீர்களானால் நிச்சயமாக நீங்கள் உங்களை ஏமாற்றிக்கொள்வீர்கள் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணியளவில் பேரவை மீண்டும் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணியளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

## (7) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

198. Notification issued in G.O. P. No. 823, Commercial Taxes and Religious Endowments, dated the 2nd July 1975 in regard to exemption from the tax payable under the Tamil Nadu General Sales Tax Act, 1959 by the Pallavan Transport Corporation Limited, on the sales of stores of the Tamil Nadu State Transport Department. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

### B. *Reports Notifications and Other Papers.*

**'Nil'.**

## இணைப்பு I.

[1-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக் குறியிட்ட வினு 86-க்குரிய விடையைக் காண்க.]

### தமிழ் நாடு அரசின் சமூக நலப் பாதுகாப்புத் திட்டம், 1974.

சமூக நலத்திட்டங்கள் பலவற்றை செயல்படுத்தும் நற் பணியில் தமிழக அரசு என்றுமே முன்னணியில் நிற்கிறது.

1974 ஜனவரி முதல் நாளில் தமிழ்நாடு குடும்ப நலத் திட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. அரசு ஊழியர்கள், உள்ளாட்சி மன்ற ஊழியர்கள், மானியம் பெறும் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் ஆகியோரின் குடும்பங்களின் பாதுகாப்புக்காக வரையப்பட்ட இத்திட்டம் மொத்தம் 6,5 இலட்சம் பேருக்கு நன்மை பயக்கின்றது. ஊழியர்களின் நலனைப் பாதுகாத்ததுடன் நின்றுவிட விரும்பாத தமிழக அரசு, பொது மக்களின் நன்மைக்காக, மற்றொரு திட்டத்தையும் தமிழக மக்களின் முன் வைக்கிறது. இதுதான் தமிழ்நாடு அரசின் 1974 ஆம் ஆண்டு சமூக நலப் பாதுகாப்புத் திட்டம்.

ஒருவர் வேலை செய்து சம்பாதிக்கும் காலத்தில், தொடர்ந்து, இடைவிடாமல் சிறு தொகை ஒன்றை செலுத்தி வந்தால் அவருக்கு பிற்காலத்தில் மாதாமாதம் கணிசமான ஓய்வூதியத் தொகை இத் திட்டத்தின்கீழ் கிடைக்கும். ஓய்வூதியத் தொகை முப்பது ஆண்டுகளுக்குக் கிடைத்து வரும். ஓய்வூதியக் கால அளவு முடிந்த பின் மொத்தத் தொகை ஒன்றும் இத்திட்டத்தின்கீழ் கிடைக்கும்.

இத்திட்டத்தில் சேர வயது வரம்பு கிடையாது; நுழைவு கட்டணம் இல்லை. சிறுவர் பெயரில் கூட கணக்குகளைத் தொடங் கலாம்.

நான்கு வகை சந்தாத் தொகைகள் இத்திட்டத்தின்கீழ் உண்டு. மாதம் ஒன்றுக்கு ரூ. 10, 20, 30, 60 செலுத்தலாம். ஏழு வகை சந்தாத் திட்டங்கள் உள்ளன; அவை பின்வருமாறு :—





| திட்டம்— | A | B | C |
|---|---|---|---|
| மாத சந்தாத் தொகை (ரூபாய்) | 10 | 10 | 10 |
| சந்தாக்கால அளவு ஆண்டுகள் | 10 | 15 | 20 |
| மாத ஓய்வூதியம் (ரூபாய்) | 20 | 35 | 60 |
| மொத்த ரொக்கத் தொகை (ரூபாய்) | 1,500 | 2,500 | 4,000 |

| திட்டம்— | D | E | F | G |
|---|---|---|---|---|
| மாத சந்தாத் தொகை (ரூபாய்) | 10 | 20 | 30 | 60 |
| சந்தாக்கால அளவு ஆண்டுகள் | 25 | 20 | 15 | 10 |
| மாத ஓய்வூதியம் (ரூபாய்) | 100 | 100 | 100 | 100 |
| மொத்த ரொக்கத் தொகை (ரூபாய்) | 5,500 | 8,000 | 8,000 | [illegible],500 |

ஒவ்வொரு வகைத் திட்டத்தின்கீழும், சந்தாதாரர், தாம் செலுத்தும் தொகையைப் போல் பன்மடங்குத் தொகை பெறுவார். இது எப்படி சாத்தியம் என்ற கேள்வி எழுகிறதா? உங்கள் பணத்தை முதலீடு செய்யும் பொறுப்பை அரசு ஏற்கிறது. அதற்குக் கிடைக்கும் வட்டியைப் பல்கிப் பெருக்கி, எந்த விதமான ஆதாயத்தையும் எதிர்பார்க்காமல், உங்களுக்குக் கொடுக்கும் பணியைச் சிரமேற்றுச் செயல்படுத்த முற்படுகிறது. இத் திட்டத்தின் நிர்வாகச் செலவுகளையும் அரசே ஏற்கின்றது.

உதாரணமாக 'ஏ' வகைத் திட்டத்தைப் பார்ப்போம்—

ஒருவர் 1975 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதற் கொண்டு 10 ஆண்டு காலத்திற்கு மாதந்தோறும் ரூ. 10 சந்தா செலுத்துகிறார் என்று வைத்துக்கொள்வோம்.

அவருக்கு 1985 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாள் முதற்கொண்டு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 ஓய்வூதியம் கிடைக்கும்.

முப்பதாண்டுக் காலத்துக்குள், அதாவது 2015 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாளுக்கு முன்பு அவர் இறக்க நேரிட்டால், அவரது நியமனதாரருக்கு இந்த ஓய்வூதியம் முதலில் குறிப்பிட்ட 30 ஆண்டுகளுக்கு அதாவது 1—1—2015 வரை தொடர்ந்து கொடுக்கப்படும்.

சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா.
தஞ்சாவூர் பர்மனென்ட் பாங்க் லிமிடெட்.
தமிழ்நாடு மர்கென்டைல் பாங்க் லிமிடெட்.
தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.
தேனு பாங்க்.
நெடுங்காடி பாங்க் லிமிடெட்.
நியுபாங்க் ஆப் இந்தியா லிமிடெட்.
பஞ்சாப் நேஷனல் பாங்க்.
பாரத் ஓவர்சீஸ் பாங்க் லிமிடெட்.
பாங்க் ஆப் இந்தியா.
பாங்க் ஆப் மஹாராஷ்டிரா.
மதுரை பாங்க் லிமிடெட்.
யுனைடெட் கமர்ஷியல் பாங்க்.
யூனியன் பாங்க் ஆப் இந்தியா.
லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிமிடெட்.
விஜயா பாங்க் லிமிடெட்.
வைஸ்யா பாங்க் லிமிடெட்.
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா.
ஸ்டேட் பாங்க் ஆப் பாட்டியாலா.
ஸ்டேட் பாங்க் ஆப் ஸௌராஷ்டிரா.
ஸ்டேட் பாங்க் ஆப் ஹைதராபாத்.
ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர்.



## இணைப்பு II.

[25-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக்குறியிட்ட வினா 97-க்கான விடையைக் காண்க.]

### விவர அறிக்கை I.

நியாய வாரம் கோரி செய்துள்ள மனுக்களின் விவரம்.

| | வரப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை. | | | | | முடிவு செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை. | | | | | பாக்கியுள்ள மனுக்களின் எண்ணிக்கை. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 |
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| நாங்குநேரி .. | 7 | 9 | 5 | 10 | 7 | 7 | 9 | 5 | 9 | 4 | .. | .. | .. | .. | 4 |
| கோவில்பட்டி .. | 5 | 6 | 4 | 8 | 9 | 3 | 5 | 7 | 7 | 10 | .. | .. | .. | .. | .. |
| செங்கோட்டை .. | 2 | 3 | 1 | .. | 11 | 2 | 3 | 1 | .. | 6 | .. | .. | .. | .. | 5 |
| திருநெல்வேலி .. | 14 | 5 | 2 | 53 | 46 | 12 | 5 | 2 | 3 | 10 | 2 | .. | .. | 50 | 36 |
| அம்பாசமுத்திரம் .. | 13 | 14 | 4 | 10 | 15 | 11 | 3 | .. | 7 | 1 | 2 | 11 | 4 | 3 | 14 |
| ஸ்ரீவைகுண்டம் .. | 1 | .. | .. | 7 | 3 | 1 | .. | .. | 7 | .. | .. | .. | .. | .. | .. |
| சங்கரன்கோவில் .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| திருச்செந்தூர் .. | 3 | .. | .. | .. | .. | 3 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| விளாத்திகுளம் .. | 2 | .. | .. | .. | .. | 2 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| தூத்துக்குடி .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| தென்காசி .. | 3 | 9 | 6 | 2 | 5 | 3 | 9 | 6 | 2 | 1 | .. | .. | .. | .. | 4 |
| மொத்தம் .. | 50 | 46 | 22 | 90 | 96 | 44 | 34 | 21 | 35 | 32 | 4 | 11 | 4 | 53 | 66 |

## விவர அறிக்கை II.

வாரம் தள்ளுபடி செய்யக் கோரி கொடுத்துள்ள மனுக்களின் விபரம்.

| | வரப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை | | | | | முடிவு செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை. | | | | | பாக்கியுள்ள மனுக்களின் எண்ணிக்கை. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 |
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| நாங்குநேரி .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| கோவில்பட்டி .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| செங்கோட்டை .. | 10 | 42 | 2 | .. | .. | 10 | 42 | 1 | .. | .. | .. | .. | 1 | .. | .. |
| திருநெல்வேலி .. | .. | .. | 2 | .. | .. | .. | .. | 2 | .. | .. | .. | .. | .. | .. | .. |
| அம்பாசமுத்திரம் .. | 16 | 5 | 3 | 37 | 4 | 15 | 1 | 1 | 34 | .. | 1 | 4 | 2 | 3 | 4 |
| ஸ்ரீவைகுண்டம் .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| சங்கரன்கோவில் .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| திருச்செந்தூர் .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| விளாத்திகுளம் .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| தூத்துக்குடி .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| தென்காசி .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 26 | 47 | 7 | 37 | 4 | 25 | 43 | 4 | 34 | .. | 1 | 4 | 3 | 3 | 4 |



## விவர அறிக்கை III.

மறு பரிசீலனைக்கு கொடுக்கப்பட்டுள்ள மனுக்களின் விவரம்.

| | வரப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை. | | | | | முடிவு செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை. | | | | | பாக்கியுள்ள மனுக்களின் எண்ணிக்கை. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 |
| நாங்குநேரி .. <br> கோவில்பட்டி .. | இல்லை. | | | | | | | | | | | | | | |
| செங்கோட்டை .. | .. | .. | 1 | 13 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 13 | .. |
| திருநெல்வேலி .. <br> அம்பாசமுத்திரம் .. <br> ஸ்ரீவைகுண்டம் .. <br> சங்கரன்கோயில் .. <br> திருச்செந்தூர் .. <br> விளாத்திகுளம் .. <br> தூத்துக்குடி .. <br> தென்காசி .. | இல்லை. | | | | | | | | | | | | | | |
| மொத்தம் .. | .. | .. | 1 | 13 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 13 | .. |

## இணைப்பு III

*[32-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக் குறியிட்ட வினா 101-க்கான விடையைக் காண்க.]*

(*a*) Yes.

(*b*) Investigations on the possibilities of growing apples on the Nilgiris were taken as early as 1920 when a Pomological Station was established at Coonoor. This was intended mainly for research on " Pome and Stone fruits " such as apple, pears, plums and peaches.

2. So far as apples are concerned, a large number of varieties were put under test as early as 1940 and introduction of newer varieties has been continued over years. Among the several varieties tested, only a few viz., "Rome Beauty", "Winterstein", "Winter Banana", "Irish Peach", Zouche's Pippin" and "Tropical Beauty" were found suited to the climatic conditions prevailing on the Nilgiris.

3. Superior apple varieties such as "Delicious", "Golden Delicious", etc., which are grown extensively in Himachal Pradesh did not perform well on the Nilgiris, since these varieties require colder temperatures (below 45° F) over a longer period than those obtaining on the Nilgiris. Therefore, commercial apple growing on the Nilgiris has necessarily to be restricted to a few varieties such as those mentioned which have been found suitable for the "Warm Winter" conditions of Nilgiris.

4. The Government took the second step of investigating the possibility of growing apples on the Kodaikanal hills. Under the joint auspices of the Indian Council of Agricultural Research and the State Department of Agriculture, an Apple Research Station was established at Kodaikanal in 1962 and the research work continued by the Tamil Nadu Agricultural University from June 1, 1971. From the point of view of climatic conditions, this area is also more or less similar to the Nilgiris and therefore this centre was intended primarily to select varieties for the "Warm Winter" conditions.

5. In all, 106 varieties of apple have been introduced both India and outside and are being studied at this Station and these have started bearing. From the studies conducted so





varieties "Parlin's Beauty" and "Kodaikanal-I" have been selected as suitable for cultivation in this area. Other varieties like "Irish Peach", "Zouche's Pippin", "Winter stein", "Winter Banana" and "Tropical Beauty" are also giving good performance.

6. From the propagational studies conducted, it has been found out that "Whip and tongue" grafting method was the best and suitable for propagating apples; and the optimum season for grafting has been found to be between November and February.

7. It has also been found that the spraying of Sandolin "A at 0.5 per cent and Gibberellic Acid at 500 ppm. during the first fortnight of February increases the yield of fruits by 30 per cent.

8. Experiments are in progress to find out suitable root stocks and optimum manurial practices for apple. The studies on packing and storage of apples are also being conducted. The trees under the rootstock and manurial trial are in the pre-bearing stage and the results will be obtained in the next 2 or 3 years.

9. Recently proposals for research and development of Hill Areas have been formulated by the Tamil Nadu Agricultural University for strengthening the Apple Research Station at Kodaikanal and setting up of a nursery for supply of plant material.

*(அ) ஆம்.*

*(இ) 1920-ஆம் ஆண்டிலேயே நீலகிரி மலைப்பகுதியில் ஆப்பிள் மரங்கள் வளர்ப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆய்வுகள் நடத்தப்பட்டன, அந்த ஆண்டில்தான் குன்னூரில் பழவியல் ஆய்வு நிலையம் ஒன்று நிறுவப்பட்டது. இந்த நிலையம் முக்கியமாக ஆப்பிள், வால்பேரி, பிளம்ஸ் பீச் முதலிய "ஆப்பிள் இனவகைப் பழங்களைப்"* Pome and Stone Fruits *பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்காக நிறுவப்பட்டது.*

*2. ஆப்பிள் பழங்களைப் பொறுத்தவரை 1940-ஆம் ஆண்டிலேயே ஏராளமான வகைகள் குறித்துச் சோதனைகள் செய்யப்பட்டன. பல்லாண்டுகளாக, ஆண்டுதோறும் புதிய வகைகள் பற்றியும் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சோதனை மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வகைகளிடையே, பின்வரும் சில வகைகள் மட்டுமே, தற்போது நீலகிரிப் பகுதியில் உள்ள தட்பவெப்ப நிலைக்குப் பொருத்தமானவையெனக் கண்டறியப்பட்டன.*

அவை "ரோம் பியூட்டி", "வின்டர் ஸ்டெயின்" "வின்டர் பனுை" "ஐரிஷ் பீச்", ஜோச்சஸ் பிப்பன்", "ட்ராப்பிகல் பியூட்டி" ஆகியன.

3. இமாசலப் பிரதேசத்தில் மிக விரிவான அளவில் வளர்க்கப் படுகின்ற உயர்ந்த ஆப்பிள் வகைகளான "டெலிசியஸ்", "கோல்டன் டெலிசியஸ் "போன்றவை நீலகிரிப் பகுதியில் நன்றாக வளரவில்லை. ஏனெனில், நீலகிரியில் உள்ள தட்பநிலைக்கால அளவைக்காட்டிலும், மிக அதிகமான கால அளவிற்கு மிக அதிகக் குளிர்நிலை (அதாவது 45 ஃபாரன்ஹீட்டுக்கும் கீழ் நிலை) மேற் சொன்ன உயர்ந்த வகை ஆப்பிள்களுக்குத் தேவைப்படுகின்றது. எனவே, நீலகிரியில் வாணிக அளவில் ஆப்பிள் வகைகளில் மிகச் சில வகைகளை மட்டுமே வளர்ப்பது என்னும் நிலை ஏற்பட் டுள்ளது. அந்த மிகச் சில வகைகள் எவையெனில் நீலகிரியில் காணப்படும் "மிதமான குளிர் நிலை" க்குப் (Warm Winter) பொருத்தமானவையெனக் கண்டறியப்பட்டு மேலே குறிப்பிட் டுள்ளவையாகும்.

4. கோடைக்கானல் குன்றுப்பகுதிகளில் ஆப்பிள் மரங்கள் வளர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்யும் அடுத்த நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மன்றம், மாநில வேளாண்மைத்துறை ஆகியவற்றின், ஆதரவில் 1962-ஆம் ஆண்டில் கோடைக்கானலில் ஆப்பிள் ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் நாளிலிருந்து அந்த ஆராய்ச்சிப்பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளது. தட்பவெப்பநிலையைப் பொறுத்த வரை, இந்தப்பகுதியும் ஏறத்தாழ நீலகிரிப் பகுதியைப் போன் றதே, எனவே, இந்த நிலையம் முக்கியமாக "மிதமான குளிர் நிலை "க்கு (Warm Winter) ஏற்றவகைகளைத் தேர்ந்தெடுப் பதற்குரிய சோதனைகள் நடத்துவதற்கென நிறுவப்பட்டுள்ள தாகும்.

5. மொத்தத்தில், இந்த நிலையத்தில். இந்தியாவிலிருந்தும் வெ[illegible] நாடுகளிலிருந்தும் 106 ஆப்பிள் வகைகள் கொண்டுவரப்ப[illegible] அவை ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன; அவற்றில் 37 வ[illegible] பலன் கொடுக்கத் தொடங்கிவிட்டன. இதுவரை நடத்த[illegible] ஆய்வுகளிலிருந்து "பார்லின்ஸ் பியூட்டி" "கோடைக்கா[illegible]





என்னும் வகைகள் இந்தப் பகுதிகளில் வளர்க்கப்படுவதற்கு, ஏற்றவை எனத்தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. "ஐரிஷ் பீச்", "ஜேச்சஸ் பிப்பின்", "வின்டர் ஸ்டெயின்", "வின்டாபனுை" "ட்ராபிகல் பியூட்டி" ஆகிய பிற வகைகளும் சிறப்பாகப் பலன் தருகின்றன.

6. ஆப்பிள் வளர்ப்பை பரப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து (Whip and tongue) என அழைக்கப்படும் ஒருவகை ஒட்டுமுறையே அதற்கு மிகச்சிறப்பாகப் பொருத்தமான தாகுமெனக் கண்டறியப்பட்டுள்ளது, ஆப்பிள் செடிகளை ஒட்டுச் செய்வதற்குப் பொருத்தமான பருவம் நவம்பர் முதல் பிப்ரவரி வரையிலான காலமே என்று கண்டறியப்பட்டுள்ளது.

7. பிப்ரவரித் திங்கள், முற்பாதியில் சாண்டோலின் 'A' (Sandolin 'A') 0.5 சதவீதமும் கிப்பெரல்லிக் அமிலம் (Gibberellic Acid) 500 பி.பி. எம்மும் தூளினால் ஆப்பிள் பழங்களின் விளைச்சல் 30 சதவீதம் உயர்கிறது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

8. ஆப்பிள் மரம் வளர்ப்பதற்குப் பொருத்தமான வேரடி மண் சத்துக்கள் (Root Stocks) அதற்கு இடவேண்டிய உரிய அளவு உரம், ஆகிய நடைமுறைகளைக் கண்டறியும் பொருட்டுச் சோதனைகள் நடைபெற்று வருகின்றன. ஆப்பிள்களைச் சிப்பம் செய்தல், சேமித்து வைத்தல் குறித்த ஆய்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. வேரடி மண் சத்து, உரமிடு நடைமுறை ஆகியவை குறித்து சோதனை செய்யப்பட்டுவரும் ஆப்பிள் மரங்கள் பலன் கொடுக்கத் தொடங்கும் தறுவாயில் உள்ளன, அடுத்த 2 அல்லது 3 ஆண்டுகளில் சோதனையின் முடிவுகள் கிடைக்கும்.

9. தமிழ்நாட்டில் மலைப்பகுதிகள் ஆராய்ச்சி-வளர்ச்சிக்கான செயற்குறிப்புகளை, அண்மையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தயாரித்துள்ளது. கோடைக்கானலில் உள்ள ஆப்பிள் ஆராய்ச்சி நிலையத்தை வலுப்படுத்தல், செடிகளை வழங்கு [illegible]தற்காகச் செடிப்பண்ணை ஒன்றை நிறுவுதல், கோடைக்கானலில் [illegible]ம் பக்குவப்படுத்தும் தொழிற்சாலையை நிறுவுதல், வளர்ச்சிப் [illegible]யை மேற்கொள்ளுதல் ஆகியவை அச்செயற்குறிப்புகளில் [illegible]யுள்ளன.

A

## இணைப்பு IV

[34-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக்குறியிட்ட வினா 103-க்கான விடையைக் காண்க]

The Small Farmers Development Agency Scheme is being implemented in selected blocks in the three districts as detailed below :—

*South Arcot district—*

1. Cuddalore Block
2. Nellikuppam Block
3. Thirunavalur Block
4. Ulundurpet Block
5. Sankarapuram Block
6. Rishivandium Block
7. Panruti Block
8. Thiruvennainallur Block
9. Thirukoilur Block
10. Mogaiyur Block
11. Nallur Block
12. Kalaiyanur Block
13. Kandamangalam Block
14. Kurinjipadi Block
15. Kanai Block
16. Vanur Block
17. Mailam Block
18. Virudhachalam Block
19. Mangalur Block

*Madurai District—*

1. Usilampatti Block
2. Batlakundu Block
3. Nilakottai Block
4. Andipatti Block
5. Theni Block



*Madurai district*—cont.

6. Periyakulam Block
7. Athur Block
8. Reddiarchatram Block
9. Dindigul Block
10. Vadamadurai Block
11. Shanarpatti Block
12. Natham Block
13. Palayam Block
14. Vadasandur Block
15. T. Kallupatti Block
16. Thirumangalam Block
17. Chellampatti Block
18. Kalligudi Block

*Tirunelveli district.—*

1. Alangulam
2. Villathikulam
3. Pudur
4. Pudukottai
5. Karungulam
6. Kayathar
7. Koilpatti
8. Ottapidaram
9. Nanguneri
10. Valliyur
11. Radhapuram
12. Thiruchendur
13. Manur
14. Sankarankoil
15. Melaneelithanallur.

The scheme is financed from the sources (viz) grants from the Government of India and loans from Co-operative Societies. The grant allocated by the Government of India for each of the Small Farmers Development Agency Project is Rs. 1.6 crores for a period of five years from 1971-72. The State Government provide field staff in the shape of Deputy Agricultural Officers and Demonstration Maistries and one Special Tahsildar for each project in addition to the skeleton staff sanctioned by the Government of India for each Agency. The Project Report prepared by the State Government with the modification suggested by the Government of India give the broad frame work for implementation. The Small Farmers Development Agency gives subsidies for various schemes for the benefit of small farmers and riskfund to the Co-operative institutions to stimulate the flow of credit through them to the participants.

The Government of India have also decided to take up composite Small Farmers Development Agency/Marginal Farmers and Agricultural Labourers Porgramme called SFDA during the Fifth Five-Year Plan. They have accordingly selected the following seven districts in Tamil Nadu for implementing new SFDA projects :—

1. Thanjavur
2. Tiruchirappalli
3. Coimbatore
4. Chingleput
5. Pudukottai
6. The Nilgiris
7. Kanyakumari

The project reports had been discussed by the officials Government of India and they have conveyed their formal subject to their remarks. The formal approval of the G of India for the project report is awaited.



கீழே கொடுத்துள்ள மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த தேர்ந்தெடுத்த வட்டாரங்களில் சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது :—

தென் ஆற்காடு மாவட்டம்.

| | |
|---|---|
| 1. கடலூர் | வட்டாரம் |
| 2. நெல்லிக்குப்பம் | ,, |
| 3. திருநாவலூர் | ,, |
| 4. உளுந்தூர்பேட்டை | ,, |
| 5. சங்கராபுரம் | ,, |
| 6. ரிஷீவந்தியம் | ,, |
| 7. பண்ருட்டி | ,, |
| 8. திருவெண்ணை நல்லார் | ,, |
| 9. திருக்கோயிலூர். | ,, |
| 10. மொகையூர் | ,, |
| 11. நல்லூர் | ,, |
| 12. கனாயனூர் | ,, |
| 13. கண்டமங்கலம் | ,, |
| 14. குறிஞ்சிப்பாடி | ,, |
| 15. கனை | ,, |
| 16. வானூர் | ,, |
| 17. மயிலம் | ,, |
| 18. விருத்தாசலம் | ,, |
| 19. மங்களூர் | ,, |

மதுரை மாவட்டம்.

| | |
|---|---|
| 1. உசிலம்பட்டி | வட்டாரம் |
| 2. வத்தலக்குண்டு | ,, |
| 3. நிலக்கோட்டை | ,, |
| 4. ஆண்டிப்பட்டி | ,, |
| 5. தேனீ | ,, |
| 6. பெரியகுளம் | ,, |
| 7. ஆத்தூர் | ,, |
| 8. ரெட்டியார் சத்திரம் | ,, |

மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.

| | வட்டாரம். |
|---|---|
| 9. திண்டுக்கல் | ” |
| 10. வடமதுரை | ” |
| 11. சாணர்பட்டி | ” |
| 12. நத்தம் | ” |
| 13. பாளையம் | ” |
| 14. வேடசந்தூர் | ” |
| 15. டி. கல்லுப்பட்டி | ” |
| 16. திருமங்கலம் | ” |
| 17. செல்லம்பட்டி | ” |
| 18. கள்ளிக்குடி | ” |

திருநெல்வேலி மாவட்டம்.

| | |
|---|---|
| 1. ஆலங்குளம் | வட்டாரம். |
| 2. விளாத்திகுளம் | ” |
| 3. புதூர் | ” |
| 4. புதுக்கோட்டை | ” |
| 5. கருங்குளம் | ” |
| 6. கயத்தாறு | ” |
| 7. கோவில்பட்டி | ” |
| 8. ஓட்டப்பிடாரம் | ” |
| 9. நாங்குநேரி | ” |
| 10. வள்ளியூர் | ” |
| 11. ராதாபுரம் | ” |
| 12. திருச்செந்தூர் | ” |
| 13. மானூர் | ” |
| 14. சங்கரன்கோவில் | ” |
| 15. மேலநீலிதநல்லூர் | ” |



இந்திய அரசு வழங்கும் மானியங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் கடன்கள் ஆகியவற்றின்மூலம் இத்திட்டத்திற்கு நிதி அளிக்கப்படுகிறது. 1971-72 லிருந்து ஐந்தாண்டுக்கால அளவுக்கு இந்த சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனத்திட்டம் ஒவ்வொன்றுக்கும் மத்திய அரசு ரூ. 1.6 கோடி மானியம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிறுவனம் ஒவ்வொன்றுக்கும் இந்திய அரசு அனுமதித்துள்ள இன்றியமையாப் பணியாளர்கள் தவிர, ஒவ்வொரு திட்டத்திற்கும், மாநில அரசு, துணை வேளாண்மை அதிகாரிகள், கட்புல விளக்க மேஸ்திரிகள், சிறப்புத் தாசில்தார் ஆகிய களப்பணியாளர்களை வழங்குகிறது. திட்ட அறிக்கையை மாநில அரசு தயாரித்துள்ளது. இதற்கு இந்திய அரசு சில மாற்றங்களைத் தெரிவித்துள்ளது. அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவம் இதனைச் செயற்படுத்துவதற்கு அடிப்படைத் திட்டமாக விளங்கும். சிறு உழவர் மேம்பாட்டு நிறுவனம், தனது அலுவலகப் பேணுதல் செலவு தவிர, சிறு உழவர்கள் நலனுக்கான பல்வேறு திட்டங்களுக்கு உதவித்தொகைகள் வழங்குகிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு, அவற்றின் மூலமாக, இத்திட்டத்தில் பங்கு கொள்ளும் உழவர்கட்கு கடன்கள் வழங்கப்படும் அளவு அதிகரிக்கத் தூண்டும் பொருட்டு அவற்றுக்கு சேதாரச் சேமநிதி அளிக்கிறது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறு உழவர் மேம்பாட்டு நிறுவனம் என்றழைக்கப்படுகிற ஒருங்கிணைந்த சிறு உழவர் மேம்பாட்டு நிறுவனம் ஆதாயம் குறைந்த சிறு உழவர்—உழவுத் தொழிலாளர் மேம்பாட்டு நிறுவனத் திட்டத்தையும் மேற்கொள்ள இந்திய அரசு கருதியுள்ளது. அதற்கிணங்க, தமிழ்நாட்டில், புதிய சிறு உழவர் மேம்பாட்டு நிறுவனத் திட்டங்களை மேற்கொள்ள இந்திய அரசு கீழ்க்காணும் 7 மாவட்டங்களை தெரிந்தெடுத்துள்ளது :—

1. தஞ்சாவூர்.
2. திருச்சிராப்பள்ளி.
3. கோயம்புத்தூர்.
4. செங்கற்பட்டு.
5. புதுக்கோட்டை.

6. நீலகிரி.

7. கன்னியாகுமரி;

இதற்கான திட்ட அறிக்கைகள் குறித்து மைய அரசு அலுவலர்களுடன் கலந்து பேசியதில் அவர்கள் தங்களது சில குறிப்புரைக் குட்பட்டு வாய்மொழி ஒப்புதல் அளித்துள்ளார். திட்ட அறிக்கைகட்கு அவர்களது அதிகார பூர்வமான ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகிறது.

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

---

### புதன்கிழமை, 1975 அக்டோபர் 29.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்:

*Police Training College, Vellore.*

*106 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Chief Minister with reference to Question No. 451, answered on 16-3-1974 be pleased to state the present stage of the proposal to shift the Police Training College from Vellore?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வேலூரிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான செயற்குறிப்பை அரசு ஆய்வு செய்து, அச்செயற்குறிப்பை தற்காலிகமாக ஒத்திப்போட வேண்டுமென முடிவு செய்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, ஆரம்ப காலந்தொட்டு வேலூரில் இந்தப் போலீஸ் ட்ரெயினிங் காலேஜ் இருந்து வருகிறது. கட்டடம் மட்டுந்தான் பழையதாக இருக்கிறது. திருட்டுக் குற்றங்களை இன்வெஸ்டிகேட் செய்வதில் ஸ்காட்லாண்டு யார்டில் கையாளுவதைப் போன்று கையாளும் முறைகளைக் கற்பிக்கும் வகையில் ஒரு போலீஸ் ட்ரெயினிங் காலேஜ் அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா? 'தெப்ட்' குற்றங்களைக் கண்டுபிடிக்க ஸ்பெஷல் ட்ரெயினிங் வேண்டும் என்று சொல்லப்படுவதால் அந்த அடிப்படையில் பெரும் சென்னைக்கு அருகில் கட்டப் போகும் போலீஸ் ட்ரெயினிங் காலேஜில் அம்மாதிரி அமைப்பை ஏற்படுத்த சர்க்கார் யோசிக்குமா?

A

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்போதே அவர்களுக்கு உறுப்பினர் சொன்ன பயிற்சிகள் அனைத்தும் தரப்படுகின்றன. அவற்றை நவீன முறைகளில் ஆக்குவதற்கேற்ற முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, தற்காலிகமாக அது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வடார்க்காடு மாவட்டத்தில்—வேலூரில் பல ஆண்டுகளாக அப்படிப்பட்ட பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும், நாய்களுக்குப் பயிற்சி கொடுக்கும் நிலையமும் வேண்டும் என்று பல அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள். வேலூரில் உள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரியை அங்கிருந்து மாற்றாமல் நிரந்தரமாக அங்கேயே அதை நீடிக்கச் செய்வதோடு, எல்லாவித பயிற்சிகளையும் அங்கு அளித்து, நாய்களுக்கும் பயிற்சி தரக்கூடிய பிரிவையும் அங்கேயே உருவாக்குவதற்கு நம்முடைய அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நமக்கு போலீஸ் பயிற்சி நல்ல முறையில் இருக்க வேண்டுமா இல்லையா என்பது தான் பிரச்சனை. அது வேலூரில்தான் இருக்க வேண்டுமா என்பது அடுத்த கட்டம். வேலூரில் இருக்கிற வசதிக் குறைவு காரணமாகத்தான் அலமாதியில் இந்தக் காவலர் பயிற்சிக் கல்லூரி நிறுவப்பட வேண்டுமென்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. அந்த முடிவு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதே தவிர வேறு அல்ல. நிதி நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அலமாதியில் அணி வகுப்புக்கான திடல், விளையாட்டுத் திடல் பரந்த அளவில் அங்கே இருக்கின்றன. அதுமாத்திரமல்லாமல், போலீசாருக்கு நீச்சல் குளம் போன்றவை அங்கே இருக்கின்றன. பெரிய கட்டடங்கள் அலமாதியில் இருக்கின்றன. இந்திய அரசு பாதுகாப்புத் துறை நிறுவனங்கள் பல அங்கே இருக்கின்றன. அதோடு, பயிற்சி நிலையம் இருப்பது பொருத்தமாக இருக்கும்; வசதியாக இருக்கும். வேறு மாநிலங்களிலிருந்து வருகிற இராணுவ அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், வேறு நாடுகளிலிருந்து வருகிற காவல் துறை அதிகாரிகள், நிபுணர்கள் சென்னைக்கு அருகாமையில் 20 மைல் தொலைவில் இருக்கும் அலமாதி



சென்று வருவதற்கும், பயிற்சி அளிப்பதற்கும் சுலபமாக இருக்கும் என்பதற்காக இதை அலமாதியில் மாற்ற அரசு உத்தேசித்திருக்கிறது.

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, அலமாதியில் பல்வேறு வசதிகள் இருப்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், எனக்குக் கிடைத்த தகவலின்படி, அலமாதியில் இனிமேல் நிலம் வாங்கி செய்யப்போவதாகச் சொல்கிறார்கள். எது எப்படியிருந்தாலும், இந்தப் பயிற்சிப் பள்ளியை விஸ்தரிப்பதற்கேற்ற நிலம், இட வசதி, வேலூரிலும் அதை அடுத்த வெளிப்புறத்திலும் இருக்கிறது. 300, 400 ஏக்கரா நிலம் என்னுடைய தொகுதியில் தர நான் தயாராக இருக்கிறேன். வடார்க்காடு மாவட்டத்திலேயே அந்த நிலையத்தை வைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வேலூரில் நிறைய வசதி இருக்கலாம். திரு. துரைமுருகனும் வசதி செய்து கொடுக்கலாம். ஆனால், வேலூர் சென்னைக்கு என்பது மைல் தூரத்தில் இருக்கிறது. அலமாதி 20 மைல் தூரத்தில் இருக்கிறது. அதை துரைமுருகன் முயன்றால்கூட மாற்ற முடியாது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** வேலூரில் இருக்கும் காவலர் பயிற்சி நிலையத்தை அங்கேயே வைத்துவிட்டு, அலமாதியில் புதிதாக ஒன்று துவக்கலாமே, இதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இது பயிற்சிக் கல்லூரியாக இருப்பதால் வேலூரில் ஒன்றும், அலமாதியில் ஒன்றும் துவக்க முடியாது. அதை மாற்றி அலமாதியில் துவக்கலாம் என்று உத்தேசித்திருக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** வேலூரில் இந்தப் பயிற்சிக் கல்லூரி பல்லாண்டுக் காலமாக இருக்கிறது. ஆகவே, இப்பொழுது வேலூரில் உள்ள பழைய கட்டடத்தை [illegible]ருப்பித்தும், அதையொட்டிய இடங்களில் புதிய கட்டடங்களைக்
பெறும் [illegible]யும் ஏற்கெனவே மற்ற இடங்களில் கொடுத்திருக்கக்கூடிய [illegible]ளை உடனடியாக அங்கு செய்ய முடியுமா?

[1975 அக்டோபர் 29

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்பொழுது வேலூரில் இருக்கும் கட்டடங்களைப் புதுப்பிப்பதைவிட அலமாதியில் இருக்கும் வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதுதான் நல்லது என்று அரசு உணர்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை மாற்றுவதற்கு இயலாது.

### அச்சிறுபாக்கத்தில் பின்தங்கிய மாணவர் விடுதி

*107 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், அச்சிறுபாக்கத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** செங்கற்பட்டு மாவட்டத்தில் அச்சிறுபாக்கத்தில் பின்தங்கிய மாணவர்கள் விடுதி ஒன்று அமைக்க அரசு 9—6—1975 அன்று உத்தரவு பிறப்பித்து, 20—8—1975 முதல் அது செயல்பட்டு வருகிறது.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, இப்பொழுது அங்கு அரசு, அரிசன நலத் துறையின் மூலம் மூன்றரை இலட்ச ரூபாய் செலவில் அரிசன மாணவர் விடுதி ஒன்று கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளது. அதில் ஏறத்தாழ 200 மாணவர்கள் தங்கிப் பயில வசதி இருக்கிறது. அதிலேயே பின்தங்கிய மாணவர்களும் கணிசமான எண்ணிக்கையில் தங்கிப் பயில் வசதி இருக்கிறது. ஆகவே, விடுதி இல்லாத எலப்பாக்கம், உலத்தி போன்ற பகுதிகளில் பின்தங்கியோர் மாணவர் விடுதியை அமைக்க அரசு உதவி புரியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஏற்கெனவே அச்சிறுபாக்கத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கான விடுதி அமைப்பது என்று அரசு ஆணையிட்டு செயல்படுத்தப்பட்டுவிட்ட காரணத்தால் அதை மாற்ற முடியாது. உலத்தி, எலப்பாக்கம் போன்ற இடங்களில் தேவைப்பட்டால் பின்தங்கிய மாணவர் விடுதி வேறு அமைப்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கலாம்.



1975 அக்டோபர் 29]

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, மதுராந்தகம் வட்டத்தில் 30 உயர்நிலைப்பள்ளிகளுக்கு மேல் இருக்கின்றன. ஆனால், தாலுக்கா தலைநகரமாகிய மதுராந்தகத்தில் பின்தங்கிய மாணவர் விடுதி இல்லை. அதை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தேவைகளை உணர்ந்து இப்படிப்பட்ட விடுதிகள் அமைக்கக்கூடிய அடிப்படைகள் அமையுமானால், அரசு அவைகளைப் பரிசீலிக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** நம்முடைய அரசாங்கம் அரிசனங்களுக்குரிய வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் முப்பதாயிரம் வீடுகளுக்கு மேல் கட்டிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட கழகத்தின் மூலமாகவே, அரிசன மாணவர்களுக்கும் பின்தங்கிய மாணவர்களுக்கும் ஆங்காங்கு வேண்டிய ஹாஸ்டல் வசதி செய்துகொடுக்க நம்முடைய அரசு ஏதாவது முயற்சி செய்திருக்கிறதா? அப்படியானால் எந்த எந்த இடங்களில் என்பதை அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் வீடு கட்டுவது மாத்திரமல்லாமல், 143 அரிசன மாணவர் விடுதிகள் கட்ட வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. தற்போது 98 இடங்களில் அந்த வேலைகள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**திரு. அ. ஆறுமுகம்:** சில இடங்களில் வாடகைக் கட்டடத்தில் மாணவர் விடுதிகள் இருக்கின்றன. அவை மிகவும் பாழடைந்து சில இடங்களில் இருக்கின்றன. அப்படிப்பட்டவற்றில் உடனடியாகக் கவனம் செலுத்தி, புதிதாக அங்கே மாணவர் விடுதிகளைக் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 249 இல்லங்களும், அரிசன மாணவர்களுக்கு 566 இல்லங்களும், பழங்குடி மாணவர்களுக்கு 15 இல்லங்களும், ஆக 830 இல்லங்கள் இருக்கின்றன. இந்த 830 இல்லங்களுக்கும் உடனடியாக கட்டடங்கள் அமைப்பது இயலாத காரியம். இப்பொழுதுதான் கட்டடம் அமைக்க நாம் பெரும் [illegible]டங்கி, 20 சதவீதத்திற்கு மேல் கட்டடங்களை நாம் கட்டி A [illegible]றோம். மீதி 80 சதவீத இடங்கள் வாடகை இடத்தில்

இருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் கட்டடம் கட்டி மாற்றும் முயற்சியை, நம்முடைய நிதிநிலைமைக்கேற்ப, படிப்படியாக அரசு மேற்கொள்ளும்.

### மாநிலக் கல்லூரியில் மாலைநேர வகுப்புகள்

*108 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975–76 முதல் சென்னை மாநிலக் கல்லூரியில் எந்தெந்த பட்ட மேற்படிப்பு பாடங்களில் மாலைநேர வகுப்புகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, செயற்குறிப்பு எதுவும் இல்லை.

### கும்பகோணம் கலைக் கல்லூரி

*109 வினா—திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரியில் 1975–76 ஆம் ஆண்டு முதல் Chemistry M. Sc., வகுப்புகள் துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

திரு. செ. அரங்கநாயகம்: எம்.எஸ்ஸி. வகுப்பு தொடங்குவதற்கு கட்டடங்களெல்லாம் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் ஏன் மேல் பட்டப்படிப்பைத் தொடங்க அரசு தயங்குகிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மேல் பட்டப்படிப்பைக் கொண்டுவரும் தன்மையில் அது எந்தெந்தத் துறைக்குத் தேவையோ அந்தத் துறையை எந்தெந்த இடங்களில் அதற்கான வசதி வாய்ப்புகள் செய் முடியுமோ அந்த அளவுக்குதான் செய்ய முன்வா இய இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் ஐந்து இடங்களி



மேல் பட்டப் படிப்பு துவங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த வகையில், எம்.ஏ. (எக்கனாமிக்ஸ்), எம்.ஏ. (ஹிஸ்டரி), எம்.காம். வகுப்புகள் ஐந்து கல்லூரிகளில்தான் தொடங்க வசதி வாய்ப்புகள் செய்யப்பட்டன. எம்.எஸ்ஸி. (கெமிஸ்ட்ரி) போன்றவற்றுக்கு விரிவான வகையில் ஆய்வுக்கூட வசதிகள் செய்யப்படவேண்டும். கும்பகோணத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள சூழ்நிலையை ஆராய வேண்டும். பொதுவாக கெமிஸ்ட்ரி, பிசிக்ஸ், போன்றவற்றுக்கு போதுமான அளவுக்கு ஆங்காங்கு இடங்கள் இருப்பதைப் பொறுத்தும், பெரும் செலவு ஆகும் என்ற காரணத்தை வைத்தும், தேவையை ஒட்டித்தான் முடிவு செய்யவேண்டியிருக்கும். இந்த ஆண்டு ஐந்து கல்லூரிகளுக்குதான் அனுமதி அளிக்கப்பட்டது.

**திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, எம்.எஸ்ஸி. (கெமிஸ்ட்ரி) அங்கே ஆரம்பிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டு முடிக்கப்பட்ட நிலையில் அந்தத் திட்டம் ஏன் தள்ளிவைக்கப் பட்டது என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 1975-76-ஆம் ஆண்டு முதல் கெமிஸ்டரி எம்.எஸ்ஸி. வகுப்புகள் துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்பதுதான் கேள்வி. அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை என்று நான் விடையளித்திருக்கிறேன்.

### இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள்

*110 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாம் நிலை தமிழாசிரியர்களை முதல்நிலை தமிழாசிரியர்களாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், இந்தத் திட்டத்தின் மூலம் ஆதாயம் பெறும் ஆசிரியர்கள் எவ்வளவு பேர்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இச் செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு முதல்நிலை தமிழாசிரியருக்குரிய தகுதிகள் அனைத்தும் இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் பெற்றுவிட்டால் அவர்கள் அத்தகுதி பெற்ற நாள் முதலும், முதல்நிலை தமிழாசிரியருக்குரிய தகுதிகள் அனைத்தும் பெருத இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் அவரவர்கள் அவரவர் பெற்றிருக்கும் தகுதிகளுக்கேற்ப 10 ஆண்டு பணிக் காலம் 15 ஆண்டு பணிக் காலம் ஆகியவற்றின் அடிப்படையிலும், முதல்நிலை தமிழாசிரியர்களாக, 1—1—1974 நாள் முதலும் அதற்குப்பின்னும் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

(இ) இத்தகைய பதவி உயர்வு இனி வரும் ஆண்டுகள் தோறும் நடைபெற வாய்ப்பிருந்தால், இத் திட்டத்தின் மூலம் ஆதாயம் பெறும் இரண்டாம் நிலை தமிழாசிரியர்களின் சரியான எண்ணிக்கையை இத்தருணத்தில் அளிக்க இயலாது.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, முதல்நிலை பெற்ற தமிழாசிரியர்கள் நம்முடைய அரசு தருகின்ற சலுகைகளை வரவேற்கிறார்கள், நன்றி தெரிவிக்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே பெரும்பாலான பள்ளிகளிலே தமிழாசிரியர்கள் தலைமையாசிரியர்களாக நியமிக்கப்படுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அவர்கள் தலைமையாசிரியர்களாக ஆவதற்குச் சில தகுதிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தகுதிகளைப் பெறுகின்ற சூழ்நிலையில் அவர்கள் தலைமையாசிரியர்களாக ஆகலாம். அதற்காக வழிமுறைகள் வகுக்கக்கூடிய முறையிலே சென்னைப் பல்கலைக் கழகம் பேச்சலர் இன் லிட்டரேச்சர் என்ற பட்டப் படிப்பைத் துவங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகவே அதற்கான வழிவகைகள் செய்யப்படுகின்றன.

**திரு. எம். ஏ. லத்தீப்:** இரண்டாம் நிலை தமிழாசிரியர்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கின்ற சலுகைகள்போல் ஏனைய சிறுபான்மை மொழியிலே இரண்டாம் நிலை பண்டிதர்களாக இருப்பவர்களும் அத்தகைய சலுகைகளைப் பெறக்கூடிய முறையில் திட்டம் இருக்கிறதா? அப்படியென்றால் அதனுடைய விவரம் என்ன?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதே அடிப்படையிலே மொழி ஆசிரியர்களைப் பொறுத்த அளவில் மற்றவர்களுக்கும் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள் இவர்களுக்கும் அளிக்கப்படுகின்றன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தமிழ் ஆசிரியர்களை முதல் நிலை என்றும் இரண்டாம் நிலை என்றும் பிரிப்பதற்கு என்ன காரணம்? இரு வகையினருக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** முதல்நிலை தமிழாசிரியர்கள் புலவர் அல்லது வித்துவான் தகுதி பெற்றவர்கள், இடை நிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள், குறைந்த பட்ச பொதுத் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. பள்ளியிறுதி வகுப்பு இருக்கவேண்டும்.

ஒருசில பேர்கள் நான்காவது, ஐந்தாவது வகுப்பு படித்திருப்பார்கள் அல்லது பர்ஸ்ட் பார்ம் படித்திருப்பார்கள். அதோடு வித்துவான் அல்லது புலவர் படித்து இருப்பார்கள். இப்படி வருகிறவர்கள் இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

இவர்களையும் முதல்நிலை ஆசிரியர்களாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கை இருந்தது. பி.டி. ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் முதல்நிலை தமிழாசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. முதல் நிலை தமிழாசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்து அதற்குப் பிறகு நான்காண்டுகள் பி.ஏ. படித்து அதற்குப் பிறகு பி.டி. படிக்கிற ஆசிரியர்கள் போல் தாங்களும் பத்தாவது வரை படித்து அதற்குப் பிறகு தமிழாசிரியர் பயிற்சி நான்காண்டுகாலம் படிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, படிப்பாண்டுக் காலம் இருவருக்கும் ஒன்றாகவே இருக்கிறது. ஆகவே அவர்களையும் தலைமையாசிரியர்களாகப் போட வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களுக்கு அந்தச் சலுகை தரப்பட்டது.

[1975 அக்டோபர் 29

இப்போது இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களும் அதைப் போல் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். இரண்டாம் நிலை ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று 10 ஆண்டுக் காலம் பணியாற்றியிருந்தால் அவர்கள் முதல் நிலை ஆசிரியர்களாகக் கருதப்படுவார்கள் என்றும், பொதுக் கல்வித் தகுதியில்லாமல் இடைநிலை ஆசிரியர்கள் தகுதிபெருமல் இருக்கிறவர்கள் 15 ஆண்டுக்காலம் பணியாற்றியிருந்தால் அவர்கள் முதல்நிலை ஆசிரியர்களாக ஆகலாம் என்றும் அனுமதித்திருக்கிருேம். கொஞ்ச காலத்தில் இப்போது இருக்கிறவர்கள் எல்லாம் முதல் நிலை ஆசிரியர்களாக எடுத்துக்கொள்ளப்பட்டுவிடுவார்கள். இப்போது புதிதாக வருகிறவர்களையும் முதல்நிலை ஆசிரியர்களாகவே நியமிக்கப்படுகின்ற அளவிற்கு இருக்கிறது. ஆகவே வருங் காலத்தில் இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்கள் பதவிகள் இல்லாமல் போகும் என்ற அளவிற்குத்தான் இப்போது வழிவகைகள் செய்யப்படுகின்றன.

### சங்ககிரி அரசு மருத்துவ மனை

*111 வினு—திரு. வ. முத்து : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி நகரத்தில் அரசு மருத்துவமனை ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) ஏற்கனவே எட்டு படுக்கை வசதி கொண்ட அரசு மருத்துவமனை ஒன்று சங்ககிரியில் செயல்பட்டு வருகிறது. கேள்வியோடு தொடர்பான கருத்தாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 8—3—1975 அன்று 24 படுக்கை வசதிகள் கொண்ட வார்டு ஒன்று கட்டுவதற்கு ரூ. 1 லட்சத்து 60 ஆயிரம் அனுமதிக்கப்பட்டு அதற்கான செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. வ. முத்து : தலைவர் அவர்களே, உத்தரவு பிறப்பித்தும் கூட இன்னும் கட்டடம் கட்டாத நிலையில் உள்ளதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.



1975 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்போது பொதுப் பணித்துறைக்கு அனுப்பப்பட்டு இருக்கும். அவர்கள் டெண்டர் முதலானவைகளைக் கேட்டு கட்டச் செய்வார்கள்.

### *Special allowances for Doctors.*

*112 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether any extra allowances are paid to the doctors who conduct post-mortem cases; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: கிராமப் பகுதிகளிலே கொலை போன்று ஏதாவது ஏற்பட்டுவிட்டால் போஸ்ட்மார்ட்டம் செய்வதற்கு உடனடியாக டாக்டர் இல்லாத நிலையில் அவர்கள் லீவ் போட்டுவிடுகிருர்கள். ஆகவே, தாலுகா ஹெட்க்வார்ட்டர்ஸ் மருத்துவமனைக்கு 10, 12 மைல்கள் கடந்து கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. அதற்காக தனியாக ஸ்பெஷல் அலவன்ஸ் என்று கொடுத்தால் அவர்கள் இருப்பார்கள். ஆகவே, அதை கிராமத்திலேயே செய்யக்கூடிய முயற்சியை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, போஸ்ட் மார்ட்டம் செய்வது என்பது அது சம்பந்தமாக பின்னுலே வழக்கு ஏதாவது வருமானுல் அந்த வழக்கிலே தக்க சான்றுகள் அவர்கள் முறைப்படி கொடுப்பதற்காக கடமைப் பட்டு இருக்கக்கூடிய காரியமாகும். மருத்துவத் துறையிலே இருக்கிற யாராக இருந்தாலும் அன்ருடம் அவர்கள் செய்கின்ற கடமைகளிலே இதுவும் ஒன்ருகச் செய்யப்படக்கூடிய முறையில் இருக்கவேண்டும். ஆகவே, அலவன்ஸ் கொடுப்பது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. கிராமத்திலே உள்ள டாக்டர்கள் தனித்தனியாக போஸ்ட் மார்ட்டம் செய்வது என்று வைத்தால் சட்டப் பிரச்னை, சிக்கல்கள் எல்லாம் உண்டாகும். ஆகவே, தாலுகா மருத்துவமனை அளவில் இது ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. அங்கே போஸ்ட் மார்ட்டம் செய்வதுதான் பொருத்தமானதாகும்.

[1975 அக்டோபர் 29

திரு. இராம. அரங்கண்ணல்: சென்னை மாநகரத்திலே போஸ்ட் மார்ட்டம் செய்கிற கேஸ்களை ஒரு நாள் கழித்து செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இதனால் இறந்துபோனவர்களுடைய பிரேதங்களைப் பெறுவதிலே ஏழை மக்கள் மிகவும் கஷ்டப்படு கிறார்கள். ஆகவே, எப்படியும் அன்றைய தினம் மாலை 6 மணிக் குள்ளாக கொடுத்துவிடவேண்டுமென்று உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இறந்துபோகிறவர்கள் காலை 10 மணிக்குள் இறந்துபோவதாக ஒப்பந்தம் செய்துகொடுப் பார்களானால் மாலை 6 மணிக்குள் அவர்களுடைய பிரேதங்களைக் கொடுக்கலாம். ஆனால், இறந்துபோனவர்கள் மாலை 4 மணிக்கு இறந்துவிட்டால் மாலை 6 மணிக்குள்ளாகவே கொடுக்கக்கூடிய— காலையிலே பணியாற்றிய டாக்டர்கள் மாலையிலும் பணியாற்றக் கூடிய நிலைமை இல்லை—வசதி இல்லை. ஒரே மருத்துவ மனையிலே செய்வதற்குப் பதிலாக ஸ்டான்லி மருத்துவமனையிலேயும், மற்ற மருத்துவமனைகளிலேயும் செய்ய வேண்டுமென்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. அது நடைமுறைக்கு வருவதுபற்றி நான் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறேன்.

## கிராம மருத்துவமனை மருத்துவர்கள் முறையீடு

* 113 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கிராம மருத்துவமனை மருத்துவர்கள் சங்கத்தின் சார்பில் 4—4—1974 அன்று கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர் களுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையின் பலனாக அண்மையிலே கிராம மருத்துவர்களுடைய ஊதியத்தை மானியமாக வழங்குகிற முறையிலே உயர்த்தி வழங்கப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே



அளித்து வந்த தொகை எவ்வளவோ அதில் 50 சதவிகிதம் இப்போது அதிகமாக அளிக்கப்படுகிறது. பி.ஐ.எம். முதலான டாக்டர்களுக்கு ஏற்கனவே 150 ரூபாய் அரசும், 75 ரூபாய் தனிப்பட்ட ஒன்றியமும் கொடுத்துவந்தது. இப்போது 200-ம், 100-ம் ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. எல்.ஐ.எம். டாக்டர்களுக்கு மொத்தம் 100 ம், 50-ம் ஆக வழங்கப் பட்டது. இப்போது 150-ம், 75-ம் ஆக வழங்கப்பட்டு இருக்கிறது. 7—10—1975-இல் மகப்பேறு உதவியாளர்களுக்கு 105-ம், 52½-ம் ஆக இப்போது உயர்த்தப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் இயக்குநர் மூலமாக ஒன்றியத்தின் ஆணையர்களுக்குத் தெரிவித்து அவர்கள் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக் கிறது.

## கிராமப்புறங்களில் சித்தவைத்திய நிலையங்கள்

* 114 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி மன்றங்கள் கிராமப்புறங்களில் சித்த வைத்திய நிலையங்களை நடத்திட அரசு வலியுறுத்தியுள்ளதா?

(இ) ஆமெனில், அரசு ஏதேனும் உதவி அளித்து வருகின்றதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) ஆனால், அரசு சில அடிப்படைகளில் அந்த மருத்துவ மனைகளைத் துவங்குவதற்கு உதவி அளித்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, அலோபதி முறையிலே மருத்துவ மனைகள் ஆங்காங்கே நிறுவுவதற்கு மிகுந்த அதிகமான செலவாகிற காரணத்தினாலே குறைந்த பட்சம் ஊராட்சி மன்றங்கள் இருக்கின்ற பகுதிகளிலாவது 4, 5 ஊராட்சி மன்றங்களை இணைத்து ஒரு மையம் ஏற்படுத்தி அங்கே சித்த வைத்திய மருத்துவமனையை ஏற்படுத்த வேண்டு மென்பதை அரசு ஒரு கொள்கையாக ஏற்று பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பொதுவாக கிராமப்பகுதிகளில் மருத்துவமனைகளைத் தொடங்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களிடத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றங்கள் அதை வலியுறுத்துவதன் மூலம், ஒன்றியங்கள் ஏற்பதன் மூலம் அந்தத் துறைக்கு அனுப்பி அதற்குப் பிறகு நலத்துறையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு மருத்துவமனைகளைத் தொடங்க வேண்டும். அப்படித் தொடங்குவதை ஆதரிக்க பெரும்பாலும் அரசாங்கம் முன்வரும்.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்: தலைவரவர்களே, சித்த வைத்தியசாலைகளை ஆதரிக்கும் வகையில் அறநிலையங்கள் சித்த வைத்தியசாலைகளை ஆரம்பித்தால் அதற்கு அரசு உதவி புரியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அது அறநிலையங்களாக இருப்பதால்தான் ஆரம்பிக்கவே சொல்கிறோம். உதவி நிலையங்களாக இருந்தால் அவர்களிடத்திலே இந்த வேண்டுகோளை விடமாட்டோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, குறிப்பிட்ட துறைகளில் இந்த சித்த வைத்திய முறையானது நல்ல பலனளிக்கும் வகையில் இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் இந்த சித்த வைத்திய மருத்துவமனையை அமைக்க அரசாங்கம் இப்பொழுது கொடுப்பதைவிட அதிகப் பணம் கொடுத்து உதவ வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பணம் ஒரு அளவுக்குக் கொடுப்பதை ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு மருந்தகம் ஒன்றியத்தின் சார்பாக நடத்த ஏறத்தாழ 5,000 ரூபாய் உதவித் தொகை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்து. கிராம மருத்துவ மனைகள் எங்கே தொடங்கப்பட்டாலும் அங்கே டாக்டர்களுக்கு அளிக்கப்படும் ஊதிய விகிதத்திலே—சம்பளம் என்று சொல்ல முடியாது, ஆனரேரியம் என்று சொல்லப்படும் அதிலே—நான் முன்பே குறிப்பிட்டபடி





பங்குத் தொகை அரசாங்கம் வழங்குவதற்குச் சித்தமாக இருக்கிறது. உதவித் தொகையை அதிகப்படுத்தாத காரணத்தினால்தான் சித்த மருத்துவமனைகள் தோன்றவில்லை என்று சொல்ல முடியவில்லை. பொதுவாக ஒன்றியத்திலே உள்ளவர்கள் அலோபதி மருத்துவமனைகளிலே ஆர்வம் காட்டுகிறார்கள். சில மருத்துவமனைகளை இந்த மருத்துவமனைகளாக மாற்ற வேண்டுமென்று சொல்கிறார்கள். அதை உடனடியாக ஏற்றுக் கொள்வதில்லை, சிலயிடங்களில் கட்டாய சூழ்நிலை ஏற்பட்டால் ஏற்றுக் கொள்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, பஞ்சாயத்துக்களுக்கெல்லாம் ஆஸ்பத்திரிகளை நடத்துகின்ற பொறுப்பைக் கொடுக்காமல் அரசாங்கமே நேரடியாக நடத்துவதற்கான வழிவகைகளை ஏன் செய்யக் கூடாது? பஞ்சாயத்து நிர்வாகத்தில் இருக்கின்ற கோளாறுகளின் காரணமாக இப்படிப்பட்ட மருத்துவமனைகள் ஒழுங்காக நடைபெறாமல் இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, நேரடியாக அரசாங்கத் துறையிலேயே இவைகளை நடத்துவதற்கு ஏதாவது ஆலோசனை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, கிராம மருத்துவமனை என்ற திட்டமே முழுநேர மருத்துவமனையாக எல்லாயிடங்களிலும் இயங்க வேண்டிய அவசியமில்லை என்ற அடிப்படையில் பிறந்ததாகும். ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் டாக்டர்களுக்கு வேலையிருக்கும். மீதி நேரத்தில் தனிப்பட்ட மருத்துவப் பணிகளை அல்லது வேறு பணிகளை அவர்கள் நிறைவேற்றலாம். அப்படிப்பட்ட மருத்துவமனைகள் அரசாங்கத்தின் சார்பாக நடத்துவது என்பது நடைமுறையில் இயலாத காரியமாகும். அரசாங்கம் பெரிய இயந்திரமாக இருக்க முடியுமே தவிர, ஆங்காங்குள்ள தனிப்பட்ட நிலைமைகளைப்பற்றி உள்ளாட்சி மன்றங்கள் அதிக அக்கறை காட்டினால் அரசாங்கம் வேண்டிய தேவையான ஆலோசனைகளை அல்லது ஊக்கத்தை வழங்குவதற்கு முயற்சிக்கலாம்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, சித்த மருத்துவத் துறையில் ஈடுபட்டிருக்கும் தனிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் உதவி அளித்து வருகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி உதவிகோரி எத்தனை மனுக்கள் வந்தன, அவைகளில் எத்தனை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன, எந்த அடிப்படையில் அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பதற்கு மாவட்டவாரியாக அமைச்சரவர்கள் விவரம் அளிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, கேள்வியின் தொடக்கம் தவறாக இருந்த காரணத்தினால் கேள்வியின் நீளம் அதிகமாக நேரிட்டது. தனிப்பட்ட மருத்துவ மனைக்கு அரசாங்கம் இந்த உதவியை அளிக்கவில்லை. பஞ்சாயத்து ஒன்றியங்கள் மூலமாக ஆனரரி டாக்டர்கள் என்ற பொருள்பட தனிப்பட்ட சித்த மருத்துவர்கள் அல்லது ஆயுர்வேத மருத்துவர்கள் பார்ட் டைம் டியூட்டி என்ற முறையில் நியமிக்கப்பட்டு அது ரூரல் மெடிகல் இன்ஸ்டிட்யூஷன் என்ற முறையில் நடத்தப்படுகிறது. அதற்கு அரசாங்கம், டாக்டர்களுடைய சம்பளத்தில் ஒரு விகிதாசாரத்தை மானியமாக அந்த ஒன்றியத்திற்கு வழங்குகிறது. அவர்களிலே பெரும்பாலும் சித்த அல்லது யுனானி அல்லது ஆயுர்வேத மருத்துவத்தில் தகுதி பெற்றவர்களாகத்தான் அந்தக் கிராம மருத்துவமனைகளில் பணியாற்றுகிறார்கள்.

**திரு. தொ. ப. சீனிவாசன்:** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக கிராம மருத்துவமனைகள் நடத்தப்பட வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே உள்ள ஊராட்சி ஒன்றியத்திலே இரண்டு கிராம மருத்துவமனைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதிலே ஹோமியோபதி வைத்தியமும் நடைபெறவில்லை. அங்கே அலோபதி மருந்தும் இல்லை. எந்தவிதமான மருந்தும் இல்லாமல் டாக்டர்கள் சிகிச்சையளிக்க முடியாத நிலையில் பயனில்லாமல் இருக்கின்றன. ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் கிராமப்புற வைத்தியசாலைகளுக்கு சித்த வைத்திய டாக்டர்களை நியமிப்பதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர், ஊராட்சி மன்றத்தின் தலைவர் பொறுப்பிலேதான் இப்படிப்பட்ட மருந்தகங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. அங்கே எதுவும் நடைபெறவில்லை என்றால் சட்ட மன்ற உறுப்பினர் ஒன்றியத்திற்குத் தெரிவித்தால் அவர்கள் ஒருவேளை பரிசீலிக்கக் கூடும். ஒன்றியத்தின் சம்மதம் இல்லாமல் அல்லது பேரூராட்சியின் சம்மதமில்லாமல் அரசாங்கமாகப் பார்த்து டாக்டர்களையோ வைத்திய முறைகளையோ மாற்றுவது இயலாது. ஆகவே, ஏதாவது குறையிருந்தால் ஒன்றியத்தின் மூலமாக அரசாங்கத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

**திரு. எஸ். வடிவேல்:** பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களால் அந்த சித்தவைத்திய மருத்துவமனைகள் பராமரிக்கப்படுகின்றனவா? அல்லது அரசு நேரடியாகப் பராமரிக்கிறதா? ஊராட்சி ஒன்றிய சம்பந்தப்பட்டவர்கள் அதைப் பராமரிக்க முடியாமல், சமாளிக்க முடியாமல் இருப்பதால், நிதி போதாமல் இருப்பதால் மருந்துகள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அவைகளை அரசாங்கமே நேரடியாக எடுத்து நடத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, நிதிப் பற்றுக்குறை என்பது ஊராட்சி மன்றத்திலே ஆரம்பித்து, ஒன்றியத்திலே வளர்ந்து, நகரசபையிலே இடம்பெற்று, மாநில அரசுக்குச் சம்பந்தம் உள்ளதாக ஆகி, மத்திய அரசு வரையிலே இருப்பது. நிதிப்பற்றுக்குறை என்பது வேறு, ஏற்றுக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றுவது என்பது வேறு. அவர்கள் தொடங்கிய மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில், நிதி இருக்கிறது என்று ஒப்புக்கொள்ளப்பட்டு, ஆர்.டி.எல்.ஏ. செயலாளருக்கு வந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிதியிருக்கிறது என்று ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு அவைகள் செயல்படுத்தப் படவில்லை என்றால் அது குற்றம்.

**திரு. தி. பொன்னுமலை:** தலைவரவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 5,000 ரூபாய் ஒதுக்கியிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் சில ஊராட்சி ஒன்றியங்களில்

50 கிராமங்கள் இருக்கின்றன, 40 கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, அவ்வளவு பெரிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு இந்த 5,000 ரூபாய் போதாது. ஆகவே, அதற்கு அதிகமாக ஒதுக்கு கின்ற உத்தேசம் ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஆரம்ப சுகாதார நிலையம் மூலமாக அதிலே இணைக்கப்பட்ட குடும்ப நலத் திட்ட நிலையத்திற்கு 80,000 ரூபாயை அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் செலவிடுகிறது. ஊராட்சி ஒன்றியங்களின் சார்பிலே தொடங்கப்படும் மருத்துவ மனைகளை ஊக்கப்படுத்துவதற்காக முதல் மருந்தகத்தைக் தொடங்க, ஃபர்ஸ்ட், அந்த ஒன்றுக்கு மட்டும் மாநில அரசு 5,000 ரூபாய் அளவிற்கு உதவி செய்வது என்ற திட்டம் பல ஆண்டுகளாக இருக்கிறது. மேலும் மருந்தகங்களைத் தொடங்க வேண்டுமானால் ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலைமைக்கேற்ப தொடங்கலாம். ஊராட்சி ஒன்றியத்தில் நிதியில்லை என்றாலும் ஊராட்சி மன்றங்களில் நிதியிருந்தாலும் ஊராட்சி ஒன்றியத் திற்குத் தெரிவித்து தொடங்கலாம். இது அவர்கள் மேற்கொள்ள வேண்டிய நல்ல பணி.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், சித்த வைத்திய முறையானது மிகவும் பழமையானதும், மிகவும் பிரயோசனம் உள்ளதுமாக இருந்தாலும்கூட இன்றைக்குள்ள நிலைமையில் அலோபதி முறையில்தான் மக்கள் கவர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அதிலே கொண்டிருக்கும் நம்பிக்கையின் காரணமாக சித்த வைத்தியத் திற்கு அவர்கள் வரவில்லை. இந்த சித்த வைத்தியம் பழமை யானதும், நல்லதும் என்று கருதுவதாலே இந்த சித்த வைத்திய முறைகளை மேம்படுத்தவோ அல்லது விரிவுபடுத்தவோ செய்யும் முறையில் மக்களிடத்திலே சொல்லி இதில் கவர்ச்சியை உண்டாக்க வேண்டிய நடவடிக்கைகள் அரசாங்கத்தால் எடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன், கவர்ச்சி நீண்ட நாளைக்கு நிலைக்காது. கவர்ச்சியை உண்டாக்கும் முயற்சியில் தமிழக அரசு இப்பொழுது ஈடுபடவில்லை. ஆனால் சித்த வைத்தியத்தின் தனிச் சிறப்புக்களைப் பற்றி, பிற மருத்துவங்களில் இல்லாத முறையில் எந்தெந்த வகைகளில் இதற்குத் தனிச் சிறப்பு உண்டு என்பதைப் பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுவதன் மூலமாகவும், நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் சில மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்துவதன் மூலமாகவும், அப்படிப்பட்ட ஆராய்ச்சிகளை அலோபதி மருத்துவர்களுக்கு அனுப்பி அவர்கள் அதைப் பரிசீலித்து ஏற்றுக்கொள்ளச் செய்வதன் மூலமாகவும் சில மருந்துகள், சில முறைகள் சிறப்படைய ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் சித்த மருத்துவத்தின் உண்மை களை வெளிப்படுத்த அரசு மேலும் ஈடுபட்டு பல நூல்களை வெளிக் கொண்டு வர அச்சு ஏற்றும் பணி நடைபெறுகிறது. இதற்கான முயற்சியில் சென்னையில் இரண்டு மூன்று ஆராய்ச்சி நிலையங்கள் சித்த மருத்துவத் துறையில் ஈடுபட்டிருக்கின்றன. அந்த ஆராய்ச்சி வளர்ந்தால் அதற்கு மேலும் மதிப்பு வளரும். மக்க ளிடத்தில் சித்த மருத்துவத்தின் சிறப்பை எடுத்துச் சொல்லும் கடமை இருக்கிறது, அந்தக் கடமையை சட்டமன்ற உறுப்பினர் களும் மேற்கொண்டால் மக்கள் நல்ல பலன்களை அடைவார்கள்.

### கைத்தறித் துணிகள் விலை

*115 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கூட்டுறவு கைத்தறி நிறுவனங்களில் விலை நிர்ணயம் எந்த அடிப்படையில் செய்யப்படுகின்றது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** துணி நெய்வதற்கு உபயோகப்பட்டுள்ள நூலின் அடக்க விலை, சாயம் போடுவதற்கு ஏற்பட்ட செலவு, நெசவாளருக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம் இவற்றோடு இலாபத்தைச் சேர்த்து பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் துணியின் விலையை நிர்ணயிக்கின்றன.

[1975 அக்டோபர் 29

ஏற்பாடு செய்யப்படுமோ? மத்திய சர்க்கார் வைத்திருக்கக்கூடிய ஹாண்ட்லூம் ஹவுசில் வருஷம் பூராவும் 5 சதவிகிதம் கொடுக்கிறார்கள். அதேபோல் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய சர்க்கார் ரிபேட் கொடுப்பது பற்றிய செய்தி எனக்குத் தெரியவில்லை. மத்திய சர்க்கார் இதை எதிர்க்கிறார்கள். இந்த ரிபேட் சிஸ்டம் ரொம்ப மோசம், இந்த ரிபேட்டைக் கொடுக்காதீர்கள் என்று அவர்கள் போட்ட கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. மத்திய அரசும் தொடர்ந்து இந்த ரிபேட்டைக் கொடுக்கக் கூடாது என்று வலியுறுத்தி வருகிறது. நம்முடைய மாநில அரசு இதற்காக முன்பு 60 லட்ச ரூபாய் ஆண்டுக்கு ஒதுக்கிய நிலை மாறி இப்போது 1½ கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கியிருக்கிறது. மத்திய அரசு இதை ஆட்சேபிக்கிறது.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்: கைத்தறித் துணி உற்பத்தியாளருக்கு 3 சதவிகிதம் லாபம், 6 சதவிகிதம் லாபம் என்று நிர்ணயித்து கொள்முதல் செய்யப்பட்டது. இனியாவது அதிகப்படியான லாபத்தை நிர்ணயித்து கொள்முதல் செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கொள்முதலில் ஏற்பட்டிருக்கும் சிரமம் இடைக்காலத்தில் ஏற்பட்ட சிரமம். துணிகள் ஏராளமாகத் தேங்கி இருந்த காரணத்தால் குறைத்து கொள் முதல் செய்யும் நிலை ஏற்பட்டது. விரைவில் இந்த நிலை மாறி விடும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சென்னையிலுள்ள மத்திய சர்க்கார் ஹாண்ட்லூம் ஹவுசில் வருஷம் பூராவும் 5 சதவிகிதம் ரிபேட் கொடுக்கிறார்கள். இதைப் பற்றி மற்ற வியாபாரிகளும் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த முறையில் ரிபேட் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



1975 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எக்ஸ்போர்ட் கவுன்சில் என்று இருக்கிறது. அதைப் பற்றிச் சொல்லுகிறாரா என்று தெரியவில்லை. தனியாகக் கேட்டால் விவரம் அளிக்கலாம். ரிபேட்டைப் பொறுத்தவரை நம்முடைய மாநில அரசு மிக அதிகமாகக் கொடுத்து வருகிறது. மத்திய அரசு கொள்கை அளவில் இது கூடாது என்று சொல்லுகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: மத்திய கூட்டுறவுச் சங்கங்கள் 25 சதவிகிதம் லாபம் வைத்து விற்கின்றன என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அந்த லாபம் பிரதம சங்கங்களுக்குப் போகிறது என்று தாராள மாகச் சொல்லுகிறார்கள். இடையில் கொஞ்சப் பேர் எங்களைப் போன்ற கொஞ்சம் பெண்கள் கைத்தறிச் சேலை அணிகிறோம். அந்தச் சேலைகளின் விலை 50 ரூ. 60 ரூ. என்று விற்கப்படுகிறது. ஆகவே, அந்த லாபம் 10 சதவிகிதத்திற்கு மேல் போகக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிட்டு, விலையைக் குறைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு உறுப்பினர் கைத்தறிச் சேலை கட்டியிருக்கிறார்களா என்று தெரியவில்லை. (சிரிப்பு) ஆனால் பொதுவாகப் பார்க்கிறபோது, தனியாரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மாநிலச் சங்கங்கள் விற்பது குறைந்த விலையில்தான் விற்கப்படுகிறது.

### விக்கிரமசிங்கபுரம் மலைப்பகுதி

*116 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா, விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சிப் பகுதி மலைப்பிரதேச பகுதியென அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

[1975 அக்டோபர் 29

(இ) விக்கிரமசிங்கபுரம் மலைப் பகுதிகளில் பயிரிடப்படும் வாழைக்கு வேளாண்மை வருமான வரி விதிப்பதற்காக திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள விக்கிரமசிங்கபுரம் மலைப்பகுதியென அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்டாண்டர்டு ஏக்காராக மாற்றுவதில் மலைப்பகுதிகளில் பயிரிடப் படும் வாழைப் பயிருக்குச் சில சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

## Allotment of plots by Slum Clearance Board

*117 Q.—Thiru P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Co-operation be pleased ot state—

(a) whether it is a fact that the Slum Clearance Board has decided to sell the Open Developed Plots in the City of Madras hitherto allotted to the public on rental basis; and

(b) if so, whether the allottees will be permitted to avail the loan facilities through Co-operative Societies and Government?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) & (இ) ஆம். இதுபற்றிய தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டு அதிலே வாடகைக்கு இருந்து வரும் பொது மக்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் இதுவரை அவர்களிடமிருந்து வசூலித்த வாடகையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அதை அவர்களுக்கே விற்பனை செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தற்போது 60 சதவிகிதத்திற்கு மேல் உள்ள இடங்களில் வாடகைக்குக் கொடுத்திருக்கக்கூடிய இடங்களில் பல்வேறு தவறுகள் நடந்திருக்கின்றன. குடிசைமாற்று வாரியக் குழுத் தலைவர் மூலமாக 1974 பிப்ரவரி மாதம், 17—6—1974 ஆகிய நாட்களில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் ஒரு ப்ரொபோசல் அனுப்பப் பட்டிருக்கிறது. 800 சதுர அடி உள்ள இடத்திற்கு மாதம் 8 ரூபாய் வீதம் கொடுப்பவர்கள் 15 ஆண்டுகளுக்குச் செலுத்தி வந்தால் அவர்களுக்கே சொந்தமாக்குவது என்றும், ஒரே தவணையில் கட்டுவதானால் 1,440 ரூபாய் வாங்கிக் கொண்டு அவர்களுக்குச் சொந்தமாக்குவது என்றும் தவறான முறையில் யாரேனும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தால் நடவடிக்கை



1975 அக்டோபர் 29]

எடுப்பது பற்றியும் ப்ரொபோசல் அனுப்பியிருக்கிறார்கள். அது சர்க்காரின் பரிசீலனையில் இருக்கும் காரணத்தால் பரிசீலனை முடிந்த பிறகு மற்றக் காரியங்கள் நடைபெறும்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக இதுபற்றிய பங்கீடு செய்யப்படும்போது அதற்கு ஒரு ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். அந்த ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்? அதிலே எல்லாச் சாராரும் இடம் பெற்றிருக்கிறார்களா? குறிப்பாக முஸ்லிம் இடம் பெற்றிருக்கிறாரா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இது குடிசை மாற்று வாரியத்தை சார்ந்த வீடுகளைக் குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்கிக் கொடுப்பது பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் கூற முடியும்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் ஒதுக்க தனிப்பட்ட முறையில் கட்சி சார்புடைய ஆலோசனைக் குழு எதுவும் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதிகாரிகள் புகைப்படம் எடுத்து நியாயமான முறையில்தான் வீடுகளை ஒதுக்குகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அரசுக்குத் தெரியும்.

## வீடுகள் கட்டுமானச் செலவு

*118 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீடு கட்டும் கட்டுமானச் செலவைக் குறைப்பது குறித்து ஆராய்ச்சி ஏதேனும் செய்யப்பட்டதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இல்லை. ஆராய்ச்சி ஏதும் செய்யப்படாவிடினும், கட்டுமான பணிகளுக்கு ஆகும் செலவுகளை சிக்கனப்படுத்த பல நடவடிக்கைகளை வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ளது.

[1075 அக்டோபர் 29

திரு. என். கிட்டப்பா: வீடு கட்டும் செலவைக் குறைக்க தக்கைக் கல் முறை ஒன்று உருவாக்கப்படியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஜப்பான் முறையில் வீடுகளைக் கட்டினல் சிக்கனமாகக் கட்ட முடியும் என்று விவரம் தெரிந்தவர்கள் சொல்லுகிருர்கள். அத்தகைய முறைகளை அரசு ஆராய்ந்து சிக்கனமான முறையில் வீடுகளைக் கட்டுவதற்கான வழிவகைகளை வகுத்துக் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தக்கைக் கல் முறையில் இப்போது கூரைகளில் மட்டும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. மற்றவைபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிருர்கள். ஜப்பானிய முறைபற்றி ஆராயவில்லை.

### ஓசூர் கால்நடைப் பண்ணை

*119 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1973-74-ல் ஓசூர் கால்நடை வளர்ப்புப் பண்ணையில் சிந்திப் பசுக்கள் வளர்ப்பை தீவிரப்படுத்த மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை ரூ. 4,56,000.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஓசூர் கால்நடைப் பண்ணையை மேலும் அபிவிருத்தி செய்ய மாநில அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா? அதன் விவரத்தை அறியலாமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாநில அரசுதான் செய்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் இதுபோன்று சென்ட், பர்சென்ட் கிராண்ட் எல்லா மாநிலங்களுக்கும் கொடுப்பதுபோல் நமது மாநிலத்திற்கும் கொடுத்துக் கொண்டிருக்கிருர்கள்.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister what kind of development they are making there with regard to Sindhi cows? May I also know from the Hon. Minister whether any new schemes have been introduced?



1075 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சிந்தி பசு இன அபிவிருத்திக்காக சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இதன்மூலம் சிந்தி இன பசுக்கள் உற்பத்தி செய்கிற திட்டம் மேற்கொள்ளப்படும்.

### சீட்டுக் கம்பெனிகள்

*120 வினு—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சீட்டுக் கம்பெனிகள், வாடிக்கையாளர்களிடம் மோசடி செய்ததற்காக எந்தெந்த கம்பெனிகள்மேல் 1974-ம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஒரு விவர அறிக்கை @ பேரவை முன்வைக்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப்: இந்த அறிக்கையை பார்த்தால் மிகப் பயங்கரமாக இருக்கிறது. ஒரு ஆண்டில் மட்டும் 91 கம்பெனிகள் மீது மோசடிக்காக வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. எவ்வளவோ கம்பெனிகள்மீது மோசடிக் கேஸ்கள் பதிவு செய்யப்படாமல் இருக்கின்றன என்பது மட்டுமல்ல, பல புகார்கள் வந்துகொண்டே இருக்கின்றன. மாயவரத்தில் உள்ள சம்பத் பைனுன்ஸில் லட்சக்கணக்கான ரூபாய் மோசடி செய்திருக்கிருர்கள். இப்படி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைப் போடுங்கள்.

திரு. கே. எ. வகாப்: இப்படி சீட்டுக் கம்பெனிகள் வைத்து மோசடி செய்கிறவர்கள்மீது மிஸா சட்டத்தை உபயோகப்படுத்தி அவர்களைக் கைது செய்து ஏமாற்றப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய பணத்தை டெப்பாசிட் தொகையிலிருந்து திருப்பித் தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் பல தவறுகள் நடந்துகொண்டிருப்பதாகக் குறிப்பிலிருந்து தெரிகிறது. டோட்டல் நம்பர் ஆப் அபன்ஸஸ்

@ 296-301-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கிட்டத்தட்ட 599. 470 கேஸ்கள் கோர்ட் மூலம் தண்டிக்கப்பட்டிருக்கின்றன. ஒரே ஒரு வழக்குதான் விடுதலை செய்யப்பட்டது. பாக்கி நீதிமன்றத்தில் இருக்கின்றன.

THIRU K. M. SUBRAMANIAM : In view of the increasing frauds in the Chit Companies, is there any proposal to bring in a comprehensive legislation for the control and regulation of the chit funds?

*மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:* சென்ற கூட்டத் தொடரில் ஒரு சட்டம் கொண்டுவந்தோம். டெப்பாஸிட் அதிகமாகக் கட்டவேண்டும் என்று சட்டம் கொண்டுவந்தோம். உயர்நீதி மன்றத்தில் இருந்து தற்போது இதற்கு தடை வாங்கப்பட்டிருக்கிறது.

*திரு. தொ. ப. சீனிவாசன்:* இப்போது கிராமங்களில் சீட்டுக்கள் பிடிக்கும் நிலையில் சாதாரண பாமர மக்களும், விவசாயிகளும் ஏமாற்றப்படுகிறார்கள். அதனால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, தாலுக்கா அளவில் அவற்றைக் கண்டுபிடித்து தண்டனை அளிக்க ஆவன செய்யப்படுமா?

*மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:* அதுபோன்று தவறு செய்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக தனிப் பிரிவுகள் எல்லாம் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுபோன்று தவறுகள் செய்பவர்களை அல்லது தவறு நடைபெறுவதை எந்தளவிற்கு தண்டிக்கமுடியும் என்பது இருக்கிற சட்டப்படிதான் செய்ய முடியும். சமீபத்தில் மத்திய அரசு கூட இதை நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற செய்தியை வெளியிட்டிருப்பதாக பத்திரிகைகளில் பார்த்தேன். அது எந்த அளவிற்கு உண்மை என்று எனக்குத் தெரியவில்லை.

*திருமதி த. ந. அனந்தநாயகி:* எண்ணற்ற சீட்டுக் கம்பெனிகளால் மோசடிகள் நடத்தப்படுகின்றன என்ற காரணத்தால் சீட்டுக் கம்பெனிச் சட்டத்தை, கட்டுப்படுத்த வேண்டுமென்று கொண்டுவந்தோம். அதை அமல்படுத்துவது கிடையாது. ஒழுங்காக இன்ஸ்பெக்டர்களைப் போட்டு, என்னென்ன எப்படி எப்படி நடக்கின்றன என்பதை காலாகாலத்தில் பார்ப்பதில்லை.





அதை சரிவர அமல்படுத்தாத காரணத்தால்தான் இப்படிப்பட்ட மோசடிகள் பெருத்து வருகின்றன. சட்டம்போடுவது மட்டும் போதாது. அதை அமல்படுத்த என்னென்ன செய்யப்பட்டிருக்கின்றன? இன்ஸ்பெக்டர்களைப் போட்டிருக்கிறார்களா? அவர்கள் பீரியாடிக்கலாக எவ்வளவு இன்ஸ்பெக்ஷன் செய்திருக்கிறார்கள் என்பதற்கான ரிக்கார்ட்ஸ் இருக்கின்றனவா?

*மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:* 599 வழக்குகளில் 470 தண்டிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றுதான் விடுதலை செய்யப்பட்டிருக்கிறது. நமது போலீஸ் துறை நல்ல நிபுணத்துவத்தோடு நல்லமுறையில் விசாரணை செய்து நன்கு செயலாற்றி வருகிறது.

*திரு. சு. துரைசாமி:* இருபது கம்பெனிகள் கோவை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கம்பெனிகள் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இதில் உமா இன்வெஸ்ட்மென்ட் போன்றவை—கேரளாவைச் சேர்ந்த பலர் கோவைக்கு வந்து சீட்டுக் கம்பெனிகள் ஆரம்பித்து சாதாரண தொழிலாளர்களை எல்லாம் ஏமாற்றி மோசடி செய்கிறார்கள். அவர்களைத் தண்டிப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

*மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:* உமா சீட்டுக் கம்பெனி பம்பாய் ஹைகோர்ட்டில் தடை வாங்கியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

*திரு. கே. என். குமாரசாமி:* நம் சட்டத்தில் பத்தாயிரம் ரூபாய் டெப்பாஸிட் கட்டினால் சீட்டுக் கம்பெனி நடத்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பத்தாயிரம் ரூபாயைக் கட்டிவிட்டு பாக்கிப் பணத்தை வசூலித்துக் கொண்டு போகக்கூடிய அளவிற்கு நம் சட்டத்தில் நிலைமை இருக்கிறது. இதனால்தான் இவ்வளவு மோசடிகள் நடந்திருக்கின்றன. ஆகவே, இந்தச் சீட்டுக் கம்பெனிகளையே க்ளோஸ் செய்துவிட்டு சீட்டுகள் நடத்த விரும்புகிறவர்களை பாங்குகளோடு சேர்த்து பாங்குகளிலிருந்து நடத்துவதற்கான ஏற்பாட்டினைச் செய்ய அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

*மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:* சீட்டுத் தொகையை விட இரண்டு மடங்கு, மூன்று மடங்கு, நான்கு மடங்கு டெப்பாஸிட் தொகை கட்டவேண்டும் என்று சட்டம் கொண்டு வந்திருக்

கிறேம். ரூ. 40,000 என்றால் ரூ. 1,60,000 கூட கட்டக்கூடிய நிலைமை சட்டத்தில் இருக்கிறது. ஹைகோர்ட் தடை செய்திருப்பதால் அமல் நடத்தவில்லை. வழக்கு முடிந்த பிறகுதான் முடிவு எடுக்க முடியும்.

**திரு. கே. எ. வகாப்:** மோசடிகள் நடப்பது அரசுக்கு குறைவாகத் தெரிந்திருந்தாலும் இப்போது கிராமங்களில் ரெஜிஸ்தர் செய்யப்படாத சீட்டுக் கம்பெனிகள் நடந்துக்கொண்டிருக்கின்றன. அவற்றைக் கண்காணிக்க போலீஸுக்கு உத்தரவு போட்டு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** ரெஜிஸ்தர் செய்த வழக்குகள் 599. ரெஜிஸ்தர் செய்யாதவை 257.

### கோவை நகராட்சிக்கு நிதி வழங்கல்

*121 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகர அபிவிருத்திக்கு நகர் அபிவிருத்தி நிதியின் கீழ் உதவி புரியுமாறு கோவை நகராட்சி மன்றம் மாநில அரசுக்கு வேண்டுகோள் ஏதேனும் அண்மையில் விடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) கோவை நகர் மன்றம் தனது 30—4—1975-ம் தேதிய 251-ம் எண் தீர்மானத்தில் நகர் அபிவிருத்தி நிதியிலிருந்து கோவை நகரமைப்புத் திட்டத்திற்காக ரூபாய் 2.00 கோடி ஒதுக்கும்படி கேட்டிருக்கிறது.

(இ) இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா:** கோவை நகர அபிவிருத்திக்காக அங்கிருந்து கோரப்பட்ட தொகை இரண்டு கோடி என்று குறிப்பிட்டார்கள். அந்த இரண்டு கோடி ரூபாய் எந்தெந்த இனங்களுக்காக முக்கியமாக செலவழிக்கக் கோரப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அது மிகப் பெரிய நீண்ட பட்டியல். ஆகவே உறுப்பினர் அவர்களுக்கு தேவைப்பட்டால் அதை அவை முன்னர் வைக்கத் தயாராயிருக்கிறேன்.





### மதுரை பேருந்து நிலையம்

*122 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** ஆம். மதுரை மாநகராட்சியின் ஆய்விலுள்ளது.

**திரு. கு. திருப்பதி:** அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் டௌன் ஹாலுக்காக கொஞ்சம் இடத்தை ஒதுக்கி விட்டு, மீதியை பஸ் ஸ்டாண்டுக்குக் கொடுக்க ஒரு ஏற்பாடு இருந்தது. அதேபோல்தான் இருக்கிறதா அல்லது அந்த இடம் முழுவதும் பஸ் ஸ்டாண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இது மதுரை பேருந்து நிலையத்திற்கு அரசிடத்தில் உள்ள நிலத்தை மாநகராட்சி பெற்றுக் கொண்டிருக்கிற ஒரு பிரச்னையாகும். அது முழுவதும் பேருந்து நிலையத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

### பீமநகரி சாலை

*123 வினா—திரு. வீ. கே. இராஜப்பிள்ளை: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், தோவாளை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள "பீமநகரி" சாலையை செப்பனிடும் வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பீமநகரி சாலையை செப்பனிடும் வேலைகள் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன.

### அரிசன மாணவர் விடுதிகள்

*124 வினா—திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் வட்டம், வட சென்னிமலையில் ஒரு அரிசன மாணவரில்லம் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

[1975 அக்டோபர் 29

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: ஆம்.

திரு. மு. மாரிமுத்து: அது எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: 1975-76-ல் பார்ட் 2 ஸ்கீமில் சேர்த்துக்கொள்ளலாம் என்று இயக்குநர் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அது ஆராய்ச்சியில் இருக்கிறது. அது அநேகமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: தலைவரவர்களே, மதுரையில் உள்ள ஆத்தூர் தொகுதியில், ஆத்தூரில் அரிசன மாணவர்கள் இல்லம் ஒன்று வேண்டுமென்று மூன்றாண்டுகளாகக் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, இந்த ஆண்டாவது ஆத்தூரில் அரிசன மாணவர்கள் இல்லம் ஒன்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, ஆத்தூர் என்பதற்கு இங்கே தனியாக விவரம் இல்லை. இது சென்னிமலையில் அரிசன மாணவர்கள் விடுதி ஒன்றை துவக்கு வது பற்றிய கேள்வியாகும். ஆகவே, அதற்கு மட்டும் தான் குறிப்பு இருக்கிறது. வேண்டுமானால், தனிக் கேள்வி போட்டால் அதற்கான விடை அளிக்க முடியும்.

திரு. கோ. செபமாலை: தலைவரவர்களே, விருத்தாசலம் தாலுக்காவில் தொழுதூரில் அரிசன மாணவர்கள் உணவு விடுதி ஒன்றைத் திறக்கப்போவதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அது குறித்து நாங்கள் கூடக் கேட்டு இருக்கிறோம். அதைத் திறப்பதற்கான செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

*125 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் வட்டம், சூணம்பேடு பகுதியில் மாணவர்கள் அரிசன விடுதி ஒன்று துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1975 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: ஆம்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்த விடுதியைத் தொடங்க சுமார் ஓராண்டு காலந் தாழ்த்தப்பட்டு இருக்கிறது, அது ஒரு ஜமீன் ஆதிக்கத்தில் இருந்ததால், விரைவாக அந்த இடத்தில் விடுதியைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, முன் கேள்விக்கு பதில் அளித்தபோதே சொன்னேன். இந்த விடுதியை இரண்டாவது பகுதி திட்டமாக சேர்க்க வேண்டுமென்று நம்முடைய இயக்குநர் அவர்கள் பரிந்துரை செய்து இருக் கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

**மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கீழ்க்கண்ட சட்ட முன்வடிவு கள் 25—10—1975-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை ஏதுமின்றி நிறைவேற்றப் பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது:—

1. 1975-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/75).

2. தமிழ்நாடு 1975-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/75).

[பேரவைத் தலைவர்] [1975 அக்டோபர் 29

3. தமிழ்நாடு 1975-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (மேல்வரி), திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/75).

மேலும், கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள், 25—10—1975 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டு, திருத்தம் ஏதுமின்றி, ஒப்புதலளித்து நிறைவேற்றப் பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது:—

1. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு கடன் பெற்றோர் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/75).

2. தமிழ்நாடு 1975-ம் ஆண்டு கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு (திருத்த-செல்திறன்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/75).

3. 1975-ம் ஆண்டு உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/75).

### 3. நடைமுறைக் கேள்வி.

இராமபிரசாத் ராவ் ஆணைக் குழுவின் அறிக்கையை சட்டப் பேரவைக்கு அளிக்குமுன் பத்திரிகைகளுக்கு தெரிவிக்கப் பட்டது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்னவென்றால், 242-பிரிவின்படி, இந்த சட்டமன்ற விதிகளிலே எதுவுமே குறிப்பிடப் படாமல் இருந்தால், அதைத் தாங்களே நடைமுறைக்குக் கொண்டு வரலாம் என்று இருக்கிறது. பல ரிப்போர்ட்டுகள் எல்லாம் இங்கே சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்குப் பல விதிகள் இருக்கின்றன இதே மன்றத்தில் திரு. இராம பிரசாத் ராவ் அவர்களைக்கொண்டு ஒரு கமிஷன் நியமித்தோம்.



1975 அக்டோபர் 29] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நியமித்த பிறகு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அவருடைய முடிவு வந்து இருக்குமானால், அந்த ரிப்போர்ட் இந்த மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவேண்டும். ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டு இருக்க வேண்டும். அப்படி சமர்ப்பிக்கப் படாமல் இருக்கிறபோது, அதனுடைய முழு விவரமும் பத்திரிகை களில் வந்து இருக்கின்றன.

சாதாரணமாக இந்த மன்றத்திலே, ஏதாவது ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டால், அந்தக் கமிஷனுடைய ரிப்போர்ட் முதலில் இங்கே வந்து, பிறகு மற்றவர்களுக்குத் தெரிய வேண்டும். எல்லோருக்கும் தெரிந்த பிறகு நமக்குத் தெரியாமல் இருக்கிற நிலை இருக்கிறது. ஆகவே, இரண்டு விஷயங்களில் நான் தங்க ளுடைய முடிவை அறிய விரும்புகிறேன். இந்தமாதிரி கமிஷன் களின் அறிக்கை உடனடியாக இங்கே சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்தமாதிரி ரிப்போர்ட்டுகள் இங்கே வருவதற்கு முன்பாக வெளியே பிரசுரிப்பது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது போன்று நிர்வாக அடிப்படையில் ஒரு உத்தரவு போட்டு விசாரணை நடத்தப்படு மானால், அந்த விசாரணையின் முடிவு உடனடியாக மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். அதில் காலதாமதம் செய்யக் கூடாது. இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில், எப்போது கேட்டாலும் வைப்பதற்குத் தயாராக இருக்கிறோம். இதுவரை நடந்துள்ள விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் அவ்வப் போது வைக்கப்பட்டு இருக்கின்றன. இதுவும் தயாரானவுடன் வைக்கப்படும்.

(திரு. கே. டி. கே. தங்கமணி எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

THIRU K. T. K. TANGAMANI: I think I have formulated my point of order. The first point is when the report is likely to be laid on the Table of the House. The second point is this. Is it proper on the part of the Government to make it known

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 29

to the public without placing it on the Table of the House. Because, generally when this House apoints a Commission, the Commission's report must be submitted to the House.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* ஹவுஸ் இந்தக் கமிஷனை அப்பாயின்ட் செய்யவில்லை. இந்தக் கமிஷனை அரசாங்கம் அப்பாயின்ட் செய்தது.

THIRU K. T. K. TANGAMANI : In the past, whenever a Commission was appointed under Section 3 of the Commission of Enquiry Act, the report was submitted to the House first. That has been the practice followed here. Now an uncommon practice has been adopted. The Commission of Enquiry has been appointed and the Commission has submitted its report and the same has been released to the Press. A number of comments have appeared in the Press on the report of the Commission.

Here an unusual practice has been adopted. The report has not been presented to the House. Whenever the Assembly is not in session, usually, the report is sent to the Members. We came to know of the contents of the Report only through the Press. So many things have appeared on the report. At least, the Hon. Speaker can give a directive in future that whenever such a report is submitted it should be laid on hte Table of the House first and the House should be informed about it. The House was never informed about this.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அமைச்சர் தெரிவித்தது போல், அந்த அறிக்கையை அளிக்க வேண்டுமென்று கேட்கலாமே ஒழிய, நாமே நியமித்த கமிஷனாக இருந்தால் அது பாயின்ட் ஆப் ஆர்டரில் வரும். ஆகவே, இன்பர்மேஷன் என்ற முறையில் கேட்கலாம். இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. அமைச்சர் அவர்கள் தயாரானவுடன் வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. இன்பர்மேஷனாகத்தான் கேட்க வேண்டும்.

DR. H. V. HANDE : I would like to say a few words on the point of order raised by the hon. Member Thiru K. T. K. Tangamani. I just want to say this as an information, then you can give your opinion on this.



1975 அக்டோபர் 29] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

This particular problem was first raised by the hon. Member, Thiru Aladi Aruna, in the House. Afterwards, the Hon. Chief Minister announced the appointment of a Commission. The cause of action arose by a Member's speech—Thiru Aladi Aruna's speech. The Hon. Chief Minister appointed a Commission as a result of the discussion in the House. As a result of the point raised by the hon. Member, finally, the Hon. Chief Minister announced the appointment of a Commission. That is why, I say the Hon. Speaker can give a ruling and ask the Government to place a copy of the Report. He can also give a direction to the Government that such report should be first laid on the table of the House, because the appointment of a Commission arose on the discussion in the House. I would also like to know whether it is proper on the part of the Government to give it to the Press without placing it on the Table of the House. It is imperative on the part of the Speaker to give a direction that it should be placed on the Table of the House.

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* தலைவரவர்களே, ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அரசாங்கம் நியமிக்கின்ற விசாரணைக் கமிஷன்களின் அறிக்கை முழுவதும் இந்த மன்றத்தில் வைப்பதற்குக் காத்து இருக்க வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த மன்றத்திலிருந்து மறைக்க வேண்டுமென்ற பிரச்னைக்கு இடம் கிடையாது. இது வரை ஏராளமான விசாரணைக் கமிஷன்களின் ரிப்போர்ட்டை இந்த அரசாங்கம்தான் இந்த மன்றத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறது. எப்போதும் கேட்டால்தான் கொடுப்பார்கள். நாங்கள் கேட்காமலேயே கொடுப்போம். தயாரானவுடன் வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். மறைப்பதற்கு எண்ணமே கிடையாது. ரகசியம் ஒன்றும் இல்லை. மன்றத்திற்கு வரும்வரை காத்திருக்கச் செய்வது சரியல்ல. உடனடியாக அவை மக்களுக்குத் தெரியவேண்டியது முக்கியம். பிரின்ட் செய்கிறார்கள். பிரின்ட் செய்து வந்த பின்னால் வைக்கத் தயாராக இருக்கிறேன்.

[1975 அக்டோபர் 29

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தயாராகி இருக்கிறது. அதனால் தான் நீங்கள் கன்டென்ட்ஸ் ரிலீஸ் செய்து இருக்கிறீர்கள். தயாராகாமல் எப்படி அறிவிப்பு செய்தீர்கள்? அந்த அறிக்கை வெளியாகி கிட்டத்தட்ட 1 மாதம் ஆகிவிட்டது . . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தயாராகி விட்டது. அறிக்கை மேஜை மீது வைக்க வேண்டுமானால் இலாகாவிற்கு அனுப்பி பிரிண்ட் செய்ய வேண்டும். சுருக்கம் வெளியிடுகிறோம். அதற்குப் பின்னாலே சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு அனுப்பி, பிரின்ட் செய்து, அதை மேஜை மீது வைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை. டைரக்ஷன் கொடுங்கள் என்று சொன்னால், பேரவைத் தலைவர் எதற்கு வேண்டுமோ அதற்குத் தான் டைரக்ஷன் கொடுக்க முடியும். எதற்கு வேண்டுமானாலும், டைரக்ஷன் கொடுக்கச் சொல்வது முறையல்ல.

(முற்பகல் 10-00)

THIRU K. T. K. TANGAMANI: The Hon. Speaker can give some directions to the Government. In the Lok Sabha, 'Directions of the Speaker'.

என்ற புஸ்தகமே இருக்கிறது. தமிழ்நாடு சட்டசபைக்கும் அது மாதிரி . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நானும் அந்தப் புஸ்தகத்தைப் படித்திருக்கிறேன். எதைக் கொடுக்க வேண்டும், எதைக் கொடுக்கக் கூடாது என்பதற்கு அதிலே டைரக்ஷன் கொடுத்திருக்கிறார்கள். நிலைமைக்குத் தகுந்தபடி முடிவு எடுக்க வேண்டுமே தவிர கட்டாயப்படுத்த முடியாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: டாக்டர் ஹான்டே சொல்கிற மாதிரி . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தக் கேள்விக்கும் அமைச்சர் விரும்பினால் பதில் அளிக்கலாம் என்ற உரிமை இருக்கிறது. அந்த நேரத்தில் அமைச்சரை நீங்கள் பதில் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று டைரக்ஷன் கொடுக்க



விதி முறையில் இடம் இல்லை. டைரக்ஷன் கொடுக்கச் சில வரைமுறைகள் இருக்கின்றன. அதையொட்டித்தான் டைரக்ஷன் கொடுக்க முடியும்.

**திரு. எம். சுரேந்திரன்:** நான் இரண்டு "கால் அடென்ஷன்" தீர்மானங்கள் கொடுத்திருந்தேன். அவைகள் என்ன ஆயின என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைகளைப் பற்றி என்னுடைய அறையிலே வந்து கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1974).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவின்* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/74) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

(ஆ) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

**தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.**

---

* 29—10—1975-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

5. அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மாரிமுத்து அவர்கள் கொடுத்துள்ள கண்டனத் தீர்மானத்தின்மீது திரு. பொன்னப்ப நாடார் அவர்களைப் பேசும்படி அழைக்கிறேன்.

* THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, Sir, I rise to speak a few words regarding the Censure Motion that is now being discussed in this House.

Before I deal with the Motion as I understand it, I have got an explanation to make to this august House. Sir, we, sitting in the Opposition, did not want to stifle any resolution that has been brought forward by the Opposition. That is the reason why when the Motion was just brought forward, we all stood up in support of it and that does not mean that we support either this Government or the Government at the Centre. We have got a policy of our own. We assume a neutral attitude so far as this Motion is concerned. Why this netural attitude has been adopted is the question which may loom large in the minds of the hon. Members.

Sir, we have lost our revered leader and we have not recovered from that rude shock which has subjected us and I think I need not expatiate at length regarding the great national loss and the loss which our party has sustained. The loss which we have sustained and the void which has been created cannot be substituted by any other process. So, I want to say certain things regarding the Motion that has been brought forward by the hon. Mover of the Motion.

The Censure Motion is one of the weapons used by the Opposition for censuring the Government. So far as the Mover of the Motion is concerned, he is an hon. Member belonging to the



ruling party at the Centre and sitting here in the Opposition he may have his own reason for bringing forward such a Resolution. But the reasons that have been advanced may be well-founded or ill-founded and I do not want to embark upon any discussion regarding the Motion. Sir, I suspect the very *bona fides* of this Motion because, according to me, the Motion that has been tabled by the hon. Member, may not serve any useful purpose because he himself has admitted that it is only an ordinary administrative matter. It is old wine coming in new bottle. Then, the 20 point programme is nothing new, according to him. He has stated that it is a continuing process and the Government has been in power for a pretty long time. There is no necessity to hustle through this 20 point programme because of this emergency. The emergency is uncalled for, unwarranted and unjust and that is the only expression which I would use.

Sir, so far as the emergency is concerned, what is the necessity for the promulgation of this emergency? On 26th June, we heard in the radio that an emergency proclamation has been issued and we heard the broadcast of the Prime Minister. The emergency proclamation has been signed by the President and on which date it has been signed is now in dispute. The point whether it was signed just after the Cabinet meeting or before the Cabinet meeting has been challenged in a writ proceeding. I do not want to dwell upon it.

Sir, at the time when the emergency proclamation was issued. our Central Finance Minister was here to attend a marriage function and so whether the Cabinet Ministers were aware of the promulgation of the emergency is a doubtful matter. According to me, the emergency was brought forward at the instance of the Prime Minister, one person hailing from Calcutta and another hailing from Bombay. I do not want to mention the names of those distinguished personalities but they have got their own reasons for the promulgation of the emergency.

It may well be asked why this emergency has been created by the Ruling Party. Sir, on 12th June 1975 the decision in the election case went against the Prime Minister and her election has been set aside and disqualification has been imposed on the Prime Minister. That day was a red-letter day as it were so far as Indian politics was concerned. Sir, nothing new has happened

[THIRU R. Ponnappa Nadar] [1975 அக்டோபர் 29

and many elections have been set aside before. So far as this case is concerned, I think legal consequences will have to follow. We will have to respect law whether we like it or not.

In the wake of the decision of the Allahabad High Court, all the political parties who wanted to see that law was respected and the rule of law prevailed, wanted the Prime Minister to vacate her Office. There was nothing wrong and there was nothing unconstitutional in it according to me. Sir, the agitation launched by the Opposition is one of the methods recognised by the Ruling Party as well when they were in the Opposition. They are forgetting the fact that when we were fighting for our Independence against the British Government, we had been saying that we would not pay the tax, we would launch satyagraha and that the military and police should not obey the orders of the then Government. I thing a similar attitude will have to be taken so far as this matter is concerned.

What has happened with regard to the election case? The Prime Minister ought to have stepped down from her office in fairness and in the good name of the party to which she belongs. She should have respected law. If the Prime Minister did not respect law, who else in this country is going to respect law, is the question which I am going to ask.

When we have stated that law should be respected, we have been dubbed as traitors and C.I.A. agents. Thiru Morarji Desai, Thiru Ashok Mehta, Thiru Mishra and other national leaders who had fought for freedom and had languished in jail for the freedom of this country, have been dubbed as C.I.A. agents. They are the best patriots and they have sacrificed their lives for the welfare of the country. Now, in the name of the emergency, they have been given a bad name and they have been incarcerated in prison.

Sir, what is the total number of persons detained now? According to me, more than 80,000 persons are in jail. But so far, correct information is not forthcoming and that information has not been placed on the table of the Parliament. They are not prepared to divulge all those details on the ground of emergency. This is the shameful state of affairs in our country.



1975 அக்டோபர் 29] [THIRU R. Ponnappa Nadar]

There is no rule of law. When a man is arrested, he should be informed of the grounds on which he has been arrested but that has not been done under the pretext of emergency.

Sir, the hon. Member, Thiru Marimuthu has stated that this Government has been riding on two horses but I am saying that the Central Government also is riding on two horses.

In this connection, I want to point out that Dr. Chenna Reddi's election was set aside by the High Court and he preferred an appeal before the Supreme Court.

He wanted permission of the present Prime Minister to continue in office. But was he permitted? No. He was asked to resign. Should not that same standard be applied against the head of the country, against the Prime Minister? That is the question I am asking. Is there one law for the Prime Minister and another law for others? This is the wonderful state of law that is being applied.

Another point that I want to stress is this. What has happened? A decision has been rendered. But the Court's decision is not respected. The decision said that the Prime Minister should resign. But the ruling party had their own morchas, their own rallies, youth rallies and students' processions. That is not considered illegal. But if it is said that the Prime Minister should resign in the wake of the judgment rendered by High Court, it is dubbed as high treason. That is the wonderful standard that is taken by the Ruling Party. I am ashamed to see this kind of thing.

We believe in democracy. We want to protect the rights of the citizens. We believe in law. We believe in supremacy of law. We are not here to say that India is Indira and Indira is India. That is not the attitude which we are going to adopt. We believe that the Constitution and the laws are supreme. We are not opposed to any progressive piece of legislation. I am asking whether our leaders were against smugglers being put in prison. Did they oppose any of the progressive laws?

[THIRU R. Ponnappa Nadar] [1975 அக்டோபர் 29

You had a long lease of life. You came to power in 1971 promising several things, that you are going to banish poverty from India. Has poverty been banished? On the other hand, poverty has mounted by leaps and bounds. We see that there are starvation deaths, deaths due to hunger and so many things. There was famine, pestilence everywhere. There were agitations everywhere. But at that time you did not have the boldness to promulgate an emergency. But the decision had been rendered afetr June 12th. On 26th you are promulgating ordinances saying there would be national calamity and you are declaring emergency.

It has been said that George Fernandez had incited railwaymen to strike. There have been several railway strikes previously. At that time the Prime Ministers in power did not think wise and proper to promulgate any ordinances and they did not impose emergency. Emergency is necessary only if ordinary law is not sufficient for meeting any crisis.

In this connection I want to say that there was some agitation in Kerala at the time when Thiru E. M. S. Nambudripad was Chief Minister. What has been done in Kerala at that time? The Government had been dismissed; a popularity elected Government was dismissed. Now there was an agitation in one State for dissolution of Assembly. You cannot say that public have no right to ask members of the legislature to dissociate themselves or to tender their resignations. Can it be said then that they were using force? So, there is one standard at one place and another standard at another place to deal with similar situations.

What has happened in East Bengal? There were so many murders; so many things happened; but even at that time emergency was not invoked. It is only ordinary law that was invoked. According to me, emergency is uncalled for. That is the point I want to stress before this House.

What is the attitude of Central Government with regard to this emergency? Some people may say that because of emergency inflation has been curtailed, prices have been brought under



1975 அக்டோபர் 29] [THIRU R. Ponnappa Nadar]

control and it is because of emergency, that land reforms, agrarion reforms and other things have been done. Nobody is against such reforms. Can any well-meaning party be against such things? We believe in democracy. We believe in socialism.

**But so far as socialism is concerned, we** do not want that wonderful socialism that has been given by the present ruling party. We do not believe in this Maruthi brand of socialism **that is being brought in. We want socialism in the real sense. I would be emboldened to say that the socialism that is preached by the ruling party is full of loopholes. They do not mean what** they say. I say this with a heavy heart. Can we find a true socialist than Jayaprakash Narayan? That is the question I am asking. My friend Mr. Marimuthu was an erstwhile member of the PSP. a formre associate of Jayaprakash Narayan. Now **for him to come and say here that Jayaprakash Narayan** planned for total revolution, is not correct (cries of shame). I do not **want** to use that expression, Sir.

THIRU K. T. K. TANGAMANI: I did not want to interrupt. The hon. Member was saying something about a particular member. I would like to know this. Savarkar was a great patriot. He was acclaimed throughout the country but when he was implicated in the murder of Mahatma Gandhi, will the hon. Member support it?

THIRU R. PONNAPPA NADAR: We will never join murderers. We will never join traitors. We will be true to our own country. We will be loyal to our country. We will be loyal to the land to which we belong, Sir. But when our leaders say anything, they are dubbed as CIA agents. I say, Sir, there are persons in our country (I do not mean anyone here) who are agents of Russia. Russian agents are working so far as Indian politics is concerned. They are behind the whole show.

This 20 point programme has been just brought forward to **boost the image of the Prime Minister.** But in reality her image has dwindled like anything. It is with political purpose **that this 20 point** programme has been brought in, because they knew that in the wake of opposition, in the wake of poverty

lingering in the country, the image of the ruling party has come to the lowest ebb. Just to boost that this 20 point programme has been published so that people may say that this 20 point programme is the panacea of all ills. That is the reason behind the putting forward of this 20 point programme.

Progressive measures are not opposed by any party. It is said by ruling party people that we are not supporting progressive policies. I do not want to go into any discussion with regard to that. We are not here to support the ruling party here or ruling party at Centre. We want law to be respected. We want democracy to flourists .We want the rule of law to be supreme. We want that in India, however high, or supreme one may be, however respectable may be the family from which he or she hails, no one should be above the Constitution or the law.

A decision has been rendered by the High Court. We do not have the right to say anything on the judgment. Supposing I am convicted by a court for an offence. I have no right to say that I will not obey the Court's verdict and that I am innocent outside. But when the Prime Minister says like that, there is no salvation for the country.

So far as Allahabad judgment is concerned, various criticisms have been levelled against the Judge. We can criticise the policy of Government but we cannot criticise the conduct of a judge. I remember reading in one paper a reported statement viz. "After all a petty officer drawing Rs. 1,500 or so, has given a wrong decision, an anti-democratic decision". That is the version given by one of the members of the ruling party. If members of the ruling party were to talk of the judiciary in such a collateral way, what would be the respect for the Judges? What would be the respect for law which the public will have? We will have to think of it when making such uncalled for remarks in the public. Sir, that sort of democracy we do not want.

Then, another point which I want to stress is this. I find that the image of the ruling party has dwindled. In Gujarat there has been an election. What has happened in Gujarat? The Prime Minister toured Gujarat and she had been there for



about ten or twelve days and crores of rupees have been spent. That is the report and I do not know the amount that has been spent. With all that, were they able to come to power? They would say that all the reactionary elements—the right reactionaries and the left adventurists have all joined together and they have just flouted the rule of the ruling party. That is the argument. But what is the position? With all her power, with all her pomp, with all her charisma, with all her appeal, with all her saying that she is the daughter-in-law of Gujarat, the people were not prepared to accept all her promises. They have turned down her request. And finally what happened? Now, have the Central Government allowed the Gujarat Government to exist peacefully is another question, which will have to be considered.

Sir, so far as the progressive pieces of legislation are concerned, who prevented the Central Government? At the Centre the ruling party has got a comportable majority—a majority of more than two-thirds—and in regard to the 22 States, the present ruling party is ruling in almost all the States, except in Tamil Nadu, Gujarat and now in Jammu and Kashmir. Nobody prevented them. They have got their own party people. They could have implemented all their progressive policies straightaway. On the other hand, now they turn round and say, that Indira Gandhi is the only person who is competent to rule this country and who is competent to bring forward htese progressive pieces of legislation. There are others who could do better and we need not be under the illusion or the impression that dictatorship should be the only thing which should be here. We say that the dictatorship of a single party, the dictatorship of a single individual we do not uphold. We want a democratic opposition to function. Is any democratic opposition now functioning in the Delhi Parliament is the question which will have to be considered by the hon. Members.

Sir, so far as the Delhi Parliament is concerned, one of the learned Members has been saying that in July the Parliament met. But what happened in the Parliament then? Only Government Bills were passed. There was no question hour, nothing, and that is the wonderful democracy, a new democracy and a new democratic process that has been set up. Are we do respect it?

Are we to tolerate it? Are we to singh the praise of this wonderful method of new experiment in democracy being encouraged in Delhi? Certainly not, Sir. And we have got a feeling—we respect all the individuals. We respect the Prime Minister. We respect the exalted office. But with all that we differ in certain fundamental things.

Should not the fundamental things in our Constitution be respected ? The basic structure of our Constitution should it not be respected? That is the reason why we had such elaborate arguments in the Supreme Court of India regarding the basic concept of the Constitution. The fundamental principles are now abridged and they are now given a go-by.

Now, this emergency has been used as a ruse to weed out certain Officers by the Central Government as well as by the State Governments. I do not want to embark upon any discussion on that. You have been armed and clothed with the power and now you are using it as a Damocle's sword against certain Officers whom you do not like. Both the Central Government as well as the State Government are resorting to it. I do not want to justify that and I do not want to say anything more with regard to that.

Sir, another point which I want to touch upon is land legislation. The Land Ceiling Act has been there, while the Congress was in office and it has been found fault with by certain Members. The present ruling party says that they have reduced the ceiling of 30 standard acres to 15 standard acres. The definition of 'family' had been changed by the ruling party, so that certain objections were filed. So far as the land legislation is concerned, we never opposed the land legislation. The land is to the tiller is the word that has been accepted by our party, while we were in power and while we are in the Opposition.

So far as other pieces of legislation that have just been put forward are concerned, we do not want any class war. We do not want a proletariat revolution. We do not say that the workers and the peasants should unite and just create a class war. We are for an orderly rule of law and that should be our paramount consideration. We are not for anarchism.





We do not say that there should be anarchy in this country. On the other hand, there are certain people who say that the State will wither away. I do not believe that political dogma. I do not believe in the political doctrine that has been given by certain parties. That does not mean that they have no right to say that. But the right and the liberty that has been granted to us should not be abused in an abundant measure is the next point which I am submitting.

So far as the resolution that is now discussed before this House, this Government might have its own reasons. This Government can defend itself. We are not here to defend this Government or the Central Government.

Our leaders should be released and the State of emergency should be revoked. Free and fair elections should come in the near future. There is no necessity for any emergency. The ordinary law of the country would be sufficient and there is no fear that there would be a bloody revolution in India.

Some leaders went about saying that if there was no promulgation of emergency, the country would go to flames. Sir, we believe in democratic values. We believe in peaceful methods. We believe in Gandhian ideals. And that is the reason why our leader, the late lamented leader Kamaraj who was a true Gandhian, who was a followed of Gandhiji, who was a disciple of Gandhi had taught us to be disciplined. With that sense of discipline and with a heavy heart we thought that all our leaders who were in Jail would be released on October 2nd. They did not commit any conspiracy. They did not commit any major offence and now they are detained without trial.

There are several thousands of families who have been just thinking against this and who cannot express themselves on account of this emergency. At least this forum, this Assembly is the only place in which we can just ventilate our grievances. That is the reason why we welcome the introduction of the Censure Motion, not in the sense that we are just for supporting the ruling party at the Centre or the ruling party here.

[THIRU R. Ponnappa Nadar] [1975 அக்டோபர் 29

Sir, all the members would agree with me when I say that we have passed a resolution condemning the emergency. We have requested the Central Government to revoke the emergency. We have also requested the Central Government to release all political prisoners, failing which there would be untoward political incidents happening elsewhere. Even now it is not too late. Nothing has happened and nothing will happen. I think it is time ripe for the Central Government and the Prime Minister, if the Prime Minister is so well advised, for revoking the emergency. I think, Sir, good sense, better sense will prevail with the ruling party and they will revoke the emergency.

So far as the MISA is concerned, somebody said in the Press that it is not Maintenance of Internal Security Act, but it is Maintenance of Indira Security Act. I do not want to say that. But that is the criticism and that is the feeling that is now prevalent among the public. So, I would once again appeal to the Central Government through you, Sir, and through this House the emergency should be lifted and all our leaders should be released and normalcy should be restored.

Another point which I want to say is about censorship, the Press censorship. Sir, whatever we say, whatever we speak here, is just cut and I think our speeches will find no place in any paper. But I am not sorry for it. I wanted to say what I felt. I wanted to say as a Lawyer, as a Legislator and as a citizen what our feelings are against the emergency. There is nothing personal against any big individual, there is nothing emotional against any big individual. But reason should prevail, better sense should prevail. Law should be protected, life should be protected, liberty should be protected. Man is born free and everywhere he is in chains, said Mr. Rouseau. Now, Sir, in India we are not born free. We are in chains. We have been just imprisoned.

In 1942 when the Quit India Movement was announced, what happened in this country? All our leaders said that the war is not over and we should do or die and the British quit India. At that time some political leaders were saying that it is people's war. They are the people who are now guiding the destinies of India and they are now the chief advisers of the Prime Minister.



1975 அக்டோபர் 29] [THIRU R. Ponnappa Nadar]

(முற்பகல் 10-30)

Can this be tolerated? Can this be encouraged? These are all questions which we will have to consider. We are not political opportunists. Political opportunism is always uncalled for and unwarranted We should always guard against creating such an impression. We should always be against the infiltration of foreign agencies. We should not be agents of America. We should not be agents of Russia. We should not be agents of any other country. We are for non-alignment with regard to our foreign policy. So much so, we should not align with any foreign bloc. India is supreme and people are our wealth. The national wealth should be preserved.

So far as htis Resolution is concerned, we are remaining neutral. We have nothing to say more than to say once again that the emergency is unnecessary and uncalled for.

With these words, I conclude.

Thank you, Sir.

*திரு. செ. அரங்கநாயகம்:* தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கே எமர்ஜென்ஸியை எதிர்த்துப் பேசினார்கள். அவரது பெருந்தலைவர் திரு. காமராஜ் உயிரோடு இருந்த நேரத்தில் அதை எதிர்த்துப் பேசவில்லையே, ஏன்?

THIRU R. PONNAPPA NADAR: The hon. Member should withdraw that.

*திரு. ஜே. ஜேம்ஸ்:* சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். There should not be any insinuation.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அது எல்லாம் இப்போது வேண்டாம்.

*திரு. பெ. சீனிவாசன்:* நேற்று அவர்களை எல்லாம் அனுமதித்தீர்கள்.

*திரு. செ. அரங்கநாயகம்:* இப்போது அவைமுன் வந்திருக்கிற கண்டனத் தீர்மானத்தை திரு. பொன்னப்ப நாடார் ஆதரிக்கின்றாரா? எதிர்க்கிறாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மன்னிக்க வேண்டும். நான் ஆங்கிலத்தில் பேசியதனுல் கனம் உறுப்பினர் ஒருவேளை சரியாக கவனிக்கவில்லையோ, என்னவோ. ஒரு முறைக்கு பல முறை நாங்கள் ந்யூட்ரலாக இருக்கப்போகிறேம் என்று சொல்லியிருக் கிறேன்.

எங்கள் பெருந்தலைவர் காமராஜர் உயிரோடு இருந்தபோது அவசரகாலச் சட்டத்தைப் பற்றி பலமுறை பேசியிருக்கிறுர்கள். நவசக்தி போன்ற பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றன. ஜூலை மாதம் 2 ஆம் தேதி, 3 ஆம் தேதி அதுபற்றி அவரது கருத்து என்ன என்று கேட்டதற்கு எமர்ஜன்ஸி ரத்து செய்யப்பட வேண்டும், தலைவர்களெல்லாம் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்திருக்கிறுர்கள். நாங்கள் அவரது கருத்தை ஊர் ஊராகச் சென்று கூறியிருக்கிறேம். மாண்புமிகு உறுப்பினர் அதைப்பற்றி இங்கே எழுப்பிய காரணத்திஞல் நான் இதைக் கூறவேண்டியவனுக இருக்கிறேன்.

ஆகவே இன்றைக்கு திரு. காமராஜர் என்ன கூறினுர்கள் என்பதைப்பற்றி விவாதிக்க வேண்டாம். அவர்களுக்கு நாம் செய்ய வேண்டிய மரியாதை அவரது கருத்துக்கு மாசு கற்பிக் காமல் இருப்பதுதான். எமர்ஜன்ஸி அறிவிக்கப்பட்டவுடன் மன வேதனை அடைந்து, எமர்ஜன்ஸி அறிவிக்கப்பட்ட தேதியில் இருந்து 100-வது நாள்-மனவேதனை தாங்க முடியாமல் மரணம் அடைந்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே வேண்டாததைப் பேசி எங்கள் பெருந் தலைவருக்கு மாசு கற்பிக்க வேண்டாம், அது மறைந்த மாபெரும் தலைவருக்கு மரியாதை செய்வதாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எமர்ஜன்ஸி பற்றி அவர் பேசியது 28-6-1975 நவசக்தி பத்திரி கையில் வந்திருக்கிறது. அந்த விவரங்கள் காமராஜ் கருத்துரை என்ற தலைப்பில் வந்திருக்கிறது. அவற்றை இங்கே எடுத்துச் சொல்ல, என்னை மீண்டும் ஒரு விவாதத்திற்குள் இழுத்துச் செல்லவேண்டாம் என்று கூறி அமர்கிறேன்.

(திரு க. உரொ. எட்மண்ட் எழுந்திருந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது விவாதம் இல்லை. உங்கள் கருத்தை நீங்கள் பேசுகிறபோது சொல்லுங்கள்.



திரு. க. உரொ. எட்மண்ட்: No. No. It is a question of personal explanation on behalf of our party. தலைவர் அவர்களே, நமது பொன்னப்ப நாடார் அவர்கள் அண்ணு தி.மு.க. உறுப்பினர் திரு. அரங்கநாயகம் மறைந்த பெருந்தலைவர் காமராஜைப் பற்றி மதிப்புக் குறைவாகச் சொன்னதுபோலச் சொன்னுர்கள். அண்ணு தி.மு.க. வைப் பொறுத்தவரை அந்தப் பெருந்தலைவரிடம் மரியாதை வைத்திருக்கிறேம் . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது அவற்றைக் குறிப்பிடுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: அவரே இப்போது இந்த மன்றத்தில் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னுர்கள். அவசரகால நிலையை அறிவித்த நூறுவது நாள் — அந்த வேதனை யைத் தாங்க முடியாமல் அவர் இறந்தார் என்று சொன்னுர்கள். இந்த மாதம் ஆரம்பத்தில் வந்த துக்ளக் பத்திகையைப் பார்த்தால் . . . . .

THIRU R. PONNAPPA NADAR: Are you allowing a discussion on it?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசும்போது அவரது கருத்தைச் சொன்னுர். நீங்கள் பேசும்போது உங்கள் கருத்தைச் சொல்லலாம். இப்போது தனியாக விளக்கம் கொடுக்க வேண்டியதில்லை. அடுத்து திரு. ஏ. ஆர். பெருமாள் பேசுவார்.

* **திரு. ஏ. ஆர். பெருமாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிற கண்டனத் தீர்மானத்தை பார்வர்ட் ப்ளாக் கட்சியின் சார்பில் எதிர்த்து என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த ஆளுங்காங்கிரஸ் கட்சியின் தலைவர் பெருமதிப்பிற்குரிய மாரிமுத்து அவர்கள் காங்கிரஸ் கட்சியின் வரலாற்றை எல்லாம் எடுத்துக் கூறி,

காங்கிரஸ் கட்சி எந்த லட்சியத்திற்காகத் தோற்றுவிக்கப்பட்டது என்பதையும், அது விடுதலைக்குப் பிறகு எந்த மாதிரியாகச் செயல்பட்டது என்பதையும் விரிவாக எடுத்துப் பேசினார்கள்.

விடுதலைப் போராட்ட காலத்தில் காங்கிரஸ் கட்சி நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நாம் மறந்து விடுவதற்கில்லை. இன்றையதினம் அவற்றையும் எடுத்துச் சொல்வது முக்கிய அம்சமாக இருக்கிறது. கராச்சி காங்கிரஸ் தீர்மானம், லாகூர் காங்கிரஸ் தீர்மானம் — அவை எல்லாம் மக்களிடத்தில் எத்தகைய நம்பிக்கையை அளித்தன. ஆனால் 1946 ஆகஸ்டு 15ஆம் தேதிக்குப் பின்னர் அந்தக் கருத்துக்கள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டன — தொடர்ந்து இருபது ஆண்டுகாலம் காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்ததே, அப்போது முன்பு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை செயல்படுத்த என்ன என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று கேட்கிறேன். அந்த இருபதாண்டுக் காலம் கிராமத்தில் வாழ்கிற விவசாய மக்களுக்கு, ஆலையில் அல்லல்படுகிற தொழிலாளி மக்களுக்கு, உழைக்கின்ற உழைப்பாளி மக்களுக்கு எந்த முற்போக்கான திட்டத்தையாவது அளித்ததா? நாம் அதை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

1967 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழகத்தில் ஏற்பட்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கடந்த எட்டாண்டுகளில் கிராமத்தில் வாழ்கின்ற விவசாய மக்களுக்கு, உழைக்கின்ற பாட்டாளி மக்களுக்கு, உழைப்பாளி மக்களுக்கு என்ன என்ன நல்ல காரியங்களை எல்லாம் செய்திருக்கிறார்கள் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிற கண்டனத் தீர்மானம் என்ன? பிரதமர் அறிவித்த 20 அம்சத் திட்டத்தை இந்த அரசு சரியாகச் செயல்படுத்தவில்லை, செயல்படுத்த தயங்குகிறது. தாமதிக்கிறது என்பதுதானே. ஏழைஎளிய கிராம மக்களுக்கு, தொழிலாளி மக்களுக்கு எவ்வளவு தீவிரமான திட்டங்களை எல்லாம் இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது கடந்த எட்டாண்டுகளில் என்பதை அவர்கள் ஒரு கணம் மனச்சாட்சியைத் தொட்டு எண்ணிப்பார்த்தார்களா என்று கேட்க விரும்புகிறேன்.





காங்கிரஸ் கட்சி விடுதலைக்கு முன்னால் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் விடுதலைக்குப் பின்னர் இருபதாண்டுகள் ஆட்சியில் இருந்தார்களே, நிறைவேற்றினார்களா? 1967-க்கு முன்னர் காங்கிரஸ் பிளவுபடாது ஒன்றாகத்தானே இருந்தது. 1967 தேர்தல் களத்தில் பிளவுபடாத ஒரு கட்சியாக இருந்து தானே எதிர்க்கட்சிகளைச் சந்தித்தார்கள். அதற்குப் பின்னர்தான் குடியரசுத் தலைவர் தேர்தல் வந்தது. குடியரசுத் தலைவர் தேர்தலின்போது ஸ்தாபன காங்கிரசிற்குள்தான் திருமதி இந்திராகாந்தி அம்மையார் இருந்தார்கள். அவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சதி செய்வதாகவும், முற்போக்கான திட்டங்களைத் தடுப்பதாகவும், சோஷலிச சமுதாய அமைப்புக்கு குந்தகம் விளைவிப்பதாகவும் அன்றைக்குச் சொன்னார்கள். திரு. சஞ்சீவி ரெட்டியை அகில இந்திய காங்கிரஸ் ஸ்தாபனம் தேர்ந்தெடுத்தது குடியரசுத் தலைவர் பதவிக்கு. திரு. சஞ்சீவிரெட்டி நாமினேஷன் பேப்பரில் திருமதி இந்திராகாந்திதான் கையெழுத்திட்டார்கள். அதற்குப் பின்னால் திரு. வி. வி. கிரி சுயேச்சை உறுப்பினராக நிற்கிறார். இந்திரா காந்தியினுடைய ஆதரவோடு நாடு பூராவும் திரு. கிரிக்கு ஆதரவு கேட்கப்பட்டது. அன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி தமிழகத்திலே பெரும்பான்மையோடு நடந்து கொண்டிருக்கின்றது. அன்றையதினம் முதலமைச்சராகக் கலைஞர் கருணாநிதி அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். 1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் இங்கு இவர்கள் ஆட்சி அமைவதற்குக் காரணமாக இருந்தவர்களில் முதல் மூத்தவராக இருந்தவர் இராஜாஜி அவர்கள். அந்த இராஜாஜி அவர்கள், முதலமைச்சருடைய வீடு தேடி வந்து, சஞ்சீவி ரெட்டிக்கு வாக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டார்கள். நானெல்லாம் அப்பொழுது சுதந்திராக் கட்சியிலே இருந்தேன். அப்பொழுது நாங்கள் பார்வார்ட் பிளாக் கட்சியிலே இருந்தாலும், சுதந்திராக் கட்சிக்கும் பார்வார்ட் பிளாக் கட்சிக்கும் இருந்த அரசியல் கொள்கையினுடைய அடிப்படையில், சுதந்திராக் கட்சியில் இருந்தேன். திரு. சஞ்சீவி ரெட்டிக்கு ஓட்டுப் போடமாட்டேன் என்று பத்திரிகையிலே அறிக்கை கொடுத்த காரணத்தால் இராஜாஜியினுடைய கோபத்திற்கு ஆளானேன். நம்முடைய ஆட்சிக்குத் துணையாக நின்றவர், நமக்கு ஆதரவு கொடுத்தவர், இந்திய அரசியலில் மிகப் பெரிய தலைவர், உலக அரசியலில் மிகப் பெரிய தலைவர், அவர் வீடு தேடி

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1975 அக்டோபர் 29

பீகாரிலே கிளர்ச்சி நடக்கிறபொழுது என்ன சொன்னார், இந்திரா காந்தி? சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசை இராஜினாமா செய்யச் சொல்வது நியாயம்தானா என்று கேட்டார்கள். அதே கேள்வியை இங்கே கேட்டார்களா? அப்பொழுது யாராவது கேட்டார்களா? சட்டப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை இராஜினாமா செய்யச் சொல்லி கிளர்ச்சி செய்யச் சொல்வது நியாயம்தானா என்று யாராவது கேட்டார்களா?

வன்முறைகள் தலைதூக்குவதை நாம் ஒத்துக்கொள்ளவில்லை. அராஜகம் தலைவிரித்தாடுவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. எந்தக் காரணங்களுக்காக அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டதோ அந்தக் காரணங்களை நாம் மறுக்கவில்லை. அராஜகம் தலைதூக்குகிறது, இராணுவமே நீ உத்தரவுக்குக் கீழ்படியாதே, போலீசாரே நீங்கள் உத்தரவுக்குக் கீழ்படியாதீர்கள் என்று ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்ற தலைவர்கள் பேசினார்கள். அதன் பிறகு நாட்டிலே அராஜகம் தலைவிரித்தாடுகிறது, எனவே, அவசரச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று காரணம் சொல்லப்பட்டது.

அதைக் கூட நான் வாதத்திற்காக ஏற்றுக்கொள்கிறேன். அவசரச் சட்டம் உருவாக்கிய நிலையை, நாட்டிலே உருவாக்கிய நிலையை. அவசரச் சட்டம் தவிர வேறு எந்தவிதமான சட்டத்தின் மூலமும் கொண்டு வந்திருக்க முடியாது, அந்தக் காரியத்தைச் சாதிக்க முடியாது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். அராஜகம் தலை தூக்க ஆரம்பித்திருக்கிறது, வன்முறைச் செயல்கள் தலைவிரித்தாடுகின்றன, எங்கு பார்த்தாலும் பலாத்காரம் தலைவிரித்தாடுகிறது. எனவே, நாட்டில் அமைதி ஏற்பட, ஒழுங்கு ஏற்பட அவசரச் சட்டத்தைக் கொண்டு வருவதைத் தவிர வேறு வழியில்லையென்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்டுவிட்டது என்று உங்களால் சொல்லப்பட்டிருக்கிற இந்த நிலைமைகளுக்கும் தேர்தல் சட்டத்தை திருத்துவதற்கும் சம்பந்தம் இல்லை. தேர்தல் சட்டத்திற்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? தேர்தல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் என்ன வந்தது?



1975 அக்டோபர் 29] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

ஒன்று சோஷலிசம்தான் நம் கொள்கை என்று சொன்னால் அதைத் தெளிவாக உருவாக்க, சோஷலிசத்தை நிறைவேற்றுவதற்கு, இப்பொழுதிருக்கிற ஜனநாயகச் சட்டங்களும் சம்பிரதாயங்களும் தடையாக இருக்கின்றன என்று சொன்னால், இந்திரா காந்தி இந்தியாவிற்கு சர்வாதிகாரியாக மாறி 10 ஆண்டுக் காலத்தில் சோஷலிச சமுதாயத்தை நாங்கள் உருவாக்குவோம் என்று சொல்லுங்கள்—நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சியின் தீர்மானங்களைப் பாருங்கள், வரிசையாக. ஆவடியிலே, சோஷலிசப் பாட்டர்ன், சோஷலிசப் பாணி—புவனகிரியிலே டெமாக்ரட்டிக் சோஷலிசம், ஜனநாயக சோஷலிசம்—1971 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னால், செய்தியாளர் கேட்ட கேள்விக்கு, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் என்ன சொன்னார்கள்?

Socialism on mixed economic Socialistic policv

கலப்படப் பொருளாதார சோஷலிசம் என்று சொன்னார்கள். இந்த சோஷலிசம் படுகிற பாடு, இந்தியாவில்—அடடா—இந்தியாவில் என்ன பாடு படுகிறது? சோஷலிசத்தினுடைய கருத்துக்களை நாம் இந்த மாமன்றத்திற்கு எடுத்துச் சொல்லித் தான் தெரிய வேண்டுமென்ற அவசியமில்லையென்று நினைக்கிறேன்.

ஆகவே, சோஷலிசக் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதில், சோஷலிசத் திட்டங்களை நிறைவேற்றுவதில், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், இங்கே இருக்கிற அரசைப் பொறுத்தவரையில் யாருக்கும் சளைத்த அரசு அல்ல, அயர்ந்த அரசு அல்ல. இங்கிருக்கிற அரசு எடுத்து வருகிற நடவடிக்கைகளை ஒவ்வொன்றாக நாம் பார்ப்போமானால் இவை அத்தனையும் தெளிவாக விளங்கும். இந்த 20 அம்சத் திட்டம் இன்றையதினம் நாட்டில் எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதை நடுநிலைமை தவறாமல் நாம் யோசித்துப் பார்த்தால், மிகத் தெளிவாகத் தெரியும். இந்த 20 அம்சத் திட்டத்திலே கள்ளப் பணம், கறுப்புப் பணம் பற்றி தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கள்ளப் பணத்தைப் பிடிக்க

அரசியல் நோக்கத்தோடு கொண்டு வந்திருந்தால் ஆட்சேபணை இல்லை, அல்லது உண்மையிலேயே இந்த அரசு 20 அம்சத் திட்டத்தின் காரியங்களை நிறைவேற்ற சரியானபடி செயல்படவில்லை என்ற நோக்கத்தோடு கொண்டு வந்திருந்தால் இந்த அரசு அதை நிறைவேற்ற கவனம் செலுத்தவில்லை என்று கொண்டுவந்திருந்தால் உண்மையிலேயே சொல்கிறேன், அவர்கள் நடுநிலை தவறிப் பேசுகிறார்கள் என்றுதான் சொல்ல முடியும் ஏற்கனவே பல காரியங்கள் நடந்துவிட்டன என்று சொ முடியும், ஒரு திட்டத்தை மத்திய அரசு சொன்னால் அந் காரியம் நடந்திருக்கிறது என்றோ அல்லது அந்தக் காரியட நடந்துகொண்டிருக்கிறது என்றோ சொன்னால் கூட உடனே பிரதம மந்திரியை அவமானப்படுத்துகிறீர்களே என்று சொல்கிறார்கள்.

இது ஒரு தேசம், இங்கே 60 கோடி மக்கள் இருக்கிறார்கள். அந்த 60 கோடி மக்களிலே தமிழன் என்ற ஒரு இனம் இருக்கிறது, அந்த இனத்திற்கு ஒரு மொழி, அந்த இனத்திற்கு என்று தனிக் கலாச்சாரம், பண்பாடு, வரலாறு இவையெல்லாம் இருக்கின்றன, இந்தியா ஒரு நாடு, அதற்கு பிரதம மந்திரி இந்திரா காந்தி, அதேபோன்று தமிழ்நாட்டில் உள்ள நான்கு கோடி மக்களுக்கு முதல்வர் கருணாநிதி. அவர்கள் இந்த இரண்டையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். அப்படியில்லாமல் நாங்கள் என்னவோ மாற்றாந்தாய் பிள்ளைகளைப்போல அன்னிய தேசத்திலிருந்து இங்கே குடிவந்தவர்களைப்போல வேற்று நாட்டிலிருந்து இங்கே பிழைக்க வந்தவர்களைப்போலப் பேசுவது சரியாகாது முறையாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நடத்திக்கொண்டு இருக்கிற அரசியல், சரித்திரம் வருங்காலத்திற்கு ஒரு முன்னோடியாக இருக்க வேண்டும், எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும், ஏதாவது முறைகேடுகள் இருந்தால் கண்டிக்க வேண்டாமென்று சொல்லவில்லை, ஆனால் இந்த அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் ஏழை எளிய மக்களுக்கு சாதாரண சாமான்ய மக்களுக்கு பாட்டாளி உழைப்பாளி மக்களுக்கு நன்மை செய்கிறதே தவிர முதலாளிகளுக்கு ஆலையதிபர்களுக்கு மோட்டார் மன்னர்களுக்கு நிலச் சீமான்களுக்கு அவர்களுடைய முன்னேற்றத்திற்கு



ஆதரவாக ஒரு தீர்மானத்தை ஒரு சட்டத்தை இந்த மன்றத்திலே நிறைவேற்றியிருக்கிறது என்று யாராவது எடுத்துக்காட்டினால் நான் இந்தக் கண்டனத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசத் தயாராக இருக்கிறேன். இந்த ஆட்சிப் பொறுப்பிலே தி. மு. க. வந்தபிறகு அரியாசனத்திலே ஏறிய பிறகு ஏழை எளியவர்களுக்கு எதிராக பணக்காரர்களுக்கு ஆதரவாக ஒரு சட்டம் நிறைவேற்றியிருப்பதாக எடுத்துக் காட்டினால் இந்தத் தீர்மானத்தை நான் ஆதரித்துப் பேசத் தயாராக இருக்கிறேன். அப்படி இல்லை. ஆகவே, இந்தக் கண்டனத் தீர்மானத்தை எதிர்த்து இது தேவையற்றது என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில எதிர்க்கட்சிகள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தக் கண்டனத் தீர்மானத்தை எதிர்த்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கக் கூடிய நண்பர்கள் பேசிய பல அரிய கருத்துக்களையெல்லாம் நாங்கள் தெரிந்து கொள்வதைப்போல் தமிழ்நாட்டிலேயுள்ள மக்களும் இந்தியாவிலே உள்ள எல்லா மக்களும் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலையில் நாம் இன்றைக்கு இருக்கிறோம். இந்தச் சூழ்நிலைக்குக் காரணம் என்ன என்பது இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்களுக்கே தெரியும்.

சுற்றி சுற்றி இந்த நான்கு சுவர்களுக்குள்ளேதான் நாம் பேசிக்கொள்ள முடியும் என்ற நிலைமைதான் இன்றைக்கு இருக்கிறதே தவிர வேறு யாருடைய காதுகளுக்கும் எட்டக்கூடிய நிலைமையில்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆனால், ஜனநாயகத்தைக் கட்டிக் காத்து வருகிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடியவர்கள் இதை யோசிக்கவேயில்லை, 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்ற முறையிலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 20 அம்சத் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றத் தவறிவிட்டது என்று தீர்மானம் கொண்டுவந்தவர்கள் 20 அம்சத்தையும் வரிசையாகச் சொல்லி இந்த இந்த விஷயத்தில் இந்த அரசு நிறைவேற்றத் தவறிவிட்டது என்று சொன்னால் உதவியாக இருக்கும். அப்படி யாரும் சொல்லவில்லை, நான் கேட்டுக் கொண்டே இருந்தேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மாஜிஸ்திரேட் கூட ஜாமீன் கொடுக்க மறுக்கிறார் என்று குற்றஞ் சாட்டுகிற அளவிற்கு இந்த 20 அம்சத் திட்டத்திலே நுழைந்து கொண்டு பேசினார். 20 அம்சத் திட்டம் என்ற பெயரால் அவருடைய கட்சி விஷயங்களைச் சொல்லி யாரோ சில பேர் தாக்கப்பட்ட விஷயம் பற்றி எல்லாம் சொன்னார்கள்.

அவர் நம்மோடு கொள்கையிலே ஒன்றாக இருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும், 20 அம்சத் திட்டம் பற்றி அவருக்குத் தெரியாமல் இருக்காது, இருந்தாலும் அதைச் சொல்லாமல் இதைச் சொல்ல வேண்டுமென்பதற்காக அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டார். இந்த நெருக்கடி நிலைமையை வைத்து இந்தத் தீர்மானத்தின் மீது பேசுவதுபோல் தன்னுடைய கட்சி விவகாரங்களைப் பற்றி பேசுவதற்கு தங்களுடைய கட்சிக்காரர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைச் சுட்டிக்காட்டுவதற்குப் பயன்படுத்திக் கொண்டார். ஆனால் அதே நேரத்திலே அவ சொன்னார், நம்முடைய முதலமைச்சர் தன்னுடைய கட்சி கொள்கையைப் பரப்புவதற்காக நெருக்கடி நிலைமையைப் பயன் படுத்திக்கொள்கிறார் என்று குற்றஞ்சாட்டுகிறார், அவர் தன்னுடைய கட்சியின் நலனுக்காக நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டால் தவறில்லை, ஆனால் நாம் பயன்படுத்திக் கொண்டால் தவறு என்று சொல்கிறார்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பவர்களின் நோக்கம், 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் தவறிவிட்டது என்பதல்ல! ஒரே நோக்கம் இதை வைத்துக் கொண்டு மத்திய அரசுக்கும் மாநில அரசிற்கும் ஒரு போராட்டத்தை உண்டுபண்ண வேண்டும், நீண்ட நெடுநாட்களாக அவர்கள் இதிலே முயற்சி செய்து தோல்வி யடைந்து கடைசியிலே சில தோழர்கள் அணிவகுத்து இதை வைத்துக்கொண்டு மோதல் விளைவிக்கலாம். அதற்குப் பிறகு, எப்படியாவது இந்த அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட வேண்டுமென்றுதான் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர வேறு அல்ல.

கண்ணியமிக்க மாரிமுத்து அவர்கள் பேசினார்கள். கண்ணியமாக இருந்தது அவருடைய பேச்சு; அதிலே ஒன்றுமில்லை. அவசர நிலை வந்ததற்கான காரணங்களை அவர்கள்





வரலாற்று ரீதியாக ஆராய்ந்தார்கள். அவர் சொன்னது உண்மை தான், நாம் சொல்வது என்னவென்றால் நெருக்கடி நிலைமை முதலிலே 1971 ஆம் ஆண்டிலே வந்தது, இப்போது இன்னொரு நெருக்கடி நிலைமை, சுப்ரீம் எமர்ஜன்ஸி வந்திருக்கிறது, முதல் நெருக்கடி மோசமான நிலைமையை உருவாக்கியதால் இரண்டாவது நெருக்கடியிலே இருந்து கொண்டிருக்கிறோம். தோழர் கே. டி. கே. அவர்கள், 'இம்மென்றால் சிறைவாசம்; ஏனென்றால் வனவாசம்' என்ற பாரதியார் பாட்டைப் பாடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். காணோம். 'இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம்' ஜார் மன்னன் காலத்து ரஷ்யாவிலே, அதேபோன்று இங்கேயும் செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே அறமாகித் தீர்ந்தபோதில், அம்மை மனங்கனித் திட்டாள்; என்று சொல்லியிருந்தால் நாம் எல்லாம் மனங்

(முற்பகல் 11-00)

களித்திருப்போம். 'ஆகா' என்று எழுந்தது யுகப் புரட்சி அங்கே. இங்கே 'அம்மா' என்று வந்தது அவசரச் சட்டம், அதிலே 20 அம்சத் திட்டம்! அந்த 'அம்மா' மனம் கனிந்து அளித்த 20 அம்சத் திட்டத்தைப் பற்றி நம்முடைய தோழர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொல்லும் பொழுது மிகவும் உன்னிப்பாகக் கவனித்தேன். அவர்களுக்கு வேண்டிய அம்சங்களை மட்டும் எடுத்துக் கொண்டு வேண்டாத அம்சங்களை விட்டுவிட்டார்கள். இருபது அம்சத் திட்டத்தை இந்த அரசாங்கம் செய்யவில்லை என்று சொல்ல வந்த அவர்கள் அந்த இருபது அம்சத்தையும் சொல்லிவிட்டு அதைப்பற்றிச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் அதற்குள்ளே போகவில்லை, போக மாட்டார்கள், போக முடியாது! அந்த நிலைமைகள் எனக்குத் தெரியும். இருபது அம்சத் திட்டத்தைப் பற்றி அவர்கள் மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல்—அவர்கள் 'மனச்சாட்சி மரபைச்' சேர்ந்தவர்கள்—பேசுவார்கள் என்று எதிர்பார்த்தோம்.

நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் அறிவித்த 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் பயனாக நாட்டில் பெரிய பொருளாதார மாற்றத்தைக் கொண்டு வந்தால் நம்மைவிட மகிழ்ச்சி அடைபவர்கள் வேறு யாரும் இல்லை. ஆனால் இதில் என்ன இருக்கிறது? இந்திய அரசியல் சட்டத்தில் இருப்பது

[திரு. க. சுப்பு] [1975 அக்டோபர் 29

அப்படியே இருக்கிறது. புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. இந்திய அரசியல் சட்டத்தில் 'Directive principles of State Polic யில் இருப்பதைத் தவிர, அதற்குள் அடங்காத வேறு ஏதாவது இருந்து சொன்னார்களா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

Directive principles of State Policy

அதிலே எல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரே சம்பளம் என்பது முதற்கொண்டு சொல்லி யிருக்கிறார்கள். அதையெல்லாம் ஏன் இவர்கள் இதுவரையில் செய்யவில்லை. சுதந்திரம் பெற்ற 28 ஆண்டுக் காலமாக ஏன் செய்யவில்லை ? அதுவரையில் ஒரே கட்சிதான் ஆட்சி செலுத்தி வந்திருக்கிறது. அரசியல் சட்டத்தின்படி பிரமாணம் எடுத்துக் கொண்டு பதவியில் இருக்கின்ற கட்சி 28 ஆண்டுக் காலமாக அரசியல் சட்டத்திலே கூறப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி அவற்றைச் செயல்படுத்தத் தவறிவிட்ட ஒரு அரசு, ஒரு கட்சி, இங்கே அரசியல் சட்டத்திலே இருக்கிற குறைந்த அதிகாரங்களை வைத்துக் கொண்டு எந்த அளவிற்குத் திறமையாக நிறைவேற்ற முடியுமோ அந்த அளவிற்குத் திறமையாக நடத்துகின்ற ஒரு மாநில அரசைப் பார்த்து தவறி விட்டது என்ற குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள். அதுதான் எனக்குப் புரியவில்லை.

அருமைச் சகோதரியார் அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். 'ஊருக்குத்தான் உபதேசமடி, உனக்கும் எனக்கும் இல்லையடி பொன்னம்மா' என்று. அப்படி அவர்கள் சொன்னது இன்னும் என்னுடைய காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்த 20 அம்சத் திட்டத்திலே நாம் செய்யக்கூடியது என்று பொன்னம்மாவோ கண்ணம்மாவோ இருந்தாலும் அதைச் சொன்னால் நல்லதம்மா.

இந்த இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்திலே முதலாளிகளை எதிர்க்கும் நடைமுறைகளைக் கைவிட்டு விட்டார்கள். நிலப்பிரபுத்துவத்தை ஒழிக்கும் சில கொள்கைகளை மட்டும் எடுத்துக் கொண்டார்கள். எண்ணிக்கை கிடைப்பது கடினம் என்பதால் ஒவ்வொன்றாக உடைத்து 20 அம்சமாக்கி கூறுகிறார்கள். இருபது அம்சத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மதுவிலக்கு 12 அம்சத் திட்டம் என்று



1975 அக்டோபர் 29] [திரு. க. சுப்பு]

இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கூறுகிறார்கள். அதில் ஒரு அம்சமும் கிடையாது. 12 அம்சத்தையும் நிறைவேற்றி மதுவை ஒழிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 12 அம்சத்திலே மதுவிலக்கு வருமா ? வராது. ஆனால் தமிழ் நாட்டிலே ஒரேயொரு அம்சம்தான். மதுவிலக்கு ரத்து செய்யப் பட்டது. ஆனால் 12 அம்சத்திலே இங்கே குடிக்காதே, அங்கே குடிக்காதே, அதைத் தடு, இதைத் தடு, இதுதான் 12 அம்சம், வேறொன்றுமில்லை. 20 அம்சம் என்றாலும், 12 அம்சம் என்றாலும் அதுதான். ஒரு நாளைக்கு ஒரு சாதனை, எமர்ஜன்ஸி வந்ததிலிருந்து, 100 நாட்களில் 100 சாதனை என்று சொல்கிறார்கள். 100 நாட்களில் 100 சாதனை என்றால், ஒரு நாளைக்கு ஒரு சாதனை என்று நிறைவேற்றினால் இந்த 28 ஆண்டுகளில் எத்தனை சாதனைகளைச் செய்து முடித்திருக்க வேண்டும் ? இதைச் சிந்திக்க வேண்டாமா ?

நிலச் சீர்திருத்தம் மாநில சர்க்கார் சம்பந்தப்பட்ட விவகாரம். இதுசம்பந்தமாக காங்கிரஸ் நண்பர்கள் உண்மையிலேயே அக்கறை செலுத்தியிருந்தால் வரவேற்கலாம். இந்திரா காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள் என்பதற்காக அதை எதிர்க்கப் போவதில்லை, ஏனென்றால் அரசியல் சட்டத்திலேயே இருக்கிறது.

இன்னும் காங்கிரஸ் கமிட்டியிலே உட்கார்ந்து 20 அம்சத் திட்டத்தைப் பற்றி தமிழ்நாட்டிலே பேசியது கிடையாது. அதற்கு அவர்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் ! நிர்வாகக் கமிட்டியிலே உட்கார்ந்து 20 அம்சத் திட்டத்தைப் பற்றி. . . . .

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, அவர்கள் பேசும்பொழுது கொள்கை ரீதியாகப் பேசினால் அதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் கட்சியே விவாதிக்கவில்லை என்ற பெரிய குற்றச்சாட்டைச் சொல்வது தவறு.

திருமதி த. ந. அனந்தநாயகி : தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகக் குழு இதை விவாதித்ததா இல்லையா என்பது சுப்புவிற்கு எப்படித் தெரியும் ? அவர் அதற்கு அழைப்பாளரா ? உங்கள் கட்சி வேறு. எங்கள் கட்சி வேறு.

Do not poke your nose into other's affairs.

**திரு. க. சுப்பு:** 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டியில் போட்ட தீர்மானம் என்று எந்தப் பத்திரிகைகளிலும் நான் பார்க்கவில்லை. அதைக்கூட சென்சார் பண்ணுகிற அளவிற்கு இருந்தால் ஆச்சர்யமாக இருக்கிறது! நான் சொல்ல வந்ததெல்லாம் வேறொன்றுமில்லை.

தீர்மானம் கொண்டு வந்த நண்பர்களுக்கு அதில் எந்த அளவிற்கு அக்கறையிருக்கிறது என்பதைச் சொல்ல வந்தேனே தவிர குத்தலாகச் சொல்ல வேண்டுமென்று அல்ல. 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் இந்த அரசு எப்படித் தவறியிருக்கிறது என்பதற்கு ஒரு தனி நபர் மசோதா கொடுத்திருக்கிறீர்களா? தீர்மானமாவது கொடுத்திருக்கிறீர்களா? எதெற்கெல்லாமோ தனியார் மசோதா (நான்-அபிஷியல் பில்) கொடுப்பதற்கு ஆள் இருக்கிறதே, இதற்கு ஏன் கொடுக்கவில்லை?

இந்தப் பிரச்னையை வைத்துக்கொண்டு மத்திய மாநில (சென்டர் ஸ்டேட்) தகராறுகளை உண்டாக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களா? நேற்றையதினம் பேசிய எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. அரங்கண்ணல் அவர்கள் சொன்னார்கள், மக்களுக்காக 20 அம்சத் திட்டம் மட்டுமல்ல, 100 அம்சத் திட்டம் கொண்டு வந்தாலும் நாங்கள் நிறைவேற்றுவதற்குத் தயார் என்று சொன்னார்கள். இதை ஏற்கனவே நிறைவேற்றியிருக்கிறோம் என்று சொன்னார்கள்.

நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டிலே தான் சிறந்த முறையில் அமல் செய்யப்பட்டிருக்கிறது என்று காங்கிரஸ் கமிட்டியிலேயே சொல்லப்படுகிறது. வீடு கட்டும் துறையில் அவர்கள்தான் முன்னணியில் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மதுவிலக்குத் திட்டத்தை ஒருசில மாநிலங்கள்தான் பின்பற்றியிருக்கின்றன. தமிழ்நாட்டில் மதுவிலக்கு இருப்பதைப் பாராட்டுகிறோம் என்று வடநாட்டிலே உள்ள பத்திரிகையிலே எழுதினார்கள். இதைப் பார்க்கும்பொழுது நீங்கள் புகார் சொல்வதைப் பற்றி நாங்கள் என்ன நினைக்க வேண்டியிருக்கிறது என்றால், காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இதை





நிறைவேற்றுவதில் உண்மையிலே அக்கறை கொண்டவர்களாக இல்லை, அதற்குப் பதிலாக ஒவ்வொரு ஆளாகத் தேடிப் பிடித்து குறை சொல்கிறார்கள் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். நீங்கள் எதை எடுத்தாலும் அண்டை மாநிலத்திற்குப் போகிறவர்கள். அப்படி நீங்கள் சொல்கின்ற அண்டை மாநிலத்தில் இவ்வாறு இருக்கிறதா என்று பார்த்தால், ஆந்திராவிலே நிலச் சீர்திருத்தம் வந்திருக்கிறது. அந்த நிலச் சீர்திருத்தத்தை அமல் நடத்துவதற்கு மாநில மட்டத்தில் (ஸ்டேட் லெவலில்) கேபினெட் சப்-கமிட்டி போட்டிருக்கிறார்கள். சாகி சூரிய நாராயண ராஜு என்பவர் அறநிலையத் துறை அமைச்சர், அவர் அந்த கமிட்டியில் மெம்பர். அந்தக் கட்சியிலே உள்ள அங்கத்தினர்கள் (ஒர்க்கர்ஸ் ஆஃப் தி பார்ட்டி) அப்ஜெக்ஷன் எழுப்பி லேண்ட் ட்ரிப்யூனலுக்குப் போட்டிருக்கிறார்கள். 'எனக்கு இருப்பது 40 ஏக்கர். அதில் 20 ஏக்கரை கொடுத்து விடுகிறேன் என்று இவர் சொல்வது பொய், இவருக்கும் இவரது தம்பிக்கும் மொத்தம் இருப்பது 1,830 ஏக்கர், அதை வைத்துக்கொண்டு பினாமியாக டிரான்சாக்ஷன் செய்துவிட்டு ஏமாற்றுகிறார்' என்று லேண்ட் ட்ரிப்யூனலில் போட்டு விசாரணை நடக்கிறது. நிலச் சீர்திருத்த சட்டத்தை ஏமாற்றியவர்களில் காங்கிரஸ் அமைச்சர் சாகி சூரிய நாராயண ராஜுவின் சகோதரர் ராஜா சாகி சீதாராமராஜு என்பவர் ஒருவர், இன்னொருவர் சீப் செக்ரட்டரியாக இருந்தவர் எம். டி. ராஜு என்பவர், அவர் சீப் செக்ரட்டரியாக இருந்தவர் இப்பொழுது இல்லை, அவர். . .

**திரு. கே. என். குமாரசாமி:** ஒரு கிளாரிபிகேஷன் சார். சுப்பு அவர்கள் சொல்வது உண்மை என்று எப்படி 'ப்ரூவ்' படுத்த முடியும்? ஏதோ ஒன்றை எழுதி வைத்துக் கொண்டு எதை வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டு ஏதோ அதிகம் தெரிந்தவர் மாதிரி பேசுகிறாரே, ஆதாரம் இருந்தால் ஆதாரத்தைக் காட்டுங்கள்.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, தங்கள் அனுமதியோடு சொல்கிறேன். ஆதாரம் இல்லாமல் போய்விடவில்லை. இந்திரா காந்தியை ஆதரிக்கின்ற 'பிளிட்ஸ்' பத்திரிகை, ஆங்கில வாரப் பத்திரிகை, அது மஞ்சள் பத்திரிகை அல்ல, சிகப்பிலே இருக்கிறது, அந்த பிளிட்ஸ் பத்திரிகையிலே

'Record of false declarations' என்று கொடுத்திருக்கிற தலைப்பைப் பார்த்தால் தெரியும், முதல் பக்கத்திலேயே கொடுத்திருக்கின்ற விவரங்களைச் சொல்கிறேனே தவிர வெளியிலே வேறு விவகாரத்திற்குச் செல்லவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: மந்திரிக்கு எத்தனை ஏக்கர் இருக்கிறது என்று கண்டுபிடித்துக் காங்கிரஸ் ஊழியர்கள்தான் ட்ரிப்யூனலுக்குச் சென்றிருக்கிறார்களே தவிர, சுப்புவின் கட்சியைச் சேர்ந்தவர்கள் செல்லவில்லை.

திரு. க. சுப்பு: அவர்கள் அப்படிச் செய்ததை வரவேற்கிறேன், அப்படி மந்திரியைப் பற்றிச் சொன்னவர்களில் சிலர் உள்ளே ஜெயிலிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள்! இதை நான் சொல்லவில்லை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ.) யினுடைய (லெஜிஸ்லேச்சர்) சட்டமன்ற கம்யூனிஸ்ட் கட்சி—இன்றைக்குத் தீர்மானம் கொண்டு வந்திருக்கின்ற கே. டி. கே. தங்கமணி அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சியின் ஆந்திர லெஜிஸ்லேச்சர் பார்ட்டி, இரண்டாண்டுக்காலமாக நீதி விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். சீப் செக்ரட்டரியாக இருந்த எம். டி. ராஜு பினாமியாக எழுதி வைத்திருக்கிறார்கள், 102 ஏக்கரை விசாகப்பட்டிணம் போர்ட் டிரஸ்டிற்கு, டிஃபென்ஸ் டிபார்ட்மெண்டிற்கு வேண்டுமென்று (அக்வையர்) ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது, அதற்கு கேட்ட நஷ்ட ஈடு 2 கோடி ரூபாய்.

அவருடைய நிலத்தை விசாகப்பட்டிணம் மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு லீசுக்கு விட்டிருக்கிறார். அவர் ஏழை பங்காளர்! ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்குச் சொந்தமான நிலப் பிரபுக்கள் இவர்கள்தான். 'பிளிட்ஸ்' பத்திரிகையில் கூறியிருக்கிறார்கள். நான் சொன்னால் குமாரசாமி அவர்கள் கோபித்துக் கொள்வார்கள்.

—thousands of acres of land belonging to temples have been leased out to big landowners

அறநிலையத் துறை படுகிற பாட்டைப் பாருங்கள்.

—the State Government has reportedly taken a decision to severe this link-up and redistribute it on similar terms to the landless and marginal farmers.



இப்போதுதான் முடிவே எடுத்திருக்கிறார்கள். பெரிய லேண்ட் லார்ட்ஸ் கோயில் நிலத்தை மேய்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்போதுதான் ரி-டிஸ்ட்ரிப்யூஷன் பண்ண வேண்டுமென்பதற்கு ஒரு முடிவையே எடுத்திருக்கிறார்கள். பிளிட்ஸ் பத்திரிகை சொல்லுகிறது. உங்கள் ஆள் சொல்லுகிறார்—

It is to be seen

இன்னும் பார்க்க வேண்டிய சமாச்சாரங்கள்—பார்த்துவிட்ட சமாச்சாரம் அல்ல—இருக்கின்றன,

—how far the Government is successful in this laudable move.

இதையெல்லாம் நீங்கள் ஆதரிக்க வேண்டிய நிலையில் இருந்து கொண்டு, இப்போதுதான் ரி-டிஸ்ட்ரிப்யூஷன் செய்ய வேண்டுமென்று முடிவு எடுத்திருப்பவர்களை வைத்துக் கொண்டு ஏற்கனவே அந்தக் காரியங்களை எல்லாம் செய்து முடித்து விட்டவர்களைப் பார்த்து 'செய்யத் தவறி விட்டது, முனைப்பு இல்லை' என்று சொல்லுகிறார்கள். என்னய்யா இது? ஒன்றும் புரியவில்லையே!

மகாராஷ்டிராவில் மாநில சட்ட மன்றத்தில் வி. பி. நாயக் 700 ஏக்கரைச் சொந்தமாக வைத்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டு. எந்த மாநிலமும் தப்பவில்லை. மத்தியப் பிரதேசம் பூராவும் அதுதான். காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட நிலைமை. சுதந்திரம் வந்து 28 ஆண்டு காலமாக ஆட்சி செய்து வருகிற காங்கிரஸ் ஆட்சி அரசியல் சட்டத்தில் சொல்லப் பட்டிருக்கும் நெறிமுறைகளை அமல்படுத்தாமல் விட்டிருப்பது வேதனை மிகுந்த நிலை. அதே காங்கிரஸ் கமிட்டி தமிழ்நாட்டில் இவற்றை நன்றாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். இங்கே இருப்பவர்கள் அதை விட்டு விட்டு, பாதியை விட்டு விட்டு மீதியைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்.

வீட்டு மனைகளுக்குப் பட்டா வழங்க வேண்டும். இங்கு 16,000 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஹாம்லெட்டைச் சேர்த்துக் கொண்டால் 20,000 கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு இடத்திலும் வீட்டு மனை இல்லாதவர்கள் 30 சதவிகிதம்

[திரு. க. சுப்பு] [1975 அக்டோபர் 29

ரூ. **20,000 கோடி** ரூபாய் **கறுப்புப் பணத்தை எடுக்க அவசர**மில்லை; இந்த 250 கோடி ரூபாய்க்கு அவசரச் **சட்டம்** திரு. கே.டி.கே. அவர்கள் எவ்வளவு வேகமாகப் பேசினார்கள்? சத்தம் போட்டுப் பேசினால் சரியாகிவிடும் என்று பேசுகிறார்கள். போனஸ் அவசரச் சட்டத்தை எதிர்த்தோம் என்று சொன்னார்கள். தீர்மானம் போட்டோம் என்றார்கள். இதை எதிர்த்துப் போராட வேண்டாமா? தமிழ்நாட்டுச் செயலாளர் 'போனஸ் பற்றிய அவசரச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம்' என்று சொல்லவில்லை. அவர் பார்லிமென்டேரியன். 'நாங்கள் வரவேற்கவில்லை?— அவாள். அதே நேரத்தில், வரவேற்காத அதே நேரத்தில், 'இதையே சாக்காக வைத்து இந்திரா காந்தியை **யாராவது** எதிர்த்தால் நாங்கள் பொறுத்துக் கொள்ள **முடியாது'** என்கிறார்கள்.

இந்த, பொறுத்துக் கொள்ளாத புண்ணியவான்கள் எல்லாம் அக்கிரகார அரசியல்வாதிகளாக மாறிவிட்டார்கள். ஒரு கூட்டம்— 24—10—1975 மாலை சென்னை கச்சாலீஸ்வரர் அக்ரஹாரம் 8 ஆம் இலக்கமுள்ள கட்டடத்தில் **கூடுகிறார்கள். 'எட்டு' என்றால்** எதற்கு என்று தெரியும். எட்டே கால் லட்சணமே என்று கூறுவார்கள். தோழர் ஏ. எம். கோபு தலைமையில் கூடுகிறார்கள். ஏ.ஐ.டி.யு.சி., தமிழ்நாடு தொழிற்சங்க மாமன்றம், அண்ணா தொழிற்சங்கப் பேரவை ஆகிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எல்லாம் கலந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு தீர்மானத்தைப் போடுகிறார்கள்.

'மத்திய அரசால் அண்மையில் **பிரகடனப்படுத்தப்பட்ட போனஸ் திருத்த** அவசரச் சட்டம், **இதுகானும் உழைக்கும் மக்கள் போராடிப் பெற்ற உரிமைகளையும் போனஸ் பற்றிய** அடிப்படைக் கருத்தையும், அளவையும் **அடியோடு பறிப்பதாய் உள்ளது.**

இப்படி அடியோடு பறிப்பதை எதிர்த்து இவர்கள் **என்ன** செய்தனர்? 24—10—1975-ல் நடக்கும் அடையாள வேலை நிறுத்தத்தை உழைக்கும் மக்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கூறி தமிழகத்திலுள்ள இதர தொழிற் சங்கங்களும், அனைத்துத் தொழிலாளர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, தங்களுடைய கடமை இத்தோடு முடிந்துவிட்டதாக



1975 அக்டோபர் 29] [திரு. க. சுப்பு]

எண்ணிக் கொண்டார்கள். கச்சாலீஸ்வரர் அக்கிரகாரத்தில் யாருக்கும் தெரியாமல் 21-ம் தேதி கூடுகிறார்கள். 24ம் தேதி அடையாள வேலை நிறுத்தம். அதைப்பற்றி இவர்கள் எந்த இடத்தில் கூட்டம் போட்டுப் பேசினார்கள்? கேட் மீட்டிங் போட்டுப் பேசினார்களா? இல்லை. என்ன தீர்மானம் போடுகிறார்கள்? தொழிலாளிக்காகத் தீர்மானம் இல்லை. இவர்களுக்காகத் தீர்மானம். நாங்களும் இருக்கிறோம். இவர்கள் மத்தியில் இருக்கிறோம் என்று காட்டிக்கொள்ள தீர்மானம். தொழிலாளியை ஏமாற்ற தீர்மானம். இந்த போனஸ் அவசரச் சட்டத்தை எதிர்த்து நடந்த போராட்டம் யாருடைய முன்முயற்சியில் நடந்தது?

**கறுப்புப் பணம் வைத்திருப்பவர்களுக்கு இவ்வளவு சலுகைகளை இந்திரா காந்தியம்மையார் கொடுத்திருக்கிறார்கள். அன்று அசோக் மேத்தா அவர்கள் 'கர்ப்பப் பை எப்போதும் திறந்திருக்கிறது; அமெரிக்காவில் இருக்கும் முதலாளிகளே உங்களுடைய முதலீடுகளைப் போடுங்கள்' என்று கூறினர்.**

**அதை எல்லோரும் கண்டித்தார்கள் கம்யூனிஸ்ட் கட்சி** உட்பட. இன்று டி. ஏ. பாய் அவர்கள் சொல்கிறார்கள், இந்தியாவின் ஜன்னல் கதவுகள் திறந்திருக்கின்றன என்று. கர்ப்பப் பை போய்விட்டது. இன்று ஜன்னல் கதவுகள் திறந்திருக்கின்றன. ஜன்னல் கதவுகள் திறந்திருக்கின்றன என்றால் லாட்டின் அமெரிக்கன் கண்ட்ரிஸ், அமெரிக்காவில் உள்ள Multinational Corporations **பல கோடி டாலர்** சொத்துக்களை எடுத்துச் செல்ல, அதைக் கொள்ளை அடிக்க ஜன்னல் கதவுகள் திறந்திருக்கின்றன என்று. தமிழ் நாட்டில் நிலச் சீர்திருத்தம், வீட்டு மனை வழங்கல், சாராயக் கேஸ்கள்— டாக்டர் ஹாண்டே அவர்கள் ஜாமீன் கேஸ் வரை போய் விட்டார்கள்.

அடிப்படை மாறுதல் இல்லாமல் ஏதுவும் ஏற்படாது. பொருளாதாரத் துறையில் தீவிர மாறுதல் **ஏற்படுத்த,** அடிப்படை மாறுதல் ஏற்படுத்த இந்த இருபது அம்சத் திட்டத்தில் என்ன இருக்கிறது? நிலச்சீர்திருத்தச் சட்டத்தை தமிழ் நாடு அரசு ஏற்கனவே செய்திருக்கிறது. இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் யாரும் பயப்பட **வேண்டியதில்லை,** எந்தவிதமான **தேசியமயமும் தொழில் துறையில் இருக்காது என்று. தேசியமயமாக்கும் கொள்கைக்கு**

சமாதி கட்டியாகிவிட்டது. அப்படிக் கட்டிய பிறகு இந்தச் அரசாங்கத்தைப் பார்த்து அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். இவ்வாறிங்கே 'செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே அறமாகித் தீர்ந்த பிறகு' அம்மையார் மனம் கனிய வேண்டும். அன்னை பராசக்தி மனம் கனிய வேண்டும்; அந்த நாள் வெகு தொலைவில் இல்லை என்று கூறி எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்டனத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியவர்களும், எதிர்த்துப் பேசியவர்களும், இரண்டுமில்லாமல் பேசியவர்களும் பல்வேறு அரசியல் கட்சிகளுடைய கொள்கை விமர்சனங்களாக இந்தப் பேரவை நிகழ்ச்சிகளை மாற்றி இருக்கிறார்கள்.

எங்கள் கட்சி சார்பில் பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த அரசு செய்யத் தவறிய சில காரியங்களையும் செய்த சில தவறுகளையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இன்று காலையில் பேசிய ஸ்தாபன காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் மதிப்பிற்குரிய காமராஜர் அவர்களுடைய மரணத்திற்கு இந்த அவசரச் சட்டமே ஒரு காரணம் என்ற அதிர்ச்சி கலந்த செய்தியை இங்கு தெரிவித்தார்கள். காமராஜர் அவர்களை பாராட்டுவதற்கு எனக்கு என் ஊர்க்காரர் என்ற முறையில் உரிமை இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் வெள்ளையன் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து எட்டு, ஒன்பது ஆண்டுகள் சிறை வாசம் செய்து பாராட்டுதல்களைப் பெற்ற ஒரு தலைவர் ஆவார். அப்படிப்பட்டதொரு தலைவர் நம் தேசிய சர்க்கார் கொண்டு வந்த ஒரு அவசரச் சட்டத்திற்குப் பயந்து அல்லது அதில் அதிர்ச்சி அடைந்து அதன் மூலம் நோய்வாய்ப்பட்டிருப்பார் என்று நான் நம்பவில்லை. அந்த அளவிற்கு காமராஜர் அவர்களுடைய வீரத்தை அவர்களுடைய கட்சிக்காரர்கள் மதிப்பிட்டாலும் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காமராஜர் அவர்கள் இது குறித்து வருந்துகிறேன் என்று ஒரு வார்த்தை சொன்னாரே தவிர தொடர்ந்து இந்த நெருக்கடி நிலைபற்றியும் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதுபற்றியும் அவராகவே விமர்சனம் செய்யவில்லை. ஒருசில நாட்கள் அவர்





களது உடல்நிலை சரியாக இல்லாமலிருந்தாலும் கூட அதைத் தொடர்ந்து இந்தப் பிரச்னையில் மத்திய சர்க்கார் எடுக்கிற நடவடிக்கைகள் பரவாயில்லை என்ற அடிப்படையில் மக்களது உணர்ச்சி இதற்கு எதிராகக் கிளம்பவில்லை என்ற காரணத்தால் காமராஜர் அவர்கள் வழக்கமாக தம் ராஜதந்திரப்படி மௌனமாக இருந்திருக்கக் கூடும். ஆனால் இங்கே பேசிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் காமராஜரைப் பற்றிச் சொன்ன கருத்துக்களை காங்கிரஸ் கட்சி கருத்துக்களாக இன்றைய நடைமுறை அரசியலுக்கு அதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றாலும் மறைந்த ஒரு தலைவரைப்பற்றி இவ்வளவு சாதாரணமான ஒரு விமர்சனத்தை இங்கே செய்திருக்க வேண்டாம் என்று என்னைவிட மெத்த அனுபவம் உள்ள திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நாங்கள் எல்லாம் காமராஜர் அவர்கள் கட்சியில் வளர்க்கப்பட்டு அவர்களுடைய கொள்கைகளை. அவர்களுடைய சித்தாந்தங்களை எப்போதும் கடைப்பிடித்து நிற்கிறவர்கள். எங்கள் தலைவரைப் பற்றி நாங்கள் எந்தவிதமான விமர்சனமும் செய்யவில்லை. இந்த எமர்ஜென்ஸி குறித்து அவர்கள் என்ன நினைத்தார்கள் என்பதை பலதடவை அவர்களைச் சந்தித்த எங்களைப் போன்ற ஊழியர்களுக்கு—நான் தலைவன் என்று சொல்ல வரவில்லை—தெரியும். அவர்கள் அதுபற்றி என்ன நினைத்தார்கள், என்ன மனக்குமுறலோடு இருந்தார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அந்த மாமேதையின் பெயருக்கு நாங்கள் ஏதோ களங்கம் கற்பித்துக் கூறுவதுபோல் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட தவறான கருத்துக்களை இந்த மன்றத்தில் அன்பர் அவர்கள் வெளியிடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மிகுந்த வணக்கத்தோடும் மரியாதையோடும் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் காமராஜர் அவர்களின் கொள்கைகளை எப்போதும் பின்பற்றுகிறோம், அதிலும் குறிப்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்களே அதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள் என்பதையும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1975 அக்டோபர் 29

**திரு. பெ. சீனிவாசன் :** என்னுடைய வாதத்திற்கு திரு. பொன்னப்ப நாடார் அவர்களின் பதில் கூட ஒரு வகையில் உதவி செய்யும் என்று கருதுகிறேன். இதற்கு முன்னால் பேசிய என் அருமை நண்பர் சுப்பு அவர்கள் ஆளும் கட்சி சார்பில் மிக அருமையாகப் பேசினார்கள். அவருக்கு அந்தளவிற்கு திறமையாகப் பேசக்கூடிய ஒரு பயிற்சியை அவர்கள் இதுவரைச் சார்ந்திருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வழங்கியிருக்கிறது என்று கருதுகிறேன். இருந்தாலும் ஒரு தவறான வாதத்திற்காக அவர்களுடைய திறமையை, அவர்கள் பல்லாண்டுக் காலமாக பாடுபட்டு பெற்ற ஒரு அருமையான கட்சியிலிருந்து பெற்ற திறமையை சுப்பு அவர்கள் வீணாக்குகிறார்களே என்று வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன் :** அப்போது சீனிவாசன் அவர்கள் பேசுகிறார்களே, அந்தத் திறமையை அவர்கள் இங்கிருந்துதான் பெற்றுக் கொண்டார்கள்.

**திரு. முனு ஆதி :** அங்கிருந்தல்ல. அது அண்ணாவிடமிருந்து பெற்றது. அதை மறுக்கவில்லை. அது அண்ணாவிடமிருந்து பெற்ற திறமையாகும்.

**திரு. பெ. சீனிவாசன் :** எங்கள் இயக்கம் அண்ணாவின் பெயரைக் கொண்ட ஒரு இயக்கம். இந்த நெருக்கடி நிலைமை, பொதுவாக அரசியல் கட்சிகளுக்கு ஏற்பட்டிருக்கிற இந்த நெருக்கடி நிலைமையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் காலஞ்சென்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் மனப்பக்குவத்திற்கு ஒத்த நடவடிக்கைகள் என்பதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். அவசரப் பிரகடனம் அறிவிக்கப்பட்ட அன்றே எங்கள் கட்சி சார்பில் எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் அவர்கள் அதை வரவேற்பதாகத் தெரிவித்தார்கள். அப்படி அறிவித்த அறிவிப்பு திடீரென்று ஏற்பட்ட ஒன்றல்ல. அதற்கு முன்னால் பல மாதங்களாக ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றியும் மத்திய அரசுக்கு எதிராக நடத்துகிற போராட்டத்தைப் பற்றியும் அதில் ஒளிந்திருக்கிற சில அம்சங்களைப்பற்றி மறைமுகமாக கோடிட்டுக் காட்டி வந்தார்கள்.



1975 அக்டோபர் 29] [திரு. பெ. சீனிவாசன்]

இன்று மத்திய அரசின் நடவடிக்கைகளை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிப்பது தன்னை பலி கொடுத்து அல்ல, நிபந்தனையற்ற ஒரு சரணாகதி என்ற அடிப்படையில் அல்ல. போனஸ் சட்டத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது. சுப்பு அவர்கள் சொன்னார்கள் ஏதோ அக்கிரஹாரத்தில் தீர்மானம் போட்டோம் என்று. கோட்டையில் கொடி கட்டிப் பறக்கிற நீங்களே ஏதோ கடற்கரை ஓரத்திலே, திருநெல்வேலி ஓரத்தில் தீர்மானம் போட்டுவிட்டு இங்கே வந்து வரவேற்றுப் பேசுகிறீர்கள். எதிர்கட்சியில் இருக்கிற நாங்கள் அக்கிரஹாரத்தில், தெருக்கோடியில்தான் தீர்மானம் போட முடியும். அதிகாரத்தில் இருக்கக்கூடியவர்கள், அல்லது ஆட்சி இன்னின்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தீர்மானங்கள் போட்டு அவர்களை வற்புறுத்தி அதன்மூலம் சட்டங்களை மாற்றமுடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அந்த முறை ஜனநாயகத்திற்கு மாறுபட்டதல்ல. அது அச்சத்தைக் காட்டுவதல்ல. அதற்கு ஏதோ ஒளிந்துகொண்டு அரசியல் நடத்துவது என்ற அர்த்தம் அல்ல.

திரு. சுப்பு அவர்கள் இப்போது சார்ந்திருக்கிற இயக்கம் இந்த நெருக்கடி நிலைக்குப் பின்னர் எடுத்த நடவடிக்கைகளை அவர்கள் தயவுசெய்து கூர்ந்து கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவசர நிலை அறிவிக்கப்பட்டவுடன் இந்தியாவிலேயே அதை முதன் முதலாகக் கண்டித்தவர் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களாவார்கள். அவர்கள் அதை மிகத் தெளிவாகக் கண்டித்தார்கள். அலகபாத் தீர்ப்பு வந்தவுடன் நமது முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சுப்பு அவர்கள் பேசும்போது வார்த்தைகளை மாற்றி மாற்றி சாமர்த்தியமாக கிண்டலாகப் பேசினார்கள். அந்த சாமர்த்தியம் எல்லாம் முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து வந்த சாமர்த்தியம்தான். அலகபாத் தீர்ப்பு இந்திரா காந்தி அவர்களுக்கு எதிராக வந்ததைப் பற்றி பல்வேறு தலைவர்கள் கருத்துக்கள் சொன்னார்கள். அயல்நாட்டுப் பத்திரிகைகள்கூட—இங்கிலாந்தில் உள்ள ஒன்றிரண்டு பத்திரிகைகள்கூட—நாங்கள் இதை வாட்டர்கேட் ஊழல் என்று கருதினோம், அந்தளவிற்கு இல்லை என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

[திரு. பெ. சீனிவாசன்] [1975 அக்டோபர் 29

நம் முதல் அமைச்சர் அவர்கள் அன்று சொன்னார்கள். அலகபாத் தீர்ப்புக்கு பின்னால் பிரதமர் அவர்கள் ராஜிநாமா செய்ய வேண்டும் என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் ராஜிநாமா செய்தால் நான் பாராட்டுவேன் என்று சுற்றிவளைத்து சாமர்த்தியமாகச் சொன்னார்கள்.

அன்று முதல் ஆளுகிற கட்சி, அரசாங்கத்தை நடத்துகிற கட்சியின் கொள்கை இதுதான் என்பதை முதல் அமைச்சர் அவர்கள் மூலம் தெளிவாகக் கோடிட்டுக் காட்டியது. அப்படி கோடிட்டுகாட்டியது போதாது என்று தன் செயற்குழுவைக்கூட்டி தீர்மானத்தை நிறைவேற்றியது. அவசர நிலை அறிவிப்பு தவறு, தேசியத் தலைவர்களை விடுதலை செய்யவேண்டும் என்றெல்லாம் தீர் மானங்களை நிறைவேற்றியது.

இன்றைக்கு எங்களைப் பார்த்து அல்லது மத்திய அரசின் நடவடிக்கைகளை ஆதரிக்கிற கட்சிகளைப் பார்த்து கேள்விகளை எழுப்புகிற நண்பர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

(முற்பகல் 11-30)

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திருக்குறளை நன்கு படித் தவர்கள். அதற்கு நல்ல முறையில் விளக்கம் சொல்பவர்கள். அந்த வள்ளுவர் சொல்கிறார்

"தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்"

முதலமைச்சர் நெஞ்சம் சொல்லியது. அவருடைய நெஞ்சுக்கு நீதி சொல்ல வேண்டும். அன்றைக்கு இந்திரா காந்தி எடுத்த அவசர கால நிலை தவறு என்று தெரிந்த பின்னாலே, ஆளுகிற பொறுப்பில் இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் அதற்காக எடுத்த நடவடிக்கை என்ன? போனஸ் சட்டம் குறித்து நாங்கள் எடுத்த நடவடிக்கையை கேலி செய்யும் நண்பர் சுப்பு அவர்கள், இதுவரையில் எத்தனை நடவடிக்கைகளை இந்த மத்திய சர்க்காருக்கு எதிராக மாநில சர்க்கார், அதிகாரத்தை கையில் வைத்து இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் எத்தனை கிளர்ச்சிகளை நடத்தி இருக்கிறது என்று தயவு செய்து சுட்டிக் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** ஒரு சின்ன கேள்வி தான். இன்று இருக்கும் அரசியல் சட்டத்தில் மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை எதிர்த்துப் போராட வகை செய்யப்பட்டு இருக்கிறதா? கொஞ்சம்



1975 அக்டோபர் 29] [திரு. க. சுப்பு]

சிந்திக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சி, எதிர்க்கட்சி என்ற ரீதியில் அவசரகால நிலையைப் பற்றி எப்படி எண்ணினோம் என்று நாங்கள் சொன்னோம். எங்கள் கட்சித் தலைவர் திரு. செழியன் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்து, இதுகுறித்து எப்படிப் பேசினார் என்பதைப் படித்துப் பாருங்கள். அது உங்களுக்கும் உதவியாக இருக்கும். புத்தகம் வேண்டுமானாலும் நான் கொடுக்கிறேன். எதிர்க்கட்சி என்றால் என்ன? ஒரு கருத்துக்கு எதிர்ப்பாக இருப்பவர்கள். மாறுபட்ட கருத்தைக் கொண்டவர்கள். மாறுபட்டவர்கள். மாறுபட்ட கருத்தைச் சொல்வதற்கு—அந்தக் கட்சிக்கு—உரிமை இருக்கிறது. தீர்மானம் போடுகிறோம். ஆனால் மாநில சர்க்கார் என்று வருகிற போது, அந்தக் கட்சி ஆட்சியை அரசியல் சட்டத்தின்படி தான் நடத்தமுடியும்.

(திரு. க. உரொ. எட்மண்ட் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. எட்மண்ட் நீங்கள் உட்காருங்கள். திரு. சீனிவாசன் பேசுகிறார், அவர் பதில் சொல்லிக்கொள்வார்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, சுப்பு அவர்களிடம் நான் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இந்த அவசர கால நிலையைப்பற்றி உங்களுடைய கட்சித் தலைவர், இந்த ஆட்சியின் முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்டபோது, அவர்கள் கட்சி யின் முடிவு என்னவோ அந்த முடிவு தான் ஆட்சியின் முடிவு என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, கட்சியின் முடிவை, அவர்கள் செயல்படுத்த வேண்டும். அதைச் செய்யவில்லை. ஆட்சியைக் கையில் வைத்துள்ள நீங்களே அதைச் செய்யாத போது, எங்களைக் குறை சொல்லவேண்டாம். போனஸ் சட்டத்தைக் கண்டிப்பதற்கு ஆட்சி உங்கள் கையில் இருக்கிறது. நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள்?

**திரு. க. சுப்பு :** உங்களோடு சேர்ந்து தீர்மானம் கொடுத்து இருக்கக்கூடியவர்கள், ஏ.ஐ.டி.யு.சி. காரர்கள் போனஸ் சட்டத்தை எதிர்க்கவில்லை. கேரளத்தில் தோழர் அச்சுதமேனன் இருக் கிறார். கேரளாவில் அரசாங்க ரீதியில்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** நான் அச்சுதமேனனைப் பற்றிக் கேட்கவில்லை. நான் தமிழ்நாட்டை ஆண்டு கொண்டு இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றித்தான் கேட்கிறேன்.

(திரு. எஸ். வடிவேல், திரு. க. சுப்பு எழுந்தனர்)

**திரு. க. சுப்பு :** கட்சி ரீதியாக கம்யூனிஸ்ட் கட்சி அதை வரவேற்கவில்லை, எதிர்க்கிறது. கட்சி எதிர்க்கிறது என்பதற்காக அவர் ஆட்சியில் இருந்து கொண்டு எதிர்த்தால் அச்சுதமேனன் முதலமைச்சராக இருக்க முடியாது. அரசாங்கம் என்பது அரசியல் சட்டத்தின் அடிப்படையில் இயங்கக் கூடியது. கட்சி கொள்கை ரீதியாக அரசாங்கம் நடத்த முடியாது. இதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** கேரளாவில் இந்த போனஸ் சட்டம் சம்பந்தமாக அவர்கள் செய்து இருப்பதை இந்த அரசாங்கம் செய்யத் தயாராக இருக்கிறதா? அடுத்தாற்போல், திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கம் 24-ம் தேதி ஸ்ட்ரைக் செய்யவேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்தார்கள். கொடுத்துவிட்டு, 23-ம் தேதி வாபஸ் வாங்கிக் கொண்டார்கள் என்பது உண்மை. ஏ.ஐ.டி.யு.சி. அதைச் செய்யவில்லை. மதுரை நிலைமை சுப்பு அவர்களுக்குத் தெரியவில்லை என்று நினைக்கிறேன். மதுரையில் பேட்ஜ் போட்டு, போஸ்டர் போட்டு, ஸ்ட்ரைக் செய்ய வேண்டுமென்று ஏற்பாடுகளைச் செய்தது ஏ.ஐ.டி.யு.சி. தான்.

**திரு. க. சுப்பு :** ஸ்ட்ரைக் பொறுத்தவரையில் அவர்கள் மதுரைக்குப் போய் விட்டார்கள். நாங்கள் இங்கே சென்னையில் இருக்கிறோம். எங்களுக்கும் தெரியும். ஏ.ஐ.டி.யு.சி. கலந்து கொள்ளவில்லை. சென்னையில் எந்த ஒரு இடத்திலாவது கூட்டம் போட்டுச் சொன்னார்களா? ஒரு இடத்தில் கேட் மீட்டிங் போட்டாவது சொன்னார்களா? சொல்லுங்கள் பார்க்கலாம். அக்ரஹாரத்தில் 21-ம் தேதி தீர்மானம் போட்டீர்கள், என்ன நடவடிக்கையைத் துவக்கினீர்கள் என்று கேட்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** ஆரம்பத்தில் சொன்னேன். ஒரு உதாரணம் மூலம் திரு. சுப்பு அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே பார்வார்ட் பிளாக் கட்சி உங்களுக்குத் தோழமை கட்சியாக இருக்கிறது. அவர்களுக்கு நீங்கள் எடுக்கிற



ஒரு நடவடிக்கை பிடிக்கவில்லை என்றால் உடனடியாக நடவடிக்கையில் இறங்கமாட்டார்கள், போராட்டம் நடத்த மாட்டார்கள், தனியாக முதலமைச்சரைச் சந்தித்து தங்களுடைய கருத்தைத் தெரிவித்து அதற்குப் பரிகாரம் காண்பார்கள்.

அந்த அடிப்படையில் அச்சுதமேனன் அவர்கள் நல்லதொரு சந்தர்ப்பம் பார்த்து மத்திய சர்க்காரின் அவசரச் சட்டத்தைக் குறித்து கருத்துத் தெரிவிப்பார். அதற்கு ஏதாவது பரிகாரம் நிச்சயம் காண்பார். இங்கே இருக்கும் முதலமைச்சரைப் பார்த்து ரொம்பத் தெளிவாகச் சொன்னார்கள். இந்தியாவிலேயே எங்கள் முதலமைச்சர்தான் எதிர்க்கிறார் என்று கூட நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் பேசினார்கள். இதற்கு எதிரி-இன்னொரு தலைவர் காமராஜர் அவர்கள்; அவர் மேற்கொண்டு அதை எதிர்க்கவில்லை. அவருக்கும் சேர்த்து நாங்கள் கண்டிக்கிறோம் என்று பெருமையாகச் சொன்னார்கள். அப்படிச் சொன்னாலும், இப்போது நிலைமை என்ன? கடைசி வரையில் ஒன்றும் செய்யவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவசரச் சட்டத்தை, நெருக்கடி கால நிலையைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் கட்சி ரீதியாக ஏன் கிளர்ச்சி செய்யவில்லை என்று கேட்கிறார்கள். அதே கேள்வியை நான் திருப்பிக் கேட்கிறேன். 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து இருக்கும் நீங்கள் எப்போது கிளர்ச்சி செய்யப் போகிறீர்கள்?

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே, திரும்ப அதையே சொல்கிறேன். எங்களுடைய கிளர்ச்சியை நாங்கள் நிறுத்தி வைத்து இருக்கிறோம். எங்களுடைய கிளர்ச்சியால் நெருக்கடி கால நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்ற காரணத்தால் செய்யவில்லை. அதனால் தான் கறுப்புக்கொடிப் போராட்டத்தைக் கூட நிறுத்தி வைத்து இருக்கிறோம். எங்களுடைய கொள்கையில் எந்த விதமான முரண்பாடும் இல்லை. ஆனால் முதலமைச்சர் அவர்கள் கடற்கரையில் ஒரு பெரிய பிரச்சாரம் செய்து, எல்லோரும் எழுந்து நின்று, டிரில் வாங்கி, "வந்தால் சந்திப்போம்" "மீறினால் சிந்திப்போம்" என்று சொன்னார்கள். சொன்ன அடுத்த மூன்றாவது நாள் சென்சார் அதிகாரி

[திரு. பெ. சீனிவாசன்] [1975 அக்டோபர் 29

டெல்லியிலிருந்து வந்தார். என்ன செய்தீர்கள், கட்சி ரீதியாக, ஆட்சி ரீதியாக என்ன செய்தீர்கள்? முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு பெரிய ராஜதந்திரி என்பது தெரியும். பிரதமரைக் கொஞ்சம் பாராட்ட வேண்டும். பகிரங்கமாகப் பகைத்துக் கொண்டு விடக்கூடாது. அந்த அடிப்படையில் திருநெல்வேலியில் ஒரு தீர்மானம் போட்டார்கள். நான் டெல்லிக்குப் போய் பிரதமரைச் சந்திக்கிறேன் என்று விசித்திரமான ஒரு தீர்மானம் போட்டார்கள். செல்கிற நேரத்தில் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் நான் டெல்லிக்குச் செல்வேன், மற்ற மாநில முதலமைச்சர்களைச் சந்தித்துப் பேசி, பிரதமரை அணுகி, இந்த அவசர நிலையை ரத்து செய்ய முயற்சிப்பேன் என்று சொன்னீர்கள். இதே நிலைமை 4-5 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து இருக்குமானால், பழைய கலைஞராக இருந்து இருப்பாரானால், அந்த நேரத்தில் இப்படிப்பட்ட நெருக்கடியைச் சந்திக்கவேண்டிய நிலை இருக்குமானால், இப்படி விசித்திரமாகத் தீர்மானம் வந்து இருக்குமா?

1971 க்கு முன்னாலே 3½ மணிக்கு முடிவு எடுத்து, 4 மணிக்கு ஆளுநரைச் சந்தித்து, கட்சியில் உள்ள பல பேர் ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், பலபேருக்கு அதிர்ச்சி தரத்தக்க வகையில், ஒரு முடிவை எடுத்தார்கள். இன்று ஏன் அப்படி முடிவு எடுக்க முடியவில்லை? அதற்குக் காரணம், முதலமைச்சருக்குச் சரியான பின்னணி இல்லை. திரு. சுப்பு சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழகம் 20 அம்சத் திட்டத்தில் கண்டுள்ள எதை நிறைவேற்றவில்லை என்று கேட்டார்கள். நிறைவேற்றியுள்ள திட்டங்களை நாம் மறுக்க முடியாது. சிலம் கிளியரன்ஸ் கட்டடங்களை நாம் மறுக்க முடியாது. சென்னை நகரம் முழுவதும் அது இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு குடிசை மாற்று வாரியக் கட்டடத் திறப்பு விழாவில் பேசும்போது சொன்னார்கள். மேலே இருந்து கொண்டு எம்.ஜி.ஆர். படத்தைக் காட்டுகிறார்கள், நன்றி மறந்தவர்கள் என்று சொன்னார்களாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் அப்படிச் சொன்னது கிடையாது. சொல்லாததைப் பேச வேண்டாம்.

**திரு. பெ. சீனிவாசன்:** சொல்லாவிட்டாலும் நிலைமை அது தான். உங்கள் கட்சிக்கு ஆதரவு அங்கே இல்லை.



1975 அக்டோபர் 29]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எங்கள் கட்சிக்காரர்களுக்கே வீடு கட்டித் தருகிறோம் என்ற குற்றச்சாட்டு இதனால் அடிப்பட்டுப் போகிறது.

**திரு. பெ. சீனிவாசன்:** நீங்கள் உங்கள் கட்சிக்காரர்களுக்கு வீடு கட்டித்தர வேண்டுமென்று தேடிப்பார்த்தாலும் அவர்களுக்கு நீங்கள் வீடு கட்டிக் கொடுக்க முடியாது. உங்கள் கட்சிக்காரர்கள் எங்கே என்று நீங்கள் பார்த்தாலும் "ஸ்லம் கிளியரன்சில்" உங்கள் ஆட்கள் யாரும் இல்லை என்பதை முதலமைச்சர் மறுக்க முடியாது. உங்கள் கட்சியில் இருப்பவர்கள் இன்றைக்குப் பெரியவர்களாக, சமுதாயத்தின் அந்தஸ்தில் உயரத்தில் இருப்பவர்களாக இன்றைக்கு இருந்து கொண்டு இருக்கிறார்கள். யாருக்கு நன்மை செய்து கொண்டிருக்கிறீர்கள்? பெருமையோடு பேசுகிறீர்களே, நம்முடைய நண்பர் திரு. அரங்கண்ணல் அவர்களைக் கேட்கிறேன், அயல் நாட்டுக்காரர்கள் வந்தால் அவர்களைத் தேடிப் போய் அழைத்துப் போய் காட்டுகிறீர்களே . . .

**திரு. இராம. அரங்கண்ணல்:** நான் யாரையும் வலியப்போய் அழைத்துப் போய்க் காட்டுவதில்லை. நமது அருமையை உணர்ந்தவர்கள் அவர்களாகவேதான் வந்து பார்க்கிறார்கள்.

**திரு. பெ. சீனிவாசன்:** என்ன, உங்கள் ஞான ஒளியை உணர்ந்து அவர்கள் உங்கள் பக்கத்திலே ஈர்க்கப்பட்டா வருகிறார்கள்? ஒரே தண்டோரா போட்டு பஜனை. செய்திப் படத்தில் குடிசை மாற்று வாரியத்தில் இதைத் திறந்து வைத்தார், அதைத் திறந்து வைத்தார் என்று பட்டியல் போட்டுக் காண்பிக்கிறீர்கள்.

ஆனாலும் மக்கள் உங்கள் சாதனையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏன் இவைகளை உங்கள் சாதனையாகக் கருதவில்லை. இதற்குத் தயவு செய்து திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் சிந்தித்துப் பதில் சொல்லட்டும். ஒரு வேளை எங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். இதைத் தயவு செய்து திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் சொல்லட்டும். இதை ஏதோ மாயை, கவர்ச்சி, இப்படிப் போய் விட்டது, அப்படிப் போய்விட்டது என்று இந்தக் காரணங்களைக் கூறி நீங்கள் கட்சிக்காரர்களின் ஆத்திரத்தை, உங்களின் ஆத்திரத்தைக் குறைத்துக் கொள்வதற்கு முயலலாமே தவிர, இவைகள் நியாயமான காரணங்கள் இல்லை.

எனவேதான் இவைகளை உங்களுடைய சாதனைகளாக நாங்கள் ஒப்புக் கொள்ளவில்லை. மக்களும் இவைகளை உங்களுடைய சாதனைகளாக ஒப்புக் கொள்ளவில்லை. இவைகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குப் பெருமையில்லை. உங்கள் கட்சிக்காரரே கூடப் பேசியிருக்கிறார். இன்றைக்கு நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குறை சொல்வதில் அர்த்தமில்லை. திரு. ஹாண்டே அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள் உங்கள் ஆட்சியில் எற்பட்டுள்ள பாதிப்புகளை எடுத்துச் சொல்ல இது ஒரு வாய்ப்பு என்று.

உங்கள் ஆட்சியில் 20 அம்சத் திட்டத்தில் பலவற்றை நிறைவேற்றி விட்டோம், மத்திய சர்க்காரைப் பார்த்துப் பெருமையோடு நீங்கள் சொன்ன திட்டங்களை நாங்கள் உங்களை விட வேகமாக நிறைவேற்றி விட்டோம் என்று சொல்கிற அளவிற்கு அரசாங்கம், அரசாங்கத்தினுடைய நிர்வாக இயந்திரம் தீவிரமாகச் செயல்பட்டால் மட்டும் போதாது, கட்சியில் உள்ள தொண்டர்களும் அந்த அளவிற்கு மனப்பான்மையோடு இருக்க வேண்டும் என்பதை முதலமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் கட்சித் தொண்டர்கள் செய்கிற வேலைகள் எல்லாம் ஆக்க வேலைகள் அல்ல, அழிவு வேலைகள் தான். யார், யாரைப் பிடித்து உள்ளே போடுவது என்ற வேலையைத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற உங்கள் "லோகல்" லீடர்கள் ரொம்பவும் தீவிரமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதன் மூலம் டில்லிக்கும், சென்னைக்கும் மத்தியில் ஒரு பிளவை உண்டாக்க வேண்டுமென்று ஒரு வெறுப்பை உண்டாக்க வேண்டுமென்று முயற்சிப்பதாக திரு. சுப்பு அவர்கள் சொன்னார்கள். உங்கள் ஆட்சி நீடிக்கப்போவது இன்னும் 100 நாட்கள் தான். இந்த நூறு நாட்களில் உங்கள் ஆட்சியை இப்படிக் குறுக்கிட்டு நாங்கள் போகச் செய்வதில் எங்களுக்கு லாபம் ஒன்றும் இல்லை. எங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்ள இவைகளைச் சொல்கிறோம்.

ஒரு சிறு நிகழ்ச்சியை முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். விருதுநகரில் நில வள வங்கித் தேர்தல் நடந்தது. ஜனநாயக முறையில் தேர்தல் நடந்தது. நாமினேஷன் போட வருகிறார்கள். இதை அங்கே





இருந்த மக்கள் பார்த்தார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கு நாமினேஷன் கொடுக்க ஆள் இல்லை, 6, 7 தொகுதிகளில். ஓட்டுப்போட பல ஆயிரம் பேர் நிலவள வங்கியின் முன் திரண்டிருக்கிறார்கள். அந்த இடத்தில் 10, 12 பேர் கருப்பு, சிகப்புத் துண்டைப் போட்டுக் கொண்டு நில வள வங்கியின் முன்பு உட்காருகிறார்கள். மறியல் செய்கிறார்கள் யாரும் ஓட்டுப் போடக் கூடாது என்று. இதை அந்த ஊரில் உள்ள சப்-இன்ஸ்பெக்டர் பார்த்துக் கொண்டிருக்கிறார். சப்-இன்ஸ்பெக்டர் கவர்ன்மெண்ட் அதிகாரி. கவர்னரிடம் கூட இதைப் பற்றி ஒரு புகார் கொடுத்திருக்கிறேன். காலை 9 மணியிலிருந்து ஓட்டுப் போடக் காத்திருக்கிறார்கள். மறியல் செய்பவர்களுக்குப் போலீஸ் பாதுகாப்புத் தருகிறது. இந்த சப்-இன்ஸ்பெக்டர் பெயர் ஜான் சூரியன். இன்ஸ்பெக்டர் பெயர் அப்துல் சமத். ஓட்டுப் போட விடாமல் மக்களைத் தடுக்கிறாகள். இதை அந்த அதிகாரிகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதை அந்த ஊரே பகிரங்கமாகப் பார்க்கிறார்கள். இப்படி எல்லாம் செய்ய வேண்டிய அவல நிலையில் இருந்து கொண்டு சாதனையைப் பற்றிப் பேசுகிறீர்கள்.

நீங்கள் செய்த சாதனைகளைப் பற்றிப் பிரசாரம் செய்யாமல் விட்டுவிட்டு மக்களை நிலவள வங்கித் தேர்தலில் இந்த அளவிற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் களத்தில் சந்திக்கத் தயாராக இல்லை. அன்றைக்கு மத்தியானம் வரையில ஓட்டுப் போட முடியவில்லை. 4-ம் தேதி அந்தத் தேர்தல் நடக்கப் போகிறது. அன்றைக்காவது ஓட்டுப் போட வருகிறவர்கள் ஓட்டுப் போட இந்தக் கோர நாடகம் நடக்காமல் போலீஸ் அதிகாரிகள் உதவி செய்ய உத்தரவிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய பெரும்பாலான சாதனைகளை வெளியே பரவ விடாமல், மக்களை உங்கள் கட்சியினரே சந்திக்க முடியாத அளவிற்கு உங்கள் கட்சி சீர்கெட்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அவசர நிலையை ஆதரிப்பதில் நிபந்தனையின்றி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கவில்லை. இந்திரா காங்கிரஸ் கட்சியின் மூலமோ, தேர்தல் உடன்பாட்டின் மூலமோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எந்தவித லாபமும் அடையவில்லை.

[திரு. பெ. சீனிவாசன்] [1975 அக்டோபர் 29

ஸ்தாபன காங்கிரஸ் பாண்டிச்சேரியில் லாபம் அடைந்தது. இந்திரா காங்கிரசை எதிர்க்க வேண்டிய அவசியம் எப்போது வேண்டுமானாலும் ஏற்படலாம். அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டால் அதற்காக நாங்கள் வருத்தப்பட மாட்டோம். கடந்த காலத்தில் ஆதரவு கொடுத்தோமே என்று முதல் அமைச்சர் அவர்கள் வருத்தப்படுகிறார், 1971-ல் ஆதரவு கொடுத்தோம் என்று வருத்தப்படுகிறார். பழைய காலத்தைப் பற்றி நாங்கள் வருத்தப்பட மாட்டோம்.

போனஸ் சட்டத்தை எதிர்க்கிறோம். இந்தச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்றால் சமரசப் பேச்சின் மூலம் இதற்கு ஒரு தீர்வு காணலாம் என்ற ஒரு நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட பாராளுமன்றத்தின் சம்மதத்தைப் பெற்று மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுத்தால் அதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கும். இந்த நடவடிக்கை என்றைக்கு விரும்பத் தகாத முறையில் மக்கள் சக்திக்கு விரோதமாக, மக்களுக்கு மாறாகச் செயல்படுகிறதோ, ஜனநாயகத்தை அழித்துச் செல்கிறதோ அன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கும். இது தான் எங்கள் கட்சியின் உண்மையான நிலை. இங்கே கடற்கரைத் தீர்மானம் மாதிரி, திருநெல்வேலித் தீர்மானம் மாதிரி ஒவ்வொரு நிறமாக நிறம் மாற்றிக் கொள்கிற பச்சோந்தித் தீர்மானமாக இருக்காது என்பதைக் கூறி என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, 20 அம்சத் திட்டத்தை முஸ்லீம் லீக் கட்சியைப் பொறுத்த வரையில் முழு மனதோடு ஆதரிக்கிறது, மத்திய சர்க்கார் போட்டிருக்கிற அவசரச் சட்டத்தை யாராக இருந்தாலும், எந்த இடத்திலிருந்தாலும் இன்றையதினம் தமிழக முஸ்லீம் லீக் கட்சி ஆதரிக்கிறது என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த நாட்டிலே பல்வேறு ஏழை எளிய மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கெல்லாம் நன்மை செய்வதற்கு இந்த ஆட்சி முனைப்பாக இருக்கிறது என்ற காரணத்தின் அடிப்படையில் எங்கள் முழுமனதான ஆதரவை நாங்கள் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.



1975 அக்டோபர் 29] [திரு. கே. எ. வகாப்]

அதே நேரத்தில் கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சி முதல் அமைச்சர், ஆளும் காங்கிரஸ் சார்ந்திருக்கிற கூட்டணியில் முஸ்லீம் லீக் கட்சி இருக்கிறது. அந்தப் பாணியிலே முஸ்லீம் லீக் கட்சி பங்கு கொண்டு வருகிறது. அதே முறையில் மத்திய அரசாங்கத்தில் பெருமதிப்பிற்குரிய இந்திராகாந்தி அவர்கள் மக்களுக்குச் சில நல்ல திட்டங்களை அறிவிக்கிறபோது அதை ஆதரிப்பதற்கு நாங்கள் என்றைக்கும் பின் தங்கியது இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெளிவாக எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நாட்டிலே அவசர நிலை இருக்கிறது, ஜனநாயகத்திற்கு ஆபத்து வருகிறது என்கிறபோது சில கட்டுப்பாடுகள் அவசியமாகிறது என்பதை எல்லோரையும் போல நாங்களும் உணர்கிறோம். அப்படிப்பட்ட கட்டுப்பாடுகள் உண்மையான ஜனநாயக வளர்ச்சிக்கு ஆதரவாக அல்லது அதற்கு எல்லாவிதத்திலும் ஊக்கம் அளிப்பதாக இருந்தால் நிச்சயமாக இப்படிப்பட்ட கட்டுப்பாடுகள் இந்த நாட்டில் இருப்பது நல்லது என்றே நாங்கள் நினைக்கிறோம்.

ஒரு கதை சொல்லுவார்கள். தெருவிலே ஒருவர் கையிலே தடியை வைத்துக்கொண்டு வேகமாக நடந்து சென்றார். ஒருவருடைய மூக்கிலே தடி பட்டு அவருக்கு ரத்தம் வருகிறது. அந்தக் கைத்தடிக்காரரைப் பார்த்து என்ன ஐயா இப்படித் தன்னிச்சையாகத் தாங்கள் தடியை வீசிக் கொண்டு போகலாமா என்று கேட்கிறார். அதற்கு அவர் 'அது என்னுடைய உரிமை', என்று சொன்னார். அது உன்னுடைய உரிமையாக இருக்கலாம். ஆனால் உன்னுடைய உரிமை எங்கே முடிகிறது என்றால் என்னுடைய மூக்கு எங்கே ஆரம்பமாகிறதோ அங்கே உன்னுடைய உரிமை முடிகிறது என்றார். உன்னுடைய ஜனநாயகம் அந்த இடத்திலே தான் நிற்கிறது. என்னுடைய உரிமை ஆரம்பிக்கிறது.

Your freedom ends where my nose begins. அந்த முறையிலே பார்க்கிறபோது ஜனநாயகத்திற்கு சில கட்டுப்பாடுகள் தேவை என்பதால் முஸ்லீம் லீக் கட்சி ஆதரித்தது. ஆனால் அந்தக் கட்டுப்பாடு அளவிற்கு மீறிய கட்டுப்பாடாக நாட்டில் உள்ள மக்களுடைய உரிமையைப் பறிக்கிற அளவிற்கு மாறுகிறபோது அதை நாங்கள் எதிர்க்கத் தயாராக இருக்கிறோம். இந்த 20 அம்சத்

[திரு. கே. எ. வகாப்] [1975 அக்டோபர் 29

திட்டங்களின் நோக்கமே மக்களுக்கு உண்ண உணவு, இருக்க இடம் போன்ற அடிப்படையான ஜீவாதார உரிமைகளை வழங்குவது தான். நம்முடைய அரசியல் சாசனத்தில் இதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் இவ்வளவு ஆண்டுக் காலமாக இவற்றைச் செயல்படுத்த முடியவில்லை. 28 ஆண்டுகள் ஆட்சியிலிருந்தவர்களால் இவைகளை ஏன் செயல்படுத்த முடியவில்லை. ஏனென்றால் அவ்வப்போது ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகள் காரணமாக, பல சிக்கல்களின் காரணமாக, தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்த முடியாத அந்த நிலைமையில் அவர்கள் இருந்திருக்கலாம். தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சில அரசியல்வாதிகள் இவற்றைச் செயல்படுத்த முடியாமல் இருந்திருக்கலாம். அவசரச் சட்டம் என்பதை வைத்துக் கொண்டு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு அவர்கள் வருகிறபோது நிச்சயமாக ஆதரிக்க வேண்டியது அவசியமாகும்.

1971-ம் ஆண்டிலே ஒரு அவசரச் சட்டம் இருந்தது. அதை நிறைவேற்ற முடியவில்லை. இன்றைக்குத் தீவிரமாகக் கொண்டு வருகிறார்கள் என்றால் மக்களுக்கு நன்மை செய்யக் கூடிய திட்டம் இதில் இருக்கும் என்றால் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த 20 அம்சத் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ தமிழகத்தைப் பொறுத்தவரையில் எல்லாத் திட்டங்களையும் நாம் செய்யாவிட்டாலும் பெரும்பாலான திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். அல்லது நிறைவேற்றுகின்ற கட்டத்திலே இருக்கிறோம். ஆர்வத்தோடு, முனைப்போடு நிறைவேற்றுகிற முறையில் இந்த அரசு செயல்படுகிறது.

விலைவாசியைப் பொறுத்த மட்டில் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாத பல சூழ்நிலைகள் இந்த நாட்டிலே ஏற்பட்டு விட்டன.

ஆனால் அதே நேரத்தில் அவர்களைப் பயமுறுத்தி, அச்சுறுத்தி, சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினால் கட்டுப்படக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு கடையிலும் விலைவாசிப் பட்டியல் இப்போது போடப்பட்டிருக்கிறது. ஆனால் விலை குறைந்திருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. விலைவாசிப் பட்டியல் போட்டிருக்கிறார்கள்; ஆனால் விலை குறையவில்லை. பட்டியல் வைக்க



1975 அக்டோபர் 29] [திரு. கே. எ. வகாப்]

வேண்டுமென்று சொன்னார்கள்; வைத்திருக்கிறார்கள். ஆனால் ரூ. 2-10-க்கு விற்ற சோப்பு விலை ரூ. 1-90 க்கு வந்திருக்கிறதா என்றால் இல்லை; அதே விலைதான். அதைக் குறைப்பதற்கு நம்மால் முடிந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

உணவுப் பிரச்சனையை எடுத்துக்கொண்டால் விலைவாசி இறங்கியிருக்கிறது. ஆனால் ஓட்டல்களிலே உணவுப்பொருள் விலை குறையவில்லை. முன்பு இருந்த விலையில் எப்படி விலை நிர்ணயம் செய்திருந்தார்களோ அதே விலைதான் இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. ஓட்டல்களிலும் உணவுப் பொருள் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தம் பற்றி விரிவாகப் பேசப்பட்டுவிட்டது. எல்லா மாநிலங்களையும் விட தமிழகம் முன்னோடியாக இருக்கிறது. அந்த அளவுக்கு தமிழ்நாடு அரசு செய்திருக்கிறது. இன்னும் பல்வேறு முன்னேற்றங்களைச் செய்திருக்க முடியும். ஆனால் அதற்கு வேண்டிய அனுமதியை மத்திய அரசு தரவில்லை. தமிழக அரசின் சட்டத்திலே ஏதாவது குறைபாடு இருந்தால், கேரளத்திலே இப்படிச் செய்திருக்கிறார்கள், அதுமாதிரிச் செய்யுங்கள்; அல்லது காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலே இப்படிச் செய்திருக்கிறார்கள், அதுமாதிரிச் செய்யுங்கள் என்று சொல்லி, அந்தச் சட்டங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால்கூட இந்தியத் துணைக் கண்டத்திலேயே நல்ல சீர்திருத்தமாக தமிழ்நாட்டில் நிலச் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்ற பெருமை தமிழக அரசுக்கு வந்து சேர்ந்திருக்கும்.

வீட்டுமனைப் பட்டா பற்றிச் சொல்லப்பட்டது. இன்றைய தினம் அகில இந்தியாவிலும் இந்தக் காரியத்தில் தமிழ்நாடு அரசு முன்னணியில் இருக்கிறது. லட்சக் கணக்கான வீட்டுமனைப் பட்டாக்களை தமிழ்நாடு அரசு கொடுத்திருக்கிறது. நான் 2, 3 நாட்களுக்கு முன்பு ஒரு சினிமா டாக்குமென்டரியைப் பார்த்தேன். அந்த டாக்குமென்டரியிலே கர்நாடகத்தில் 200 அல்லது 300 வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சி பெரிதுபடுத்திக் காட்டப்பட்டது. அது நமக்கு சாதாரணமாக இருக்கிறது. 200, 300 பட்டா கொடுத்தவர்களுக்கு அது பெரிதாகத் தெரிகிறது; மத்திய அரசு அதைப் பெரிதுபடுத்திக் காட்டுகிறது; விளம்பரப்படுத்து

கிறது. ஆனால் லட்சக்கணக்கான பட்டாக்களைக் கொடுத்த நமக்கு அத்தகைய விளம்பரம் இல்லை; நமக்கு இது சாதாரணமாகத் தெரிகிறது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் லட்சக்கணக்கான பட்டாக்களைக் கொடுத்திருக்கிறார்கள். இதை விளம்பரம் செய்திருந்தால், மற்ற மாநிலங்களிலே இருப்பவர்களும் இதை பின்பற்றியிருப்பார்கள். கர்னாடகம் அல்லது மற்ற மாநிலங்களில் சிறிய அளவில் செய்திருந்தாலும் அதைப் பாராட்டுகிறோம். ஆனால், தமிழக அரசு எல்லாவற்றையும்விட முன்னோடியாக இருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும்.

இந்தக் கண்டனத் தீர்மானத்தைக் கொடுத்தவர்கள் கூட உண்மையான எதிர்ப்பு உணர்ச்சியோடு கொடுத்திருக்க மாட்டார்கள்; எதிர்க்கட்சி என்ற முறையிலே இந்த அரசின் கொள்கையை எதிர்க்க வேண்டுமென்று கருதித்தான் கொடுத்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். வீட்டு மனைப் பட்டா வழங்கிய விஷயத்தில் வேறு எந்த மாநிலத்தையும் விட இங்கே பல மடங்கு அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் எல்லாம் நிச்சயம் ஒப்புக்கொள்வார்கள்.

விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் மற்ற ஏழை எளிய மக்களுக்கும் மற்ற மாநிலங்களில் கடன் நிவாரணம் அளித்திருக்கிறார்கள்; ஒப்புக்கொள்கிறோம். மகாராஷ்டிரத்தில் 500 ரூபாய் கடனை ரத்து செய்திருக்கிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். நிச்சயமாக நம்முடைய முதலமைச்சரவர்களும் அப்படி ஒரு நடவடிக்கையை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஏழை, எளிய மக்கள் 'பட்டாணிக்காரர், ஈட்டிக்காரர்' என்று சொல்லக்கூடியவர்களிடம் வட்டிக்குக் கடன்பட்டு தாங்க முடியாத கடன் தொல்லையில் இருக்கிறார்கள். வாங்கிய பணத்தை விட 3 மடங்கு, 4 மடங்கு அதிகம் வட்டியாக செலுத்தியிருந்தாலும் அந்தக் கடனிலிருந்து மீளமுடியவில்லை. ஆகவே, அவர்களை எல்லாம் காப்பாற்றும் வகையில் வாங்கிய கடன் 500, 1,000 ரூபாயாக இருந்தாலும் அதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; விவசாயக் கூலி சீரமைப்பு—அதற்கு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அறிக்கையிலே 3 ரூபாய், ஒன்றே முக்கால் ரூபாய் என்று இருந்தாலும் அரசாங்கம்



தாராளமாக நடந்துகொண்டிருக்கிறது. ஆண் தொழிலாளியாக இருந்தால் 5, 6 ரூபாய், பெண் தொழிலாளியாக இருந்தால் 4, 5 ரூபாய் என்ற அளவுக்குச் செய்திருக்கிறது. அதைச் சட்டமாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பசுமைப் புரட்சிபற்றி பிரதம அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது பசுமைப் புரட்சியைக் கொண்டு வந்தார்கள். அப்போதே தமிழ்நாட்டில் பசுமைப்புரட்சி கொண்டு வரப்பட்டு நல்லமுறையிலே செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் துறையிலே தமிழக அரசு நல்லமுறையில் முன்னேறி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சார உற்பத்தியில் மாபெரும் திட்டங்களை மத்திய அரசு தான் ஏற்படுத்த வேண்டும். மாபெரும் திட்டங்களை ஏற்படுத்த அல்லது மக்களுக்குத் தேவையான அளவுக்கு மின்சாரம் கொடுக்க மாநில அரசுக்கு நிதி வசதி போதாது. ஓரளவு பொருளாதாரத்தைத்தான் மாநில அரசு ஒதுக்க முடியும். அணு மின் நிலையம் அல்லது 1,000 கிலோவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்றால் மத்திய அரசின் பொருளாதார உதவியினால்தான் முடியும். இப்படிப்பட்ட உதவியைச் செய்ய மத்திய அரசு தயாராக இருந்தால் மாநில அரசு இத்தகைய திட்டங்களை நிறைவேற்றுவதில் முனைந்து நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

கைத்தறித் தொழிலாளர்கள்பற்றி மத்திய அரசு இன்றைக்குத் தான் நினைத்துப் பார்க்கிறது. ஆனால் இந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, கட்சித் தலைவர்கள் எல்லாம் தங்களுடைய தலையிலே கைத்தறித் துணி மூட்டைகளைச் சுமந்து சென்று தெருத்தெருவாக விற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்காக எவ்வளவோ செய்துகொண்டிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுக்கு இந்தியாவிலேயே வேறு யாரும் செய்யாத சலுகைகளை எல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் பல்வேறு வசதிகளையும் செய்து

கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலத்தையும் ஒப்பிட்டுப் பேசுவதற்கு யாருக்கும் ஒரு நிலை இல்லை என்பதை கைத்தறித் துறையிலே பார்க்கிறோம்.

நேற்றுக் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்திலே கைத்தறி நெசவாளர்களின் அவல நிலைபற்றிச் சொன்னார்கள். மதுரையில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றிப் பேசினார்கள். அந்த விபத்திலே இறந்தவர்கள் யார் என்று பார்த்தால் கைத்தறி நெசவாளர்கள்தான். "கை கொண்டு மெய் பொத்தி" என்று சொல்வார்களே, அந்த அளவுக்கு இன்றைக்கு அவர்களுக்கு உடுத்திக்கொள்ள துணிக்குக் கூட வழியில்லாமல் இலவசமாக வழங்கும் துணியைப் பெறுவதற்காகப் போயிருக்கிறார்கள். அங்கே அவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதற்காக உண்மையிலே கண்ணீர் வடிக்கின்ற அரசாக இந்த அரசு இருக்கிறது. மேலும் கைத்தறி நெசவாளர்களுக்காக இந்த அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருக்குமானால் வெற்றிகரமாக நடக்கும்; இத்திட்டங்களை மற்ற மாநிலத்தவர்களும் பின்பற்றினால் வெற்றிகரமாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஜவுளித் துணிக் கட்டுப்பாட்டைப்பற்றிச் சொன்னார்கள். சில கன்ட்ரோல் ரகத் துணிகளை ஏழை எளிய மக்கள் உபயோகிக்கும் வகையில் கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள். அதை மத்திய அரசுதான் செய்ய முடியும்; அதற்குரிய சட்டத்தை மத்திய அரசுதான் கொண்டுவர முடியும். அதைக் கொண்டுவந்தால் மாநில அரசு நிச்சயமாக ஆதரவு கொடுக்கும்.

இன்றையதினம் பொருளாதார சீர்கேடு ஏற்பட்டிருப்பதற்குக் காரணமாக இருக்கிற கள்ளக்கடத்தல்காரர்கள்மீதும் கொள்ளை லாபம் அடிப்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க மத்திய அரசினால் தான் முடியுமே தவிர மாநில அரசால் முடியாது. ஏனென்றால் மாநில அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை. இன்றைக்கு இருக்கின்ற சட்ட திட்டங்கள் அப்படி இருக்கின்றன. அதே நேரத்தில் சில சட்ட திட்டங்களைத் தயாரித்து, அல்லது இருக்கின்ற சட்ட திட்டங்களில் சிலவற்றையாவது மாநில அரசுக்குக் கொடுத்தால் மாநில அரசு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியும். அப்படிப்பட்ட சட்ட திட்டங்கள் மாநில அரசுக்கு வேண்டுமென்று





கேட்டால் அதற்கு ஆதரவு தருவதற்கு இந்த அவையிலே ஆட்கள் இல்லை. ஆனால் எடுக்கின்ற நடவடிக்கைகளைப்பற்றி மட்டும் குறை சொல்கிறார்கள். கள்ளமார்க்கெட்காரர்கள், கொள்ளை லாபதை காரர்கள், உணவுப் பொருட்களிலே கலப்படம் செய்வோர் மீலத் நடவடிக்கை எடுக்கவில்லை; அதனால் 20 அம்சத் திட்டத்தை இளி அரசு நிறைவேற்றவில்லை என்று சொல்வதில் பொருளில்ற அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரத்தைக் கொடுத்து விட்டு, நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் நாங்கள் கூட அதைச் சுட்டிக்காட்ட முடியும். அதிகாரம் இருப்பதோ மத்திய அரசிடம்; மாநில அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? சட்டத்தைக் கொடுத்துவிட்டு நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்ல அவர்களுக்கு உரிமை இருக்கிறது; அதற்குப் பதில் சொல்ல மாநில அரசு கடமைப்பட்டிருக்கிறது. சட்டத்தைக் கொடுக்காதவரையில் மாநில அரசைக் கேட்க முடியாது.

அதுமட்டுமல்ல. ஏற்றுமதி, இறக்குமதி லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் மாநில அரசுக்குக் கிடையாது. அந்த அதிகாரம் மத்தியில்தான் இருக்கிறது. ஆகவே, அதிலும் மாநில அரசு எதுவும் செய்ய முடியாது.

இன்றைய தினம் நாம் தினம் தினம் உபயோகிக்கும் சர்க்கரை, சிமெண்ட், போன்றவைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மத்தியிலே தான் இருக்கிறது. அவர்கள் விருப்பம்போல் சர்க்கரை விலையை அமைத்துக்கொள்கிறார்கள். அதனால் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். கரும்புக்குப் போதிய விலை இல்லை. ஆனால் சர்க்கரை விலை குறையவில்லை. சர்க்கரை விலையை அதிகப்படுத்த வேண்டும் அல்லது குறைக்கவேண்டுமென்று சொல்கிற அதிகாரம், விலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மத்திய அரசிடம் தான் இருக்கிறது. மத்திய அரசு சொல்கின்ற இருபது அம்சத் திட்டத்தைச் சரிவர மாநில அரசு நிறைவேற்ற வேண்டுமானால் இப்படிப்பட்ட அதிகாரங்களை எல்லாம் மாநில அரசுகளிடம் கொடுக்க வேண்டும். இந்த இருபது அம்சத் திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு ஏற்ற அதிகாரங்களையாவது மாநில அரசுக்குக் கொடுக்கும் வகையில் சட்டம் போடப்பட வேண்டும். மாநில சுயாட்சி என்று சொல்லப்படுகிறதே, அந்த அடிப்படையிலே சில முக்கியமான அதிகாரங்களை மாநில அரசுக்குப் பங்கிட்டுக்

[திரு. கே. எ. வகாப்] [1975 அக்டோபர் 29

(நண்பகல் 12-00)

கொடுக்க வேண்டும். இந்த இந்த அதிகாரங்களை நீங்களே செயல் எடுத்தலாம் என்று சொல்லக்கூடிய நிலையில் இருக்க வேண்டும். நிலைடுக்க வேண்டும்.

நேற்றைக்கு உண்மையிலேயே அதிர்ச்சி தரத்தக்க ஒரு செய்தியினை முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த நாட்டிலே ஒரு புரட்சிகரமான நிலைமையில் மதுவிலக்குத் திட்டத்தில் தமிழகம் இருந்து வருகிறது. அது போல் குஜராத் மாநிலத்திலும் இருக்கிறது. இங்கே குறிப்பிட்டது போல் பல கட்டங்களில் மதுவை ஒழிக்க பிரதமர் அவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள். அத்திட்டத்தை தீவிரமாக அமல்படுத்தவேண்டுமென்று எங்கள் கட்சி மட்டுமல்ல, நாட்டிலுள்ள அனைவரும் ஒரே குரலில் கேட்கும் பொழுது மதுவிலக்குத் திட்டத்தைக் கெடுப்பதற்கு யார் யார் காரணமாக இருக்கிறார்களோ, கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் மிசா சட்டத்தின்கீழ் பிடிக்கப்பட்டு உள்ளே வைக்கப்பட்டார்கள். இவர்களை விட்டுவிடவேண்டுமென்று உத்தரவு வந்தால் நிச்சயமாக எப்படி மதுவிலக்குத் திட்டத்தை மாநில அரசாங்கம் திறமையாக நடத்த முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் பிழைப்புக்காகக் காய்ச்சுகிறார்கள் என்று அவர்களுக்காகப் பரிந்து பேசுகிற முறையில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பேசினார்கள். அது உண்மையிலே கேட்பதற்கு வேதனையாக இருந்தது, வருத்தமாக இருந்தது.

இன்றைய தினம் தமிழக அரசு மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்தி நல்லாட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்குப் பாராட்டுவதற்கு முடியாவிட்டாலும் கூட அதில் குறை கண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் பிழைப்புக்காகக் காய்ச்சுகிறார்கள் அவர்களைப் பிடித்து உள்ளே போடுகிறீர்களே என்று பரிந்து பேசுகிற தன்மை அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைக்கு இருக்குமென்றால் அந்த நிலைமையைக் கண்டு வருத்தப் படவேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம்.



1975 அக்டோபர் 29] [திரு. கே. எ. வகாப்]

அது மட்டுமல்ல. இன்றையதினம் தமிழக அரசைப் பொறுத்த வரையில் இந்தத் திட்டம் மட்டுமல்லாமல் இன்னும் பல நல்ல திட்டங்கள், சொல்ல வேண்டுமென்றால் பத்து அம்சத் திட்டத்தை நாம் கூட அனுப்பலாம். நாம் நடத்தி வருகிற சமுதாய நலத் திட்டம், புரட்சிகரமான குடும்பநலத் திட்டம், கண்ணொளி வழங்கும் திட்டம், ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம், கிராமப்புற குடிநீர் திட்டம், குடிசை மாற்றுத் திட்டம், ஏழைகள் பென்ஷன் திட்டம், விதவைகள் மறுவாழ்வுத் திட்டம், இவைகளுக்கு எல்லாம் முத்தாய்ப்பு வைத்தது போல் குதிரைப் பந்தய ஒழிப்பு, லாட்டரிச் சீட்டு ஒழிப்பு இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் அமல்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றை எல்லாம் மத்திய சர்க்கார் சிந்திக்க வேண்டாமா? மாநில அரசுகளில் எந்த அரசு நல்லது செய்கிறது, யார் யார் நல்ல திட்டங்களைப் போடுகிறார்கள், அவர்களது அதிகாரங்களை எடுத்துக் கொள்ளாமல், சொல்பவர்கள் யார் என்று பார்க்காமல் 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' எனபதற்கேற்ப மெய்ப் பொருள் காண்பவர்களாக இருக்க வேண்டாமா?

தமிழக அரசு ஆளும் கட்சியான காங்கிரசுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட காரணத்தால் அவர்கள் செய்யும் நன்மைகளை எடுத்துக் கொண்டு அவர்கள் முன்னோடியாக இருக்க வேண்டாமா? அதைத்தான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நாட்டில் மதுவிலக்கைப் பொறுத்தவரையில் தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டது. எங்களுக்குக் கூட சந்தோஷமாக இருந்தது. திடீரென்று கள்ளச்சாராயம் காய்ச்சுவது எல்லா ஊர் களிலும் நின்றது. எல்லா போலீஸ் ஸ்டேஷன்களிலும் அமைதி குடி கொண்டிருந்தது. எல்லா போலீஸ்காரர்களும் மிக ஏமாற்றத் தோடு இருந்தார்கள். திடீரென்று ஒரு நாள் ஒரு மாதம் கழித்து கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் விடுவிக்கப்பட்டவுடன், கள்ளச் சாராயம் காய்ச்சுவது மாமூலாகிவிட்டது. இன்று எல்லாமே மாமூலாக ஆகிவிட்டது. அவசரகால நிலை அமலில் இருந்தும் நாம் சில திட்டங்களை நடத்த முடியவில்லையென்றால் அது என்ன பலனளிக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைய தினம் தமிழக அரசு சார்பாக இந்த 20 அம்சத் திட்டத்தை முனைப்பாகச் செயல்படுத்தவேண்டுமென்றால் நிச்சய மாகச் செயல்படுத்துவோம் என்று மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையில் எடுத்துக் கொண்டு செயல்படுத்தப்பட்ட சில திட்டங்களைக் குறிப்பாகச் சொன்னதுபோல், ஏழை விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் அளிப்பதற்காக அதற்கு ஒரு வரம்பு வைத்து அதற்கு அப்பாற்பட்ட கடன்கள் தள்ளுபடி என்று உத்தரவு வந்தால் இந்தத் திட்டம் மிக நல்ல திட்டங்களில் ஒன்றாக இருக்கும் என்று கூறிக் கொண்டு சொல்லாமல் பல சாதனைகளைச் செய்த தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சொல்லித் தான் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இருந்தால் சொல்லுவது முறையாகும். அதற்காக நல்லது செய்வதற்குப் புகழில்லை என்றாலும் கண்டித்துத் தான் தீரவேண்டுமென்ற முறையில் எதிர் கட்சி என்ற முறையில் குறைகாணவேண்டுமென்ற அடிப்படையில் தான் இந்தக் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்க முடியும்.

அப்படி பேசியவர்களும் கூட இந்த 20 அம்சத் திட்டத்தைப் பற்றி யாரும் பேசியதாகத் தெரியவில்லை. அதை முன்மொழிந்து பேசிய தலைவர் முன்னுரையாகச் சொன்னார்களே தவிர அந்தத் திட்டங்களைப் பற்றி விளக்கங்கள் சொல்லவில்லை. மாற்றுக் கட்சிக்காரர்கள் தங்கள் கட்சிகளுக்கேற்ப நிலைமைகளைப் பேசினார்கள். இன்றையதினம் நிச்சயமாக தமிழக அரசு நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதே நேரத்தில் இன்னும் பல நல்ல திட்டங்களை மத்திய அரசு கொண்டு வந்தால் முனைப்பாகச் செயல்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தக் கண்டனத் தீர்மானம் பொருத்தமற்றது, பொருளற்றது என்று எடுத்துக் கூறி எனது உரையை நிறைவு செய்து அமருகிறேன்.

* திரு. கி. ஜெய்ராமன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளும் காங்கிரஸ் கட்சியினரும் கம்யூனிஸ்ட் கட்சியினரும் இங்கே கண்டனத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நிலைமை இப்படியிருக்க டில்லியில் மத்திய அரசு ஒரு பெரிய தவறைத் தொடர்ந்து செய்து கொண்டே வருகிறது. அண்மையில் டில்லியில் செய்தியாளர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் பரூவாவை சந்தித்து ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் சமீபத்தில் பிரதமர் தெரிவித்திருக்கிற 20 அம்சத் திட்டத்திற்கும் என்ன இணைப்பு, மேலும் ஐந்தாவது ஐந்தாண்டுத்



திட்டம் ஏன் இப்படி ஒத்தி போடப்பட்டுக்கொண்டு வருகிறது என்று கேட்ட நேரத்தில் அவர் கூறிய பதிலை நான் இங்கே வாசிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"There are basic goals and strategy. What I would like to say is that there is a qualitative change in our approach. The 20-point programme introduces new elements of urgency and social justice . . ."

ஆக, அவர்களுக்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் நம்பிக்கையில்லை. நம்பிக்கை இல்லாத காரணத்தால் தான் உலக நாடுகளையெல்லாம் திசை திருப்ப இப்படி 'பீஸ் மீல்' 20 அம்சத் திட்டத்தை அவர்கள் திடீரென்று கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிக் கொண்டு வந்த திட்டத்தை நாம் சரிவர நிறைவேற்றவில்லையென்று கண்டனத் தீர்மானத்தைக் கொடுத்தவர்கள் அங்கே இந்த 20 அம்சத் திட்டத்தைச் சரிவர நிறைவேற்றி இருக்கிறார்களா என்று நாம் சிந்தித்துப் பார்த்தால் இங்கே நண்பர் சுப்பு எடுத்துக் காட்டியது போல் பிளிட்ஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகை இந்தத் திட்டத்தைப் பற்றி இந்திய அரசினர் எந்த முறையில் தவறு செய்கிறார்கள் என்பதை அவர்கள் எடுத்துக் காட்டிக் குறிப்பாக,

"sugar, quality rice, groundnuts and other oil seeds, coffee, tea, spices, cotton, textile fabrics, ready-made garments and light engineering goods"

இவைகளை எல்லாம் ஏற்றுமதிக்காக வெளியே அனுப்பி, உள் நாட்டிலே நிலைமை மோசமாகக்கூடிய சூழ்நிலைமையை இந்த 20 அம்சத் திட்டத்தால் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லி அதே செய்தி மத்திய அரசைக் கண்டித்து இருக்கிறது.

இந்த 20 அம்சத் திட்டத்தை எதற்குக் கொண்டு வந்திருக்கிறார்களோ அவைகளுக்கு எதிராகவே பயன்படுகிறது என்று சொல்லி:

"What we have had, instead, is a series of scattered decisions, often running in contrary directions, not in consonance with the spirit of the original programme."

என்ற அந்தப் பெரிய பத்திரிகை கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது. அதைத்தான் நாம் சிந்திக்க வேண்டும்.

"The enthusiasm for the emergency which one saw in Hyderabad, Bangalore and Trivandrum was not quite evident in Madras, where many people take their cue from the D.M.K. Government and its leader, Mr. Karunanidhi. Nevertheless one sensed widespread relief over the peace and quiet which generally prevails in the city".

தெரிவித்திருக்கிறார்கள். குடியிருப்புச் சட்டத்தைப் பற்றித் நாம் 1971இல் ஆரம்பித்தோம். ஆரம்பித்தபோது பட்டா என்பது வெறும் காகிதம்தானே என்றார்கள். மத்திய அரசு நாம் செய்த க்காரியத்தைப் பாராட்டி, நமக்கு ரூபாய் 75 லட்சம் உதவி செய்ய ஒப்புக்கொண்டு தமிழகத்தை பயனியர் ஸ்டேட் என்று வருணித்து. ஆனால் அந்த ரூ. 75 லட்சத்தை கொடுத்துத் திடீரென்று மேற் கொண்டு கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். நம்முடைய குடிசை மாற்றுவாரியம், வீட்டு வசதி வாரியம், குடிநீர் வாரியம் ஆகிய வற்றின் பணிகளை எல்லாம் ஜனாதிபதி அவர்களே பாராட்டினார்கள். ஆனால் மேற்படி பணத்தை நிறுத்திவிட்டார்கள். என்ன நெருக்கடி? இருபது அம்சத் திட்டத்தைப்பற்றிப் பேசு கிறவர்கள் ஏன் நிறுத்தி விட்டார்கள்? நாம் பலமுறை கேட்டும் அந்தப் பணம் வரவில்லை.

அண்மையில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தை நாம் விரைவாகச் செயல்படுத்திக்கொண்டு வருகிறோம். அங்கே இருந்து வந்த மத்திய அமைச்சர் திரு. ஷாநவாஸ்கான் அவர்கள் கடலூரில் நாம் செய்து வருகிற பணிகளைப் பார்த்து மனமுவந்து பாராட்டினார்கள். இந்தப் பணிகளை எல்லாம் விரைவாகச் செயல் படுத்தி, இதற்காக ஒதுக்கிய பணத்தை முழுவதும் செலவழித்து விட்டீர்களே என்று சொன்னதே—கண்டனத் தீர்மானம் கொடுத்த வர்களுக்கு பதிலாக இருக்கும் என்று சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

Thiru B. Venkataswamy: Hon. Deputy Speaker, Sir, on behalf of the Swatantra Party, I was to offer few remarks on the Censure Motion brought forward by the hon. Member, Thiru A. R. Marimuthu, Congress Party Leader, stating that this Government has not implemented the 20 point-programme effectively.



At the outset, I would like to say that there is clear proof that the Central Government has failed to implement various schemes. Even after 25 years of rule, the Central Government has not been able to deliver the goods to the common man in India. So, they have proposed this 20-Point-programme, which is a clear proof to show that they have failed to deliver the basic needs of the people.

This Censure Motion ought to have been brought on the Central Government. Because I am not a Member of the Parliament, I could not bring this Censure Motion on the Government of India. After realising that they have failed to implement the various schemes, they have brought this in the form of a 20 point-programme. The 20 point-programme is a day to day affair of any Government of the country to develop the economic prosperity of the Nation.

So far, so many schemes have been promised by the Hon. Prime Minister. In the previous election, she has promised the Nationalisation of Banks to help the poor people. But the Banks are not helping the poor pepole. She, also assured 'Garibi Hatao'. What has happened? She could not do anything to the poor people. Hatao Garbi is there. She could not wipe out the poverty of the people. The 20 point-programme is only a slogan to win the next election. It is a clear proof to show that she has not implemented various assurances given by her. She has failed to implement so many promises that she has given at the time of the election. In order to divert the attention of the people, she has introduced this 20 point programme, and emergency.

This is just like an old wine in a new bottle. This 20 point programme is intended to cheat the people. It is purely a vote-catching business. Who has prevented her from doing good things to the people before the promulgation of the emergency. Who has prevented her from implementing the programme before the emergency. Every domocrat would welcome the economic prosperity of the nation but this emergency is unwarranted. Our Party at its meeting at Tirunelveli has totally condemned the emergency. As the hon. Member, Thiru Ponnappa Nadar, has stated it was only after the verdict of the Allahabad High Court which set aside her election, the emergency was proclaimed and this was done to protect her and not to safeguard the nation.

After some argument everyone who was approached left the meeting except one person who refused to leave. He was dragged away by the policemen. . . ."

Sir, even on Gandhiji's birthday, people could not go and pray before his Samadhi and that is the kind of democracy we are having now. In the name of the emergency, the activities of the Opposition Parties have been curbed in some States like Karnataka. This is what is happening now. We strongly oppose the emergency.

So far as the Motion is concerned, the Swatantra Party will remain neutral but we will welcome any measure for the eonomic prosperity of the country. Now, I request through this House, the Government of India to release all those arrested after the promulgation of the emergency as they had fought for freedom. Also, the emergency should be lifted.

Thank you, Sir,

*திருமதி சத்தியவாணி முத்து: சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அவசர நிலைப் பிரகடனத்தைப் பற்றி நமது மாநில அரசு, மத்திய அரசு கொண்டு வந்த தீர்மானங்களை ஒத்துக் கொள்கின்றதா என்கின்ற கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்றும் பிரதமர் அவர்கள் அறிவித்த 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை விவாதிக்க வேண்டுமென்றும் நான் 17-ந் தேதி மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவருக்கு எழுதிக் கேட்டிருந்தேன். அந்த நல்ல சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததற்காக நன்றி கூறுகிறேன். ஆனால், எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரத்தைக் கொஞ்சம் நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். 15 நிமிடம் மிகக் குறைவு.*

(பிற்பகல் 12-30)

*அவசர நிலைப் பிரகடனத்தைப்பற்றி தி.மு.க. கட்சி எதிர்த்துத் தீர்மானம் போட்டது. கட்சியின் கொள்கைதான் ஆட்சியின் கொள்கை என்று முதல்வர் கூறினார்கள். ஆனால் அந்தக் கொள்கையைச் சட்டமன்றத்திலே தமிழக அரசின் சார்பிலே வெளியிடாதிருப்பதைப்பற்றித்தான் மக்கள் கேள்விக் குறியாகக் கேட்கிறார்கள். கட்சியின் கொள்கைதான் ஆட்சியின் கொள்கை என்றால் மிகப்*





*பெரும்பான்மையாக இருக்கிற ஆளுங்கட்சியினர் அதையேகூட இங்கே நிறைவேற்றி இருக்கலாம். அதைக் கொண்டுவராமலேயே இவர்கள் நடந்துகொண்டதால்தான் இவர்கள் இரட்டை வேடம் போடுகிறார்கள் என்று சொல்லவேண்டிய நிலைமை இருக்கிறது.*

*கட்சி போட்ட தீர்மானத்திற்கு மாறான கருத்தை கடற்கரைக் கூட்டத்திலே முதல்வர் பேசியிருப்பதும் அதற்குப் பிறகு திருநெல்வேலி மாநாட்டிலே வேறு ஒருமாதிரி இருப்பதும் அதற்குப் பிறகு நானே பிரதமர் அவர்களைச் சந்தித்து இப்படிப் பட்ட காரியங்கள் எல்லாம் நடைபெறக்கூடாது, பெருந்தலைவர்களை யெல்லாம் விடுதலை செய்யவேண்டுமென்று கேட்கத் தானே தனித் தூதுக் குழுவாகச் செல்ல இருக்கிறேன் என்று சொன்னதும் அதற்குப் பிறகு அவர் சென்றாரா, அதுபற்றிப் பிரதமரிடத்திலே பேசினாரா, அதுகுறித்து இந்திரா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதையெல்லாம் முதலமைச்சர் இன்னும் நாட்டு மக்களுக்குச் சொல்லவில்லை. ஆனால் அங்கே அவர் சென்றுவந்த பிறகு செய்தியைப் பார்த்தால் அதைப்பற்றி அவர் பேசவேயில்லை என்று மத்திய அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் கூறி மதுவிலக்கு காரணமாக ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்வதற்காகவும், வறட்சிக் காகவும் அதிகப்படியாக பணம் கேட்டார்கள் என்றுதான் பத்திரிகை நிருபர்களிடத்திலே கூறியிருக்கிறார்.*

*பல அவசரச் சூழ்நிலைக்கு என்ன காரணம், அதை நீக்க வேண்டும், தலைவர்களையெல்லாம் விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டதாகவோ அதற்கு அவர்கள் பதில் சொல்லியதாகவோ பத்திரிகை கூறவில்லை. இந்த விளக்கங்களை அவர்கள் இந்த மன்றத்திலே சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.*

*அவசரநிலைப் பிரகடனம் தவறு என்று கூறுகிறார்களா? அதைக் கொண்டுவந்த நேரத்திலேயே வானொலியில் இந்திரா காந்தி அவர்கள் விளக்கம் தந்து எதற்காக அவசரச் சட்டம் என்று கூறியிருக்கிறார்கள். வன்முறையின் காரணமாக உறுப்பினர்களை நீக்குகின்ற முறை, கையெழுத்து வாங்கிக் கொண்டு நீக்குவது அது தான் ஜனநாயகம் என்று சொல்கிறார்கள், அவர்கள் நாங்களும் ஜனநாயகவாதிகள் என்று சொல்கிறார்கள். மிரட்டி ஒரு பெண் உறுப்பினரை அவமானப்படுத்தி கையெழுத்து வாங்கியது எப்படிப் பொருத்தமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றம் இத்தனை*

ஆண்டுக் காலத்திற்கு என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் வரும்போது ஜனநாயகத்திலே ஒரு ஆட்சியை மாற்றியமைக்க வாய்ப்பு இருக்கிறது. அப்படி வாய்ப்பு இருக்கும்போது குஜராத்திலே கட்டாயமாகத் தேர்தல் நடத்தவேண்டும் என்று, நான் தான் துணைப் பிரதமராக வருவேன் என்று சொன்னவர், ஏன் பிரதமராகக் கூட வருவேன் என்று சொன்னவர் பேசிய பேச்சு மொரார்ஜி தேசாய் பேசியது அவர் தேர்தலை முன்னாலேயே வைத்தாக வேண்டுமென்று சண்டித்தனம் பண்ணியது எந்த ஜனநாயகமோ எனக்குத் தெரியவில்லை.

இப்படித் தலைவர்களாக இருப்பவர்களே ஒரு தேர்ந்தெடுக்கப் பட்ட சட்ட மன்றம் அது முடிவதற்கு காலவரையறை இருக்க வேண்டுமென்று இருக்கும்போது தேர்தல் வேண்டும் தேர்தல் வேண்டுமென்று சொன்னார்கள். பிரதமர் அவர்கள் அவர்களுக்கும் இல்லாமல் இவர்களுக்கும் இல்லாமல் நடுவிலே ஒரு தேதியைக் குறிப்பிட்டார்கள். தேர்தல் பிரச்சாரம் நடைபெற்றது. என்ன தான் ஆத்திரம் இருந்தாலும் பிரதமர் பேசுகின்றபோது செருப்பை வீசியிருக்கிறார்கள். மத்திய அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள்—இந்த அரசாங்கத்திற்கு அடிக்கடி தன்னுடைய ஆசிர் வாதத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறவர்கள்—பேசுகிறபோது அவர் மண்டையை உடைக்கக்கூடிய அளவிற்கு கல்வீச்சு, அவர் மண்டையிலே அடிபட்டு சிகிச்சை பெற்றார்கள் என்ற அளவிற்கு நிலைமை போய் விட்டது. பிரதமர் பேசுகின்ற மேடையிலே செருப்பு வீச்சு, ஒரு பெரிய மத்திய அமைச்சருக்குக் கல்வீச்சு, இத்தனையையும் தாங்கிக்கொண்டுதான் அங்கே தேர்தல் நடைபெற்றது. ஆனால் முடிவு என்ன ஆயிற்று, ஒட்டுமொத்தமாக ஜனதா பார்ட்டிக்கு மெஜாரிட்டி இல்லை, உதிரிக்கட்சிகளை வைத்துக் கொண்டு அமைச்சரவை வருகிறது. எந்த அளவிற்கு ஜனநாயகம் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான் இதைச் சொல்கிறேன். ஜனநாயகம் பறி போய்விட்டது, பறிபோய்விட்டது என்று பேசுகிறவர்கள் இந்தக் காரியங்கள் நடைபெற்றதை ஏற்றுக் கொள்கிறார்களா? தேர்தல் முன்னாலேயே நடக்கவேண்டும், உறுப்பினர்களை அவமானப்படுத்திப் பேசவேண்டும், தேர்தல் பிரச் சாரத்தில் பிரதமரை, மத்திய அமைச்சரை அவமானப்படுத்த வேண்டுமென்ற முறையில் தேர்தல் நடந்திருக்கிறது.



அப்படிப்பட்ட குஜராத் மாநிலத்திலே கூட அவசரநிலைப் பிரகடனத்தை வரவேற்று ரேடிஃபை செய்திருக்கிறார்கள். பெருந் தன்மை இருக்கிறது அங்கே. ஆனால் இந்த அரசு அதைக்கூடச் செய்யவில்லை. ஏற்கனவே 1971 ஆம் ஆண்டிலே வெளிநாட்டி லிருந்து வந்த அபாயத்தை நீக்குவதற்காக அவசரப் பிரகடனம் இருந்தது, உள்நாட்டிலே பல பேர்கள் எதிரிகள், ஆட்சியைக் கவிழ்க்க இந்திராவை அல்ல இந்தியாவையே ஒழிக்க எவ்வளவு பிற்போக்குக் கும்பலாக இருக்கிறார்கள் என்று தெரிந்து வைத் திருக்கிறார்கள். ஜெயப்பிரகாஷ் நாராயணனை கைதுசெய்து விட்டார்கள், எவ்வளவு பெரிய தலைவர்களை யெல்லாம் சிறைச்சாலை யிலே போட்டு விட்டார்கள், மொரார்ஜி தேசாயை சிறைச்சாலை யிலே போட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்கிறார்களே நான் அவர்களைக் கேட்கிறேன். மிகப் பெரிய உத்தமர் என்று காந்தி யாரை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த காந்தியார். . .

திரு. நா. வீராசாமி: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். குஜராத் மாநிலத்திலே தீர்மானம் போட்டார்கள் என்று அம்மையார் அவர்கள் சொல்கிறார்கள். தவறான தகவலை இந்த மன்றத்திற்குத் தருகிறார்கள். எங்களுக்குப் பத்திரிகையிலே வந்த செய்திப்படி அப்படித் தீர்மானம் போட்டதாகத் தெரியவில்லையே. . .

திருமதி த. ந. அனந்தநாயகி: அவர்கள் அசெம்பிளியையே கூட்டினார்களே. . .

திரு. நா. வீராசாமி: அசெம்பிளியைக் கூட்டுவது வேறு, தீர்மானத்தை நிறைவேற்றுவது வேறு. . .

திருமதி சத்தியவாணிமுத்து: சட்டமன்றத்தை ஆகஸ்ட் மாதம் கூட்டாமல் இப்போதுதான் கூட்டியிருக்கிறார்கள். டிசம்பரில் கூட்டுவார்களா என்று சொல்ல முடியாது—ஏனென்றால் அதற்குப் பிறகு கூட்ட முடியாது. இன்றைக்குப் பெருந்தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், நம்முடைய உத்தமர் காந்தியார் அவர்களைச் சுட்டுக்கொன்ற கோட்சே கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு அவர்களோடு இருக்கிறார்கள். காந்தியாரைச் சுட்டது யார்? கோட்ஸே, ஆர்.எஸ்.எஸ்.—இந்து மகாசபை—இந்து முஸ்லீம் மக்களிடையே எப்போதும் துவேஷத்தை உண்டாக்கக் கூடியவர்கள்—அவர்களுக்கு இவர்கள் துணை போகிறார்கள்.......

[1975 அக்டோபர் 29

திரு. பெ. சீனிவாசன் : குஜாராத் மாநிலம் தீர்மானம் போட வில்லை என்று திரு. வீராசாமி அவர்கள் சொல்கிறார்கள், போட்ட தாக அம்மையார் அவர்கள் சொல்கிறார்கள். உங்களுடைய தீர்ப்பு என்ன ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதிலே தீர்ப்புச் சொல்ல ஒன்றுமில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை, வேறு பிரச்னையும் இல்லை, ஆகவே, இதிலே தலைவர் தீர்ப்புக் கொடுக்க முடியாது. அம்மையார் அவர்கள் ஒரு தகவலைச் சொன்னார்கள், திரு. வீராசாமி அவர்கள் ஒரு தகவலைச் சொன்னார்கள், குஜராத் தீர்மானம் போட்டதாக அம்மையார் சொன்னார்கள், திரு. வீராசாமி இல்லையென்று சொன்னார்கள். அம்மையார் அவர்கள் நாளைக்குத் தேதியோடு சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. பெ. சீனிவாசன் : முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமே, அவர்களே சொல்லிவிட்டால் முடிந்துவிடும். எனக்கு என்னமோ ரேடியோவை பண்ணியதாக ஞாபகம்.

திருமதி சத்தியவாணிமுத்து : எப்படியோ, வானொலியிலே பேசியதை அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட ஒரு பிற்போக்குக் கும்பல் இருந்திருக்கிறது. அவர்களைப்பற்றியெல்லாம் பின்னால் செய்திகள் வருகின்றன, மண்டை ஓடுகளையும், கத்திகளையும், கட்டாரிகளையும் வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

எந்த காந்தியார் இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடு பட்டாரோ அவரைச் சுட்டுக் கொலை செய்த ஆர்.எஸ்.எஸ். கும்பலை இன்றைக்குள்ள தலைவர்கள் விடுதலை செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களை எதற்காக வெளியே விடவேண்டும் ? இன்னும் மண்டை ஓடுகளைக் குவிக்கட்டும், இந்து-முஸ்லீம் தகராறுகளை ஏற்படுத்தட்டும், ஜாதீய வெறிகளைத் தூண்டட்டும் என்ற முறையில் இருந்தால் அது இந்திய நாட்டில் அமைதியைக் குலைக்கும் முறை யாகாதா ? அப்படிப்பட்டவர்களைச் சிறையில் வைப்பதற்கு பெரியார் வழியில் வந்தவர்கள், கொள்கை வழி நிற்பவர்கள் ஜாதி வேறுபாடில்லாமல் சமுதாயம் இருக்க வேண்டுமென்று விரும்பு பவர்கள் அவர்களை, அந்தத் தலைவர்களை விடுவிக்க வேண்டுமென்று



1975 அக்டோபர் 29] [திருமதி சத்தியவாணிமுத்து]

நமது முதலமைச்சரவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு தூது போகிறார்கள் என்று நினைக்கும்பொழுது அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

அந்தக் கொள்கைக்கு விரோதமாக இருந்த மொரார்ஜி தேசாய், அவருக்குத் துணைநின்ற ஜெயப்பிரகாஷ் நாராயணன் முதலியோர் இன்றைக்கு இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். இதை மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்ல வேண்டாமா? ஆனால் அதற்கு முற்றிலும் புறம்பாக, எதிரிகளுக்கு இந்த நாட்டைக் காட்டிக் கொடுக்கும், அவர்களுக்கு வெளிநாட்டிலேயும், அச்சுறுத்தல் இருக்கிறது, உள்நாட்டிலேயும் எதிர்ப்பு இருக்கிறது என்று சொல்வதைப் போல இருக்கிறது. மாணவர்களே, அரசியலில் ஈடுபடுங்கள், போராட்டத்தில் குதியுங்கள் என்று சொல்லும் அளவிற்கு, இராணுவமே, நீ ஆயுதங்களை எதிரியின் பக்கத்திலே திருப்பாதே, உள்நாட்டு மக்களின் பக்கமே திருப்பு என்று கூறும் அளவிற்கு, போலீசாரைப் பார்த்து, போலீஸ்காரர்களே, இந்த நாட்டுமக்களின் மீது துப்பாக்கியைத் திருப்புங்கள், சுட்டு வீழ்த்துங்கள் என்று சொல்லும் அளவிற்குப் பேசுவது அராஜகமான செயல் அல்லவா ?

அதையும் விட்டு வைத்து விட்டு, பிறகு ஜுன் மாதம் 29 ஆம் தேதி பெரிய கிளர்ச்சிக்கே ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லி அதற்காகத் தயார் செய்து கொண்டு வந்த பிறகு அவசர நிலைப் பிரகடனம் செய்து அந்தத் தலைவர்களையெல்லாம் சிறைச்சாலையில் வைக்காமல் எந்த அரசுதான் வெளியிலே விட்டு வைத்திருக்க முடியும் ? இந்த அரசு அப்படி இருக்குமா ? இங்கே சட்டமன்ற உறுப்பினர்களை வழிமறித்து சட்டமன்றத்திற்குச் செல்லாதீர்கள் என்று சொன்னால் ஒத்துக்கொள்வார்களா ? இங்கேயுள்ள போலீஸ்காரர்களைப் பார்த்து, "நீங்கள் போலீஸ் இலாக்கா அதிகாரிகள் சொல்வதைக் கேட்காதீர்கள், நாங்கள்—எதிர்க்கட்சிகள்—சொல்வதைப்போலத்தான் கேட்க வேண்டும், துப்பாக்கியை எடுத்து வானென்றால் வர வேண்டும்" என்று சொன்னால் இவர்கள் ஒத்துக் கொள்வார்களா ?

பேரறிஞர் அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் ? இராணுவத்தை எங்கே நிறுத்துவேன் என்று சொன்னார்கள், ஆட்சிக்கு வந்த அதே ஆண்டில் என்ன பேசினார்கள், எல்லையோரத்திலே

கொண்டிருக்கிறோம், அதிகாரிகளும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன். நான் நிருபர்களைச் சந்தித்து ஒரு வாரம் கழித்துத்தான் அரசுக்கு அந்தக் கடிதம் வந்திருக்கிறது.

திருமதி சத்தியவாணிமுத்து : இனியாவது அப்படிப்பட்ட பார்லிமெண்டரி கமிட்டி போடுவார்கள் என்று நம்புகிறேன். விரைவில் போட்டால் நல்லது. ஆனால் பத்திரிகையில் வந்த செய்தி, ஏற்கனவே குழு இருக்கிறது. இனி போட வேண்டியதில்லை என்று முதல்வரவர்கள் கூறியதாகத்தான் பார்த்தேன். ஆனால் பார்லிமெண்ட்ரி கமிட்டி இதுவரையில் இல்லை, அட்வைசரி கமிட்டிதான் இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட சில விவகாரங்களைப்பற்றியெல்லாம் முதலமைச்சரவர்கள் சற்று அதிகாரிகளையாவது கலந்து பேசிக்கொண்டு சொன்னால் நல்ல நிலைமையில் அமையும்.

இருபது அம்சத் திட்டத்தில், ஆதிவாசிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களை ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள், அதை விரைவில் அப்புறப்படுத்தி அந்த மக்களுக்கு நிலத்தைக் கொடுக்க வேண்டுமென்று அம்மையார் அவர்கள் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றுவரை என்ன ஆயிற்று? ‘டிப்ரெஸ்ட் கிளாஸ் லேண்ட்’ என்று ஏற்கனவே வெள்ளைக்காரர்கள் காலத்தில் கொடுக்கப்பட்டது. ஆதிவாசி மக்களுக்கும் அரிசன மக்களுக்கும், இன்றைக்கு அந்த நிலங்கள் மற்றவர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அட்வைசரி போர்டில் பலமுறை சொல்லி முயற்சித்தோம். டி.சி. லேண்ட்ஸ் என்று சொல்லுவார்கள். இன்றைக்கு அந்த இடத்தை யார் யாரோ ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை உடனடியாக அப்புறப்படுத்தி அந்த நிலங்களைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, இந்தப் பட்டா கொடுப்பதிலே ஒன்றைக் கூற விரும்புகிறேன். நிலமில்லாத ஏழைகளுக்குப் பட்டா கொடுப்பதாகச் சொன்னார்கள். அனுபோக பாத்தியதை இருப்பதைக் கொடுக்க வேண்டுமென்று அம்மையார் அவர்கள் கூறுகிறார்கள். காம்பன்சேஷன் இல்லாமல் கொடுக்க வேண்டும். ஆனால், தஞ்சையிலே செய்தது என்ன? இலட்சக்கணக்கான ரூபாய்களை நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு காம்பன்சேஷனைக் கொடுத்து ஏழை தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்.



அடுத்து ‘பாண்டட் லேபர்’ இருக்கிறது. இங்கே அடிமைச் சாசன முறை இருக்கிறது. இங்கே தாழ்த்தப்பட்ட மக்களை ‘முச்சலிகா’ என்று எழுதிக் கொடுத்து அதன் காரணமாக அவர்கள் அந்தக் குடும்பத்திலே ஆடுமாடுகளைப் போல சாகும் வரையில் வேலை செய்யும் நிலைமை இன்றைக்கும் இருக்கிறது. இடையிலே இராஜாஜி மாற்றினாலும், சில உரிமைகள் தருவது, சம்பள ஊதியம் தருவது என்று சில சலுகைகள் தர வேண்டுமென்று மாற்றினாரே தவிர அந்தக் குடும்பத்திலே இருப்பவன் அங்கேயேதான் வேலை செய்ய வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அந்த முறையை மாற்றியமைக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இன்றையதினம் கொண்டு வரப்பட்டிருக்கின்ற கண்டனத் தீர்மானத்தை எதிர்த்து என்னுடைய வார்த்தைகளைச் சொல்ல முற்படுகிறேன். நாட்டிலே வறட்சி ஏற்பட்டாலும் கண்டனத் தீர்மானம்தான், தமிழ்நாட்டில் வளர்ச்சி ஏற்பட்டாலும் அதைப் பார்க்கச் சகிக்காத காழ்ப்புணர்ச்சியின் காரணமாக கண்டனத் தீர்மானம். இது வாடிக்கையாக இந்த மன்றத்திலே வந்திருக்கிற ஒன்றாக இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் மற்றவர்கள் கண்டனம் தெரிவிக்கும் சூழ்நிலையைப் பார்க்கும்பொழுது பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் மதிப்பிற்குரிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் நம்முடைய அரசின் மீதும், முதல்வரவர்கள்மீதும் கண்டனத் தீர்மானம் கொடுக்கும் சூழ்நிலையைப் பார்க்கும்பொழுது ஒருவகையிலே உள்ளூர மகிழ்ச்சியடைந்தேன்.

காரணம், நேற்றையதினம் பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஹாண்டே அவர்களும், இன்றையதினம் பேசியவர்களும் இந்த ஆட்சியில் சட்டம் இல்லை, ஒழுங்கு இல்லை, நீதி இல்லை, நேர்மை இல்லையென்று பேசினார்கள். ஹாண்டே அவர்கள் ஒரு ஜாமீனுக்குப் போனால் கூட சட்டம், ஒழுங்கு சரியாக நிலைநிறுத்தப் படவில்லை என்று பேசினார்கள். அதே போல் இன்றைக்குப் பேசிய அம்மையார் அவர்களும் சட்டம் இல்லை, ஒழுங்கு இல்லை என்று பேசியது உள்ளபடியே வருந்தத் தக்கதாகும்.

[திரு. வை. பாலசுந்தரம்] [1975 அக்டோபர் 29

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சட்டமும், ஒழுங்கும் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் எதிர்க் கட்சிக்கு ஒரு சட்டம், ஆளும் கட்சிக்கு ஒரு சட்டம் என்பதல்ல. நாலைந்து மாதங்களுக்கு முன்னால் சென்னையிலே ஒரு கூட்டத்தில் மதிப்பிற்குரிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் எம்.ஜி.ஆர். பேசுகின்ற போது 'எதிரிலே திரண்டிருக்கும் இந்த மாபெரும் பட்டாளம் ஒன்று திரண்டு என்னுடைய அணியில் முதலமைச்சர் வீட்டுக்குச் செல்வோமானால் நிலைமை என்னவாகும், சாட்சி இருக்குமா . . .

திரு. பெ. சீனிவாசன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தவறான தகவலைத் தருகிறார். முதலிலேயே பேசிய வாசகத்தைச் சொல்ல வில்லை. ஜே.பி. நாராயணன் நடத்துவது போன்ற கிளர்ச்சி நடக்குமானால் ,, சட்டம் ஒழுங்கை எப்படிக் காப்பாற்ற முடியும் என்ற வகையிலேதான் சொன்னார்? அதை விட்டுவிட்டு தலையை எடுப்பேன், வாலை எடுப்பேன் என்று சென்னதாகச் சொல்வது சரியல்ல.

திரு. வை. பாலசுந்தரம் : நான் கேட்டுக் கொள்வதெல்லாம். சட்டம் ஒழுங்கு என்பது இரு சாராருக்குந்தான். அப்படி. சாதாரணத் தொண்டன் பேசிவிட்டால் பரவாயில்லை. கட்சியின் தலைவர் எதிரில் கூடியிருக்கும் மக்களைப் பார்த்து, தன்னை ஏதோ பழைய காலத்து மகாராஜா என்று நினைத்துக் கொண்டு பேசுவது தலைவருக்கு அழகல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்படிச் சொல்லுகிறபோது இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்கு எல்லாம் பாதுகாக்கப்படுகிறது என்பதற்கு நான் பல உதாரணங் களைக் காட்ட முடியும். மத்திய அமைச்சர்கள் நம்முடைய மாநிலத்திற்கு வருவார்களேயானால் அவர்கள் மரியாதையுடன் வந்து திரும்பிச் செல்லுகிற அளவுக்கு உத்தரவாதத்தைத் தமிழக அரசு தந்து கொண்டிருக்கிறது.

எம்.ஜி.ஆர். பிரிந்து சென்ற பிறகு தமிழ்நாட்டில் அமைச்சர்கள் எங்காவது சென்றால் மூலை முடுக்குகளில் எல்லாம் கல்லெறியைப் பரிசாகப் பெற்றுத் திரும்புவார்கள். அதைப்பற்றி யாராவது ஒரு வார்த்தை பேசினார்களா? அம்மையார் அவர்களுக்கும் சகவாச தோஷம். அவர்களும் ஒன்றும் சொல்லவில்லை. அம்மையார் அவர்கள்மீது நான் மிகுந்த மதிப்புக் கொண்டவன்.



1975 அக்டோபர் 29] [திரு. வை. பாலசுந்தரம்]

இருபது அம்சத் திட்டம் இந்த நாட்டுக்குத் தேவை என்று மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அறிவித்திருக் கிறார்கள். அறுபது அம்சத் திட்டத்தைச் சொன்னாலும் அவற்றை நிறைவேற்ற பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கான காரியங்களைச் செய்ய இந்த அரசு காத்துக்கொண்டிருக்கிறது. அது ஆயிரம் அம்சத் திட்டமாக இருந்தாலும் செய்யக் காத்துக் கொண்டிருக் கிறது. இந்த 20 அம்சத் திட்டங்களில் இடம் பெறாத மிகப் பெரிய திட்டங்களைக் கூட இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

நம்முடைய அம்மையார் அவர்கள் நீண்ட நெடுங்காலமாக அமைச்சராக இருந்த நேரத்தில் தாழ்த்தப்பட்ட கிறித்தவர் களுக்கும் சலுகைகள் வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். அந்த முயற்சியின் பயனை இன்றைக்குத் தமிழக அரசு, முதல்வர் அவர்கள். . . .

திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, கிறித்தவ மக்களுக்கு இந்த அரசு புதிய சலுகைகளைத் தந்ததாகச் சொல்லுகிறார்கள். அது முதலிலே தவறு. நான் அடுத்துப் பேச வாய்ப்பு ஏற்படும்போது அதை நிரூபிக்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : அம்மையார் அவர்கள் இதை நிரூபிக்கிறேன் என்றார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

என்னைப் பொறுத்தவரை அடித்தளத்து மக்களாக தாழ்த்தப் பட்ட கிறித்தவர்கள் கருதப்பட வேண்டுமென்று கூறியிருக் கிறேன். அகில இந்திய ரீதியில் எடுக்கப்பட வேண்டிய முடிவாக இருந்தாலும் தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் . . .

திருமதி சத்தியவாணிமுத்து : நான் சொன்னதற்குச் சான்று இருக்கிறது. வீட்டிலே இருப்பதாக நினைத்துக் கொண்டேன். ஐந்து நிமிஷம் தாருங்கள். ஜி.ஓ. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப் பேசினால் அது தனி விவாதமாகி விடும். இன்னொரு வாய்ப்பில் பேசுங்கள்.

**திரு. வை. பாலசுந்தரம்:** நான் சொல்லுவதெல்லாம் அடித்தளத்து மக்கள் கோருகின்ற பிரச்சினைகளுக்கு முடிவு காணுகிற வகையில் வகுக்கின்ற திட்டங்கள் செயல் முறைக்கு வரும்போது அதை ஆதரிக்கத்தான் வேண்டும். கட்சிக் கண்ணோட்டத்துடன் அதை மறுப்பதோ . . .

**திரு. பெ. சீனிவாசன்:** அரிசன் வெல்ஃபேர் கமிட்டியில் தாழ்த்தப்பட்ட கிறித்தவ மக்களுக்குச் சலுகை தரக்கூடாது என்று மாண்புமிகு பாலசுந்தரம் அவர்கள் எதிர்த்திருப்பது உண்மையா?

**திரு. வை. பாலசுந்தரம்:** தவறாகப் புரிந்து கொண்டு பேசக் கூடாது. அது நானும் அம்மையாரும் சேர்ந்து கொடுத்த கோரிக்கையாகும். இதனால் இப்போது நாங்கள் மகிழ்ச்சி யடைகிறோம். தமிழ்நாட்டு கிறித்தவ ஆதித் திராவிட மக்களுக்கு ஒரு அச்சம் இருக்கிறது. தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட கிறித்தவ மக்களுக்குச் சலுகைகளை வழங்க அரசு முன்வரவேண்டுமென்ற கோரிக்கை எழுந்த நேரத்தில் நம்முடைய முதல்வர் அவர்கள் அந்த மக்கள் மீது அனுதாபம் கொண்டு துணை நிதிநிலை அறிக்கையில் அதற்காக முதல்வர் அவர்கள் கூடுதலான தொகை ஒதுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை அளித்தபோது உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைந்தேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** Sir, he is giving false information. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுடைய வற்புறுத்தலுக்குப் பணிந்துதான் திரு. பாலசுந்தரம் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். முதலமைச்சர் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே கிறித்தவ மதத்திலுள்ள தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்கும் சலுகைகளைத் தரவேண்டுமென்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை அதுவல்ல இப்போது.

**திரு. பெ. சீனிவாசன்:** He is wrong. அன்று இவர் இதை எதிர்த்தார். அதை ஆதரித்ததாகச் சொல்லி இன்று எப்படி இவர் லாபம் அடையலாம்?





**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் ஒரு தவறான தகவலைத் தருகிறார்கள். அவர்கள் உண்மை தெரியாமல் பேசுவதற்காக வருந்துகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்கு எப்போதும் தவறான தகவலையே கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறவர்கள்.

**திரு. பெ. சீனிவாசன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். கேட்பதற்குப் பதில் சொல்ல வேண்டும். ஃபுல்ஸ்டாப் வைக்காமல் கன்னியாகுமரி வரை நீட்டிக் கொண்டே பேசினால் உண்மையாகி விடுமா? தவறான தகவலைத் தருவதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லுகிறார். முதலமைச்சர் அவர்கள் எழுந்து சொல்லட்டும். இவர் எதிர்த்தாரா, இல்லையா? அவர் பச்சையாகப் பொய் சொல்லுகிறார்.

**திரு. வை. பாலசுந்தரம்:** அவருடைய . . .

**திருமதி சத்தியவாணிமுத்து:** இந்தப் பிரச்சினையில் தவறான கருத்தை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் விளக்குகிறேன் என்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரிசன கிறிஸ்தவர்கள் பற்றிய விவாதம் அல்ல இப்போது நடப்பது. அவசர நிலைபற்றி, கண்டனத் தீர்மானம் பற்றி விவாதம் நடக்கிறது.

THIRU P. SEENIVASAN: In the course of a speech an hon. Member should not give false information. If he gives such information, he should not be allowed to proceed.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறான தகவலைக் கொடுத்தால் அதைப் பற்றிக் கேட்க வேறு முறை இருக்கிறது.

**திரு. பெ. சீனிவாசன்:** அதுதான் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டிருக்கிறேன். விதிகளைப் பார்த்துச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு நீங்கள் உரிமைப் பிரச்சினை கொண்டு வரவேண்டும். நீங்கள் சொல்லுவது சரியா அல்லது அவர் சொல்லுவது சரியா என்று எனக்கு எப்படித் தெரியும்?

திரு. பெ. சீனிவாசன் : ஒரு தவறான தகவலை வைத்து விவாதம் நடத்தக் கூடாது. நம்முடைய தலைநகர் கராச்சி என்று சொன்னால் அதை அனுமதிக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறான தகவலைக் கொடுத்தார் என்றால் அதைப் பற்றிக் கூற விதிமுறைகளில் இடம் இருக்கிறது. அந்த முறைகளைப் பாருங்கள்.

(பிற்பகல் 1-00)

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்குச் சலுகைகள் கூடாது என்று நான் பேசியதாகவோ அல்லது விவாதித்ததாகவோ அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். எந்த இடத்தில் நான் அப்படிப் பேசினேன் என்று அவர்கள் சொல்வார்களேயானால் என் கட்சியின் அனுமதி பெற்று ராஜிநாமா செய்ய நான் தயாராயிருக்கிறேன். அந்தச் சவாலை அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறார்களா என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை ஆதரித்தார்களா அல்லது எதிர்த்தார்களா என்பது வேறு விஷயம்.

திரு. வை. பாலசுந்தரம் : என்னைப் பற்றிச் சொன்னதற்கு நானே விளக்கம் சொல்லவில்லை என்றால் வேறு யார் சொல்வார்கள் ? எந்த இடத்திலும் நான் பேசாத கருத்து ஒன்றைப் பேசினேன் என்று பகிரங்கமாக இந்த மன்றத்தில் சொல்லும்போது அதை மறுக்காமல் என்ன செய்ய முடியும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தன்னிலை விளக்கம் கேட்பதற்கு நேரம் இருக்கிறது. நீங்கள் அப்படிச் சொன்னீர்களா இல்லையா என்பது வேறு விஷயம். இப்போது கண்டனத் தீர்மானத்தின் மீது பேசுங்கள்..

திரு. வை. பாலசுந்தரம் : இருபது அம்சத் திட்டமோ, அல்லது 70 அம்சத் திட்டமோ அல்லது 80 அம்சத் திட்டமோ அதுவல்ல பிரச்சனை. அது விவாதத்திற்குரிய பிரச்சனையாக இருந்தாலும் இந்த நாட்டிலுள்ள ஏழை மக்களை, அடித்தளத்தில் இருக்கிற மக்களை இந்த அரசு ஆதரிக்கிறதா இல்லையா என்பது சிலபேர்




1975

களுக்கு, மாயையில் மூழ்கியிருப்பவர்களுக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். எதிர்காலம் அதற்குப் பதில் சொல்லத் தான் இருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, எளிய மக்களுக்கு இந்த அரசு சலுகைகள் செய்யவில்லை, இந்த அரசு அவர்களுக்குப் பாதகத்தைத்தான் செய்துவருகிறதே தவிர சாதகத்தைச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் சொல்லப்படுகின்றன. இன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகள் கட்டித் தருகிற திட்டத்தை முதல் அமைச்சர் அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில், 12 லட்சம் குடும்பங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன என்று திட்டவட்டமாக வரையறுத்துக்கொண்டு ஐந்து அல்லது பத்தாண்டுக் காலத்திற்குள் அவை கட்டி முடிக்கப்படும் என்ற உத்தரவாதத்தை தந்து இந்த நவம்பர் திங்களுக்குள்ளாக 30,000 வீடுகளைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இந்த அரசு கட்டித்தரும் என்ற உத்தரவாதத்தை வழங்கியிருக்கிறார்கள் ஒரு திட்டத்தின் அடிப்படையில். லட்சக்கணக்கான பட்டாக்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன இந்த அரசினால். சுமார் ஏழு லட்சம் பட்டாக்களை இந்த அரசு தந்திருக்கிறது. தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தாழ்த்தப்பட்டவர்களுக்காக இரண்டு இலட்சம் பட்டாக்கள் நிலப்பட்டாவாகவும், குடிமனைப் பட்டாவாகவும் இந்த அரசு வழங்கியிருக்கிறது என்றால் உண்மையை ஏன் மறைக்க வேண்டும் ?

இந்த ஆட்சியின் மூலம் அடித்தளத்தில் இருக்கிற மக்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள். அப்படி நிறைய எதிர்பார்த்து இந்த ஆட்சி நீடிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். யார் எதிர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தாலும் சரி, நம்பிக்கையில்லை என்று சொன்னாலும் சரி அடித்தளத்தில் இருக்கிற மக்கள் ஆனந்தமாக இந்த ஆட்சியை வரவேற்கிறார்கள், எந்தக் கண்டனத்தையும் பொருட்படுத்தவில்லை என்று தெரிவித்துக் கொண்டு சந்தர்ப்பம் நல்கியமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

* திருமதி த. ந.. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்து நிமிடங்களில் பேசி முடித்துவிடுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பத்து நிமிடங்களில் முடிக்கம் முடியாது. கடைசியாக ஒரு மணிக்குப் பேசக் கூப்பிடுகிறீர்கள். சாப்பிடப் போகிற நேரத்தில்தான் எங்களுக்கு நேரம் கொடுக்கிறீர்கள். மற்றவர்களுக்கு முன்னாலே கொடுக்கிறீர்கள். எனக்கும் முன்னால் நேரம் கொடுக்கலாம் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று பேசிய கட்சிகளுக் கெல்லாம் இன்று முதல் இடம் கொடுக்கவில்லை. நேற்று பேசாத கட்சிகளுக்கு முதலிடம் கொடுத்துவிட்டு, நேற்று பேசிய கட்சி களுக்கு பிறகு வரிசையாக இடம் கொடுக்கிறேன். முதலில் அ.தி.மு.க., பின்னர் காங்கிரஸ், என்று அந்த முறையில் வருகிறது. நேற்றே முதலில் நீங்கள் பேசுவதுதானே?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நேற்று எங்கள் தலைவர் பேசினார், நான் அப்போது எப்படிப் பேசுவது? இந்த அவசர நிலையை ஆதரிக்காமல் இந்த மாநிலம் தன் ஆட்சியை நடத்திக் கொண்டு வருகிறது என்பதைக் கண்டித்தும், இந்த இருபது அம்சத் திட்டத்திற்குப் போதிய விளம்பரம் செய்து அதை மக்கள் உணரச் செய்ய இந்த அரசாங்கம் தவறி விட்டது என்ற காரணத்திற் காகவும் தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒரு திருத்தம். தீர்மானம் அப்படியல்ல. தீர்மானத்தின் வாசகத்தில் அது இல்லை. ஆகவே அம்மையார் அவர்கள் அதைத் திருத்திச் சொல்ல வேண்டுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தீர்மானத்தின் வாசகம் இருபது அம்சத் திட்டத்தை அமல் நடத்தவில்லை. அது எதனால் ஏற்பட்டது, அவசர நிலையால் விளைந்ததுதான் அது. மற்ற மாநிலங்களின் சட்டசபைகள் அதை ஆதரிக்கும்போது நீங்கள் ஏன் ஆதரிக்க வில்லை என்பது அதில் தொக்கி நிற்கிறது. இரண்டு பக்கத்திற்கும் தீர்மானம் கொடுக்க முடியுமா? சூசகமாகப் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்துகொள்ளாததுமாதிரி இருப்பது ஒரு நடிப்பு என்று எங்களுக்குத் தெரியாமல் இல்லை. ஆகவே அப்படி நடிப்பதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல.

ஆளும் கட்சியினர் தங்கள் கட்சி மாநாடுகளில் தீர்மானம் போடும்போது ஆதரிக்கிறார்களா இல்லையா என்று தெரிவதில்லை. எதிர்க்கிறார்கள் என்றுதான் ஓரளவிற்கு எங்களால் தெரிந்து





1975

கொள்ளமுடிகிறது. ஆட்சி மட்டத்தில் வரும்போது அவசர நிலையை ஆதரிக்கிறார்களா இல்லையா என்பதைத் தெளிவாகச் சொல்வதும் கிடையாது. பாராட்டுவதும் இல்லை, போராடவும் தயாராயில்லை என்ற அளவிற்கு சாமர்த்தியமாக இந்தத் தமிழ்நாடு அரசாங்கம் நடந்துகொண்டிருக்கிறது என்று திட்டவட்டமாக குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். இங்கு இரட்டைவேடம் போடுகிறார்கள். பாவம், எங்கள் பொன்னப்ப நாடார் அவர்களையும் கெடுக்கிறீர்கள். அவர் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தார். திரு. வெங்கடசாமி அவர்கள் தீர்மானம் வந்தபோது எழுந்து நின்று ஆதரிக்கவில்லை, நியூட்ரலாக இருந்தார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் முதலில் ஆதரித்தார், பின்னர் கடுமையாக எதிர்த்தார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. வெங்கடசாமி அவர்கள் ஆதரித்து எழுந்தார்கள், அம்மையார் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். பத்திரிகைகளில் கூட வந்திருக்கிறது.

THIRU B. VENKATASWAMY: I had supported the Motion, when leave of the House was sought for. But in the course of my speech I have said that my party would remai neutral, so far as the motion is concerned.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பாயின்ட் ஆப் ஆர்டர். அம்மையா அவர்கள் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து எழுந்து நின்றுவிட்டுப் பின்னர் ஆதரித்துப் பேசவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஏன் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து எழுந்தேன், ஏன் இப்போது இவ்வாறு பேசுகிறேன் என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் விளக்கம் சொல்லியிருக் கிறார்கள். 'இம்மாதிரி ஒரு சந்தர்ப்பம் வரவேண்டுமென்று சொன்னால் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தால்தான் மத்திய அரசின்மீது கூற வேண்டிய, எமர்ஜென்ஸிக்கு எதிராகக் கூற வேண்டியவற்றைக் கூற ஒரு 'வாய்ப்பு கிடைக்கிறது என்ற எண்ணத்தோடுதான் நான் ஆதரித்தேன்' என்று விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். ஒருவேளை அப்போது அம்மையார் அவர்கள் அவையில் இல்லாததால் இப்படிக் கேட்கிறார்கள் என்று கருது கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அதைத்தான் இரட்டைவேடம் என்று சொல்கிறேன். தைரியமாக எதிர்க்கலாமே! அதைவிட வேதனையான ஒரு விஷயம் என்ன தெரியுமா? உங்கள் தலைவர் காமராஜர் எனக்கும் தலைவர்தான். அவர்களைப் போய் . . .

**திரு. ஜே ஜேம்ஸ்:** அம்மையார் அவர்கள் காமராஜரை தலைவர் இல்லை என்று கூறிவிட்டு இன்னொருவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருப்பது ரிக்கார்டாகியிருக்கிறது. இப்போது காமராஜர் அவர்களை என் தலைவர் என்று அவர்கள் கூறுவதை இன்று நாடு ஏற்றுக்கொள்ளாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** காமராஜர் அவர்கள் என்ன சாமான்யமானவரா? பெரிய வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய பெரும் தலைவர். இன்று இந்த சாதாரண நெருக்கடி நிலையைப் பார்த்து அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று கூறுகிற அளவிற்கு எதையும் தாங்கும் இதயம் படைத்த திதலைவரைப் போய் இப்படி இழிவுபடுத்துவது என்றால் . . .

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அம்மையார் அவர்களைப் போன்றவர்கள் காமராஜர் அவர்கள் உயிரோடு இருந்தபோது எந்தளவிற்கோ அவர்களைத் தூற்றினார்கள், ஆனால் இப்போது அவர்கள் மாண்ட பிறகு அவர்களைப் பாராட்டுகிறார்கள் என்றால் அதில் ஒரு உள்நோக்கம் இருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** என்றைக்கும் தலைவர் காமராஜர் அவர்களை நான் தூற்றியது கிடையாது. தூற்றவும் மாட்டேன். உங்களுக்கு அவர்களிடம் பழக்கம் 1952-ல் இருந்து; நான் அவர்களோடு 46-லிருந்து கூட இருந்தவள். அப்படிப்பட்ட ஒரு பெரும் தலைவர் எமர்ஜன்ஸியைப் பார்த்துவிட்டு அவர்கள் செத்து விட்டார்கள், என்ன கொடுமை என்று இழிவுபடுத்துவது, பேசுவது இறந்தவருக்குக் காட்டும் மரியாதை அல்ல. தயவுசெய்து இதை திருப்பச் செய்யாதீர்கள் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆட்சிக்கும், ஆளும் கட்சிக்கும் தலைவராக ஒருவரே இருப்பதால்தான் 'என்ன கொள்கையை நாம் எடுத்துச் சொல்வது, எப்படி இதை மக்களுக்கு விளக்கிக்



தெரியாத அளவிற்கு ஒரு குழப்பத்தில் இவர்கள் இருப்பதைப் பார்க்கிறேன். கட்சித் தீர்மானத்தைப் பார்த்தால் ஒருமாதிரி இருக்கிறது.

இவர்கள் கடற்கரைக் கூட்டத்தில் என்ன சொன்னார்கள்? 'ஜனநாயகக் குடுமி அறுபட்டது, முகத்தில் சூடு போட்டு விட்டார்கள்' என்று அசிங்கமாகச் சொன்னார்கள். சர்வாதிகாரத்தின் துவக்க நாள் இதுதான் என்று முதல் அமைச்சர் அவர்கள் கடற்கரைக் கூட்டத்தில் சொன்னார்கள்.

திருநெல்வேலி மாநாட்டில் என்ன பேசினார்கள்? 'இந்த அவசர நிலை காரணமாகப் பலருக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டுவிட்டன, இந்த நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்கு நான் பல முதல் அமைச்சர்களைச் சந்தித்துப் பேசி இந்த நெருக்கடி நிலையை ரத்து செய்வதற்கு திருநெல்வேலி தீர்மானத்துடன் டெல்லி போகப் போகிறேன்' என்று மாநாட்டில் திர்மான்ம் போட்டார்கள். என்னவாயிற்று? திருநெல்வேலி தீர்மானம் டெல்லிக்கு வரவேயில்லை. திருநெல்வேலி அல்வாவை பொட்டலம் கட்டப் போய் விட்டதா? இடையில் எங்கே நின்றுவிட்டது என்று தெரியவில்லை. அத்தீர்மான ம்டெல்லிக்கு வரவில்லை என்று டெல்லியில் இருந்து வந்திருந்த மத்திய நிதி அமைச்சர் அவர்கள் இங்கு பத்திரிகையாளர்களிடம் சொன்னதைப் பார்த்தேன்.

அது மட்டுமா? திருநெல்வேலியில் போட்ட தீர்மானம் டெல்லிக்கு ஏன் எடுத்துச் செல்லவில்லை? கையில் பலம் இல்லையா? பையில் இடம் இல்லையா? எந்த நிலை காரணமாக எடுத்துச்செல்லவில்லை? நீங்கள் உங்களுடைய கொள்கையை மக்கள் மத்தியில் ஒன்றும், கட்சிக்காரர்கள் மத்தியில் ஒன்றும், டெல்லிக்குப் போகும் போது ஒன்றும், ஆக வைத்துக் கொள்கிறீர்கள். இப்படி பல வேடங்களைப் போட்டுக்கொண்டு இருந்தால் எப்படி மக்கள் அரசியல் தெளிவு பெற முடியும் என்று தெரியவில்லை.

இந்த 20 அம்சத் திட்டத்தை விளக்கிச் சொன்னீர்களா? கனம் சுப்பு அவர்கள் சொன்னார், இது எல்லாம் புதிது அல்ல, இவையெல்லாம் அரசியல் சட்டத்தில் உள்ள 'டைரக்டிவ் பிரின்சிபில்ஸில்' இருக்கிறது என்று சொன்னார்கள். யார் அதை

மறுத்தார்கள்? ஏதோ புதிதாக நாங்கள் கண்டுபிடித்து விட்டோம் என்று சொல்லவில்லை. அரசியல் சட்டத்தில் டைரக்டிவ் பிரின்சிபில்ஸில் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.

**திரு. க. சுப்பு:** அதை உங்களுடைய கண்டுபிடிப்பு என்று சொல்ல வேண்டாம் என்பது என்னுடைய வாதம். அதில் பாதியை எடுத்து 20 அம்சத் திட்டம் என்று கொண்டு வந்து இருக்கிறீர்கள். மதுவிலக்குக்கு 12 அம்சத் திட்டம் சொன்னீர்கள் அதில் ஒன்றும் உருப்படாமல் போய்விட்டது. நீங்கள் உங்கள் திட்டம் என்று இதைச் சொல்கிறீர்களே தவிர இது டைரக்டிவ் பிரின்சிபில்ஸில் இருக்கிறது என்று சொல்லவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பெரிய கண்டுபிடிப்பு மாதிரி பேசுகிறார்கள். நாங்கள் கண்டுபிடிக்கவில்லை.

**திரு. க. சுப்பு:** இருபது அம்சத் திட்டம் உங்களுடைய கண்டுபிடிப்பு இல்லை. அரசியல் சட்டத்தில் இருக்கிறது.

**திரு. பெ. சீனிவாசன்:** அரசியல் சட்டத்தில் இருப்பது தான் இந்த 20 அம்சத் திட்டம் என்று ஒப்புக் கொண்டதற்கு நன்றி.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அரசியல் சட்டத்தில் இருக்கிற 'டைரக்டிவ் பிரின்சிபில்ஸில்' இருந்தும் இந்த அம்சங்கள் எடுக்கப் பட்டிருக்கின்றன என்பதை யாரும் மறுக்கவில்லை. திடீரென்று எங்கிருந்தோ செப்பேட்டில் இருந்து எழுதிக் கொண்டு வந்தோம் என்று சொல்லவில்லை. அரசியல் சட்டத்தில் இருக்கிற டைரக்டிவ் பிரின்சிபில்ஸில் இருப்பதைத்தான் சொல்கிறோம். நாங்கள் 23 ஆண்டு ஆட்சி நடத்தினோம் என்பதை யாரும் மறுக்க வில்லை. 28 ஆண்டு காலம் இருந்த வேகம் போதாது என்ற காரணத்தால் தான் இதை முனைப்புத் திட்டமாக 20 அம்சத் திட்டம் என்ற அடிப்படையில்— We want to highlight certain things என்ற முறையில் கொண்டுவந்தோம். நாங்கள் 28 ஆண்டுக் காலம் இருந்த வேகம் போதவில்லை, இன்னும் வேகம் தேவை என்று ஒரு 20 அம்சத் திட்டத்தை வகுத்து மக்களின் கவனத்திற்கு அதைக்கொண்டு வந்து, அதற்கான நடவடிக்கைகளை எல்லோரும் எடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். இந்த 20 அம்சத் திட்டத்தை விளம்பரப் படுத்துவதற்காக இந்த் அவசர காலச் சட்டம் வந்த பிறகு என்ன செய்தீர்கள்? எவ்வளவோ முழுப் பக்க விளம்பரங்கள் உங்க



செய்வதாய சாதனைகளைச் சொல்லி வருகிறபோது, இந்த 20 அம்சத் திட்டத்தை ஒரு 'ஹேண்ட் பில்' போட்டு வினியோகிக்கக் கூடாதா? தமிழக அரசு எதையும் செய்யவில்லை. இதுவரையில் அதை விளம்பரப் படுத்தவில்லை. விளம்பரப்படுத்த மனது கிடையாது. பெருமை இந்திரா காந்திக்குப் போய்விடுமே என்ற அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அந்த 20 அம்சத் திட்டத்தை சரியான முறையில் விளம்பரப்படுத்தவில்லை என்பதை திட்டவட்டமாக நான் கூற விரும்புகிறேன்.

அதே சமயத்தில் இந்த 20 அம்சத் திட்டத்தில் 15 நாங்கள் செய்து விட்டோம். இன்னும் 5 தான் மீதம் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். பரிட்சை வருகிறபோது ஒரு பையனைப் பார்த்து 'படி, தீவிரமாகப் படி' என்று சொன்னால், 'நான் போன ஜன்மத்திலேயே படித்து விட்டேன்' என்று சொல்கிற புத்திசாலிப் பையன் மாதிரி இருக்கிறது உங்கள் பேச்சு.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதிலே உள்ள சங்கடம் பரிட்சை எழுதி முடித்த பையனைப் பார்த்து மீண்டும் பரிட்சை எழுதச் சொல்வது போல் இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பரிட்சை என்பது முடிந்து விடுவது இல்லை. சரஸ்வதியே இன்னும் படித்துக் கொண்டு இருக்கிறாள் என்று சொல்கிறார்கள். சரஸ்வதிக்கே 'கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலகளவு' என்று சொல்கிறார்கள். நாங்கள் சொல்வது எல்லாம். இந்த 20 அம்ச திட்டத்தில் இருக்கிற திட்டங்களை நல்ல முனைப்போடு செய்ய வேண்டும் என்பது தான். ஏன் இந்த அரசாங்கம் அதைச் செய்யக் கூடாது. ஏன் அவற்றிற்கு ஆதரவு தரக் கூடாது. எல்லா மாநிலங்களிலும் இதைச் செய்கிறார்கள். கட்சிக்கூட்டங்களில் போய் எதிர்ப்போம் என்று சொல்வது ஆட்சி என்று சொல்கிற நேரத்தில் எதிர்ப்போம் என்று சொல்ல முடிவது இல்லை. அங்கே நிர்வாகம் வருகிறது, அதனால் பாராட்ட வேண்டி இருக்கிறது. இப்படி இரண்டு வேடம் போட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற, நலிந்த மக்களின் வாழ்வை மேம்படுத்த, நாங்கள் சொல்கிற இந்தத் திட்டங்களை நீங்கள் தீவிரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காகத்தான் இந்தக் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து இருக்கிறோம்.

குடியிருப்பு மனைகளைக் கொடுங்கள் என்று சொன்னால், ... அவர்கள், 6 கோடி ரூபாய் ஆகுமே, மத்திய அரசாங்கம் பணம் கொடுக்காமல் நாம் எப்படி அமல்படுத்துவது என்று கேட்டார்கள். ஆறு கோடி திட்டத்தை உங்களால் அமல்படுத்த முடியாதா? மத்திய அரசாங்கம் கொடுக்காமலா இருக்கிறார்கள்?

**திரு. க. சுப்பு :** நிறைவேற்றலாம், நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றால் 6 மாதத்தில் நிறைவேற்ற வேண்டும் என்று சொல்கிறீர்கள். அதற்காக பணம் புரோவைட் செய்யவில்லை. பட்ஜெட் முடிந்து விட்டது. எனவே, அதை இம்ப்ளிமெண்ட் செய்வது கஷ்டம் என்று சொன்னோம். . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நீங்கள் தான் வார்த்தைக்கு வார்த்தை பணம் வாங்கிக்கொண்டு விடுகிறீர்களே? எவ்வளவு பணம் வாங்கிக் கொண்டு இருக்கிறீர்கள்? மத்திய அரசிடமிருந்து முதலில் பணத்தைப் பெற்றுக் கொண்டா மனைப்பட்டா வழங்க வேண்டும்? எத்தனையோ கோடி ரூபாய் பெறுகிறீர்கள். கிட்டத்தட்ட உங்கள் வரவு செலவு திட்டத்தில் பாதிப்பணம் மத்திய அரசு கொடுக்கிறார்கள். இதற்குப் பணம் செலவழித்த பிறகு மத்திய அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடாதா? உங்களுக்கு நல்ல எண்ணம் இருந்தால் இப்போதே துணை மானியக் கோரிக்கை கேட்டு செய்ய மாட்டீர்களா? முப்பது கோடி ரூபாய் வீராணம் திட்டத்தில் பாழாகி இருக்கிறது. இருபது கோடியில் முடிப்பேன் என்று சொல்லி, 30 கோடி ரூபாய் ஆகியிருக்கிறது. மூன்று சொட்டு தண்ணீர் கூட சென்னைக்கு வரவில்லை. அதற்காகச் செய்யப்பட்ட குழாயில் திருவான்மியூர் தண்ணீர் விட்டால், அதுவே ஒழுகுகிறது என்று சொல்கிறார்கள். இப்படிப் பணம் வீணாகச் செலவாகிறபோது, குடியிருப்பு மனை இல்லாதவர்களுக்கு பட்டா வழங்க ஏன் முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு நாளைக்கு முன்னால் மதுரையில் கார்ப்பரேஷன் கட்டிடத்தைத் திறப்பதற்கு எத்தனை மந்திரிகள் போனீர்கள்? ஏழு மந்திரிகள் போனால் தான் கட்டிடம் திறக்க முடியுமா? மக்கள் பணத்தை வீணாகச் செலவழித்துக் கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் வீட்டு மனைப் பட்டா இல்லாத ஏழைகளுக்குப் பட்டா கொடுக்க 6 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கெடுத்து இருக்கிறீர்களே அதற்கு அவசரமாக செலவு செய்தால் என்ன? அதைச்



செய்வதற்கு மனம் வரவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மதுரை மாவட்டத்தில் காங்கிரஸ்காரர்களே, மனுக்களை தயார் செய்து, அவர்களைப் பூர்த்தி செய்யச் சொல்லி, பல்லாயிரக் கணக்கான மனுக்களை சேகரம் செய்து, அதை மாவட்ட கலெக்டரிடம் கொடுத்தோம். அது என்ன ஆயிற்று? அந்த கிராமங்களுக்குச் சென்று, கொடுக்கப்பட்டு இருக்கிற விவரங்களையெல்லாம் சேகரம் செய்தது சரிதானா என்று இன்ஸ்பெக்ட் செய்தார்களா என்றால் கிடையாது. அது அப்படியே தூங்குகிறது. ஏழு லட்சம் பேருக்குக் கொடுத்தோம், 5 லட்சம் பேருக்குக் கொடுத்தோம் என்று சொல்கிறார்கள்.

Have you collected statistics in all the districts மாவட்ட வாரியாக எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று கணக்கு எடுக்கப் பட்டிருக்கிறதா? எத்தனை பேருக்கு மனைப் பட்டா இருக்கிறது, எத்தனை பேருக்கு இல்லாமல் இருக்கிறது, எந்த அளவுக்கு முனைப்பாக அந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறோம். ஆகவே, குடியிருப்பு மனை வழங்குவதை அவசரமான முறையில் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவுப் பொருள்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மக்களுக்கு உணவுப்பொருள்கள் ஒழுங்காகக் கிடைக்கவில்லை. அதை ஒழுங்குபடுத்த எந்தவிதமான சட்ட திட்டங்களும் கொண்டு வரவில்லை. மற்ற மாநிலங்களில் விலை குறைந்து இருக்கிறது. தமிழகத்தில் மட்டும் விலை குறையவில்லை. விலை ஏறிக் கொண்டே போகிறது. அரிசி விலை குறையவில்லை. பக்கத்தில் ஆந்திராவில் விலை குறைந்து இருக்கிறது, கேரளாவில் விலை குறைந்து இருக்கிறது. தமிழ் நாட்டில் மட்டும் பல பகுதிகளில் பல விலைகள் இருக்கின்றன. செய்யாறில் ரூ. 3 படியரிசி விற்கிறது, காஞ்சீபுரத்தில் ரூ. 3.60 படியரிசி விற்கிறது, சென்னையில் ரூ. 4.80 படியரிசி விற்கிறது. மிளகாய் ஒரு கிலோ 20 ரூ. என்று விற்கிறது. இப்படி ஏறிக்கொண்டு இருக்கிற விலையைத் தடுக்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதைக் கட்டுப்படுத்தத்தான் மிசா சட்டம் கொடுக்கப்பட்டது. கள்ள மார்க்கெட்காரர்கள், கொள்ளை லாபம் அடிப்பவர்கள், கள்ளக்கடத்தல் செய்பவர்கள் இவர்களைப் பிடித்து உள்ளே போடுவதற்குத்தான் மிசா சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இங்கே என்ன நடக்கிறது. ஏதோ கோவை நகரத்தில் சினிமா பார்த்துக் கொண்டிருக்கும்போது பீடி பிடித்ததற்காக 15 பேரை மிசாச் சட்டத்தின் கீழ் அரெஸ்ட் செய்து

இருக்கிறீர்கள். இந்தச் சட்டத்தின் மேன்மை என்ன? இதை எங்கே கொண்டு போய் பயன்படுத்துவது? மிசாச் சட்டத்தை உணவுப் பொருள்கள் பதுக்குபவர்களைப் பிடிப்பதற்கு, கள்ளக் கடத்தல், கள்ளமார்க்கெட் செய்பவர்களைப் பிடிப்பதற்கு உபயோகிக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மிகமிகத் தவறான தகவல். பீடி பிடிப்பவர்களை மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யவில்லை. யார் யார் அப்படி பிடிபட்டார்கள் என்ற விவரம் சொன்னால் சௌகர்யமாக இருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மிசா சட்டத்தின் கீழ், பீடி பிடித்துக்கொண்டு இருந்த 15 பேரை பிடித்ததாகப் பத்திரிகை களில் செய்தி வந்து இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பத்திரிகைகளில் வந்த செய்தியை வைத்துப் பேசக் கூடாது. மிசா சட்டத்தில் பீடி பிடித்தவர்கள் யாரையும் கைது செய்யவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பத்திரிக்கையில் வந்த செய்தியை வைத்துத்தான் நீங்களும் நானும் பேசிக்கொண்டு இருக்கிறோம். மிசா சட்டத்தின் மூலம் மிகக் கடுமையாக தண்டிக்க வேண்டியவர்கள் தண்டிக்கப்படாமல் அப்பாவிகள் தண்டிக்கப் படுகிறார்கள். உணவு பதுக்கல் தடை செய்யப்படவில்லை. உணவுப் பங்கீடு சரியாக செய்யப்படவில்லை. நீங்கள் என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள், விலை ஏறுவது ஏறட்டும், விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தினால் அதனால் இந்திரா காந்திக்குப் பெயர் வந்து விடும் என்று இருக்கிறீர்கள். அதனால் விலை நிலை தெரியாமல் போய்க் கொண்டு இருக்கிறது. இருபது ரூபாய்க்கு மிளகாய் என்றாவது விற்று இருக்கிறதா? மின்சாரத் கட்டுப்பாடு இருந்த நேரத்தில் மிளகாய் அரைப்பதற்கு சீய்க்காய் அரைப்பதற்கு, 2 ரூ., 1.25 ரூ. வாங்கினார்கள். இன்று மின்சாரத் கட்டுப்பாடு கிடையாது. இன்றும் அதே ரேட் வசூலிக்கிறார்கள். அதைத் தடுக்க என்ன முயற்சி எடுத்துக் கொண்டீர்கள்? இதையெல்லாம் சுலபமாகக் கட்டுப்படுத்தி விடலாம். இந்த அவசர காலநிலைச் சட்டத்தைப் பயன்படுத்தி அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.





அதிகாரிகள் 50 வயது இருந்து, அவர்கள் inefficiency, incapacity, corrupt practice என்று இருந்தால், அவர்களை வீட்டிற்கு அனுப்பி விடலாம் என்று சட்டம் கொண்டு வந்து இருக்கிறார்கள். அந்தச் சட்டத்திற்கு உண்மையிலேயே மதிப்புக் கொடுக்கிறவர்களாயிருந்தால் அதிகாரிகளுக்கு "எக்ஸ்டென்ஷன்" கொடுக்காமல் இருக்கவேண்டும். 55 வயதிற்கு மேல் "எக்ஸ் டென்ஷன்" கொடுக்கிறீர்கள். அந்த "எக்ஸ்டென்ஷனை"-க்கூட அனுபவிக்க முடியாத அளவுக்கு பெரிதும் உடம்பில் வலுவில்லாத வர்களாக இருக்கிறார்கள். நீங்கள் "எச்.ஆர்.இ. கமிஷனருக்கு "எக்ஸ்டென்ஷன்" கொடுத்தீர்கள். அவர் கால் முறிந்து படுக்கையில் படுத்திருக்கிறார். 55 வயதானவருக்கு இரண்டாவது "எக்ஸ்டென்ஷன்" கொடுத்திருக்கிறீர்கள். பாவம் மாடியில் ஏறி கால் முறிந்து படுக்கையில் கிடக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உங்கள் பேச்சை சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குப் பிறகு திரு. துரைமுருகன் அவர்கள் பேசவேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** உங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்கிறீர்கள். வேண்டியவர் களுக்குச் சட்டத்தை மீறி பல சலுகைகள் கொடுக்கிறீர்கள். வேண்டாதவர்களை இந்தக் கருவியைப் பயன்படுத்தி பழிவாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே நெருக்கடி நிலைமையில் உங்களுடைய எண்ணம் என்ன, போக்கு என்ன, உங்களுடைய முடிவு என்ன என்பதை எங்களுக்குச் சொல்லாவிட்டாலும் 4½ கோடி தமிழர் களுக்காக இருக்கிற உயர்ந்த தலைவர் என்று கூறிக்கொள்கிறவர்கள் உங்களுடைய நிலையை தெளிவாகச் சொல்லும்படியாகக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, எதிர்க்கட்சிக்காரர்கள் இந்த மன்றத்திலே கண்டனத்தை கொண்டு வந்ததை எதிர்த்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன்.

இங்கே எதிர்க்கட்சித் தரப்பில் பலபேர் பேசினார்கள். அவசர நிலைமை—20 அம்சத் திட்டம்—இந்திரா காந்தி, இந்த மூன்றையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பி தாங்கள் எதைப் பேசுகிறோம் என்ற தெளிவு இல்லாமலே பேசி முடித்திருக்கிறார்கள்.

குறிப்பாக, அவர்கள் கட்சி விவகாரங்கள் அவர்களுக்குப் பெரிதாகத் தெரிந்திருக்கிறது. ஏதோ நாங்களெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் இந்திரா காந்திக்குப் பரம விரோதி போலவும் அந்த அம்மையாருக்கும் எங்களுக்கும் நீண்டகாலப் பகை இருப்பது போலவும் மக்கள் மத்தியில் ஒரு எண்ணம் ஏற்பட வேண்டுமென்ற அந்தத் தொனியில் பேசினார்கள். இங்கே பேசுகிற போது அவர்களெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்த 20 அம்சத் திட்டத்திற்கு எதிர்ப்பானவர்கள் என்ற கருத்து ஏற்படும்படியாகப் பேசினார்கள். அவசர நிலைக்கு நாங்கள் எதிர்ப்பு என்றெல்லாம் மூன்றையும் போட்டு குழப்பினார்கள்.

நான் அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இந்திரா காந்தி என்ற தனி மனிதருக்கு விரோதமான கட்சியல்ல. இந்திரா காந்திக்கு சில நேரங்களில், 1971-க்கு முன்னால் கைகொடுத்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் 25 வோட்டுகள் 71-க்கு முன்னாலே போடப் படவில்லையென்றால் அம்மையார் பிரதமராக ஆகியிருக்க முடியாது. ஆகவே, அவர்களுக்கு நாங்கள் கைகொடுத்திருக்கிறோம். உதவி யிருக்கிறோம். அவர்களுடைய திட்டங்களை நாங்கள் வரவேற்றிருக் கிறோம்.

அவர் இந்தத் திட்டத்தை அறிவித்த மறுநாளே எங்கள் முதலமைச்சர் இந்தத் திட்டம் ஒரு நல்ல திட்டம் என்று சொல்லி யிருக்கிறார். ஆகவே, இதற்கு நாங்கள் எதிரிகள் அல்ல. இந்த 20 அம்சத் திட்டத்திலே ஏறத்தாழ 15-ஐ நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். எல்லாவற்றையும் முடித்துவிட்டோம் என்று சொல்லவில்லை. நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்று தான் முதலமைச்சர் சொல்லி யிருக்கிறார். மீதித் திட்டங்களை செயல்படுத்துவது ஒரு பக்கம் இருக்கட்டும். இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதி உதவி தர வேண்டுமென்று அடுத்த கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவசர நிலைப் பிரகடனத்தைப் பற்றி எங்களுக்கு ஏதோ ஒரு பெரிய பயங்கரமான விவகாரம் இருப்பது போலச் சுட்டிக் காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்துவும், திரு. தங்கமணியும் 20 அம்சத் திட்டத்தில் என்னென்ன நிறை வேற்றப்படாமல் இருக்கின்றன என்ற புள்ளி விவரங்களைத் தந்து, ஆதாரங்களைக் காட்டி, இந்தச் சர்க்காரின் செயல்முறைகள் இப்படி





இருக்கின்றன, இவற்றிற்கு மாற்று முறைகள் இன்னின்ன என்ற காரண காரியங்களை எடுத்துச் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்த்தேன்.

ஆனால் 20 அம்சத் திட்டத்தைப் பற்றிப் பேசிய திரு. ஹாண்டே அவர்கள் அந்த விவகாரங்களையெல்லாம் விட்டு விட்டு ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவதற்கு இந்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்ன உரிமை இருக்கிறது, யோக்கியதை இருக்கிறது என்று பேசி விட்டுப் போனார். அவர் கருத்து இன்று நாட்டிலே ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இன்றைக்குப் பத்திரிகையைப் பார்த்தாலே தெரியும் "ஹாண்டே ஆல்சோ ஸ்போக்" என்று போடப்பட்டிருக்கிறது. நாட்டு மக்களுக்கு நன்கு புரிந்து இருக்கிறது.

அவரைப் போன்ற எதிர்க்கட்சிக்காரர்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்வதெல்லாம் இந்தியாவிலே இன்றைக்கு சட்ட மன்றத்தைக் கூட்டி எதிர்க்கட்சிக்காரர்களை உள்ளே உட்கார வைத்து அவர்களுக்கு நம்பிக்கை இல்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் கொண்டு வருவதற்கு உரிமை கொடுத்து, "கால் அட்டென்ஷன்" தீர்மானம் கொடுப்பதற்கு உரிமை கொடுத்து, யாரையும் கைது செய்யாமல், இங்கே உட்கார வைத்து, அவர்களைப் பேச வைத்து, அப்படிப் பேசுவதற்கு அவர்களுக்கு அளிக்கப் பட்டுள்ள உரிமைகளின் அடிப்படையில் என்ன யோக்யதை இருக்கிறது என்று கேட்டவர்களிடத்தில் அதையும் புன்முறுவலோடு ஏற்றுக் கொள்கிற எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பார்த்து அவருடைய அரசைப் பார்த்து எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்கிறார்கள் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவதற்கு உங்களுக்கு என்ன யோக்யதை இருக்கிறது என்று. ஆனால் இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தில் ஜனநாயக உரிமைகள் கிஞ்சித்தும் பட்டுப்போகாமல், ஜனநாயக தீபம் அணைந்து போகாமல், எல்.ஐ.சி. கட்டிடத்தைப் போல் "கட்டிக் காக்கின்ற கரம்" டாக்டர் கலைஞர் அவர்களின் கரம்; இன்னொன்று குஜராத்தில் ஸ்தாபன காங்கிரஸ் கரமாகும். ஜனநாயக விளக்கு அணைந்து விடாமல் இருக்கிறது என்று சொன்னால், அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தான் முழுமுதற் காரணம். வேறு அல்ல.

[திரு. துரை முருகன்] [1975 அக்டோபர் 29

உங்களையெல்லாம் பேச விட்டு, இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு இந்த நேரத்தில் அனுமதி கொடுத்து இருக்கிறார். அதற்கு எங்கள் தலைவருக்கு நீங்கள் நன்றி சொல்ல வேண்டும். நன்றியை உங்களிடத்திலே நான் எதிர்பார்க்கவில்லை. எட்டி இனிக்கும் என்று நினைத்தால் நான் பயித்தியக்காரனாகி விடுவேன்.

திரு. பெ. சீனிவாசன் : " கால் அடென்ஷன் " நோட்டீஸ் நாங்கள் கொடுத்த பிச்சை என்கிறார். அவர் கொடுத்ததா இல்லையா இந்த உரிமை என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

It is not a Parliamentary procedure. It is an insinuation against the Chair. It is the Chair who has given us all the rights. That is what we possess.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே . . .

திரு. எஸ். வடிவேல் : நாங்கள் பேசுவதற்கு சட்டசபை உரிமை கொடுத்திருக்கிறதா அல்லது ஆளுங்கட்சி கொடுத்திருக்கிறதா ? நாங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு வந்தோமா இல்லையா என்பது தெரியவில்லை.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே நான் எதற்குச் சொல்கிறேன் என்றால் இந்திரா காந்தியவர்கள் அங்கே பாராளு மன்றத்திலே எந்த உறுப்பினர் பேசினாலும் வெளியே வராத அளவிற்குச் செய்திருக்கிறார்கள். அவர்கள் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வர முடியாது கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வர முடியாது. இன்னும் சொல்லப் போனால் ஜனநாயகத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டு இருக்கிற கேள்வி நேரத்தையே பார்த்துச் செய்து இருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் அந்தக் கேள்வி நேரத்தையே வேண்டாமென்று, இந்த அவசர நிலைமையில் எங்கள் முதலமைச்சர் ரத்துச் செய்திருந்தால் உங்களால் என்ன செய்திருக்க முடியுமென்று கேட்கிறேன்.

THIRU ALADI ARUNA : Has the right been granted by the Chair or by the Hon. Chief Minister ? We want to know the clear position from the Chair.



1975 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையில் அப்படிப்பட்ட ஒரு தீர்மானம் அரசின் சார்பில் இங்கே முன்மொழியப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டிருக்குமானால் பேரவைத் தலைவர் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, அப்படிப்பட்ட தீர்மானம் வரவில்லை என் பதைச் சுட்டிக் காட்டுகிற முறையில்தான் பேசுகிறார்.

THIRU ALADI ARUNA : So, in consequence that right has not been granted by the Hon. Chief Minister. We have been following a right that has already been granted.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தை ரத்துச் செய்து தீர்மானம் வந்திருக்கலாம். ஆனால் அப்படி வராமல் கேள்வி நேரம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் சொல்கிறார். பாராளுமன்றத்தில் அது ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. துரைமுருகன் : இங்கேயும் ரத்துச் செய்திருந்தால் என்ன செய்திருப்பார்கள் ?

திரு. எம். சுரேந்திரன் : கனம் சபாநாயகர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து இந்தச் சட்ட மன்றம் கூட்டப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் அரசியல் சட்டத்தில் 6 மாதங்களுக்கு ஒரு முறை சட்ட மன்றம் கூட்டப்படாமல் இருந்தால் அது தானாக காலாவதியாகிவிடுமென்று இருக்கிறது. அந்த விதியின்படி தான் இந்தச் சட்ட மன்றம் கூட்டப்பட்டிருக்கிறது. இல்லா விட்டால் நீங்கள் ஆகஸ்டிலேயே சட்டமன்றத்தைக் கூட்டி இருக்க முடியும். இன்றைய தினம் உங்கள் பதவி பறிபோகாமல் இருப்பதற்காக சட்ட மன்றத்தைக் கூட்டியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூட்ட வேண்டும் என்று தான் இருக்கிறதே தவிர, கூட்டாவிட்டால் என்ன நிலையேற்படும் என்று இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : அவசியம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சட்டமன்றத்தை கூட்டியாக வேண்டும் என்று இருக்கிறது.

திரு. பெ. சீனிவாசன் : ஒருவேளை திரு. துரைமுருகன் சொல்லியது போல முதலமைச்சர் பெருந்தன்மையோடு அளித்த நன்கொடையாக இருந்தால் அதற்கு நான் நன்றி தெரிவித்துக்

[27-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக்குறியிட்ட வினா 120-க்கான விடையைக் காண்க.]

**கல்லக்குறிச்சி பதிவு மாவட்டம்.**

1. ஜெயலட்சுமி பைனான்ஸியர்ஸ், கல்லக்குறிச்சி.

**சிதம்பரம் பதிவு மாவட்டம்**

2. ஸ்ரீ மகாலட்சுமி பெனிபிட் சிட் பண்ட்ஸ், குறிஞ்சிப்பாடி.
3. எம். எஸ். கே. சிட் பண்ட்ஸ், குறிஞ்சிப்பாடி.
4. கோமதி சிட் பண்ட்ஸ், நெய்வேலி.

**திண்டுக்கல் பதிவு மாவட்டம்**

5. உமா இன்வெஸ்ட்மெண்ட் (பி) லிமிடெட் (கிளை), திண்டுக்கல்.
6. மோனார்க் டிரேடிங் கம்பெனி (கிளை), திண்டுக்கல்.

**கோயம்புத்தூர் பதிவு மாவட்டம்**

7. உமா இன்வெஸ்ட்மெண்ட் (பி) லிமிடெட், 9/369, கிராஸ்கட் ரோடு, காஞ்சிபுரம், கோயம்புத்தூர்.
8. யூனியன் சிட் பண்ட்ஸ், ராஜா தெரு, கோயம்புத்தூர்.
9. மோனார்க் டிரேடிங் கம்பெனி, 72-பி, உப்புக்கிணறு தெரு, கோயம்புத்தூர்.
10. அலேடு சிண்டிகேட் (பி) லிட், 17/189, ஒப்பணக்காரத் தெரு, கோயம்புத்தூர்.
11. ஜே. கே. என். சிட் பண்ட்ஸ், பார்பர் நாயக்கன்பாளையம், கோயம்புத்தூர்.
12. லக்கி சிட்பண்ட்ஸ், கோயம்புத்தூர்.
13. சுச்சாதா சிட் பண்ட்ஸ் (பி) லிட், 16/113, பால்காட் ரோடு, மடுக்கரை.
14. வெஸ்டர்ன் சிட் பண்ட்ஸ், 10/55, காளப்ப கவுண்டர் தெரு, காத்தூர், கோயம்புத்தூர்.



**கோயம்புத்தூர் பதிவு மாவட்டம் (தொடர்ச்சி.)**

15. தனலஷ்மி சிட் பண்ட்ஸ், 6/192, மெயின் ரோடு, குனியமுத்தூர், கோயம்புத்தூர்.
16. கோல்டன் பைனான்ஸ், 90, ஒப்பனக்காரத் தெரு, கோயம்புத்தூர்.
17. பார்ம்லேண்ட் சிட் பண்ட்ஸ், கிராஸ்கட் ரோடு, காந்திபுரம், கோயம்புத்தூர்.
18. இப்ராஹிம் சிட் பண்ட்ஸ், மேட்டூர் பிள்ளையார் தெரு, மேட்டுப்பாளையம்.
19. சக்தி சிட் பண்ட்ஸ், வெள்ளக்கிணர் போஸ்ட், ஜி. என். மில்ஸ், கோயம்புத்தூர்.
20. சீமா டிரேடிங் கம்பெனி, 193, மேட்டுப்பாளையம் ரோடு, கோயம்புத்தூர்.
21. சுசாரிதா சிட் பண்ட்ஸ், 11-ஏ, சுப்பையா முதலியார் தெரு, கோயம்புத்தூர்.
22. குட்லக் பண்ட்ஸ், 21/221, சின்ன எல்லையாலேன், சுக்ரவார் பேட்டை, கோயம்புத்தூர்.
23. பாயோனியர் பைனான்ஸ், 9/96, கிராஸ்கட் ரோடு, காந்திபுரம், கோயம்புத்தூர்.
24. கோல்டன் பைனான்ஸ் கார்ப்பரேஷன், 17/374, ஒப்பனக்காரத் தெரு, கோயம்புத்தூர்.
25. லீடிங் பைனான்ஸ், 7, சித்தி விநயகர் கோயில் தெரு, கோயம்புத்தூர்.
26. வீரகுமார் டிரேடர்ஸ் அண்ட் சிட்பண்ட்ஸ் (பி) லிட், 17/75, ஒப்பணக்காரத் தெரு, கோயம்புத்தூர்.

**கன்னியாகுமரி பதிவு மாவட்டம்**

27. மோனார்க் டிரேடிங் கம்பெனி, நாகர்கோவில்.
28. உமா இன்வெஸ்ட்மெண்ட், நாகர்கோவில்.

[1975 அக்டோபர் 29

## திருநெல்வேலி பதிவு மாவட்டம்

29. உமா இன்வெஸ்ட்மெண்ட் (பி) லிட், திருநெல்வேலி.

30. மோஹனர்க் டிரேடிங் கம்பெனி, திருநெல்வேலி.

31. வைஜயந்தி பைனான்ஸ் அண்ட் டிரேடிங் கம்பெனி, திருநெல்வேலி.

32. லஷ்மி அண்ட் கோ, அம்பாசமுத்திரம்.

33. மானூர் அண்ணா சிட் பண்ட்ஸ், திருநெல்வேலி.

34. ஹாஜா சிட் பண்ட்ஸ், திருநெல்வேலி.

35. வனஜம் டிரேடிங் பண்ட்ஸ், திருநெல்வேலி.

36. பியூட்டி சிட் பண்ட்ஸ், ஏர்வாடி.

## திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம்

37. ஸ்ரீ பாலமுருகன் சிட் பண்ட் கம்பெனி, அரவாக்குறிச்சி.

38. செட்டியார் பைனான்ஸ், திருச்சிராப்பள்ளி.

39. ஸ்ரீ முருகன் பைனான்ஸ், திருச்சிராப்பள்ளி.

## தர்மபுரி பதிவு மாவட்டம்

40. வோல்கா டிரேடிங் அண்ட் சிட்பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், மொரப்பூர் (கிழே).

## வேலூர் பதிவு மாவட்டம்

41. உமா இன்வெஸ்ட்மெண்ட் (பி) லிட், வேலூர்.

42. ஸ்ரீ ஸ்ரீனிவாசா பைனான்ஸ் கார்ப்பொரேஷன், வேலூர்.

43. சரஸ்வதி விலாஸ் ஷண்முகானந்தா நிதி லிட், வேலூர்.

## கடலூர் பதிவு மாவட்டம்

44. தஞ்சாவூர் சிட் பண்ட்ஸ் (பி) லிட், 206, மணி ரோடு, நெல்லிக்குப்பம்.

45. தேவநாதன் அண்ட் கோ, 38, நேதாஜி ரோடு, மஞ்சக்குப்பம், கடலூர்-3.



1975 அக்டோபர் 29]

## தூத்துக்குடி பதிவு மாவட்டம்

46. சுதர்ஸன் சிட்பண்ட்ஸ், 159, விக்டோரியா தெரு, தூத்துக்குடி.

47. உமா இன்வெஸ்ட்மெண்ட் (பி) லிட்., 121, ஜி. சி. ரோடு, தூத்துக்குடி.

## சென்னை வடக்கு & தெற்கு பதிவு மாவட்டங்கள்

48. ஹம்சா எண்டர்பிரைஸஸ், தாம்பரம்.

49. சௌத் இண்டியன் பைனான்ஸ் கார்ப்பொரேஷன் தி. நகர், சென்னை-17.

50. சிவ ஷண்முகானந்தா சிட்பண்ட்ஸ், ஈவினிங் பஜார், சென்னை-1.

51. ஆவ்ரோ இன்வெஸ்ட்மெண்ட்ஸ், சென்னை-6.

52. உமா இன்வெஸ்ட்மெண்ட்ஸ் (பி) லிட், ராயப்பேட்டை, சென்னை-14.

53. கட்டாரியா கிரெடிட் கார்ப்பொரேஷன், சென்னை-1.

54. தமிழ் நாடு பைனான்ஸ் கார்ப்பொரேஷன், நெம்பர் 2, புளியந்தோப்பு முதல் தெரு, சென்னை-12.

55. மேகலா சிட்ஸ் (பி) லிட், திருவல்லிக்கேணி, சென்னை-5.

56. பத்மாநாயக் டிரேடிங் கம்பெனி, சென்னை-2.

57. யூனிட்டி சிட் பண்ட்ஸ் (பி) லிட், சென்னை-6.

58. கஜநாயக லக்கி ஸ்கீம் பண்ட், சென்னை-6.

59. சௌபாக்கியா சிட் (பி) லிட், மைலாப்பூர், சென்னை-4.

60. மோஹனர்க் டிரேடிங் கம்பெனி, சென்னை-1.

61. ஸ்ரீ குரு டிரேடிங் கம்பெனி, மைலாப்பூர், சென்னை-4.

62. லாயிட்ஸ் பைனான்ஸ் (பி) லிட், சென்னை-1.

63. சூரியா சிட் கம்பெனி, சென்னை-1.

64. எஞ்ஜே சிட் கம்பெனி, சென்னை-17.

### மதுரை பதிவு மாவட்டம்.

65. மோகன்ராம் சிட்பண்ட்ஸ், மதுரை.
66. கண்ணபிரான் சிட்பண்ட்ஸ், கம்பம்.
67. மோனூர்க் டிரேடிங் கம்பெனி, மதுரை.
68. வண்டூர் ஜூபிடர் சிட் பண்ட்ஸ், மதுரை.
69. ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் கம்பெனி, மதுரை.
70. உமா இன்வெஸ்ட்மெண்ட் (பி) லிட், மதுரை.
71. சுதர்ஸன் சிட்பண்ட்ஸ், மதுரை.
72. பார்ம்லேண்ட் சிட் பண்ட் கம்பெனி, மதுரை.

### நாமக்கல் பதிவு மாவட்டம்.

73. எஸ். டி. சிட் பண்ட்ஸ் (பி) லிட்., கொளகனபுரம்.

### திருப்பூர் பதிவு மாவட்டம்.

74. சிட் டிரேடிங் கம்பெனி, பொள்ளாச்சி.
75. உமா இன்வெஸ்ட்மென்ட் (பி) லிட், பொள்ளாச்சி.
76. வண்டூர் ஜூபிடர் சிட்ஸ் (பி) லிட், பொள்ளாச்சி.
77. வைசாலி டிரேடிங் கம்பெனி (பி) லிட், பொள்ளாச்சி.
78. குமரன் மலே கார்ப்பொரேஷன், பல்லடம்.
79. ஒப்பெரா பைனான்ஸ் கார்ப்பொரேஷன், திருப்பூர்.
80. கணேஷ் சிட்பண்ட்ஸ், திருப்பூர்.
81. உமா இன்வெஸ்ட்மென்ட் (பி) லிட், திருப்பூர்-2.
82. ஜாபர் சிட்பண்ட்ஸ், திருப்பூர்.
83. எம். ஆர். ராமசாமி செட்டியார் சிட்பண்ட்ஸ், திருப்பூர்.



### பழனி பதிவு மாவட்டம்.

84. யூனியன் சிட்பண்ட்ஸ், பழனி.
85. உமா இன்வெஸ்ட்மெண்ட் (பி) லிட், பழனி.

### செங்கல்பட்டு பதிவு மாவட்டம்.

86. கருடா சிட்பண்ட் கம்பெனி, காஞ்சிபுரம்.
87. கருடா சிட் பண்ட்ஸ் கம்பெனி, மதுராந்தகம்.
88. நியூடீல் சிட் இன்வெஸ்ட்மெண்ட், மதுராந்தகம்.
89. மோனூர்க் டிரேடிங் கம்பெனி, திருவள்ளூர்.
90. சிண்ட் சிட் டிரேடிங் கம்பெனி, காஞ்சிபுரம்.

---

திரு. எம். ஏ. லத்தீப் : அன்றைக்குக் கூட நம்முடைய அவையில் சொல்லப்பட்டது. அரசியல் ஆதாரத்திற்காக ஆதாயத்திற்காக, முஸ்லீம் லீக் தன்னுடைய நிலையை மாற்றிக் கொள்ளவில்லை. ஆனால் 20 அம்ச திட்டத்தை ஆதரிப்பது அரசியல் ஆதாயத்திற்காக என்று திரு. சுரேந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனக்கு மகிழ்ச்சி, இந்த 20 அம்ச திட்டத்தை ஆதரிப்பவர்கள் எல்லாம் அரசியல் ஆதாயத்திற்காகச் செய்கிறார்கள் என்று சொன்னதற்காக. அதே நேரத்தில் தெளிவாகச் சொல்கிறேன், முஸ்லீம் லீகைப் பொறுத்தவரையில் தான் மேற்கொண்ட நிலையை எந்த நேரத்திலும் மாற்றிக் கொண்டது அல்ல. அதே நிலையைத்தான் வைத்துக்கொண்டு இருக்கிறோம்.

(மணியடிக்கப்பட்டு, திரு. மணலி கந்தசாமி அழைக்கப் பட்டார்).

Thiru M. A. Latheef : Sir, I had hardly taken ten minutes. I may be given ten more minutes.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 10 நிமிடம் கொடுக்க முடியாது.

Thiru M. A. Latheef : Whenever I stand this always happens.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லத்தீப், நீங்கள் எப்போதுமே குறிப்பிட்ட நேரத்தில் முடிப்பது கிடையாது.

Thiru M. A. Latheef : Even in argument [illegible] the Speaker and myself, time goes. My party le[illegible] speaking and so I may be given some more time. [illegible] tions take more time. I shall finish in five m[illegible]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இ[illegible] [illegible]ங்கிட்டுக்கொடுக்கிறோம். கொடுக்கிற [illegible] வேண்டும். அப்படி முடித்தால்தான் [illegible] [illegible]றித்த நேரத்தில் முடிக்க முடியும். [illegible]



திரு. எம். சுரேந்திரன் : என் பெயரை உபயோகித்து இருக்கிறார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெயரை உபயோகித்து இருந்தால் நீங்கள் பேசும்போது பதில் சொல்லிக்கொள்ளுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : தவறான தகவல் கொடுத்து இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறான தகவல் கொடுத்து இருந்தால் நீங்கள் அடுத்துப் பேசும்போது பதில் சொல்லிக் கொள்ளுங்கள். திரு. மணலி கந்தசாமி . . .

Thiru M. A. Latheef : Sir, I shall finish in two minutes.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் 10-10 க்கு ஆரம்பித்தீர்கள், 20 நிமிடம் ஆகிவிட்டது. சீக்கிரம் முடியுங்கள்.

(திரு. எம். சுரேந்திரன் நின்று கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், அவர் பேசி முடித்த உடனே பதில் சொல்லுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, 20 அம்ச திட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். அதே நேரத்தில் 20 அம்ச திட்டத்தை இந்த மாநிலத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் நிறைவேற்றவில்லை. மத்திய அரசு கூட அந்த 20 அம்ச திட்டத்தை [illegible]யாக நிறைவேற்றவில்லை. காந்தியடிகளின் அபிமான [illegible]கயான மதுவிலக்கை அவர்கள் நிறைவேற்றவில்லை. [illegible]ாநிலத்தில் செய்துள்ள சீர்திருத்தங்களைப்போல், [illegible] திட்டங்களைப் போல், வேறு எங்கும் நிறைவேற்ற [illegible]நிலையில் நாங்கள் இந்தக் கண்டனத் தீர்மானத்தை [illegible] நேரத்தில், கொள்கை அளவில் நாம் ஆதரித்து [illegible]அம்ச திட்டத்தை நானும் இங்கே ஆதரித்து, [illegible]போல் மற்ற மாநிலங்களும் 20 அம்ச [illegible]படுத்துவதற்கும், மத்திய அரசு இதை

நிறைவேற்றுவதற்கும், இந்த ஆட்சியைப் பின்பற்றி, இவர்களை எக்சாம்பிளாக வைத்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே அரசியல் சட்டத்திலே சொல்லப் பட்டிருக்கிற மற்ற எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்கு அவர்கள் முன்வருவார்களானால், அது தான் நம்முடைய நாட்டிற்கும், அவர்களுக்கும், எல்லோருக்கும் செய்யும் நியாய மாக இருக்குமே தவிர, நல்ல முறையில் அவற்றைச் செயல்படுத்தி வரும் இந்த ஆட்சி மீது கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வருவது அரசியல் நோக்கம் உடையது, உள்நோக்கம் உடையது, தவறான போக்கு என்ற வகையில் இதை எதிர்த்து, கண்டனத் தீர்மானத்தை நான் ஆதரிக்கவில்லை என்று சொல்லிக்கொள் கிறேன்.

(திரு. எம். சுரேந்திரன் எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவதாக இருந் தால், அப்போது பதில் சொல்லிக்கொள்ளுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** இப்போதே அதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிறகு பதில் சொல்லிக் கொள்ளலாம். திரு. மணலி கந்தசாமி, நீங்கள் பேசுங்கள்.

(முற்பகல் 10.30)

**திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவரவர்களே, இரண்டு தின களாக காரசாரமாக விவாதிக்கப்பட்ட இந்தக் கண்டனத் தீர்மானத்தின் மீது அந்தக் கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்தக் கண்டனத் தீர்மானத்தின் நோக்கம். திருமதி இந்திராகாந்தி அவர்கள் பிரகடனம் செய்த அவசர நிலைமை, அதையொட்டி வெளியிட்ட 20 அம்சத் திட்டங்களை இந்தச் சர்க்கார் என்பதற்காக இந்தச் சர்க்காரைக் கண்





தான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம். நான் கேட்கிறேன் இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்தவர்களை, இன்றைக்கு இந்த 20 அம்சத் திட்டம் என்பது பார்லிமெண்டால் நிறைவேற்றப் பட்டிருக்கக் கூடிய ஏதாவது ஒரு சட்டமா அல்லது மத்திய சர்க்காருடைய நிர்வாக உத்திரவா என்பதைக் கூட நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏதோ அவர்கள் பிரகடனப் படுத்தி இருக்கக் கூடிய இந்த மிசா என்று சொல்லக்கூடிய அவசரநிலைப் பிரகடனத்தையொட்டி இந்த 20 அம்சத் திட்டத்தை அன்றைக்கு ரேடியோவில் ஒரு நாள் ஒலி பரப்பினார்கள். அதைத் தவிர அதற்கு எந்த விதமான அரசியல் ஆதாரமோ, அதிகார ஆதாரமோ இல்லை என்பதை இன்றைக்கு யாரும் மறுக்க முடியாது.

ஒரு நாகரிகமான ஜனநாயக சர்க்கார் இயங்க வேண்டு மானால் ஒரு முக்கியமான தேசியத் திட்டத்தை ஒரு வரை முறைக்கு உட்பட்டு வெளிப்படுத்தி பார்லிமெண்டின் தீர்மான மாக அல்லது ஜனநாயக உத்திரவாக வெளியிட்டு அதை அனுப்பி வைத்து அதை நிறைவேற்ற வேண்டுமென்று சுற்றறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்து எல்லோருடைய ஆதரவையும் பெற்று நிறைவேற்றுவது தான் ஜனநாயகப் பாதையாகும். ஆனால், இன்றைக்கு அப்படிச் செய்யவில்லை. அந்த அம்மையார் திடீரென்று இந்திய தேசத்தின் உள்நாட்டு நிலைமைகளைப் பாதுகாப்பதற்காக, தன்னுடைய நிலைமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு அவசர நிலைமைப் பிரகடனத்தை இந்திய அரசியல் சட்டப்படி, அதனுடைய ஒரு ஷரத்தின்படி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அது இப்படிக் கொண்டு சட்டம். எனவே நிச்சயமாக நான் ஏற்றுக் கொள் லை. மக்கள் மத்தியில் இப்படிப்பட்ட ஒரு மனப் டுத்தும் என்ற அளவில் தான் இந்த 20 அம்சத் ர்க்கரையைத் தடவி இந்திய மக்களை ஏமாற்று திருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு முடியவில்லை. எனக்கு முன்பாக இந்தத் பேசிய நண்பர்கள், குறிப்பாக,

கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் கட்சிக்கு என்று ஒரு தேசியத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தோடு இந்தத் திட்டத்தை ஒப்பிட்டு பேசினார்களா? அதைப்பற்றி ஒப்பிட்டுப் பேசத் தயாராக இருக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

இது ஒன்றும் புதிய திட்டம் இல்லை. கம்யூனிஸ்ட் கட்சிக்கு என்று ஒரு தேசியத் திட்டம் இருக்கிறது. ஒரு புரோகிராம் இருக்கிறது. "புரோகிராம் ஆப் தி பார்ட்டி" இருக்கிறது. இந்த இந்திரா காந்தியின் 20 அம்சத் திட்டம் இருக்கிறதே, காங்கிரசின் புரோகிராம், காங்கிரஸ் கட்சியின் எல்லா மட்டத்திலும் வாதிக்கப் பட்டதா? அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்து இது அடிப்படையிலே விவாதிக்கப்பட்டு அந்த அடிப்படையில் இது கொண்டு வரப்பட்டதா என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன். எனவே, இந்த 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று சொல்லி கண்டனம் செய்வது என்பது "டோடலி இர்ரெலவென்ட்" என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படிச் செய்வது சரியில்லை என்பது என்னுடைய கருத்தாகும்.

அடுத்து, இந்த அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டதற்கு ஒரு பெரிய கதை கட்டி விடப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டு விட்டது போலவும், அமைதியின்மை ஏற்பட்டு விட்டது போலவும் ஒரு ஓநாய் ஆட்டுக்குட்டிக் கதை கட்டி விடப்பட்டது. இன்றைக்கு அப்படிப்பட்ட ஒரு பெரிய நிலைமையை, அவசர நிலைமையைப் பிரகடனம் செய்ததைப் பற்றி இன்றைக்குத் தீர்மானத்தைப் பிரேரேபித்தவர்கள் அன்றைக்... கேட்டார்கள்? தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் க... பிளவு ஏற்பட்டபோது இப்போது ஏற்பட்ட அவசர ... விட இந்தியாவில் எங்கும் இல்லாத அளவிற்கு ... நிலைமை ஏற்பட்டது.

இங்கே இருந்தவர்கள் திராவிட முன்னே... மீது ஒரு குற்றப் பத்திரிக்கையைத் ... டில்லிக்குச் சென்று உடனடியாக திரா...





சர்க்காரை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று கேட்டபோது அந்த அம்மையார் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதெல்லாம் நமக்குத் தெரியும். இப்போது சொல்கிறார்கள் சட்டசபை அங்கத்தினர்களை நிர்ப்பந்தித்துக் கையெழுத்து வாங்கப்பட்டது என்கிறார்கள். இங்கே அது அப்போது நடக்கவில்லையா? சட்டசபை அங்கத்தினர்களின் மோர்ச்சா நடக்கவில்லையா? அதையெல்லாம் இந்திரா காந்தியவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இன்றைக்கு இந்திரா காந்தி தன்னுடைய தேர்தல் வழக்கு விசாரணைத் தீர்ப்பு தனக்கு எதிராக வந்தவுடனே இப்படி ஒரு அவசர நிலைப் பிரகடனத்தைச் செய்திருக்கிறார்கள். உண்மையிலேயே ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக அவசர நிலைப் பிரகடனத்தைச் செய்து, 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அக்கறை இருக்குமாகில், விருப்பமிருக்குமாகில், எல்லா மாநில முதலமைச்சர்களையும் கூட்டி வைத்து இந்தத் திட்டத்தை நன்கு விவாதித்து, இந்தத் திட்டத்தை செம்மைப் படுத்தி, அதன் அடிப்படையில் தேச மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருப்பார்களானால், இந்த திட்டம் எவ்வளவு செம்மையாக நிறைவேற்றப்பட்டிருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்த்தார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

இப்படிச் செம்மையாகச் செய்யாமல் அலகாபாத் தீர்ப்பிற்குப் பிறகு, ஜட்ஜ்மெண்டிற்குப் பிறகு, அவருடைய தேர்தல் ...து என்று அறிவித்து ஒரு சிக்கலான சூழ்நிலை ஏற்பட்ட ...ந்த அவசர நிலைமைப் பிரகடனம் என்ற கசப்பு ... சர்க்கரை தடவுவது போல 20 அம்சத் திட்டம் ...ண்டு வந்திருப்பது பொருத்தமானதல்ல என்பதை ...டைத்தவர்கள் எண்ணிப் பார்ப்பார்கள். இது ..., அல்லது ஜனநாயகத்தைப் பாதுகாக்க ...ண்ணத்தில் கொண்டு வரப்பட்டதென்றோ ... மாட்டார்கள் என்பதை அறுதியிட்டுக் ...

அடுத்து, அவசர நிலைமைப் பிரகடனத்திற்கான காரணங்களைப் பற்றித் தொடர்ந்து பேசிய திரு. மாரிமுத்து அவர்கள் ராம லீலா மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அம்மையார் அலகாபாத் கோர்ட்டின் தீர்ப்பிற்குக் கட்டுப்பட்டு அதன் அடிப்படையில் தன்னுடைய பதவியை ராஜிநாமா செய்ய வேண்டும் என்றும், அப்படி அவர் செய்யாவிட்டால் நாங்கள் கேரோ செய்வோம், பார்லிமெண்ட்டுக்கு முன்னால் கேரோ செய்வோம், **பிரதமரின் வீட்டு முன்பாக மோர்ச்சா செய்வோம் என்று எதிர்க்** கட்சிகள் பேசியதாகக் குறிப்பிட்டார். பார்லிமெண்டின் முன்னால் மோர்ச்சா செய்வதோ, கேரோ செய்வதோ ஒன்றும் புதிதல்ல. சட்ட விரோதமானதுகூட அல்ல. கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பல மோர்ச்சாக்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் சரி என்று சொல்லுகிறார்கள். ஆனால் மொரார்ஜி தேசாய் அவர்களும் மற்றவர்களும் அலகாபாத் கோர்ட்டின் தீர்ப்பிற்குப் பிறகு பிரதம அமைச்சராக இந்திரா காந்தி நீடிப்பது சரியல்ல என்பதைச் சுட்டிக் காட்டி அவர் ராஜிநாமா செய்ய வேண்டுமென்று கோரி, அப்படி அவர் ராஜிநாமா செய்ய மறுத்தால் அவர் வீட்டு முன்பு கேரோ செய்வோம், மோர்ச்சா செய்வோம் என்று சொன்னால் அது எந்த விதத்திலே ஜனநாயக மரபிற்குப் பொருத்தமானது அல்ல என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

நான் சொன்னதைப் போல இங்கே பல மோர்ச்சாக்கள் நடக்கவில்லையா? இந்த மோர்ச்சாக்களினாலே என்ன உத்பாதங்கள் ஏற்பட்டு விட்டன? முதலமைச்சரின் தலையை வெட்டித் தலைவரின் காலடியில் வைப்பேன் என்று சொல்லிக்கூட இங்கே பேசவில்லையா? அப்படி எல்லாம் நடக்கவில்[illegible] அப்போதெல்லாம் அதைக் கண்டித்து ஒரு கண்டனத் [illegible] கொண்டு வருவதற்கு மனம் வராமல் பேசாமல் [illegible] இன்றைக்கு மட்டும் கண்டனத் தீர்மானம் கொண்[illegible] நீர்களே அது எந்த விதத்திலே நியாயமா[illegible] தேசாய், ஜெயப்பிரகாஷ் ஆகியவர்களைப் பற்[illegible] ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. நா[illegible] வலதுசாரி பிற்போக்குப் பக்கம் என்[illegible] படுத்தது இல்லை. கட்சியிலேயே வல[illegible]





கொள்கையைக் கண்டித்திருக்கிறேன். இன்றைக்கு வலது சாரி பிற்போக்குக் கொள்கையினர் ஒரு "காக் அண்ட் புல் ஸ்டோரியை" ஒரு பெரிய பிசாசைக் காட்டி விட்டு, இந்த வலது சாரிச் சக்திகள் ஒரு அடுக்கு மொழியைப் போட்டுக் கொண்டு

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக, தங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஜனநாயகத்திற்கு முரண்பட்ட வகையில் பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இது சரியல்ல. தன்னுடைய நலனைப் பாதுகாத்துக் கொள்ளச் செய்யப்படுகின்ற காரியங்களே தவிர, நாட்டு நலனில் அக்கறை கொண்டு செய்யப்படுகின்றவை அல்ல என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். 20 அம்சத் திட்டத்தில் இருப்பதில் பல கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியத் திட்டத்தில் இருக்கின்றன.

கம்யூனிஸ்ட் ஐடியாலஜியின் அடிப்படையில் முதல் பிரச்னை இந்த தேசத்தில் இருக்கக்கூடிய ஏகாதிபத்ய அரசாங்கம் போக வேண்டும், அன்னியச் சுரண்டல் ஆதிக்கம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இது இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சியினர் இன்றைக்கு பிரதமர் அவர்களுக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டே போனால் கடைசியில் அது அந்தக் கட்சியின் "லிக்விடேஷனிசம்"த்தில், அந்தக் கட்சியின் அழிவுப் பாதையில் தான் கொண்டு போய் விடும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

[illegible] தேர்தலைப்பற்றிய சிந்தனையில் எதையோ சொல்லிக் [illegible]ர்கள். நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. [illegible]திலே வலியுறுத்திக் கூற விரும்புவது என்ன [illegible] திட்டத்தில் ஒன்றும் இல்லை. முக்கியமான [illegible] விடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கும் [illegible]வும் இன்னும் உலக ஏகாதிபத்திய [illegible]ட்டிலே சுரண்டிக்கொண்டுதான் இருக்

கிறார்கள். அந்தச் சுரண்டலைத் தடுக்க என்ன சொல்லி யிருக்கிறார்கள் 20 அம்சத் திட்டத்தில்? ஒன்றும் இல்லையே. இந்த நேரத்தில் நான் படித்த கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது. "நாளெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை போவதோ, நாங்கள் சாவதோ" என்று பாடி இருக்கிறார்கள். அந்த ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டல் இன்றைக்கும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதை யாரும் கண்டிக்கவில்லை. இந்திரா காந்தி அம்மையாரும் அதைக் கண்டிக்கத் தயாராக இல்லை. இதை நான் வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. ஆண்டி இம்பீரியலிசம், ஆண்டி ஃபியூடல், ஆண்டி பிக்-காபிட்டல் இவைகளைப் பற்றி எல்லாம் ஒன்றுமே சொல்லவில்லை.

இங்கே இருக்கக்கூடிய பெரிய முதலாளிகள் எல்லாம் யார்? ஏகாதிபத்தியத்திற்குத் துணை போகக்கூடியவர்கள்தானே. ஏகாதிபத்தியத்தின் கூட்டாளிகள், ஏகாதிபத்தியத்தின் பங்காளிகள் தான் அவர்கள். அவர்கள் போக்கைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? இதை ஏன் கம்யூனிஸ்டு நண்பர்கள் எடுத்துச் சொல்லவில்லை? இதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இங்கே இருக்கக்கூடியவர்கள் மட்டுமல்ல, அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாங்கே, இராஜேஸ்வரராவ் போன்றவர்களும் ஒன்றும் சொல்லவில்லை. ஒரு வேளை அவர்களுக்கும் 'மிசா' வந்துவிடும் என்று பயப்படுகிறார்கள் போலிருக்கிறது.

இந்தக் கண்டனத் தீர்மானத்திலே பேசும்போது தங்கமணி அவர்கள் சொன்னார்கள். மிசா கொண்டு வரப்பட்ட பின்னால் என்னென்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். இருக்கிற சர்க்கார் ஏற்கெனவே பல்வேறு திட்டங்களை கொண்டிருக்கிறது. அதையெல்லாம் பாராட் அவர்கள் நேற்றுதான் 20 அம்சத் திட்டம் என் றார்கள். ஆனால் இவர்கள் ஏற்கெனவே அ ஆரம்பித்துவிட்டார்கள், செய்துகொண்டிரு பாராட்ட வேண்டாமா? அதைப் ஆந்திராவிலே செய்துகொண்டிருக்கிற



மாநிலங்களிலே இந்த 20 அம்சத் திட்டம் வருவதற்கு முன்பே சில காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அதைச் செய்ய வேண்டியது அரசியல் சட்டத்தின் ஒரு பகுதி. இதுவரை அதைச் செய்யாமல் இருந்தால் அது அவர்கள் செய்த தவறு இந்திய அரசு செய்த தவறுதானே அல்லாமல் வேறு ஒன்றுமில்லை. இதுவரை செய்யாமல் இருந்துவிட்டு மிசா வந்தபின்னால் செய்திருக்கிறார்களா என்று கேட்பது பயமுறுத்தல், மிரட்டல். அவ்வளவுதான்.

இன்னொரு எண்ணமும் எனக்கு ஏற்படுகிறது. இங்கே எல்லா உறுப்பினர்களும் பேசவேண்டும். அவர்களுடைய பேச்சைப் பார்த்து அவர்களிலே எத்தனைபேர் கைதுசெய்யப்பட வேண்டியவர்கள், எத்தனை பேர் விட்டு வைக்கப்பட வேண்டியவர்கள் என்பதற்காக இந்தக் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பார்களோ என்ற எண்ணம் எனக்கு ஏற்படுகிறது.

காங்கிரஸ் கட்சியின் வரலாறு தெரியாதா? நேருக்கு பிறகு இந்த அம்மையார் வந்திருக்கிறார். என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? பிற்போக்கு சக்திகளை, வலதுசாரி சக்திகளை இது வரையில் எதிர்த்திருக்கிறார்களா? அவர்களுக்குத் தடை விதித்திருக்கிறார்களா? தனக்கு ஒரு இழுக்கு வந்தவுடனே அது, இது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 20 அம்சத் திட்டம் என்று சொல்கிறார்கள். இதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, ஜனநாயகத்திற்குச் சாவு மணி அடிக்கிறார்கள். இப்படிப்பட்ட போக்கு சரியல்ல. இது நாட்டுக்கும் நல்லதல்ல; பிரதம அமைச்சருக்கும் நல்லதல்ல. பாரத பிரதம அமைச்சருக்கு உள்ள
யே பாதுகாப்பு வேண்டுமென்றால் அவர்கள் சரியான
க்கு வர வேண்டும். அதன் மூலம் ஜனநாயகத்தைக்
வேண்டும். இங்கே இருக்கிற ஆளும் காங்கிரஸ் கட்சி
இதை எடுத்துச் சொல்ல வேண்டும். அதற்கு
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
**கானத்திலே மொரார்ஜி தேசாய் என்ன**
காந்தி ராஜினாமா செய்ய வேண்டுமென்று
அமைப்பிலே அது என்ன தப்பு? இங்கே

[திரு. மணலி சி. கந்தசாமி] [1975 அக்டோபர் 30

கூட ஒரு விசாரணைக் கமிஷன் வைத்தார்கள் அமைச்சர் சண்முகம் மீது. விசாரணையில் அவருக்கு எதிரான தீர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தால் நீங்கள் எல்லாம் என்ன சொல்வீர்கள்? அவர் உடனே ராஜினுமா செய்ய வேண்டுமென்று சொல்லமாட்டீர்களா? சண்முகத்தை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று சொல்ல மாட்டீர்களா? அதைப்போலதான் அங்கே சொன்னர். ஹைகோர்ட் தீர்ப்பிலே தேர்தல் செல்லாது என்று சொன்ன பிறகு பிரதம அமைச்சர் அங்கே இருக்கலாமா? அவர் இல்லாவிட்டால் இந்தியா வீழ்ந்துவிடும் என்ருல் இந்தியா என்றைக்கும் நிலைத்திருக்காது; வீழ்ந்துதான்விடும். ஆகவே, அந்தக் கூற்று சரியல்ல. ஒரு கொள்கைக்காக தேசமே தவிர ஒரு கட்சிக்காக தேசம் இல்லை. அதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அங்கே ஜெயபிரகாஷ் நாராயண், மொரார்ஜி தேசாய் போன்றவர்களை எல்லாம் உள்ளே பிடித்துப்போட்டிருக்கிருர்கள். ஆனுல் இந்தத் தீர்மானத்திலே பேசிய அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு அதைப்பற்றி எல்லாம் கவலை இல்லை. ஹாண்டே அவர்கள் பேசும் போது என்ன சொன்னர் என்ருல் "இங்கே செங்கற்பட்டிலே எங்களை அடித்துவிட்டார்கள், இங்கே எங்களை அடித்து நொறுக்கி விட்டார்கள்" என்று தன்னுடைய வயிற்றெரிச்சலை வெளியிட்டார். அதுதவிர, இந்தத் தீர்மானத்திலே எதையும் சொல்லவில்லை.

ஒரு கிராமிய கதை நினைவுக்கு வருகிறது. துக்க செய்தியை விசாரிக்க செல்வார்கள் பெண்கள். அதை 'சர்க்காசிம்' என்று சொல்வார்கள். துக்கம் நடந்த வீட்டிலே போய் அழுவார்கள். எப்படி அழுவார்கள் என்ருல் அங்கே அவர்களுக்காக அழுமாட்டார்கள்; தங்களுடைய குறையைச் சொல்லி அழுவார்கள். ஒரு வீட்டுக்குப் போகும்போது ஒரு பெண் 'பாவக்காய், பாவக்காய், பந்தலிலே பாவக்காய்' அழுதாளாம், அவள் வீட்டுக்கு உள்ளே அதைப் பார்த்திருக்கிருள். அதைக்கேட் 'விதைக்கல்லவோ போட்டிருக்கிறேன்' என் ளாம். அதைப்போல இருக்கிறது இவர் **தீர்மானப் பேச்சு.**



[1975 அக்டோபர் 30

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் அரசு மருத்துவ மனைக்கு நோயாளிகள் தங்குவதற்கு போதுமான கூடுதல் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

## மாயூரம் அரசு மருத்துவ மனை.

*131 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் இருதய பரிசோதனைப் பிரிவு ஏற்படுத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் அரசினர் மருத்துவ மனை, தாலுக்கா தலைநகரத்தில் இருக்கக் கூடிய மருத்துவ மனையாகும். மாயூரம், மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ளவர்கள் இருதய பரிசோதனை செய்துகொள்ள வேண்டுமென்ருல் கும்பகோணம் அல்லது தஞ்சைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எனவே, குறுகிய அளவுக்காவது அந்த முயற்சியினை மேற் கொண்டு, அத்தகைய இருதய பரிசோதனை செய்யக்கூடிய பிரிவு ஒன்றினை மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் ஏற்பாடு செய் வதற்கு இனிமேலாவது அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்போது கும்பகோணத்தில் இருதய பரிசோதனை செய்துகொண்டார் என்று எனக்குத் தெரியாது. கும்பகோணம் போனுலும் கிடையாது. இப்பொழுது மருத்துவ மனைகளில், மருத்துவக் கல்லூரியோடு இணைந்த மருத்துவ மனைகளில் கூட எல்லா இடங்களிலும் ஏற்படுத்த இன்னும் வசதி இல்லை. ஆனல், மருத்துவப் பேராசிரியராகவுள்ள சிலர் இருதய பரிசோதனை செய்யும் ஆற்றல் உள்ளவர்களாகவும் இருக்கிருர்கள்.

அரசியல் தெளிவோடு, ஒரு நாகரிகமான அரசியலை நடத்த வேண்டும். ஒரு தனிப்பட்ட நபருக்காக அரசியல் இருக்கக் கூடாது. அது அரசியல் நாகரிகமாகாது. இங்கே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஆளும் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும். மாரிமுத்து போன்றவர்கள் அரசியலிலே மனச்சாட்சியோடு நடந்துகொண்டு, சிந்தித்து செயல்பட்டு, காங்கிரசை இத்தகைய போக்கிலிருந்து தடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

மொரார்ஜி தேசாய் ஒரு பலாத்காரவாதியா? ஜெயபிரகாஷ் நாராயண் ஒரு பலாத்காரவாதியா? அவர் ஒரு அரசியல் சன்னியாசி. அவர் அரசியலில் புகுந்திருந்தால் நிலைமை வேறாக இருக்கும். அவர் எல்லாவற்றையும் துறந்து, ஒரு துறவியாக இருக்கிறார். பூதான இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார். அதைப்போலவே சசிபூசன் உள்ளே இருக்கிறார்; சந்திரசேகரன் உள்ளே இருக்கிறார். அவர்களைப் பற்றி ஏதாவது சொன்னால் நாளை நம்மையும் பிடித்து உள்ளே போட்டுவிடுவார்கள் என்ற பயத்தில் இருக்கிறார்கள் இங்கே இருக்கிறவர்கள். கமிட்டிக் கூட்டத்திலே பேசினால்கூட உள்ளே போகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்கார்ந்து பேசுவதாக இருந்தால் உட்கார்ந்தே பேசுங்கள்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** (உட்கார்ந்து பேசினார்) எனக்கு 66 வயது ஆகிறது. அரசியலிலே இதுவரை அயராது உழைத்து விட்டேன். விவசாயத் தொழிலாளர்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக என் வாழ்நாள் முழுவதையும் கழித்துவிட்டேன். என்னைப் போன்றவர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்க்காமல் இருக்க முடியாது. என்னுடைய பெயரும் மிசா பட்டியலில் இருக்கிறதோ என்னவோ நான் வீட்டிலே சாகப்போகிறேனோ ஜெயிலிலே சாகப்போகிறேனோ தெரியவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நீங்கள் பயப்படாதீர்கள்.





**திரு. மணலி சி. கந்தசாமி:** நீங்கள் அபயம் கொடுத்ததற்கு சந்தோஷம்.

நான் கஷ்டப்பட்டு சப்போர்ட் பண்ணவில்லை. என்ன கஷ்டம் இதில். நேற்றையதினம் விவசாயத் தொழிலாளர்களின் கூலிகளைப் பற்றி பேசினார்கள், நண்பர் மாரிமுத்து. விவசாயத் தொழிலாளர்களுக்கு இவ்வளவு கொடுக்கவேண்டும் என்று அவர்கள் சொல்லட்டும். கட்சியில் தீர்மானம் போடட்டும். கே. டி. கே. தங்கமணி, 6-க்கு நான்கு கொடுக்கிறார்கள், பத்துக்கு எட்டு கொடுக்கட்டும் என்று கேட்கட்டுமே. கேட்டால் மாட்டிக் கொள்வார்கள். ஓட்டு விழாது.

மிசா ஒரு பயமுறுத்தும் கருவியாக ஆகிவிட்டது என்பதை கண்கூடாக பார்க்கிறேன். இது சரியல்ல. கட்சியிலே தீர்மானம் போட்டு நகல் ஒன்றை பிரதமர் அவர்களுக்கு அனுப்பட்டுமே. நிச்சயமாக நாங்கள் ஆதரிக்கிறோம். எதையாவது சொல்ல வேண்டியது. மிசாவிற்கு ஆதரவாக அதை எல்லாம் சேர்த்துக் கொள்வது. பல விஷயங்கள் இருக்கின்றன இன்னும் செய்யப்படவேண்டியவை.

எல்லாம் சரி என்று ஒத்துக்கொள்ள தயாராய் இல்லை. அவ்வப்போது அரசுக்கு எடுத்துச்சொல்லி அதை அரசிடம் வலியுறுத்த வேண்டும். அதை அரசு மறுத்தால் ஜனங்களைத் திரட்டி இவைகளை வலியுறுத்த நம்மிடம் ஆயுதம் இருக்கிறது. அதைச் செய்வதில்லை. அதற்கு பதிலாக வாதப்பிரதிவாதம் செய்து அதிலிருந்து பயன் எடுப்பது ஆரோக்கியமான அரசியல் ஆகாது. காலப் போக்கில் மிசா ஹானியைத்தான் உண்டாக்கும்.

வலதுசாரிகள் செய்யும் இந்த விச் ஹண்டிங் அவர்களை ஆபத்தான பாதைக்குக் கொண்டுபோய் விடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். 'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே", என்று சோசியலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார். அதன் பொருளை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. "காணார்க்கும் கண்டவர்க்கும் கண் அளிக்கும் கண்ணே, வல்லார்க்கும் மாற்றார்க்கும் வரம் அளிக்கும் வரமே" என்பது இராமலிங்க அடிகளார் பாட்டு.

மிசாவிற்கும் இந்தப் பாட்டிற்கும் என்ன பொருத்தம் என்று எனக்குத் தெரியவில்லை. புதுக் காங்கிரஸ் அங்கத்தினர்கள் இந்த விவசாயச் சீர்திருத்தம் வரும்பொழுது, சகோதரி அனந்தநாயகி, எவ்வளவு வேகமாக விறுவிறுப்பாக எதிர்ப்பார்கள் என்று தெரியுமா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அந்தக் கதையெல்லாம் பண்ண வேண்டாம்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** யார் வீட்டுச் சொத்தை யாருக்கு கொடுப்பது என்றெல்லாம் வாதாடுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கனம் உறுப்பினர் கந்தசாமி அவர்களைத்தான் உட்கார்ந்து கொண்டு பேசலாம் என்றேன். அம்மையார் அவர்கள் உட்கார்ந்து கொண்டு பேசுவது சரியல்ல.

**திரு. மணலி சி. கந்தசாமி:** அவர்களுக்கும் என் வியாதி வந்தாச்சு. அல்லது வரப் போகிறது என்பதற்கு அறிகுறி. சட்ட சபையில் எனக்கு ஜோடி வேண்டும் அல்லவா? என்னைப் போன்று நாலு பேர் நொண்டிக் கொண்டு வந்தால் ஆறுதல்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ரொம்ப கெட்ட எண்ணம் உங்களுக்கு.

**திரு. மணலி சி. கந்தசாமி:** ஆகவே, கண்டனத் தீர்மானம் பொருத்தமற்றது. எந்தவிதத்திலும், ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. ஏன் முன்னாலேயே இந்தத் திட்டங்களை நிறைவேற்றி னீர்கள் என்று கேட்டால் என்ன செய்வது? மிசா வந்த பிறகு ஏன் நிறைவேற்றவில்லை என்று கேட்பது சரியல்ல. உபாத்தியாயர் பையனைப் பார்த்து, "உபாத்தியாயருக்கு மேலே என்ன சொல்கிறாய்?" என்ற அடிப்படையில் "மிசா வந்ததற்குப் பிறகு நிறைவேற்றினால் என்ன?" என்று கேட்டால், அது சரியல்ல. ரோட்டில் பேசப்பட்ட பேச்சை, அஸ்திவாரமான தஸ்தாவேஜாக வைத்துக் கொண்டு, "அதை ஏன் நீங்கள் நிறைவேற்றவில்லை, உங்களை கண்டிக்க வேண்டும்" என்று சொல்லுகிற போக்கு பொருத்தமில்லாத போக்கு என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





...பத்தாயிரம் கோடி கள்ளப் பணத்தில் எவ்வளவு எடுக்கப் பட்டிருக்கிறது? டெபிசிட் பைனான்சிங், அதாவது அதிக நோட்டு களை அச்சடிப்பது என்ற நிலைமையை தவிர்க்கிற வரையில் நிச்சயமாக விலைவாசியைக் குறைக்க முடியாது. சிவில் சப்ளைஸ் இலாக்கா ஒழுங்காக நடக்க சில ஏற்பாடுகளை நிச்சயமாகச் செய்யவேண்டும். இதில் பல ஊழல்கள் இருக்கின்றன. இதைத் திருத்துவதற்கு நடவடிக்கையை இந்த சர்க்கார் எடுக்கும், என்ற நம்பிக்கையில் சிவில் சப்ளைஸ் இலாகா எம்ப்ளாயிஸ் யூனியன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்ற முறையில் சொல்லு கிறேன்.

இந்த தமிழ் நாட்டு மக்களுக்கு பண்டங்கள் இடையூறின்றி நல்லமுறையில் கிடைக்க ஏற்பாடுகளைச் செய்ய சர்க்காருக்கு உதவுவதற்கு நான் தயாராக இருக்கிறேன். அது மட்டுமல்ல, விலைவாசி இறங்கவேண்டுமானால், ஆந்திரத்தில் ஒரு டிகிரி இறங்கியிருக்கிறது, இங்கே முக்கால் டிகிரி என்று மட்டும் சொல் வதில் பிரயோசனம் இல்லை. இந்தியப் பொருளாதார அடிப்படை யில் இந்திய பொது மார்க்கெட்டிங் அரசியல் பொருளாதாரக் கொள்கை அடிப்படையில் விலை இறங்கினால் எல்லா இடங்களிலும் இறங்கவேண்டும். அல்லது பயமுறுத்தலின் காரணமாக ஜெயிலில் போட்டால் இறங்குமா என்றால், அப்படி இறங்கினால் மறு நாள் ஏறும். உண்மையாக இறங்கவேண்டுமென்றால் பொருளாதார அமைப்பில் பல மாறுதல்கள் ஏற்படவேண்டும். குறிப்பாக கள்ளப்பணம் வெளியே கொண்டுவரப்படவேண்டும். டெபிசிட் பைனான்சிங்கைத் தடுக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த 20 அம்ச திட்டத்தில் இதைத் தடுக்க என்னவிருக்கிறது?

இங்கே கைது செய்யப்பட்டது யார்? பெரும் கறுப்புப் பணம் வைத்திருந்தவரா? டான்ஸ் ஆடுகிறவர் கைது செய்யப்பட்டுள் ளார். 7 கோடி 8 கோடி கறுப்பு பணம் வைத்திருப்பவர்கள் கைது செய்யப்படவில்லை. ஏனென்றால் அவர்கள் அரசியல் கூத்தாடிகளாகப் போகிறார்கள். இதில் பாரபட்சம் காட்டப் படுகிறது. டில்லிக்கு சிபாரிசு கொண்டு போகப் படுகிறது, "இவர் கட்சிக்கு வேண்டியவர், நடவடிக்கை எடுக்காதீர்கள்" என்று,

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் இன்னொரு நூறு நாட்கள் இந்த ஆட்சி இருந்துவிட்டுத்தான் போகட்டுமே என்ற கருத்தினை பேசும்போது குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றைய நிலை என்னவென்றால், இங்கே எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் திரு. மணலி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதுபோல—எம். ஜி. ஆர். கட்சியைவிட்டு வெளியேற்றப் பட்ட பின்னால்—சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் சந்தித்து இந்தக் கட்சிக்கு நாட்டுமக்கள் ஆதரவு இல்லாமல் போய்விட்டது, ஆகவே பதவியை துறக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்து ஒரு மூன்று மாத காலம், ஆறு மாத காலம் கெடு கொடுத்து—கருத்துக்களைச் சொன்னார்கள்.

இன்றைக்கு மிகத் தெளிவாக பிரதமர் அவர்கள் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அவர்களது பதவிக்காலம் முழுவதும் இருக்கவேண்டும், அதற்கிடையில் யாரும் எந்த விதமான கிளர்ச்சியிலும் ஈடுபடக்கூடாது என்று சொன்ன பிற்பாடு இந்தக் கருத்தை இப்போது ஆதரித்துப் பேசுகின் றார்கள். இதுபோன்ற அவர்களது நிலைகளை எல்லாம் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று மிகப் பணிவோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு என் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அவசர நிலையை ஆதரிக்கின்றது என்பதற்கும், சரியில்லை என்றால் இந்திரா காங்கிரசை எதிர்ப்போம் என்றும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் கேட்கிறேன். இந்த போனஸ் சட்டம் கொண்டு வந்தார்களே, இந்த போனஸ் சட்டத்தின் காரணமாக கோடிக்கணக்கான தொழிலாளி வர்க்கம் இன்றையதினம் பாதிக்கப்பட்டிருக்கிறது, இதனை எதிர்க்க அந்தக் கட்சியினர் என்ன முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றம் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, அந்தக் கட்சியின் தலைவர் பம்பாய் மாநிலத் திற்குச் சென்றார். அங்கே சர்வகட்சி மகாநாட்டில் பேசினார். அந்த மகாநாட்டில் பேசுகின்றபோது சொன்னார், மாநிலக் கட்சிகள் இனிமேல் எதிர்காலத்தில் இருக்க முடியாது. தேசியப் பிரவாகத்தில் ஒன்றுபடவேண்டும் என்று தெரிவித்ததாகப் பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு அந்தக் கட்சியில் இருக்கக்கூடிய இளைஞர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் மாநிலக் கட்சி தேசிய பிரவாகத்தில் ஒன்றுபடவேண்டும் என்று தலைவர் சொல்கிறாரே, என்றைக்கு தேசியப் பிரவாகத்தில் ஒன்று சேர்வார் களோ தெரியாது என்பதை மட்டும் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்த அவசர நிலையை யார் எல்லாம் ஆதரிக்கிறார்கள்? பத்திரி கைகளைப் பார்த்தால் தெரியும். இந்த நாட்டைச் சேர்ந்த டாட்டாக்களும், பிர்லாக்களும், அவர்களைச் சேர்ந்த தொழில் அதிபர்களும் டெல்லிக்குப் போய், இந்திரா காந்தியைச் சந்தித்து, எங்களது முழு ஆதரவு இந்திரா காங்கிரசுக்கே—இந்திரா காங் கிரஸ் அரசாங்கத்திற்கே உண்டு என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் தங்கள் மூலமாக, இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். டாட்டாக்களும், பிர்லாக்களும் இந்த ஆட்சி நீடிக்க வேண்டுமென்று சொல்கிறார்களே, அதன் முடிவு என்ன என்பது நமக்குத் தெரிகிறது. டாட்டா, பிர்லாக்களைச் சந்தித்த பின்னால் இந்திரா காங்கிரஸ் அரசு—தேசியமயமாக்கக் கூடிய கொள்கையைக் கடைப்பிடிக்கப்போவதில்லை என்று அறிவித்திருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

அதே நேரத்தில் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தலைவர்கள்—ஏ. ஐ. டி. யு. சி., ஐ. என். டி. யு. சி., எச். எம். எஸ். போன்றவற்றைச் சேர்ந்தவர்கள் இந்திரா காந்தியைச் சந்தித்து, நாங்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்போம் என்று சொன்னார்கள். தொழிலாளர்களுடைய போனசைக் கட்டுப் படுத்தும் சட்டத்தைப் பற்றிப் பேசக் கூட அவர்கள் வரவில்லை. கோடிக்கணக்கான தொழிலாளர்களுடைய குடும்பங்கள் இன்றைக்கு இதனால் பாதிக்கப் பட்டிருக்கின்றன.

[திரு. சு. துரைசாமி] [1975 அக்டோபர் 30

இந்த இருபது அம்சத் திட்டத்தில் இன்றைக்கு நாட்டில் கோடிக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்களே, அவர்கள் எல்லோருக்கும் வேலை வாய்ப்புக் கொடுக்க அந்தத் திட்டத்தில் வழிவகை இருக்கிறதா என்றால் இல்லையென்பதைத் தெளிவாகப் பார்க்கிறோம். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நாட்டிலுள்ள உழைக்கும் சக்தி படைத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது இன்றியமையாத காரணம் இல்லையா? இவர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்பளிக்க என்ன முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வில்லை.

விலைவாசி இறங்கவேண்டுமென்று எதிர்க்கட்சியினர் சொன் னார்கள். எப்படி இறங்கும்? அவசரச் சட்டத்தைப் போட்ட தற்குப் பின்னால் இன்றைக்கு மத்திய அரசாங்கம் நிலக்கரியின் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். சிமிண்டின் விலையை உயர்த்தி யிருக்கிறார்கள். தனியார்களிடமிருக்கும் அலுமினியத்திற்கு விலையை உயர்த்திகொள்ள அனுமதி அளித்திருக்கிறார்கள். இப்படி ஒருபுறம் அவசர சட்ட காலத்தில் நிலக்கரிக்கு விலை உயர்வு கொடுத்து, சிமிண்டுக்கு விலை உயர்வு கொடுத்து, தனிப்பட்ட முதலாளிகளிடம் உள்ள அலுமினியத்திற்கு விலையை உயர்த்திக் கொள்ள அனுமதி கொடுத்த பிறகு எப்படி மறுபடியும் விலைவாசி உயராமல் இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் சிந்தித்து பார்க்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள் கிறேன்.

அதேபோல இன்றைக்கு நம்முடைய பெருமதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இதற்கெல்லாம் முனைப்பாக ஒரு நடவடிக்கை எடுக்கப்படவில்லையே என்று சொன்னார்கள். நான் உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி எத்தனை மாநாடுகளில் தீர்மானம் போட்டார்கள்? இன்றைய தினம் எஸ். ஓ., பர்மாஷெல் போன்ற வெளிநாட்டு எண்ணைக் கம்பெனிகள் எல்லாம் இருக்கின்றனவே. அவற்றை எல்லாம் நாட்டுடைமையாக்க வேண்டுமென்று பாராளு மன்றத்திலாவது பேசியிருக்கிறார்களா? அவர்களது கட்சி



1975 அக்டோபர் 30] [திரு. சு. துரைசாமி]

மாநாடுகளிலாவது தீர்மானம் போட்டிருக்கிறார்களா? இந்த அவசர கால நிலையில் அவற்றை நாட்டுடைமையாக்க வேண்டும் என்றாவது சொன்னார்களா?

இன்றைக்கு இந்தியாவில் ஏகபோக முதலாளிகளாக 75 குடும் பங்கள் இருக்கின்றனவே—அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த சர்க்கரை ஆலைகள், பஞ்சாலைகள் ஆகியவற்றை நாட்டுடைமை யாக்கவேண்டுமென்று ஏன் கம்யூனிஸ்டுக் கட்சி சொல்லவில்லை? நாட்டு மக்களுக்கு சர்க்கரை கிடைக்கவில்லை, துணிமணிகள் கிடைக்கவில்லை. சர்க்கரை ஆலை, பஞ்சாலைகளைத் தேசியமயமாக்கக் கூடாதா? இந்த அரசு தனியாரிடம் உள்ள அலுமினியத் தொழிற் சாலையைத் தேசியமயமாக்க வேண்டுமென்று சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டு டெல்லிக்கு அனுப்பிற்றே. அதற்கு இன்று வரைக்கும் பதில் கிடையாது. எப்படிக் கொடுப்பார்கள்? ஆளுங் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ராமகிருஷ்ணன்—மாவட்ட பொருளாளராக அங்கே இருந்து கொண்டிருக்கும்போது அவரது கம்பெனியைத் தேசியமயமாக்க இந்திரா காங்கிரஸ் எப்படி அனுமதி அளிக்கும்? ஆகவே எதிர்க்கட்சிக்காரர்கள் இவற்றை எல்லாம் அருள்கூர்ந்து எண்ணிப்பார்த்து—பல முற்போக்கான திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வருகிற இந்த அரசு எதையோ செய்யத் தவறியதாகச் சொல்கிறோமே, மத்திய அரசாங்கம் இந்த அவசரகால நிலையில் என்ன என்ன காரியங் களைச் செய்துகொண்டு வருகிறது என்பதையும் உன்னிப்பாகச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இது இந்த அரசைக் குறைகூறவேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட தீர்மானமே தவிர வேறு அல்ல என்று சொல்லி, இந்தக் கண்டனத் தீர்மானத்தை எதிர்த்து அமர்கிறேன். வணக்கம்.

* திரு. எம். சுரேந்திரன்: உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த அரசு மீது கண்டனத்தைத் தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து இரண்டொரு கருத்துக் களைக் கூறவிரும்புகிறேன்.

[திரு. எம். சுரேந்திரன்] [1975 அக்டோபர் 30

இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது கண்டனம் வந்திருக்கிறது. ஆனால் இங்கே பேசிய பல நண்பர்கள் மற்றவர்கள் எல்லாம் சரியாகச் செய்தார்களா, இவற்றை எல்லாம் ஏன் அவர்கள் செய்யக் கூடாது என்ற முறையில் பேசியதைத்தான் நான் கேட்டேன். மற்றவர்கள் செய்யக் கூடாதா என்ற கேள்விக்கும், இந்தத் தீர்மானத்திற்கும் சம்பந்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மற்றவர்கள் செய்யவில்லை. ஆகவே நாங்களும் செய்யமாட்டோம் என்ற அளவில்தான் வாதம் அமைந்திருந்தது என்பதை நான் முதலில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, கட்சியும் அரசாங்கமும் ஒன்று என்ற நிலையிலே இந்த அரசாங்கத்தை நடத்திக்கொண்டுத்தான் இந்த திராவிட முன்னேற்றக் கழகம் வெகு நாளாகச் செயல்படுகிறது என்றுதான் அதற்குப் பொருள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், இந்த அமைச்சரவையின் முதலமைச்சருமாக இருக்கக்கூடிய திரு. கருணாநிதி அவர்கள் இந்த அரசும் கட்சியும் ஒனறு என்று இணைக்ககக்கூடிய வகையிலே மற்றவர்கள் அப்படிக் கருதவேண்டும். அப்படி நடக்கவேண்டுமென்று கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் நாம் அனுபவபூர்வமாகப் பார்த்துக்கொண்டு வருகின்ற ஒன்றாகும்.

இதேபோன்று ஒரு சமயத்திலே கேரள மாநிலத்திலே நிலைமை இருந்தது. அங்கே மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி நடந்துகொண்டிருந்தபோது ஆட்சியும் கட்சியும் ஒன்று என்ற முறையிலேதான் செயல்பட்டுக்கொண்டிருந்தார்கள். அப்படியிருந்தாலும்கூட அங்கே கட்சியிலே இருக்கிறவர்கள் அரசாங்கமும் கட்சியும் ஒன்று என்று கூறியதால் வருகின்ற லாபத்தை கட்சிக்கே பயன்படுத்தினார்கள், ஆனால் இங்கே மாறுபட்ட நிலையில் திராவிட முன்னேற்றக் கழகமும் அரசும் ஒன்று என்று சொல்வதால் கட்சிக்கு வரக்கூடிய லாபத்தைவிட உறுப்பினர்களுக்கு அதிகமான லாபம் உண்டாக்கக் கூடிய முறையைக் கையாள்கிறார்கள். ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் நடத்திக்கொண்டு போக வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.



1975 அக்டோபர் 30] [திரு. எம். சுரேந்திரன்]

இதற்கு முன்னாலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள், கட்சி வேறு, ஆட்சி வேறு என்று சொல்லியிருந்தார்கள் என்பது என்னுடைய ஞாபகத்திலே இருக்கிறது. ஜனநாயகக் கோட்பாடுகளினால் ஆட்சிக்கு வருகின்ற அமைப்புகள் காரியங்களைச் செய்வதில் கையாள்கின்ற கோட்பாடுகளில் நடைமுறைகளில் வேறுபாடுகள் இருக்கின்றன. இங்கே நடப்பதும் ஜனநாயகம் தான், கேரளாவில் நடப்பதும் ஜனநாயகம்தான், நம்முடைய அண்ணா அவர்கள் ஆட்சியும் கட்சியும் வேறு என்று சொன்னதும் ஜனநாயகம்தான். இப்படி ஜனநாயகத்தைப் பற்றிப் பல்வேறு கோட்பாடுகள், செயல்முறைகள் நாட்டிலே இருக்கின்றன. எதிர்க் கட்சிகாரர்களுக்கு ஜனநாயகம் எது என்றால் தங்களுக்கு விருப்பம் இல்லாத அரசு நடந்துக்கொண்டிருக்கும்போது, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை ராஜினாமா செய்ய வைக்கக்கூடிய நிலைமைக்குக் கொண்டுபோய் அந்த மந்திரிசபையைக் கவிழ்ப்பது தான் ஜனநாயகம் என்று சொல்கிறார்கள். அந்த முறையிலே தான் காரியத்தைச் செய்தார்கள்.

ஆகவே, ஜனநாயகத்தை ஜனநாயகக் கோட்பாடுகளை ஜனநாயக நடைமுறைகளை அவர்கள் விருப்பம்போல் அந்தந்த நேரங்களுக்கேற்றாற்போல்தான் வைத்துக்கொள்கிறார்கள் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

முஸ்லீம் கட்சியை எடுத்துக்கொண்டால் அவசரநிலைபற்றி பாராளுமன்றத்திலே சட்டம் வந்தபோது அதை ஆதரித்தார்கள், அதேபோன்று கேரளாவிலே உள்ள அரசுடன் முஸ்லீம் கட்சி இணைந்து செயல்படுகிறது, பாராளுமன்றத்திலே உள்ள முஸ்லீம் லீக் கட்சி அங்கே செய்யப்படுகிற காரியங்களுக்கு ஒத்துழைப்புத் தருகிறது. ஆனால் இங்கே இருக்கிற முஸ்லீம் லீக் கட்சி—அதனுடைய செயலாளர் திரு. லத்தீப் அவர்கள்தான் என்று நினைக்கிறேன்—செயலாளர் எங்களுடைய முறை வேறுமாதிரியானது, இங்கே தமிழன் என்கிறார், இங்கே தமிழன் என்பதும் ஆகவே வேறு முஸ்லீம் லீக் கட்சி என்பதும், கன்னடம் பேசுகின்றவர்கள் வைத்துக்கொண்டு இருப்பது வேறு கட்சி

என்பதும், தெலுங்கு பேசிக்கொண்டிருக்கிறவர்கள் வைத்து இருப்பது வேறு கட்சி என்பதும், மலையாளம் பேசுகிறவர்கள் வைத்திருப்பது வேறு கட்சி என்பதும் எல்லாம் சேர்ந்து முஸ்லீம் லீக் கட்சி என்று எண்ணிக்கொண்டு பேசுகிறார்கள். தமிழ் பேசுகின்ற முஸ்லீம் லீக் கட்சியினரின் கொள்கை ஒரு மாதிரியானதாகவும் மலையாளம் பேசுகின்ற முஸ்லீம் லீக் கட்சியினரின் கொள்கை ஒரு மாதிரியானதாகவும் உருது பேசுகின்ற முஸ்லீம் லீக் கட்சியினரின் கொள்கை ஒரு மாதிரியானதாகவும் இப்படி முஸ்லீம் லீக் வைத்திருக்கிறோம் என்ற முறையிலே நினைத்துக் கொண்டு பேசுகிறார்கள். . . .

திரு. எம். ஏ. லத்தீப்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். . . .

திரு. எம். சுரேந்திரன்: நான் அனுமதிக்கவில்லை, நான் கேட்டபோது அனுமதிக்கப்படவில்லை. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார் . .

திரு. எம். ஏ. லத்தீப்: நான் பேசாததை எல்லாம் அவர் சொல்லி உள் நோக்கம் வைத்துப் பேசிக்கொண்டிருக்கிறார். நான் பேசியது கேரளாவில் இருப்பது வேறு தமிழ்நாட்டில் இருப்பது வேறு என்ற முறையிலே பேசவில்லை. தமிழ்நாட்டு தலைமைக்கு எங்களுடைய கட்சித் தலைமைக்கு கேரளாவிலிருந்து ஆள்கொண்டு வரவேண்டியதில்லை. கேரளாவிலிருந்து தலைமையைத் தமிழ்நாட்டிற்கு இறக்குமதி செய்ய தேவையில்லை, இங்கே இருப்பவர்களே தலைவராக இருக்கிறார்கள் என்ற முறையிலே சொன்னேன். எங்களுக்குள் எந்தவிதமான பாகுபாடும் இல்லை, முஸ்லீம் லீக் என்பது ஒன்றுதான். அங்கே அவர்களை ஆதரிக்கிறோம், இங்கே இவர்களை ஆதரிக்கிறோம் அவ்வளவுதான்.

திரு. எம். சுரேந்திரன்: இதேமாதிரி லத்தீப் பேசியபோது நான் விளக்கம் கேட்க விரும்பினேன், ஆனால் என்னை அனுமதிக்கவில்லை. . . .



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. லத்தீப் அவர்களுடைய பேச்சுக்குப் போக வேண்டாம், நீங்கள் பேசி முடியுங்கள் நேரமாகிறது.

திரு. எம். சுரேந்திரன்: முஸ்லீம் லீக் கொள்கையைப் பொறுத்தவரையில் இங்கே ஒரு கொள்கை, அங்கே ஒரு கொள்கை என்ற முறையிலே அவர்கள் பேசுகிறார்கள் என்பதைத்தான் சொன்னேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஜனநாயகத்திற்கு விரோதமான செயல் என்று கணித்து ஒரு தீர்மானத்தைப் போட்டதற்குப் பிறகு என்ன செய்தார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். அரசியல் சட்டத்திலே வழிமுறைகள் இருக்கின்றன, அந்த முறைப்படித் தான் அவசரநிலை வந்திருக்கிறதே தவிர ஏதோ இந்திரா காந்தி கொண்டுவந்தார்கள் என்றோ ஜனாதிபதி கொண்டுவந்தார்கள் என்றோ சொல்வது சரியல்ல.

நேற்று பேசிய திரு. சுப்பு அவர்கள் கூடச்சொன்னார்கள். கட்சிகளை விமர்சிப்பது நியாயமானது, நான் அதை ஆட்சேபிக்கவில்லை, அரசியல் கட்சிகள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு, விமர்சிப்பதற்கு, உரிமை இருக்கிறது. இந்த அரசு அரசியல் சட்டத்தின் அடிப்படையிலே அதை ஏற்றுக் கொண்டு தான் தோன்றியிருக்கிறது. ஆகவே, அரசியல் சட்டத்திற்கு இந்த அரசு மதிப்புக் கொடுக்கவேண்டும், மரியாதை காட்ட வேண்டும். அதற்கு நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். அந்தக் கடமைகளையெல்லாம் உணர்ந்துதான் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள்.

கட்சி போட்ட தீர்மானத்திற்குப் பிறகு ஆட்சியும் கட்சியும் ஒன்று என்று சொன்னீர்கள், அப்படியானால் உண்மையாகவே உடனே சட்ட மன்றத்தைக்கூட்டி சிக்கிம் சேர்க்கப்படுவதற்கு சட்ட மன்றத்தைக் கூட்டியதைப்போல ஜனாதிபதி பிரகடனம் செய்த அவசரச் சட்டம் தவறானது என்று தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியிருந்தால் நீங்கள் உங்கள் கொள்கையிலே உறுதியாக இருக்கிறீர்கள், தீர்மானத்தில் உறுதியாக

இருக்கிறீர்கள் என்று எடுத்துக் கொள்ள முடியும். ஆனால் அந்த மாதிரி செய்யவில்லை. அப்படிச் செய்தால் அரசியல் சட்டத்திற்கு விரோதமானது. உங்களுடைய பதவி காலாவதியாகிவிடும் என்பதால் கொண்டுவரவில்லை.

அதேமாதிரி சட்டமன்றத்தைக் கூட்டாமல் இருக்கிறீர்கள் ஆறுமாதங்களுக்கு சட்டமன்றத்தைக் கூட்டவில்லையென்றால் இந்த சபை தானாகவே காலாவதியாகும் என்ற காரணத்தால் கூட்டியிருக்கிறீர்கள் இப்போது. உங்களுக்கு ஜனநாயகத்திலே விருப்பு இருக்கிறதா இல்லையா என்ற கேள்வியில்லை. ஒரு ஜனநாயகத்திலே ஒரு ஆட்சி மட்டும் வேறுமாதிரியாக நடந்து கொள்ளமுடியாது என்று தெரிவிப்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். அலகாபாத் தீர்ப்பு வந்தவுடன் இந்திராகாந்தி ராஜிநாமா செய்து ஒரு உதாரணமாக நடந்தால் நான் மகிழ்ச்சியடைவேன் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதாக செய்திவந்தது ஆனால் அது அவர்களுடைய ஆசைதானே தவிர கொள்கையாக இருக்கமுடியாது.

ஏற்கனவே இந்த மன்றத்திலே மதியழகன் சபாநாயகராக இருந்தபோது உதவிசபாநாயகரை ஒரு நாற்காலிப் பக்கத்தில் போட்டு, அதிலே உட்காரவைத்து இந்தச் சபையை நடத்தியதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். (மணியடிக்கப்பட்டது) இந்தத் தீர்மானம் நியாயமானது. ஆதரிக்கவேண்டியது, நான் இதை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, இந்த கண்டனத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். ஜூன் 26-ஆம் தேதி அவசரப் பிரகடனம் செய்யப்பட்டது. ஜூலை 1-ம் தேதி 20 அம்சத் திட்டம் வெளியிடப்பட்டது. இரண்டும் தனித்தனியானது அல்ல ஒருங்கிணைந்த இன்டக்ரேடட் பாயின்ட் தான். எமர்ஜென்ஸிக்கு என்ன காரணம்?

It is integrated point.

தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பாராளுமன்றத்திற்கும் அதை ஆதரிக்கக்கூடிய மக்களுக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடி. ஒரு சிறு குரூப் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிசபையைக் கவிழ்த்து





அவர்கள் அதைக் கைப்பற்ற வேண்டுமென்று போட்ட திட்டம் தான் இந்த எமர்ஜன்ஸிக்கு அடிப்படை. அதற்கு ஆதாரம் மத்திய சர்க்கார் வைத்திருக்கிற ஒயிட் பேப்பர், டேப் ரிக்கார்டர், அதுபோக தனியாக வைத்திருக்கக்கூடிய ஆதாரங்கள், அதற்குப் பிறகு 24, 25, பேர்கள் சேர்ந்து நடத்திய சதித் திட்டம். தி. மு. க. வும், இடதுசாரிக் கட்சிகளும் பார்வையாளர்கள் என்ற முறையிலே சென்றனர். அந்தத் திட்டத்தைத் தீட்டியவர் காந்தி கொலை வழக்கில் 9-வது ஆளாக இருந்த நானாதேஷ்முக் என்பவர். ராம்லீலா கிரவுண்டில் நடந்த திட்டத்திலெல்லாம் அவர் ஈடுபட்டார். அதாவது இந்து மகாசபையைச் சேர்ந்தவர்களும், ஆர். எஸ். எஸ். இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் காமராஜரைக் கொலை செய்வதற்குத் தீ வைத்தார்கள் என்பது தெரியும். காந்தீயம் பேசுகின்ற, காமராஜரின் பக்தர்களாக இருக்கிறவர்கள் இப்படிப் பேசுவது சரியல்ல. ஆகவே, இராமலீலா கிரவுண்டில் அந்த ஸ்தாபனத்தின் திட்டம் என்ன? சுப்ரீம் கோர்ட் ஜட்ஜைப் பார்த்து, 'Don't Sit on the Bench' இராணுவத்தைப் பார்த்து போலீசைப் பார்த்து, 'You should not obey the moral orders of the Government. You should obey our orders or else you will be severly punished' இதெல்லாம் நமக்குத் தெரியும்.

அதுமட்டுமல்ல, சத்தியாக்கிரகம் 29-ம் தேதி, 28-ஆம் தேதி மத்திய அரசாங்கத்தின் சிப்பந்திகளும் மற்றவர்களும் பெரிய அளவிலே செய்ய வேண்டும், சத்தியாக்கிரகத்தைப் பெரிய அளவில் நடத்த வேண்டும், இந்திரா காந்தியைக் கேரோ செய்ய வேண்டும், முடிந்தால் கைது செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்குமேல் என்ன வேண்டும்? இந்திரா காந்தி அவர்கள் ஆஸ்திரேலியா டெலிவிஷனில் பேட்டி கொடுத்த பொழுது, "என்னையும், என் குடும்பத்தாரையும் கொலை செய்யத் திட்டம் இருக்கிறது, அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன" என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப் பல முறை சொல்லப்பட்டிருக்கிறது.

இது உள்நாட்டில் புறப்பட்ட சதி மட்டுமல்ல, இந்த நிலைமை ஏன் வருகிறது? இண்டரிமாக சுப்ரீம் கோர்ட் தீர்மானம் செய்திருக்கிறது, இந்திரா காந்தி தொடர்ந்து இருக்கலாம் என்று.

[திரு. என். கே. பழனிச்சாமி] [1975 அக்டோபர் 30

அதற்குப் பிறகு ஏன் இராஜினுமா செய்ய வேண்டும்? சீக்கிரத்திலே பொதுத் தேர்தல் வருகிறது. அந்தப் பொதுத் தேர்தல் வரையில் காத்திருக்கக் கூடாதா? ஏன் இம்மாதிரி பலாத்காரம் செய்து அரசாங்கத்தைக் கலைக்க முயற்சி செய்ய வேண்டும் அரசாங்கத்தைத் தாழ்மைப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இப்படிச் செய்ய வேண்டுமா? எந்தக் கட்சியிலும் சேராத நடுநிலைமைக் கொள்கையை மாற்றியாக வேண்டுமென்று ஏகாதிபத்திய நாடுகளும், உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளும் முயலுகின்றன.

ரூஸ்வெல்ட் காலத்திலேயிருந்து அமெரிக்காவில் எமர்ஜென்சி இருக்கிறது. அது ஒரு பெரிய ஜனநாயக நாடு, அந்த நாட்டிலே கூட அந்த எமர்ஜென்சி ஒரு நிமிஷம்கூட வாபஸ் செய்யப்படவில்லை. ஆனால் இங்கே அப்படி அல்ல. இங்கே ஜனநாயகம் புதைந்துவிட்டது என்று சொல்கிறார்கள். இந்திய மக்கள் அனுபவித்து வந்த ஜனநாயகப் போர்வை போய்விட்டது, இன்றைக்கு மோசமான நிலை இருக்கிறது என்று கூறுகிறார்கள்.

அமெரிக்கா, சைனு ஆகிய இரு நாடுகளும் பாகிஸ்தானுக்கு ஏராளமான ஆயுதங்களைத் தந்திருக்கின்றன. இது எதற்கு? இந்தியாவை இந்தோநேஷியாவிலேயிருந்தும், தாய்லாந்திலேயிருந்தும் காப்பாற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளா இது? அல்லது வேறு எந்த நாட்டிலேயிருந்தும் நம் நாட்டைக் காப்பாற்றுவதற்காகவா? இல்லை, இந்தியாவின் மீது நிர்ப்பந்தம் கொடுக்கத்தான்.

ஆகவேதான் ஜெயப்பிரகாஷ் நாராயணன், மொரார்ஜி தேசாய் முதலியவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். மூன்று பேர் சி.ஐ.ஏ. என்ற அமெரிக்க ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இது கூட்டுச் சதி. ஏகாதிபத்தியவாதிகளும், உள்நாட்டிலுள்ள பிற்போக்கு வாதிகளும் சேர்ந்து நடத்திய சதி. இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட சிவியில், பங்களா தேஷில் டீ-ஸ்டபிலேசேஷன் மூலமாக ஜனநாயகம் வளர்ந்ததா? 94 பங்கு மக்கள் முஜீபர் ரகுமானை ஆதரித்தார்கள். ஒரு சிலர் நடு இரவிலே அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். அதனால் அந்த நாடு எப்படி இருக்கிறது? அங்கே ஜனநாயகம் வளர்கிறதா? அதே போன்ற நிலைமை இந்த நாட்டிலேயும் வர வேண்டுமென்று விரும்புகிறீர்களா? அதைத்தான் கேட்கிறேன்.



1975 அக்டோபர் 30] [திரு. என். கே. பழனிசாமி]

இந்த இருபது அம்சத் திட்டம் என்ன? பிற்போக்குவாதிகள் They are thriving on the discontent of the masses. அந்த பேஸை ஒழிக்க வேண்டும். அதற்கு எல்லா மாநில அரசுகளுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அவசரச் சட்டம் வந்தபிறகு 'ஸ்பைரல் இன் பிரைசஸ்', 'பிளாக் மார்க்கெட்டிங்', 'ஸ்பெக்குலேடிவ் மார்க்கெட்டிங்' எல்லாம் ஒழிக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, கள்ளக் கடத்தல்காரர்களை கோர்ட் விடுதலை செய்வது தடுக்கப்பட்டது. கள்ளப் பணம் வெளியே கொண்டுவரப்பட்டிருக்கிறது; பூராவும் கொண்டு வரப்பட்டது என்று சொல்லவில்லை, ஆனால், அதிக அளவில் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இன்னொரு பக்கத்தில், அந்நியச் செலாவணியைத் தவிர்க்க 'டீலிங்கிங் ஆஃப் ரூபீஸ் வித் ஸ்டெர்லிங்' மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தமாதிரி நடவடிக்கையெடுத்து இருக்கிறார்கள். போனஸ் குறைக்கப்பட்டிருக்கிறது. Ninth Schedule வரும் என்று சொன்னார்கள்.

நேற்று சுப்பு அவர்கள் சொன்னார்கள், ஆனால் நான் சொல்கிறேன், 9 வருஷங்களாக ஆட்சி நடத்துகிறீர்கள். உங்கள் ஸ்டேட் பிளானிங் கமிஷன் ஒரு அறிக்கையை வைத்திருக்கிறது. பாவர்ட்டி லைனுக்கு கீழே 100-க்கு 40 பங்கு இந்தியாவிலே வாழ்கிறார்கள், அவர்களுக்கு ஒருவேளைகூட சாப்பாடு இல்லை, ஆனால் தமிழ்நாட்டில் 100-க்கு 52 பேர் நாலேகால் கோடி ஜனத்தொகையில் இரண்டரை கோடி பேர் இன்றைக்கு இரண்டு வேளை சாப்பிட்டுவிட்டு ஒரு வேளைக்கு சாப்பாடு இல்லை என்று கையை வைத்துக்கொண்டு தூங்கும் நிலையிருக்கிறது.

ஒன்பது வருஷ ஆட்சியில் எவ்வளவோ சாதனைகள் செய்திருக்கிறோம் என்று சொல்கிறீர்களே, இதற்கு என்ன செய்திருக்கிறீர்கள்? இது இருபது அம்சத் திட்டத்திலே இல்லையா?

நிலச் சீர்திருத்தத்தை எடுத்துக்கொண்டால் நில வரி அடிப்படையிலே தனிப்பட்ட ஆட்களுக்கு இவ்வளவு என்பதன் காரணமாக என்னவாயிற்று? 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று காங்கிரஸ்காரர்கள் காலத்தில் வைத்திருந்தார்கள், ஆனால் இன்றைக்கு 40 ஏக்கருக்கு அதிகமாக ஆகியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, மத்திய சர்க்கார் கொடுத்திருக்கும் 9 வது ஷெட்யூலில் சேர்க்க வேண்டுமென்பதற்குக் கூட, அதற்குத் தகுந்தமாதிரி திருத்த வேண்டும். அப்படித் திருத்தாமல் இருந்தால் தகராறு தான் ஏற்படுமே தவிர நிலச் சீர்திருத்தம் ஏற்படாது, கோர்ட்டுக் குத்தான் போகும்.

தஞ்சாவூரில் பட்டுக்கோட்டையில் ஜனார்த்தனம் செட்டியார் என்பவருக்கு இருப்பது என்று சொல்வது ஸ்டாண்டர்ட் ஏக்கர் 15 தான், ஆனால் அவர் கந்தாயம் செலுத்துவது, நிலவரி செலுத்துவது 4,000 ரூபாய்.

அதுமட்டுமல்லாமல், வேறு எவ்வளவோ உதாரணங்களைச் சொல்ல முடியும். சமீபத்திலே சுப்ரீம் கோர்ட்டிலே This can uired எடுக்கலாம் என்று சொல்லி, நிலமில்லாத விவசாயி களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

கண்ணன்தேவன் எஸ்டேட்டில் இருப்பதை எடுத்தீர்களா? குத்தகைதாரர்களை வெளியேற்றக்கூடாது என்று கூடப் போட முடியும். (மணியடிக்கப்பட்டது).

திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு ஆசைப்படு கிறேன்.

இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்களைப் பொறுத்தமட்டில் பிரதமர் அவர்களாலே அறிவிக்கப்பட்ட இருபது அம்சத் திட்டத்தை இந்த அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்ற அளவிற்கு இந்தக் கண்டனத் தீர்மானம் இந்த அவையிலே முன் மொழியப்பட்டிருக்கின்றது. கடந்த இரண்டு நாட்களாக இந்தக் கண்டனத் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்தக் கண்டனத் தீர்மானத்தை அவையிலே கொண்டு வருவதற்கான அனுமதியைப் பெறுவதற்காக இந்தக் கண்டனத் தீர்மானத்திற்குத் தங்களுடைய ஆதரவைத் தந்த ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச்



சேர்ந்தவர்களும், சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இந்த மன்றத்திலே தங்களுடைய கருத்துக்களைக் கூறிவிட்டு, இந்தக் கண்டனத் தீர்மானத்தைப் பொறுத்தமட்டில் நடுநிலைமை வகிப்பதாக நழுவிச் சென்றிருக்கிறார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நேற்றும் அதற்கு முன்தினமும் இந்த விவாதத்திலே கலந்துகொண்ட எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மதிப்பிற்குரிய சீனிவாசன் அவர்களும், மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்களும் எதற் காக இந்தக் கண்டனத் தீர்மானத்தை அண்ணா திராவிட முன் னேற்றக் கழகம் ஆதரிக்கிறது என்கின்ற கருத்துக்களை ஆதாரங்க ளோடு வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

இந்த அவையிலே கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருந் தாலும் இங்கே பல்வேறு உறுப்பினர்கள் இன்றைய தினம் நாட்டிலே பிரகடனப்படுத்தப்பட்டு அமலிலிருக்கும் அவசரக் காலச் சட்டத்தைப்பற்றி தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்திலே அவசரக் காலச் சட்டத்தைப் பொறுத்தமட்டில் தெளிவான, விளக்கமான கருத் துக்களை எடுத்துச் சொல்வார்கள் என்று நாங்களெல்லாம் எதிர்பார்த்தோம்.

[முற்பகல் 11-30]

ஆனால், எப்படி அவைக்கு வெளியிலே குழப்பமான நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இருந்துகொண் டிருக்கிறார்களோ அதே குழப்ப நிலையில்தான் இந்த அவையிலே கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள். இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

குடியரசுத் தலைவர் அவர்களால் அவசர காலச் சட்டம் பிரகட னப்படுத்தப்பட்ட உடன் ஒரு வார காலத்தில் செயற்குழுவைக் கூட்டி இந்த அவசர கால பிரகடனத்தை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றிய திராவிட முன்னேற்றக் கழகம் பின்னாலே தாங்கள் செய்தது தவறு என்பதைப் புரிந்து கொண்டார்களோ என்ன காரணமோ தெரியவில்லை; அல்லது இந்த அவசர காலச் சட்டத்

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1975 அக்டோபர் 30

தினால் ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்களுக்கு ஆதாயம் இருக்கிறது அல்லது லாபம் இருக்கிறது என்ற எண்ணத்தின் அடிப்படையிலோ என்னவோ அதனை ஆதரிக்கத் தொடங்கினார்கள்; பின்னாலே தங்களுடைய கருத்துக்களை மாற்றிக் கொண்டார்கள். எப்படியோ மாற்றிக் கொண்டார்கள் என்பதற்காக எங்களைப் பொறுத்த மட்டில் நாங்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறோம்.

ஆனால் நேற்றையதினம் இந்த மன்றத்திலே உரையாற்றிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் மதிப்பிற்குரிய கே. சுப்பு அவர்கள், அவசர காலச் சட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகின்ற நேரத்தில் இந்த அவசர காலச் சட்டத்தை நேர்முகமாக எதிர்ப்பதற்கு வழி இல்லாமல் அதை மறைமுகமாகக் கிண்டல் செய்கிற வகையில்—

'It is not Maintenance of Internal Security Act, but it is Maintenance of Indira Security Act'.

என்றுகூடச் சொன்னார்கள்.

MR. DEPUTY SPEAKER: That was stated by the hon. Member, Thiru Ponnappa Nadar and not by the hon. Member, Thiru Suppu.

திரு. க. உரொ. எட்மண்ட்: மதிப்பிற்குரிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதேபோன்று திரு. சுப்பு அவர்கள் பேசும்போதும் அவசர காலச் சட்டத்தை மறைமுகமாக எதிர்க்கின்ற அளவிலேதான் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் உரையாற்றிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் இரண்டு பேருமே வழக்கறிஞர்கள்; சட்டத்தைப் படித்துத் தேறியவர்கள். இந்திய அரசியல் சட்டத்தை நல்ல முறையில் படித்திருக்கிறார்கள். அந்த இந்திய அரசியல் சட்டத்தினுடைய 352-வது விதியின்கீழ் இந்த அவசரக் காலச் சட்டத்தைக் குடியரசுத் தலைவர் அவர்கள் பிரகடனப் படுத்தியிருக்கிறார்களேயொழிய அதை இந்திரா காந்தி அவர்கள் பிரகடனப்படுத்தவில்லை என்பதை இந்தக் கருத்துக்கள் தெரிந்த உறுப்பினர்கள் புரிந்து வைத்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.



1975 அக்டோபர் 30] [திரு. க. உரொ. எட்மண்ட்]

அந்த அளவுக்கு இந்த நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருக்கிற குடியரசுத் தலைவர் அவர்கள் நாட்டிலே 'அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தவேண்டிய தேவை அகில இந்திய ரீதியிலோ அல்லது இந்தியத் துணைக் கண்டத்தில் ஏதோ ஒரு பகுதியிலோ ஏற்பட்டிருக்கிறது என்று கருதுவார்களானால் அவசர காலச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறது என்பதைத்தான் இந்திய அரசியல் சட்டத்தின் 352-வது ஆர்டிகிள் நமக்கு மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. நான் சட்டத்தின் அடிப்படையில் இந்த அவையில் சொல்லவேண்டுமென்றால் குடியரசுத் தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர காலச் சட்டத்தை இந்த நாட்டிலே இருக்கின்ற எந்தக் குடிமகனுக்கும் எதிர்ப்பதற்கு உரிமை இல்லை. அந்த அளவுக்கு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அரசியல் சட்டத்தின் கீழ் நாம் பெருமளவில் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, இந்திரா காந்தி அவர்கள் இந்த அவசர காலச் சட்டத்தைப் பிறப்பிக்கவில்லை: நாட்டின் நலன் கருதி, பாதுகாப்பு கருதி, நாட்டின் முன்னேற்றம் கருதி, இந்த அவசர காலச் சட்டத்தைக் குடியரசுத் தலைவர் அவர்கள் இன்றையதினம் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள்.

இன்றையதினம் இங்கே பேசிய நம்முடைய மதிப்பிற்குரிய தமிழ்நாடு கம்யூனிஸ்டு கட்சியின் தலைவராக இருக்கக் கூடிய பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள்கூட அலகாபாத் தீர்ப்பைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அலகாபாத் தீர்ப்புக்கு பின்னால்தான் இந்த அவசர காலச் சட்டத்தை, இந்திரா காந்தியைக் காப்பாற்றிக்கொள்ள அல்லது இந்திரா காந்தி ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் இந்திய நாட்டின் பிரதம மந்திரி அலகாபாத் நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பின்னால் தன்னுடைய பதவியை ராஜினாமாச் செய்திருக்க வேண்டுமென்று சொன்னதை வழிமொழிந்து இந்த அவையிலே அவர்கள் பேசியிருக்கிறார்கள். அது தான் வேடிக்கையாக இருக்கிறது.

பெரியவர் மணலி கந்தசாமி போன்றவர்கள் நீண்டகால அரசியல் பாரம்பரியம் மிக்கவர்கள். அரசியல் சட்டத்தை மிகத் தெளிவாகக் கற்றுத் தேர்ந்தவர்கள். இந்திய அரசியல் சட்டத்திலே நாட்டு மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அடிப்படை

[திரு. க. உரா. எட்மண்ட்] [1975 அக்டோபர் 30

உரிமைகளின் அடிப்படையில் ஒரு நீதிமன்றத்திலே தனக்குச் சாதகமான தீர்ப்புக் கிடைக்கவில்லை அல்லது நியாயமான தீர்ப்புக் கிடைக்கவில்லை என்று கருதுகிற எந்தக் குடிமகனும் அந்தத் தீர்ப்பை எதிர்த்து அதற்கு மேலே இருக்கிற நீதிமன்றத்திற்குப் போக உரிமை இருக்கிறது என்பது வரையறுக்கப் பட்டிருக்கிறது. இந்திரா காந்தி அம்மையாரைப் பொறுத்த வரை அவர்கள் இந்த நாட்டின் பிரதம மந்திரியாக இருக் கலாம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அதைத்தான் சொல்லியிருந்தார்கள். இந்திரா காந்தி அம்மை யாரைத் தனியாகப் பிரித்துப் பேசியதாகப் பொருள்படப் பேசி யிருக்கிறார்கள். இந்திரா காந்தி அம்மையார் அலகாபாத் நீதி மன்றத்தின் தீர்ப்புக்குப் பின்னால் பதவி விலகி நாட்டு மக்களுக்கு முன்மாதிரியாக இருந்திருக்கக் கூடாதா என்றுதான் முதல மைச்சர் அவர்கள் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆக, முன் மாதிரியாக இருந்திருக்கக்கூடாதா என்று முதலமைச்சர் அவர்கள் கருத்தைச் சொல்லும்போது . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 'இருந்திருக்கக் கூடாதா?' என்ற முறையில் சொல்லவில்லை. என்னுடைய பதில் 'இப்போது என்ன முடிவு எடுக்கிறார்களோ அதுதான் இந்தியாவின் எதிர்காலத் திற்கு முன்மாதிரியாக இருக்கும்' என்றுதான் சொன்னேன்.

**திரு. க. உரா. எட்மண்ட்:** அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கி றார்கள். முன் மாதிரியாக இந்த நாட்டின் பிரதம மந்திரி இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டில் இருக்கும் 40 கோடி மக்களுடைய எண்ணிக்கையில் அவர்களும் ஒருவர் என்ற அடிப்படையில் மாத்திரம் அல்ல; இந்த நாட்டிலே இருக்கும் 40 கோடி மக்களுடைய தலைவிதியை நிர்ணயிக்கும் தலைமைப் பொறுப்பில் இருக்கும் காரணத்தால் என்றும் சொன்னார்கள்.

எங்களுக்கு அதுதான் விளங்கவில்லை. இந்திரா காந்தி நாட்டின் பிரதம மந்திரியாக இருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுடைய தேர்தல் செல்லாது என்று அலகாபாத் உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்த பின்னால் அரசியல் சட்டத்தின் அடிப்படையில், நம்மு டைய பீப்பிள்ஸ் ரெப்ரசன்டேஷன் ஆக்ட் அடிப்படையில் இந்தியா விலே இருக்கிற உச்ச நீதி மன்றத்திலே அப்பீல் செய்வதற்கு உரிமை இருக்கும்போது அவர்களுக்கு இருக்கின்ற உரிமையை எப்படி எடுக்க முடியும் என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.



1975 அக்டோபர் 30]

**திரு. இராம. அரங்கண்ணல்:** இதே நியாயத்தை அமைச்சராக இருந்த டாக்டர் சென்னா ரெட்டி அவர்களுக்கு ஏன் காண்பிக்க வில்லை என்றுதான் அவர் பேசினார்.

**திரு. க. உரா. எட்மண்ட்:** நான் சட்டத்தின் அடிப்படையில், நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமையின் அடிப் படையில் . . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** டாக்டர் சென்னா ரெட்டி பல மந்திரிகளில் ஒரு மந்திரி. ஆனால் இந்திரா காந்தி பிரதம மந்திரி. இந்த வேறுபாட்டை உணரவேண்டும்.

**திரு. க. உரா. எட்மண்ட்:** அந்த விளக்கத்திற்குள் செல்ல நான் தயாராக இல்லை.

நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். அலகாபாத் நீதி மன்றத் தீர்ப்புப் பிரகாரம் இந்திரா காந்தி அம்மையார் அவர்களு டைய தேர்தல் செல்லாது, ஆகவே, அவர்கள் ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று கேட்கிற திராவிட முன்னேற்றக் கழகம், உங்களு டைய கட்சி உறுப்பினர் வலம்புரி ஜான் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று சென்னையிலே இருக் கின்ற, தமிழ் நாட்டில் இருக்கின்ற உயர்நீதி மன்றம் தீர்ப்பளித் திருக்கிறது—இந்திரா காந்தி பற்றிய தீர்ப்பைப் படித்துப் பார்த் தால் அதிலே பல்வேறு டெக்னிகாலிடிஸ் இருக்கின்றன; ஆனால் வலம்புரி ஜான் வழக்கு அப்படி அல்ல. 30 வயது நிரம்பாத . . .

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, வலம்புரி ஜான் பார்லிமென்ட் கூட்டத்திற்குப் போக முடியாது; ஆனால் அலகாபாத் தீர்ப்புக்குப் பிறகு அங்கே அந்த நிலைமை இருக்கிறதா?

**திரு. க. உரா. எட்மண்ட்:** அங்கே கூட, டிஸ்க்ரிமினேஷன் பாரபட்சம் எதுவும் காட்டவில்லை.

Thiru Valampuri John is still a Member of the Rajya Sabha but he cannot participate in the discussion or in the voting. In the case of the Prime Minister, Thirumathi Indira Gandhi, she can continue as Prime Minister and as Prime Minister she can answer certain questions and also take part in the discussions in the Parliament but she cannot participate in the voting.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1975 அக்டோபர் 30

என்றுதான் தீர்ப்பே கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த விளக்கத்திற்குள்ளே நான் போக வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் கேட்பதெல்லாம், பிரதம மந்திரி தேர்தல் செல்லாது என்று தீர்ப்பு வந்தவுடனேயே ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று சொன்ன திராவிட முன்னேற்றக் கழகம் 30 வயது தாண்டாத உங்களுடைய கட்சியைச் சார்ந்த வலம்புரி ஜான் அவர்களை 30 வயது தாண்டியதாக . . . .

MR. DEPUTY SPEAKER : That case is pending before the Supreme Court. It is *sub-judice*. The matter decided by the High Court has not reached finality as an appeal is pending. So, let not the hon. Member probe into the matter. . .

THIRU G. R. EDMUND : I am not probing into the facts of the case. . . . . .

MR. DEPUTY SPEAKER : But, you are coming to the conclusion that he has not reached 30 years.

THIRU G. R. EDMUND : That is a matter under dispute.

THIRU P. SEENIVASAN : He is not going into the facts of the case. He is quoting the judgment.

MR. DEPUTY SPEAKER : I understand it. But the intention of the hon. Member, Thiru Edmund is that Thiru Valampuri John has not attained 30 years. But the matter is pending before the Supreme Court.



1975 அக்டோபர் 30] [திரு. க. உரொ. எட்மண்ட்]

இதற்கு மேல் சுப்ரீம்கோர்ட்டுக்குப் போக வேண்டிய தேவையில்லை, நீ ராஜ்ய சபாவிற்குப் போகவேண்டிய தேவை இல்லை" என்று அவரை நிறுத்தியிருக்க வேண்டும்.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் ராஜ்ய சபாவில் உறுப்பினராக இருக்கிற வலம்புரி ஜானுக்கு என்ன உரிமை இருக்கிறதோ அதே உரிமை இந்திய அரசியல் சட்ட அடிப்படையில் இந்த நாட்டினுடைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கும் இருக்கிறது என்பதை வலியுறுத்தத்தான் இந்தக் கருத்தை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு அலகாபாத் தீர்ப்புப் பற்றிச் சொன்னார்கள். அலகாபாத் தீர்ப்புக்குப் பிறகு மொரார்ஜி தேசாய் அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். பெரியவர் மணலி அவர்கள் கூடச் சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் சட்டசபை உறுப்பினர்கள் வீடுகளுக்கு முன்னால் சென்று ராஜிநாமா செய்ய வேண்டும் என்று சொல்லவில்லையா என்று கேட்டார்கள். நாங்கள் சென்று ஒரு மகஜர்தான் கொடுத்தோம். "இந்த ஆட்சியில் ஊழல் இருக்கிறது, அந்த ஆளும் கட்சியில் நீங்கள் உறுப்பினராக இருக்கிறீர்கள், இந்தக் கட்சியில் நீங்கள் இருப்பது எங்களுக்குப் பிடிக்கவில்லை, ஆகவே, எங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நீங்கள் உங்களுடைய பதவியை ராஜிநாமா செய்யவேண்டும்" என்று ஒரு வேண்டுகோள் தான் விடுத்தோம்.

It was only a request. It was only a memorandum to the members of the constituencies. We never forced them to resign.

ஆனால், மொரார்ஜி தேசாய் என்ன செய்தார்கள்? நாங்கள் வீடுகளுக்கு முன்னால் மறியல் செய்வோம் என்றார்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் வீடுகளுக்கு வெளியே வராமல் தடுப்போம் என்றார்கள், சட்டமன்றத்திற்குப் போக முடியாத அளவிற்கு மறியல் செய்வோம் என்றார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அப்படிச் சொல்லவில்லை. நாங்கள் என்ன செய்தோம்? ஒரு மகஜர் கொடுத்துவிட்டு வரவேண்டும் என்றோம். அது கூட கூட்டமாகப் போகக்கூடாது. ஊர்வலமாகப் போங்கள். அவர்களின் வீட்டிற்கு இவ்வளவு தூரத்தில் நின்று ஊர்வலத்தை

நிறுத்தி குறிப்பிட்ட ஐந்து பேர்கள் போங்கள் என்றுதான் சொன்னோம். அப்படிச் சொல்லக்கூடிய உரிமை, ஜனநாயகத்தில் அந்த உரிமை நாட்டில் இருக்கிற எல்லோருக்கும் இருக்கிறது.

திரு. அ. தேவேந்திரன் : ஒரு மகஜர் கொடுப்பார்கள் என்றால் அந்த மகஜரில் சில வாக்கியங்கள் இருக்கும். இந்த ஆட்சி ஊழல் ஆட்சி, எனவே, இந்த ஆட்சியில் இருப்பவர்கள் ராஜி நாமா செய்யவேண்டும் என்று நீங்கள் வற்புறுத்தினீர்கள். அப்படியல்லாது நீங்கள் அந்தக் கட்சியிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டு வரவேண்டும் என்று சொல்லி சும்மா வந்து விடவில்லை, பலயிடங்களில் கலாட்டா செய்தார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : கலாட்டா செய்தார்கள் என்று வழக்கு போட்டிருக்கிறீர்கள். அது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கைவந்த கலை. எவ்வளவோ அன்று திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மீது வழக்கு போட்டிருக்கிறீர்கள். விரும்பத்தகாத வாசகங்களை எழுதியிருக்கிறார்கள் என்று அவர்கள் மீது வழக்குகள் போட்டிருக்கிறார்கள். அவை நீதி மன்றத்தில் இருக்கின்றன. என் கையில் பட்டியலே இருக்கிறது, எவ்வளவு வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன என்று. எங்கள் கட்சி பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் Sction 500 I.P.C. read with section 198 (*b*) and 199 (*c*) of Cr. P.C. -ன் கீழ் எவ்வளவு வழக்குகள் இருக்கின்றன என்றால் ஏறத்தாழ இருபது வழக்குகள் ஒரே நீதிமன்றத்தில் இருக்கின்றன. அது உங்களுக்குக் கை வந்த கலை. அவர்கள் ஏதாவது செய்திருந்தால் வழக்கு போடுங்கள்.

ஆனால், மொரார்ஜி தேசாய் என்ன சொன்னார்கள்? இந்திரா காந்தி வீட்டு முன்னால் போய் மறியல் செய்வோம். அவர்களை வீட்டை விட்டு வெளியே வராமல் தடுப்போம் என்றெல்லாம் சொன்ன பிறகு நாட்டில் ஒரு அவசர கால நிலை ஏற்பட்டிருக்கிறது என்று குடியரசுத் தலைவர் அவர்கள் அவசர கால உத்தரவைப் பிறப்பித்ததற்குப் பின்னால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் இந்த நாட்டில் இருக்கிற ஒவ்வொரு குடிமகனின் கடமையுமாகும். அதில் நீங்கள் மாறுபட்ட கருத்து உள்ளவர்களாக இருப்பீர்களேயானால் அரசியல் சட்டத்தை





மாற்றுவதற்கு, அதில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருக்கிறார்கள், அவர்களை வைத்து திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு வேண்டிய முயற்சிகளில் நீங்கள் ஈடுபடவேண்டும். அரசியல் சட்டத்தில் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. If the President is satisfied. இவ்வளவுதான் சொல்லப்பட்டிருக்கிறது

The President need not say the reasons. He need not show the reasons. If the President is satisfied that a grave emergency exists whereby the security of India or any part or territory thereof is threatened, whether by war or by external aggression or by internal disturbance, he may by proclamation make a declaration to that effect. என்று சொல்லியிருக்கிறது. ஆகவே, குடியரசுத் தலைவர் அவர்கள் அவசர காலச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்ள வேண்டியது நம் கடமை. எல்லா மாநிலங்களையும் போல் இந்த மாநிலமும் அதை ஏற்று இந்த சட்டமன்றத்தில் . . . . . .

திரு. கு. காமாட்சி : குடியரசுத் தலைவர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தார்களா? அல்லது பிரதமர் அவர்களின் ஆலோசனையின்பேரில் கொண்டுவரப்பட்டதா? சட்டத்தில் என்ன சொல்லியிருக்கிறது? அதையும் கூறுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : இந்திரா காந்தி அவர்களின் ஆலோசனை அவர்களுக்குத் தேவை இல்லை. நாம் எல்லாம் சேர்ந்துதான் அவர்களுக்கு வாக்களித்தோம். ஆகவே, அந்த சந்தேகம் மதிப்பிற்குரிய காமாட்சி அவர்களுக்கு வரவேண்டியதில்லை.

சுப்பு அவர்கள் சொன்னார்கள். அவசர காலச் சட்டத்தினால் சுதந்திரம் பறிபோய் விடுகிறது என்றெல்லாம் சொன்னார்கள். மத்தியில் கல்வி அமைச்சராக இருந்த திரு. சாக்ளா அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். அந்தப் புத்தகத்தின் பெயர், Roses in December,

[திரு. க. உரா. எட்மண்ட்] [1975 அக்டோபர் 30

அதில் அவர்கள் வாழ்க்கை வரலாறை எழுதியிருக்கிறார்கள். அதில் ஒரு இடத்தில் சுதந்திரத்தைப் பற்றி, ஜனநாயகத்தைப் பற்றி மிக அழகாக அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

I believe in democracy because democracy means freedom, not an unbridled freedom but freedom consistent with order and security of the State.

என்று சாக்ளா அவர்கள் எழுதியிருக்கிறார்கள். சாக்ளா அவர்களைப் பற்றியும் அவர்களுடைய சட்ட அறிவைப் பற்றியும் நான் இந்த அவைக்கு அதிகமாக எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லையென்று கருதுகிறேன். எல்லாம் அவர்களே தெரிந்து வைத்திருப்பார்கள். அவர்கள் எழுதியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் எங்கெங்கு சுதந்திரம் இருக்கிறதோ,

Everyman's freedom will be curtailed when that impinges with the freedom and independence of others.

என்று தான் ஒவ்வொரு நாட்டின் சுதந்திரத் தத்துவமும் இருக்கிறது. எங்கெங்கு சுதந்திரம் இருக்கிறதோ, எங்கெங்கு ஜனநாயகம் இருக்கிறதோ அங்கெல்லாம் இப்படித்தான் இருக்கிறது. அதற்காகத்தான் அரசியல் சட்டம் வைத்திருக்கிறோம். மதுவிலக்குத் திட்டத்தை ஏன் கொண்டுவருகிறீர்கள்? அரசியல் சட்டத்தில் ஃபண்டமண்டல் ரைட்ஸில் சொல்லப்பட்டிருக்கிறது

Freedom of trade

எந்தத் தொழிலையும் யாரும் செய்யலாம். அதற்காக யாரோ ஒருவன் எந்த வியாபாரத்தையும் செய்ய எனக்கு உரிமை இருக்கிறது என்று கூறி சாராய வியாபாரம் செய்வேன் என்று சொன்னால் விடுவீர்களா? விடப்போவதில்லை. அங்கு சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் குடியரசுத் தலைவர் அவர்கள் நாட்டின் சூழ்நிலைகளை மனதில் கொண்டு, இந்த நாட்டிற்கு வரவிருக்கிற ஆபத்தை மனதில் கொண்டு இந்த அவசரக் காலச் சட்டத்தைப் பிரகடப்படுத்தியிருக்கிறார்கள். என்ன ஆபத்து வந்துவிட்டது என்று பெரியவர் மணலி அவர்கள் கேட்டார்கள்.



1975 அக்டோபர் 30]

MR. DEPUTY SPEAKER: The hon. Member has already taken 20 minutes.

THIRU G. R. EDMUND: Mr. Speaker has allotted me forty minutes. His notes can be seen.

தமிழில் ஒரு பழமொழி உண்டு, வருமுன் காப்போன், வந்தபின் காப்போன், என்று. வந்த பிறகு பரிகாரம் தேடுவதைவிட இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது, அப்படி உருவெடுப்பதற்கு முன்னால் அதைத் தடுத்தாகவேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த அவசரக் காலச் சட்டத்தை குடியரசுத் தலைவர் அவர்கள் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். இந்த அவசரக் காலச் சட்டத்தை யார் எதிர்க்கிறார்கள்? யார் எதிர்க்க முடியும்? நாட்டுமக்கள்தான் சொல்லவேண்டும் என்று மணலி அவர்கள் சொன்னார்கள். நாட்டு மக்கள் எல்லோரும் சொல்கிறார்கள், அவசரக் காலச் சட்டம் தேவைதான் என்று. காரணம், அவர்களுக்கு தேவைப்படுகிறது. அதனால் லாபம், நன்மை இருக்கிறது; இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்குக் கூட அதனால் ஆதாயம் இருக்கிறது. இல்லை என்றால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு மாவட்ட அமைப்பாளராக இருக்கும் ஜேப்பியார் அவர்களைப் பிடித்து அந்தச் சட்டத்தின்கீழ் உள்ளே போடுவார்களா என்று கேட்கிறேன். உங்களுடைய ஸ்டேட்மெண்டைப் பார்க்கிறோம். ஏதோ சாராயம் காய்ச்சினான் என்பதற்காக மிசா சட்டத்தில் பிடித்து இருக்கிறீர்கள். வாதத்திற்காக அவன் சாராயம் காய்ச்சினான் என்று வைத்துக்கொண்டாலும் — காய்ச்சினானா இல்லையா என்ற அந்த விவாதத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை — நான் கேட்பதெல்லாம் சாராயம் காய்ச்சுபவனை — நேற்று கூட சுப்பு அவர்கள் கிண்டல் பேசினார்கள் — அவர் ஒரு வழக்கறிஞர் — அவருக்கு நன்றாகத் தெரியும் — சாராயம் காய்ச்சுபவனை பிடிக்க மிசா வேண்டுமா?

You have got the Prohibition Act.

அந்தச் சட்டத்தின் கீழே போடலாம்.

திரு. க. சுப்பு: அதே மாதிரி நாட்டிற்கு எதிராகப் பேசுபவர்களை, தேச விரோதமான செயல்களில் ஈடுபடுபவர்களைப் பிடிக்கவும் ஏற்கனவே சட்டம் இருக்கிறது. ஐ.பி.சி.-யில் இருக்

கிறது. அந்தச் சட்டத்தின்கீழ் குற்றம் சாட்டி தண்டனை அளிக்கலாம். அவரும் ஒரு வழக்கறிஞர் அவருக்கும் இது தெரியும். அப்படியிருக்கும்போது, அவர்களைப் பிடிக்க ஒரு மிசா சட்டம் வேண்டுமா ?

**திரு. க. உரொ. எட்மண்ட் :** சுப்பு அவர்கள் வழக்கறிஞர் — அவர்களுக்குத் தெரியும் — இ.பி.கோ. சட்டப்படி அவர்களை கைது செய்தால் ஜாமினில் வெளியே வந்து விடுவார்கள். நீதி மன்றத்திற்குப் போகலாம். வழக்கறிஞர்களை வைத்து வழக்கு பொய் என்று கூட நிரூபித்து விடலாம். சில நேரங்களில் உண்மையான குற்றங்கள் தள்ளப்படுகின்றன. பொய்யான சம்பவங்கள் உண்மை என்று கருதப்பட்டு, தண்டனை கொடுக்கப் பட்டிருக்கிறது.. அப்படிச் செய்தால் வழக்கறிஞரை வைத்து வழக்காடலாம், வழக்கு பொய் என்று நிரூபித்துக் காட்டலாம். ஆகவே அவர்கள் வெளியே வந்து தப்பித்துக்கொள்வதற்கு இதிலே இடம் இருக்கிறது. மிசா எதற்கு என்றால், அப்படிப் பட்டவர்கள் நீதிமன்றத்திற்குப் போக முடியாது. இப்படிப் பட்ட நிலையை உருவாக்குவதன் மூலம் தீய சக்திகளை அடக்க முடியும், ஒடுக்க முடியும் என்ற நிர்ப்பந்தம் இருப்பதால் தான் மிசா சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

மது விலக்குச் சட்டத்தை மீறியவன் உள்ளே போனால் என்ன, வெளியே இருந்தால் என்ன, திரும்பி வந்தால் அவன் மறுபடியும் சாராயம் காய்ச்சுவான், அவ்வளவுதான். பூர்ண மதுவிலக்கா இங்கே இருக்கிறது; பர்மிஷன் கொடுக்கவில்லையா ?

transport of liquor, distillation of arrack

எல்லாம் இருக்கிறது. அவுன்ஸ் அவுன்ஸாக விற்பதற்கு உரிமை கொடுத்து இருக்கிறீர்கள் . . . .

**திரு. க. சுப்பு :** கள்ளக்கடத்தல் செய்வது மிசா சட்டம் வந்தவுடன் அடியோடு நின்று போய் விட்டதா ? அது நின்று போகவில்லை என்று மத்திய அமைச்சர் முகர்ஜி அவர்களே சொல்லியிருக்கிறார்கள். தீவிரமாக நடக்கிறது என்று சொல்லி யிருக்கிறார்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** நம்முடைய மாநிலத்தில் கூட Suppression of Immoral Traffic Act, Food Adulteration Act என்று இருக்கிறது. கலப்படம் நின்று விட்டதா ? விபச்சாரம்



ஒழிந்து விட்டதா ? அது தான் நடந்து கொண்டு இருக்கிறதே, சட்டமே வேண்டாம் என்று சொல்லி விடமுடியுமா ? ஒரு சட்டம் இருந்தால்தான் தவறு செய்பவர்களை தண்டிக்க முடியும். அப்போதுதான் தண்டனைக்கு பயந்து குற்றங்களும் குறையும்.

ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன், ஒருவன் கொலை செய்து விடுகிறான் அதற்கு தண்டனை கிடையாது என்று சொல்லி, அதற்கு சட்டம் வேண்டாம் என்று சொல்லி விட்டால் என்ன நடக்கும் ? கொலைகள் நடந்து கொண்டே இருக்கும். சட்டம் வைத்திருப்பதன் மூலம் அவற்றைக் குறைக்க முடியும். அந்த அடிப்படையில் தான் சட்டம் வைத்து இருக்கிறோம். அதே அடிப்படையில்தான் மிசா கொண்டு வந்து இருக்கிறார்கள். அது உங்களுக்கு ஆதாயம்தான். ஆகவே தான் முதலிலே எதிர்த் தீர்கள், பின்னாலே ஆதரிக்க ஆரம்பித்தீர்கள்.

இன்னொரு சந்தோஷம், 1976-ல் தேர்தல் வராது. அது 1978-79-க்குப் போகலாம், இன்னும் ஓரிரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆளும் கட்சி என்று இருக்க முடியாதா, அமைச்சரவையை நீடிக்க முடியாதா என்ற நப்பாசை. ஆகவே, முதலில் எதிர்த்த நீங்கள், பின்னாலே அதற்கு ஆதரவு கொடுக்க ஆரம்பித்தீர்கள்.

இன்று மிசா சட்டத்தை நாட்டு மக்கள் வரவேற்கிறார்கள். எதனாலே ? விலைவாசி இறங்கி இருக்கிறது. தமிழ் நாட்டில் ஓரிரு மாதங்களுக்கு முன்னால் விலைவாசிகள் இறங்கின. பின்னாலே என்ன காரணத்தாலோ தெரியவில்லை, மீண்டும் பழைய படி விலையேறிவிட்டது. ரூ. 5 படியரிசி விற்றது ரூ. 3 என்று ஆயிற்று, மிசா சட்டம் வந்த பிறகு. பிறகு அவர்கள் பார்த் தார்கள், தமிழ் நாட்டில் இருக்கும் அரசாங்கம் அந்தச் சட்டத்தை ஒழுங்கான முறையில் பயன்படுத்தவில்லை, ஆகவே, நமக்கு பயம்இல்லை, பாதுகாப்பு இருக்கிறது என்று எண்ணி, ரூ. 3-க்கு விற்று வந்த அரிசியை ரூ. 5 என்று உயர்த்தி விட்டார்கள். இன்று ரூ. 6 படியரிசி என்று விற்கிறது. பழைய கந்தனே பரவாயில்லை, புதுக் கந்தனுக்கு என்று சொல்லும் அளவிற்கு நிலைமை இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

இருபது அம்ச திட்டத்தைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்திரா காந்தி அவர்கள் கொடுத்து இருக்கும் 20 அம்சத் திட்டத்தில் நாங்கள் எதை நிறைவேற்றவில்லை,

எல்லாவற்றையும் நிறைவேற்றிவிட்டோம் என்று சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கண்டன தீர்மானத்திற்கு ஆதரவு கொடுக்கிறது என்றால், அதற்கு காரணம்; நீங்கள் முழுமையாக எதையும் செய்யவில்லை, உள்ளத் தூய்மையோடு செய்யவில்லை. 20 அம்சத் திட்டத்தில் முதல் அம்சம்

Continuance of steps to bring down prices of essential commodities. அதைச் செய்து இருக்கிறீர்களா? நெம்பர் ஒன் நீங்கள் செய்ததாகச் சொல்ல முடியுமா?

Streamlining of Production, Procurement and distribution of essential commodities, strict economy in Government expenditure. செய்து இருக்கிறீர்களா? எனக்கு இன்றைக்குத்தான் சோழவந்தானில் இருந்து ஒரு கடிதம் வந்து இருக்கிறது. அங்கே பிட் நோட்டீஸ் போட்டு இருக்கிறார்கள். "சோழவந்தான் வட்டார விவசாயப் பெருங்குடி மக்களின் அவல நிலை". இதில் "அண்ணா தி.மு.க., தி.மு.க., இந்திய தேசியக் காங்கிரஸ், ஸ்தாபன காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), மற்றும் விவசாயப் பெருங்குடி மக்கள்" என்று போட்டு இருக்கிறார்கள். இதில் என்ன போட்டு இருக்கிறார்கள்? அதை நீங்கள் படிக்க வேண்டும். எதற்காகச் சொல்கிறேன் என்றால்

Food production and procurement

நீங்கள் 'ப்ரொக்யூர்மென்ட்' எப்படிச் செய்கிறீர்கள் என்பதற்கு உங்களுடைய கட்சிக்காரர்களே ஒரு மகஜரை அளித்து இருக்கிறார்கள். அதில் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால் "இருந்தபோதிலும் விவசாயிகள் கஷ்ட, நஷ்டங்களைப் பாராது லெவி போடுவதற்கு முன்வந்தபோதிலும், அரசு ரெவின்யூ அதிகாரிகள், சிவில் சப்ளை அதிகாரிகள் சரிவர ஒத்துழைக்காத காரணத்தால் லெவி அளக்க முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள்." திரு. சுப்பு கேட்க வேண்டும். அடுத்தாற்போல் சொல்லுகிறார்கள், "லெவி நெல்லை அரசு உத்தரவுப்படி (ந. க. எண். 13533/75 தாலுகா அலுவலகம் 1—10—75) எக்காரணத்தைக் கொண்டும் லெவி கொள்முதல் களத்திலேயே செய்ய வேண்டும் என்று இருந்தும் கிராமச் சாவடிக்கு விவசாயிகளே கொண்டு வந்து லெவி நெல்லைக் கொடுக்க வேண்டும், என்று விவசாயிகளை கஷ்டப்படுத்துகிறார்கள்" This is the way of procurement by Government.





அடுத்தாற்போல் சொல்கிறார்கள்—அதைவிட இது ரொம்ப மோசம் "தற்போது அறுவடை சாதாரணமான நிலையில் இருக்கும்பொழுதே சரிவர லெவி அளக்காமலும் அவ்வாறே அளந்தாலும் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யாமலும் இருக்கிறார்கள். தீபாவளிக்குப் பின் அறுவடை மும்முரமாக இருக்கும்பொழுது லெவி அளந்து உபரி நெல்லை எவ்வாறு விற்கப் போகின்றோம்? என்று மனம் குமுறிய நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள்."

நெம்பர் ஒன் செய்து இருக்கிறீர்களா? ப்ரொக்யூர்மென்ட் ஒழுங்காகச் செய்யவில்லை, விலைவாசியைக் குறைத்து இருக்கிறீர்களா? சொல்ல முடியுமா? வீடு கட்டியிருக்கிறோம், என்னவெல்லாம் செய்து இருக்கிறோம்! ஐயோ பாவம். குடியிருப்பதற்கு வீடு கட்டிக் கொடுத்து இருக்கிறீர்கள், வயிற்றில் உணவு இல்லை என்றால் வீடு எதற்கு? இந்த நாட்டு மக்களுக்கு உணவு தேவை.

தமிழ்நாட்டில் உற்பத்தி 56 லட்சம் டன் அரிசி. வறட்சி காலத்தில் கூட 46 லட்சம் டன் அரிசி தமிழ்நாட்டில் உற்பத்தியாகியிருக்கிறது என்று கூறுகிறார்கள். காங்கிரஸ்காரர்கள் காலத்தில், அண்ணா காலத்தில் 36 லட்சம் டன் தான் அரிசி உற்பத்தி. அண்ணா காலத்தில் 1.25 ரூ. படியரிசி விற்றது. ஆனால் 56 லட்சம் டன் அரிசி, வறட்சி காலத்தில் 46 லட்சம் டன் அரிசி என்று விளைந்திருந்தபோதிலும், உங்கள் ஆட்சி காலத்தில் அரிசி விலை என்ன? 6 ரூபாய். குறைக்க முடிந்ததா? கிராமத்தில் இருப்பவர்கள் அரிசி விலையைக் குறைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள், பெரிய பெரிய பண்டங்கள் விலையைக் குறைக்க வேண்டுமென்று கேட்கவில்லை, பாதாம் பருப்பு விலை குறைக்க வேண்டுமென்று கேட்கவில்லை.

நான் சுப்பு அவர்களைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன், ஒரு காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி சித்தாந்தத்தில் இருந்தீர்கள், இன்று திராவிட முன்னேற்றக் கழக சித்தாந்தத்தில் இருக்கிறீர்கள், கொஞ்சம் மனதைத் தொட்டுப் பார்த்துச் சொல்ல வேண்டும்.

திரு. க. சுப்பு: நான் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து இருக்கிறேன். இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறேன். கம்யூனிஸ்ட் சித்தாந்தம் தான் தி.மு.க. சித்தாந்தம். உங்களுடைய சித்தாந்தம் என்ன சொல்லுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: எங்களுடைய சித்தாந்தம், அண்ணாவின் சித்தாந்தம். (சிரிப்பு) ஏன் சிரிக்கிறீர்கள்? அண்ணாவின் கொள்கை என்றால் அவ்வளவு கேலிக்குரியது என்று நினைக்கிறீர்களா? (குறுக்கீடு) நீங்கள் இதையெல்லாம் செய்யவில்லை.

(நண்பகல் 12-00)

அதேபோல

Implementation of agricultural land ceilings and systematic distribution of surplus lands and completion of land records

என்ன செய்திருக்கிறீர்கள். ஏதோ 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறைத்திருக்கிறீர்கள். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது. சர்க்கரை என்று காகிதத்திலே எழுதி நக்கிப் பார்த்தால் இனிக்குமா. நிச்சயமாக இனிக்காது. பல திட்டங்கள் ஏட்டளவிலே இருக்கின்றனவே தவிர அந்தத் திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறீர்களா என்பதைத்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கின்றது. அதேபோல

House site for landless and weaker sections.

அதற்கு என்ன செய்திருக்கிறீர்கள்? ஊருக்கு வெளியே பார்த்தால் புறம்போக்கு நிலங்களை யார் வளைத்துப் போட்டிருக்கிறார்கள்? ஆளும் கட்சியைச் சார்ந்த மாவட்டச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள்.

திரு. நா. வீராசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய உரையிலே புறம்போக்கு நிலங்களை மாவட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் வளைத்துப்





போட்டிருக்கிறார்கள் என்று பொதுவாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப் பொதுவாகச் சொல்லக்கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஒரு அறிக்கையை விட்டு முன்னேற்றக் கழக எம்.எல்.ஏக்கள் யாராக இருந்தாலும் புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து கொண்டிருந்தால் அவற்றைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டுமென்று சொல்லி இருந்தார்கள். அதன்படி பல எம்.எல்.ஏக்கள் அந்த நிலங்களை திருப்பிக் கொடுத்து விட்டார்கள். எந்த மாவட்டத் தலைவர், எந்த வட்டச் செயலாளர் எந்த நிலத்தைப் பட்டா செய்து கொண்டிருக்கிறார் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமே தவிர, பொறுப்பற்ற முறையிலே சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எட்மண்ட் அவர்கள் சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் 5 நிமிஷங்கள்தான் இருக்கின்றன.

திரு. க. உரொ. எட்மண்ட்: சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு புறம்போக்கு நிலங்களைப் பட்டா போட்டுக் கொண்டிருந்தார்கள், இப்போது அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள் என்று திரு. வீராசாமி அவர்கள் ஒப்புக் கொண்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: நான் திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏக்கள் புறம்போக்கு நிலங்களை பட்டா போட்டுக் கொண்டதாக ஒப்புக்கொள்ளவில்லை. நீங்கள் தான் அப்படிப் பேசினீர்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: உங்கள் கட்சிக்காரர்கள்தான் புறம்போக்கு நிலங்களைப் பட்டா போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த மன்றத்தில் தவறான குற்றச்சாட்டினை மாண்புமிகு உறுப்பினர் கூறிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களை அமருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, யாருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : எல்லாம் ஏட்டளவில்தான் இருக்கிறது.

பெரியவர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் சொன்னார்கள், இந்தத் திட்டம் புதிது ஒன்றும் இல்லை, எல்லாம் ஏற்கெனவே இருக்கிறது என்று. இது எல்லோருக்கும் தெரியும். 20 அம்சத் திட்டங்கள் ஒன்றும் சந்திர மண்டலத்தில் இருந்து இந்திரா காந்தியால் கொண்டு வரப்படவில்லை. ஏற்கெனவே இந்த நாட்டில் இருக்கிற திட்டங்கள்தான்; எண்ணத்திலே இருந்தன, ஏட்டளவில் இருந்தன, நடைமுறைக்கு வரவில்லை. ஆனால் இன்றைக்கு அவசர நிலைச் சட்டம் பிரகடனப்படுத்தப் பட்டு இருபது அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு ஏற்கெனவே கொண்டு வரப்படாத மாநிலங்களில் இது அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும், ஏற்கெனவே கொண்டு வரப்பட்டுள்ள மாநிலங்களில் இன்னும் வேகமாக இது செயல்படுத்தப்பட வேண்டும், தமிழ்நாட்டைப் போன்ற மாநிலங்களில், திட்டங்கள் கொண்டு வரப்பட்டு ஆனால் செயல்படுத்தப்படாமல் இருக்கிற மாநிலங்களில் உடனடியாக இது செயலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதற்காகத் தான் இந்த 20 அம்சத் திட்டத்தினை பிரதமர் இந்திரா காந்தியவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பொறுத்த வரையில் நான் மிகத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் இந்தத் திட்டத்தில் எதையும் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒழுங்காகச் செய்யவில்லை, இன்னும் சொல்ல வேண்டுமென்றால் நியாயமான முறையில், நேர்மையான முறையில் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்த அமைச்சரவை தண்டனைக்குரியது, இந்த அமைச்சரவை கண்டனத்திற்குரியது என்ற காரணத்தினால்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தக் கண்டனத் தீர்மானத்திற்குத் தன்னுடைய ஆதரவினைத் தெரிவித்துக் கொள்கிறது என்று கூறி, என்னுடைய உரையினை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.





* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அருமை நண்பர் மாரிமுத்து அவர்களால் கொண்டுவரப்பட்டு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களால் வழி மொழியப் பெற்று இந்த அவையினுடைய விவாதத்திற்கு உட்பட்ட கண்டனத் தீர்மானம் குறித்து இந்த அவையில் 20-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய ஆளும் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மாரிமுத்து மொத்தப் பெருந்தன்மை யோடு, கூறிய கருத்துக்கள் நம்மாலே ஏற்றுக்கொள்ளக் கூடியவைகளா அல்லவா என்ற நிலைமை இருந்தபோதிலும், தன்னுடைய கருத்துக்களை நெகிழ்வோடு கூறினார்கள். வழிமொழிந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் மிக்க நிதானமாக இந்தக் கண்டனத் தீர்மானத்தில் தன்னுடைய கருத்துக்களை எடுத்து வைத்து, மாநில அரசின்மீது அவர் காட்ட வேண்டிய குற்றங்கள் என்றாலும், அல்லது மத்திய அரசின் போக்கில் அவருக்குப் பிடிக்காத அம்சங்கள் இருந்தாலும் அவைகளையும் மிக்க நிதானமாக இந்த மன்றத்திலே இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்ததன் மூலம் எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

கண்டனத் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்று அதற்கான மரபுகள் கடைப்பிடிக்கப்பட்டு, பொதுவாகத் தீர்மானம் வருவதற்கு, அதிலும் குறிப்பாக இதுபோன்ற தீர்மானம் வருவதற்கு எத்தனை உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள் என்கிற எண்ணிக்கையின் அடிப்படைக்குத் தாங்கள் உதவியதாகக் கூறி, ஆனால் கண்டனத் தீர்மானத்திற்கு மாறுபட்ட கருத்துக்களை நம்முடைய அகில இந்திய நிறுவனக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், சட்டப் பேரவை சுதந்திராக் கட்சியினுடைய தலைவர் நண்பர் வெங்கடசாமி அவர்களும் நடுநிலையோடுதான் தாங்கள் இந்தத் தீர்மானத்திலே இருக்கப் போவதாகச் சொல்லி மிக உருக்கமான ஆனால் உண்மைகள் கோடிட்டுக் காட்டப்பட்ட வகையில் தங்களுடைய உரையை நிகழ்த்தி இருக்கிறார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் அருமை நண்பர் எட்மண்ட் அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞராக நின்று சட்ட நுணுக்கங்களை மாத்திரம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு இந்தக் கண்டனத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள்.

ஆளும் கட்சியினுடைய தோழமைக் கட்சிகளாக இருக்கிற முஸ்லீம் லீக், ஃபார்வெர்டு பிளாக், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி, தமிழரசுக் கட்சி ஆகியவைகளின் சார்பிலே பேசிய அருமைத் தலைவர்களும் உறுப்பினர்களும் இந்தக் கண்டனத் தீர்மானம் எந்த வகையிலே தேவையற்றது என்பதற்கான நல்ல பல விளக்கங்களை எல்லாம் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

கண்டனத் தீர்மானத்தினுடைய வாசகமே அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பிறகு அதன் தொடர்பாக இந்திய நாட்டினுடைய பிரதம அமைச்சர் மதிப்பு மிகுந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் அறிவிக்கப்பட்ட 20 அம்சத் திட்டத்தைத் தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு நடைமுறைப்படுத்தவில்லை என்கின்ற குற்றச்சாட்டை அடிப்படையாக வைத்துத்தான் கண்டனத் தீர்மானம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதலிலே 20 அம்சத் திட்டங்கள் எவை எவை என்பதை நாம் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்பும், அவைகளை இந்த ஆட்சி ஏற்கெனவே நிறைவேற்ற தொடங்கியுள்ளதா அல்லவா என்பதற்கான விவரங்களை ஆராய்வதற்கு முன்பும், இதற்கு முன்னோடியாக சில கருத்துக்களை நான் எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலே மத்திய அரசின் சார்பிலே அறிவிக்கப்பெற்று, ஏறத்தாழ 25,000 கோடி ரூபாயில் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக அறிவித்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த பிறகு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வரைவு ஏடுகள் எல்லாம் தயாரிக்கப்பெற்று, இந்திய நாட்டின் தலைநகரத்தில் இந்தியாவிலுள்ள எல்லா மாநில





முதலமைச்சர்களும் கலந்துகொள்ளும் தேசிய வளர்ச்சிக் குழு கூட்டமும் நடைபெற்று, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்குவது என்றும் அறிவிக்கப் பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நான் முதலிலே சுட்டிக்காட்டியதைப் போல 25,000 கோடி ரூபாய் மொத்தத் தொகையாக ஒதுக்கப்பட்டது. அப்படி ஒதுக்கப்பட்ட நேரத்தில் நம்முடைய தமிழ் மாநிலத்தை மாத்திரம் கணக்கிலே எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு ஆண்டும் தரப்பட்ட மத்திய அரசினுடைய உதவி (சென்ட்ரல் அசிஸ்டன்ஸ்) என்ற அந்த வகையிலே எடுத்துக்கொண்டு பார்த்தால் ஏறத்தாழ ஐந்தாண்டுக் காலத்தில், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 200 கோடி ரூபாய் நம்முடைய மாநிலத்திற்குத் தரப்பட்டிருக்கிறது.

ஒன்றை உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது. இந்த 200 கோடி ரூபாயில் 70 சதவீதம் கடனாக நாம் திருப்பித்தர வேண்டும். அதைத் திருப்பித் தருவது எப்படி என்றால் அடுத் தாண்டு 40 கோடியோ, 50 கோடியோ தரும்போது நாம் திருப்பித் தரவேண்டிய; கடனைக் கழித்துவிட்டுத்தான் மீதத்தைத் தருவார்கள். அந்த வகையிலே நாம் அந்தக் கடனைத் திருப்பித் தந்தாக வேண்டும். இப்படி ஐந்தாண்டுக் காலத்திலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஆண்டுத் திட்டத்திற்காக மத்திய அரசு 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம் மானியமாக வும் தந்தது சற்றேறப்ப 200 கோடி ரூபாயாகும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் எவ்வளவு கோடி ரூபாய்க்கு அறிவிக்கப்பட்டது என்றால் இது 'பிக்கஸ்ட் பிளான் மிகப் பெரும் திட்டம், பிரம்மாண்டமானத் திட்டம்' என்றெல்லாம் இதற்குத் தலைப்புகள் கொடுத்து, 53,000 கோடி ரூபாய் இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று அறிவிக்கப்பட்டபோது நாம் எல்லாம் மகிழ்ச்சியடைந்தோம். ஏனென்றால் இரண்டு மடங்குக்குமேலே ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யத் தொடங்குகிறது. ஆகவே, மாநிலங்களின் தேவைகள் முழுமையாக நிறைவு செய்யப்பட இயலும் என்றெல்லாம் எண்ணினோம்.

இந்த 53,000 கோடி ரூபாய் திட்டம், அதற்கான வரைவு என்.டி.சி. கூட்டத்திலே, தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்டது. முதலமைச்சர்கள் எல்லாம் எங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னோம். இப்படி விவாதித்து இரண்டாண்டுக் காலம் ஆகிறது. இந்த இரண்டாண்டுக் காலத்திற்குப் பிறகு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய கதி என்ன என்று தெரியவில்லை.

ஐந்தாண்டுத் திட்டம் ஓவ்வோராண்டுத் திட்டம் என்கின்ற வகையிலேதான் இன்று ஒவ்வொரு மாநிலத்திற்கும் நிதியை ஒதுக்குகின்ற அளவு சுருங்கிப் போயிருக்கிறது. இந்த 53,000 கோடி ரூபாயை, அந்த இலக்கை அடைய முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டுத் திட்டத்திற்கும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டதோ அந்த அளவு தொகைதான் இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் ஒவ்வொரு ஆண்டிற்கும் நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக,

1974-75 ஆம் ஆண்டுக்கு 41 கோடி ரூபாயும்,

1975-76 ஆம் ஆண்டுக்கு 41 கோடி ரூபாயும்,

மீதி இருக்கிற மூன்று வருடங்களுக்கும் இதே நிலையில்தான் அவர்கள் நிதியை ஒதுக்கீடு செய்வார்களானால் ஐந்தாண்டுக்கும் மொத்தம் 200 கோடி ரூபாய்தான் கிடைக்கும்.

ஆக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 25,000 கோடி ரூபாயிருக்க, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 53,000 கோடியாக, இரட்டிப்பாக ஆக்கப்பட்டு, பிரம்மாண்டமான திட்டம் என்று பெரும் தலைப்புகளிலே வெளியிடப்பட்ட பிறகு, அந்தத் திட்டத்திற்கு நாம் ஏறத்தாழ 400-லிருந்து 500 கோடி ரூபாய் வரை மத்திய நிதி உதவியாக (சென்ட்ரல் அசிஸ்டன்ஸ்) கடனாகவும், மானியமாகவும் பெற வேண்டிய தொகைக்கு மாறாக 200 கோடி ரூபாய்தான் பெற இருக்கிறோம். ஆக, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டமும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்போலதான் இருக்கிறது. அவர்கள் அறிவித்தது திட்டத்தின் கதி என்ன? அது என்னவாயிற்று? அந்தக் காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே திரை விழுகிறது. நடைபெறவில்லை. அப்படியானால் ஐந்தாவது ஐந்தாண்டுத்



நாடகத்திலே 'ரோட் சீன்' வருவதைப்போல திரைவிழுகிறது 20 அம்சத் திட்டம் என்று அறிவிக்கப்படுகிறது. ஆக, 'ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காட்சி மறைந்து, 20 அம்சத் திட்டம் என்கின்ற புதிய காட்சி வருகிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டப் பலன்களை, ஒவ்வொரு மாநிலமும் மிகு நிதி பெற்று, அதாவது மிகுந்த நிதியைப் பெற்று தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றலாம், மாநில வளர்ச்சியைப் பெருக்கலாம் என்று எண்ணியிருந்த நேரத்தில் அது என்னவாயிற்று என்ற கேள்விக்கு எந்தவிதமான பதிலும் இல்லாமல், இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன்பு விவாதிக்கப்பட்ட ஒரு பெரிய திட்டத்தை எங்கோ ஒரு மூலையில் போட்டுவிட்டு இப்போது 20 அம்சத் திட்டம் என்று ஒன்றை அறிவித்திருக்கிறார்கள்.

இந்த 20 அம்சத் திட்டம் கூட 1967-ஆம் ஆண்டு காங்கிரஸ் கமிட்டி மே மாதத்திலே கூடி, 10 அம்சத் திட்டம் என்று ஒன்றை அறிவித்தார்கள். நம்முடைய நண்பர் சுப்பு அவர்கள் நேற்றைய தினம் பேசும்போது குறிப்பிட்டார்கள். அரசியல் சட்டத்திலே முகப்புக் குறிக்கோள்களிலே எவை எவை இருக்கின்றனவோ அவைகள்தான் இப்பொழுது 20 அம்சமாக உருவெடுத்திருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள்.

அதற்கிடையே 1967-ல் 10 அம்சத் திட்டம் என்று ஒரு திட்டத்தைப் பிரகடனப்படுத்தினார்கள். அவை என்னென்ன?

பாங்குகளைத் தேசிய மயமாக்குதல்—ஒன்று

இன்ஷூரன்ஸை தேசியமயமாக்குதல்—இரண்டு

மன்னர் மானியத்தை ஒழித்தல்—மூன்று

கிராமத் திட்டம், நிலச்சீர்திருத்தம்—நான்கு

நகர்ப்புறச் சொத்துக்கு உச்சவரம்பு—ஐந்து

மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்—ஆறு

ஏகபோக உரிமைக்குக் கட்டுப்பாடு செய்தல்—ஏழு

கூட்டுறவுத் துறையை விரிவுபடுத்துதல்—எட்டு

உணவு வாணிபத்தை அரசே மேற்கொள்ளுதல்—ஒன்பது

ஏற்றுமதி, இறக்குமதியில் பொருள்வாரியாக முன்னேற்றம் காணுதல்—பத்து

என்று இந்த பத்து அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்டது. இவைகளில் எவை எவை நிறைவேற்றப்பட்டன? நிறைவேற்றத் தொடங்கி எவை எவை இடையிலே முறிந்து போயின என்பதை மறந்துவிடக் கூடாது.

பாங்குகள் தேசியமயமாக்கப்படும் என்று அறிவித்தார்கள். 14 வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. அதற்குமேல் அடி-யெடுத்து வைக்கவில்லை; அதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்ஷூரன்ஸ் தேசியமயமாக்கப்பட்டது.

மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டது.

கிராமத் திட்டம், நிலச் சீர்திருத்தம்—இது இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற 20 அம்சத் திட்டத்தில் ஒன்று.

நகர்புறச் சொத்துக்கு உச்சவரம்பு--இதுவும் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற 20 அம்சத் திட்டத்தில் ஒன்று.

ஆறுவது திட்டமாக அன்றைக்குச் சொன்னது மக்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல். இது பொதுவானது. மக்கள் அடிப்படைத் தேவைகள் என்னென்ன என்று எதுவும் குறிப்பிட்டுத் தெளிவாகச் சொல்லாமல் பொதுவாகச் சொல்லப்பட்ட ஒன்று.

ஏழாவதாகச் சொல்லப்பட்டது ஏகபோக உரிமைக்குக் கட்டுப்பாடு செய்தல். அது என்ன காரணத்தாலோ இந்த 20 அம்சத் திட்டத்தில் இடம் பெறவில்லை. 10 அம்சத் திட்டத்தில் இடம் பெற்ற அந்த பாபரப்பான ஏழாவது அம்சம் இப்போது வெளியிடப்பட்ட 20 அம்சத்தில் இல்லை. அதாவது ஏகபோக உரிமைக்குக் கட்டுப்பாடு செய்தல் என்ற அந்த அம்சம் இது.

கூட்டுறவுத் துறையை விரிவுபடுத்துதல் என்பது 1967-லே அறிவிக்கப்பட்டபோதும்சரி, அதற்கு முன்பும்சரி நம்முடைய தமிழ் நாட்டிலே கூட்டுறவுத் துறை விரிவுபடுத்தப்பட்டு மேலும்





மேலும் அது இன்றைக்கு விரிவுபடுத்தப்பட்டிருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் இப்போது அவர்கள் இந்த 20 அம்சத் திட்டத்தில் கூட்டுறவுத் துறையை விட்டுவிட்டு அதற்குப் பதிலாக ரூரல் பாங்க் என்கிற ஒரு புதிய அம்சத்தைச் சேர்த்திருக்கிறார்கள். பத்து அம்சத் திட்டத்தில் உணவு வாணிபத்தை அரசு மேற்கொள்வது என்பது ஒன்பதாவது அம்சம் ஆகும். இது 1967—மே மாதத்தில் வெளியிடப்பட்ட ஒன்பதாவது அம்சம். அதன்படி கோதுமை வியாபாரத்தை அரசு மேற்கொண்டது. அரசு மேற்கொண்ட கொஞ்ச நாளைக்கெல்லாம் அது சரிப்பட்டு வரவில்லை என்பதால் அந்த அம்சத்தைக் கைவிட்டு விட்டது. உணவு வாணிபத்தை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்பதற்கு முதல் கட்டமாகக் கோதுமை வியாபாரத்தை நடத்தத் தொடங்கி அவர்களே கைவிட்டு விட்டார்கள். பிறகு ஏற்றுமதி இறக்குமதியில் பொருள்வாரி முன்னேற்றம் என்பதாகும். அதுவும் முழுமையாகச் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்தப் பத்து அம்சத் திட்டத்திற்குப் பிறகு இன்று இருபது அம்சத் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருபது அம்சத் திட்டத்தை நாங்கள் ஏற்று நடத்தவில்லை அல்லது எதிர்க்கிறோம் என்றெல்லாம் தவறான குற்றச்சாட்டுச் சொல்லப்படுகிற நேரத்தில் பத்து அம்சத் திட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய ஆதரவை அளித்திருக்கிறது என்பதற்கு ஏராளமான சான்றுகளை நாம் காணமுடியும்.

DR. H. V. HANDE : I am sorry for interrupting. Before the Hon. Chief Minister goes to the next subject, I want to make one point. The Hon. Chief Minister said that the Fifth Five-Year Plan was dropped and in its place the 20 Point Programme came. My information is that this 20 Point Programme is in addition to the Fifth Five-Year Plan and it is not in the place of the Fifth Five-Year Plan. The Fifth Five-Year Plan will continue yearwar or five year war. The 20 Point Programme is in addition to the Fifth Five-Year Plan. There can be no contradiction between the two—the 20 Point Programme and the Fifth Five-Year Plan ...

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தப் பத்து அம்சத் திட்டத்தைத் தப்பாகச் சொல்லுகிறீர்கள். மக்களின் பேசிக் நீட்ஸ், உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், இதை

ஏன் விரிவாகச் சொல்லுகிறார்கள் என்று தெரியவில்லை. கடைசியில் 'இம்போர்ட் அண்டு எக்ஸ்போர்ட்' வியாபாரம். அதை எஸ்.டி.சி. செய்கிறது. அவர்கள் கொள்கைகளை அமல் நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : This 20 Point Programme is not in lieu of the Fifth Five-Year Plan, but this is in addition to the Fifth Five-Year Plan.

நான் இதைத்தான் தெளிவுபடுத்தினேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மக்களின் அடிப்படைத் தேவைகள் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க உறையுள் என்பதை எல்லாம் நன்கறிவேன். குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. பொதுவாக 'வேக்' ஆகச் சொல்லப்பட்டிருக்கிறது என்றுதான் சொன்னேன். இதைப் புரிந்து கொள்ளவேண்டும். அப்படியென்றால் இப்போது ஒவ்வொன்றிற்கும் தனியாகச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன வந்தது? இருபது அம்சத் திட்டத்தில் அந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்பதைத்தான் விரிவாக்கிச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் பத்து அம்சத் திட்டத்தைக்கூட எதிர்க்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் இந்தப் பத்து அம்சத் திட்டத்தை அது அறிவிக்கப்பட்டபோது நாங்கள் ஆதரித்தவர்கள். பாங்குகள் தேசிய மயமாக்கப்பட்டபோது, எந்த மாநிலத்திலும் செய்யாத அளவிற்கு, 14 வங்கிகளைத் தேசியமயமாக்கிய இந்திரா காந்தி அவர்களைத் தமிழ் நாட்டிற்கு அழைத்துப் பரிசாகக் கூட 14 பொருள்களை அவர்களிடம் வழங்கினோம். இப்போது அங்கே அமர்ந்திருக்கிற அனந்தநாயகி அம்மையார் போன்றவர்கள்கூட வேறு கட்சியில் இருந்து அதைப் பார்த்து ஆத்திரப்பட்ட நேரத்தில் நாங்கள் இந்திரா காந்திக்கு வழங்கினோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : உங்கள் கட்சியைச் சேர்ந்த மேலவை உறுப்பினர் ஒருவரால்தான் அரசியல் சிக்கலே வந்தது என்பதை ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 53 ஆயிரம் கோடி ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. அதற்குத் துணையாக மேலும் உதவிகரமாக இந்த



20 அம்சத் திட்டம் இருப்பதாக டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லுகிறார்கள். நான் சொல்லுகிறேன், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் திரை போட்டுவிட்டு 20 அம்சத் திட்டம் என்ற ரோட் சீன் போடப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லுகிறேன். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 53 ஆயிரம் கோடி என்ன ஆயிற்று? அதுதான் என்னுடைய கேள்வி. அதைப் புரிந்துகொண்டால் அத்தோடு இது இணையவில்லையென்று புரிந்து கொள்ளலாம். ரூ. 53 ஆயிரம் கோடிக்குத் திட்டம் போட்டு அந்தத் தொகையை மாநிலங்களுக்குக் கொடுக்க முடியாத சூழ்நிலையில் 20 அம்சத் திட்டத்தைப் பிரகடனம் செய்துவிட்டு இதற்கு மாநிலங்களுக்கு ஆகின்ற செலவை எப்படித் தரப்போகிறார்கள் என்பதுதான் எனது அடுத்த கேள்வியாகும். அந்தக் கேள்வியின் அடிப்படையில்தான் நான் இதைத் தெரிவித்தேனேயல்லாமல் வேறு அல்ல.

இருபது அம்சத் திட்டங்கள் எவை எவை என்று ஒரு ஐந்தாறு திட்டங்களை மட்டுமே இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் கோடிட்டுக் காட்டினார்கள். முதல் திட்டமாக இன்றியமையாப் பண்டங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கவும் கொள்முதலை விரைவுபடுத்தவும், வழங்கு பணியைச் சீரமைக்கவும் அரசு பல தொடர்பு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும் என்பதே பிரதமர் வானொலியில் அறிவித்த முதல் திட்டமாகும். இது 20 அம்சத்தில் ஒரு அம்சம். நம்முடைய தமிழக அரசு இதில் கவனம் செலுத்தியதா இல்லையா? இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகுதான் கவனம் செலுத்தத் தொடங்கியதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த ஆண்டு ஜூன் திங்கள் தொடங்கி நிலவி வருகின்ற வாய்ப்பான பருவ மழையின் நிலைகளையொட்டி வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க அரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமானால் பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார்களே அந்த உற்பத்தி முனையில்கூட பொதுவாக ஆண்டு ஒன்றுக்கு விதை நெல் எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டு வந்தது என்றால் இதுவரை 9,500 டன்தான் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது.

நடப்பு வேளாண்மைப் பருவத்தில் 18 ஆயிரம் டன் விதை நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிப்பதன்மூலம் அந்தத் திட்டத்திற்கு அனுசரணையாகத் தான் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றனவே யல்லாமல் எதிரான காரியங்கள் நடைபெறவில்லை இங்கே என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

புதிய நெல் வகைகளாக ஏ.டி.டி. 31, பூசா 53 ஆகியவை அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டு ஏ.டி.டி. 31 பயிரிடப்படும் நிலப்பரப்பு 130 ஆயிரம் ஏக்கர் அளவிலும், பூசா 33 பயிரிடப் படும் நிலப்பரப்பு 56 ஆயிரம் ஏக்கர் என்ற அளவிலும் பயிரிடப் பட்டுள்ளது.

உரம், வேளாண்மை உற்பத்திக்கு மிக முக்கியமானது. பொது வாக, ஒரு ஆண்டுக்கு வழங்கப்படும் உரத்தின் அளவு இது வரையில் நமக்கிருந்த கஷ்டங்களின் காரணமாக 20,520 டன் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு ஆகஸ்டு வரையில் மட்டும் வழங்கப்பட்ட ரசாயன உரத்தின் அளவு 25,123 டன். இன்னும் மேலும் சம்பாப் பயிருக்கெல்லாம் வழங்க இருக்கிறோம். ஆகவே அந்த உரத் தட்டுப்பாடும் இல்லை. உற்பத்தி முனையில் நாம் தீவிரமாகவே இருக்கிறோம்.

அதைப் போல் பூச்சிகளால் ஏற்படுகிற தொல்லையைக் கட்டுப் படுத்தவும் அதை அறவே நீக்குவதற்கும் தெளிப்பான்களின் எண்ணிக்கையை உயர்த்தி அந்த முனையிலும் அலுவலர்கள் அயராது பணியாற்றுகிறார்கள்.

பயிர்களைப் பாதுகாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறோம். வறட்சி நேரத்தில் விவசாயிகளுக்கு உதவுகிற வகையில் டீசல் இன்ஜின்கள் வைத்துக் கொண்டால் அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்று அறிவித்து அப்படி இன்ஜின் களை வாங்கியவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கியதன் மூலம் இதுவரையில் 12,200 பேர் பயன் பெற்றிருக்கின்றனர். ஏற்கனவே அறிவித்தபடி 15,000 பேருக்கு இந்தப் பயன் செல்லத்தக்க வகையில் நாம் ரூ. 150 லட்சம் அதற்காக ஒதுக்கியிருக்கிறோம். வறட்சியால் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு இந்த மானிய உதவி எவ்வளவு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதை





விவசாயப் பெருங்குடி மக்கள் நன்றாக அறிவர். உற்பத்தி முனையில் பெருக்கப்படவேண்டுமென்று பிரதமர் அவர்கள் அறிவித்ததால் இவைகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் களுக்குக்கூடக் கொஞ்சம் உற்சாகமான விஷயமாக இராது என்றாலும் விளக்கம் தேவை என்பதற்காக இவைகளையெல்லாம் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சோள விதைகள் மட்டும் இந்த ஆண்டில் கோடைப் பருவத்தில் கோவை, நெல்லை, மதுரை, சேலத்தில் ஒரு பகுதி ஆகிய மாவட்டங் களில் 500 டன் வீரிய ஒட்டுச் சோள விதைகளும் மக்காச் சோள விதைகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஆகவே, இப்படிப்பட்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக 1974-75-ல் உற்பத்தியான அரிசி 41,66,001 டன்னாக பல இயற்கை நிலைமைகளின் காரணமாக இருந்தது. இந்த ஆண்டு இயற்கை பொய்த்துவிடாது. இந்த ஆண்டும் சென்ற ஆண்டைப் போல் கொடுமை புரிந்து விடாது என்ற நம்பிக்கையின் அடிப்படையின் பேரில் 1975-76-ல் எதிர்பார்க்கப்படும் அரிசி உற்பத்தி கடந்த ஆண்டு 41,66,001 டன்னாக இருந்தது மாறி 61 லட்சம் டன் அரிசியாக இருக்கும்.

சோளம், கம்பு, மக்காச்சோளம் ஆகியவற்றிலும் 1974-75-ல் 7,74,000 டன் உற்பத்தி இருந்ததற்கு மாறாக 1975-76-ல் எதிர்பார்க் கப்படும் உற்பத்தியின் அளவு 17 லட்சம் டன்னாகும்.

பருத்தி 1974-75-ல் 2,20,000 பேல்கள் என்ற அளவுக்கு உற்பத்தி ஆயிற்று. அது வருகிற 1975-76ல் ஏறத்தாழ 4 லட்சம் பேல்கள் என்ற அளவுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இவை நிச்சயமாக உற்பத்தியில் ஒரு வளர்ச்சியைக் காட்டும்.

(பிற்பகல் 12.30)

கரும்பைப் பற்றி நம்முடைய மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள்கூட எடுத்துச் சொன்னார்கள். நேற்றைய தினம் கூட மத்திய சர்க்காரில் இருந்து எழுதப்பட்ட கடிதங்கள் வந்திருக் கின்றன. அதில் லெவி சர்க்கரை விலையை உயர்த்த இயலாது என்று சொல்லிவிட்டார்கள். அப்படி உயர்த்த இயலாது என்று சொல்லியிருப்பது அகில இந்திய அளவிலா என்றால் இல்லை. வட்புலத்தில் இருக்கிற மாநிலங்களுக்கு உயர்த்தித் தரப்படும், ஆனால் நம்முடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டார்கள். இதன் காரணமாக கரும்பு சாகுபடி செய்கிற விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதையும், இதன் காரணமாக கரும்பு சாகுபடி குறையும் என்பதையும், தவிர்க்க முடியாத சில கஷ்ட நிலைக்கு ஆளாக நேரிடும் என்பதையும் இந்த நேரத்தில் நான் எடுத்துக் காட்டாமல் இருக்க முடியாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சர்க்கரை விலை சம்பந்தமாக லெவி சர்க்கரை என்றும், லெவிக்கு அப்பாற்பட்ட சர்க்கரை என்றும் இருப்பது சரியல்ல என்பது எங்களுடைய பொதுவான நிலை. அதை முதலமைச்சர் அவர்கள் அறிவார்கள். லெவி சர்க்கரை விலை நிர்ணயம் தமிழ்நாடு, ஆந்திரம், கர்னாடகம் ஆகியவற்றில் அதிகமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக இரண்டுக்கும் ஒரே விலை இருக்கவேண்டுமென்ற நிலையை அரசு இங்கு எடுக்குமானால் அதை ஆதரிக்க நான் தயாராய் இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் இதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அதனால்தான் திரு. தங்கமணி அவர்கள் நிதானமாக நியாயங்களை உணர்ந்து பேசினார்கள் என்று ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** அந்தக் கோரிக்கையை மத்திய சர்க்கார் நிராகரிக்கக் காரணம் ஏதாவது இருக்கிறதா? காரணங்களைக் கேட்டார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போதுதான் காரணங்களை எதற்கும் கேட்கக்கூடாதே.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். எதற்கும் கேட்கக் கூடாது என்று யாரும் சொல்லவில்லை. குதிரைக்குக் குர்ரம் என்றால் யானைக்கு அர்ரம் என்று சொல்லாதீர்கள். எதற்குக் கேட்க வேண்டும், எதற்குக் கேட்கக் கூடாது என்கிற வரையறை இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்த வரையறையை உங்களுக்குத் தேவையானதற்கு நீங்கள் பொருத்திக் கொள்ளுங்கள். எங்களுக்குத் தேவையானதற்கு நாங்கள் பொருத்திக் கொள்கிறோம்.





தலைவர் அவர்களே, கடுமையான வறட்சி நிலைமை இருந்த நேரத்தில்கூட, நம் தமிழகத்தில் உள்ள மொத்தம் 98 லட்சம் குடும்பங்களில், 52 லட்சம் குடும்பங்களுக்கு நாம்—போதிய அளவு தர முடியாவிட்டாலும்—ஓரளவு அரிசி வழங்க முயற்சிகளை மேற்கொண்டோம். அதற்கு நாம் எடுத்த நடவடிக்கைகளாக—தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் கழகத்தின் சார்பிலும், கூட்டுறவுச் சங்கங்கள் சார்பிலும், உள்ளாட்சி மன்றங்கள் நடத்துகின்ற சில்லறை விற்பனைக் கடைகள் மொத்தம் 9,926 நிலையங்களின் சார்பிலும் நாம் இந்த விநியோகத்தை, 52 லட்சம் குடும்பங்களுக்கு அரிசி வழங்குகிற இந்த ஏற்பாட்டைச் செய்து முடித்தோம்.

நகர்ப் பகுதிகளில்—500 ரூபாய்க்கு மேல் மாத வருமானம் உள்ளவர்களுக்கு—குறிப்பாக, சென்னை, கோவை போன்ற நகரங்களில் மாதம் ஒன்றுக்கு 10 கிலோ அரிசி வழங்கப்பட்டு வந்தது. அதை இப்போது 20 கிலோவாக உயர்த்தியிருக்கிறோம். அதோடு மாத்திரமில்லை. திருச்சி, சேலம் ஆகிய நகரங்களுக்கும் இந்தத் திட்டத்தை முதல் கட்டமாக நாம் விரிவுபடுத்தி இருக்கிறோம்.—பிரதமர் அறிவித்த முதல் அம்சத்திற்கு நான் அளித்த விளக்கம் இது.

இரண்டாவது அம்சம்—நில உச்சவரம்பு. "நமது மக்களில் மிகப் பெரும்பாலோர் கிராமப் பகுதிகளில் வாழ்கின்றனர். நில உச்சவரம்புச் சட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தி, சிலரிடம் உபரியாக இருக்கும் நிலங்களை எடுத்து நிலமற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும். நில உடைமை ஆவணங்களைத் தயாரித்து முடிப்பதில் உள்ளூர் மக்களின் உதவி நமக்குத் தேவையாகும்" என்பது பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அறிவிப்பாகும்.

இந்த இரண்டாவது அம்சமாகிய உபரி நிலங்களை எடுத்து வழங்குவதில் நாம் தீவிரக் கவனம் செலுத்தி, ஏற்கனவேயே உபரி நிலங்களை எடுத்து வழங்கியிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும்.

நூறு புதிய சாதனைகள் என்று ஒரு புத்தகம் அவர்கள் போட்டிருக்கிறார்கள். அதில் இந்த விவரம் தவறாக இருக்கிறது. அதில் அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு எல்லா

மாநிலங்களும் நில விநியோகத் திட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளது என்று சொல்லி அதில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில்கூட 10 லட்சம் ஏக்கர் நிலத்தை விநியோகித்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி பத்து லட்சம் ஏக்கர் நிலத்தை விநியோகம் செய்யவில்லை. 10 லட்சம் ஏக்கரா விநியோகம் செய்ய முடியுமா என்றால்கூட இயலாது. அதுவும் எப்போது தெரியுமா? அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் 10 லட்சம் ஏக்கர் நிலத்தை விநியோகித்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது இது என்ன, மாயாபஜாரா? (சிரிப்பு)

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** எதிலே?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நூறு புதிய சாதனைகள்—என்ற புத்தகம்—தமிழில்—பக்கம் 21 இல்.

அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு எல்லா மாநிலங்களும் நில மறு விநியோகத் திட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளன, கேரளாவில் 1,30,000 ஹெக்டார் நிலம் 3,28,500 நிலமில்லாத ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவும் சரியாக இருக்க முடியுமா என்றால் முடியாது. கேரள அரசாங்கத்தைக் கேட்டால்தான் இல்லையென்று சொல்லுவார்கள். தமிழ்நாடு 10 லட்சம் ஏக்கர் நிலத்தை விநியோகித்துள்ளது என்று கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 10 லட்சம் ஏக்கரா கொடுக்கவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ப்ரின்டர்ஸ் மிஸ்டேக்காக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒன்று போட்டு பக்கத்தில் சைபர்களாகப் போட்டிருந்தால் ஒரு சைபர் அதிகமாகக்கூடப் போய்விட்டதோ என்று நினைக்கலாம். ஆனால் இதிலே பத்து என்று எண்ணினால் எழுதி, அதன் பக்கத்தில் லட்சம் என்று எழுத்தால் போடப்பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இந்தத் தகவலையே தவறாக தமிழக அரசுதான் கொடுத்திருக்கும். இது உங்கள் தவறாகவே இருக்கலாம்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்படித் தவறாக நாங்கள் வேண்டுமென்றே கொடுத்திருந்தால்,—பார் பார் தமிழ்நாட்டில் பத்து லட்சம் ஏக்கரா கொடுத்திருக்கிறோம் என்று நாங்கள் ஜம்பம் அடித்துக் கொண்டிருக்கலாம்.

ஆகவே, சில "நூறு புதிய சாதனைகள்" என்கிற புத்தகம் இந்தத் தகவலைத் தருகிற காரணத்தால், இதை நான் மேற்கோளாக எடுத்துக் காட்ட விரும்பவில்லை. அதற்காக மத்திய அரசு என்னை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1967-க்கு முன்பு 6—4—60 இல் நமது மாநிலத்தில் உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டம் வந்த பிறகு 7 ஆண்டுக் காலத்தில் உபரியாக இருப்பதாக அறிவிக்கப்பட்ட நிலம் 24,194 ஏக்கர். திரு. மாரிமுத்து அவர்கள் தொடர்ந்து செய்துவரப்பட்டதன் விளைவு என்று சொன்னாரே, அதற்காகச் சொல்கிறேன்—1967-க்கு முன்பு தமிழ்நாட்டில் உபரியாக இருப்பதாக அறிவிக்கப்பட்ட நிலம் 24,194 ஏக்கர். இதில் அரசு கைப்பற்றியது 16,330 ஏக்கர். நிலமற்ற ஏழைகளிடம் ஒப்படை செய்யப்பட்டது எவ்வளவு தெரியுமா? ஒன்றுமே இல்லை. உபரி நிலம் யாருக்கும் வழங்கப்படவில்லை. இந்த நிலங்கள் நிலமற்ற எவருக்கும் ஒப்படை செய்யப்படாத காரணத்தினால் பயன் அடைந்தவர்கள் புள்ளிவிவரம் சொல்ல இயலாது.

1967-க்குப் பிறகு உபரி நிலங்கள் என்று அறிவிக்கப்பட்டது மொத்தம் 1,08,068 ஏக்கராகும். இதில் அரசு கைப்பற்றிய நிலம் 88,146 ஏக்கர். இதில் 62,682 ஏக்கரா நிலமற்ற ஏழைகளிடம் ஒப்படை செய்யப்பட்டு விட்டது. இதனால் பயன் அடைந்த உழவர் பெருமக்கள் 38,504 பேர்கள். இதுதான் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா ஒரு குடும்பத்திற்கு என்று நாம் கொண்டு வந்த உச்ச வரம்புச் சட்டத்திற்குப் பிறகு நாம் எடுத்த தீவிர முயற்சியின் காரணமாக ஏற்பட்ட பயனாகும். அந்தச் சட்டத்தை நாம் 15—2—1970 இல் கொண்டு வந்தோம். அந்தச் சட்டத்திற்குப் பிறகு நாம் எடுத்த வேகமான நடவடிக்கைகளின் காரணமாக 62,682 ஏக்கரா நிலமற்றவர்களிடம் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது.

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூட—ஓ. இல்லை—ஆளுங் காங்கிரஸ் கமிட்டி—ஒரு நல்ல மதிப்புரையை—இந்தியாவில் நில உச்சவரம்பில்—நிலச் சீர்திருத்தத்தில் தமிழ்நாடுதான் இன்றைக்கு முன்னணியில் இருக்கிறது என்கின்ற நற்சான்றை அளித்திருக்கிறது.

இதில் திரு. கே. டி. கே. பேசும்போது பழத்தோட்டம் போன்றவற்றுக்கு இருக்கிற விதிவிலக்கை நீங்கள் இன்னும் எடுக்கவில்லையே என்று கேட்டார்.

நம்முடைய மாநிலத்தில் பழத்தோட்டங்களின் மொத்த விஸ்தீரணமே 18,169 ஏக்கர்தான். எல்லாப் பழத்தோட்டங்களையும் சேர்த்து இந்தப் பழத்தோட்டங்களுக்கும் உச்சவரம்பு என்று கொண்டுவந்தால்—அதனுடைய உற்பத்தி கெடுவதோடு வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் அனுப்பப்படுகிற ஏற்றுமதியும் பாதிக்கப்படும், அதுவும் 18 ஆயிரம் ஏக்கராதானே விஸ்தீரணம் குறைவாக இருப்பதால் விட்டுவிட்டோம்.

அதற்கு உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் மைசூரில் கூட ஒரு ஆயிரம் ஏக்கராலினாலே என்ற செடி வளர்க்கப்படுகிற இடம் இருக்கிறது—தேவிகாராணி என்கிற பழைய சினிமா நட்சத்திரம் ஒருவருக்குச் சொந்தமான இடம்—அந்த ஆயிரம் ஏக்கராவில் வாசனைப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதற்காக அதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆயிரம் ஏக்கராவில்தான் வாசனைச் செடி உற்பத்தி செய்வதனால்—அந்த பூமி அதற்கு ஏற்றதாக இருப்பதனால்—அந்த வாசனைப் பொருளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்பதற்காக, வெளிநாட்டுச் சந்தை பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அங்கே அந்த ஆயிரம் ஏக்கராவுக்கு விதிவிலக்கு கர்னாடகத்தில் அளித்திருப்பதைப் போலத்தான் இங்கும் பழத் தோட்டங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல் வேறு இல்லை.

நாம் எத்தனை விதிவிலக்குகளை ரத்து செய்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்ப்போம். கரும்பாலை நிலத்திற்கு விதிவிலக்கு இருந்தது. அதனை ரத்து செய்திருக்கிறோம். அதைப் போலவே மேய்ச்சல் நிலத்திற்கு விதிவிலக்கு இருந்தது. அதனை ரத்து செய்திருக்கிறோம். பால்பண்ணை நிலத்திற்கு விதிவிலக்கு இருந்தது. அதனை ரத்து செய்திருக்கிறோம்.





பொது அறக்கட்டளைக்கு ஒரு வரம்பு வைத்து விட்டோம். அந்த வரம்பு ஆந்திரத்தில் கிடையாது. கேரளாவில் கிடையாது. பொது அறக்கட்டளைகள் அங்கே எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவற்றின் வருமானம் அந்த அறக்கட்டளைகளுக்கே செலவிடப்பட வேண்டும். இது அங்கே. இங்கே நாம் பொது அறக்கட்டளைகள் இவ்வளவுதான் வைத்துக் கொள்ள வேண்டுமென்று நிர்ணயித்து, அதில் வருகின்ற வருமானம் அந்த அறக்கட்டளைக்கே செலவிடப்பட வேண்டும் என்று சட்டம் செய்திருக்கிறோம். அதுவும் 1—3—72 இல் என்னென்ன அறக்கட்டளைகள் இருந்தனவோ அந்த அறக் கட்டளைகளுக்குத்தான் அது பொருந்தும். அதற்குப் பிறகு புதிதாக அறக்கட்டளைகள் தோன்றி இந்தச் சட்டத்தைப் பயன் படுத்திக் கொள்ளக்கூடாது என்று சட்டம் செய்திருக்கிறோம். அதுவும் இன்னின்ன அறக்கட்டளைக்கு இவ்வளவுதான் நிலம் என்று திட்டவட்டமாகச் செய்திருக்கிறோம்.

இந்த பொது அறக்கட்டளைகளில்—கல்லூரி என்றால் 40 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் வைத்துக் கொள்ளக்கூடாது. உயர்நிலைப் பள்ளியாக இருந்தால் 20 ஸ்டாண்டர்ட் ஏக்கர், ஆரம்பப் பள்ளியாக இருந்தால் 10 ஸ்டாண்டர்ட் ஏக்கர், மாணவர் விடுதியாக இருந்தால் 25 ஸ்டாண்டர்ட் ஏக்கர், தொழில் கல்விக்கூடமாக இருந்தால் 25 ஸ்டாண்டர்ட் ஏக்கர், விவசாயப் பள்ளியாக இருந்தால் 25 ஸ்டாண்டர்ட் ஏக்கர், அநாதை இல்லத்திற்கு 25 ஸ்டாண்டர்ட் ஏக்கர், அதர் டிரஸ்ட்ஸ், மற்ற அறக்கட்டளைகளுக்கு 5 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் வைத்துக் கொள்ளக்கூடாது என்று நிர்ணயித்து இருக்கிறோம்.

அடுத்து, குத்தகைச் சாகுபடிதாரர்களுக்கு ஆவணங்கள் வேண்டும், பதிவு செய்கின்ற முறை வேண்டுமென்று பிரதமர் அறிவித்திருக்கிறார்கள். நாங்கள் அதையும் செய்திருக்கிறோம். அவர்கள் அறிவிப்புக்குப் பிறகு அல்ல, 1969 ஆம் ஆண்டிலே தமிழ்நாடு வேளாண்மை நிலக் குத்தகை உரிமைகள் பதிவேட்டுச் சட்டத்தை நாம் இந்த மன்றத்திலே நிறைவேற்றியிருக்கிறோம். இதுவரையில் இப்படிப் பதிவு செய்த குத்தகைதாரர்களின் எண்ணிக்கை 3,99,350 என்றும் இவர்களது அனுபோகத்தில் உள்ள நிலம் 6,03,899 ஏக்கர் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

அம்சத்தன்னியில் நிலவுடமையாளர்கள் வைத்திருக்கிற நிலத்தின் கணக்கு விவரங்களைத் தெரிந்துகொள்வதற்கும் மேலும் நிலச் சீர்திருத்தச் சட்டங்களை இயற்றுவதற்கும் பயன்படும் என்ற வகையிலே பட்டா விவரக் குறிப்பேடு என்ற ஒன்றை ஒவ்வொரு விவசாயியும் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே 1972 ஆம் ஆண்டு—இருபது அம்சத் திட்டத்திற்கு முன்பே—1972 ஆம் ஆண்டிலேயே திட்டம் கொண்டுவரப்பட்டு, இதுவரை கொடுக்கப்பட்ட அப்படிப்பட்ட பட்டா விவரக் குறிப்பேடுகள் 1 கோடியே 4 லட்சம் பேர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. இதற்கான செலவு ஒரு கோடி ரூபாய் என்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தரிசு நிலங்களை ஒப்படை செய்ய வேண்டுமென்பது பிரதமர் அவர்களுடைய 20 அம்சத் திட்டங்களிலே ஒன்று. 1947 இல் இருந்து நாடு சுதந்திரம் பெற்ற பிறகு 1967 ஆம் ஆண்டு வரையில் தமிழ் மாநிலத்திலே ஒப்படைவு செய்யப்பட்ட நிலம் இரண்டு லட்சத்து 88 ஆயிரம் ஏக்கர். இதனால் பயனடைந்தவர்கள் 1 லட்சத்து 15 ஆயிரம் பேர்கள். இருபது ஆண்டுக் காலத்திலே, இரண்டு லட்சத்து 88 ஆயிரம் ஏக்கர். 1967-க்குப் பிறகு இந்த எட்டாண்டுக் காலத்திலே 7,19,178 ஏக்கர் நிலம் நம்மால் ஒப்படைவு செய்யப்பட்டிருக்கிறது. இருபது ஆண்டுகளில் 1,15,000 பேர்கள் பயனடைந்திருக்கிறார்கள். இந்த எட்டு ஆண்டுகளில் 3,68,679 பேர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

இந்த உச்சவரம்பில் ஏதோ பினாமியெல்லாம் நடந்துவிட்டதாக நம்முடைய நண்பர் மாரிமுத்து அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஒன்றிரண்டு நடந்தது, இன்னும் சில அந்தக் காலத்திலேயே நடந்துவிட்டது. மிகவும் முக்கியமான அமைச்சருடைய சொந்தக்காரரிடம்—நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை—282 சாதாரண ஏக்கர், அதாவது 141 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வரும்; 141 ஸ்டாண்டர்டு ஏக்கர் 6—4—60-இல் இருந்தது. ஆனால் 2—10—62 க்குள்ளாக இந்த 141 ஸ்டாண்டர்டு ஏக்கரில் 135 ஸ்டாண்டர்டு ஏக்கரை அந்த அமைச்சருக்கு மிக நெருங்கிய சொந்தக்காரர் விற்றுவிட்டார். உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டார். இந்த இரண்டாண்டுக் காலத்திலே, 6—4—60-லிருந்து 2—10—62 க்குள்ளாக யாரும்





இந்தச் சட்டத்தை ஏமாற்றி அவர்களுக்குரிய நிலத்தை விற்கக் கூடாது என்று இருந்தும்கூட பணம் வருகிறதே அப்பா என்ற காரணத்தினாலும், உச்சவரம்புச் சட்டம் வருகிறதே அப்பா என்ற அச்சத்தாலும் 141 ஸ்டாண்டர்டு ஏக்கராவில் 135 ஸ்டாண்டர்டு ஏக்கராவை அவர் விற்றுவிட்டார். அதற்கு அவர்மீது நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். 1967-க்குள் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். 1967 வரையில் அந்த அமைச்சருடைய மிக முக்கியமான சொந்தக்காரர்மீது நடவடிக்கை எடுக்கவில்லை. 1967 இல் அண்ணா தலைமையில் ஆட்சி வந்தபிறகு, முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி வந்தபிறகு இந்தத் தவறுக்கு நடவடிக்கை இந்த அரசின் சார்பில் எடுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, மிகச் சாதாரணமானர்வகளால்கூட அந்த பினாமி முறை நடைமுறைப்படுத்தப்படவில்லை, . அமைச்சரவையில் மிக முக்கியமான ஒருவரின் சொந்தக்காரரால் . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி**: அமைச்சருடைய மிக நெருங்கிய சொந்தக்காரர் என்று டிராமாட்டைஸ் பண்ண வேண்டாம், அவர் பெயரைச் சொல்ல வேண்டியதுதானே, பண்ணினதோ தப்பு. அவர் பெயரைச் சொல்ல வேண்டியது தானே. . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: நண்பர் வாதப்பன் அவர்கள். அம்மையார் அவர்களுக்கு அதைச் சொல்ல வேண்டுமென்று விருப்பம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: அம்மையார் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்வீர்களா? அம்மையார் விருப்பம் என்று சொல்லி எப்படியோ என்னை வம்பில் இழுத்து விடுவதற்காக இதை ஏன் சொல்ல வேண்டும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: அடுத்து, மூன்றாவது அம்சம். கிராமப் பகுதிகளில் வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் வெகுவாக விரிவாக்கப்படும். நிலமற்றவர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கச் சட்டங்கள் கொண்டு வரப்படும். இது பிரதமர் அவர்களுடைய அறிவிப்பு.

அண்மையில் மத்திய அரசு தயாரித்த ஒரு ஆய்வின்படி குடியானவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம், பீகார், குஜராத், ஜம்மு-காஷ்மீர், ஒரிசா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மட்டுமே குடியானவர்களுக்கும் உழவர்களுக்கும் வீட்டு மனை வழங்கும் திட்டம் நடைபெற்று வருகிறது. நான் குறிப்பிட்ட இந்த மாநிலங்களில் வீட்டு மனைகள் வழங்குகிற திட்டம் நடைபெற்று வருகிறது. இதில் தமிழ்நாட்டில் மாத்திரமே, குடியானவர்களுக்கும் உழவுத் தொழிலாளர்களுக்கும் வீட்டு மனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மற்ற மாநிலங்களில் இந்த மனைகளைப் பெறுவதற்கு அதன் விலையை உழவர்கள் செலுத்தியாக வேண்டும். 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டம் செய்தோம். 1975 இல் அல்ல—20 அம்சத் திட்டம் வானொலியில் அறிவிக்கப் பட்ட பிறகு அல்ல—1971 ஆம் ஆண்டிலேயே செய்தோம். இந்தச் சட்டத்தின்கீழ் குடியிருப்பு மனைகள் பெற்றவர்கள் 1 லட்சத்து 75 ஆயிரம் பேர்கள். இந்த ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேர்களில் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள் 1,02,404 பேர்கள்; பிற்படுத்தப்பட்டோர் 40,550 பேர்கள், இதர வகுப்பினர் 32,123 பேர்கள், இதற்காக அரசுக்குச் செலவு கிட்டத்தட்ட 20 லட்சம் முதல் 30 லட்சம் ரூபாய் வரை ஆகியிருக்கிறது.

அரசுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து வீட்டு மனை ஒப்படை செய்யும் திட்டத்தின்கீழ் 1967-க்கு முன் 20 ஆண்டுக் காலத்திலே, அப்போது இருந்த ஆட்சியில் வீட்டு மனை ஒப்படைச் செய்யப்பட்டது—பட்டா கொடுத்தது 63,770 பேர்களுக்கு ஆகும். ஆனால் இந்த எட்டாண்டுக் காலத்திலே பட்டா ஒப்படைச் செய்யப்பட்டது—பட்டா கொடுத்தது 5,03,697 பேர்களுக்கு ஆகும்.

அரிசன மக்களுக்கு மாத்திரம் நிலத்தை ஆர்ஜிதம் செய்து வீட்டு மனை வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரையில் 2,36,000 அரிசனக் குடும்பங்கள் பயன் பெற்றிருக்கின்றன. அதற்காக ஆன மொத்தச் செலவு 4 கோடியே 25 லட்சம் ரூபாய் ஆகும். இவைகளைத் தவிர, பிரதமர் அண்மையில் குறிப்பிடாத அம்சமாக 30 ஆயிரம் வீடுகள் அரிசன மக்களுக்கு டிசம்பர் மாத இறுதிக்குள் நல்ல கெட்டியான வீடுகள் ஒரு வீடு நாலாயிரம்





ரூபாய் பெறுமானமுள்ள வீடுகள் டிசம்பர் மாதத்திற்குள் கட்டித் தர திட்டமிட்டு அது முடிவடைய இருக்கிறது. இதற்காக ஆகும் செலவு 13½ கோடி ரூபாய். இது பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் இல்லாத ஒன்றாகும்.

அதைப் போலவே, மீனவர்களுக்கு 5 ஆயிரம் வீடுகள்—முதல் கட்டமாக—கட்டித்தர இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இந்த வேலைகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன. இதுவும் இருபது அம்சத்திட்டத்தில் இல்லாத ஒன்றாகும்.

குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் 1975 ஆம் ஆண்டு அவசரச் சட்ட அறிவிப்புக்குப் பிறகு, பிரதமருடைய அறிவிப்புக்குப் பிறகு வந்ததல்ல, 1970–71 ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டு இதுவரையில் 20 ஆயிரத்து 239 குடியிருப்புகள்—வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் 3,220 குடியிருப்புகள்; குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் ஏறத்தாழ 17,019 குடியிருப்புகள் என்ற முறையிலே நிறைவேற்றப்படுகின்றன. இப்போது கட்டிக் கொண்டிருக்கின்ற குடியிருப்புகள் 3,312. ஆக, 17 கோடி ரூபாய் செலவில் ஏறத்தாழ இருபதாயிரம் வீடுகள் குடிசை வாழ் மக்களுக்காகக் கட்டப்படுகின்றன. இதுவும் மதிப்பு மிகுந்த தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் அறிவித்த 20 அம்சத் திட்டத்தில் இல்லாத ஒன்று. இதை நிறைவேற்றுவதற்காக வேண்டுமானால், இதைத் தொடங்கியதற்காக வேண்டுமானால் இல்லாததையெல்லாம் நீ எப்படி நிறைவேற்றினாய் என்று நீங்கள் கோபித்துக்கொள்ளலாமே தவிர வேறு எதுவுமில்லை என்று கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராம மக்களுடைய கடன் சுமையைப் படிப்படியாக குறைக்க அவர்களிடமிருந்து கடனைத் திரும்பப் பெறுவதற்காக நீதிமன்றத்தை நாடாமல் இருக்க வழங்குகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் செல்லுபடியாகாமல் இருக்கச் செய்யவும், கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள், அரசுக் கடன்கள் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது பிரதமருடைய நான்காவது அறிவிப்பு. கிராமப்புற மக்களின் கடன் சுமையைப் போக்குவது மாத்திரமல்லாமல் நகரப்புற மக்களுடைய கடன் சுமையையும் போக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கிற வகையிலே 1972 ஆம் ஆண்டு ஒரு கடன்

நிவாரணச் சட்டம் கொண்டு வந்தோம். 1975 ஆம் ஆண்டு கடன்பட்டோர் (தற்காலிக நிவாரண) அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். அண்மையில் ஏற்பட்ட வறட்சியை ஒட்டி இந்த அவசரச் சட்டம் 1975 ஆம் ஆண்டு சனவரியில் அறிவிக்கப் பட்டது. இச்சட்டத்தின்கீழ் உரிமை வழக்குத் தொடர்ந்தோ, ஏனைய சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டோ கடனை வசூலிப்பது ஓராண்டுக் காலத்திற்குக் கூடாது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கத்திற்கும் அரசுக்கும் தரவேண்டிய கடனைக் கூட—இதிலே அவைகள் வராது என்றாலும் கூட அதனுடைய வசூலை ஓராண்டுக் காலத்திற்குத் தள்ளி வைக்க வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக்கொள்ளப்பட்டு அந்த வசதியும் கிராமப்புற மக்களுக்கு செய்து கொடுக்கப்பட்டதை மன்ற உறுப்பினர்கள் மறந்துவிடக்கூடாது. 1975 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் தேதி அறிவிக்கப்பட்ட சட்டத்தின்படி உழவர்கள் அல்லாத ஏனைய கடன் பட்டவர்களுக்கும், கடன் சுமையிலிருந்து நிவாரணம் பெறலாம் என்ற நிலையில் 1976 ஆம் வருஷம் சனவரி 15 ஆம் தேதி வரையில் வட்டி எதுவும் வசூலிக்கக் கூடாது என்ற இந்தச் சட்டம் துயர் தணிப்பு அளிக்கிறது. சிலபேர் இதனை அறவே ரத்து செய்ய வேண்டுமென்று எல்லாம் சொன்னார்கள். இங்கே நண்பர் வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இந்தச் சட்டத்தைப் பற்றி இங்கே மசோதா வந்த நேரத்தில் குறிப்பிட்டதை நாம் அவ்வளவு சாதாரணமாகப் புறக்கணித்து விட முடியாது. கடன்களை அறவே ரத்து செய்வது என்ற அவ்வளவு முற்போக்கான நிலைமைக்கு நாம் சென்றால், பிறகு கடன் கொடுப்பவர்களே இருக்க மாட்டார்கள். அப்படிக் கடன் கொடுப்பவர்களே இல்லாத நேரத்தில், கடன் கொடுக்கும் வசதிகளை கிராமப்புற மக்களுக்கு உற்பத்தியின் அடிப்படையில் இல்லாமல் அவர்களின் விவசாயப் பொருட்களைக் காட்டி, கிணறுகளை, நிலத்தைக் காட்டி பெறுவது மட்டுமல்லாமல், அவர்களுடைய திடீர்த் தேவைகளுக்குக் கடன் தருகின்ற வங்கிகள், கூட்டுறவு இயக்கங்கள் ஆகிய இப்படிப்பட்ட வசதிகளைப் பெருக்கிய பிறகுதான் அதைப் பற்றி நாம் யோசிக்க முடியுமே அல்லாமல் வேறுவிதத்தில் இயலாது. எல்லாக் கடன்களையும் ரத்து செய்ய வேண்டுமென்று பிரதமர் இந்திரா



காந்தி அம்மையார் அவர்களே சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுடைய சுமை ஒழிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டு அதற்கேற்ற நிவாரணம் அளிக்க வேண்டுமென்றுதான் கூறியிருக்கிறார்கள். அதையும் நாம் படிப்படியாக எடுத்து ஏற்பாடுகளையெல்லாம் தொடர்ந்து இரண்டு மூன்று ஆண்டுக் காலமாகவே செய்து வருகிறோம். ஆகவே, இதை முன்பே செய்தோம் என்ற குற்றத்தைத் தவிர அறவே செய்யவில்லை அல்லது செய்ய மறுக்கிறோம் என்ற குற்றச்சாட்டை யாரும் நம்மீது சாட்டிட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5 ஆவது அம்சம், "உழவுத் தொழிலாளர்களுக்குத் தற்போதுள்ள குறைந்த ஊதிய விகிதச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும். குறைந்த அளவு ஊதியம் தரப்படும் இடங்களில் எல்லாம் இந்த ஊதியத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்பது. இது பிரதமர் அறிவித்த 5 ஆவது அம்சமாக இருக்கிறது. 1969 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் உள்ள உழவுத் தொழிலாளர்கள் சம்பந்தமாக திரு. கார்த்திகேயன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அவர்கள் இந்தக் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் எவ்வளவு இருக்க வேண்டும் என்று சொல்லி அதை நடைமுறைப்படுத்தினோம். தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள்—விவசாய தொழிற் சங்கத்தை நடத்துபவர்கள்—அரசின் சார்பிலே—ஆக இப்படி முத்தரப்பு மாநாட்டினைக் கூட்டி ஒரு சுமுகமான முடிவினை எடுத்திருக்கிறோம். இப்போது மீண்டும் இந்த அவசரச் சட்டத்திற்குப் பிறகு, அம்மையார் அறிவித்துள்ள 20 அம்சத் திட்டத்திற்குப் பிறகு மீண்டும் ஒரு குழுவை நாம் இன்றைக்கு அமைத்து நண்பர் சீனிவாசன் அவர்கள் தலைமையில் அந்தக் குழு தன்னுடைய ஆய்வை நடத்தி வருகிறது. அது பல்வேறு மாவட்டங்களிலே அந்த ஆய்வை நடத்தும்.

இதற்கிடையிலே ஆண், பெண் ஆகிய இரு சாராரின் சம்பளம்—நாட்கூலி—சமமாக இருக்க வேண்டுமென்ற ஒரு அறிவிப்பையும் மத்திய அரசின் சார்பிலே செய்திருக்கிறார்கள். அதையும் அடிப்படையாக வைத்து, வேலை செய்பவர்கள் ஆணா, பெண்ணா என்பதுகூட அல்லாமல், இந்த வேலைக்கு இந்தக் கூலி,

அதை ஆண் செய்தாலும் சரி, பெண் செய்தாலும் சரி என்று நிர்ணயிக்கிற அளவிற்கு அந்தக் குழு தன் ஆய்வை நடத்தி விரைவில் முடிவைத் தரும். அது அரசின் சார்பில் பரிசீலிக்கப் படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

6 ஆவது அம்சம், "உழவுத் தொழிலேயும், தொழில் உற்பத்தியையும் பெருக்க நீரும், மின்சாரமும் இன்றியமையாதன." இது நமக்கெல்லாம் தெரியாத பெரிய விஷயம். மின்சாரமும், நீரும் இன்றியமையாதன; "குறைந்தது 50 இலட்சம் ஹெக்டர் நிலத்தையேனும் விரைவில் சாகுபடிக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்." இது பிரதமருடைய ஆறுவது அறிவிப்பு. 50 இலட்சம் ஹெக்டர் என்றால் ஒன்றேகால் கோடி ஏக்கர்கள். இந்தியாவில் ஒன்றேகால் கோடி ஏக்கர்கள் புதிய பாசன வசதிகளேப் பெறுவதற்குத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் நடவடிக்கை எடுக்க முனைந்திருப்பது பாராட்டக் கூடிய அம்சம். ஏனென்றால் இந்தியா வேளாண்மைத் தொழிலேயே பெரிதும் நம்பியிருக்கின்ற ஒரு பெரும் பூபாகம். இப்படிப்பட்ட இடத்தில் மற்றத் தொழில் களுக்கு மேலாக வேளாண்மைத் தொழிலுக்கு முதலிடம் தர வேண்டும். அதை 28 ஆண்டுக் கால சுதந்திரத்திற்குப் பிறகாவது உணர்ந்து பாசன வசதிகளேப் பெருக்க வேண்டுமென்ற ஒரு நல்ல முடிவை 20 அம்சத் திட்டத்தின் மூலமாக அறிவித்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு விவரத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். 1947 ஆம் ஆண்டு வரையில் பாண்டியர்கள், சோழர்கள், சேரர்கள், பல்லவர்கள் ஆகிய இப்படிப்பட்ட மன்னர்கள் ஆண்டு, வெள்ளேக்காரர்கள் ஆண்டு முடிந்த 1947 ஆம் ஆண்டு வரையில், தமிழ்நாட்டில் பாசன வசதி பெற்ற நிலம் சுமார் 44 இலட்சம் ஏக்கராக்கள். அந்தப் பழம்பெரும் மன்னர்களுக்குப் பிறகு, பரங்கியர்களுக்குப் பிறகு பெரியவர் பக்தவத்சலம் ஆண்டு முடித்த 1967 ஆம் ஆண்டு வரையில்—20 ஆண்டுக் காலத்தில்—மேலும் 8 இலட்சம் ஏக்கராக்கள் பாசன வசதி பெற்றன. 44-ம், 8-ம் ஆக 52 இலட்சம் ஏக்கராக்கள். பக்தவத்சலம் காலத்திற்குப் பிறகு இந்த எட்டாண்டுக்கால 'பாவிகள்' ஆட்சியில் மேலும் 15 இலட்சம் ஏக்கராக்கள் பாசன வசதி பெற்றிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



அதுமட்டுமல்ல, 1967 ஆம் ஆண்டுக்குப் பின்பாக புதிய நீர்ப்பாசன திட்டங்களுக்குச் செலவிடப்பட்ட தொகை 148 கோடி ரூபாய். இந்த அரசின் சார்பில் செயல் வடிவம் பெற்று வருகின்ற திட்டங்களின் மதிப்பு 49 கோடி ரூபாய். இன்னும் மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காகத் தவம் கிடக்கும் திட்டங்களின் மதிப்பு 62.5 கோடி ரூபாய். ஆகவே, 1967-க்குப் பிறகு நம்முடைய உணவு உற்பத்தியின் இலக்கைக் கணக்கிட்டால் இந்தப் பாசன வசதியை எந்த அளவிற்குப் பெருக்கி யிருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஆகவே, 6 ஆவது அம்சம் ஏற்கனவே எடுத்து நிறைவேற்றப் பட்டிருக்கிறது. (குறுக்கீடு) இது 6 ஆவது அம்சம், 7 ஆவது காண்டம் பிறகு.

அடுத்து 7 ஆவது அம்சம், "நிலநீர்-பாசன வசதியைப் பெருக்குதல்—வறட்சியால் தாக்குண்ட பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதல்—நிலநீர் பற்றி மேற்கொண்டு ஆய்வு செய்தல்" ஆகிய இந்த மூன்று. இதுவும் மிகவும் முக்கியமான திட்டங்கள்தான். இதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். இந்தியா முழுதும் எடுத்திருக்கின்ற கணக்கின்படி, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டிய கணக்கு இது. இந்தியா முழுவதும் நிலநீர் வளம் உள்ள பரப்பு 21.36 கோடி ஏக்கர். இந்தியா முழுவதும் நிலநீர் அதாவது அடிநீர், கிரவுண்ட் வாட்டர் உள்ள நிலத்தின் பரப்பு 21 கோடியே 36 லட்சம் ஏக்கர். அதிலே தமிழ்நாட்டில் நிலநீர் வளம் உள்ள பரப்பு 1 கோடியே 15 இலட்சம் ஏக்கர். இது இந்தியாவின் மொத்த பரப்பில் ஐந்தே ஐந்து சதவீதமாகும். ஆனால் இந்தியா முழுவதுமுள்ள மின் இணைப்புப் பெற்ற பாசனக் கிணறுகள் 24.35 இலட்சம். மின் இணைப்பு பெற்ற பம்பு செட்டுகள். தமிழ்நாட்டில் மின் இணைப்பு பெற்ற பாசனக் கிணறுகள்—7 இலட்சத்து 15 ஆயிரம் பம்பு செட்டுகள் மின் இணைப்பு பெற்றவை. இது இந்தியாவில் உள்ள மொத்தத்தில் 30 சதவீதம். நிலநீர் கிடைக்கும் இந்தியாவின் மொத்தப் பரப்பில் நாம்

5 சதவிகிதம். ஆனால் நிலநீரைப் பயன்படுத்தும் பம்பு செட்டுகள் இந்தியாவின் மொத்தக் கணக்கில் நாமே 30 சதவிகிதம்.

அதுமட்டுமல்ல, பிரதமர் அறிவித்திருப்பதைப்போல, 'வாட்டர் அட்லாஸ்' தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் நிலநீர் ஆய்வுக்காக இதுவரை செலவிடப்பட்ட தொகை 7.5 கோடி ரூபாய்—நிலநீர் ஆய்வுக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணிக்கெல்லாம் மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை.

குடிநீர் பற்றி இதே 7 ஆவது அம்சத்திலே சொல்லியிருக்கிறார்கள். குடிநீருக்காக மாத்திரம் 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக ஊராட்சி மன்றங்கள் மூலம் செலவிடப்பட்ட தொகை 14.15 கோடி ரூபாய். இவ்வேலைத் திட்டத்தின்கீழ் தோண்டப்பட்ட கிணறுகள் 33,000 கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகள் 4,444. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைப் போன்று இந்தியாவில் வேறு எங்கும் இல்லை. தமிழ்நாட்டில்தான் இப்படிப்பட்ட வாரியம் ஒன்றை உருவாக்கி—1971-லேயே உருவாக்கி—அவசரச் சட்டம் வந்த பிறகு அல்ல, அம்மையாரின் வானொலிப் பிரசங்கத்திற்கு பிறகு அல்ல—அதற்கு முன்பே உருவாக்கி அதன் சார்பில் 1971 ஆம் ஆண்டுக்குப் பின்னால் நிறைவேற்றிய திட்டங்கள், குடிநீர் வாரியத்தின் மூலமாக நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் 7,736. இதற்கான செலவு ஏறக்குறைய 12 கோடி ரூபாய். வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்கு மட்டும், குடிநீர் வழங்கு வசதிக்காகத் திட்டத்தின் கீழ் வராமல் தனிப்பட்ட முறையில் செலவழிக்கப்பட்ட தொகை 3 கோடியே 52 இலட்சம் ரூபாய். திட்டத்தின் வாயிலாக 1975–76 இல் ஒதுக்கப்பட்ட தொகை 7 கோடியே 10 இலட்சம் ரூபாய். ஆக, இப்படிப்பட்ட பணிகளும் இருபது அம்சத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பே தொடர்ந்து நம்முடைய தமிழக அரசால் நிறைவேற்றப்பட்டு வருகிற திட்டங்களாகும்.

அடுத்து, 8 ஆவது அம்சம், பிரதமர் வானொலியில் அறிவித்த அம்சம், "2,600 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு மின் உற்பத்தி திட்டங்களைச் செயல்படுத்தப்





போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்." கோடிட்டுக் கொள்ள வேண்டும், "போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படும். நீண்ட கால தேவைகளை நிறைவு செய்ய மத்திய அரசுத் துறையில் பெரிய அளவில் அனல் மின் நிலையங்கள் நிறுவ திட்டமிடப்படும். மாநில மின்சார வாரியம் சீரமைக்கப்படும்." இது பிரதமருடைய இருபது அம்சத் திட்ட அறிவிப்பில் மிக முக்கியமான அம்சமாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிகப் பெரும் பிரச்னையுள்ள ஒரு அம்சம். ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த நிதியாண்டில், அதாவது 1975–76 இல் இந்தியா முழுவதும் மின் உற்பத்திக்கு மத்திய அரசு ஒதுக்கியிருக்கிற தொகை 250 கோடி ரூபாய். இந்தியா முழுமைக்கும் மத்திய அரசு மின் உற்பத்திக்காக ஒதுக்கியிருக்கிற தொகை 250 கோடி ரூபாய்.

(பிற்பகல் 1.00)

தூத்துக்குடியில் இருக்கும் நம்முடைய மின் நிலையம் இருக்கிறதே அதற்கு மொத்த மதிப்பீடு 129 கோடி ரூபாய். 1974–75 இல் 5 கோடி ரூபாய் அளவுக்குச் செலவிட்டிருக்கிறோம். 1975-76-இல் 18 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பீடு செய்திருக்கிறோம், செலவாகுமென்று. மாநில நிதியிலிருந்து அதற்கு 10 கோடி ரூபாய் போட்டு விட்டோம். மீதி 8 கோடியே 67 லட்சம் கேட்டிருக்கிறோம் மத்திய அரசிடம். இந்தத் திட்டம் முழுமையாக ஆக வேண்டுமென்றால் ரூ. 129 கோடி தேவை. ஒவ்வொரு ஆண்டும் நமக்குத் தேவையான நிதி—1975–76 இல் ரூ. 18.67 கோடி; 1976–77 இல் ரூ. 53.23 கோடி: 1977–78 இல் ரூ. 30.37 கோடி. 1978–79 இல் ரூ. 17.62 கோடி; 1979–80 இல் ரூ. 4.26 கோடி செலவழித்தால்தான் இந்தத் திட்டம் 1979–80 இல் முடிவடையும்.

மின் உற்பத்தித் திட்டங்களுக்காக இந்தியா முழுமைக்கும் 250 கோடி ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறார்களே இந்தியாவின் தலைமையமைச்சர்—இந்திரா காந்தி அவர்கள் அறிவித்திருக்கிறார்களே—பெரு நிதி ஒதுக்கப்படும் என்று. நம்முடைய தமிழ்நாட்டுக்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் தெரியுமா? இந்த 250 கோடி ரூபாயில், பல முறை கேட்ட பிறகு ஒரு கோடி ரூபாய்தான் இந்த 20 அம்சத் திட்ட அறிவிப்புக்குப் பிறகு

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 அக்டோபர் 30

தந்தது, ஒரு கோடி ரூபாய் இந்த 250 கோடி ரூபாயில் நமக்கு ஒதுக்கினார்கள். இதைத்தான் நம்முடைய நண்பர் சுப்பு அவர்களும் மற்றவர்களும் பேசும்போது ஏட்டளவில் வெகு அழகாக எழுதிக் காட்டி விடுகிறீர்கள்; இவற்றை நிறைவேற்றப் பணம் எங்கே என்று கேட்டார்கள். அதற்கு 21 ஆவது அம்சத் திட்டம் வேண்டாமா? 20 அம்சத் திட்டத்தைச் சொல்லிவிட்டு 21 ஆவது அம்சமாக இவ்வளவு கோடி ரூபாய் இதையெல்லாம் செலவழிக்கப் பணம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்க வேண்டாமா? அப்படிச் சொல்லவில்லை.

250 கோடி ரூபாய் இந்தியா முழுமைக்கும். அதிலே தமிழ் நாட்டுக்கு மின் உற்பத்தியைப் பெருக்க ஒரே ஒரு கோடி ரூபாய் தான் ஒதுக்கியிருக்கிறார்கள்.

நெய்வேலி—எவ்வளவு ஆண்டுக் காலமாகத் தவம் கிடக்கின்றது? பெரியவர் பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்த காலத்தில், அதற்கு முன்பு பெரியவர் காமராஜர் முதலமைச்சராக இருந்த காலத்தில் கோரிக்கை எழுப்பப் பட்டது. அப்போதே இரண்டாவது சுரங்கம் தொடங்கப் பெற்றிருந்தால்—இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டது 1964-லோ, 1965-லோ—இப்போதுதான் முடிவடைந்திருக்கும். கிட்டத்தட்ட ஏழு, எட்டு ஆண்டுக் காலம் அதற்கு ஆகும். ஆனால் இன்னும் தொடங்கவே இல்லை. நாளைக்குத் தொடங்கினால் கூட இன்னும் 7, 8 ஆண்டுக் காலம் ஆகும் நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தை முடிக்க.

இதற்கிடையில் ஆந்திரத்தில் இருக்கும் ராமகுண்ட திட்டத்தை எடுத்துக் கொள்ளலாமா என்கிற ஒரு பயங்கரப் பிரச்சினை எழுந்திருக்கிறது. இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும் நான் பிரதமருக்கு எழுதியிருக்கிறேன். 'நீங்கள் நெய்வேலியைக் கைவிட்டுவிட்டு ஆந்திரத்திலுள்ள ராமகுண்ட திட்டத்தை எடுத்துக் கொள்வீர்களானால் தமிழ்நாட்டில் மின் உற்பத்தியில் பெரிய இடைவெளி விழ நேரிடும். ஆகவே, ராமகுண்ட திட்டத்தை எடுத்துக்கொள்வதைப் பற்றி யோசிப்பதைக் கைவிட்டுவிட்டு நெய்வேலித் திட்டத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்,



1975 அக்டோபர் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

இரண்டாவது சுரங்கம் அமைத்துவிட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இது மின்சாரத்தைப் பொறுத்தவரை 9 ஆவது அம்சம் ஆகும்.

9 ஆவது அம்சம்; இனிமேல் பொதுவான அம்சங்கள், வேகமாகப் போக முடியும்.

"கைத்தறித் தொழிலுக்குத் தேவையான பொருள்களை நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் வழங்குவது. கைத்தறி யாளர்களுக்கு என்று சில ரகங்களை ஒதுக்கீடு செய்யும் கொள்கை சீரமைக்கப்பட்டு வருகிறது. நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் வேட்டிகள், புடவைகள், துணிகள், நல்ல தரத்தில் இருக்கவும் அவற்றைக் கிராம மக்களுக்கும் நகர்ப்புறத்தில் உள்ள மக்களுக்கும் விற்பனை செய்யவும் ஸ்டாண்டர்டு கிளாத் முறையை அமல்படுத்துவது."

இது ஏற்கனவே இந்த மாமன்றத்தில் பல நேரங்களில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. 1974 இல் நூல் விலையேற்றம் ஏற்பட்டபோது 12 நூற்பாலைகளில் இருந்து கிடைத்த உற்பத்தியைக் கொண்டு நெசவாளர்களுக்கு 16½ கோடி ரூபாய் மதிப்புள்ள நூலை கோவாப்டெக்ஸ், தமிழ்நாடு கைத்தறி நூல் கழகம்—ஆகிய நிறுவனங்கள் மூலம் தமிழக அரசு வழங்கி தன்னால் முடிந்த அளவுக்குக் கைத்தறியாளர்களுக்கு நன்மை செய்திருக்கிறது.

சில ரகங்கள் கைத்தறிக்கு இப்போது ஒதுக்கப்பட வேண்டும்—ரிசர்வேஷன்—என்று பிரதமர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இது புதிய திட்டமா என்றால், இல்லை. அவர்களுடைய அறிவிப்பிலேயே பிரதமர் அவர்கள் மிகப் பெருந்தன்மையோடு அதைச் சொல்லியிருக்கிறார்கள்.

'Some of them are new. Others were set forth earlier but require to be pursued with greater vigour and determination,' என்று பிரதமரே சொல்லியிருக்கிறார்கள்,

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 அக்டோபர் 30

இது முனைப்பாக நடைபெற வேண்டுமென்பதற்காகத்தான் இதை அறிவித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதிலே எந்தவிதமான மாறுபாடோ, வேறுபாடோ எனக்கில்லை.

ஆனால் ராஜாஜி அவர்கள் இந்த மாமன்றத்திலே, பொறுப்பேற்றிருந்த அந்தக் காலத்திலேயே, கைத்தறிக்கு என்று சில ரகங்களை ஒதுக்க வேண்டும்; கரை போட்ட வேட்டிகள், சேலைகள் இவைகள் எல்லாம் ஒதுக்கப்பட வேண்டுமென்று ராஜாஜி அவர்கள் காலத்திலேயே தீர்மானமெல்லாம் போட்டு வற்புறுத்தப்பட்டது.

இன்று ராஜாஜி அவர்களுக்கு நினைவாலயம் எல்லாம் எழுப்பி, அவருடைய மறைவுக்குப் பின்னால் இரண்டு நினைவுநாட்கள் கூடக் கொண்டாடி முடித்த பிறகு, இப்போது 'கைத்தறிக்கு ரிசர்வேஷன் வேண்டும்; அதற்கென்று சில ரகங்களை ஒதுக்க வேண்டும்' என்று நம்முடைய பிரதமர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

இதே சட்ட மன்றத்திலே 1974 இல் ஏகமனதாக கைத்தறிக்குச் சில ரகங்களை ஒதுக்க வேண்டுமென்ற தீர்மானம் நம் அனைவராலும் சேர்ந்து நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப்போதாவது அவர்கள் செய்ய முன்வந்திருக்கிறார்கள்.

அதிலே ஸ்டாண்டர்டு கிளாத்—மலிவுத் துணியைப் பற்றிக் கூட திட்டக் குழுவின் துணைத் தலைவர் ஹக்சர் அவர்கள் என்னிடம் கேட்டார்கள். அதைப் போலவே அந்தத் துறையின் அமைச்சர் திரு. சட்டோபாத்தியாயா அவர்களும் என்னிடம் பேசும்போது இதைப்பற்றிக் கேட்டார்கள். ஸ்டாண்டர்டு கிளாத்தை மில்லுக்கு ஒதுக்குவது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டார்கள். நான் திட்டவட்டமாக, அவ்வாறு ஒதுக்கினால் 'கைத்தறி, கார் இரண்டும் அழிந்து விடும்' என்று சொன்னேன். ஸ்டாண்டர்டு கிளாத்தை மில்லுக்கு ஒதுக்கிவிட்டால் இந்த இரண்டு தொழிலும் அழிந்து விடும் என்ற அச்சத்தை எல்லாம் தெரிவித்தது, இந்த அறிவிப்பெல்லாம் வருவதற்கு முன்பு, அவசர நிலைப் பிரகடனத்திற்கு முன்பு. அவர்களிடம் விவாதிக்கும்போது திட்டவட்டமாக நம்முடைய



1975 அக்டோபர் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

அரசின் சார்பில் இதெல்லாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே, அதைச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு மத்திய அரசுக்குத்தான் இருக்கிறதே தவிர, மாநில அரசுக்கு எதுவும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்தாவது அம்சம்—'நகர்ப்புற உச்ச வரம்பு—நகர்ப்புறங்களில் அமைந்துள்ள நிலத்தைச் சமூக உடைமையாக்கவும், நகர்ப்புற அனுபோக உரிமைக்கு உச்ச வரம்பு விதிக்கவும் சட்டம் கொண்டு வரப்படும்.'

இது பிரதமருடைய பத்தாவது அறிவிப்பாகும்.

நகர்ப்புறச் சொத்து உச்ச வரம்புக் கொள்கையை வெளியிட்ட அந்தக் காலத்திலேயே நாம் அதை வரவேற்றிருக்கிறோம். எனக்கு நினைவு—மத்தியப் பிரதேச முதலமைச்சர் திரு. சேத்தி அவர்கள் என்று கருதுகிறேன், இதை அறிவித்தார்கள். அவர் 'என்னுடைய மாநிலத்தில் நான் நகர்ப்புற உச்ச வரம்பைக் கொண்டு வரப் போகிறேன், வந்து விட்டேன்' என்றெல்லாம் அறிவித்தார். என்னை அதைப் பற்றி டெல்லியிலும் சென்னையிலும் நிருபர்கள் கேட்டபொழுது, இது ஒரு கவர்ச்சிகரமான கோஷம், நடைமுறைக்கு எப்படி வரும் என்று தெரியாது என்று சொன்னேன். இந்த உச்ச வரம்பில் என்னென்ன பிரச்சினைகள் வரும் என்றால் நகரில் உள்ள காலி மனைகளின் கையிருப்பைக் கட்டுப்படுத்தி வைப்பதா? இந்தக் கேள்விக்கு நாம் பதில் காண வேண்டும்.

கட்டப்பட்டுள்ள வீடுகளின் அளவின் எண்ணிக்கையைப் பொறுத்து உச்ச வரம்பு விதிப்பதா? அல்லது

வீடுகளோ, அத்தகைய காலி மனைகளோ இருக்கக்கூடிய இடத்தின் சொத்து மதிப்பை வைத்து அதன் அளவைக் கட்டுப்படுத்துவதா?

என்ற இந்தப் பிரச்சினையைக் குறித்து நாம் மத்திய அரசுடன் நீண்டகாலமாகக் கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறோம். இந்தப் பிரச்சினைகள் எழுகின்ற நேரத்தில் இந்த உச்ச வரம்புச் சட்டத்தை எப்படி அமல்படுத்துவது என்பதில் குழப்பம் ஏற்படும்;

தமிழ்நாட்டில் ஹரிஜனங்கள், மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்காக உள்ள இல்லங்கள், விடுதிகள் 570. அதில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 35,752. பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்காக உள்ள இல்லங்கள், 231. அதில் பயிலும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 16,332.

இந்த இல்லங்களில் அவர்களுக்கு வேண்டிய இன்றியமையாப் பொருள்கள் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் கட்டுப்பாட்டு விலைக்குத்தான் வழங்கப்பட்டு வருகிறது. ஆக, தொடர்ந்து இதை நாம் பல்லாண்டுக் காலமாக செய்து வருகிறோம். ஆகவே, இந்தத் திட்டம் புதிது அல்ல. ஆகவே, இது ஒன்றும் நாம் நிறைவேற்ற மறுப்பதல்ல. அதைச் செய்து வருகிறோம் என்பதைத்தான் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

"பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு நியாய விலையில் பாட நூல்கள், எழுதுபொருள்கள் வழங்குதல், விலைகள் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்படுதல், புத்தக வங்கிகள் அமைத்தல்" இது 14-வது அம்சத் திட்டம்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள்கூட புத்தக வங்கிகள் ஏற்கனவே அமைக்கப்பட்டு புத்தகங்கள் வெளியிடுவது நாட்டுடைமையாக்கப்பட்டு இருப்பதை அவர்கள் மனம் திறந்து பாராட்டினார்கள். அப்படிப் பாராட்டியதோடு விலைகள் கொஞ்சம் அதிகமாக இருக்கின்றன, அது குறைக்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். ஆகவே அதற்கு விளக்கம் அளிக்க விரும்புகிறேன்.

இந்த இருபது அம்சத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பே, தமிழ்நாடு அரசு மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களைத் தனியார் துறையில் அல்லாமல் அரசாங்கத் துறையிலேயே ஒரு நூல் வெளியீட்டகம் வைத்து அதன் மூலமாக வழங்கவேண்டுமென்று பாடப் புத்தக நிறுவனத்தை அமைத்திருக்கிறதா இல்லையா என்பதை தயவு செய்து மாற்றுக் கட்சியில் உள்ளவர்கள் எண்ணிப்பார்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது ஏற்கனவே அமைக்கப்பட்ட ஒன்று. ஆகவேதான் அதை நாம் நிறைவேற்றி முடித்து விட்டோம் என்றுகூட தைரியமாகச் சொன்னோம்.

விலை குறைக்கப்படவேண்டாமா என்று திரு. கே. டி. கே அவர்கள் கேட்டார்கள். நமது கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் கல்வி மானியத்தின்மீது பேசும்போது அதுபற்றி நிறைய





விளக்கங்கள் எல்லாம் தந்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தின் விலைக்கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் நடைபெற்றிருக்கின்ற குறைபாட்டை இந்த இருபது அம்சத் திட்டத்தை அறிவித்த பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மலிவு விலையில் அச்சுத்தாள்களைப் பெற்று பாட நூல்களை வெளியிடும் தனியார் நிறுவனங்கள் அடக்கவிலையைப் போன்று மூன்று மடங்கு அதிகமான விலைக்கு விற்பதற்கு அனுமதி கோரி அதற்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது. அடக்க விலைக்கு அதிகமான விலையில், மூன்று மடங்கு அதிகமான விலையில் தனியார் நிறுவனங்கள் தங்கள் பாட நூல்களை விற்க மத்திய அரசிடம் அனுமதியைப் பெற்றிருக்கிறது என்பதை மனதில் வைத்துக் கொண்டு இந்தப் பிரச்னையில் நாம் நம்முடைய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுதோறும் 18 லட்சம் மாணவர்களுக்கு, மூன்றும் வகுப்பு வரையில் பயிலும் ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குகிறோம். இதற்காக இதுவரை ஆகியுள்ள மொத்தச் செலவு ஏறத்தாழ 86 லட்சம் ரூபாய்—இதுவரையில் அதற்குச் செலவாகி இருக்கிறது.

விலை அதிகம் என்று சொன்னார்கள். இப்போது என்னுடைய கையில் இருக்கிற இந்தப் புத்தகத்திற்கு, 'ரிசார்ட்ஸன் லிவிங்ஸ்டன்ஸம் டாஸ்க் ஃபார் எஜுகேஷன்' என்ற இந்தப் புத்தகத்தினுடைய பக்கங்கள் 88. இதனுடைய விலை ரூ. 5. இது தனியார் வெளியிட்டிருக்கிற புத்தகம். 88 பக்கங்களுக்கு விலை ரூ. 5.

அடுத்து இந்தப் புத்தகம்—அறிவியல் நம் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தின் வெளியீடு. இது 386 பக்கங்கள் கொண்டது. இதனுடைய விலை ரூ. 4-80 காசு. 88 பக்கங்களுக்கு விலை ரூ. 5, இது தனியார் வெளியீடு. 386 பக்கங்கள் கொண்டதற்கு விலை ரூ. 4-80, இது நம் தமிழ் நாடு பாட நூல் நிறுவனம். நமது அரசின் முயற்சியால் நிறுவப்பட்ட நிறுவனம்.

அடுத்து, மூன்றும் வகுப்புப் புத்தகம். புவியியல்—இது தனியார் வெளியிடுவது. மாணிக்கம் கம்பெனி என்ற தனியார் கம்பெனி வெளியிடுவது. இதிலே எந்தவிதமான வண்ணப் படங்களும் கிடையாது. வெளியிலே இரண்டு கலர்படங்கள்தான்

இருக்கின்றன. இந்தப் புத்தகத்தின் பக்கங்கள் 44. இதன் விலை ரூ. 1-50 காசு. இதற்கு அரசாங்கம் அடக்கவிலையில் தாள் கொடுக்கிறது. அரசாங்கம் அடக்கவிலையில் தாள் கொடுத்தும் 44 பக்கங்களுக்கு விலை ரூ. 1-50. இதைத் தனியார் நிறுவனம் வெளியிடுகிறார்கள்.

அதே மூன்றாவது வகுப்புப் புத்தகம் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வெளியிட்டது 64 பக்கங்கள், விலை ஒரு ரூபாய். எவ்வளவு அழகான படங்கள்! உள்ளே பல வண்ணப்படங்கள். இவ்வளவு படங்கள் போடப்பட்டது ஒரு ரூபாய் விலை. (குறுக்கீடு) நான் இவைகளை விற்பதற்காகச் சொல்லவில்லை. தங்கமணி அவர்களுக்கு விளக்கம் அளிப்பதற்காகச் சொல்கிறேன்.

இந்தியாவிலேகூட பல மாநிலங்களில் இந்த நூல்கள் வெளியிடுவது தேசியமயமாக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்த்தால், புள்ளிவிவரங்களைப் பார்த்தால், இராஜஸ்தானில் ஒரு பக்கத்திற்கு 1.08 காசு விலையாகிறது. குஜராத்தில் ஒரு பக்கம் 2 காசு விலையாகிறது. இமாச்சல பிரதேசத்தில் ஒரு பக்கத்திற்கு நான்கு காசுகள் விலையாகிறது. தமிழ்நாட்டில் ஒரு பக்கத்திற்கு ஒரே ஒரு காசுதான் விலையாகிறது.

ஆகவே இந்தியாவில் தமிழ் நாட்டில்தான் புத்தகங்கள் மிகக் குறைவான விலையில் தரப்படுகின்றன என்ற விளக்கத்தை நான் நம்முடைய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதோ ஒரு புத்தகம். மார்டின் லூதர் கிங்—வினாக்கள் விடைகள். ஒரு ரூபாய்தான் இதன் விலை. பல தனியார் புத்தகங்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.

நியூ செகன்டரி ஸ்கூல் ஜாக்ரபி என்ற புத்தகம் தனியார் வெளியீடு. புவியியல் ரூ. 13.50. இதனுடைய பக்கங்கள் 420. இது நம் வெளியீடு—பெயர் அறிவியல், 402 பக்கங்கள், விலை ரூ. 4-80. பதின்மூன்றரை ரூபாய் எங்கே, நான்கு ரூபாய் எண்பது காசு எங்கே? இதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆக, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இதையெல்லாம் அறிவிப்பதற்கு முன்பாகவே நம் மாநிலத்தில் இத்தகைய பணிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.



அடுத்து, படித்த இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சித் திட்டத்தின்கீழ் பயிற்சி தருதல்—இத்திட்டத்தில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். இது பிரதமர் அறிவித்த 15-வது அம்சத் திட்டம்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ராசாராம் அவர்கள் 107 சதவிகிதத்தைத் தாண்டிவிட்டோம் என்று ஒரு அறிக்கை கொடுத்தார்கள். எனக்கேகூட அது எப்படி 107 சதவிகிதம் என்று ஆச்சரியமாக இருந்தது. பிறகு புள்ளிவிவரங்களை எடுத்துப் பார்த்தால், நம்முடைய மாநிலத்தில் தனியார் துறையில் 4,264 இடங்களும், மாநில அரசுத் துறையில் 2,123 இடங்களும், ஆக மொத்தம் 6,387 இடங்கள் பயிற்சியாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. அதாவது 107.45 சதவிகிதம். நாம் வரையறுத்த இலக்கையும் மிஞ்சி படித்த இளைஞர்களுக்குப் பயிற்சித் திட்டம் அளிக்கப்பட்டு இருக்கிறது.

இதையெல்லாம் விளம்பரப்படுத்த வேண்டாமா என்று அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கேட்டார்கள். கருநாடக மாநிலத்தில் விளம்பரப்படுத்தப்பட்டு இருக்கிறது. "இருபது அம்சத் திட்டம்" என்று பிரதமருடைய படத்தையும் போட்டு—முதலமைச்சருடைய படத்தையும் போட்டு விளம்பரப் படுத்தியிருக்கிறார்கள். இங்கே போட்டால்தான் பாவம். அவர்கள் எல்லாம் போடலாம். இங்கே போட்டால் டெல்லிக்கு தூதே போகும்; ஆனால் மைசூரில் இது பற்றி அவர்கள் தெரிவிக்கும்போது

A specially designed training programme for about 1,000 locally recruited persons during this year in selected growth centres in the State.

என்று போடப்பட்டிருக்கிறது. அதாவது அங்கே, ஆயிரம்தான்; அதாவது விளம்பரப்படுத்தப்பட்ட இடத்தில் ஆயிரம்தான்; இங்கே 6,387 ஆகும். நாங்கள் இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று கண்டனத் தீர்மானம் கொண்டு வருகிறார்கள்.

விளம்பரப்படுத்தவில்லை என்று சொல்கிறீர்கள். (விளம்பரத்தைக்காட்டி) இதைவிடவா பெரிய விளம்பரம் செய்ய வேண்டும்? எவ்வளவு பெரிய விளம்பரம்! இந்த விளம்பரத்தில் நாங்கள் என்ன பிரதமரை விட்டு விட்டோமா? இதில் ஆரம்பத்திலேயே 'பிரதமரின் பொருளாதாரத் திட்டங்களைப் பின்பற்றி' என்றுதான்

தொடங்கியிருக்கிறோம். முடிக்கும்போதும் இந்த விளம்பரத்தில் "பிரதமர் அறிவித்த எஞ்சிய திட்டங்களை நிறைவேற்ற தமிழக அரசு பீடு நடை போடுகிறது" என்று தான் முடித்திருக்கிறோம்.

ஆக இந்த இரண்டு பக்க விளம்பரத்திலும் நாம் என்னென்ன காரியங்களைச் செய்தோம் என்று அறிவித்து இருக்கிறோம். தேவ ராஜ் அர்ஸ்க்கு இருக்கிற உரிமை, தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு இருக்கக்கூடாதா? அவர் என்னென்ன காரியங்களைச் செய்தோம்? செய்யப்போகிறோம் என்று அறிவித்திருக்கிறார். அதைத் தான் நானும் அறிவித்திருக்கிறேன். அவரும் பிரதமரின் பெயரைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்; படமும் போட்டிருக்கிறார்.

நாம் படம் போடவில்லை; காரணம் ஒரு முறை போட்டோம். அதாவது ஆறு கோடி ரூபாய் யுத்த நிதியாக இந்தியாவில் எந்த மாநிலமும் கொடுக்காத அளவிற்கு, கொடுத்த நேரத்தில் யுத்த நிதி கொடுங்கள் என்று கேட்கின்ற ஒரு விளம்பரத்தைப் பிரதமருடைய படத்தையும் முதலமைச்சருடைய படத்தையும் போட்டு வெளியிட்ட விளம்பரத்திற்குப் பெரிய மறுப்பு பிரதமருடைய அலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டது. ஆகவேதான் படம் போட்டால் மறுப்பு தெரிவிப்பார்களோ என்பதற்காகப் படம் போடவில்லையே தவிர விளம்பரத்தை வெளியிட்டு இருக்கிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இப்போது காட்டினார்களே, அந்த மாதிரியா படம் போட்டார்கள்? அதற்கு முறை, தகுதி எல்லாம் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** என்ன முறை, தகுதி என்று சொன்னால் சரியாக இருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அதுதான் பிரைம் மினிஸ்டர் செக்ரெடேரியட்டிலிருந்தே சொல்லியிருக்கிறார்களே, நான் என்ன சொல்வது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பிரதமர் அலுவலகத்திலிருந்து சொன்னதால் படம் போடவில்லை என்றுதான் சொன்னேன். அவ்வளவுதான்.

16 வது அம்சம், "அடிமைத் தொழிலாளர் முறை ஒழிக்கப்பட வேண்டும்". தமிழகத்தைப் பொறுத்தவரையில் அது இல்லை என்று நாம் வாதிக்கிறோம். ஓரிரு இடங்களில் இருப்பதாகச்



சொல்லப்பட்டாலும், அதற்கு இன்றைக்கு மத்திய அரசு அவசரச் சட்டம் கொண்டு வந்து விட்டது. எங்கேயாவது ஒன்றிரண்டு தலைகாட்டினாலும் நிச்சயமாக அது ஒழிக்கப்படும்; அதில் நமக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை.

17-வது அம்சம். "கடத்தல்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்குத் தனிச் சட்டம் கொண்டு வரப்படும்"—இது மத்திய அரசு கொண்டு வரவேண்டியதாகும். ஆகவே, கண்டனத் தீர்மானம் அங்கே வரவேண்டும். இங்கே கொண்டு வருவது பொருத்தமல்ல.

18-வது அம்சம். "தொழிலில் முதலிடு செய்வதற்கான இப்போதுள்ள முறைகளைத் தளர்த்தி, இறக்குமதி லைசென்சை தவறாகப் பயன்படுத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல்"—இதிலே கம்யூனிஸ்ட் கட்சிக்கு சில அபிப்பிராயபேதங்கள் உண்டு என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் கூட, இது மத்திய அரசு எடுக்கவேண்டிய முயற்சி என்பதை இந்த மாமன்றம் நன்கு உணரும். ஆகவே, இதிலும் தமிழ்நாடு அரசுக்கு எந்தவிதமான பொறுப்பும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

19-வது அம்சம். "சாலைப் போக்குவரத்துக்கான தேசீய அனுமதிச் சீட்டு அளிக்கும் திட்டம்"—இதில் தமிழ்நாடு அரசு மாநிலத்தின் உரிமைகள் பறிபோகாமல் பார்த்துக்கொள்ளுங்கள், இதை ஆதரிக்கிறோம் என்று ஏற்கனவே தெரிவித்து இருக்கிறது. இப்போது ஏதோ 5,700 பர்மிட் லாரிக்கு என்று மொத்தமாக அறிவித்து இருக்கிறார்கள். அதில் தமிழ்நாட்டிற்கு 200 என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவரையில் சர்க்காருக்கு எதுவும் உறுதியாக திட்டவட்டமாகக் கிடைக்கவில்லை. அது பற்றி அந்தத் துறை அமைச்சர் எல்லாம் கலந்து பேசி முடிவெடுப்பார்களோ என்னவோ தெரியவில்லை. இதுவும் மத்திய அரசு செய்து முடிக்க வேண்டிய ஒரு காரியமே அல்லாமல் வேறு அல்ல.

கடைசியாக 20-வது அம்சம். "தனி நபரின் வருமானத்தின் மீது விதிக்கப்படுகின்ற வருமான வரியின் வரம்பு ஆண்டு ஒன்றுக்கு ஆறாயிரத்திலிருந்து எட்டாயிரமாக உயர்த்தப்பட வேண்டும்"—இது இருபதாவது அம்சம். இதிலும் நமக்கு எந்த விதமான சம்பந்தமும் இல்லை. மத்திய அரசு விவகாரம். அதுவும் செய்து முடித்து விட்டார்கள்.

அப்படிக் குழப்பம் ஏற்படுகிற காரணத்தால்தான் மத்திய அரசு சார்பிலும் இதுவரை எந்த முடிவையும் அவர்கள் எடுக்காமல் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

ஆனால், அப்படி ஒரு முடிவை எடுக்கிற நேரத்தில் அவர்களுக்கு அனுசரணையாக இருக்கவேண்டும் என்றுதான் இந்த அரசின் சார்பில் நாம் நகர்ப்புறச் சொத்து வரியை அதிகரித்து ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அது மசோதாவாக வந்து, அதிலே சில திருத்தங்களோடு இந்தச் சட்ட மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகிற கருத்துக்களை எல்லாம் அறிந்து, கலந்து பேசி அதை உருவாக்க இருக்கிறோம். அதன்படி யார் யாருக்கு எவ்வளவு சொத்து என்ற அந்த அளவெல்லாம் தெரிந்துவிடுமானால் பிறகு மத்திய சர்க்கார் அந்த உச்ச வரம்பு கொண்டுவரும்போது அல்லது சட்டத்தை எப்படிக் கொண்டு வருகிறார்களோ அதற்கேற்றபடி நாம் இப்போதே அவர்களுக்கு வழிமுறைகளைத் தேடித் தருகிறோம். இதை எந்த மாநிலமும் செய்யவில்லை. ஆகவே, இந்த அம்சத்தைப் பொறுத்த வரையிலும், 10-வது அம்சத்தைப் பொறுத்தவரையிலும் கூட நம்முடைய மாநிலத்திலே அதை நிறைவேற்றுவதற்கேற்ப அடிப்படையை அமைத்துக் கொடுக்கிறோம். அது விரைவில் சட்ட மன்றத்தில் வர இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மத்திய அரசு நகர்ப்புற சொத்துக்களுக்கு உச்ச வரம்பு விதிக்கும் சட்டத்தைக் கொண்டு வரும் வரையில் காத்திருக்காமல் சில மாநிலங்கள் ஏற்கனவே செய்தது போல் நீங்களும் சட்டத்தைக் கொண்டு வரக் கூடாதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 'எந்தெந்த மாநிலத்தில் செய்திருக்கிறார்கள்? எப்படி எப்படிச் செய்திருக்கிறார்கள்?' என்று சொன்னால் புரிந்து கொள்ளலாம். எழுதிக் கொடுங்கள். ஒன்றும் சொல்லாமல் எதையாவது சொல்லிவிட்டு ஆடிக் கொண்டே இருந்தால் எப்படி?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மத்தியப் பிரதேச முதலமைச்சர் சேத்தி கொண்டு வந்ததாக நீங்களே சொன்னீர்களே,



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சொன்னார் அவர். சொன்னாரேயொழிய செய்தாரா என்று தெரியவில்லையே. சொல்லுகிறார்கள். செய்வதில்லையே. (டாக்டர் ஹாண்டே குறுக்கிடு) ஹாண்டே அவர்கள் சொல்லுகிறார்கள், 'அங்கு நகரமே இல்லை, நாகபூர் மட்டும் தான் இருப்பதாக'. நகரமே இல்லாததால் சுலபமாகச் சொல்லலாம்.

11 ஆவது அம்சம்—"நகரச் சொத்தைக் குறைத்து மதிப்பீடு செய்தலைத் தடுக்க சொத்துக் கணக்குகளை மதிப்பீடு செய்ய ஸ்பெஷல் ஸ்குவாட். வருமான வரி ஏய்ப்போர் மீது கடும் தண்டனை".

இது கறுப்புப் பணத்தை கண்டுபிடிப்பதற்காக அம்மையார் அவர்கள் பிரகடனப்படுத்திய ஓர் அம்சம்.

நம்முடைய சட்ட மன்றத்தில் 1973 ஆம் ஆண்டில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். கே. டி. கே. அவர்கள்தான் அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவீர்களா என்று கேட்டார்கள். நிறைவேற்ற முன்வந்தால் நீங்கள் ஆதரிப்பீர்களா என்று கேட்டேன். மார் தட்டி நிச்சயமாக ஆதரிப்பேன் என்று சொன்னார். நாங்களெல்லாம் கே. டி. கே. அவர்களே ஆதரித்தால் மத்திய அரசு நிச்சயமாக அதனை ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து இங்கே நிறைவேற்றினோம்.

"நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார முறைகேடுகள், விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவற்றுக்குக் கறுப்புப் பணத்தின் புழக்கமே முக்கிய காரணம் என்பதை இந்தச் சட்டப் பேரவை எடுத்துக் காட்டியுள்ளது.

கறுப்புப் பணத்தைக் கண்டுபிடித்து வெளிக் கொணர வாஞ்சு குழு தெரிவித்த பரிந்துரைகளில் கண்டுள்ளபடி மத்திய அரசுக்குள்ள அதிகாரங்கள் மாநில அரசுக்கும்—மாநில அரசுக்கு மட்டும் அல்ல; மாநில அரசுக்கும் என்று இரண்டு அரசுக்கும் இருக்கட்டும் என்று—மாநில அரசுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று இந்த மன்றம் வலியுறுத்தியுள்ளது" என்ற தீர்மானத்தை

ஆக, இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தீர்களே, அதில் நான்கைந்தை யாவது குறைத்து விட்டு பதினைந்து அம்சத்தை நிறைவேற்றவில்லை என்றல்லவா கொண்டு வந்திருக்க வேண்டும். மத்திய அரசின் பொறுப்பு என்னென்ன, மாநில அரசின் பொறுப்பு என்னென்ன என்பதைக் கூட புரிந்து கொள்ளாமல், மொத்தமாக இருபது அம்சத்தையும் நாங்கள் நிறைவேற்றவில்லை என்று நீங்கள் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தது பொருத்தமல்ல; என்னிடம் காட்டியிருந்தால், உங்கள் தீர்மானத்தைத் திருத்திக் கூட கொடுத் திருப்பேன். அதை நீங்கள் செய்யவில்லை.

திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20 அம்சங்களையும் பற்றிச் சொல்லிவிட்டதாகச் சொல்கிறார். பாண்டட் லேபரைப் பற்றி அவர்கள் ஒன்றும் சொல்ல வில்லை. அதுவும் அதில் ஒரு அம்சம் தான். அதை விட்டு விட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பாண்டட் லேபரைப் பற்றிச் சொல்லும்போது அம்மையார் அவர்கள் சபையில் இல்லை. பாண்டட் லேபரைப் பற்றி சொல்லிவிட்டேன். பாண்டட் லேபர் பற்றி இந்திய அரசாங்கமே சட்டம் கொண்டு வந்து விட்டது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இந்த பாண்டட் லேபர் ஒழிக்கப்படவேண்டுமென்று கூறிய அமைச்சர், இந்திரா காந்தி அம்மையார் கட்சியைச் சேர்ந்த அமைச்சர், கருநாடக மாநிலத்தில் இருக்கிற அமைச்சர், அந்தக் கட்சியிலுள்ள அமைச்சர் இந்த பாண்டட் லேபர் ஒழிக்கப்படவேண்டுமென்று சொன்ன காரணத்தால் அவரே ஒழிக்கப்பட்டார் (கைதட்டல் சிரிப்பு).

திருமதி த. ந. அனந்தநாயகி : அம்மையார் அவர்கள் எந்த ஆதாரத்தை வைத்துப் பேசினார்கள் என்று சொன்னால் பரவாயில்லை. அவர்கள் இஷ்டத்திற்கு எதை வேண்டுமானாலும் சொல்லிவிடு வார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஆதாரம் அற்ற முறையில் நான் எப்போதும் பேசவே மாட்டேன். எப்போதும் என்னு டைய பொறுப்பு அதிகம் என்பதை நான் உணர்ந்து இருக் கிறேன்.





திரு. கே. டி. கே. தங்கமணி : ஜூலை 1-ம் தேதிக்குப் பிறகு, இந்த பாண்டட் லேபர் ஒழிக்கப்படவேண்டுமென்று அறிவித்ததற்குப் பின்னால், அது கன்கரன்ட் சப்ஜக்ட் என்ற நிலை இருப்பதால், பல மாநிலங்களில், அதிலும் குறிப்பாக ஆந்திரா, கேரளா, ஒரிசா, உத்தரப் பிரதேசம், பீகார், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் எல்லாம் அவசரச் சட்டம் கொண்டு வந்து இருக்கிறார்கள். அப்படி அங்கேயெல்லாம் அவசரச் சட்டம் கொண்டு வந்து இருக்கிறபோது தமிழ்நாட்டில் ஏன் அவசரச் சட்டம் கொண்டு வரவில்லை? ஏற்கனவே நீங்கள் சொன்ன காரணம் தமிழ்நாட்டில் பாண்டட் லேபர் இல்லை என்பது எந்த விதத்தில் ஒத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது என்று தெரியவில்லை. அப்படி பாண்டட் லேபர் இருக்கும் நிலையில் அந்தமாதிரி அவசரச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றவில்லையே, ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அவசர நிலை வந்த உடனேயே அரசு உடனடியாக அது பற்றி பரிசீலித்து, ஆராய்ந்தது. நீலகிரி மாவட்டத்தில் இருப்பார்களோ என்று கற்பனை செய்து கொண்டு பார்த்தோம். அந்த இடத்திலும் இல்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் எந்த இடத்திலும் தற்போது அந்த நிலை இல்லை. ஆகவே, அது குறித்து சட்டம் கொண்டு வரக் கூடிய சூழ்நிலை வரவில்லை.

திருமதி சத்தியவாணிமுத்து : அக்ரிமென்ட் எழுதிக்கொண்டு இல்லையென்றாலும், கடன் பத்திரம் மூலம் சில குடும்பங்கள், சில குடும்பங்களுக்கு அடிமையாக வேலை செய்கிறேன் என்று எழுதித் தந்து இருக்கிற நிலை இருக்கிறது. அதைக் கட்டாயம் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டேன். பாண்டு மூலமாக இல்லாவிட்டாலும், கடன் பத்திரம் மூலமாக இன்னார் இன்னாருக்கு இறுதி வரை வேலை செய்ய வேண்டும் என்று முறை இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அப்படிப்பட்ட சூழ்நிலை இங்கே இல்லை. வட நாட்டில் இருக்கும் பிரச்னையை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள். வடநாட்டைப் பற்றி அம்மையாருக்குத் தெரியாது. வடநாட்டில் இருக்கும் அரசாங்கங்கள் அதற்குச் சட்டம் போட்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட நிலை எந்த இடத்திலும் இல்லை.

1973 ஆம் ஆண்டிலேயே நிறைவேற்றி இந்த 11 ஆவது அம்சத்திற்கும் அப்போதே அச்சாரமாக நம்முடைய ஒப்புதலை அளித்திருக்கிறோம். ஆகவே, இதிலும் பிரச்சினை இல்லை.

12 ஆவது அம்சம்—"தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கும் மூலதனத்தில் ஆதாயமும் வழங்கும் திட்டம்." இது பிரதமர் அறிவித்த மற்றொரு திட்டம்.

இந்தத் திட்டத்தை 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்தே நாம் நடைமுறைப்படுத்த வலியுறுத்தி வந்திருக்கிறோம். இதற்கான ஒப்புதல் 1973 ஆம் ஆண்டில் இருந்து மத்திய சர்க்காரிடம் இருந்து நமக்குக் கிடைக்கவில்லை. கிடைத்ததெல்லாம்—இது பாராட்டப்பட வேண்டிய ஒரு நடவடிக்கை என்ற ஒரு கடிதந்தான் கிடைத்தது. ஆனால், 1973 இல் இருந்து 1975 வரை எந்தவிதமான ஒப்புதலும் கிடைக்காமல் இன்றைக்குப் பிரதமர் அவர்களிடத்தில் இருந்து அறிவிப்பு வருகிறது.

கதாசிரியராக இருந்த அனுபவத்தில் ஒன்று சொல்கிறேன். கதாசிரியர் கதைகளை எழுதி யாரிடத்திலாவது கொடுத்தால் அதை யார் கொடுத்தார்கள் என்பதை வெளியில் சொல்லாமல் தங்கள் பெயரில் வெளியிட்டு விடுவது. அதுபோல் இந்தத் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பும் லாபத்தில் பங்கும் வழங்குகின்ற இந்தத் திட்டத்தை நாம் 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே அறிவித்து மத்திய அரசிடம் இதற்கான ஒப்புதலைக் கேட்டோம். ஒப்புதல் கிடைப்பதில் என்ன சிக்கல் என்றால்—இதற்கு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூடச் சொன்னார்கள் முதலீடு செய்வது கூடாது என்று. முதலீடு செய்தால் தொழிலாளர்களுக்கு நஷ்டத்தில் பொறுப்பு ஏற்க வேண்டிய அவசியமில்லை, லாபத்தில் அவர்களுக்கு பங்கு, ஆகவே முதலீடு செய்யவேண்டிய தேவை இல்லை. இதிலே ஒரே ஒரு சிக்கல் என்னவென்றால் வருமான வரி கொடுத்த பிறகு டிவிடென்ட் பிரிக்கக்கூடாது. டிவிடென்ட் பிரித்த பிறகு வருமான வரி கொடுக்கவேண்டும். இவ்வளவுதான் சொன்னோம். அப்போதுதான் தொழிலாளர்களுக்குத் தொகை அதிகமாகக் கிடைக்கும். இதற்கு ஏற்ற வகையில் கம்பெனி லாவைத் திருத்திக் கொடுங்கள் என்று மத்திய அரசைக் கேட்டோம்.



**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் புரிந்து கொண்டதைச் சொல்கிறேன். 'வொர்க்கர்ஸ் பார்டிஸிபேஷன் இன் இன்டஸ்ட்ரீஸ்' என்று சொன்னால் ஏற்கனவே இருக்கக்கூடிய தொழிலில், அது தனியார் தொழிலாகவும் இருக்கலாம் அல்லது பொதுத் துறையிலும் இருக்கலாம். தனியார் துறையாக இருந்தாலும் சரி அல்லது பொதுத்துறையாக இருந்தாலும் சரி தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு இருக்க வேண்டும், உற்பத்தியில் பங்கு இருக்க வேண்டும். விநியோகத்தில் பங்கு இருக்க வேண்டும். இது என் கருத்து என்றுதான் சொன்னேன். அந்த மாதிரியாக இன்று பாங்குகளில் அந்தத் தொழிலாளர்களுக்குக் கொஞ்சம் பங்கு கொடுத்திருக்கிறார்கள். அதேமாதிரி, நமது அரசாங்கம் நடத்தக்கூடிய போக்குவரத்து இலாக்காவிலே அல்லது மின்சார இலாக்காவிலே அம்மாதிரியான—ஒரு நிலையை எடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயாராயிருக்கிறதா? அதற்கு எந்தவிதமான பணமும் தேவை இல்லை. அதற்கு எந்தவிதமான அங்கீகாரமும் தேவை இல்லை. தமிழ்நாடு அரசாங்கம் அல்லது எந்த மாநில அரசாங்கமானாலும் தங்களிடமுள்ள அதிகாரங்களை வைத்து அதைச் செய்யலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நிர்வாகத்தில் அவர்களுக்கும் பொறுப்பு உண்டு என்று எடுத்துச்சொல்லியிருக்கிறோம். நிர்வாகத்தில் பொறுப்பு இல்லாமல் முதலீட்டில் மட்டும்தான் என்று அரசு சொல்லவில்லை. நிர்வாகத்திலும் பொறுப்பு, முதலீட்டிலும் பங்கு என்று சொல்லியிருக்கிறோம். நஷ்டம் வந்தால் எந்தத் தொழிலாளரும் பாதிக்கப்படக்கூடாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். ஆகவே, இதில் எந்த விதமான சிக்கலும் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன். 1973-ம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே நாம் இதை நிறைவேற்றத் தொடங்கியிருக்கிறோம். ஆகவே, நாம் நிறைவேற்றத் தொடங்கி விட்டோம் என்பது ஒரு குற்றமாகாது.

அடுத்து, 13-வது அம்சம். "ஏழை மாணவர்கள் படிக்கும் மாணவர் இல்லங்கள், அவர்கள் தங்கும் விடுதிகள் ஆகியவற்றுக்கு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு விலையில் வழங்கப்படும்." இது பிரதமர் அவர்களுடைய 13-வது அம்சத் திட்டம்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** நான் அமைச்சராக இருந்த போது லோக் சபையிலிருந்து இப்படிப்பட்ட கேள்விக்குப் பதில் கேட்டு இருந்தார்கள். அப்போது அதிகாரிகள் சொன்னார்கள், நமது மாநிலத்தில் கூட சேலம், கோவை போன்ற மாவட்டங்களில் இன்னும் அந்த முறை இருக்கிறது என்று. அதைத்தான் நான் இப்போது பிடிவாதமாக பேசிக்கொண்டு இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் வேண்டுமானால் இல்லை என்று சொல்லலாம். மக்கள் மத்தியில் இருக்கும் நிலையைப் பார்த்து விட்டு வந்து நாங்கள் சொல்கிறோம். அதிகாரிகளைக் கேட்டால் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் மத்திய அரசுக்கு அவர்கள் அந்த பதிலைத் தரவில்லை.

**திரு. மு. சின்னசாமி:** கோயம்புத்தூர் மாவட்டத்தில் அப்படிப் பட்ட முறை கிடையவே கிடையாது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** எனக்கு சேலம், கோவை மாவட்டங்களில் தெரியாத கிராமமே கிடையாது. அப்படிப்பட்ட விண்ணப்பம் ஒருவரிடமிருந்து கூட அரசிடம் வரவில்லை. அந்த நிலை உள்ளபடியே இல்லை.

DR. H. V. HANDE: Now the Hon. Ex-Minister for Harijan Welfare has said categorically that during her ministership, such information was given to her by respective Collectors. Now, the present Hon. Minister for Labour refutes that. So, will the Hon. Chief Minister come forward to give an assurance that the whole matter will be examined *de novo* so that we need not waste the time of the House. Now that there is a controversy raised over one of the points mentioned in the 20 point programme of the Prime Minister, will the Chief Minister categorically give an assurance that the whole thing will be looked afresh and fresh information collected and given to the House.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இது முடிந்து போன பிரச்னை. இந்த அடிமை முறை மறைமுகமாக இருப்பதாகச் சொன்னார்கள். அப்படியே ஒன்றிரண்டு இடங்களில் இருந்தாலும் அது ஒரே அடியாக அழிந்து விடுவது உறுதி. இன்று இந்திய அரசு ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து விட்ட தால் இந்தப் பிரச்னை அடிபட்டுப் போகிறது. ஆகவே, இதைப் பற்றிப் பெரிது படுத்தி நாம் பேசவேண்டியது இல்லை.



10 அம்சத் திட்டங்கள் தான் 20 அம்சத் திட்டங்களாகப் பெருக்கெடுத்து இருக்கின்றன என்பதை நான் முதலில் எடுத்துச் சொன்னேன். அதைப் பற்றி 'மெயின் ஸ்ட்ரீம்' என்ற ஒரு பத்திரிக்கை, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்குத் தெரிந்த பத்திரிக்கை என்று நினைக்கிறேன், அதன் ஆசிரியர், நிக்கல் சக்ரவர்த்தி அவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் என்பது எனக்குக் கிடைத்துள்ள தகவல். இது சரியாக இருக்கும் என்றும் கருதுகிறேன். இல்லையென்றால் நண்பர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இல்லையென்று மறுத்து இருப்பார்.

அந்தப் பத்திரிக்கையில் ஆசிரியர் நிக்கல் சக்கரவர்த்தி, அப் பத்திரிகையின் 13-வது ஆண்டு மலரில் வெளி வந்திருக்கிறது. அந்த மலருக்கு நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களும் ஒரு வாழ்த்துச் செய்தி வழங்கியிருக்கிறார்கள். அந்த மலரில் மத்திய அரசின் அமைச்சர்களெல்லாம் கட்டுரை தீட்டியிருக்கிறார்கள். "எடிட்டர்ஸ் நோட்புக்" என்று தலையங்கம் தீட்டியிருக்கிறார். வலது கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் நிக்கல் சக்கரவர்த்தி, முதல் ஆசிரியர், இந்த திட்டங்களைப் பற்றி

"On the programmatic plane, there is noticeable advance ஒரு பெரிய மாற்றம் இருக்கலாம் from mere passing party-level resolutions promising reforms (and in this respect, too, one can of course, claim progress from the Ten Points of 1967 to Twenty Points of 1975) there is all round exhortation by Public leaders at different tiers of relevance, calling upon the flocks under their command to take up the implementation of the declared programme. From resolutions to exhortations marks a perceptible advance to commitment".

அதாவது வெறும் தீர்மானங்களிலிருந்து மக்களை ஊக்குவிக்கக் கூடிய அளவிற்குப் பேசுகிற முன்னேற்றம்தான். 10 அம்சமாக இருந்தது 20 அம்சமாக வந்ததே ஒரு பெரிய முன்னேற்றம் என்று கூறியிருக்கிறார். இந்த அளவிற்கு கேலி புரிகின்ற இதனுடைய ஆசிரியர் 20 அம்சத் திட்டத்தைப் பற்றி இன்னொரு இடத்திலே குறிப்பிடும்போது,

Sri C. Subramaniam's plan for setting up rural banks with the World Bank's funds but without taxing the rural rich deserves serious note of every patriotic Congressman. சுப்பிரமணியம்

இந்தியாவில் இருக்கிற பணக்காரர்களிடத்தில் இருந்து ரூரல் பாங்கிகளுக்கு பணத்தைப் பெறுவதை விட "வோர்ல்ட் பாங்க்"— இடமிருந்து பெறவேண்டும் என்று சொல்வதை தேச பக்தியுள்ள காங்கிரஸ்காரர்கள் சிந்திக்கவேண்டும். சுப்பிரமணியம் யார் என்று எனக்குத் தெரியவில்லை. தேச பக்தியுள்ளவர்கள் சிந்திக்க வேண்டும்.

Those who think that the popularisation of the 20 point programme is by itself a guarantee for socio-economic advancement tend to forget that the first party to welcome it முதன்முதலில் வரவேற்றவர்கள்
the first party to welcome it within a couple of hours of its announcement, as pragmatically realistic was the Federation of Indian Chambers of Commerce and Industry, who have already been fortified by the Prime Minister's official assurance against further nationalisation.

இனிமேல் தேசிய மயம் எதுவும் ஆக்கப்படமாட்டாது என்று பிரதம மந்திரி உறுதிமொழி வெளியிட்டதும் முதன் முதலில் அப்படி அறிவிக்கப்பட்ட 2 மணி நேரத்திற்குள் அதனை ஆதரித்தவர்கள் யார் என்பதை நிக்கல் சக்கரவர்த்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பெருமை மிகுந்த உறுப்பினர், குடியரசுத் தலைவரால் வாழ்த்துரை வழங்கப்பட்ட 'மெயின் ஸ்ட்ரீம்' பத்திரிக்கையின் ஆசிரியர், அதன் 13-வது ஆண்டு மலரில் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது ஒன்றில் இருந்தே இந்த 20 அம்சத் திட்டத்திற்கு எப்படிப்பட்ட வரவேற்பு சாதாரண மக்களின் சார்பாக அளிக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இருபது அம்சத் திட்டத்தை நம்முடைய கையிலே கொடுத்து விட்டு, இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எந்தவிதமான நிதி ஆதாரங்களையும் பெருக்குகின்ற வழி வகைகளைச் சொல்லாமல் அல்லது சொல்வதற்கு முன் வராமல் நம்முடைய பெரியவர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் எடுத்துச் சொன்னது போல, பாராளுமன்றத்திலே இதற்கு ஒரு பாராட்டு தெரிவித்தார்களேயல்லாமல், பாராளுமன்றத்திலே இந்த 20 அம்சத் திட்டத்திற்கு இவ்வளவு நிதி ஒதுக்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்களா, அல்லது எல்லா முதலமைச்சர்களையும் அழைத்து, தேசிய வளர்ச்சிக் குழுவைக் கூட்டி, எந்தெந்த மாநிலத்தில் நிறைவேற்றப் போகிறீர்கள், எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள், இதுவரை





செய்யப்பட்ட காரியங்கள் என்னென்ன, இனி செய்யப்பட வேண்டிய காரியங்கள் என்னென்ன, இதற்குத் தேவையான நிதி உதவி எவ்வளவு என்று கேட்டார்களா என்றால் கிடையாது.

அது மாத்திரமல்ல. வானொலியில் பேசிய பேச்சைத்தான் 20 அம்சத் திட்டம் என்று இன்றைக்கு எடுத்து வைத்துக் கொண்டு 'ஆகா' எவ்வளவு பெரிய புரட்சிகரமான திட்டம் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், அந்தப் பேச்சைப் பிடித்துக்கொண்டு 20 அம்சத் திட்டம், அது ஒரு புரட்சிக்கரமான திட்டம் என்று சொல்கிறீர்களா, இந்தத் திட்டத்தில் எது புரட்சி ?

பிரதம மந்திரி அவர்கள் வானொலிப் பேச்சில் இனிமேல் தொழில்கள் தேசிய மயம் ஆக்கப்படமாட்டாது என்று கூறியிருக்கிறார்களே, அதை ஏன் 21-வது அம்சம் என்று சேர்த்துக்கொள்ளவில்லை? சிலவற்றை மாத்திரம் தேர்ந்தெடுத்து இருபது அம்சம் என்கிறார்கள். உற்பத்தியாளர்களையும், தொழில் அதிபர்களையும் வைத்துக்கொண்டு இனிமேல் தொழில்களை தேசிய மயம் ஆக்கப் போவதில்லை என்று உறுதி அளித்திருக்கிறார்களே, அதனை 21-வது அம்சமாக சேர்த்துக்கொள்வீர்களா ? இது எப்படிப் புரட்சிகரமான திட்டமாகும் ?

இந்த 20 அம்சத் திட்டத்தில் 14, 15 திட்டங்களை நிறைவேற்றிய அரசாங்கத்தை, இன்னும் ஒன்றிரண்டு திட்டங்களை நிறைவேற்ற இருக்கிற அரசாங்கத்தை, இந்த 20 அம்சத் திட்டத்தில் இல்லாத திட்டமாக கடந்த 4, 5 ஆண்டுகளாக கிராமப்புறங்களுக்கு நம்முடைய அதிகாரிகள் சென்று மக்களுடைய கருத்துக்களை அறிகிற மனுநீதித் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டு இருக்கிற இந்த அரசாங்கத்தை. எந்த மாநிலத்திலும் அந்த மாநில அரசு ஊழியர்களுக்குக் கொடுக்காத சலுகை, அரசாங்க ஊழியர்களின் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் என்ற இந்தத் திட்டத்தின் கீழ் ஒன்றரை ஆண்டு காலத்தில் 2,200 அரசு ஊழியர் குடும்பங்களுக்கு தலைக்கு ரூபாய் பத்தாயிரம் வீதம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டு. இந்தத் திட்டத்தை 20 அம்சத் திட்டத்திற்கு மேலாக செய்திருக்கிற இந்த அரசைப் பார்த்து, இந்த அரசு எடுத்துள்ள சமூக நலத் திட்டங்களில், கண்ணொளி, உடல் ஊனமுற்றோர் புதுவாழ்வுத் திட்டம், தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், விதவைகள் நல்வாழ்வு, ஆதரவற்ற அனாதை சிறுவர்களுக்கு

divert the people's attention from the real day-to-day issues. Emergency powers are needed to shield corruption, inefficiency and nepotism in the administration and cover up the bankruptcy in their whole policy and execution. That is clear. The Emergency powers are needed to intimidate the working people and suppress the democratic movement.

மறுபடியும் சொல்கிறார்,

"Emergency means more power for the bureaucracy. Emergency means more power for the Ministers. Emergency means more power to issue threats to the democratic rights and liberties of the people. Emergency means a sword in the hands of the ruling party, to brandish over the heads of the Opposition parties and Emergency means that when the elections take place, you can go and tell the people that if they voted against you, then the Defence of India Rules would be used as has been done in some parts of the country. This is called Emergency."

அந்நியநாட்டுப் பாதுகாப்பு. . .

திரு. கே. டி. கே. தங்கமணி: எமர்ஜன்ஸி அறிவித்தது 1962-ல். அவர் 1964-ல் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார், இனிமேல் அந்தத் தீர்மானம் தேவையில்லை என்று.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவர் எமர்ஜன்சிக்கு விளக்கம் தருகிறார். Emergency means more powers for the bureaucracy. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நீட்டப்படுகிறது என்று விளக்கம் தரப்படவில்லை.

Emergency means more power for the Ministers, Emergency means more power to issue threats to the democratic rights and liberties of the people. Emergency means a sword in the hands of the ruling party, to brandish over the heads of the Opposition parties and Emergency means that when the elections take place, you can go and tell the people that if they voted against you, then the Defence of India Rules would be used as has been done in some parts of the country.. This is called emergency.'

இரண்டாண்டுக் காலம் தாமதித்து எமர்ஜன்சி என்று பூபேஷ் குப்தா சொல்லவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு உள்ள நெருக்கடி நிலைக்கு என்று சொல்லவில்லை. ஆக, நெருக்கடிக்குப் பிறகு அவர்





தருகின்ற விளக்கம் இது. இந்த விளக்கம் அப்போதுதான் என்றில்லை; பொதுவாக நெருக்கடி நிலை என்பதற்குத்தான் விளக்கங்களைச் சொல்கிறார். அவை எப்போதும் நெருக்கடி நிலை பிரகடனத்திற்குப் பொருந்தும்.

சில பேர் கேட்டார்கள். அண்ணா இருந்தால் இதை ஆதரித்து இருப்பார்கள் என்று சொன்னார்கள். ஏதோ அண்ணாவுடனேயே நெருங்கிப் பழகியவர்களைப்போல, என்னைப்போல, நாவலரை போல, பேராசிரியரைப் போல, மதியைப் போல, மற்றவர்களைப் போல நெருங்கிப் பழகியதுபோல சொன்னார்கள். சத்தியவாணி முத்து அவர்கள் கூட இருந்திருக்கிறார். நான் மறுக்கவில்லை. ஆனால் அண்ணாவுடனேயே நெருங்கி இருந்தவர்களைப்போல சிலர் பேசுகிறார்கள்.

ஆனால் நெருங்கி இருந்த சத்தியவாணிமுத்து அம்மையார் பேசியதுதான் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. அண்ணா இதை ஏற்கெனவே ஆதரித்து இருக்கிறார் என்று கூட சொன்னார்கள்.

நண்பர் சீனிவாசன் அவர்கள் கூட இதை அண்ணா வழியில்தான் ஆதரிக்கிறோம் என்று சொன்னார்.

1966 பிப்ரவரி திங்களில் பாராளுமன்றத்தில் இரு அவைகளையும் தொடக்கிவைத்து குடியரசுத் தலைவர் ஆற்றிய உரையின்மீது மாநிலங்கள் அவையில் அண்ணா அவர்கள் பேசுகிறார்கள். அதையும் இங்கே குறிப்பிட விழைகிறேன்.

"I would request and demand of this Government to repeal this Emergency and this D.I.R. They have got enough powers with the laws that they have, to deal with any mischief, with any anti-social elements......

Why are they apprehensive of their own people? .........

Therefore, I would demand of this Government that they should forthwith lift this Emergency and this D.I.R., and release those who are kept in jail......And unless and until they do that,

இதுதான் முக்கியம்.

they would not have a claim to decency and democracy. To the Public the first and foremost and the one question that they will have to answer will be, "Why do you keep this Emergency and the D.I.R. ?"

அண்ணா வழியைப் பின்பற்றித்தான், அன்றைக்கு நெருக்கடி நிலைபற்றி அண்ணா அவர்கள் எந்தக் கருத்தைக் கொண்டிருந்தார்களோ அந்தக் கருத்தை பின்பற்றித்தான் திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு தீர்மானத்தை வடித்தெடுத்தது.

கம்யூனிஸ்ட் கட்சி 1964-ல் ஒரு கருத்து, 1974-ல் ஒரு கருத்து, 1975-ல் ஒரு கருத்தைக் கொள்ளலாம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் அரசியல் பாரம்பரியம் மிக்க ஒரு கட்சியாக பேரறிஞர் அண்ணா அவர்களால் வளர்க்கப்பட்ட காரணத்தால் நமக்கு உறவாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் நியாயங்களின் தன்மையைப் பார்த்து நம்முடைய கழகத்தின் கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்ற அந்த அடிப்படை அரசியல் இலக்கணத்தை வகுத்துத்தந்த அண்ணா அவர்கள் அன்றைக்குச் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் அண்ணா அவர்கள் நெருக்கடி நிலையில் என்ன கருத்தைக் கொண்டிருந்தார்களோ அந்த கருத்தின் அடிப்படையில்தான் முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு தன்னுடைய தீர்மானத்தை நிறைவேற்றியது.

டாக்டர் ஹாண்டே பேசும்போது சொன்னார்கள், செயற்குழுவில் ஒரு தீர்மானம், கடற்கரையில் ஒரு தீர்மானம், நெல்லையிலே ஒரு தீர்மானம், இப்படி ஏன் ஒன்றோடொன்று முரண்பட்டு, பின்வலித்துக்கொண்டீர்கள் என்றெல்லாம் கேட்டார். அவர்கள் கேட்டது எப்படி இருந்தது என்றால், "நீங்கள் இன்னும் வேகமாக அல்லவா போயிருக்க வேண்டும்" (சிரிப்பு) என்று சொல்வதுபோல் இருந்தது. அவரெல்லாம் இங்கே இருந்திருந்தால் அப்படிப்பட்ட யோசனைகளைச் சொல்லி இன்னும் வேகமாகப் போய்க்கொண்டிருங்கள் என்று சொல்லியிருப்பார் போலும். அந்த அளவிற்கு மத்திய சர்க்கார் மீது அவர்களுக்கு அவ்வளவு ஆத்திரம் இருக்கிறது. மத்திய சர்க்கார் "நெருக்கடி நிலையைக் கொண்டு வந்து, நம்மை நெருக்கடியில் விட்டுவிட்டார்களே ; அதை எதிர்க்க வேண்டுமே ; நம்மால் எதிர்க்க முடியவில்லையே ; அப்படிப்பட்ட தலைமையின் கீழ் நாம் அகப்பட்டுக்கொண்டோமே" என்று வருந்துகிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஏற்கெனவே நான் பலமுறை இந்த மன்றத்தில் முதலமைச்சருடைய கற்பனைத் திறனைப் பாராட்டி இருக்கிறேன். அந்தக் கற்பனைத் திறனைப் பாராட்



வதற்கு இதன் மூலம் இன்னொரு வாய்ப்பைத் தந்திருக்கிறாரே தவிர, அவர்கள் குறிப்பிட்டது முற்றிலும் மாறான கருத்து என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** அண்ணா அவர்கள் ராஜ்ய சபையிலே போய் தன்னுடைய கருத்தை எடுத்துரைத்தார்கள். அதேமாதிரி, நெருக்கடி நிலைமை வந்தவுடனே, நீங்கள் கடற்கரையிலே, பொதுக் கூட்டத்திலே, செயற்குழுவிலே தீர்மானம் போடாமல் இந்த மன்றத்திலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து கண்டித்திருக்கலாமே.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** போர் வீரனுக்குத் தெரியும், எந்தக் கையிலே வாள் வைப்பது; எந்தக் கையிலே கேடயம் வைப்பது என்று (பலத்த ஆரவாரம்).

தலைவரவர்களே, முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு தீர்மானம் என்ன ?

(1) அவசரக்கால பிரகடனத்தை திரும்பப் பெற வேண்டும்.

(2) நாட்டின் புகழ்மிக்க தியாகத் தலைவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

(3) பத்திரிகைகளின் கைக் கட்டுகளை அவிழ்த்துவிட்டு, பத்திரிகைகளுக்குரிய நியாயமான உரிமைகளைத் தடையின்றி வழங்க வேண்டும்.

இதுதான் எங்கள் கட்சியின் எல்லாத் தீர்மானங்களிலும் உள்ள மைய அம்சம். இப்போது அம்சம் என்றால்தான் எல்லோருக்கும் புரியும் (சிரிப்பு).

அவசரக் கால பிரகடனத்தைத் திரும்பப்பெற வேண்டும் என்பது முதலாவது அம்சம்.

நாட்டின் புகழ்மிக்க தியாகத் தலைவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்பது இரண்டாவது அம்சம்.

பத்திரிகைகளுக்கு உரிய நியாயமான உரிமைகளை தடையின்றி வழங்க வேண்டும் என்பது மூன்றாவது அம்சம்.

இந்த அம்சங்களை எப்படி நிறைவேற்றுவது? "தமிழ் நாட்டு மக்கள் காந்தியடிகள் நெறியை மறவாமலும், ஜனநாயகச் சின்னமாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் பாதையிலிருந்து தவறாமலும், தமக்கே உரிய தனிப் பண்பாட்டுடன், அமைதியான முறையில், வன்முறை தவிர்த்து—வன்முறை இல்லாத வழியில்—சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் ஊறு நேரா வண்ணம் நாட்டுக்கு வந்துள்ள நெருக்கடி நிலைக்குத் தீர்வு காணவேண்டும் என்று இந்தச் செயற்குழு கேட்டுக்கொள்கிறது". இதுதான் முதல் தீர்மானம்.

"காந்தியடிகள் நெறி, அண்ணா அவர்களுடைய வழி, தமிழர்களுக்குரிய தனிப் பண்பாடு, அமைதியான முறை—இவற்றுடன் வன்முறையற்ற முறை. சட்டம், ஒழுங்கிற்கு ஊறு நேராவண்ணம் நாட்டுக்கு வந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டும்". இதில் எந்த இடத்திலும் கிளர்ச்சி செய்யப்போகிறோம் என்று சொல்லவில்லை.

இந்தச் செயற்குழு தீர்மானம் போட்ட பிறகு, என்னை வந்து நிருபர்கள் சந்தித்தார்கள். என்னையும் பொதுச் செயலாளரையும் மற்றவர்களையும் நிருபர்கள் சந்தித்தார்கள். அப்போது அவர்கள், "இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறீர்களே; டில்லியிலே இருந்து வருகிற தாக்கீதுகளை நீங்கள் நிறைவேற்றுவீர்களா, மாட்டீர்களா"?என்று கேட்டார்கள். "என்ன தாக்கீது" என்று கேட்டபோது, "சில்லரை கைது செய்ய வேண்டும்; கள்ளக் கடத்தல்காரர்கள், பதுக்கல்காரர்கள் பட்டியலில் இருப்போரை கைது செய்ய வேண்டும்; சட்ட விரோதமான சங்கங்கள், அமைப்புகள் ஆகியவைமீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற இந்த தாக்கீதுகளை நிறைவேற்றுவீர்களா" என்று கேட்டார்கள்.

அப்போது நான் சொன்னேன்: "செயற்குழு இந்தத் தீர்மானத்தைப் போட்டிருக்கிறதே அல்லாமல், இப்படிப்பட்ட தாக்கீதுகள் டெல்லியிலிருந்து வந்தால் அதை நிறைவேற்ற வேண்டாம் என்று செயற்குழு எனக்குச் சொல்லவில்லை" என்று தெரிவித்தேன். அதுவும் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அந்தவகையில் பார்த்தால் இந்த இரண்டு, மூன்று மாதங்களில் டில்லியினுடைய தாக்கீதுகள், இந்த அவசரச் சட்டத்தின் காரணமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் என்ற முறையில் இந்த அரசுக்கு வந்தன. கடத்தல் பேர்வழிகளை கைது செய்வதாக இருந்தாலும், 'கோபேசா, மிசா'-க்களைப் பயன்படுத்துவதாக இருந்தாலும், சில





கட்சிகள் தடைப்படுத்தப்பட வேண்டும், அவைகளின் கிளை இங்கே இருந்தால் தடை செய்யப்பட வேண்டும் என்று வந்தாலும், நாங்கள் இவைகள் எதையும் புறக்கணிக்காமல், நிர்வாக மோதுதல் இல்லாமல் நடந்து வந்திருக்கிறோம்.

அந்த வழியிலே இந்தத் தீர்மானத்தில் நாம் நெருக்கடிக்கு தீர்வு காணவேண்டும், சட்டம் ஒழுங்கிற்கு ஊறு நேரா வண்ணம் காந்தீய நெறியில், அண்ணா பாதையில் என்று குறிப்பிட்டிருக்கிறோம்.

இதனுடைய தொடர்ச்சிதான் கடற்கரையில் நடந்தது. கடற்கரையில் என்ன கீழே இறங்கி விட்டோம்? டிரில் வாங்கினார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அங்கே கடைசியாக இலட்சக் கணக்கான மக்கள் எழுந்து நின்று எடுத்துக்கொண்ட உறுதி மொழி என்ன?

"எந்த நிலையிலும், எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும் இந்தியாவில் மக்கள் ஆட்சி முறைக்கு கேடு ஏற்படாமல் பாதுகாப்பதற்கு தயங்கமாட்டோம்" என்ற உறுதியை எடுத்துக்கொள்ளுகிறோம்.

"தேசத் தலைவர்கள் விடுதலை, பத்திரிகைகளின் நியாயமான உரிமைகளை வழங்குதல், இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று இந்தியப் பிரதமர் அவர்களை தமிழ் நாட்டு மக்களின் சார்பாக இந்த மாபெரும் கூட்டம் கேட்டுக்கொள்கிறது. வாழ்க ஜனநாயகம்!" என்று இந்த உறுதி மொழியினை கடற்கரையில் நாம் எடுத்துக் கொண்டோம்.

அதில் சொல்லுகிறோமே, "எந்த நிலையிலும் எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும் இந்தியாவில் மக்கள் ஆட்சி முறைக்கு கேடு ஏற்படாமல் பாதுகாப்பதற்கு தயங்க மாட்டோம்" என்று சொல்லுகிறோமே, அதை பாதுகாக்கத் தயங்காத நிலை தான் இந்தச் சட்டமன்றத்தில் கேள்வி பதிலுக்கு இடம் தந்து, ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதியளித்து, கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு இடமளித்து, நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கும் இடமளித்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் தான் அதற்கு நேரத்தில் வாராததால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு இடம் அளிக்காமல் போய் விட்டார்.

[1975 அக்டோபர் 30

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அன்றையதினம் அத்தீர்மானத்தை எடுத்துக் கொள்ளுகிறார்கள் என்ற தகவல் வரவில்லை. பத்து மணிக்கு எடுத்துக்கொள்வார்கள் என்று நினைத்தேன். சாதாரண மாக 10-05-க்குக் கூட கேள்வி நேரம் முடிவதுண்டு. நான் இரண்டு நிமிடங்கள் தாமதமாக வந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கண்டனத் தீர்மானம், நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஆகியவைகளை, அவைகளைக் கொண்டுவந்த முதல் நாள் தான், கேள்வி நேரம் முடிந்த பிறகு முதலில் எடுத்துக்கொள்ளுவதுதான் வழக்கம். அதனால் தான் அன்றைய தினமே எடுத்துக்கொள்ளப்பட்டது.

**திரு. எம். சுரேந்திரன் :** முதலமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தது எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீர் மானத்தைப் பற்றி. அந்தத் தீர்மானமும் அரசினரின் முடிவும் ஒன்று தான் என்று சொன்னீர்களே? இப்போது வந்திருப்பது கண்டனத் தீர்மானம் அரசின் மீது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இங்கே எப்படி சட்டமன்றம் நடைபெற்றது என்பதை வெளியில் பாராட் டாவிட்டாலும் ஜனநாயகத்தில் நம்பிக்கை வாய்ந்த கே. டி. கே. தங்கமணி அவர்கள் மனதார இதனைப் பாராட்டுகிறார் என்பதை நான் அறியாமல் இல்லை. அந்த அளவுக்கு அவர்கள் எதிர்பார்த் திருக்க மாட்டார்கள். பார்லிமென்டைப் போலவே தான் சட்ட சபையும் நடைபெறும் என்று கருதியிருப்பார்கள். பார்லி மென்டில் என்ன நடைபெற்றது? பாராளுமன்றம் கூடுகின்ற அன்றையதினம் எல்லா உறுப்பினர்களுக்கும் ஒரு தாக்கீது வழங்கப்பட்டது.

Office of the Chief Censor, Government of India, Shastri Bhavan : அவர்களிடமிருந்து வழங்கப்பட்ட அறிவிப்பு இது.

Revised Guidelines for the coverage of Parliament Proceedings : என்ற தலைப்பின்கீழ் வெளியாகியுள்ளது.

"The Statements of Ministers may be published either in full or in a condensed form but its contents should not infringe censorship.

The speeches of Members of Parliament participating in a debate will not be published in any manner or form but their names and party affiliation may be mentioned when publishing names of Members who participated in a debate, the fact that they supported or opposed a motion can be mentioned."



1975 அக்டோபர் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

இப்படியெல்லாம் வெளியிடப்பட்டது. ஆனால் நீங்கள் பார்த்தால் ஆளும் காங்கிரஸ் கட்சி தமிழக அரசு மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வந்த அன்று ஆளும் காங்கிரஸ் பத்திரிக்கையின் தலைப்பைப் பார்த்தால் "சட்டசபையில் தமிழக அரசு மீது குற்றச்சாட்டு" என்று செய்தி வெளி வருகிறது. இவ் வாறு "பாராளுமன்றத்தில் மத்திய சர்க்கார் மீது குற்றச் சாட்டு" என்று செய்தி போட்டு, அது வெளிவந்திருக்க முடியும் என்று கருதுகிறீர்களா?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்தப் பெருமை உங்களைச் சார்ந்தது அல்ல. இங்கே உள்ள எதிர்க்கட்சிக்காரர்கள் கண்ணியம் மிக்கவர்கள். எக்ஸ்டிரா கான்ஸ்டிடியூஷனல், அன்கான்ஸ்டி டியூனல் காரியங்களில் ரிசார்ட் செய்வதில்லை. டில்லியில் அவர்கள் தொல்லை கொடுத்தார்கள். இங்கேயுள்ள எதிர்க் கட்சிகள் பண்பாடு உடையவர்கள். அங்கே உள்ள பார்லிமென்டிற்கும். சட்டசபைக்கும் முறைகள் வேறுபடு கின்றன என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பார்லிமெண்டில் சி.பி.ஐ. கூட ஒரு எதிர்க்கட்சி தான் என்பதை அம்மையார் அவர்கள் மறந்து விடக்கூடாது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களை அவ்வளவு கண்ணியமற்றவர்கள் என்று அனந்தநாயகி அம்மையார் சொல்லுவதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சி.பி.ஐ. எங்களுடைய ஒரு தோழமைக் கட்சி, உங்களுக்கு அரை டஜன் கட்சிகள் தோழமைக் கட்சிகள் என்று இருப்பதுபோல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இது சி.பி.ஐ. மீது இரண்டாவது தாக்குதல். பரவாயில்லை.

பிறகு நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற மாநாட்டில் கழகத்தின் பொருளாளர், பேராசிரியர் முன்மொழிந்து, பொதுச் செயலாளர் நாவலர் வழி மொழிந்த தீர்மானத்திலும், இந்தியாவில் இன்றைக்கு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை மாற்றி அமைப் பதற்காக தேவையான முயற்சிகளை மேற்கொண்டு இந்திய நாட்டு முக்கியத் தலைவர்களையும், முதலமைச்சர்களையும் கலந்து விவாதித்து பிரதமரைச் சந்தித்து நாட்டு மக்கள் அனைவரும் மகிழத் தக்க ஒரு

நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் கருணாநிதியை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது' என்று குறிப்பிட்டிருக்கிறது.

இந்தத் தீர்மானம் செயற்குழுத் தீர்மானத்திற்கு எப்படி புறம்பாகும். செயற்குழு தீர்மானத்தில் நாங்கள் கடைசியில் சொல்லியிருக்கிறோமே, "அண்ணாவின் பாதையில், காந்திய நெறியில் அமைதியான முறையில், சட்டம் ஒழுங்குக்கு ஊறு நேராவண்ணம் நாட்டுக்கு வந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டும்" என்று செயற்குழுவில் போடப்பட்ட தீர்மானம் தான் நெல்லை மாவட்ட மாநாட்டுத் தீர்மானம் வரை நீண்டிருக்கிறதே தவிர அது ஒன்றும் பின்வாங்கிவிட்ட தீர்மானம் அல்ல.

ஒவ்வொரு மாநாட்டுத் தீர்மானத்திலும் "தலைவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசர நிலைச்சட்டம் திரும்பப் பெற வேண்டும், பத்திரிக்கைகளுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப் படவேண்டும்" என்று தான் சொல்லியிருக்கிறோம்.

அதையொட்டித்தான் தமிழ் நாட்டிலும் ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சி சார்பாகவும் 3—7—75 அன்று நெருக்கடி நிலையைக் கண்டித்து ஒரு தீர்மானத்தைப் போட்டார்கள். எங்களுடைய தீர்மானத்தில் கூட நான் சொன்னதைப் போன்ற வாசகங்கள் தான்; காங்கிரஸ் கட்சித் தீர்மானம், வேகமாகக் கண்டித்தே கூட போடப்பட்ட தீர்மானம்.

அது மட்டுமல்ல, நேற்றைக்கு பேசிய சில நண்பர்கள் காமராஜர் அவர்கள் அதைப் பற்றி ஏதும் சொல்லவில்லையென்று சொன்னார்கள். இது நவசக்தி பத்திரிகை "அவசர நிலைப் பிரகடனம். தலைவர்கள் கைது செய்யப்பட்டது நாட்டுக்கு நல்லது அல்ல, தலைவர் காமராஜ் எச்சரிக்கை".

**திரு. பெ. சீனிவாசன் :** தட் இஸ் ஆல். அதோடு சரி.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிச் சொல்லுவீர்கள் என்று தான் நிறுத்தினேன். பின்னால் இன்னும் படிக்கிறேன். "சோளிங்கர்—ஜூன் 27, தேசம் முழுவதும் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைக் கேட்டதும் எனக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டார்கள்



என்று தெரியவில்லை. இந்த நிலை நாட்டுக்கு நல்லதல்ல" என்று சோளிங்கரில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் காமராஜர் பேசியிருக்கிறார் என்று 'நவசக்தியில்' செய்தி வந்திருக்கிறது.

இது அடுத்த நாள் நவசக்தி. இதில் கூட "வெள்ளைக்காரன் ஆட்சியிலே கூட நடைபெறாத கொடுமை இப்போது நடைபெற்றிருக்கிறது" என்று காமராஜர் அதிர்ச்சி அடைந்து பேசியிருக்கிறார். அடுத்து அவர் சொல்லியிருக்கிறார். "இனிமேல் நான் பேசுவதெல்லாம் பத்திரிகைகளில் வரப்போவதில்லை; பேசித் தான் பயன் என்ன" என்று குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார். அந்த அளவுக்கு மறைந்த தலைவர் காமராஜர் அவர்கள் பேசிய பேச்சு 'நவசக்தி' பத்திரிகையில் அப்போது வந்திருக்கிறது. இது 28—6—1975 அன்று தேதியிட்டு வெளியிட்ட 'நவசக்தி' ஏடு ஆகும்.

ஹாண்டே அவர்கள் அவசர அவசரமாக பத்திரிக்கையின் தேதியைக் குறித்துக்கொள்கிறார். ஏதோ நான் இப்படி 'முரசொலியில்' ஒரு செய்தியைப் புதிதாக அச்சடித்துக் கொண்டு வந்து விட்டதைப் போல நினைத்துக்கொண்டு குறித்துக் கொள்கிறார்.

அவசர கால நிலை அறிவித்ததற்கு சில காரணங்களை நம்முடைய நண்பர் மாரிமுத்து அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்தபோது இங்கே எடுத்துச் சொன்னார்கள். இயற்கையின் கோளாறால் விலைவாசி ஏறியது. அதற்கு இந்திரா காந்தியா காரணம் என்று கேட்டார். அதே கேள்வியை தமிழ் நாட்டில் கேட்டிருக்கக் கூடாதா? விலைவாசி உயர்வுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் காரணம் என்று போராட்டம் இங்கே நடைபெற்ற போது நம்முடைய மாரிமுத்து அவர்களைப் போன்ற அரசியல் நடுநிலையாளர்கள் அவர்களைச் சந்தித்து விலைவாசி உயர்விற்கு கருணாநிதியா காரணம்? கிடையாது என்று கூறினார்களா என்றால் கிடையாது.

பீகார் கிளர்ச்சியைப் பற்றி அவர்களே குறிப்பிட்டார்கள். அதற்கு அவர்களே விளக்கமும் சொன்னார்கள். பீகார் கிளர்ச்சியைப் பற்றி கர்நாடக மாநிலத்தில் நிருபர்கள் என்னைச் சந்தித்த போது நான் அவர்களிடம் சொன்னேன், "ஐந்து ஆண்டு காலம் ஜனநாயகத்தில் பொறுத்திருக்க வேண்டும். இடையில் அமளி

செய்து ஆட்சியைக் கவிழ்த்து விடுவதை நான் விரும்பவில்லை" இன்னும் தெளிவாகச் சொன்னேன், "நாங்கள் ஆட்சியில் இருப்பதன் காரணமாக அப்படிச் சொல்கிறோம் என்று எண்ண வேண்டாம். நாங்கள் எதிர்க்கட்சியாக செயல்பட்ட அந்தக் காலத்திலும், அண்ணா தலைமையில் செயல்பட்ட அந்தக் காலத்திலும், இந்த முறை நாங்கள் கடைபிடித்த முறையல்ல; இது எங்களுக்குப் பிடித்தமான முறையல்ல" என்பதை நான் பங்களூரில் நிருபர்கள் கூட்டத்தில் மிகத் திட்டவட்டமாக எடுத்துச் சொன்னேன்.

பீகார் கிளர்ச்சிக்கும் கிட்டத்தட்ட 1972-ம் ஆண்டு எங்களை விட்டு சில நண்பர்கள் பிரிந்து சென்ற நேரத்தில் நடைபெற்ற தமிழ் நாட்டுக் கிளர்ச்சிக்கு என்ன வித்தியாசம் என்று பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் கேட்டார்கள். நண்பர் லத்தீப் பேசுகின்ற நேரத்திலே கூட குறிப்பிட்டார்கள். எம்.எல்.ஏக்களை ராஜினாமாச் செய்யச் சொல்லலாமா என்று மாரிமுத்து அவர்கள் கேட்டார்கள். இங்கே எங்கள் உறுப்பினர்களை ராஜினாமா செய்யச் சொல்லி ஊர்வலம் நடத்தினார்கள். ஆனால் அமைதியாக நடத்தினோம் என்று சொன்னார்கள். நான் அந்த விவரங்களுக்குள்ளே எல்லாம் வெகு விளக்கமாகச் செல்ல விரும்பவில்லை.

ஜெயப்பிரகாஷ் அவர்களோ, மொரார்ஜி தேசாயோ, அசோக் மேத்தாவோ அல்லது வேறு சில பிரமுகர்களோ பிரதமர் அவர்களைப் பற்றி வேகமாகப் பேசிவிடுகிறார்கள். ஆகவேதான் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க நேர்ந்தது என்று சொன்னார்கள்.

நான் நண்பர் மாரிமுத்து அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். கோவையில் தேர்தல் நடைபெற்றபோது அண்ணா தி.மு.க. விற்கும் இந்திரா காங்கிரசுக்கும் உறவு இல்லை. அந்த நேரத்தில் கோவையில் நம்முடைய நண்பர் அ.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் பேசியிருக்கிறார், "வீட்டிற்காக பிரதமரா, நாட்டிற்காக பிரதமரா", அவர்கள் ஏடான 'தென்னகத்தில்'

(பிற்பகல் 2-00)

வந்திருக்கிறது, இந்தச் செய்தி. "பிரிவினையைத் தூண்டும் குற்றவாளி இந்திரா காந்திதான்"—கோவைப் பொதுக்கூட்டத்தில் மனோகரன் உரை—இதைச் சென்ற ஆண்டுதான் 6—2—74 இல் கோவையில் மனோகரன் பேசியிருக்கிறார்.





அடுத்தது—புதுவைத் தேர்தலின்போது என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் புதுவைத் தொகுதியோடு சேர்ந்த மாஹியில் சென்று பேசுகிறார். "1971 இல் இந்திரா காந்தி கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டது. ஏன்?" என்று கேட்கிறார். ஆக, வாக்குறுதிகள் தொடர்ந்து காற்றில் பறக்கவிடப்பட்டு வருகின்றன. அது பத்து அம்சத் திட்டமாக இருந்தாலும், அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருக்கிற முகப்புக் குறிக்கோள்களானாலும், இவர்களுடைய இருபத்தெட்டாண்டு கால ஆட்சியிலே தொடர்ந்து காற்றிலே பறக்கவிடப்பட்டு வருகின்றன. அதை எம்.ஜி.ஆர் அவர்கள் மாஹியில் பேசியபோது பிரதமருக்குத் தக்க பாடம் கற்பிப்போம் என்று கூறியுள்ளார். எந்த வகையில் என்று தெரியாது. கோபாலபுரத்திற்கு வந்ததைப் போலவோ, என்னவோ எனக்குத் தெரியாது.

**திரு. பெ. சீனிவாசன்:** தேர்தல் பாடம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தேர்தல் பாடமா?

**திரு. பெ. சீனிவாசன்:** முதலமைச்சர் நன்றாகத் தேடிப் பிடித்து இந்த ஒரே ஒரு ஆதாரத்தை வைத்துக்கொண்டு தேர்தல் நேரத்தில் பேசியதை—தேர்தல் நேரத்தில் தக்க பாடம் என்றால் தேர்தல் பாடம். . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இது அமைதியான பேச்சா? சரி. இன்னொன்றைச் சொல்கிறேன். "இந்திராவைக் கைது செய்." ' அண்ணா தி.மு.க. எம்.பி. மனோகரன் ஆவேசம்—இதுவும் பத்திரிகையில் வந்தது தான்.

இப்படி இந்திராவைக் கைது செய் என்றும், பிரதமர் ஒரு பிரிவினைவாதி என்றும், பிரிவினையைத் தூண்டுகின்ற குற்றவாளி என்றும் பேசிய ஒரு கட்சி இன்றையதினம் ஏதோ தேர்தல் உறவுகள் வரும் என்ற நிலையிலே அவசரச் சட்டம் அல்லது இது போன்ற இருபது அம்சத் திட்டங்கள் இவைகளை வரவேற்று தி.மு. கழகம் இந்தியாவின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிப்பதுபோல இந்திரா காந்தியுடன் தனிப்பட்ட பகைமை கொண்டிருப்பதைப் போலவும் விமர்சிப்பது முறை அல்ல.

நாங்கள் செயற்குழுவிலும் சரி, கடற்கரைக் கூட்டத்திலும் சரி குறிப்பிட்டிருக்கிறோம்.

மிகப் பாரம்பரியம் மிக்க ஒரு தேசீயப் பரம்பரையில் வந்தவர் இன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள். அதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் இருக்கின்ற சங்கடம் அவர் எந்தெந்த பெரியவர்களுடைய மடியிலே குழந்தையாகத் தவழ்ந்தார்களோ—ஜெயப்பிரகாஷ் நாராயணன், மொரார்ஜி தேசாய்—இப்படிப்பட்ட தலைவர்கள் எல்லாம் இன்றைக்குச் சிறையில் அடைபட்டுக் கிடக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்வதின் மூலம் நாட்டில் இன்றைக்கு பெரிய புரட்சி எதுவும் தோன்றிவிடும் என்று யாரும் எதிர்பார்க்கத் தேவையில்லை. அப்படிப்பட்டவர்களை விடுதலை செய்வதும், பத்திரிகைகளின் நியாயமான உரிமைகளை வழங்குவதும் எந்த வகையில் தவறு என்றுதான் நாம் கேட்கிறோம்.

இப்படிக் கேட்பது தேச விரோதமாகாது. இவை தேச விரோதம் என்று வருணிப்பதும், இதை வைத்துக்கொண்டு இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் என்று எண்ணுவதும் நப்பாசையே தவிர வேறு அல்ல.

ஆகவே மீண்டும் சொல்கிறேன்: காமராஜருக்கு நாம் நினைவாலயம் எல்லாம் கட்டுகிறோம். காமராஜருக்கு எவ்வளவோ அழியாத சிறப்புகளை எல்லாம் செய்தோம். போலீஸ் மரியாதை, ராணுவ மரியாதை என்றெல்லாம் செய்தோம். இதை எல்லாம் விட—சிறந்த நினைவாலயமாக காமராஜருடைய தியாகத்தை மதிக்கிறோம் என்பதற்கு அடையாளமாகவாவது—அவருடைய சகாக்கள் சிறையில் இருக்கிறார்களே—அவர்களை எல்லாம் விடுதலை செய்யவேண்டும்.

நான் கொலைகாரர்களுக்காக வாதாடவில்லை. வன்நெஞ்சர்களுக்காக வாதாடவில்லை. சதிகாரர்களுக்காக வாதாடவில்லை. ரத்தப் புரட்சியில்தான் ஒரு நாட்டின் சுதந்திரம் இருக்கிறது என்று சொல்கிற வண்கணாளர்களுக்காக வாதாடவில்லை.

பிரதமரிடம் பேசிய நேரத்திலும் சரி, வேறுபல நேரங்களிலும் சரி, அந்த அம்மையார் விடுத்திருக்கிற அறிக்கைகளிலும் சரி, அவர்கள் கொண்டிருக்கிற உருக்கமான உணர்ச்சிகளை என்னால் உணர முடிகிறது. அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால் பிரதமர் கொலை செய்யப்படுவது என்பதோ, வன்முறைப் புரட்சி நாட்டில் ஏற்படும் என்பதோ என்றைக்கும் அனுமதிக்கக் கூடிய காரியம் அல்ல. பிரதமர் மீது சுமத்தப்படுகிற கொலைப் பழிச்சொற்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவைகள் அல்ல.



நான் சொல்கிறேன். யாராவது கொலை செய்யப்பட்டால் இந்திரா காந்தி கொலை செய்திருப்பார்கள் என்றெல்லாம்கூட சிலர் பேசுகிறார்கள். அப்படிப்பட்ட கண்ணியமற்ற பேச்சுகளை தி.மு. கழகம் என்றைக்கும் கையாண்டது கிடையாது.

இந்திரா காந்தி அவர்களோடு தி.மு. கழகத்திற்கு உறவு இருந்த காலத்திலும் சரி, உறவு முறிந்துவிட்ட காலத்திலும் சரி எங்களுடைய பேச்சில் இம்மியளவு கண்ணியக்குறைவான தன்மையும், இந்திரா காந்தியைப் பற்றி இருந்தது கிடையாது. மத்தியில் இருக்கிற அரசோடு வீணாக மோதிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமும் கிடையாது.

நாங்கள் அவர்களோடு உறவாக இருந்த நேரத்திலேதான் மாநில சுயாட்சி கேட்டோம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டோம்.

உறவாக இருந்த நேரத்தில்தான் பஞ்சாப் மாநில முதலமைச்சரை அழைத்து, மாநில சுயாட்சி மகாநாடு நடத்தினோம். 1971 தேர்தல் பிரகடனத்தில் மாநில சுயாட்சியை நம்முடைய குறிக்கோள்களில் ஒன்றாக வைத்தோம். இப்போது மாநில சுயாட்சியை எதிர்க்கின்ற அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் எல்லாம்கூட அந்தத் தேர்தல் பிரகடனத்தை வைத்துத்தான் தேர்தலில் நின்று வெற்றி பெற்றோம். இந்திரா காந்தியோடு உறவாடிய நேரத்தில் நாம் நம்முடைய கொள்கையை இம்மியளவும் விட்டுக்கொடுக்கவில்லை. இந்தித் திணிப்பை நாம் ஏற்றுக்கொள்வோம் என்று சொல்லவில்லை.

அண்ணா மறைந்த பிறகுதான் திருச்சியில் நடைபெற்ற மகாநாட்டில் இந்திராகாந்தியோடு உறவு இருந்த நேரத்தில் "அண்ணா வழியில் அயராது உழைப்போம், இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம், ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம், வன்முறை தவிர்த்து, வறுமையை வெல்வோம், மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி" என்று ஐந்து பெரும் முழக்கங்களை அனைவரும் சேர்ந்து—இன்று பிரிந்து போய் இருக்கிற நண்பர்கள் உட்பட அத்தனைபேரும் சேர்ந்து—எழுப்பினோம்,

நம்முடைய கொள்கைகளை நாம் என்றைக்கும் அடகு வைத்தது கிடையாது. ஆனால் கண்ணியமற்ற முறையில் ஒரு கடுகளவாவது பிரதமர்பற்றி—தி.மு. கழகத்தின் தலைவர்கள் யாரும், என்றைக்கும் விமர்சித்தது கிடையாது. கொள்கைகளை, எண்ணங்களை, நிலைமைகளை விமர்சிக்கிறோம்.

ஆகவே, இன்றைய இந்தக் கண்டனத் தீர்மானத்தை நானும் பயன்படுத்திக் கொண்டு, இந்திரா காந்தி அம்மையாரை இந்தச் சபையின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அவசரநிலை பிரகடனத்தை உடனடியாகத் திரும்பப் பெறும் முயற்சியில் ஈடுபட்டு, தேசத் தலைவர்களை விடுதலை செய்து—சில கட்டுப்பாடுகள் தேவை என்று பிரதமர் சொல்கிறார்கள், அதற்கு யாரும் எதிரிகள் அல்ல—ஒழுங்கு, கட்டுப்பாடு இவைகள் எல்லாம் தேவைதான், அதற்கு இந்த அரசு ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறது—பத்திரிகையின் நியாயமான சுதந்திரங்களை எல்லாம் தருகின்ற வகையில் விரைவிலே ஒரு நல்ல முடிவை எடுக்கவேண்டுமென்று அம்மையார் அவர்களைக் கேட்டுக்கொண்டு இவ்வளவு விளக்கங்களுக்குப் பிறகு இந்தக் கண்டனத் தீர்மானம் தேவையில்லை, அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, தொழில்களைப்பொறுத்து—சீனி சம்பந்தமாக ஒரு முக்கியமான ஏற்பாட்டைச் செய்ய முடியுமா? இன்றைக்கு இங்கிருக்கிற கரும்பு விவசாயிகளுக்கு மற்ற மாநிலங்களில் கரும்புக்கு என்ன விலை கொடுக்கிறார்களோ அதே விலையை இங்கே நாம் கொடுக்க அரசுக்கு யோசனை உண்டா? அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சர்க்கரை விலையையும், கரும்பு விலையையும் இணைத்திருக்கிற காரணத்தினால் அந்தத் தகராறு வருகின்றது. சட்டப்படி கரும்பு விலையோடு, சர்க்கரை விலையை இணைத்து நிர்ணயிக்கிறார்கள். இந்தக் கொள்கையை மாற்றி தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கரும்புக்கும், சர்க்கரைக்கும் விலையை நிர்ணயித்துக்கொள்ளக் கூடிய அதிகாரத்தை எங்களிடமே கொடுங்கள் என்று மத்திய அரசுக்கு யோசனை சொல்லியிருக்கிறோம். அதை அவர்கள் ஏற்கத் தயாராய் இல்லை.



**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இரண்டு மணி நேரம் மிக உருக்கமாக—களைப்போடு இருந்து பேசி அமர்ந்த பிறகு—நான் எழுந்து நிற்கிறேன், பதில் சொல்வதற்கு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் போலவே நானும் களைப்போடு இருக்கிறேன்—பசியினால். எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. நான் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்கிறேனோ அவ்வளவு நேரம் தாங்கள் எனக்கு அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவ்வளவு மணி நேரம் வேண்டும் என்று சொல்லுங்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** 1 மணி நேரம்.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, எங்களுக்கு எல்லாம் பசியாக இருக்கிறது. ரிப்ளையை நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக் காலையில் வைத்துக் கொள்ள முடியாது. கண்டனத் தீர்மானத்தின்மீது முடிவெடுக்காமல் விட்டுவிட்டுப் போவது முறை அல்ல.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** எவ்வளவு சீக்கிரமாக முடிக்க வேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாக முடித்துக்கொள்கிறேன். என்னுடைய உரையை இரண்டு பகுதிகளாகப் பிரித்து என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அரசியல் பகுதி, பொருளாதாரப் பகுதி என்று இரண்டுவிதமாக எடுத்துக் கொண்டால்தான் நான் அவற்றுக்கு ஒழுங்கான முறையில் பதில் சொல்ல முடியும்.

தலைவர் அவர்களே, கடந்த இரண்டு தினங்களாக ஆதரித்துப் பேசிய உறுப்பினர்கள், எதிர்த்துப் பேசிய உறுப்பினர்கள் இவர்களுடைய கருத்துக்களை முன்வைத்து என்னுடைய கருத்தைக் கூற முன்வந்துள்ளேன். எதிர்த்தரப்பிலே ஜனநாயகம் போய்விட்டது என்ற கருத்தை அதிகமாகக் கூறினார்கள். நான் என்னுடைய பேச்சை ஆரம்பித்தபோதே சொன்னேன், ஜனநாயகம் காப்பாற்றப்படுவதற்குத்தான் ஜனநாயகத்திற்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்று. அதையே மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 அக்டோபர் 30

ஜனநாயகம் அறவே ஒழிக்கப்படவில்லை, சில கட்டுப்பாடுகள் தான் விதிக்கப்பட்டிருக்கின்றன. அரசியல் கட்சிகள் நடைமுறையிலே செயல்படுகின்றன, ஆனால் ஜனநாயகத்திற்கு விரோதமாகச் செயல்பட்ட பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆர்.எஸ்.எஸ்., ஆனந்த மார்க்கம், ஜமெய்த்துல் இஸ்லாம் போன்ற ஸ்தாபனங்கள்தான் தடை செய்யப்பட்டிருக்கின்றன. பாராளுமன்றம் நடைபெற்றது, எதிர்த் தரப்பினர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். காங்கிரஸ் கட்சியை, பிரதமர் அவர்களை எதிர்த்தவர்கள் அவர்களே கலந்து கொள்ளாமல் வெளியே போனார்களே தவிர அவர்கள் பங்கெடுத்துக்கொள்ளக் கூடாது என்று தடை செய்யப்படவில்லை. பாராளுமன்றக் கூட்டங்களிலே கலந்துகொள்ளாதவைகளிலே தி. மு. க. வும் ஒன்று என்பதைக் கூறிக்கொள்கிறேன். எதிர்த் தரப்பிலே உள்ள மற்ற சி. பி. ஐ., முஸ்லீம் லீக்., பார்வர்ட் பிளாக் போன்றவை கலந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் தி.மு.க.-வினர் இந்திரா காந்தி அம்மையார் வேகமான முறையிலே நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்து வந்திருக்கிறார்கள் என்றும், அவர்கள் வேகமாக நடவடிக்கை எடுக்க யார் தடையாக இருந்தார்கள் என்றும் எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை, என்றும் வேகமாக நடவடிக்கை எடுக்க நாங்கள் எல்லாம் ஆதரவாக இருந்தும் எதற்காக வேகமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டார்கள். வேகமாக நடவடிக்கை எடுக்க ஆதரவாக இருப்பதாகச் சொல்கிற நீங்கள், வேகமாக நடவடிக்கை எடுப்பதைத் தடுக்கக்கூடியவர்களோடு ஏன் சேர்ந்துகொண்டீர்கள் என்பதுதான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. வேகமாக பிரதமர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்கிறீர்கள், இன்னும் அங்கேயே இருந்துகொண்டு வேகமாக நடவடிக்கை எடுக்க தூண்ட வேண்டும், இன்னும் வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஒரு அணியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அப்படியில்லாமல் பிற்போக்குக் கும்பலில் ஏன் போய் இணைந்து கொண்டீர்கள் என்று புரியவில்லை. நீங்கள் வேகமாகச் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு பிற்போக்குக் கும்பலில் நீங்கள் போய்ச் சேர்ந்துவிட்டீர்கள், பிற்போக்காளர்களுக்கு உங்கள் ஆதரவைக் கொடுக்க ஆரம்பித்துவிட்டீர்கள்.



1975 அக்டோபர் 30] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

சிலர், இந்திரா காந்தி பிரதமராக இல்லையென்றால் வேறு யாரும் பிரதமராக இருக்கமுடியாதா என்று கேட்டார்கள். நான் சொல்லிக்கொள்கிறேன். பிரதமர் பதவி நியமனம் செய்யக் கூடிய பதவியல்ல, தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஒருவர், மக்களால் பெரிதும் ஆதரிக்கப்படக்கூடியவர், பாராளுமன்றத்திலே பெருவாரி யான ஆதரவைப் பெறக்கூடியவர் தான் பிரதமராக வரமுடியும், யாரும் நியமனம் செய்யமுடியாது. ஆகவே, ஏதோ அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகப் பேசுவதை நான் சரியென்று சொல்லமாட்டேன். அவசரநிலை நியாயமானது என்று சொல்லி யிருக்கிறேன். ஆனால் அதற்குப் பிறகும்கூட அவசரநிலை சரியான தல்ல என்றும் அவசர நிலையளவிற்கு நாட்டில் பீதியில்லை என்றும் பேசப்பட்டது. பங்களாதேஷில் முஜ்பீர் ரஹ்மானுக்கு ஏற்பட்ட நிலை இங்கேயும் வந்திருக்கும். காலத்தோடு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக ஜனநாயகம் காப்பாற்றப்பட்டிருக்கிறது. பங்களாதேஷில் ஏற்பட்டதுபோல் இங்கேயும் ஏற்படலாம் என்ற தகவல் ஒரு சமயம் அவர்களுக்குக் கிடைத்திருக்கும். அதை நாட்டுக்குச் சொல்ல முடியாத நிலைமை இருக்கலாம்.

அவசர நிலைப் பிரகடனத்தை, பங்களாதேஷ் சம்பவத்திற்குப் பிறகுகூட நியாயப்படுத்தவில்லையென்றால் என்ன கூறமுடியும்; முஜ்பீர் ரஹ்மான் அவர்கள் தி.மு.க. வால் மிகவும் போற்றப் பட்டவர். இந்திய நாட்டால் போற்றப்பட்டவர் அவர், இன்னும் ஒரு படி மேலேசென்று போற்றியிருக்கிறீர்கள். அவர் கொலை செய்யப்பட்டதுபற்றி மாநாட்டிலே ஒரு தீர்மானம்கூட போட வில்லையென்று நான் அறிகிறேன். நான் இவ்வளவு சொல்கிறேன். சொல்லியும் உங்களை கன்வின்ஸ் பண்ண முடியவில்லை என்றால் தூங்குகிறவர்களை எழுப்பலாம்; தூங்குவதுபோல் பாசாங்கு செய்கிறவர்களை எப்படி எழுப்ப முடியும்?

பிரதமர் சோஷலிஸ லட்சியத்தை உருவாக்குவார்கள் என்று எதிர்பார்த்தோம், ஆனால் உருவாக்கவில்லை என்று சொல்லிவிட்டு சோஷலிஸ அணிக்கு விரோதமான அணியோடு போய் சேருகிறீர் களே, ஏன்?

திரு. சுப்பு அவர்களும் துரை முருகன் அவர்களும் மத்திய அரசோடு நல்ல உறவுதான் வைத்துக் கொண்டிருக்கிறோம், ஏதோ தாங்கள் வந்து சிண்டு முடிவதாகவும் வம்பை இழுத்துவிடுவ தாகவும் சொன்னார்கள். வம்பை நாங்கள் ஏற்படுத்தவில்லை.

உங்கள் தீர்மானம்தான் வம்பை ஏற்படுத்தியிருக்கின்றது. உங்கள் தீர்மானத்திலே என்ன சொல்லியிருக்கிறீர்கள்? "உண்மையில் உருவம் மறைக்கப்பட்டு பொய்யின் நிழலில் நின்றுகொண்டு எதிர்க் கட்சிகளை அடக்குவதற்குத் திட்டம் தயாரித்து இப்படிப்பட்ட திட்டம் ஏன் தேவைப்படுகிறது என்பதற்காகப் போலிக் காரணங்களைத் தேடியலைந்து வீண் அபவாதங்களை வாரி இறைத்து எடுத்ததற்கெல்லாம் சதி, வெளிநாட்டுத் தொடர்பு, பிற்போக்கு வாதிகள் என்று சொற்களைப் பொழிந்து காலாகாலத்திற்கும் இந்திய நாட்டு மக்களுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில் திட்ட மிட்டு இந்திராகாந்தி நேற்றைய தினம் 26—6—1975 அதிகாலையில் சர்வாதிகாரத்தின் தொடக்கவிழாவை நடத்தியிருக்கிறார்" என்று தீர்மானம். நீங்கள்தான் வம்பை இழுத்துக்கொண்டீர்கள். உங்கள் வார்த்தைகளே அவர்களோடு மோதக்கூடிய நிலைமையை ஏற்படுத்திவிட்டன. நாங்கள் யாரும் சிண்டு முடியவில்லை. வம்பை இழுத்துவிடவில்லை. நீங்களே இழுத்துக்கொண்டிருக் கிறீர்கள்.

அவசரநிலைப் பிரகடனம் தேவையில்லை என்பது தி.மு.க.-வின் கருத்து, வெளிநாட்டு அவசரப் பிரகடனம் ஒன்று முன்பே இருக்கும்போது மேலும் இப்போது ஒரு அவசரப்பிரகடனம் வந்திருக்கிறது என்று சுப்பு குறிப்பிட்டார்கள். வெளிநாட்டு ஆக்கிரமிப்பிற்காக அவசரநிலைப் பிரகடனம் தேவையானது. முதலமைச்சர் அவர்கள்கூட வெளிநாட்டு ஆக்கிரமிப்பையொட்டி செய்யப்பட்ட அவசரநிலைப் பிரகடனம் ரத்து செய்யப்பட வேண்டுமென்று பிற்போக்கு அணியோடு சேர்ந்து கூறினார்கள். அவசரநிலைப் பிரகடனம் எல்லா மாநிலங்களையும் விட தமிழ் நாட்டிற்கு மிகவும் அவசியம். டிகோகார்ஷியா என்பது டெல்லியைவிட சமீபத்தில் இருக்கிறது, 1,500 மைல் கூட இல்லை. அங்கே அமெரிக்கா தளம் அமைக்கப்படுகிறது என்பதை நாம் ஞாபகத்திலே வைத்துக்கொள்ளவேண்டும். நடுநிலை நாடுகள் எல்லாம் சேர்ந்து இந்துமாக்கடல் அமைதிப் பிரதேசமாக இருக்க வேண்டுமென்று கேட்டும்கூட அங்கே அமெரிக்க தளம் அமைக்கப் படுகிறது. அப்படியிருக்கும்போது தமிழ்நாட்டில் யுத்தத்தின் பீதி கிடையாது என்று சொல்லிவிடமுடியாது. அப்படியிருக் கையில் எப்படி அந்த அவசரநிலைப் பிரகடனத்தை ரத்து செய்யவேண்டுமென்று சொன்னார்கள் என்று எனக்குப் புரியவில்லை. எல்லோரையும் விட நமக்கு அவசியம் என்பதை மறந்து விட்டார்கள்.





டைரக்டிவ் பிரின்சிபிள்ஸ் தான் இந்த இருபது அம்சத் திட்டம், புதிதல்ல என்று சொன்னார்கள். பிரதமர் அவர்களே அறிவிக் கின்றபோது இது புதிய திட்டம் அல்ல. இது பழைய திட்டம். நாம் என்ன என்ன நிறைவேற்றவேண்டுமோ அதை நிறை வேற்றாமல் அசட்டையாக இருக்கிறோம். அதற்கு முனைப்புக் கொடுத்து வேகமாக நிறைவேற்றும் என்று கூறியிருக்கிறார்கள், என்னுடைய திட்டம் புதிய திட்டம் என்று சொல்லவே கிடையாது. நீண்ட நாட்களாக சொல்லிவந்த திட்டம் சரிவர அமல்நடத்தப்பட வில்லையென்று தான் சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, 1969-ஆம் ஆண்டிலே, வேகமான முறையிலே திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பதற்காக காங்கிரஸ் கட்சி பிளவுபட்டது. அதற்கு முன் சரியாகச் செய்யவில்லை என்பதுதான் 1969-இல் பிளவுபட்டதற்குக் காரணம். ஆகவே, இந்தமாதிரி வேகமான முறையிலே கட்சியே பிளவுபடும் அளவிற்கு, வேகமான முறையிலே திட்டங்களைப் போடும்பொழுது அவைகளைப் பரிகசித்துவிட்டு. அந்தத் திட்டங்களை நிறைவேற்றக் கூடாது என்று சொல்கின்ற பிற்போக்கு சக்திகளோடு திராவிட முன்னேற்றக் கழகம் உறவு வைத்துக்கொண்டிருக்கிறது என்பதை மறுமுறையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இருபது அம்சத் திட்டத்திலே உள்ள பல அம்சங்கள் அகில இந்திய ரீதியில் சரியாக வெற்றிபெறாமல் போனதற்குக் காரணம் அவைகளிலே மக்கள் பங்குகொள்ளாமல் வெறும் அதிகாரிகள் மட்டும் பங்குகொண்டதுதான். ஆகவே, மக்களைப் பங்கெடுத்துக் கொள்ள வைக்க வேண்டுமென்ற முறையில் டைரக்ஷன் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதர மாநிலங்களில் சட்டபூர்வமான மக்கள் கமிட்டி அமைத்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்களை ஒழுங்காகச் செயல்படுத்த, தவறு இல்லாமல் செயல்படுத்த அந்த மாதிரி மக்கள் கமிட்டியை இங்கேயும் அமைக்க வேண்டும். அதை அரசு மறந்துவிட்டது. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பொருளாதாரத் திட்டங்களுக்கு வருவதற்கு முன்னால் சொல்ல விரும்புகிறேன். 'மெயின் ஸ்ட்ரீம்' பத்திரிகையி லிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்துக் காட்டினார்கள். இந்த அவசர திட்டத்தைப்பற்றி விமர்சித் திருக்கிறார்கள் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று

படித்துக் காட்டினார்கள். அவர்கள் விமர்சித்தார்கள். அதுமட்டுமல்லாமல் எந்தக் கட்சியைப்பற்றி விமர்சித்தார்களோ அந்தக் கட்சிக்கே அவர்கள் ஆதரவு கொடுக்கிறார்கள். ஆனால் நீங்கள் விமர்சித்துவிட்டு பிற்போக்கு சக்திகளின் பக்கம் போகிறீர்கள். அவர்களோடு சேர்ந்துகொண்டு எதிர்ப்பை வேகப்படுத்த முயற்சி செய்கிறீர்கள். ஆனால் அவர்கள் விமர்சித்தாலும் அந்தக் கட்சிக்கு ஆதரவு கொடுக்கிறார்கள். ஆனால் நீங்கள் வேகமாக செயல்படவில்லை என்று சொல்லிக்கொண்டு பள்ளத்திலே விழுகிறீர்கள்.

முதலாளிகளுக்கு, தொழில்களைத் தேசியமயம் பண்ணவில்லை என்று பிரதம மந்திரி உறுதி கொடுத்து விட்டதாகக் கூறுகிறார்கள். சோஷலிசம் என்ற வார்த்தையை விட்டால்தான் உங்களுக்குப் பயமே தவிர தேசியமயம் பற்றிச் சொல்வதால் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. சில நேரங்களில் இராஜதந்திரத்தோடு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது நண்பர் கூட்டு அவர்களுக்கும் நன்றாகத் தெரியும், அவர்கள் கம்யூனிஸ்ட் பார்ட்டியிலே இருந்திருக்கிறார்.

லெனின் என்.இ.பி. என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். 'நியூ எகனாமிக் பாலிசி' என்ற திட்டம் அது. முதலாளிகளை ஒழித்துவிட்டோம் என்று சொன்னதற்குப் பிறகு உற்பத்தி குறைந்து விட்டது, அந்த இடத்தை நிரப்புவதற்குத் தகுதியான ஆட்கள் நம்மிடத்தில் இல்லை, ஆகவே திரும்பவும் அவர்களிடத்திலே தொழிற்சாலைகளை ஒப்புவித்து உற்பத்தியைப் பெருக்கி நம்முடைய ஆட்களுக்குப் பயிற்சிகொடுத்து திரும்பவும் அதை எடுக்க வேண்டும், ஆகவே, இடைக்காலத்தில் சில சலுகைகளைக் கொடுத்தாக வேண்டும், வேறு வழி இல்லை பொருளாதாரத்தை நிரப்ப, என்று லெனின் கூறிவிட்டார்.

ஆகவே, இராஜதந்திரத்தோடு சில நேரங்களில் காரியங்களைச் செய்ய வேண்டும். தேசியமயம் பண்ணவில்லை என்பதை நிரந்தரமாகச் செய்யவில்லை என்று கூறிவிட்டதாக எடுத்துக்கொண்டு அதிதீவிரவாதமாகப் பேசுவது சரியாகாது.

யுத்தகளத்தில் என்ன நடக்கும்? யுத்தகளத்தில் சில சமயங்களில் நாம் வெற்றி பெறுவதற்காகப் பின்வாங்க நேரிடும். அப்படிப் பின்வாங்கினால் அதிலே பெரிய தவறு வந்துவிட்டது





என்று சொல்லக்கூடாது. அந்த நேரத்தில் முன்னேறினால் தோல்வி வந்துவிடும், எதிரிகளிடம் மாட்டிக்கொள்ள நேரிடும். ஆகவே, சிற்சில நேரங்களில் சிற்சில நடவடிக்கைகளை எடுக்கும்பொழுது அதை நிரந்தரம் என்று நினைத்துக்கொண்டு பேசக்கூடாது. தேசிய மயம் பண்ணப்போவதில்லை என்று அறிவித்தார் பிரதமர், புலி பதுங்குவது பாய்வதற்காகத்தான். அதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடற்கரை தீர்மானத்தைப் படித்தார்கள். திருநெல்வேலி மாவட்டத் தீர்மானத்தைப் படித்தபொழுது நாங்கள் ஒன்றும் சொல்லவில்லையே. அதை மத்தியஸ்தம் என்றுதான் சொன்னீர்கள். மத்தியஸ்தம் என்றால் மத்தியஸ்தம் போகிறவர்கள் ஒரு அணியில் சேர்ந்திருக்கக் கூடாது. மத்தியஸ்தர்கள் என்பவர்கள் நடுநிலைமை உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஒரு அணியிலே சேர்ந்தவர்கள் மத்தியஸ்தத்திற்குப் போவது முடியாது. மத்தியஸ்தம் போவதற்கு எல்லாத் தகுதியும் இருக்கிறது முதலமைச்சரவர்களுக்கு, இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அவர்கள் ஒரு அணியில் தங்களைப் பிணைத்துக்கொண்டு விட்டதால் மத்தியஸ்தர் என்ற தகுதியை இழந்துவிட்டார்கள். நீங்கள் பிற்போக்கு அணியிலே போய்ச் சேர்ந்திருக்கிறீர்கள். அந்த தீர்மானத்திலே வேண்டுமானால் Bilateral talk என்று போட்டு பிற்போக்கு அணியின் பிரதிநிதியாகப் பேசுவதற்கு முயற்சித்திருக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பிற்போக்கு அணி என்று சொல்கிறார்களே, எதைக் குறிப்பிடுகிறார்கள்?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: ஆனந்தமார்க்கம், ஆர்.எஸ்.எஸ்., ஜனசங்கம் போன்றவர்கள், இன்றைக்கு இந்திரகாந்தி கீழே இறங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களோடு சேர்ந்துகொண்டு இன்றைக்கு நீங்கள் பாராளுமன்றத்திற்கு போகாமல் 'பாய்-காட்' செய்கிறீர்கள். ஏன் நீங்கள் பாராளுமன்றத்திற்குச் செல்லவில்லை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்களோடு சேர்ந்து சுதந்திராக் கட்சியினர் கண்டனத் தீர்மானத்திற்கு எழுந்து நின்றார்கள், நீங்கள் அவர்களோடு சேர்ந்து விட்டீர்களா?

[1975 அக்டோபர் 30

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : உங்கள் கருத்துப்படி நீங்கள் அவசரக் காலப் பிரகடனத்தை எதிர்க்கிறீர்கள், அப்படி எதிர்க்கின்ற நீங்கள் ஏன் பாராளுமன்றத்தில் கலந்து கொள்ளவில்லை. எனவே உங்கள் உறவு அந்த அணியோடு இருக்கிறது. ஆகவே, அந்த அணியில் . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பாராளுமன்றத்தில் கலந்து கொள்வதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சென்றார்கள். நண்பர் செழியன் அவர்களின் தலைமையில் பாராளுமன்றத்தில் கலந்து கொள்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டார்கள். அதைப்போலவே மாநிலங்கள் அவையில் கலந்து கொள்ளவும் சென்றார்கள். ஆனால் நடந்தது, முதல் நாள் பேசிய பேச்சு எதிலும் வரவில்லை, பெயர்தான் வந்தது, கட்சிதான் வந்தது. ஆகவே, அதை எதிர்த்து மறுபடியும் பாராளுமன்ற நடவடிக்கைகளிலே கலந்துகொள்வது இல்லை என்று முடிவு செய்தார்களே தவிர, வேறல்ல.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்த பாய்காட் எவ்வளவு நாட்கள் இருக்கும் என்று முதலமைச்சரவர்கள் கூறுவார்களா என்று தெரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்த பாய்காட் அதிக நாள் நீடிக்காது என்றே கருதுகிறேன். ஏனென்றால், தமிழ்நாடு வழிகாட்டியிருக்கிறது. அதைப் பார்த்து பாராளுமன்றம் திருந்திக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஆக இந்த அளவிற்கு அரசியல் ரீதியான என்னுடைய கருத்துக்களைச் சொல்லிவிட்டு பொருளாதார ரீதியான பிரச்னைகளைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நிலச்சீர்திருத்தம் பற்றி அவர்கள் குறிப்பிடும்பொழுது புள்ளிவிவரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். மத்திய அரசு வெளியிட்ட ஒரு வெளியீட்டைக் காண்பித்தார்கள், அதில் ஒரு வரி அச்சுப் பிழையாக இருந்திருக்கலாம், அதைக் காட்டி எல்லாவற்றையுமே நம்பவில்லை என்று சொல்லி ஆதாரம் காட்ட இலாயக்கு இல்லை என்று சொல்லக் கூடாது.





1975 அக்டோபர் 30]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆதாரம் காட்ட இலாயக்கு இல்லை என்று நான் சொல்லவில்லை. நான் சொல்லாததைச் சொல்கிறார்கள். முன்னுரையில் மிகுந்த பெருந்தன்மையுடன் பேசினார்கள். இப்பொழுது சுரபேதம் ஏற்படுகிறது. தயவு செய்து அப்படிப் பேசவேண்டாம். இலாயக்கு இல்லை என்று சொல்லவில்லை, ஆதாரம் காட்ட விரும்பவில்லை என்று சொன்னேன், தவறான புள்ளிவிவரங்கள் இருப்பதால் ஆதாரத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை என்று சொன்னேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நான் வேகப்பட்டோ, கண்ணியத்திற்குக் கீழே இறங்கியோ பேச மாட்டேன். இதில் தவறு இருப்பதால் இதை ஆதாரம் காட்ட இயலாது என்று அவர்கள் சொல்லியிருக்கலாம், அம்மாதிரி சொன்னதாக வைத்துக் கொள்வோம். நீங்கள் புள்ளிவிவரங்கள் பலவற்றைச் சொன்னீர்கள். அப்படிப் புள்ளிவிவரங்களைச் சொன்னால் மட்டும் போதாது. 9 படி மேலே சென்றுள்ள நாம் 4 படி வரை ஏறியுள்ள இதர மாநிலங்களை பின்நோக்கிப் பார்க்க வேண்டியதில்லை. 9-வது படியிலேயிருந்து 10-வது படிக்கு எப்படிப் போவது என்று பார்க்க வேண்டும். அகில இந்திய ரீதியிலே எல்லா மாநிலங்களையும்விட எப்பொழுதுமே முன்னேறிய மாநிலமாக இருந்து வருவது சென்னை மாநிலம், தமிழ்நாடு மாநிலம். பிரிட்டிஷ்காரர்கள் காலத்திலிருந்து நிர்வாக ரீதியிலேயும் சரி, வளர்ச்சி ரீதியிலேயும் சரி, இது முற்போக்கு மாநிலமாகத்தான் இருந்து வந்திருக்கிறது. ஆகவே, முற்போக்குப் பணிகளிலே இன்னும் வேகமாகச் செல்ல வேண்டிய அளவிற்குப் போக வேண்டும்.

நிலச் சீர்திருத்தத்தைப்பற்றிச் சொல்லும்பொழுது அவர்கள் பழத்தோட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் தென்னந்தோப்புகளைப் பற்றி உங்கள் கருத்து என்ன? அதைப்பற்றிச் சொல்லவில்லையே. குத்தகை நிலங்கள் சம்பந்தமாக நிலச் சொந்தக்காரர்கள் எத்தனை ஆண்டுக்காலத்திற்கு நீடிப்பது என்று கேள்வி போட்டோம். அதைப்பற்றிய கருத்துக்களை ஏன் சொல்லவில்லை? விவசாயத் தொழிலாளர்களின் கூலி பற்றி கமிட்டி போட்டிருக்கிறோம் என்று சொல்கிறீர்கள், ஆனால் இருக்

கின்ற நிலைமையைப் பார்த்து கீழ்த்தஞ்சையில் உள்ளதைப்போல நிரந்தரமாக எல்லாப் பகுதிகளுக்கும் அறிவித்து மறு அறிக்கை வரும்வரையில் செய்யலாமே.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** விவசாயத் தொழிலாளர்களுக்காக இவ்வளவு கவலைப்படுகிறீர்கள். எல்லா தொழிலாளர்களுக்கும் போனஸ் குறைந்துவிட்டதே, அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள் ?

(பிற்பகல் 2-30)

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** அதைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறோம், பிரதம அமைச்சர் அவர்களிடத்தில்,

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நீங்கள் மட்டும் சொல்லிக் கொண்டிருப்பீர்கள். நாங்கள் கமிட்டி போடக் கூடாதா ?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** ஐ.என்.டி.யு.சி. போன்ற அமைப்புகளின் சார்பில் அதை மாற்ற வேண்டுமென்று பிரதமர் அவர்களைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்கள்.

விவசாயத் தொழிலாளர்கள் கூலியை சரியான முறையில் உயர்த்த வேண்டும், நிர்ணயிக்க வேண்டும்.

பீகாரில் வரதட்சிணை வாங்குவதை காக்னிசிபிள் அபென்சாக அறிவித்திருக்கிறார்கள். நாமும் செய்யலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதைச் செய்யலாம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க கடன் கொடுத்ததாகச் சொன்னார்கள். ஒத்துக் கொள்கிறோம். பூச்சி மருந்துக்குக் கொடுத்த சப்சிடியை நிறுத்தி விட்டார்களே. அதைக் கொடுக்க முயற்சி செய்ய வேண்டும். நிர்வாகத்திலே பங்கு என்பதைப் பற்றி ஒன்று சொன்னார்கள். நிர்வாகத்திலே பங்கு என்பது ஒன்று; தொழிலிலே பங்கு என்பது வேறு என்று திரு. கே. டி. கே. அவர்கள் கூடச் சொன்னார்கள். உற்பத்தியைப் பெருக்கக்கூடிய விதத்திலே நிர்வாகத்திலே பங்கு இருக்கவேண்டும். தனியார் துறையிலேகூட என்ன கெபாசிடி இருக்கிறதோ அதிலே 40 சதவிகிதந்தான் தற்போது உற்பத்தியாகிறது,





ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அதைப் பற்றியெல்லாம் நான் விரிவாகப் பேச வேண்டுமென்றால் நேரம் இல்லை.

ஆக, எல்லா வழிகளிலும் பார்க்கிறபோது நாம் இன்னும் செய்ய வேண்டியவை மிக அதிகமாக இருக்கின்றன. நாம் செய்திருப்பது குறைவு. மிக அதிகமாகச் செய்ய வேண்டியவை இருக்கின்றன என்ற முறையிலே நீங்கள் வேகமாகப் போக வேண்டும். உங்களிடத்திலே எவ்வளவோ தவறுகள் இருக்கின்றன. அவற்றைத் திருத்திக்கொள்ள வேண்டும். அவசர நிலைப் பிரகடனம் நியாயமானது.

முதலமைச்சர் அவர்கள் இரண்டு மணி நேரம், கவர்னர் உரைக்குப் பதில் சொல்லுவது போல் மிக ஆழ்ந்த முறையில் புள்ளி விவரங்களை எல்லாம் கூறினார்கள். அவர்களுக்கு நன்றி. அவை நாங்கள் சொன்ன குற்றச்சாட்டுகளுக்குச் சரியான பதிலாக இல்லை என்ற காரணத்தால் என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :—

"இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் பிறப்பிக்கப் பட்டுள்ள அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு, மத்திய அரசு அறிவித்துள்ள 20 அம்சத் திட்டத்தைச் சரிவர இந்த அரசு அமுல் படுத்தத் தவறியதால், தமிழ்நாடு அமைச்சரவை மீது இப் பேரவை தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று மீண்டும் பேரவை 31-10-1975 வெள்ளிக்கிழமை காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-35 மணியளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

(5) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. *Statutory Rules and Orders*

202. Notification issued in G.O. Ms. No. 162, Prohibition and Excise, dated the 26th May 1975 in regard to an amendment to the Madras Denatured Spirit, Mythyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)].

203. Notification issued in G.O. Ms. No. 1340, Rural Development and Local Administration dated 6th August 1975 in regard to declaration of local planning area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972) in Tuticorin. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

B. *Reports, Notifications and Other Papers.*

**Nil.**



*[15-ம் பக்கத்தில் வெள்ளிக்குறியிட்ட வினு 136-க்கான விடையைக் காண்க.]*

(a) **Yes.**

(b) The Tamil Nadu Electricity Board has taken the following steps to reduce the line losses :—

(1) Schemes for changing the size of the conductors to higher sizes and enhancing the distribution transformers capacities where-ever they are overloaded are being implemented.

(2) A Master plan has been evolved for erecting new grid lines and new 230 K.V., 110 K.V., 66 K.V. and 33 K.V. sub-stations with a view to reduce the transmission line losses.

(3) The line loss which is partly due to low power factor loads of the agricultural pumpsets is being improved upon by the installation of L.T. shunt capacitors at the motor terminals.

(4) A number of H. T. shunt capacitors are being installed at sub-stations to reduce the line current wherever the power factor is low.

(5) Synchronous condensers are also being installed in grid sub-station to improve the overall voltage condition of the grid and to reduce the line current.

(6) Surprise inspection squads have been formed at all operating systems to carry out surprise raids for checking the services in the area for defective metering, unmetered services, thefts, pilferages, etc. Prosecution has been launched in cases of pilferage where proper evidence is available.

*(அ) ஆம்.*

*(இ) மின்சாரம் கம்பிகளில் அனுப்பப்படும்போது ஏற்படும் இழப்பைக் குறைப்பதற்காகத் தமிழ்நாடு மின்சார வாரியம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது :—*

*(1) பங்கீட்டு மின் மாற்றிகளின் திறன் அளவு கடந்த சுமையைத் தாங்க வேண்டியுள்ள இடங்களிலெல்லாம், மின் கடத்திகளின் அளவைப் பெரிதாக்கவும், பங்கீட்டு மின் மாற்றிகளின் திறனை உயர்த்தவும், பல்வேறு சீரமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

(2) மின்சாரம் எடுத்துச் செல்லும்போது மின் கடத்தியில் ஏற்படும் இழப்பைக் குறைக்கும் நோக்கோடு, புதிய மின் இணைப்புகளை (New Girds) நிறுவுவதற்கும், 230 K.V., 110 K.V. 66 K.V., 33 K.V. கொண்ட துணை மின் நிலையங்களைப் புதிதாக ஏற்படுத்துவதற்குமான பெருந்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

(3) மின்சாரம் கம்பிகளில் அனுப்பப்படுகையில் மின் இழப்பு ஏற்படுவதற்கு வேளாண்மை விசையேற்றங்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்தின் குறைந்த மின் சுமையும் ஓரளவுக்குக் காரணமாகிறது. இந்த மின்சார இழப்பு, விசையேற்றங்கள் உள்ள இடங்களில் குறைவழுத்த உற்றுழி மின் தேக்க அமைப்பை நிறுவுவதன் மூலம் சீராக்கப்படுகிறது.

(4) செலவாகும் மின்சாரம் குறைவாக இருக்குமிடங்களிலெல்லாம் கம்பிகளில் ஏற்படும் மின் இழப்பைக் குறைப்பதற்காக, துணை மின் நிலையங்களில் பல உயர் அழுத்த உற்றுழி மின் தேக்க அமைப்புகள் நிறுவப்பட்டு வருகின்றன.

(5) மின் இணைப்பின் மொத்த வோல்டேஜ் நிலைமையைச் சீரமைத்து கம்பியில் செல்லும் மின்சாரத்தைக் குறைக்கவும் மின் அமைப்புத் துணை நிலையத்தில் ஒரே கதியில் இயங்கும் மின்னாற்றல் சுருக்கிகளும் (Condensers) அமைக்கப்பட்டு வருகின்றன.

(6) குறைபாடுள்ள மீட்டர்கள், மீட்டர் இல்லாமலே மின்சாரத்தைப் பயன்படுத்துதல், திருட்டுகள், சிறு திருட்டுகள் முதலியவற்றைக் கண்டு பிடிக்க திடீர்ச் சோதனைகளை நடத்துவதற்காக இயங்கும் மின் ஏற்பாடுகள் அனைத்திலும், திடீர்ச் சோதனைப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. சிறு திருட்டு நடைபெற்ற வழக்குகளில் மின்சாரம் திருடப்படும் நேர்வுகளில் தகுந்த சாட்சியம் கிடைத்ததால் வழக்குகள் தொடரப் பட்டுள்ளன.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

வெள்ளிக்கிழமை, 1975 அக்டோபர் 31.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. கே. திருப்பதி மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீத்தார் நினைவுக் குறிப்பு.

1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. கே. திருப்பதி அவர்கள் 25—10—1975 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

## (2) வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### *Stadium at Coimbatore.*

*1 *S.N.Q.*—Thiru A. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the stadium built in Coimbatore town at a cost of several lakhs is being demolished under orders of the Special Officer of the Coimbatore Municipality; and

(*b*) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) ஆம்.

(இ) அங்கு ஒரு மேடை இருக்கிறது. அந்த மேடை மிகவும் பழையதாக இருப்பதாலும் நெடுங்காலமாக உபயோகத்தில் இல்லாததாலும் அதை இடித்துவிட்டு நவீன வசதியுடன் கூடிய புதியதொரு கட்டடத்தைக் கட்டலாம் என்று 30—6—1975 இல் முன்னாள் கோவை நகராட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, இந்த சிதம்பரம் பூங்கா ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்றதாகவும், ஏற்கெனவே அங்கே தேசியத் தலைவரைப் பாராட்டக்கூடிய ஒரு நினைவாலயமாகவும் இருந்து, பல கூட்டங்களெல்லாம் அந்த மேடையிலே நடக்கின்றன. அந்த மேடையைப் பொறுத்து எந்தவிதமான தகராறும் இல்லாதிருக்கும்போது, மேடை எந்த வேளையில் இடிந்துவிடுமோ என்ற நிலைமை இல்லாதபோது, அந்த மேடையை அழிக்க வேண்டியதை முதல் வேலையாக ஸ்பெஷல் ஆபீசர் எடுத்துக் கொண்டதன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்த மேடை காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் நினைவாகக் கட்டப்பட்டுள்ளது. ஆனால், இந்த மேடையை இடித்துவிட்டு வேறொரு நல்ல அரங்கமாக, அதே நினைவினையொட்டி கட்டலாம் என்பது நகராட்சியினுடைய தீர்மானம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. அவர்கள், தனி அதிகாரி முதல் வேலையாக



இதைச் செய்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு வேலைகளைச் செய்து இந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றியிருப்பார்கள்.

**திரு. நா. வீராசாமி:** கோவையில் இருக்கக்கூடிய காந்தி-இர்வின் பெயரால் உள்ள அந்த விளையாட்டு அரங்கு புதுப்பிக்கப்பட்ட பிறகு மீண்டும் அதே பெயர்தான் அதற்கு சூட்டப்படும் என்பது உண்மையா? அதோடு, அந்த இடத்தை இடித்துப் புதுப்பிக்க வேண்டுமென்று கோவை நகர மன்றத்தில் இருக்கின்ற எல்லாக் கட்சி நகர மன்ற உறுப்பினர்களும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியதும் உண்மையா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தீர்மானம் ஏகமனதான தீர்மானம்தான். மேடையைச் செப்பனிடுவதற்கு மூவாயிரம் ரூபாய் செலவிடலாம் என்று தீர்மானித்தார்கள். மூவாயிரம் ரூபாய் செலவிடுவதற்கு இதில் ஒன்றும் இல்லை. அதைவிட, இடித்துவிட்டே புதிதாக நவீன முறையில் கட்டுவதுதான் நல்லது என்று அவர்களே தீர்மானித்திருக்கிறார்கள். ஆகவே, இதில் எந்தவித பிரச்சனையும் இல்லை.

**திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, அந்த காந்தி-இர்வின் ஸ்டேடியத்தை இடிப்பதற்குக் காரணம், அங்கே மைதானம் போதாது — கூட்டம் நடத்துவதற்கு இடம் போதாது என்று கூறுகிறார்களே, அது உண்மையா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** எது போதாது என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால், நகர மன்றத்தைப் பொறுத்த வரையில், இதை இடிக்க வேண்டும் என்று ஏற்கெனவே தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.

**திரு. செ. அரங்கநாயகம்:** தீர்மானம் போட்டு இத்தனை நாளும் செயல்படுத்தப்படாமல் இருந்து, இப்பொழுது டிசம்பர் 25ஆம் தேதி நடைபெறவிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டுக்காக உடனடியாக இடிக்கப்படுகிறது என்று புகார் வந்திருக்கிறதே, அது உண்மையா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அந்தப் புகார் உண்மை அல்ல.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், 'இது பழைய ஸ்டேடியம்' என்று சொன்னார்கள். அப்படியென்றால், எந்த ஆண்டு அது கட்டப்பட்டது? அதைக் கட்டுவதற்கு எவ்வளவு செலவானது என்ற விவரத்தை அறியலாமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது ஸ்டேடியம் அல்ல. இது ஒரு மேடை. 1931 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. ஆகவே, அந்த மேடையைச் சிறந்த முறையில் சீர்திருத்தி அமைக்க வேண்டும் என்பதற்காக நகராட்சி மன்றம் அதை மாற்றிவிட்டு, ஒன்றேமுக்கால் இலட்ச ரூபாயில் வேறொரு ஸ்டேடியத்தைக் கட்டுகிறார்கள். இந்த மேடை வேண்டியதில்லை என்று தீர்மானித்திருக்கிறார்கள். வேறொரு ஸ்டேடியம் கட்ட இப்பொழுது மாநகராட்சி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, அந்த ஸ்டேடியம் காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது. அந்த ஞாபகார்த்தத்தை இடிக்கிறமாதிரி ஆகிறது. நகரசபையைச் சார்ந்த மாஜி கவுன்சிலர்கள் அதை மறுபடியும் ஆட்சேபணை செய்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நகரசபையினுடைய தீர்மானத்தைத்தான் நாம் கவனத்தில் கொள்ள வேண்டுமே யல்லாமல், மாஜிகளாகிவிட்ட பிறகு அவர்கள் சொல்கிறார்கள் என்பதை எடுத்து வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்வது சரியானதல்ல. காந்தி–இர்வின் என்ற அடிக்கல் எல்லாம் அப்படியே இருக்கும், புதிதாகக் கட்டப்படுகிற அரங்கத்திலேகூட. ஆகவே, காந்தி-இர்வின் ஒப்பந்தம் என்ற வரலாறு அடிப்படை எந்தவிதத்திலும் மாற்றப்படாது.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, நகராட்சி மன்றம் தீர்மானம் ஒருமனதாக, அனைத்துக் கட்சிகளின் சார்பாக நிறைவேற்றியும் கூட அதை இன்னும் தனி அதிகாரி அமல் செய்யாமல் காலதாமதம் செய்வதால் அந்த நகரமன்றத்தின் தீர்மானத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து விரைவாகச் செய்து முடிப்பார்களா?





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கு இது பதில்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அந்த இடத்தில் காந்தி-இர்வின் சிலைகள் இருந்ததாகவும் முன்னாள் ஜனாதிபதி அங்கே ஒரு பொதுக்கூட்டத்திற்கு வருகிற நேரத்தில் காங்கிரஸ் ஆட்சியாலே சிலைகள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு, அங்கு மேடை அமைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மைதானா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. ஆனால், பொதுவாக ஒரு கருத்தைச் சொல்கிறேன். வரலாற்று நினைவுகள் இருக்க வேண்டியது அவசியந்தான். ஆனால், காலத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப அவைகள் மாற்றப்படுவது பகுத்தறிவின் அடிப்படையிலே செய்யப்படுகிற காரியந்தான்.

இடைநிலைக் கல்வி வாரியம்.

* 146 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செகண்டரி கல்வி போர்டு அண்மையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) முன்பு பள்ளிக் கல்வி இயக்குநரே தேர்வு ஆணையாளராகவும் இருந்ததால் செகண்டரி கல்வி போர்டு 18—2—75-லிருந்து பள்ளிக் கல்வி இயக்குநரையே தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டது. தற்போது அரசுத் தேர்வுகளுக்கு என தனி இயக்கம் ஏற்பட்டமையால், அரசு தேர்வு இயக்குநரை தலைவராகக் கொண்டு மேற்கூறப்பட்ட செகண்டரி கல்வி போர்டு திருத்தி அமைக்கப்பட்டது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, செகண்டரி கல்வி போர்டு திருத்தியமைக்கப்பட்டதனால் கல்வித் துறையில் ஏற்படுகிற நடைமுறை மாறுதல் என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, செகண்டரி கல்வி போர்டு எப்போதும் செய்து கொண்டு வருகிற அதே பணியைத்தான் தொடர்ந்து செய்து கொண்டு வருகிறது. ஏற்கெனவே தேர்வு ஆணையரும் பள்ளிக் கல்வி இயக்குநரும் ஒருவராக இருந்தார். தேர்வுக்கென்று தனி இயக்குநர் நியமித்துவிட்டதன் காரணமாக, செகண்டரி கல்வி போர்டு அவர் தலைமையின் கீழ் வருகிறது. தலைவர்தான் மாற்றப் பட்டிருக்கிறாரே தவிர வேறு வகையில் ஒன்றும் இல்லை.

**திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, தமிழகத்தில் மாநிலம் முழுவதற்கும் ஒரே செகண்டரி கல்வி போர்டு இருந்து வருகிறது. இதை மாற்றி, மாநிலத்தில் நான்கு கல்வி போர்டுகள் அமைத்தால் எதிர்காலத்தில் அமைய இருக்கும் பல்கலைக் கழகத்தின் வரம்புக்கு உட்பட்டதாக இருக்கும். நான்கு கல்வி போர்டுகள் அமைக்கப்படாது ஒரே அதிகாரியின் கீழ் கொண்டு வரப்பட்டதால் ஏற்படும் திறமையின்மையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பல்கலைக்கழகம் மூன்றாகவோ, நான்காகவோ அமைந் திருந்தாலும்கூட, பள்ளிக் கல்வியைப் பொறுத்த வரையில் ஒரே அமைப்பின் கீழ்தான் இயங்கிவருகிறது. அதற்கு ஒரே இயக்குநர்தான் இருந்து வருகிறார். தேர்வைப் பொறுத்த வரையில் மாநிலம் முழுவதும் ஒரே வகையில்தான் நடைபெற்று வருகிறது. ஆகவே, பாடத் திட்டங்கள், புத்தகங்கள், அதற்கு வரையறுக்கப்பட்ட பணிகளையெல்லாம் இந்த போர்டே கவனிக்க வேண்டியிருக்கிறது. நான்கு போர்டுகள் வைத்து நடத்துவ தென்பது இயலாத ஒன்று, ஒரே போர்டுதான் இருக்கவேண்டும். அதை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்ற அளவுக்கும், சிலபஸ், டெக்ஸ்ட் புக்ஸ் போன்றவை பள்ளிக் கல்வி இயக்குநரின் தலைமையின்கீழ் வருவதாலும் தேர்வு நடத்துவது, சர்டிபிகேட் வழங்குவது போன்றவை தேர்வு இயக்குநரைச் சார்ந்திருப் பதாலும், இதனுடைய பொறுப்புகளை இரண்டாகப் பிரித்து





பள்ளிக் கல்வி இயக்குநரின் தலைமையில் ஒரு போர்டும், தேர்வு இயக்குநரின்கீழ் ஒரு போர்டும் வைக்கவேண்டும் என்ற கருத்தாரு ஆய்வில் இருந்து வருகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இந்த செகண்டரி கல்வி போர்ட் எவ்வளவு ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப் படுகிறது? இதற்கு முன்பு எப்போது நிறுவப்பட்டது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** செகண்டரி கல்வி போர்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக் கப்படுகிறது. அரசாங்கத்தின் சார்பாக எக்ஸ் அபிஷியோ உறுப் பினரும், யூனிவர்ஸிட்டி ரெப்ரசென்டேட்டிவ்ஸ் நான்குபேர்களும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பிரதிநிதி, மதுரை பல்கலைக் கழகத்தின் பிரதிநிதிகளும், அது தவிர ஆசிரியர்கள் சார்பாக இரண்டு பிரதிநிதிகளும், மானேஜ்மென்ட் சார்பாக இரண்டு பிரதிநிதிகளும், டெக்னிக்கல் எட்யூகேஷன் சார்பாக இரண்டு பிரிதிநிதிகளும், ஹரிஜன ரெப்ரசென்டேட்டிவ்ஸ் என்ற முறையில் இரண்டு பேர்களும், இப்படி பல்வேறு பிரிவினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள்.

**திரு. கு. காமாட்சி:** முதல் வகுப்பிலிருந்து பதினோராவது வகுப்பு வரை இந்த செகண்டரி கல்வி போர்ட் நிர்வகிக்க வேண்டி யிருக்கிறது. ஆகவே, நிர்வாக வசதிக்காக ஆரம்பக் கல்வியைத் தனியாகவும், ஐந்தாவது வகுப்பிலிருந்து பதினோராவது வகுப்பு வரை செகண்டரி கல்வி என்றும் செய்வதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இந்தப் பிரச்னை இந்த மன்றத்தில் பலதடவைகள் எழுப்பப்பட்டு அதற்கு பதிலும் கூறப்பட்டிருக்கிறது. கல்வியைப் பொறுத்தவரையில் அதை நிர்வகிக்கும் அதிகாரிகள், மாவட்டக் கல்வி அதிகாரி, மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி இவர்களின் கீழ் நிர்வாகம் நடை பெறுகிறது.

உயர்துவக்கப் பள்ளி ஒன்று முதல் எட்டு வகுப்பு வரை இருக்கிறது. உயர்நிலைப் பள்ளி ஆறு முதல் பதினோராவது வகுப்பு வரை இருக்கிறது. ஆறு முதல் எட்டு வரை உயர் துவக்கப் பள்ளிகளிலும் இருக்கின்றது, உயர்நிலைப் பள்ளிகளிலும் இருக் கின்றது. இவை ஒன்றோடொன்று தொடர்புடையதாக

இருப்பதால் துணை இயக்குநர் அளவில் தனித்தனியாக கவனிக்கப் பட்டு ஆனால் இயக்குநர் ஒருவர் மேற்பார்வையில் நிர்வகிக்கும் அளவிற்கு இருக்கிறது. ஆரம்பக் கல்விக்கு தனி இயக்குநராகப் பிரித்து தொழில் கல்விக்கு இருப்பதுபோல் வைப்பது கடின மானது. ஒரு இயக்குநரின் கீழ் தனித்தனியாக இணை இயக்கு நர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

### செட்டியார் மடம் உயர்தொடக்கப்பள்ளிக் கட்டடம்.

* 147 வினா—திரு. ஏ. பாலையா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த செட்டியார் மடம் உயர் தொடக்கப் பள்ளிக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில் புதிதாக கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பழுதுபட்ட பகுதியை சிறப்புப்பணி பார்க்க நாகர்கோவில் பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. ஏ. பாலையா: செட்டியார் மடம் உயர்தொடக்கப் பள்ளிக் கட்டடம் மோசமான நிலையில், மேற்கூரை பழுதுபட்டு, அனைத்தும் அழிபட்டு மிகவும் அபாயகரமான நிலையில் இருப்பதாலும், மதிய உணவுக்கு வேண்டிய பொருள்களை அந்தப் பள்ளியில் வைப்பதற்கு பாதுகாப்பான இடவசதி இல்லாத தாலும் அந்தப் பள்ளிக் கட்டடத்தை உடனடியாகக் கட்டி முடித்துக்கொடுக்க அரசாங்கம் அனுமதி அளிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திருநெல்வேலியில் உள்ள நிர்வாகப் பொறியாளருக்கு இதைப் பற்றி உடனடியாகக் கவனிக்குமாறு மாவட்டக் கல்வி அதிகாரி வற்புறுத்தி எழுதி யிருக்கிறார்கள். நிர்வாகப் பொறியாளர் விரைவில் அதுபற்றி நடவடிக்கைகள் எடுப்பதாகவும் கூறி இருக்கிறார்கள்.



திரு. ஜே. ஜேம்ஸ்: கன்னியாகுமரி ஜில்லாவில் அதிகமான பள்ளிக்கூடங்களுக்கு மேல் கூரை இல்லாமல் மழை காலங்களில் வகுப்புகளை நடத்த முடியாமல் ஆசிரியர்கள் மாணவர்களை விட்டுவிடுகிறார்கள். ஆகவே, அந்த மாவட்டத்திலுள்ள அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் அனைத்துக்கும் அதிக கால தாமதம் இல்லாமல் பலமான கட்டடங்களை அமைத்துக் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த மாவட்டத் திற்கு ஒதுக்கப்படுகிற நிதி அடிப்படையில் ஓரளவு இந்தப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. அதற்கு என்று கூடுதலான நிதி ஒதுக்கியும் போதுமான அளவிற்கு இல்லை என்ற நிலைமை இருக்கிறது. அங்குள்ள கட்டடக் குழுவினரும் கல்வித் துறையின் சார்பாகவும் ஓரளவு உதவி செய்வதன் மூலம், முதலில் பழுதுபட்ட கட்டடங்களின் கூரைகள் கவனிக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி கல்வித் துறை அதிகாரிகள் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக் கிறார்கள்.

### *Children's Museum*

* 148Q.—THIRU N. K. PALANISAMY. Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there is a proposal to establish a separate Museum for the development of children's talents in Arts; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சிறுவர் காட்சியகமும் பொம்மைகள் காட்சியகமும் அடங்கிய "ஜவஹர்லால் நேரு பாலபவனம்" நிறுவுவதற்கு அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு ஜவஹர்லால் நேரு நினைவு நிதியில் இருந்து, ரூ. 15.72 இலட்சம் வழங்கப் பட்டது. குழந்தைகள் காட்சியகமும் பொம்மைகள் காட்சி யகமும் அடங்கிய பாலபவனின் நிர்வாகக் கமிட்டி ஒன்று அமைப்பதற்கு அரசாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. பால பவனமானது மற்றவைகளுடன் கீழ்க்கண்ட செயல்களும் உடைய தாகும்.

உடற்பயிற்சி, பாட்டு, நடனம், அறிவியல் சங்கம், நூல்-நிலைய சேவை முதலியன. கட்டிடப் பணிகள் முடிந்தவுடன் இது செயல் படத் துவங்கும்.

**திரு. என். கே. பழனிச்சாமி:** 'வால்டர் டிஸ்னியின் டிஸ்னி லாண்டில்' குழந்தைகளுக்காக பார்க் வைத்து வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து கொடுத்திருக்கிறார்கள். வெளி நாடுகளிலிருந்து ஏராளமான பேர்கள் இங்கு நம் நாட்டுக்கு வருகிறார்கள். அப்படி வருபவர்கள் சென்னைக்கும் வருகிறார்கள். ஆகவே, இன்னும் சிறிது அபிவிருத்தி செய்து அந்த டிஸ்னி லாண்ட் இருப்பதுபோல் அதன் அடிப்படையில் செய்வதற்கு சர்க்காருக்கு உத்தேசமுண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்த அளவிற்கு பெரிய அளவில் செய்ய இயலுமா என்பது ஐயப்பாட்டிற்குரியது. ஏற்கனவே சிறிய அளவில் சில்ட்ரன் ம்யூஸியம், டால் ம்யூஸியம் வைக்க எண்ணிக்கொண்டிருந்தது. ஜவஹர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து அதற்கு எவ்வளவு வசூலிக்கப்பட்டிருக்கிறதோ அதில் 40 சதவிகிதம் தரவேண்டுமென்று கேட்டு அதற்கு ஒப்புக்கொண்டார்கள். பதினைந்து லட்சத்து சில்லறை ரூபாய் கிடைக்கும். இந்த சில்ட்ரன் ம்யூஸியம், டால் ம்யூஸியம், நேரு பாலபவனம் எல்லாவற்றையும் சேர்த்து பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பெயரால் ஜவஹர்லால் நேரு சிறுவர் அரங்கம் என்ற பெயரால் ஏற்படுத்த முயற்சிகள் எடுத்து அதற்காக குழு ஒன்று அமைக்கப்பட அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான இடத்தை இப்போது தேடிக் கொண்டிருக்கிறோம். நல்ல இடமாக இருக்க வேண்டும். இப்போது ம்யூஸியம் இருக்கும் இடத்தில் இதை அமைக்கலாமா என்றால் போதுமான அளவிற்கு அங்கு இடம் இல்லாததால் கிண்டி பக்கத்தில் அல்லது வேறு இடத்தில் இடத்தைத் தேடிய பிறகு கட்டட வேலை நடைபெறும். கூடுமானவரையில் சிறுவர்களுக்குப் பயன்படுகிற எல்லா வகைகளையும் இதில் உள்ளடக்கவேண்டும் என்பது அரசின் எண்ணம்.



**திரு. தி. பொன்னுமலை:** இந்த குழந்தைகள் கண்காட்சியில் எந்த மாணவர்கள் தவறாமல் பள்ளிக்கு வந்திருக்கிறார்களோ, எந்த மாணவர்கள் அதிக மார்க்ஸ் வாங்கியிருக்கிறார்களோ அவர்கள் பொருள்களை எல்லாம் வைத்து, மாணவர்களை ஊக்குவிக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் மாணவர்கள் பள்ளிக்கு வருகிறது வராதது எல்லாம் அந்தப் பள்ளிகள் கவனிக்க வேண்டியது. இது சிறுவர் காட்சியகம் பற்றியது. சிறுவர்கள் வரலாற்று அறிவு, பண்பாட்டு அறிவு, பொது அறிவு, நுண்ணறிவு, அறிவியல் பற்றிய அறிவு ஆகியவற்றை எல்லாம் பெறத்தக்க வகையில் ஒரு காட்சியகம் அமைக்க — டால் ம்யூஸியம் என்று டெல்லியில் இருக்கிறது. வேறு பலயிடங்களிலும் இருக்கின்றன. பல்வேறு நாடுகளுடைய பொம்மைகளை எல்லாம் வரவழைத்து அந்தந்த நாடுகளின் நடை உடைகள், உடை அமைப்பு, நாகரீகம் ஆகியவற்றை வெளிப்படுத்துகிற . அளவில் சிறுவர்களுக்கு எடுத்துச் சொன்னால் அவர்களுக்கு அவைபற்றி புரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும் என்று பொம்மைக் காட்சிகள் வைக்கப் படுகின்றன. அறிவியல் சம்பந்தமாகவும், உடற்பயிற்சி, பாட்டு, நடனம், அறிவியல் போன்றவைகளை சிறுவர்களிடம் வளர்க்க இந்த அகம் அமைக்கப்படுகிறது.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** சிறுவர்களின் கல்வி முக்கியத்துவத்தை உணர்ந்து மாவட்ட தலைநகரங்கள்தோறும் இம்மாதிரி ம்யூஸியங்களை சிறிய அளவில் அமைத்து அவர்கள் கல்வி வளர்ச்சியில் ஊக்கம் காட்ட இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாவட்டந் தோறும் அமைவது நல்லதுதான், அதற்கு நிதி நிலை இடம் கொடுக்குமா என்பது ஐயப்பாட்டுக்குரியது. சென்னையில் பெரிய அளவில் ஒன்றை அமைத்துவிடுவோமானால் பிறகு அதைப் பின்பற்றி மாவட்டங்களில் வைக்கலாமா என்பதைப்பற்றி ஆராயலாம்.

**திரு. கு. காமாட்சி:** பால பவனத்தில் பொம்மைகள் வைக்கும் போது பகுத்தறிவுக்கு ஒப்ப உள்ள பொம்மைகள், ஜாதிமத உணர்வுகளைக் காட்டாத முறையில் பொம்மைகள் அமையுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1975 அக்டோபர் 31]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றி தனி வல்லுநர்கள் குழு, அறிஞர்கள் குழு, ஆசிரியர்கள் குழு எல்லாம் இருந்து ஆராய்ந்து அவற்றை அமைப்பதில் ஈடுபடும். அவர்கள் இவற்றையெல்லாம் கவனித்துக்கொள்வார்கள். சிறுவர்களுக்கு சிந்தனை அறிவு வளரவும், செயலாற்றல், திறமை வளரவும், நாட்டுப் பற்று ஏற்படவும் இது அமைய வேண்டும் என்பதுதான் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம்.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, சென்னையில் இந்த பால பவனத்தை எங்கே கட்ட இருக்கிறீர்கள் என்று அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைத்தான் முதலில் குறிப்பிட்டேன். இடம்தான் இப்போது தேடப்பட்டு வருகிறது. மியூஸியத்தின் அருகாமையில் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அங்கே போதுமான இடம் இல்லை. கிண்டியில் சினேக் பார்க் அருகில் வைக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. அடையாறுக்குப் பக்கத்தில் வைக்கலாம் என்று வேறொரு கருத்து இருக்கிறது. டெல்லியில் இருக்கும் நேரு நினைவுக் குழுவினர் வேறொரு இடத்தில் வைக்கலாம் என்று சொல்கிறார்கள்.

நாம் கருதுவது கிண்டிக்குப் பக்கத்தில் இருந்தால் அங்கே காந்தி மண்டபம் இருக்கிறது. ராஜாஜி நினைவு மண்டபம் இருக்கிறது. மற்ற நினைவு மண்டபங்கள் வர இருக்கின்றன. பக்கத்திலே சினேக் பார்க் இருக்கிறது. சில்ட்ரன்ஸ் பார்க் இருக்கிறது. டீர் சாங்சுவரி இருக்கிறது. ஆகவே, அதை ஒட்டி அது இருக்குமானால் சிறுவர்கள் வருகிறபோது எல்லாவற்றையும் சேர்த்து சுற்றிப் பார்க்க வசதியாக இருக்கும். இவ்வாறில்லாமல் வேறொரு இடத்தில் வைக்கப்படுமானால் அவர்கள் இரண்டு மூன்று மைல் சென்று இதை மட்டும் பார்க்கவேண்டிய நிலைமையேற்படும். இந்தக் கருத்தை நாம் டெல்லிக்கு தெரிவித்துக்கொண்டு இருக்கிறோம். அதற்குரிய அதிகாரி விரைவில் வந்து அந்த இடங்களைப் பார்வையிடுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். பார்வையிட்ட பிறகு, அது குறித்து முடிவு செய்யப்படும்.



975 அக்டோபர் 31]

சென்னை குழந்தைகள் மருத்துவமனை.

*149 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள குழந்தைகள் மருத்துவ மனையை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) எழாது.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, சென்னையிலுள்ள இந்த குழந்தைகள் மருத்துவமனை சௌத்-ஈஸ்ட் ஏசியாவிலேயே ஒரு நல்ல மருத்துவமனை என்று பெயர் பெற்று இருக்கிறது. அங்கே பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் வந்து சிகிச்சை பெறுகிறார்கள். சில நேரங்களில் அதில் இடம் பெற முடியாமல் போகிறார்கள். ஆகவே, இருக்கிற இடத்திலாவது அதை மேலும் விஸ்தரித்துக் கட்டுவதற்கு அரசு முன்வருமா? அல்லது அதை இன்னும் வசதியான இடத்திற்கு மாற்றுவதற்கு அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த மருத்துவமனை குறிப்பிட்ட அளவுக்கு நிதி செலவிட்டு கட்டப்பட்டு, வளர்ச்சி பெற்று செயல்படுகிற ஒன்றாகும். மேலும் மேலும் விரிவுபடுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்குப் பின் பகுதியில் தாய்-சேய் மருத்துவமனை செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அந்தப் பகுதியில் உள்ள இடத்தையும் அதோடு சேர்த்து, அதன் வளர்ச்சிக்கான புற நோயாளிகள் பகுதி கட்ட முடியுமா என்பது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, சென்னையில் இருக்கிற குழந்தைகள் மருத்துவமனை மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அந்த மருத்துவமனையில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு, மாவட்டத்தில் இருக்கும் தலைமை மருத்துவமனைகளில் குழந்தைகள் மருத்துவப் பிரிவு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, சென்னையிலுள்ள மருத்துவ மனை 'டீச்சிங் ஆஸ்பிடல்' என்ற முறையில் தனி வளர்ச்சி பெற்று இருப்பதாகும். பல்வேறு முறைகளில், பல்வேறு துறைகளில் குழந்தைகளுக்கு வரும் நோய்கள் குறித்து சிறப்புப் படிப்பு படிக்கவும், சிறந்த முறையில் ஆராய்ச்சி நடத்தவும் வாய்ப்பாக இருக்கிறது. மாவட்ட மருத்துவ மனைகளில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தி, அதில் சிறந்த மருத்துவர்களைப் போட வேண்டுமென்று ஏற்கனவே திட்டமிட்டு, அது நடைமுறைக்கு வந்து கொண்டு இருக்கிறது.

## புதுப்பேட்டையில் அரசு மருந்தகம்

* 150 வினா—திரு. ஜி. ராமசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், புதுப்பேட்டையில் புதிதாக அரசு மருந்தகம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.

## தோப்பூர் காசநோய் மருத்துவ மனை

* 151 வினா—திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகரின் அருகிலுள்ள தோப்பூர் டி. பி. மருத்துவ மனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், மதுரைக்கு அருகாமையில் இருக்கும் ஆஸ்டின்பட்டி டி. பி. ஆஸ்பிடல் ஒன்றுதான் மதுரை மாவட்டத்தில் இருக்கிறது. அதிலே இப்போது சாதாரணமாக





இடம் பெறுவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. வெயிட்டிங் லிஸ்ட்டில் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். இது தென் மாவட்டங்களில் இருக்கும் முக்கியமான டி. பி. ஆஸ்பிடல் என்பதால் அதை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் ஒன்றுவது இருக்கிறது. ஆனால் வேறு சில மாவட்டங்களில் ஒன்று கூட அமைக்க முடியவில்லை. தென் மாவட்டங்களில் நாகர்கோவில் பகுதியில் ஒரு காசநோய் மருத்துவ மனை தனியாகச் செயல்பட்டு வருகிறது. அந்த மருத்துவ மனையில் அண்மைக் காலத்தில் 20 படுக்கைகள் அதிகப்படுத்தப்பட்டது. 182 படுக்கைகளாக ஆக்கப் பட்டிருக்கிறது. கல்லூரி மருத்துவ மனையாக எது இருந்தாலும் அங்கே காச நோய் சிகிச்சை வழங்குவது மட்டுமல்லாமல், சில படுக்கைகளை ஒதுக்குகிற முறையும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. காச நோய் வளர்ச்சியின் காரணமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தாலுக்கா மருத்துவ மனையில் காச நோய்க்கென ஓரிரு படுக்கைகள் ஒதுக்குவது என்று திட்டமிட்டு, உசிலம்பட்டியில் 20 படுக்கைகள் காச நோயாளி களுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இப்படி வரிசையாக பரவலாக காச நோயாளிகளுக்கு வசதி செய்து தர வேண்டுமென்பது அரசின் கொள்கை. அந்தக் கொள்கையின் அடிப்படையில் பரவலாக அந்தக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்:** தலைவரவர்களே, மதுரை மாவட்டத்திலுள்ள காசநோய் ஆஸ்பிடலில் இட நெருக்கடி அதிகமாக இருப்பதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால், மதுரை மாவட்டத்தின் வட பகுதியில் உள்ள திண்டுக்கல் பகுதியில், சிறுமலைப் பகுதியில் ஆரோக்கியமான இடம் இருக்கிறது, அங்கே காச நோய் மருத்துவ மனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, திண்டுக்கல்லில் மதுரை மாவட்ட தலைமை மருத்துவ மனை இருக்கிறது. அங்கே காச நோய் மருத்துவப் பகுதி ஒன்று இருக்கிறது. ஆரோக்கியமான இடங்களில் எல்லாம் காச நோய்

மருத்துவமனை கட்டுவது என்றால் நிதிவசதியும் ஆரோக்கியமாக இருக்கவேண்டும். அப்படி ஆரோக்கியமான நிதி வசதி இந்த நாட்டிலே இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் செங்கிப்பட்டியில் ஒரு காசநோய் மருத்துவமனை இருக்கிறது. அதற்கு உள்ளாட்சித் துறையிலிருந்து மானியம் கொடுத்து வந்தார்கள். சமீபத்தில் அதை நிறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறைக்கு கட்டளையிட்டு பணம் கொடுக்கச் சொல்வார்களா? அல்லது, அரசே நேரடியாகப் பணம் ஒதுக்க முன் வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** உள்ளாட்சித் துறை மன்றங்கள், ஒன்றியங்கள் ஆகியவற்றின் சார்பாக நோயாளிகள் அனுப்பினால் அவர்களுக்கு இட வசதி, படுக்கை வசதி போன்றவற்றை செய்து கொடுப்பதற்காக பணம் கொடுக்கப் படுகிறது. அந்த ஒன்றியங்களின் சார்பாக பணம் கொடுக்கா விட்டால், அந்த ஒன்றியத்தின் சார்பாக வருகிற நோயாளிகளுக்கு சிகிச்சை வசதி —இருக்காது. மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளாட்சி மன்றக் குழுவிற்குத் தலைவராக இருப்பதால் இதிலே ஏதேனும் சிக்கல் இருந்தாலும், அதைப் போக்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் முடியும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**திரு. கு. காமாட்சி :** தலைவரவர்களே, திருச்சியில் உள்ள ராஜாஜி டி. பி. சானடோரியத்தை அரசு மேற்கொள்கிற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? இருக்கிறது என்றால் விரைவில் எடுத்துக்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** செயற்குறிப்பு இருக்கிறது. அது திரும்பத் திரும்ப பரிசீலனைக்கு உள்ளாகி இருக்கிறது. அந்தப் பரிசீலனை முடிந்த உடனே, அரசு எடுத்துக்கொள்வதைப் பற்றி இறுதி ஆணை பிறப்பிக்க முடியும்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, காச நோய் மருத்துவ மனையில் எமர்ஜன்சி கேஸ்கள் போனால், இடம் மிகக் குறைவாக இருப்பதால், பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, தலைமை மருத்துவ மனைகளில் எமர்ஜன்சி கேஸ்கள் அட்மிட் செய்வதற்காக அதிகமாக படுக்கை வசதிகளைச் செய்ய அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இந்த நிலை நீண்டகாலம் நீடிக்கும். எமர்ஜன்சி கேஸ்கள் என்று காச நோயாளிகளைப் பற்றிச் சொல்வதானால் மொத்தம் 7 லட்சம் பேர் தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டு காலமாக பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று புள்ளிவிவரம் கூறுகிறது. படுக்கை வசதி என்பது ஏறத்தாழ இப்படிப்பட்ட மருத்துவ மனைகளில் எல்லாம் 3,000-4,000 தான் இருக்கின்றன. தாலுக்கா மருத்துவ மனைகளில் காச நோய் பிரிவு ஆரம்பிக்க, காச நோய் கழகத்தின் சார்பாகவும், அரசாங்கத்தின் சார்பாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது கூட கிருஷ்ணகிரியில் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்று 1½ லட்சம் ரூபாயில் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இப்படி பரவலாக பொது மக்கள், ஏழை எளிய மக்கள் காச நோய் கண்டவர்கள் வெகு தூரம் சென்று மருத்துவம் செய்ய முடியாது என்ற நிலை இருக்குமானால், அங்கேயெல்லாம் தேவையை அனுசரித்து இப்படி மருத்துவ மனைகள் கட்டப்படுகின்றன. அவர்கள் ஓரிரு நாட்கள் மருத்துவ மனையில் தங்கி, பிறகு வீட்டிலிருந்து வந்து மருத்துவம் பார்த்துக் கொள்ளலாம் என்ற வருகிறது. Domicilary treatment is more successful and effective முறையில் வசதி செய்யும் வகையில் இது செய்யப்பட்டு என்ற கருத்து ஏற்பட்டு இருக்கிற காரணத்தால் அதைப் பரவலாக எல்லோருக்கும் வழங்குவதற்கு கொள்கை அடிப்படையில் தாலுக்கா மருத்துவ மனைகளில் முடிந்த அளவுக்குச் செய்வதற்கு முயற்சி நடைபெற்று வருகிறது. எமர்ஜன்சி என்ற பெயரால் எல்லோருக்கும் இடம் கொடுக்கவில்லை என்ற புகார் நீண்ட நாட்கள் நீடிக்கத்தான் செய்யும்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூரில் இருக்கும் டி. பி. மருத்துவ மனையில் இட வசதி குறைவாக இருக்கிறது என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? அப்படிக் கொண்டுவரப்பட்டிருந்தால் அதை மேலும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

மருத்துவமனை கட்டுவது என்றால் நிதிவசதியும் ஆரோக்கியமாக இருக்கவேண்டும். அப்படி ஆரோக்கியமான நிதி வசதி இந்த நாட்டிலே இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் செங்கிப்பட்டியில் ஒரு காசநோய் மருத்துவமனை இருக்கிறது. அதற்கு உள்ளாட்சித் துறையிலிருந்து மானியம் கொடுத்து வந்தார்கள். சமீபத்தில் அதை நிறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறைக்கு கட்டளையிட்டு பணம் கொடுக்கச் சொல்வார்களா? அல்லது, அரசே நேரடியாகப் பணம் ஒதுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: உள்ளாட்சித் துறை மன்றங்கள், ஒன்றியங்கள் ஆகியவற்றின் சார்பாக நோயாளிகள் அனுப்பினால் அவர்களுக்கு இட வசதி, படுக்கை வசதி போன்றவற்றை செய்து கொடுப்பதற்காக பணம் கொடுக்கப் படுகிறது. அந்த ஒன்றியங்களின் சார்பாக பணம் கொடுக்கா விட்டால், அந்த ஒன்றியத்தின் சார்பாக வருகிற நோயாளிகளுக்கு சிகிச்சை வசதி இருக்காது. மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளாட்சி மன்றக் குழுவிற்குத் தலைவராக இருப்பதால் இதிலே ஏதேனும் சிக்கல் இருந்தாலும், அதைப் போக்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் முடியும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, திருச்சியில் உள்ள ராஜாஜி டி. பி. சானடோரியத்தை அரசு மேற்கொள்கிற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? இருக்கிறது என்றால் விரைவில் எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: செயற்குறிப்பு இருக்கிறது. அது திரும்பத் திரும்ப பரிசீலனைக்கு உள்ளாகி இருக்கிறது. அந்தப் பரிசீலனை முடிந்த உடனே, அரசு எடுத்துக்கொள்வதைப் பற்றி இறுதி ஆணை பிறப்பிக்க முடியும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, காச நோய் மருத்துவ மனையில் எமர்ஜன்சி கேஸ்கள் போனால், இடம் மிகக் குறைவாக இருப்பதால், பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, தலைமை மருத்துவ மனைகளில் எமர்ஜன்சி கேஸ்கள் அட்மிட் செய்வதற்காக அதிகமாக படுக்கை வசதிகளைச் செய்ய அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த நிலை நீண்டகாலம் நீடிக்கும். எமர்ஜன்சி கேஸ்கள் என்று காச நோயாளிகளைப் பற்றிச் சொல்வதானால் மொத்தம் 7 லட்சம் பேர் தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டு காலமாக பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று புள்ளிவிவரம் கூறுகிறது. படுக்கை வசதி என்பது ஏறத்தாழ இப்படிப்பட்ட மருத்துவ மனைகளில் எல்லாம் 3,000-4,000 தான் இருக்கின்றன. தாலுக்கா மருத்துவ மனைகளில் காச நோய் பிரிவு ஆரம்பிக்க, காச நோய் கழகத்தின் சார்பாகவும், அரசாங்கத்தின் சார்பாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது கூட கிருஷ்ணகிரியில் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்று 1½ லட்சம் ரூபாயில் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இப்படி பரவலாக பொது மக்கள், ஏழை எளிய மக்கள் காச நோய் கண்டவர்கள் வெகு தூரம் சென்று மருத்துவம் செய்ய முடியாது என்ற நிலை இருக்குமானால், அங்கேயெல்லாம் தேவையை அனுசரித்து இப்படி மருத்துவ மனைகள் கட்டப்படுகின்றன. அவர்கள் ஓரிரு நாட்கள் மருத்துவ மனையில் தங்கி, பிறகு வீட்டிலிருந்து வந்து மருத்துவம் பார்த்துக் கொள்ளலாம் என்ற வருகிறது. Domicilary treatment is more successful and effective முறையில் வசதி செய்யும் வகையில் இது செய்யப்பட்டு என்ற கருத்து ஏற்பட்டு இருக்கிற காரணத்தால் அதைப் பரவலாக எல்லோருக்கும் வழங்குவதற்கு கொள்கை அடிப்படையில் தாலுக்கா மருத்துவ மனைகளில் முடிந்த அளவுக்குச் செய்வதற்கு முயற்சி நடைபெற்று வருகிறது. எமர்ஜன்சி என்ற பெயரால் எல்லோருக்கும் இடம் கொடுக்கவில்லை என்ற புகார் நீண்ட நாட்கள் நீடிக்கத்தான் செய்யும்.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூரில் இருக்கும் டி. பி. மருத்துவ மனையில் இட வசதி குறைவாக இருக்கிறது என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? அப்படிக் கொண்டுவரப்பட்டிருந்தால் அதை மேலும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

[1975 அக்டோபர் 31

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, பொதுவாக மருத்துவ மனைகளில் எல்லாம் இட வசதி இல்லை என்பது அரசாங்கத்தின் கவனத்தில் 24 மணி நேரமும் இருக்கிறது, அப்படி இட வசதி ஏற்படுத்தித்தரக்கூடிய வசதி எந்த நாட்டிலும் எந்தப் பொருளாதார நிலையிலும் எந்தச் சர்க்காருக்கும் கிடையாது. மாநில சர்க்காருக்கும் கிடையாது, மத்திய சர்க்காருக்கும் கிடையாது. அதைத் தாங்குகிற ஆற்றல் மக்களுக்கும் கிடையாது. ஆகவே, படிப்படியாக சிறிது சிறிதாக வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப அவற்றை ஏற்படுத்த முடியும்.

(முற்பகல் 9.30)

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது நாகர்கோவிலில் டி.பி. ஹாஸ்பிடல் இருக்கிறது என்று சொன்னார்கள். தென் மாநிலங்களில் நாகர்கோவிலில் இருக்கிற கடற்காற்றினால் டி. பி. யைக் குணப்படுத்த முடியும். அந்தக் காற்று டி. பி. யைக் குணப்படுத்தப் பயன்படுத்த அனுகூலமாக இருக்கிற காரணத்தினால் தென் மாவட்டங்களிலிருந்து நாகர்கோவிலுக்கு டி.பி. பேஷன்ட்கள் அதிகமாக வந்து விடுகிறார்கள். அங்கு படுக்கை வசதி இல்லாமல் இருக்கிற காரணத்தினால் இந்த ஆஸ்பத்திரியில் இட வசதியை, படுக்கை வசதியை அதிகரிக்க அரசாங்கத்திடம் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, நாகர் கோவிலில் குமரி மாவட்டம் நல்ல காற்று இருக்கின்ற பகுதியாக இருப்பதால் டி.பி. மருத்துவமனை தேவையில்லை.

**திரு. நா. வெ. குருசாமி:** தலைவரவர்களே, மதுரையில் உள்ள காச நோய் மருத்துவ மனையில் சிலபேர் தங்கள் பெயரைப் பதிந்து வைத்திருந்தாலும், அவர்களுக்கு இடம் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. குறிப்பாக, இளைஞர்கள் இந்தக் காச நோய் சிகிச்சைக்காகப் பதிந்து கொண்டிருந்தாலும், சில பேருக்கு அவர்கள் மறைந்த பின்புதான் கார்டு வருகிறது.



1975 அக்டோபர் 31]

அவர்களுடைய வியாதியின் தகுதியின் அடிப்படையில் அவர்களை மருத்துவ மனையில் சேர்த்துக் கொள்ள ஏதேனும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இந்த மாதிரியான படுக்கை வசதி காச நோய்க்கு வழங்கப்பட்ட மருத்துவ மனைகளில் சேர்ந்து சிகிச்சை பெற வேண்டுமென்று ஒவ்வொரு வாரத்திலும். ஒவ்வொரு பகுதியிலும் .100, 200 பேருக்கு ஆங்காங்கு மருத்துவர்கள் அங்கு சேர்ந்து சிகிச்சை பெறுங்கள், என்று தாங்களே சொல்கிற ஒரு பழக்கம் இருக்கிறது. ஆனால் உண்மை என்னவென்று கேட்டால் அவர்களுக்கு, உணவு வசதி தங்கள் வீடுகளிலே இல்லை, அவர்கள் அதனால் வீட்டிலேயே இருந்து சிகிச்சை பெற முடியவில்லை என்ற நிலைமை இருக்கிறது. எனவே, மருத்துவ மனைக்கு வருகிற இந்த நோயாளிகள் போடுகிற முதல் விண்ணப்பமே தங்களை மருத்துவ மனையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான்.

ஆகவே, அது சரியான நோக்கமாக ஆகாது. அந்த நோக்கத்தை ஏற்றுக்கொள்வோமானால் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு இந்த சிகிச்சை வழங்கக் கூடிய வாய்ப்பு இன்றைய தினம் இல்லை.

மருத்துவர்களின் அறிக்கைப்படி இன்றையதினம் இப்படிப்பட்ட நோயாளிகள் 1½ ஆண்டுக் காலம் தொடர்ந்து மருந்தை உட்கொண்டு வந்தால் இந்தக் காச நோய் அறவே அழிக்கப்பட்டுவிடும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏறத்தாழ 50 ஆயிரம் பேர்களுக்கு மருந்து இன்றையதினம் வழங்கப்படுகிறது. வீட்டில் இருந்து கொண்டே மருந்து சாப்பிடுகிற முறையில் இது வழங்கப்படுகிறது. 800, ஆயிரம் பேருக்கு இடம், படுக்கை வசதி இரண்டும் இன்றையதினம் செய்து கொடுப்பது என்பது இயலாத காரியமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** தலைவரவர்களே, இப்போது அரசினர் மருத்துவ மனைகளில் இலவசமாக மருத்துவ வசதி கிடைக்கிறது என்ற எண்ணத்தினால்தான் அங்கே பலர் வருகிறார்கள். நாகர்

கோவில் காச நோய் மருத்துவ மனையில் ஏராளமான காலி இடம் இருக்கிறது. ஆகவே, அங்கு "பேயிங் வார்ட்" கட்டி வைத்தால் அரசாங்கத்திற்கும் நஷ்டம் வராது. "பேயிங் வார்ட்" கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, காச நோய்க்கு பணம் கொடுத்து சிகிச்சை செய்து கொள்ள வேண்டு மென்றால் ஏழை எளியவர்களுக்கு இயலாது. பணக்காரர் களுக்குத்தான் அது சாத்தியமாகும். பணக்காரர்கள் வசதி யுள்ளவர்கள், காச நோய் இருப்பதாகவே சொல்லிக் கொள்ள மாட்டார்கள். அப்படியே இருந்தாலும் அவர்கள் நர்சிங் ஹோம் களில் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்வார்கள். காச நோய் என்பது இன்றைக்கு "செக்ரிகேடட் டிசீஸ்", பிரித்து வைக்கப் பட்டு சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய நோய் என்று கருதப் படவில்லை. ஜெனரல் வார்டிலேயே வைத்து காச நோய்க்கு சிகிச்சை வழங்கலாம். இரண்டு நாள் மருந்து சாப்பிட்டு பின்னாலே அந்த காச நோயின் ஆற்றல் குறைந்து போய் விடுகிறது என்ற காரணத்தினால் மற்றவர்களோடு சேர்ந்தே சிகிச்சை பெறலாம் என்பது இன்றைக்கு மருத்துவத் துறையிலே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நம்முடைய மக்களுடைய மனோபாவம் ஒரே மருத்துவ மனையில் வைத்து இவர்களுக்குச் சிகிச்சை அளிக்கக் கூடாது என்று இருப்பதனால் காச நோயாளிகளுக்கு தனியாக மருத்துவ மனைகள் கட்டி அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பது என்பதை ஏற்றுக்கொண்டு இருக்கிறோம்.

லெப்ரசி உள்ளவர்களுக்குக் கூட பொது மருத்துவ மனையில் வைத்தே சிகிச்சை அளிக்கலாம், அவர்களுக்கு என்று தனியாக மருத்துவ மனை வைக்கத் தேவையில்லை என்று இன்றைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. எங்கேயெல்லாம் வசதிப் படுமோ அங்கேயெல்லாம் வைத்திய வசதியை அதிகப்படுத்த ஏற்கெனவே பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.



**சென்னை நகரில் சுரங்க இரயில் பாதை.**

* 152 வினா—திரு. என். கிட்டப்பா :
திரு. என். கே. பழனிசாமி : } மாண்புமிகு மக்கள்

நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் சுரங்க இரயில் பாதை அமைக்க வேண்டுமென மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தி உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஆம். சென்னை மாநகரத் திற்குள் தற்போதுள்ள போக்குவரத்து நிலைமை ஏற்கனவே நெரிசல் மிகுந்ததாக உள்ளது. வருங்காலத்தில் இம்மா நகராட்சியின் வளர்ச்சி அதை மேலும் கடுமையாக ஆக்கிவிடும். பெருகிவரும் போக்குவரத்தையும் பெருநகர்ப் பகுதிப் போக்கு வரத்துத் தேவைகளையும் நிறைவு செய்யும்பொருட்டு பெருநகர்ப் பகுதியின் போக்குவரத்துப் பிரச்சினைகள் குறித்த அடங்கல் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. பக்கிங்ஹாம் கால்வாய் வழியாகவே மணலியுடன் திருவான்மியூரை இணைத்து, வடக்கு-தெற்கு தொடர்பு வழி நெடுக, மிகவும் விரைவுப் போக்கு வரத்துக்கான நீளமான அமைப்பை ஏற்படுத்துவதற்கான அவசியம் பற்றிக் குறிப்பிட்டு 1991-ஆம் ஆண்டுக்கான வருங்கால போக்குவரத்துத் தேவைக்கு வழி செய்வது குறித்த அறிக்கை இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, இந்தச் சுரங்க ரயில் பாதை மதிப்பீட்டு தொகை எவ்வளவு என்றும், இந்த வேலை எந்த ஆண்டிலே துவங்கப்பட இருக்கிறது—குறிப்பாக அதிலே எத்தனை புகை வண்டி நிலையங்கள் எந்தெந்தப் பகுதி களிலே அமைக்கப்படும்—என்றும் விவரங்களை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இந்தப் போக்குவரத்து இன்னும் ஒரு 15 ஆண்டுகளிலே எவ்வளவாக இருக்க நேரிடும் என்று "கம்ப்யூடைரைசேஷன்" செய்வதன் மூலம் எவ்வளவு மக்கள், எந்தெந்த இடங்களிலே இருந்து சென்று வர நேரிடும் என்ற புள்ளிவிவரங்கள் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அதிலே டிராபிக் பாயின்ட்கள்

எந்தெந்த இடங்களில், எவ்வளவு பேர் ஏறி இறங்குவார்கள், போக்குவரத்து எப்படி இருக்க நேரிடும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் இரயில்வேத் துறையின் மூலம் இதற்கென்று ஒரு ஆய்வு நடைபெற்று இது தேவையில்லை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டாலும், இப்போது இது தேவை என்பது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

அதற்கு மேலே போக்குவரத்துப் பாதை எங்கே அமைக்க வேண்டும் என்பதற்கும், அது எந்தெந்த வழியாக அமைக்கப்பட வேண்டும் என்பதற்கும் ஒரு வரைப்படம் தயாரிக்கப்பட்டது. இதில் இரண்டு விதமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு, சற்று மாறுபட்ட நிலையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு கருத்துக்களும் மத்திய அரசிற்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. இவையெல்லாம் பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கின்றன. இரயில்வே இலாகாவிலும் பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. இதற்குப் பின்னால்தான் இதுபற்றி முடிவு ஏற்படுகிற நிலைமை ஏற்படும் என்று கருதுகிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவாவர்களே, இதேமாதிரியான சுரங்க இரயில் பாதை கல்கத்தாவிற்கு சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது என்று பத்திரிகையிலே பார்த்தேன். அது எந்த அளவிற்கு உண்மை. அதுபோல இங்கேயும் வழங்க மத்திய சர்க்கார் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அண்மையில் மெட்ராஸ் மெட்ரோபாலிடன் அதாரிட்டி—புற நகர் திட்டக் குழு—ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே, இது சம்பந்தமாக மிகத் தெளிவான திட்டவட்டமான கருத்துக்களை மத்திய அரசினிடத்திலே எடுத்துக் காட்டி வலியுறுத்த வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. கல்கத்தாவிற்கு சுரங்கப்பாதை ஏற்கனவே கொடுத்து விட்டார்கள், டில்லிக்கு ஏற்கெனவே ஆரம்பித்து விட்டார்கள், பம்பாய்க்கு ஏற்கெனவே ஒப்புக் கொண்டு விட்டார்கள் என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. நடைபெறுகிற காரியங்கள் நமக்குத் தெரியும். வடக்கே



கொடுத்து விட்டார்கள், தெற்கே கொடுக்கவில்லை என்ற எண்ணம் வரக்கூடாது. மக்கள் தொகை அடிப்படையில்தான் மூன்றாவது நகராக வருகின்ற நமக்கு அடுத்து அளிக்க கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது; இன் பிரின்சிபில் மோர் ஆர் லெஸ் அக்ரீட்.

**திரு. மா. வே. நாராயணசாமி:** தலைவரவர்களே, திருவொற்றியூரிலிருந்து திருவான்மியூர் வரையில் சுரங்க ரயில் பாதை அமைப்பதற்கு ஆய்வுகள் சில நாட்களுக்கு முன்னாலே நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் இன்றைக்கு சுரங்கப் பாதை அமைப்பதிலே நிரம்பச் செலவாகும் என்ற காரணத்தினால் பக்கிங்காம் கால்வாய் கரை ஓரத்தில் இரயில் பாதை அமைக்கலாம் என்று இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது பற்றி அரசு என்ன கருத்து கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, மாற்று யோசனையாக "ஆல்டெர்னேடிவ்" சஜஷன் ஆக இதை வைத்தோம். இந்த இரண்டும் அவர்களுடைய பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் எவ்வளவு செலவாகும், எவ்வளவு காலத்தில் நிறைவேற்ற முடியும், நிறைவேற்றுகிற நோத்தில் என்ன இடையூறுகள் ஏற்படும் என்று இவைகளெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. அவர்கள் இவைகளைப் பரிசீலனை செய்து, நமக்கு அனுகூலமாகப் பரிசீலித்து, முடிவு எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, சென்னை மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக அண்ணா சாலையில் சுரங்கப்பாதை அமைக்க ஒரு திட்டம் பரிசீலனையில் இருப்பதாக நம்முடைய அரசு அறிவித்தது. அது எந்த அளவிற்குச் செயல் முறையில் இருக்கிறது, செயல் திட்டம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அண்ணா சாலையின் இரு மருங்கிலும் சுரங்கப் பாதை' கட்டப்படலாம் என்பது கருத்தளவில் இடம் பெற்றது. செயல் முறையில், திட்ட அளவில் இடம் பெற்ற கருத்தல்ல. அதற்கு என்று ஏராளமான நிதி

[1975 அக்டோபர் 31

தேவைப்படுகிறது என்பது முக்கிய காரணமாகும். அதைச் சுரங்கப் பாதையாக அமைக்கலாமா அல்லது மேம்பாலமாக அமைக்கலாமா என்ற கருத்து ஆராயப்பட்டது. அதற்கிடையிலே, இப்போது இருக்கிற சில அமைப்பு முறைகளையே மாற்றி, பாதைகளை மாற்றி "ஆல்டெர்னேடிவ் ரூட்ஸ்" ஆக வேறு வழிப்பாதையாக அமைக்க வாய்ப்பு இருக்கிறதா, அப்படி அமைப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலை எந்த அளவிற்குத் தவிர்க்க முடியும் என்பது ஆராயப்பட்டது. இப்படிப்பட்ட நிலையிலே தான் சுரங்க இரயில் பாதை, சுரங்கப் பாதை ஆகிய திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இவைகளைப் பற்றிய ஆய்வுகள்—பரிசீலனை—முடிந்த பிறகு, எது சாத்தியமோ அது நிறைவேற்றப்படும்.

### கொளுஞ்சிப்பட்டியில் புதிய ஏரி

* 153. **வினா—திரு. சீ. க. வடிவேலு:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டத்தைச் சார்ந்த கரிகாலி ஊராட்சியிலுள்ள கொளுஞ்சிப்பட்டியில் புதியதாக ஏரி அமைக்கும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை.

### சிவாயம் குளம்

* 154 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், சிவாயம் குளம் புதுப்பிக்கப்படும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** வேலை நடைபெற்று வருகின்றது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, இந்த சிவாயம் குளத்திற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு, நிலச் சொந்தக்காரர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கப்பட்டதா? இல்லை என்றால் விரைவிலே கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1975 அக்டோபர் 31]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதுபற்றி தகவல் இல்லை. நஷ்டயீடு இதுவரை கொடுக்கப்படாமல் இருந்தால், அங்கத்தினருடைய கேள்வியை வைத்தே விரைவில் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, இந்த ஏரியைப் புதுப்பித்த பிறகு எவ்வளவு ஏக்கர் பாசன வசதி கிடைக்கும்? எவ்வளவு உணவுப் பொருள் உற்பத்தியாகும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அந்த விவரம் இல்லை; தனிக் கேள்வி போடவும்.

### ஆந்திர மாநிலத்திலிருந்து நெல் அன்பளிப்பு

* 155 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திர மாநில விவசாயிகள் தமிழ்நாட்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நெல்லும், வைக்கோலும் அன்பளிப் பாகத் தர முன்வந்துள்ளனரா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) ஒரு மாநிலத்தில் இருந்து மற்ற மாநிலங்களுக்கு அரிசி போக்குவரத்துத் தடை இருப்பதினால், ஆந்திர மாநில விவசாயிகள் தமிழ் நாட்டுக்கு தர விழைந்த நெல்லை, மத்திய அரசு அனுமதிக்கவில்லை. ஆந்திரா மாநில விவசாயிகள் தர விழைந்த 10,000 டன்னைப் பொறுத்த வரையிலும், போக்கு வரத்துக் கட்டணத்திற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்ற ஆந்திர விவசாயிகள் சங்கக் கோரிக்கையை இரயில்வே நிர்வாகம் ஏற்றுக் கொள்ளாததால், இதையும் தமிழகத்திற்குக் கொண்டுவர இயலவில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், ஆந்திராவில் 'ப்ரோக்கன் ரைஸ்' ஏராளமான அளவு விலைபோகாமல் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. அதை நம்முடைய மாநிலத்திற்கு வாங்க

தேவைப்படுகிறது என்பது முக்கிய காரணமாகும். அதைச் சுரங்கப் பாதையாக அமைக்கலாமா அல்லது மேம்பாலமாக அமைக்கலாமா என்ற கருத்து ஆராயப்பட்டது. அதற்கிடையிலே, இப்போது இருக்கிற சில அமைப்பு முறைகளையே மாற்றி, பாதைகளை மாற்றி "ஆல்டெர்னேடிவ் ரூட்ஸ்" ஆக வேறு வழிப்பாதையாக அமைக்க வாய்ப்பு இருக்கிறதா, அப்படி அமைப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலை எந்த அளவிற்குத் தவிர்க்க முடியும் என்பது ஆராயப்பட்டது. இப்படிப்பட்ட நிலையிலே தான் சுரங்க இரயில் பாதை, சுரங்கப் பாதை ஆகிய திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இவைகளைப் பற்றிய ஆய்வுகள்—பரிசீலனை—முடிந்த பிறகு, எது சாத்தியமோ அது நிறைவேற்றப்படும்.

### கொளுஞ்சிப்பட்டியில் புதிய ஏரி

*** 153. வினா—திரு. சீ. க. வடிவேலு:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டத்தைச் சார்ந்த கரிகாலி ஊராட்சியிலுள்ள கொளுஞ்சிப்பட்டியில் புதியதாக ஏரி அமைக்கும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை.

### சிவாயம் குளம்

*** 154 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், சிவாயம் குளம் புதுப்பிக்கப்படும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** வேலை நடைபெற்று வருகின்றது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, இந்த வாயம் குளத்திற்கு நிலம் கையாகப்படுத்தப்பட்டு, நிலச் சொந்தக்காரர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கப்பட்டதா? இல்லை என்றால் விரைவிலே கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



**திரு. என். கே. பழனிசாமி:** சார், ஸ்பேர் பார்ட்ஸினால்தான் பஸ்களுக்கு அதிக நஷ்டம் ஏற்படுகிறது. காரணம் பல சமயங்களில் ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை; அதனால் பஸ்கள் ஓடவில்லை. அதுமட்டுமல்லாமல் திருட்டும் நடக்கிறது. இன்னும் ஏராளமான பஸ்களை நாம் எடுத்துக்கொள்ளப் போகிறோம். ஆகையால், இங்கேயே ஸ்பேர் பார்ட்ஸ் செய்ய திட்டம் வகுத்து, அதன் அடிப்படையில் செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, இப்போது பல்லவன் போக்குவரத்து, சோழன் போக்குவரத்து போன்ற பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. அதை எல்லாம் சென்ட்ரலைஸ் செய்து, என்னென்ன சாமான்கள் எப்போது சப்ளை செய்ய வேண்டும் என்பதை அறிந்து உடனடியாக சப்ளை செய்யவும், திருட்டைத் தடுக்கவும் சர்க்கார் திட்டம் வைத்திருக்கிறதா? அப்படியானால் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வல்லுநர் குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் மூலம்தான் வாங்குகிறார்கள். ஸ்பேர் பார்ட்ஸ் நாமே உற்பத்தி செய்யலாம் என்ற ஆலோசனை இருந்தது. எல்லாப் பொருட்களையும் உற்பத்தி செய்வது கடினம் என்று கருதி கைவிடப்பட்டிருக்கிறது. இப்போது ஸ்பேர் பார்ட்ஸ் சப்ளை செய்வதில் எந்த விதமான தொல்லையும் இல்லாமல் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு தி. பொன்னுமலை:** தலைவரவர்களே, இந்த ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வல்லுநர் குழு இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனாலும் நல்ல சாமான்களைக் கூட 'கண்டம்' செய்துவிட்டு, புதிய சாமான்களைப் பொருத்தி விடுகிறார்கள். பிறகு 'கண்டம்' ஆன சாமான்களை நல்ல விலைக்கு விற்று விடுகிறார்கள். அதைப் பரிசீலனை செய்து, நல்லமுறையில் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1975 அக்டோபர் 31

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அதைக் கூட இப்போது ஒவ்வொரு இடத்திலும் போய் சோதனை செய்து பார்த்து, 'கண்டம்' ஆன பொருட்கள் என்னென்ன என்பதைப் பார்த்து, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அதிலும் அதிகமாக தவறுகள் எதுவும் இல்லை.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, அரசுத் துறையிலே இயங்குகின்ற போக்குவரத்துகளுக்கு ஆண்டுதோறும் எவ்வளவு உதிரி உறுப்புகளை வாங்குகிறோம்? அதிலே அன்றாடம் தேவைப் படுகிற உதிரி உறுப்புகள் எவ்வளவு? இன்றியமையாத உதிரி உறுப்புகளை நாமே அரசுத் துறையில் செய்வதற்கு முன்வந்தால் இன்றைக்கு பல கோடி ரூபாய் அரசுக்கு மிச்சமாகும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி கேட்கும் போது விளக்கம் கொடுக்க வேண்டியதில்லை. திரு. என். கே. பழனிசாமி அவர்கள் ஆரம்பித்தார்கள்; இப்போது எல்லோரும் ஆரம்பித்து விட்டார்கள். கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. சி. ஆறுமுகம் :** விளக்கம் கொடுத்தால்தான் பதில் சொல்ல வசதியாக இருக்கும். அதை கருத்திலே கொண்டு நம் அரசுத் துறையிலே உதிரி உறுப்புகளை உற்பத்தி செய்ய முன் வந்தால், வட மாநிலங்களிலிருந்து வருகிற மட்டமான பொருட் களைக் கூட வாங்கவேண்டியதில்லை. சில சமயங்களில் அவர்கள் மட்டமான பொருட்களைக் கூட அனுப்பி வைக்கிறார்கள். ஆகவே, முக்கியமான பொருட்களையாவது இங்கே உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வல்லுநர் குழு இருக்கிறது என்று ஏற்கெனவே சொன்னேன். எல்லா ஸ்பேர் பார்ட்ஸும் 'ஜெனுயின்'தானா என்று பார்த்து தான் வாங்குகிறோம். வட மாநிலங்களிலிருந்து வருகின்ற மட்ட மான பொருட்களை அரசுத் துறையில் வாங்குவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள்தான் அந்த பொருட்களை வாங்குவது வழக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1975 அக்டோபர் 31]

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இப்போது இந்த வல்லுநர் குழு ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குகிறது என்று சொன்னார்கள். அவர்கள் எந்த அடிப்படையிலே வாங்கு கிறார்கள்? டெண்டர் போன்ற அமைப்புகளின் மூலம் வாங்கு கிறார்களா அல்லது ஒரு குறிப்பிட்ட கம்பெனியிடம் ஒப்பந்தம் செய்து வாங்குகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ஜெனுயின் பார்ட்ஸ்தான் வாங்கப்படுகிறது; இப்போது டி.வி.எஸ். லூக்காஸ் கம்பெனி யிலிருந்து வாங்குகிறார்கள். அதற்கு மார்க்கெட் இருக்கிறது; அங்கிருந்து வாங்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசில் ஒரு குழு இருக்கிறது. எந்தெந்த பொருள்கள் தரமானவை என்று அந்த குழு, அங்கீகரித்திருக்கிறது; விலையையும் நிர்ணயித்து இருக்கிறது. அதைப் பார்த்து நியாயமான முறையில் வாங்குகிறார்கள்.

**திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, வாங்குகிற உதிரிப் பொருட்களில் எத்தனை சதவிகிதம் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றனவை? தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்ற பொருட்களுக்கு முதலிடம் தரவேண்டுமென்று நிபுணர் குழு ஏற்றுக் கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தமிழ்நாட்டில் தயாரா கின்ற எல்லா மோட்டார் வாகனப் பொருட்களையும் தமிழ் நாட்டில்தான் வாங்குகிறார்கள்.

### மோட்டார் வாகனங்களில் ஒலியெழுப்பு கருவிகள்

* 158 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழி லாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பகுதிகளில் இரவு நேரங்களில் பேருந்துகள், லாரிகளில் "மியூசிக்கல் ஹார்ன்" ஒலிப்பதைத் தடை செய்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[1975 அக்டோபர் 31

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** 1940 ஆம் ஆண்டு தமிழ்
நாடு மோட்டார் வாகன விதி 310-ன் கீழ், மோட்டார் வாகனங்
களில் 'மியூசிக்கல் ஹாரன்' ஒலிப்பது ஏற்கனவே தடை செய்யப்
பட்டிருக்கின்றது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, இந்த 'மியூசிக்கல்
ஹாரன்' என்றிருப்பது இராட்சச ஒலியாக இருக்கிறது; பயங்கர
மாக இருக்கிறது; கேட்பதற்கு அருவருப்பாக இருக்கிறது.
இன்னும் பலர் இந்த ஹாரனை வைத்துதான் ஓட்டிக் கொண்டிருக்
கிறார்கள். அது அமைச்சரவர்களுக்கும் தெரிந்திருக்கும் என்று
நினைக்கிறேன். எனவே, ஒரு நல்ல நடவடிக்கை எடுத்து,
மியூசிக்கல் ஹாரனை ஒழிப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே,
அதற்கான சட்டங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. 310, 311
என்று இரண்டு விதிகள் உருவாக்கப்பட்டு, நாட்டிலே
பத்திரிகைகள் வாயிலாகவும் போலீஸ் நடவடிக்கைகள் மூலமும்
இப்படிப்பட்ட மியூசிக்கல் ஹாரன் போன்றவை காதுக்கு
அருவருப்பு ஊட்டுபவையாக இருப்பதால் தடைசெய்யப்
பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும்
சிலர் வைத்திருக்கலாம். வைத்திருப்பது அரசுக்குத் தெரிய
வருமானல் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** தலைவரவர்களே, இப்போது வருகின்ற
லாரிகளிலும் பஸ்களிலும் "ஏர் ஹாரன்" என்று இருக்கிறது.
அது மியூசிக்கல் ஹாரனைவிட பயங்கரமாக இருக்கிறது. அரசாங்க
பஸ்களில்கூட அதை வைத்திருக்கிறோம். மக்களுக்கு அச்சத்
தைக் கொடுக்கக்கூடிய இப்படிப்பட்ட ஹாரனை தடுக்க அரசு
நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நம்
முடைய நாட்டு போக்குவரத்துத் துறையை அறிந்தவர்களுக்குத்
தெரியும், சில இடங்களில் மிகுதியான சப்தம் கேட்கக்கூடிய சூழ்
நிலை இருக்கிறது என்பது. ஏர் ஹாரன் என்பது வண்டியோடு
இயற்கையாகவே பொருத்தப்பட்டிருக்கிறது. தனியாகப் பணம்
செலவு செய்து வாங்குகிற ஹாரன் அல்ல. அந்த ஹாரன் அடித்தே



1975 அக்டோபர் 31]

நம்முடைய கட்டை வண்டிகள் இரவு நேரங்களில் ஒதுங்குவதில்லை.
அந்த ஹாரன் எல்லா வழித் தடங்களிலும் உபயோகிக்க ஏற்
பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, இன்றைக்கு நாம்
மியூசிகல் ஹாரனை தடை செய்துவிட்டால் பல்வேறு தொழிற்
சாலைகள் முடங்கிவிடும். அவைகளுக்கு ஊக்கம் அளிக்கின்ற
வகையில் நாட்டில் பல்வேறு தரப்பட்ட மக்கள் தங்கள் வாழ்க்கைத்
தரத்தை அமைத்துக் கொள்ளுகிறார்கள். போக்குவரத்துத்
துறையில் இப்படிப்பட்ட காரியங்களை ஊக்குவிப்பது இந்த
நாட்டுக்குச் சிறப்பாக இருக்கும். இதை அறிந்து மனதில்
கொண்டு அரசு செயல்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மியூசிகல் ஹாரன் உற்பத்தி
செய்யப்படுவது வெளிநாட்டில் தான். இங்கு அதிகமாக இல்லை.
இது போக்குவரத்துக்கு கெடுதல் ஒன்றும் இல்லை, அதற்கான
தடுக்கும் நடவடிக்கை வேண்டாம் என்று கனம் உறுப்பினர்
கிட்டப்பா அவர்கள் எண்ணத்திற்கு மாறான எண்ணத்தை கனம்
உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் சொல்லுகிறார்கள். சட்டப்படி
அவைகளைத் தடுக்க சட்டம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்ளுகிறேன்.

**Thiru K. M. SUBRAMANIAM:** Will the Government con-
sider banning of horning in front of houses? When the car stops
to call people, they just go on horning, particularly, in the night
before notorious houses. These things happen and disturb the
entire street. Will the Government think of stopping this horn-
ing?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, வீட்டிற்கு
முன்னால் இரவு நேரங்களில் ஹாரன் அடித்து எழுப்புகிறார்கள்,
இதைத் தடை செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். யார்
போய் தடுப்பது? அது காவல் துறைக்கு ஒரு பெரிய விவகாரம்.
இந்தக் குறைபாடுகளை நீக்குவது சமுதாயத்தின் கடமை என்
பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, அதிக சத்தம்
போடக்கூடிய இந்த ஹாரன்கள் போடக்கூடாது என்று சட்டம்
இருந்தாலும் இதுவரையில் போட்டுக் கொண்டு தான் இருக்
கிறார்கள். குறைந்த அளவுக்கு நகரங்களிலும் சில முக்கியமான

இடங்களில் எல்லாம் ஹார்ன் பண்ணுவதை நிறுத்துவதற்கும் அல்லது அந்த நகரங்களில் இம்மாதிரியான ஹார்ன்களை உபயோகிக்கக்கூடாது என்ற அளவுக்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அப்படிப்பட்ட சட்டத் திட்டங்கள் ஏற்கனவே நடைமுறையில் இருக்கின்றன. மருத்துவ விடுதிக்கு முன்னால், பள்ளிகளுக்கு முன்னால், கல்லூரிகளுக்கு முன்னால் ஹார்ன் அடிப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரையில் அது நல்லபடியாக நடைமுறையில் இருந்து வருகிறது. சென்டிரல் ரயில் நிலையத்திற்கு அடிக்கடி போகக்கூடியவர்கள் அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, தற்போது நம்முடைய அரசாங்க விரைவு பேருந்துகளில் ஏர் ஹார்ன் பொருத்தப்பட்டிருக்கிறது, வெளியில் இருப்பவர்கள் கூட அந்த சப்தத்தைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், பேருந்தில் பயணம் செய்யக் கூடியவர்கள் திடுக்கிட்டு எழக்கூடிய அளவில் சத்தம் இருக்கிறது. ஹார்ன் சப்தம் பேருந்தில் உள்ளவர்களுக்கு கேட்காத முறையில் ஏர் டைட் முறையில் வசதி செய்து தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அநேகமாக ஹார்ன் சப்தங்கள் வெளி நோக்கி போகிற வகையில் குழல்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. கனம் உறுப்பினர் சொன்னபடி இம்மாதிரி சப்தம் கொஞ்சம் உள்ளேயும் கேட்கலாம். கேட்காமல் இருப்பதற்கு ஏர் கன்டிஷனிங் செய்திருக்க வேண்டும். அதை இந்த நாட்டின் பொருளாதாரம் தாங்காது என்ற சூழ்நிலை இருப்பதால் இருக்கின்ற ஹார்னை வைத்துக் கொண்டு வண்டிகளை ஓட்ட வேண்டியிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மோட்டார் சைகிள்களில் வேண்டுமென்றே அமளியான சப்தத்தை உண்டு பண்ணுவதற்காக சைலன்சரைக் கழட்டி விடுகிறார்கள். அது நியூசன்சாக கருதப்படுகிறது. அம்மாதிரி செய்வதைத் தடுக்க அரசாங்கம் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கனம் உறுப்பினர் அவர்களின் ஆலோசனையை ஏற்கலாம்.





DR. H. V. HANDE: The Hon. Minister said in his reply that as far as the hospitals and dispensaries and important places are concerned, they have been declared as "no-horn areas". But are the Government aware of the fact that most of this horning is done, especially in the nights, because of poor lights on the main roads? In Bombay City they have lighted the roads properly, so that minimum application of horn is done in these major cities like Bombay and Calcutta. Similarly, will it be possible for the Hon. Minister, in conjunction with the other departments concerned, to see that as far as possible the major roads in the City—Mount Road, Poonamallee High Road and such places—are properly lighted, so that especially during nights no horning at all is necessary?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் ஒளி ஏற்பாடு அற்புதமாக செய்யப்பட்டிருக்கிறது என்று ஜப்பான் நாட்டுக்காரர்கள் என்னிடத்தில் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். எந்த இடங்களில் ஒளி குறைவாக இருக்கிறது? பொது மருத்துவமனைக்கு முன்னால் ஒளி நன்றாக இருக்கிறது. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிக்குப் பக்கத்தில் ஒளி நன்றாக உள்ளது. அது போல் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி இருக்கும் இடத்தில் ஒளி அழகாக உள்ளது. மேம்பாலங்களில் எல்லாம் ஒளி ஏற்பாடு மிகவும் அழகாக இருக்கிறது. எந்த இடங்களில் ஒளி குறைவாக உள்ளது என்று கூறினால் அங்கெல்லாம் சென்னை மாநகராட்சியைக் கலந்து ஆவன செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, பல அங்கத்தினர்கள் சொன்னார்கள் சப்தம் உள்ள ஹார்ன்களை எடுத்துவிட வேண்டுமென்று. சப்தம் உள்ள ஹார்ன் இருந்தும்கூட முன்பு ஏற்பட்ட 'ஆக்சிடென்டை' விட இரண்டு மடங்கு இப்போது ஏற்படுகிறது. பஸ்களும் விலகுவதில்லை. கார்களும் விலகுவதில்லை. ஆகவே மியூசிகல் ஹார்னை வேண்டுமானால் தடை செய்யலாம். ஏர் ஹார்னை தடை செய்யாமல் சட்டத்திலிருந்து விலக்கு கொடுக்கலாம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னது போல் ஏர் ஹாரன் வண்டியோடு சேர்ந்து வருகிறது. தடை செய்ய சட்டம் இல்லை. மியூசிக்கல் ஹார்ன், வெவ்வேறு ஹார்ன்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன. ஹார்ன் என்பது பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டதே தவிர வேறு அல்ல. வண்டி வேகமாக வருகிறது என்று மக்களுக்குத் தெரிவிப்பதற்காக ஏற்பட்ட கருவி தான்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்த மியூசிக்கல் ஹார்ன் பெரும்பாலும் அயல்நாடுகளிலிருந்து இங்கே ஸ்மகிள் செய்யப்பட்டு கொண்டுவரப்படுகிறது என்பது பெரும்பாலும் எல்லோருக்கும் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் ஒரு சிறந்த மோட்டார் மெக்கானிக். அவர்கள் வேண்டுமென்றே வேடிக்கையாகச் சொல்லியிருப்பார்கள். அது நிறுத்தப்படுவதால் வேலை இழப்பவர்கள் இங்கே யாரும் இல்லை. ஸ்மகிள்டு குட்ஸ் ஆன இந்த மியூசிக்கல் ஹாரனை பயன்படுத்துகிறவர்களைத் தடுத்து நிறுத்த அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மியூசிக்கல் ஹார்ன் எல்லாமே ஸ்மகிள்டு குட்ஸ் அல்ல. சிலர் விமானம் மூலம் வரும்பொழுது அதற்கான வரியைக் கட்டி அதைக் கொண்டு வருகிறார்கள். சில மோட்டார் முதலாளிகள்—திரு. ஆறுமுகம் போன்றவர்கள்—வெளி நாடு சென்று விட்டு வரும் சூழ்நிலையில் சட்டப் பாதுகாப்போடு கொண்டு வந்து விடுகிறார்கள். ஆகவே அப்படி செய்வதற்கில்லை. நம் நாட்டில் அதைத் தடுக்க சட்டம் இருக்கிறது. அதற்கான நடவடிக்கை எடுக்கத் தயாராய் இருக்கிறோம்.

## வரதாபட்டணம் சாலை

* 159 வினா—புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி வட்டம், ஆயக்குடிப் பகுதியில் உள்ள வரதாபட்டணம் சாலையை சீர்திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.



## மணிமுத்தாற்றின் குறுக்கே பாலம்

* 160 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா மணிமுத்தார் நதியின் குறுக்கே வயிராவிகுளம் கிராமத்தையும் ஏர்மான்புரம் கிராமத்தையும் இணைக்கும் வகையில் நாம்போதி பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

## கோவை நகராட்சி மின் பிரிவு ஊழியர்கள்

* 161 வினா—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மின்சார போர்டு பணியாளர்களுக்கு கொடுக்கப் படும் கிராஜுவிட்டி, சர்வீஸ் அடிப்படையில் வேலை நிரந்தரம், பென்ஷன், 58 வயது வரை வேலை செய்யும் உரிமை ஆகிய சலுகைகளை கோவை நகராட்சி மின் ஊழியர்களுக்கும் கொடுப்பது குறித்து, அந்நகராட்சி மன்றத்தின் பரிந்துரை 16—11—1974-ல் அரசுக்கு அனுப்பப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) கோவை நகர மன்ற 1—11—74 நாளிட்ட தீர்மானம் அரசுக்கு கிடைத்தது.

(இ) (1) பணிக்கொடை, ஓய்வூதியம் நகராட்சிகளின் ஆய்வாளரால் தமிழக மின்வாரியத்துடன் கடிதத் தொடர்பில் உள்ளது.

(2) சேவைக்கால அடிப்படையில் வேலையை நிலையாக்குதல்—இல்லை.

(3) 58 வயது வரை வேலை செய்யும் உரிமை—தள்ளுபடி செய்யப்பட்டது.

[1975 அக்டோபர் 31

**திரு. என். மருதாசலம் :** தலைவர் அவர்களே, கோவை நகரத்தில் மின்சாரத் துறையில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு மின்சார போர்டில் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் பூராவும் கொடுக்க வேண்டுமென்று அதற்கென ஒரு போராட்டமும் நடந்தது. அதன் அடிப்படையில் நகராட்சியில் கூட ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளது. அதாவது கிராஜுவிட்டி, பிராவிடென்ட் பண்டு, சர்வீஸ் அடிப்படையில் வேலை தரவேண்டுமென்று அனுப்பப்பட்டுள்ளது. அதை அரசு கொடுக்க உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கோவை நகரில் பணியாற்றுகிற நகராட்சியின் சார்பில் இயங்குகிற மின்சார ஊழியர்கள் கோவை நகர மின்சார ஊழியர்கள். அது தமிழ் நாடு மின் வாரியத்தின் கீழ் இயங்கும் ஒரு அமைப்பல்ல. தமிழ்நாடு மின் வாரிய ஊழியர்களுக்கு எந்தச் சம்பள விகிதங்கள் இருக்கின்றனவோ அது அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் மேற்கொண்டு சில வசதிகளை—தமிழ் நாடு மின் வாரியத்தில் கொடுப்பது போல் — கேட்கின்றனர். அவற்றில் சிலவற்றை அரசாங்கம் தள்ளுபடி செய்து நிராகரித்தது. சிலவற்றைப் பரிசீலனையில் வைத்திருக்கிறது.

**திரு. க. துரைசாமி :** தலைவர் அவர்களே, நகராட்சி மின்சாரத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்பரிசீலனை எப்போது முடியும்? அந்தச் சலுகைகள் எப்போது அவர்களுக்குக் கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** விரைவில் ஆவன செய்யப்படும்.

(முற்பகல் 10-00)

**திரு. எம். சுரேந்திரன் :** மின்சார வாரியத்தில் பணி செய்கின்றவர்களைப் போலத்தான், ஊராட்சி, நகராட்சி மன்றங்களில் பணி செய்கின்றவர்களும் வேலை செய்கிறார்கள். ஒரேமாதிரியான காரியங்களைச் செய்கிற இவர்களுக்கும், மின்சார வாரியத்தில் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் அனைத்தையும் தருவதற்கு அரசு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1975 அக்டோபர் 31]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஒரேமாதிரியான வேலைகளைச் செய்வதில்லை. உற்பத்தி, அனுப்புதல், விநியோகம் (Production, transmission and distribution) ஆகிய இந்த மூன்று பணிகளையும் மின்சார வாரியத்தில் இருக்கிறவர்கள் செய்கிறார்கள். இவ்வேலைகள் நகரசபையில் வேலை செய்கிறவர்களுக்கு இல்லை என்று—நாம் அல்ல—ஹைக்கோர்ட்டே தீர்ப்பு அளித்திருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** இப்போது வேறுபல துறைகளில் ஒரே மாதிரியான பணிகளைச் செய்கின்றவர்கள் எங்கு பணியாற்றினாலும் ஒரேமாதிரியான சம்பளம், இதர சலுகைகளைப்பெற வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் மின்சார வாரியத்தில் பணிபுரிகின்றவர்களைப்போலவே இந்த நகரசபைகளில் பணிபுரிகின்றவர்களும் செய்கிற காரணத்தினால் ஒரேமாதிரியான சம்பள, சலுகைகளை அளிக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அரசாங்கம் வேறு. நகராட்சி மன்றங்கள் வேறு. சம்பள விகிதத்தில் இவர்களுக்குள் எந்தவிதமான மாற்றமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் மின்சார வாரியத்தில் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோல இங்கே உள்ளவர்களுக்குக் கொடுக்கவேண்டாம் என்று அவர்கள் தீர்மானம் போட்டும் கூட, இதே சம்பள விகிதம் தான் அங்கே உள்ளவர்களுக்கும் தரப்படுகிறது.

ஆனால் அவர்கள் அங்குள்ள நிலை ஆணைகள், ஓய்வு பெறுகின்ற வயது—அங்குள்ளவர்களுக்கு 58 ஆக இருப்பதுபோல தங்களுக்கும் வேண்டுமென்று கேட்கிறார்கள். இவர்கள் டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடி ஆக்டின் கீழ் வருகிறார்கள். ஆகவே, இந்த இரண்டையும் அரசு நிராகரித்துவிட்டது. கிராஜுவிட்டி, ஓய்வூதியம் பற்றி கேட்கப்பட்டுள்ளது பற்றி அரசு ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது.

**திரு. முனு ஆதி :** நகராட்சியில் பணியாற்றி வந்தால் என்ன, மின்சார வாரியத்தில் பணியாற்றி வந்தால் என்ன? இங்குள்ளவர்கள் கம்பம் ஏறுவதைப்போலத்தான் அங்குள்ளவர்களும் கம்பம் ஏறுகிறார்கள். அவர்களுக்கும் ஷாக் அடிக்கிறது. ஆகவே இரண்டு இடத்திலும் உள்ளவர்களுக்கு ஒரேமாதிரியான சம்பள, இதர சலுகைகளை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அங்குள்ளவர்கள் வெறும் கம்பம் ஏறுகிறார்கள். மின்சார வாரியத்தில் பணியாற்றுகிறவர்கள் Alternators, generators and Transformer Towers ஏறவேண்டியிருக்கிறது.

குடந்தை அறநிலையத்துறை அலுவலகம்.

* 162 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது குடந்தையிலுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர் அலுவலகத்தினை மாயூரத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தஞ்சை மாவட்டத்தில் இதற்கு முன்னால் கிழக்குத் தஞ்சை, மேற்குத் தஞ்சை என்று பிரித்து, இரண்டு உதவி ஆணையர்களைப்போட்டு கவனித்து வந்தார்கள். தஞ்சை மாவட்டத்தில் அதிகமாகக் கோவில்கள் இருக்கின்றன என்று இப்போது அந்த மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து மூன்று உதவி ஆணையர்களைப் போட்டிருக்கிறார்கள். இதில் கும்பகோணம், மாயூரம், சீர்காழி ஆகிய மூன்றை—ஒரு பிரிவாக்கி—ஒரு உதவி ஆணையரைப் போட்டிருக்கிறார்கள். இப்போது இவருடைய தலைமையிடம் கும்பகோணமாக இருக்கிறது. கும்பகோணம், மாயூரம், சீர்காழி ஆகிய மூன்றுக்கும் மாயூரம் மையமாக இருப்பதால், மாயூரத்தில் இந்த உதவி ஆணையரின் அலுவலகத்தை அமைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: — தலைவர் அவர்களே, கும்பகோணம் வட்டத்தில் 19 பட்டியலைச் சேர்ந்த அறநிலையங்களும், 471 பட்டியலில் சேராத அறநிலையங்களும், நான்கு மடங்களும் உள்ளன. மாயூரத்தில் 33 பட்டியலில் சேர்ந்த கோவில்களும், 394 பட்டியலில் சேராத அறநிலையங்களும் உள்ளன. சீர்காழியில் 9 பட்டியலில் சேர்ந்த கோவில்களும், 103 பட்டியலில் சேராத கோவில்களும் உள்ளன. ஆகவே கும்பகோணம், மாயூரம், சீர்காழி என்று பார்க்கிறபோது, கும்பகோணம் பகுதியில் அதிகமான அறநிலையங்கள் இருக்கிற காரணத்தினால் அறநிலையத்துறை



உதவியாணையரின் தலைமையிடமாக கும்பகோணம் வைக்கப்பட்டிருக்கிறது. அதோடு அறநிலையத் துறைக்குச் சொந்தமாக கட்டிடம் அங்கே இருக்கிற காரணத்தினாலும் வைத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது.

*Production of Neem Oil. ...*

* 164 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of Government to set up an Industry for the production of Neem Oil in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

*Training for Harijan cultivators.*

* 164. Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether any special provision has been made for imparting training to Harijan cultivators in Dry Farming in the Dry Farming Research Station at Kovilpatti, Tirunelveli district; and

(*b*) if so, the expenditure incurred in this regard for this year?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) ஆம்.

(இ) பருவமழை பொய்த்ததன் காரணமாக தொகை எதுவும் செலவிடப்படவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: அரிசனங்களுக்கு எந்தவிதமான திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: திருநெல்வேலி மாவட்டத்தில், கோவில்பட்டியில், புஞ்சை நிலத்தில் அரிசனங்களுக்கு இந்தப் பயிற்சியை அளிப்பது என்று 73-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. 1974-ஆம் ஆண்டில் நான்கு பகுதிகளில் இருந்து 40 அரிசன விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து இந்தத்

திட்டத்தைச் செயல்படுத்த இருந்தோம். பருவமழை பொய்த்து விட்டது. தண்ணீர் இல்லை. ஆகவே போன ஆண்டு அது கைவிடப்பட்டு, இந்த ஆண்டு நவம்பர், டிசம்பரில் அந்தப் பயிற்சித் திட்டத்தை துவக்கலாம் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எத்தனை அரிசனங்களுக்கு, எத்தனை மாதங்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படும்? அது திருநெல்வேலி மாவட்டத்திற்கு மட்டும் தானா? அதில் சேர இதர மாவட்டத்து அரிசன விவசாயிகள் விருப்பம் தெரிவித்தால் அவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** இது பரிட்சார்த்தமாக முதன் முதலாக திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டியில் நடத்த இருக்கிறோம். இது நல்ல பயன் அளித்தால் இதனையே மற்ற பகுதிகளுக்கும், இதனை நாடுதழுவிய திட்டமாக அமைக்கலாம் என்பது அரசாங்கத்தின் கருத்து. இந்தப் பயிற்சி 6 வாரத்திற்கு, 40 பேர்களுக்குக் கொடுக்க இருக்கிறோம். ஒருவருக்கு ஒரு நாளைக்கு 6 ரூபாய், சாப்பாடு, போக்குவரத்துச் செலவுக்காகவும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

**திரு. எஸ். வடிவேல் :** எந்த எந்த வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது? மேலத் தஞ்சையில் புஞ்சை நிலம் இருக்கிறது. அங்குள்ள அரிசன விவசாயிகளுக்கும் இந்தப் பயிற்சி அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** கோவில்பட்டியில் நமக்குக் கிடைக்கிற அனுபவத்தைக்கொண்டு, அதன் பலாபலன்களைப் பார்த்து பிற இடங்களுக்கும் விஸ்தரிக்கலாம்.

**திரு. எம். சுரேந்திரன் :** ஆறு நாளைக்குப் பயிற்சி என்றால் இந்த ஆறு நாளைக்குள் என்ன கொடுக்க முடியும்? புஞ்சை நில சாகுபடி மேம்பாட்டுப் பயிற்சி ஆறு நாளில் நடத்த, என்ன என்ன பயிற்சி கொடுக்க இருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** இது ஒரு பரிட்சார்த்தத் திட்டம், இந்த ஆறு நாள் பயிற்சித் திட்டத்தை நடத்திய பிறகு தான் இதில் உள்ள சிரமங்கள் அல்லது பலன்கள் தெரியவரும். அதற்குப்பின் இதைத் தகுந்த முறையில் மாற்றி அமைத்துக்



கொள்ளவும் நமக்கு வாய்ப்பு இருக்கிறது. இன்னும் இந்தப் பயிற்சித் திட்டத்தை நாம் செயல்படுத்தவே இல்லை. இந்த ஆண்டு நவம்பர், டிசம்பரில் நடத்தலாம் என்று இருக்கிறோம்.

**கோதைமங்கலம் கிராம அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.**

* 165 வினா—**புலவர் சி. பழனிச்சாமி :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனிக்கருகில் உள்ள கோதைமங்கலம் கிராம அரிசன மக்கள் வீட்டுமனைகள் கேட்டு அண்மையில் விண்ணப்பித்துள்ளனரா?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** (அ) ஆம்.

(இ) மதுரை மாவட்டத்தில் உள்ள பழனி வட்டத்தைச் சேர்ந்த கோதைமங்கலம் கிராமத்தில் 21 வீடில்லாத ஏழை அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு 1.22 ஏக்கர் நிலத்தை மந்தை புறம்போக்கிலிருந்து நத்தமாக மாற்றியபின், அரிசனங்களுக்கு வீட்டுமனை பட்டா கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துவருவதாக மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, இந்தக் கோதைமங்கலம் கிராமத்திலிருக்கிற அரிசன மக்களிடத்திலிருந்து அரசுக்கு எப்பொழுது ரெப்ரசன்டேஷன் வந்தது? எப்பொழுது இந்த மந்தைப் புறம்போக்கு நத்தைப் புறம்போக்காக மாற்றப்படும்? அவைகளைத் துரிதமாகச் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** 1973-74-ம் ஆண்டு அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருடைய குறிப்புப்படி, இப்பொழுது எடுத்துக் கொடுத்து விடுவார்கள் என்று தெரிகிறது, கொடுத்து விடுவார்கள் என்றும் நம்புகிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வீட்டு மனையைக் கைவசப்படுத்துவதற்காகத் தற்பொழுது பின்பற்றப்படும் விதிமுறையினால் நீண்டகாலம் தாமதம் ஆகிறது. அந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1975 அக்டோபர் 31

*மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:* தலைவரவர்களே, அரசாங்கத்தின் பொதுக் கொள்கையைப் பற்றிக் கேட்கிறார். புறம்போக்கு நிலங்களாக இருந்தால், அரிசனங்கள், ஏழை மக்கள் இருக்கிற நிலத்தை, உடனடியாக ரெவினியூ அதிகாரிகள் ஜாரி செய்து கொடுத்துவிடுகிறார்கள். அதுவும் தேவைப்படுகிற நிலம், நியாயமான நிலமாக இருந்தால், கையகப்படுத்தும்பொழுது, ஒருவருடைய நிலத்தை எடுத்துக் கொடுப்பதில் என்ன சிரமம் இருக்கிறது என்பது வழக்கறிஞருக்குத் தெரியும்—இவ்வளவு நாளாக நிலைமை என்ன என்று தெரியும். ஆனால், அரசாங்கம் இந்தத் தடைகளிலும் எவ்வளவு சீக்கிரமாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கொடுக்கத்தான் முயற்சி செய்கிறது, இப்பொழுது நிலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் வேகமாகக் கொடுக்க அரசு உத்தரவுகளைத் திருத்த வேண்டும். அதனை, வேண்டுமென்றால் அரசாங்கம் கவனிக்கும்.

*திரு. எஸ். வடிவேல்:* அரிசன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கத் தமிழ்நாடு அரசு முன் வந்திருக்கிறது. கடந்த 4 ஆண்டுகாலமாக என்னுடைய தொகுதியில் பல இடங்களைச் சொல்லியாகிவிட்டது. ஆனால், ஒரு வீடு கூடக்கட்டவில்லை. போன தடவை முதலமைச்சரவர்கள், உங்களுடைய இடத்தைச் சொல்லுங்கள், ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார்கள். இன்றையதினம் ஒரு காலனி கூட என்னுடைய தொகுதியில் ஏற்படாததற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:* தலைவரவர்களே, மனை ஒதுக்க வேண்டுமென்பது கேள்வி. இப்பொழுது வீடு ஒதுக்குவதைப் பற்றி உறுப்பினர் கேள்வி கேட்கிறார். மனைகள் கொடுத்த இடத்தில், வீடு கட்டிக் கொடுக்கத் தகுதியான நிலம் எப்படி இருக்க வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறதோ, அப்படி இருக்குமானால், முதலிலேயே எடுத்துக் கட்டிக் கொடுத்து விடுவார்கள். உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தை இன்றையதினம் கொடுத்தால், முதலமைச்சரிடம் கொடுத்து, நியாயமான இடத்தைப் பெறலாம்.

*திரு. எஸ். வடிவேல்:* தலைவரவர்களே, என்னுடைய தொகுதியிலே ஒரு இடம் கூட தகுதியான இடம் இல்லையென்ற முடிவுக்கு வந்து விட்டாரா அமைச்சர் அவர்கள்? பல இடங்களை எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஒரு இடம் கூடத் தகுதியாக இல்லையென்றால் எப்படி. . .



1975 அக்டோபர் 31]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்குத் தனிக் கேள்வி கேளுங்கள்.

(பதிலில்லை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 3. அவையுரிமைப் பிரச்சினை.

**மதம் மாறிய அரிசனங்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவைக்கு உண்மைக்கு மாறான தகவலை அளித்ததாகக் கூறி கொண்டு வரப்பட்ட பிரச்சினை.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, சட்டப் பேரவை விதி 184-ன் கீழ் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் அவையுரிமை பற்றிய தீர்மானம் ஒன்றிற்கு அறிவிக்கைக் கொடுத்திருக்கிறார்கள்.

' While presenting the Supplementary Demands for 1975–76, the Chief and Finance Minitser stated as follows on 25th October 1975 :—

" Government have decided to extend all the concessions now being granted to Scheduled Castes to Harijans already converted to Christianity as well. In respect of admissions to educational institutions and reservations in public services, Harijan converts to Christianity will be treated on par with members of the Backward Classes. At present the descendants of Harijan converts to Christianity are not eligible for the concessions. Government have decided to do away with restrictions and to extend these concessions to Christianity so as to be on par with the members of the Backward Classes."

This idea was followed by some Members who spoke on 29th October 1975.

It is contrary to truth as evident from G.O. Ms. No. 9, Social Welfare, dated 3rd January 1974 and some earlier G.Os. as well. The speech is calculated to mislead the House. Hence it amounts to breach of privilege of the House."

என்கிற ஒரு அவை உரிமை மீறல் பிரச்னையைக் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவை உரிமையை மீறியதாகும் என்பதைச் சுருக்கமாகச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி சத்தியவாணி முத்து: தலைவரவர்களே, நான் கொடுத்திருக்கிற அந்த உரிமை மீறல் பிரச்னை என்கிற வேண்டுகோளிலே ஜி.ஓ. நம்பரைக் குறித்திருக்கிறேன். அந்த ஜி.ஓ. ஏற்கனவே 1974-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ந் தேதி கொடுக்கப்பட்டுள்ள ஜி.ஓ. ஜி.ஓ. நெம்பர் எம்.எஸ். 9. இதற்கு முன்னாலேயே 1970-ம் ஆண்டு ஜி.ஓ.வையும் நாம் எடுத்துப் பார்ப்போமானால் ஏறத்தாழ இதை வைத்துத்தான் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் ஜி.ஓ.வைச் சரியாகப் படிக்காமல் கூறுகிறார்கள். அதைப் படித்து விட்டால் இந்த உரிமைப் பிரச்னையே வராது. ஜி.ஓ. நெம்பர் 9; அதற்கு மேலே சோஷியல் வெல்ஃபேர், டேட்டட், 16—9—1975 என்றிருக்கிறது. அதைப் படித்துப் பார்த்தால் அந்த ஜி.ஓ. பழைய ஜி.ஓ. அல்ல, புதிய ஜி.ஓ. என்று புரியும். 16—9—1975 என்றிருக்கிறது.

திருமதி சத்தியவாணி முத்து: அந்த ஜி.ஓ.விலே கூட புதியதாகத் தரப்பட்டுள்ளதாக இல்லை. தயவுசெய்து என்னைப் பேச அனுமதித்துவிட்டு, பிறகு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் குறுக்கிடு செய்யலாம். நான் ஜி.ஓ. முழுவதையும் படித்து விடுகிறேன்.

16th September 1975—‘ The Government have been receiving representations from Christian Associations to extend all the concessions granted to Scheduled Castes (Hindus) to Scheduled Caste converts to Christianity on the ground that the Scheduled Caste converts to Christianity are suffering from all such social disabilities as Scheduled Castes, even after their conversion and that it is not the religion but the social disabilities and the educational backwardness that should be the basis for help. The Government have examined the representations and have decided to extend the concessions granted to Scheduled Castes (Hindus) to Scheduled





Caste converts to Christianity. Accordingly in supersession of the orders issued in this regard, the Government direct that all concessions granted to Scheduled Caste (Hindus) by the State Government be extended to Scheduled Caste converts to Christianity also. In respect of reservation in educational institutions and public services the orders in paragraph 2 below will be applicable.

2. The existing reservation of 18 per cent in the educational institutions and public service is only applicable to Scheduled Castes with reference to the orders of the Government of India. The Scheduled Caste converts will not therefore be eligible for this reservation. However, the State Government have decided to treat all the Scheduled Caste converts to Christianity irrespective of the generation of conversion as Backward Classes and to extend to them the reservation of 31 per cent for admission into educational institutions and reservation in public services.

3. Orders regarding sanction of expenditure will issue separately. The Director of Harijan Welfare is requested to submit necessary proposals for sanction of necessary expenditure immediately.

4. This order issues with the concurrence of the Finance Department vide its U.O. No. 116181/RII/75-1, dated 16th September 1975..............’

இது செப்டம்பர் மாதம் கொடுத்த ஜி.ஓ. இதை வைத்துத்தான் புதிய சலுகைகள் கொடுத்திருப்பதாகப் பத்திரிகையிலே முதலமைச்சரவர்கள் கோட்டை எழுத்திலே விளம்பரம் செய்திருந்தார்கள். நான் அப்பொழுது அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளேன். தாழ்த்தப்பட்ட மக்கள் கோரிக்கை என்ன என்பதற்கு இது பதில் அல்ல. இரண்டாவது, இந்த ஜி.ஓ. படி கொடுத்திருக்கிற சலுகைகள் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிற சலுகைகள், அவை புதிய சலுகைகளே அல்ல. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் கூறியது புதிய சலுகைகள் அல்ல என்று நான் மறுப்புக் கொடுத்தேன். ஆனால், அதையே அதிகமாக வைத்து சில கிறிஸ்தவ சங்கங்கள் மாண்புமிகு முதலமைச்சருக்கு என்ன சொல்லி விழா நடத்தியிருக்கிறார்கள்?

அதையும் நான் படித்துக் காட்டி விடுகிறேன். 'கிறிஸ்தவ சமுதாயமே! அலைகடல் எனத் திரண்டெழுவாய்! மலை போன்று உரிமை வழங்கிய கலைஞருக்கு நன்றிக் கடமையாற்றப் புறப்படுவாய்'—நிகழும் அக்டோபர் மாதம் 25 ஆம் தேதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு. . . .

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:*** தலைவரவர்களே, இது என்ன உரிமைப் பிரச்னை என்று எனக்குப் புரியவில்லை. அம்மையார் பாராட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டால் அவரே பாராட்டலாம். யாரோ வெளியிட்டதைப் படித்து சபைக் குறிப்பிலே ஏற்ற வேண்டிய தேவையில்லை. எக்ஸ்டென்ட் பண்ணுகிறதென்றால் என்ன அர்த்தம்? எதை விரிவாக்கவில்லை யென்பதையும் எடுத்துச் சொன்னால் எனக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

***திருமதி சத்தியவாணிமுத்து:*** அதாவது, 27 ஆண்டுக் காலமாக, கிறிஸ்தவ தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் அனைத்தையும் என்று (குறுக்கீடு) இதுகாறும் நாம் உரிமைகளை வழங்க முன்வரவில்லை, மறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கிறிஸ்தவ சமுதாயத்தினருக்காகச் செய்திருக்கிறார் என்று (குறுக்கீடு). அதைத்தான், 1974 ஜி.ஓ. வைப் படிக்கிறேன். 1975 ஜி. ஓ. வைப் படித்துக் காட்டி விட்டேன். 1974 ஜி. ஓ. வை முழுவதும் படித்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தெரிந்து கொள்வார்கள்.

This is G.O. No. 9, dated 3rd January 1974.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** அந்த ஜி. ஓ. வைப் படிப்பதற்கு முன்னால் அது

how it constitutes breach of privilege

என்று சொல்லிவிட்டு, பிறகு படியுங்கள்.

Because, you have said it is a privilege matter, the Chair also should be able to follow the arguments. Formulate your approach to the privilege matter and then explain.





***திருமதி சத்தியவாணிமுத்து:*** நான் முழுவதையும் பேசி விட்ட பிறகு உங்களுடைய தீர்ப்பைச் சொல்லுங்கள். நான் சொல்வது ஏற்கனவே கொடுக்கப்பட்ட சலுகைகள் 1974 ஆம் ஆண்டு ஜி. ஓ. வில் நெம்பர் 9 இல் விளக்கமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதில் என்ன சொல்கிறார்கள்?

1974-ல் எஜுகேஷனல் கன்செஷன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(i) *Educational concession :—*

Fee concessions to Christian Scheduled Castes converts and their children are given from the States Funds as in the case of Scheduled Castes. Treating the Christian Scheduled Castes converts as other eligible communities, the State Government are also giving State Scholarships to them on a par with Scheduled Castes.

*Reservation in Public services and admission in educational institutions.*

In regard to reservation in public services, Scheduled Castes (converts) are not given any reservation as Scheduled Castes because it would be contrary to the Constitution (Scheduled Castes) Order, 1950. However, if they are themselves converts to Christianity they are being treated as backward classes and made eligible for selection in the quota of 31 per cent allotted to the Backward Classes.

என்று இருக்கிறது. 1974-ல் முதல் தலைமுறைக்குக் கொடுப்போம் என்று இருக்கிறது. கல்விக்காக சலுகைகள் கிறிஸ்தவர்களாக மாறியவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருப்பதாக ஜி.ஓ. கூறுகிறது. இன்னொன்று.

In regard to reservation of seats in educational institutions also, they are being treated as Backward Classes, provided they are themselves converts and made eligible out of the quota of 31 per cent allotted to the Backward Classes.

"தானியே தான் தீனியும்". அப்போது சொன்னதுதான், புதிதல்ல. என்ன மாற்றம் இருக்கிறது? 31 சத விகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கிறமாதிரி அவர்களுக்கும் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்களா?

The restriction regarding generation is only to Scheduled Castes Christians for admission to educational institutions and for entry to public services.
என்ன இருக்கிறது?

As regards the other concessions, they are eligibie irrespective of generations.
தலைமுறை என்று பாகுபாடு காட்டாத அளவிற்கு என்று சொல்லி யிருக்கிறார்கள்.

As regards the other concessions, they are eligible irrespective of generations:
1974 இல் இவ்வளவும் கொடுத்துவிட்ட பிறகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள். . . .

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* 1974 ஜி.ஓ.-வில் irrespective of generations என்று இருப்பது Reservation-க்கும், இப்பொழுது கொடுக்கப்பட்டுள்ள புதிய சலுகைகளுக்கும் இல்லை. 1974 இல் இருப்பது—
If they are themselves converts to Christianity
என்று இருக்கிறது. நீங்கள் கொடுத்த ஜி. ஓ. இருக்கிறது. இரண்டு ஜி. ஓ. வையும் போட்டுக்குழப்பிக் கொண்டிருக்கிறீர்கள்.

*திருமதி சத்தியவாணிமுத்து:* அப்படியென்றால் ஜி. ஓ. போட்டது தப்பா? டிபார்ட்மெண்டிலே கேளுங்கள்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* எந்த டிபார்ட்மெண்டிலே கேட்பது? ஜி.ஓ. இரண்டும் தெளிவாக இருக்கிறது ஜி.ஓ.-வில் அதிகப்படியான சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன, தவறாகச் சொல்லிக்கொண்டே போனால் என்ன செய்வது?

*திருமதி சத்தியவாணிமுத்து:* நேற்றைக்கு ஜி.ஓ. வை ஸ்பீக்கரிடம் கொடுத்தேன். கண்ணுறுங்கருத்துமாகத் திருப்பி வாங்கிவந்துவிட்டேன். நான் படிக்கிறேன்.



The restriction regarding generation is only to Scheduled Caste Christians for admission to educational institutions and for entry to public services. As regards the other concessions, they are eligible irrespective of generations.
என்று இருக்கிறதே, இதை நானா எழுதிக்கொண்டேன்?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* "Other concessions" என்பது சில குறிப்பிட்ட சலுகைகள்தான். அது அடுத்த பக்கத்தில் எந்தெந்தச் சலுகைகள் என்று எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. 31 சதவிகிதம், 18 சதவிகிதம் என்று இருக்கிறதே அதை இந்த அரசு எதுவும் செய்ய முடியாது. ஆகவே பின்தங்கிய மக்களுடைய பட்டியலிலிருந்து அரிசன கிறித்துவர் களுக்குப் புதிதாகச் சலுகைகள் வழங்கியிருக்கிறோம். ஞானசம்பந்தமாக இருந்தவர் ஞானப்பிரகாசமாக மாறி யிருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். முன்பு இருந்தபடி ஞானப்பிரகாசம் 1974 இல் சில சலுகைகளைப் பெற முடியும். நாம் இப்போது அவருடைய தலைமுறைகளுக்கு எல்லாம் நமது அரசு தரும் எல்லாச் சலுகைகளையும் தந்திருக்கிறோம்.

*திருமதி சத்தியவாணிமுத்து:* இப்போது மாற்றவில்லை. 1974-இல் irrespective of generations என்று எதற்காகப் போட்டீர்கள்?

*திரு. கு. காமாட்சி:* 1974 இல் சீஃப் மினிஸ்டர் யார்? இப்போது சீஃப் மினிஸ்டர் யார்? என்பதை அவர்கள் சொல்லட்டும்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* அந்த ஜி.ஓ. விலே இரண்டாவது பக்கத்திலே—
reservation in public services and admission in educational institutions
என்று இருக்கிறது. முதல் பாராவைப் படியுங்கள், அதற்குப் பிறகு 'பி' பாராவைப் படியுங்கள் அப்புறம் 3 ஆவது பாராவைப் படியுங்கள்.

*திருமதி சத்தியவாணிமுத்து:* எல்லாவற்றையும் வேண்டு மானாலும் படிக்கிறேன். . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் கேட்டது கடைசிப் பகுதியைப் படித்தீர்கள், அதற்கு முன்னாலே இருக்கிற இரண்டு பாராக்களையும் படியுங்கள்.

திருமதி சத்தியவாணிமுத்து: கமிட்டிக்கு விடுங்களேன், ஏன் நாம் இருவரும் மோதிக்கொள்ள வேண்டும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கமிட்டியிலே நீங்கள் தவறாகப் படிக்கக் கூடாது, உங்கள் மீது உரிமைப் பிரச்சினை கொண்டுவரலாம். அதற்கு முன்னாலே இருக்கிற இரண்டு பாராக்களையும் படியுங்கள்.

திருமதி சத்தியவாணிமுத்து: இரண்டாவது பக்கம் முதலாவது Paragraph

In regard to reservation in public services, they are not given any reservation as Scheduled Castes because it would be contrary to the Constitution (Scheduled Castes) Order, 1950 communicated by the President of India.

என்று போட்டிருக்கிறது.

However the first generation converts are being treated as Backward Classes for this purpose.

என்று இருக்கிறது. என்ன அர்த்தம்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: புது ஜி.ஓ. வை படியுங்கள். புது ஜி.ஓ. வில் இரண்டாவது பக்கத்திலே படியுங்கள்.

THIRUMATHI SATHIAVANIMUTHU: The existing reservation of 18 per cent in the educational institutions and public service is only applicable to Scheduled Castes with reference to the orders of the Government of India..

இதேதான் அதிலேயும் போட்டிருக்கிறீர்கள்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் சொல்வது ஜனவரி 3 ஆம் தேதி 1974-லிருந்து ஜி. ஓ. வின்படி,

If they are themselves converts to Christianity

என்பது எதற்கு?

"Irrespective of generation"

என்பது எதற்கு?

இப்போது உள்ள 1975 ஆம் ஆண்டு ஆணைப்படி,

However the State Government have decided to treat all the Scheduled Caste Converts to Christianity irrespective of the generation of conversion as Backward Classes...............

திருமதி சத்தியவாணிமுத்து: 75 இல் போட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 75 இல் போட்டது.

திருமதி சத்தியவாணிமுத்து: 74 இல் போட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 74 இல் Reservation and Public Services தலைமுறைக்கு என்று மட்டும் இருந்தது. இப்போது எல்லாத் தலைமுறைக்கும் என்று இருக்கிறது. அத்தோடு அரிசனங்களுக்கு உரிய புதுச் சலுகைகளும் அளிக்கப்பட்டுள்ளது.

திருமதி சத்தியவாணிமுத்து: 74 ஆம் ஆண்டு ஜி. ஓ. வை நான் படித்துச் சொல்கிறேன். நேற்றே நான் கொடுத்திருக்கிறேன். உங்கள் டிபார்ட்மெண்டில் நான் ஜி. ஓ. கேட்டு கொடுக்கவில்லை. தனி நபர் எனக்குக் கொடுத்தார். என்னிடமிருந்து வாங்கி காப்பி படித்துக் கொண்டு நீங்கள் சொல்கிறீர்கள். . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்களிடமிருந்து காப்பியும் வாங்கவில்லை; டீயும் வாங்கவில்லை. சர்க்காரிடம் இருக்கிற காப்பிதான். 1974 இல் இருக்கிற ஜி. ஓ.

If they are themselves converts to Christianity

என்று இருக்கிறது. அதாவது, அவர்களுக்கு இந்திய அரசியல் சட்டப்படி அவர்கள் 18 சதவிகிதம் பெற முடியாது. தாம் என்ன சலுகை அளித்தோம் என்றால் 74-இல்—

However, if they are themselves converts to Christianity, they are being treated as Backward Classes and made eligible for selection in the quota of 31 per cent allotted to the Backward Classes.

என்று இருந்தது. 16—9—1975 இல் நாம் போட்டிருக்கிற ஜி. ஓ. படி

However the State Government have decided to treat all the scheduled caste converts to Christianity irrespective of the generation of conversion as backward classes and to extend to them the reservation of 31 per cent for admission into educational institutions and reservation in public services.

என்று இருக்கிறது.

*திருமதி சத்தியவாணிமுத்து:* பப்ளிக் சர்வீஸஸ் பற்றிப் பிரச்னையில்லை. இந்த ஜி. ஓ. வில் எல்லா ஜெனரேஷனுக்கும் என்று இருக்கிறது. புதிதாக எல்லா ஜெனரேஷனுக்கும்

(முற்பகல் 10.30)

கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள். ஆனால் புதிதாக, இந்து அரிசனங்களுக்குக் கொடுப்பதைப்போல அரிசன கிறித்தவர்களுக்குக் கொடுக்கிறோம் என்கின்ற அதைத்தான் சொல்கிறேன். 74-லே போட்ட ஜி. ஓ. விலே என்ன இருக்கிறது என்றால்,

In the 1974 G.O. it has been stated cearly "as regards the other concessions, they are eligible irrespective of generations".

எனக்கு அதற்குத்தான் விளக்கம் வேண்டும்.

*திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):* Sir, I am rising on a point of order.

இந்த அவையின் முன்னால் அரிசன கிறித்தவர்களுக்கு யார் செய்தது, எப்பொழுது செய்தது என்ற பிரச்னையிலே இப்பொழுது பிரச்னை உருவாகியிருக்கிறது. முக்கிய காரணம் அவர்கள் எப்பொழுது வரவேற்கிறார்கள்? யார் அதை அனுபவிக்கிறார்களோ அவர்கள் எப்பொழுது வரவேற்கிறார்கள் என்ற அதைப் பொறுத்துத்தான். ஏற்கனவே செய்திருந்தால்





அவர்கள் வரவேற்றிருப்பார்கள், இப்பொழுது அரசாங்கம் செய்கிறது, எனவே, இப்பொழுது அது வரவேற்கப்படுகிறது. இதில் நான்தான் செய்தேன், அவர்தான் செய்தார் என்று சொல்லிக்கொண்டு இந்த அவையின் நேரத்தை வீணாக்க வேண்டுமா என்பதற்குத் தாங்கள் முடிவு சொல்ல வேண்டும்.

*திருமதி த. ந. அனந்தநாயகி:* வரவேற்க வைப்பதில் உங்களுக்கு நிறைய சாமார்த்தியம் இருக்கிறது. விழாவிற்கு ஏற்பாடு செய்து வரவேற்க வைப்பது என்பது எளிதான காரியம். தலைவர் காமராஜ் இருந்தபொழுது 'ஜெனரேஷன் கன்டிஷன்' வைத்தபொழுது ஷெட்யூல்ட் காஸ்ட் கன்வர்ட்ஸ்க்கு கன்செஷன் கொடுத்திருக்கிறது. இர்ரெஸ்பெக்டிவ் ஆஃப் ஜெனரேஷன் என்று இப்பொழுது கொண்டு வந்திருக்கிறீர்கள். அதுகூட 74 இல் இருந்திருக்கிறது.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* தலைவரவர்களே, திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களைக் கேட்கிறேன், ஒரு ஜெனரேஷனுக்குத் தர முடிவு செய்ததும், ஜெனரேஷனைப் பற்றிக் கவலைப்படாமல் எல்லாத் தலைமுறைகளுக்கும் தரப்படும் என்பதும் ஆகிய இந்த இரண்டும் ஒன்றா?

*திருமதி த. ந. அனந்தநாயகி:* ஜெனரேஷனுக்கு எல்லா கன்செஷன்களும் கொடுத்திருக்கிறீர்களா?

Are they treated as backward classes?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* இந்திய அரசியல் சட்டம் அதற்கு இடம் தராது. நம்முடைய மாநில அரசு இந்து அரிசனங்களுக்கு என்னென்ன சலுகைகளை வழங்குகிறதோ அந்த எல்லாச் சலுகைகளையும் வழங்கியிருக்கிறோம்.

Other economic uplifting schemes

என்று பார்த்தால் ஏற்கனவே 16—9—75-க்கு முன்னால் எதுவும் இல்லை. பொருளாதார மேல்நிலைத் திட்டங்கள், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் என்று அரிசனங்களுக்கு 16—9—75-க்கு முன்னால் இவ்வளவு அதிகம் கிடையாது.

Special coaching schemes for I.A.S. and I.P.S. examinations.
Construction and allotment of houses.

Financial assistance for Milk Supply Co-operative Societies.

Financial assistance by way of loan and subsidy to purchase agricultural implements, plough bulls, sinking of irrigation wells.

Assistance for cottage industries like basket-making, hand-pounding of rice, etc.

Subsidy to technically trained personnel.

Petty trade loans.

இவை புதிதாகத் தரப்பட்ட சலுகைகள், 16—9—75-க்குப் பிறகு கிறித்தவ அரிசனங்களுக்குப் புதிதாகத் தரப்பட்ட சலுகைகள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பழைய ஜி. ஓ. விலேயே இருக்கிறது, அதைத்தான் இப்பொழுது சொல்கிறார்கள், பணம் கொடுக்கிறோம் என்று. 74-லேயே கொடுத்தாகிவிட்டது. இன்றைக்கு 75-லே ஜி. ஓ. போட்டதற்குப் பெரிய விழா.

THIRUMATHI SATHYAVANI MUTHU: In the 1974 G.O. it has been stated as follows:—

"(d) *Economic Benefits.*—In so far as loans and other economic benefits are concerned, which are being given from the State Funds, they are eligible for these economic concessions and benefits on par with Scheduled Castes.

(e) *Electrification.*—In regard to electrification of converts colonies, provision of pathways, assignment of house sites, assignment of lands for cultivation (all being dealt with by the State Government only) they are treated on par with the Scheduled Castes." . . . . .

THIRU K. T. K. TANGAMANI: The point is very simple. What the hon. Member wanted to say was that a privilege which had been already there is now sought to be told that it is a new privilege conferred now. That is how the pronouncement was made by the Finance Minister when he introduced the Supplementary Demand. The point is, if it is true, then it is clearly



a case of misleading the House. That is the only point which is for you to decide—whether all the concessions which are now sought to be given by the State Government as given in this speech were conferred in 1974. So, it is for you to go through that G.O. which has been mentioned and if there is practically no difference between the G.O. in 1974 and the present G.O., then it will certainly invoke privilege. If there are some doubts, then...........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஏற்கனவே இருந்த ஜி.ஓ.வில் அரிசன கிறிஸ்தவர்களுக்கு இல்லாத கீழ்க்கண்ட சலுகைகள் இப்பொழுது தரப்பட்டுள்ளன.

Special Coaching Schemes for I.A.S. and I.P.S. examinations.
Construction and allotment of houses.

Financial assistance for Milk Supply Co-operative Societies.

Financial assistance by way of loan and subsidy to purchase agricultural implements, plough bulls, sinking of irrigation wells.

Assistance for cottage industries like basket-making, hand-pounding of rice, etc.

Subsidy to technically trained personnel.

Petty trade loans.

இந்தப் புதிய சலுகைகளை அளிப்பதற்காகத்தான் துணை மானியத்தில் கூடுதல் நிதி வேண்டப்படுகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: It must be referred to the Privilege Committee . . .

MR. DEPUTY SPEAKER: There are two aspects in this case. The first question is whether the statement made by the Hon. Chief Minister is correct or whether the statement made by the hon. Member is correct. The second question is, even accepting the statement made by the hon. Member to be correct, we have to find out whether it comes within the four corners of the definition of 'privilege'. That is the function of the Chair and I will rule it.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I will help you.

MR. DEPUTY SPEAKER: I do not want any help now.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The House is bound to help you. The hon ex-Minister read a G.O. She said that they are eligible for certain concessions—economic concessions and other concessions, whereas the hon. Chief Minister read a G.O. which says that they are not eligible for those concessions. We would like to know the correct position. Unless the correct G.O. is placed before this House, we will not be in a position to know which is correct and which is not correct. Why not you refer the matter to the Privilege Committee? What is wrong in it? It is going to affect a very big community—backward classes. The whole matter will have to be thrashed. So, can you not refer it to the Privilege Committee?

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Sir, I have not been given a chance yet.

MR. DEPUTY SPEAKER: I will call you.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், அந்த அம்மையார் தருகின்ற ஜி. ஓ. வையும் வாங்கிப் படியுங்கள், மூன்றும் பக்கம்.

THIRU K. T. K. TANGAMANI: I may tell you, Sir, that the time of the House need not be taken by every member reading the G.O. So, what I would suggest is this. Taking all these things into consideration, a ruling may be given on the next day That is the suggestion I make.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இந்த இரண்டு ஜி. ஓ. க்களில், மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்தில் இருப்பதிலேயும், மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்களிடத்திலே இருப்பதிலேயும் வேறுபாடு இருப்பதாகத்தான் தெரிகிறது. அப்படியிருந்தால், அந்த ஜி.ஓ.-வை தாங்கள் பார்த்து, ஒழுங்கான முறையிலே இரண்டும் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்துத் தீர்ப்புக் கொடுப்பதுதான் உரியதாக இருக்கும். காரணம், அவர்கள் படிப்பதிலிருந்து ஜி.ஓ.-க்களில்



விளக்கம் வித்தியாசமாக இருக்கிறது. அது டைப்பிங் மிஸ்டேக்காக இருந்தாலும் சரி, ஜி. ஓ. வை மாற்றிப் போட்டிருந்தாலும் சரி . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இரண்டு ஜி. ஓ. க்களும் ஒன்றுகதான் இருக்கின்றன. இப்பொழுது உங்களிடத்திலே கொடுத்து விடுகிறோம். வேண்டுமானால் அரை மணி நேரம் கழித்துத் தீர்ப்பு கூறட்டும். இதைக் கையிலே கொடுத்துவிடுகிறேன், இரண்டையும் பார்த்து விட்டு நீங்களே சொல்லுங்கள்.

DR. H. V. HANDE: On a point of order, Sir, I submit for the consideration of the House and the Speaker a point of order. இந்த அவையிலே மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சாதாரணமாக இம்மாதிரி உரிமைப் பிரச்னையை அவையிலே கொண்டுவரும் நேரத்தில் சரியாகப் பதில் கொடுக்கும் நிலை அமைச்சரவையில் இருந்தால்தான் அந்த உரிமைப் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்ப்பு கொடுக்க சௌகரியமாக இருக்கும். ஆனல் இன்று எழுப்பப்பட்ட பிரச்னை—
with out going into facts or merits of the case.
மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் ஒரு 'செட் ஆஃப் ஃபேக்ட்ஸ்' கொண்டு வருகிருர்கள். முதலமைச்சரவர்கள்
He is confronting the House with a different set of facts
நியாயம் இருக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அவர்கள் இந்தச் சபையைத் திசை திருப்ப விரும்புகிறுர்கள். திசை திருப்ப முயற்சிக்கிருர்கள். நான் சபாநாயகர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். இரண்டு 'செட் ஆஃப் ஃபேக்ட்ஸ்' அல்ல. இரண்டு பேர் வைத்திருப்பதும் ஒரே அரசாங்க ஆணைதான். அவர்கள் புரிந்துகொள்ளாமல் படித்துக் காட்டுகிருர்கள். நான் மீண்டும் சொல்கிறேன், ஒரு தலைமுறைக்கு இருந்ததை எல்லாத் தலைமுறைகளுக்கு அரிசன கிறித்தவர்களுக்குச் சலுகை அளித்திருக்கிறோம்.

திருமதி சத்தியவாணி முத்து : நான் முழு ஜி.ஓ.வை வேண்டுமானாலும் படித்துக் காட்டுகிறேன்"

DR. H. V. HANDE : I am on a point of Order and I will finish it.

MR. DEPUTY SPEAKER : Let the hon. Member Dr. Hande finish his point of order.

DR. H. V. HANDE : I am just formulating my point of order and I will finish it, Sir.

சாதாரணமாக இப்பேர்ப்பட்ட பிரச்சினை வந்த நேரத்தில் — இந்த அவையில் உங்களுக்கு தெரியும் ; கோவை செழியன் ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டு வந்த நேரத்திலும் ஃபேக்ட்ஸ் ஆப் தி கேஸ் சேகரிக்க வேண்டுமென்பதற்காக அந்த உரிமைப் பிரச்சினை உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. உரிமைக் குழு முழுமையாக ஃபாக்ட்ஸ் ஆப் தி கேசை ஆராய்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. சூவோ மோட்டோ ஆகக் கூட இதை உரிமைக் குழுவுக்கு அனுப்பலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய ப்ராயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

DR. H. V. HANDE : Therefore, it will not be in order. Now there is confrontation between the Government and the Member with regard to the contents of the G.Os. Just I am trying to help the Chair. Already we have discussed this matter for about 30 or 40 minutes. We are nowhere near the solution. In view of the fact that a lot of time had already been taken by the member and the Hon. Chief Minister, it may be referred to the Privileges Committee, which can discuss it threadbare and let it submit its report.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி அரிசன மக்களுக்குப் பல சலுகைகளைத் தந்திருக்கிறார்கள். அதிலே சட்டப்படி





ரிசர்வேஷன் என்ற முறையிலே கல்லூரிகளில் அட்மிஷன், வேலை வாய்ப்பு இவைதான் அரசியல் அமைப்புச் சட்டத்திலே தரப்பட்ட ஒன்றாகும். அது நம்மால் தர முடியாதது. மத்திய அரசாங்கம் நினைத்தால்தான் தர முடியும்.

நம்முடைய அரசாங்கம் நம்முடைய அதிகாரத்திற்கு உட்பட்டு நன்மைகளை அரிசனங்களுக்கு செய்து வருகிறது. ஆனால் கிறித்தவர்களாக மாறி இருப்பவர்கள், இன்றைக்கும் அரிச்னங்கள் போலவே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், அவர்களுக்கும் தரவேண்டுமென்ற பிரச்சினை பல ஆண்டுகளாக வாதிக்கப்படுகிற பிரச்சினை. ஆக, மாநில அரசு தன்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு—இந்த இரண்டைத் தவிர— என்னென்ன சலுகைகள் அரிசனங்கள் கிறித்தவர்கள் ஆன பின்னரும் தரலாம் என்பது தான் வாதத்திற்கு உரிய பிரச்சினை.

பல ஜி.ஓ.க்கள் தொடர்ந்து இருக்கின்றன. நம்முடைய அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பின்னாலும்—ஏற்கனவே சில சலுகைகள் கன்வர்டட் கிறிஸ்டியன் அரிசன் பீப்பிளுக்குக் கொடுக்கப்பட்டாலும், கொடுக்கப்பட்ட சலுகைகளுக்கு மேல் சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்று பல முடிவுகளை எடுத்திருக்கிறோம். அதன்படி 1974-ல் ஒரு ஜி. ஓ. அதிலே முடிவுகள் எடுத்தபோது மாண்புமிகு சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் என்னென்ன பேசினார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். நான் அவற்றுக்குள்ளே புகுந்து விளக்க விரும்பவில்லை. நம்முடைய மாநில அரசாங்கம் தன்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு என்னென்ன சலுகைகளைக் கொடுக்க முடியுமோ அவற்றைக் கொடுக்க பல ஜி. ஓ. க்கள் போட்டிருக்கிறோம்.

அப்படிப் போட்டுக் கொண்டு வந்தபோது கிறித்துவ அரிசன மக்களுக்கு கல்லூரிகளிலே சேர நாமும் எப்படிச் சலுகை கொடுக்கலாம் என்று பிரச்சினை வந்தபோது முதல் தலைமுறையாக இருக்குமானால் அரிசன மக்கள் என்ற நிலையிலிருந்து மாறுபட்டிருக்க முடியாது ; அவர்களை 'அரிசன மக்களாகப்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து திருமதி அனந்தநாயகி அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியமான விஷயத்தைப் பற்றி விவாதிக்க ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது .... Death of a staff nurse on duty என்ற பொருள் குறித்து. இதே பொருள் பற்றி 42 ஆவது விதியின்கீழ் திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, எ. ஆர். மாரிமுத்து ஆகியவர்களும் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படிப் பேரவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிப்பதற்குரிய அவசரப் பொதுமுக்கியமான விஷயம் என்பதைப் பற்றிச் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. T. K. TANGAMANI: Before the Chair takes up the Adjournment motion, I want to make a submission. Although, I am quite aware that I am bound by your ruling, I want to make a humble submission. When a question of privilege is raised, it should be made known whether there was a *prima facie* case or not.

Sir, on the question of privilege, if, on the face of it, there is a *prima facie* case, the Chair can go into the facts of the case and refer it to the Committee of Privileges or the Committee of the whole House. I am at a loss to know whether it is proper for any person including the Chair to go into the entire merits of the case and give a ruling. Sir, a privilege matter is a very important one for protecting the rights of the hon. Members here. It is not a matter pertaining to the Government only and even if any of the hon. Members tries to mislead the House, he must reap the consequences for doing so.........

MR. DEPUTY SPEAKER: I must make the position clear. The hon. Member is an experienced Parliamentarian and I think he will know that, to decide whether there is a *prima facie* case, some aspects and the facts of the matter have to be gone into by the Chair to give a ruling. Here, only one fact arose in this case and after going through the facts of the case, I have decided that there is no *prima facie* case for reference to the Committee of Privileges.





திருமதி சத்தியவாணிமுத்து: * * *

(திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஸ்பீக்கரின் தீர்ப்பை எதிர்த்து வெளிநடப்புச் செய்வது சபையை அவமரியாதை செய்வதுமாதிரி இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் என் தீர்ப்பை எதிர்த்துச் சொல்லிய அந்த வாசகங்கள் அனைத்தும் அவைக் குறிப்பில் ஏறாது. அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நான் நீக்குகிறேன்.

## (4) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) ஊசி போடப்பட்டதன் காரணமாக, சென்னை கண் மருத்துவ மனையில் ஒரு தலைமைச் செவிலி இறந்தது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி: என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மான நோட்டீஸில் நான் சொல்லியிருப்பது,

"The death of a Staff Nurse on duty in the Eye Hospital, Egmore, on 28th October 1975 immediately after injection, adulteration in the medicine suspected and consequent unrest amongst the Nurses and patients in the hospital generally".

என்பதாகும்.

இந்தச் சம்பவத்தை நான் இங்கு கொண்டுவருவதன் நோக்கமே சமீப காலத்தில் இம்மாதிரி இன்ஜெக்ஷன்ஸ் கொடுத்ததையொட்டி உடனடியாக கொலாப்ஸ் ஆகி ஒன்று

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

அவர்கள் காலியாகி விடுகிறார்கள் அல்லது வேறு நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இப்படிப் பல சம்பவங்கள் சென்னை நகரில் நடைபெற்றிருப்பது என் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

குறிப்பாக ஐ ஹாஸ்பிட்டலில் பணியாற்றக் கூடிய ஒரு நர்ஸுக்கு, அவர்களுக்கு என்ன குறை இருந்தது என்று தெரியாது, என்ன வியாதி இருந்தது என்று எனக்குத் தெரியாது. இன்ஜெக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இன்ஜெக்ஷன் கொடுப்பதற்கு அந்த ஐ ஆஸ்பத்திரியில் காம்பிடென்ட் அதிகாரிகள் இருந்தார்களா அல்லது ஒரு நர்ஸ் இன்ஜெக்ஷன் கொடுத்தாரா அல்லது அங்குள்ள விவரம் தெரிந்த டாக்டர்தான் இன்ஜெக்ஷன் கொடுத்தாரா என்பது தெரிய வேண்டும்.

இப்போது பல மருந்துகளில் கலப்படம் இருக்கிறது. அப்படி ஊசி மருந்திலும் கலப்படம் வரும்போது இம்மாதிரிப்பட்ட அபாயங்கள் ஏற்படுகின்றன. கொடுக்கப்பட்ட மருந்து பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டதா என்று தெரிய வேண்டும். தமிழ்நாட்டு மக்களிடையே இந்தச் செய்தி பரவியுள்ளது. குறிப்பிட்ட ஒரு இன்ஜெக்ஷன் கொடுக்கப்பட்டவுடனே அந்த நர்ஸ் இறந்து போயிருக்கிறார் என்ற செய்தி வெளியாகி யிருக்கிறது. அதிலும் ஒரு நர்ஸின்பாடே இப்படி என்றால் சாதாரண மக்களின் நிலை என்ன என்ற ஐயப்பாடு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, இதன் முழு விவரங்களையும் அரசு கண்டிப்பாக இந்தச் சபை முன் வைக்க வேண்டும். அப்படி வைக்கப்படும் போது இப்படிப்பட்ட விஷயங்களுக்கு உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி ஒரு அறிக்கை கண்டிப்பாக அரசின் சார்பில் வரவேண்டும். பொதுவாக இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படும்போது, இப்படிப்பட்ட செய்திகள் வரும்போது, அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வமான அறிக்கை வந்து, நடந்தது இன்னின்னவை என்று சொன்னால்தான் எங்களுக்குக் கொஞ்சம் திருப்தி ஏற்படும். இன்று மருந்துகளில் கலப்படம் செய்யப்படுகின்றன, கலப்படம் ஊசிமருந்துகளிலும்





வருகிறது என்பதைப் போன்ற விஷயங்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பாக இருக்கும் என்ற முறையில் இந்தச் சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு செவிலியர் கண் மருத்துவ மனையில் ஊசி போடப்பட்டவுடனே இறந்து விட்டார் என்ற செய்தியை வைத்துக்கொண்டு, அவர்கள் எந்தெந்த வகையில் எதை வைத்துக்கொண்டு அதற்கு அரசு அல்லது மருத்துவ மனை பொறுப்பாக இருக்க முடியும் என்று கருதினார்களோ அதையெல்லாம் காரணங்களாகக் காட்டி அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று சொன்னார்கள். உண்மையான விவரங்கள் தெரியுமானால் இது அரசாங்கத்திற்கு நேரடியாகப் பொறுப்புடையதல்ல என்பதும் மருத்துவ மனையில் அவர்களுக்கு சிகிச்சை வழங்கிய முறையில் ஊசி போட்டதல்ல என்பதும் விளங்கும். அந்த விவரத்தை நான் முதலில் படித்துக்காட்ட விரும்புகிறேன்.

திருமதி இருதயம் பெனிடிக்ட், 5—7—75 ஆம் நாள் பிற்பகல் அரசினர் கண் நோய் மருத்துவ மனையில் தலைமைச் செவிலியாக (ஸ்டாப் நர்ஸ்) பணியில் சேர்ந்தார். அதுவரை வேறு இடத்தில் செவிலியாக இருந்திருப்பார்கள். மருத்துவ மனையில் பணி யாற்றிக் கொண்டிருக்கும்போது அவருக்கு இசிவு நோய் வருவது வழக்கம். கை வலிப்பு, கால் வலிப்பு, காக்காய் வலிப்பு என்று சொல்வார்கள், அந்த நோய் அவருக்கு வழக்கமாக வந்துகொண் டிருந்தது. எனவே, சிகிச்சை பெறுவதற்காக அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள நரம்பியல் மருத்துவத் துறைக்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவரைப் பரிசோதித்து எப்டோயின் சிகிச்சை அளிக்கப்பட்டது. 24—10—75 ஆம் நாளன்று அவருக்குக் காய்ச்சல் வந்தது. எனவே அரசினர் பொது மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சை பெறுமாறு அவருக்கு ஆலோசனை கூறப்பட்டது. ஆனால், அரசினர் பொது மருத்துவ மனையில் அவர் சேரவில்லை. தமது இல்லத்தில் இருந்துகொண்டு தனியார் மருத்துவரிடம் சிகிச்சை பெற்றார். காய்ச்சல் நின்ற பிறகு 28—10—75 ஆம் நாளன்று அவர் பணியில் சேர்ந்தார். மருத்துவர் எழுதிக் கொடுத்த சீட்டின் பேரில் எழும்பூர், கண்

நோய் மருத்துவ மனையில் காலை சுமார் 8-15 மணிக்கு அவருக்கு பி1, பி12 ஆகிய ஊசி மருந்துகள் போடப்பட்டன. அது அவர் சொல்லிப் போட்டப்பட்டது. காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை வழங்க அங்கு யாரும் இல்லை. ஒரு நர்ஸாக இருந்த வாய்ப்பு காரணமாகத் தனக்கு வருகிற நோய்க்குத் தானே மருந்து போட்டுக்கொள்கிற காரணத்தால் பி1, பி12 ஊசி போட்டுக் கொண்டிருக்கிறார்.

ஊசி போடப்பட்டதன் பேரில் அலர்ஜி ஏற்பட்டு அதிர்ச்சியுற்ற அறிகுறிகள் அவரிடம் தென்பட்டன. உடனே புறநிலை நோயாளிகள் துறையிலுள்ள மருத்துவருக்கும், மருத்துவ நிலைய மருத்துவ அதிகாரிக்கும் தெரிவிக்கப்பட்டது. முதற்கண் தேவையான சிகிச்சையை அவர்கள் அளித்தார்கள். அதன் பிறகு அச்செவிலி அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள அவசர சிகிச்சைப் பிரிவுக்கு விரைந்து கொண்டுசெல்லப்பட்டார். அங்கு கொண்டு சென்றவுடன், அங்கிருந்த மருத்துவ நிலைய மருத்துவ அதிகாரியும், பணியில் இருந்த உதவி மருத்துவரும் சிகிச்சை அளித்தும் பயன் ஏதும் இல்லை. 8-15 மணிக்கு ஊசி போடப்பட்டு அவர் 9 மணிக்கு இறந்துபோயிருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதில் மூன்று உண்மைகளைத் தெரிந்துகொண்டாக வேண்டும். ஒன்று, கண் மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை வழங்கவில்லை. அவருக்கு இருந்த நோய்க்கு சில மருந்துகளை அவர் ஏற்கனவே சாப்பிட்டிருக்கிறார். அதற்கிடையில் காய்ச்சல் ஏற்பட்டிருக்கிறது. காய்ச்சலுக்கு வீட்டில் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். இந்த பி-1, பி-12 செவிலியர் என்ற காரணத்திற்காக கண் மருத்துவ மனையில் இருந்ததைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஊசி மருந்து தவறான முறையில் கலப்பட மருந்தாக இருக்குமானால் அதைப் பரிசீலிப்பதற்காக அந்த வயல் அதிகாரிகளிடத்தில், ட்ரக் இன்ஸ்பெக்டர் அல்லது ட்ரக் கண்ட்ரோலரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

மருந்துகள் போடும்போது ஏற்படுகிற அலர்ஜி பொதுவாக இன்று நாட்டிலே எங்கு பார்த்தாலும் காணப்படுகிற ஒன்று. பென்ஸிலின் ஐந்தாவது தடவை போடும்போதுகூட அலர்ஜி



ஏற்பட்டு இறந்து போயிருக்கிறார்கள். முதல் தடவை பென்ஸிலின் ஊசி போடும்போது டெஸ்ட் டோஸ் கொடுக்கப்படுகிறது. ஆனால் ஐந்து தடவை போட்டுக்கொண்டு ஆறாவது தடவை பென்ஸிலின் போடும்போது அலர்ஜி ஏற்பட்டு இறந்தவர்களும் உண்டு. அதேபோல் பி1, பி12 போன்ற இந்த ஊசிகளாலும் அலர்ஜி ஏற்படுகிறது. எதனால் அலர்ஜி ஏற்படுகிறது என்று சொல்ல முடியாது. ஆனால் அந்த மருந்தில் ஏதாவது தவறாக இருக்குமா என்பதைப் பரிசீலிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 11-00)

சட்டம் சார்ந்த குற்றவியல் மருத்துவப் பேராசிரியர் சவ அறுவைச் சோதனை நடத்தினார். அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. மருந்துச் சரக்குகள் கட்டுப்பாட்டு அதிகாரி, தேவையான நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்காக ஊசி மருந்துத் தொகுப்பு எண்ணை அவருக்குத் தெரியப்படுத்தவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இச்செவிலி வலிப்பு நோயுற்று இசிவு வரக்கூடிய ஒரு நோயாளி என்பது நன்கறிந்தவொன்றாகும். எனவே, அவரது இறப்பிற்கான தக்க காரணம் என்னவென்று துல்லியமாகக் கூறுவதற்கு இயலாததாகும் என்று மருத்துவக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இப்படி ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சம்பவம் குறித்து இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்றால், அது ரூல் 42-இன் கீழ் கொண்டு வருவது பொருத்தம் அல்ல. இவற்றைக் கூடுமானவரையில் 41 ஆவது விதியின்கீழ் கொண்டுவந்தால், எங்களுக்குக் கிடைக்கும் தகவலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இது ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்பதை தலைவர் அவர்களே தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சாதாரணமாக முக்கியமான சம்பவங்கள் ஏற்பட்டால் அமைச்சர் அவர்களே மன்றத்திற்கு தானாகவே ஸ்டேட்மென்ட் கொடுக்கலாம். ரூல் 82-ன் கீழ்

கொடுக்கலாம். இந்த மாதிரிச் சம்பவம் ஏற்பட்டு இருக்கிறது, பெரிய விபத்து ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னால், உறுப்பினர்கள் கேட்பதற்கு முன்பாகவே அதில் சம்பந்தப்பட்ட அமைச்சர் அறிக்கை கொடுப்பார்கள் என்றால், இந்தச் சபைக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* தலைவரவர்களே, என்னைப் பொறுத்தவரையில் இது மிகவும் கஷ்டமான, சங்கடமான பிரச்னை. நாட்டில் ஒரு நாளைக்கு லட்சக்கணக்கான பேர் சிகிச்சைக்கு வருகிறார்கள். அப்படி சிகிச்சைக்கு வருகிறவர்களில் 100-200 பேர் இறந்து போக நேரிடும். அது மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரியும்.

இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில் அவர்களாகவே ஊசி போட்டுக்கொண்டு எதிர்பாராதவிதமாக ஏற்பட்டுவிட்ட ஒன்றாகும். இதைத் தொடர்ந்து மேலும் பரிசீலிக்கப்படும் என்று சொன்னேன். இன்னும் பாரன்சிக் பேராசிரியர் முடிவு சொல்லவில்லை. இப்படியிருக்கிறபோது எப்படித் தெளிவாகச் சொல்லமுடியும். கிடைக்கிற விவரங்களைச் சொல்கிறோம்.

இதை 42 விதியின்கீழ் கொண்டுவந்தால், கிடைத்த விவரங்களைத்தான் கொடுக்க முடியும். நாங்களாகவே ஸ்டேட்மென்ட் கொடுக்க முன்வந்தால், இது மாதிரி ஒரு சம்பவம் நேர்ந்து விட்டது என்று மட்டும் தான்கூற முடியும். முழு விவரமும் கூற வேண்டுமானால் கொஞ்சம் அவகாசம் தேவை. இப்படிப்பட்ட விஷயங்களைக் கவன ஈர்ப்புத் தீர்மானம்மூலம் கொண்டு வந்தால் நான் அதை உடனடியாக எடுத்துக்கொண்டு, பதில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்தப் பொருள் குறித்து, இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.



**(ஆ) சேத்துப்பட்டில் ஒரு பாலம் இடிந்து விழுந்து, அதனால் சில தொழிலாளர்கள் காயமடைந்தது குறித்து.**

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* அடுத்ததாக, சென்னை சேத்துப்பட்டில் 29—10—1975 அன்று ஒரு பாலம் இடிந்து விழுந்ததனால் சில பெண்கள் உட்பட சில தொழிலாளர்களுக்குக் காயம் ஏற்பட்டது குறித்தும், அதனால் அங்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் விவாதிக்கக் கோரிப் பேரவையின் 42-வது விதியின்கீழ் திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஏ. ஆர். மாரிமுத்து, டாக்டர் எச். வி. ஹாண்டே, திருமதி த. ந. அனந்தநாயகி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியமானது என்று மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. கே. டி. கே. தங்கமணி:* தலைவரவர்களே, 29—10—1975-ம் தேதியன்று கூவம் நதியின் குறுக்கே சேத்துப்பட்டு அருகில் கட்டப்பட்டு வரும் பாலம் திடீரென்று உடைந்து விழுந்து விட்ட காரணத்தால் அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள்—அதிலே பல பெண்கள் இருக்கிறார்கள்—காயம் அடைந்து இருக்கிறார்கள் என்ற செய்தியை வைத்து நான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இருக்கிறேன்.

I have given an adjournment motion to discuss " the serious situation arising out of the collapse yesterday, 29th October 1975, of the road bridge in Chetput, Madras, being built over the Cooum causing serious injuries to workers including several women, and unrest among workers. "

இதிலே வரக்கூடிய முக்கியமான பிரச்னை என்னவென்றால், ஏற்கனவே இருக்கக்கூடிய சில பாலங்களை விரிவுபடுத்துகிறார்கள், அகலப்படுத்துகிறார்கள். அப்படி அகலப்படுத்துகிற இடங்களில் 100-150 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதில் அதிகமாகப் பெண்கள்தான் பணியாற்றுகிறார்கள். அப்படிப் பணியாற்றுகிற நேரத்தில் ஏற்கனவே இருக்கும் பாலம் தாங்குமா என்பதைப்பற்றி ஆராய்ந்து பார்த்து இருக்கிறார்களா என்பது தெரியவில்லை. திடீரென்று அந்தப் பாலம் இடிந்து விழுந்த உடனே, அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்குக் காயம் ஏற்பட்டு இருக்கிறது.

சாதாரணமாக நாங்கள் தொழிற் சங்கங்களில் ஒரு கொள்கை வைத்து இருக்கிறோம். எந்த ஒரு தொழிலாளிக்கும் வேலை செய்யக்கூடிய இடத்தில் நல்ல பாதுகாப்பு இருக்கவேண்டும்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 31

அநேகமாக சர்வதேச ஸ்தாபனங்களில்கூட ஒப்புக்கொள்ளக் கூடிய விஷயமாக இது இருக்கிறது. இந்தியாவில்கூட ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். ஏதோ ஒரு ஆபீசில் இருக்கும் பேன் கீழே விழுந்து அலுவலர்களைக் காயப்படுத்தி விடுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு ரயில்வே ஊழியன் காயம் அடைந்து விடுகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்களுக்கு உடனே அந்த இடத்திலேயே பாதுகாப்பு ஏற்படுத்தித் தரக்கூடிய சூழ்நிலை இருக்கவேண்டும். இப்படி ஓர்க்ஸ்பாட்டிலேயே விபத்து ஏற்படுகிறது என்று சொன்னால் அந்த வேலையே கோளாறாகிவிடும். ஆகவே, இது ரொம்ப பயங்கரமான சம்பவம்.

சமீபத்தில் இப்படிப்பட்ட பணியாற்றும் இடங்களில் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்கும் வகையில் ஆராய்ச்சி செய்ய ஒரு ஆலோசனைக் குழு போட்டு இருக்கிறோம். அந்தக் குழு இதைப் பற்றி ஆராய்ந்து இருக்கும் என்று நினைக்கிறேன். இப்படி நகரத்தில் இருக்கும் பிரிட்ஜ் இடிந்து போனால், அதுவும் அரசாங்கம் எடுத்து நடத்தும் வேலையில் இப்படி நடந்தால், அதைப்பற்றி நாம் என்ன சொல்ல முடியும்.

Maximum protection must be given to the workers at work-spot.

ஆகவே, அரசாங்கம் செய்யும் கன்ஸ்டிரக்ஷனில் கொஞ்சம் கவனம் அதிகம் இருக்கவேண்டும். அவர்களுக்கு நல்ல பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். பெரிய பெரிய பாலம் எல்லாம் கட்டுகிறார்கள். அங்கேயெல்லாம் எந்த விதமான சம்பவமும் ஏற்படவில்லை. கோயம்புத்தூரில் ஒரு பாலம் வேலை நடந்துகொண்டிருந்தபோது இப்படிப்பட்ட சம்பவம் ஏற்பட்டு, அந்தத் தொழிலாளர்கள் காயம் அடைந்தனர். அதிருஷ்டவசமாக யாரும் சாகவில்லை.

இந்த விஷயத்தை முக்கியமாக இங்கே கிளப்பியதற்குக் காரணம், இதிலே எவ்வளவு பேர் காயம் அடைந்தனர், என்ன சிகிச்சை கொடுக்கப்பட்டது, வேலை செய்ய முடியாமல் போய் விட்ட தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு நஷ்ட ஈடு அரசாங்கம் கொடுத்தது, அல்லது அங்கே இருக்கும் காண்டிராக்டர் கொடுத்தாரா என்பது போன்ற விவரங்கள் தெரிய வேண்டும். ஆகவே, இந்தப் பொருள் குறித்து விவாதிக்க இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





1975 அக்டோபர் 31] [திரு. கே. டி. கே. தங்கமணி]

This applies to all workers generally and more particularly in the case of construction workers. என்ற அம்சத்தை வலியுறுத்துவதற்கே அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சேத்துப்பட்டிலே கட்டப்பட்டு வருகிற பாலம் திடீரென்று முறிந்து விழுந்ததால் 17 பேர் காயம்பட்டார்கள் என்று செய்தி வெளியாகி இருந்தது. அதற்கு மேலும் ஆட்கள் அடிபட்டு இருக்கின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

இந்தப் பாலம் பல்லாண்டுக் காலமாக கட்டப்பட்டு வருகிறது. 4-5 ஆண்டுகளாக அந்தச் சின்னப் பாலம்—கார்களைத் திருப்பி விட்டு, 10 மணிக்குமேல் போகக் கூடாது, என் மாதிரி 10 மணிக்குக் கூட்டத்தை முடித்துவிட்டு வரக்கூடியவர்கள் சுற்றிக்கொண்டுதான் போகவேண்டும், பெட்ரோல் விற்கிற விலையில் இப்படிச் செய்துகொண்டு இருக்கிறார்கள் மிகவும் காலதாமதமாகக் கட்டப்பட்டு வருகிறது. இப்படி நாள்தோறும் ஆயிரம் பேருக்கு மேல் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்காக இந்த அமைச்சரவையைப் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள் ! இவ்வளவு துரிதமாக, இவ்வளவு விரைவாக இந்தப் பாலத்தைக் கட்டுகிறார்களே என்று பாராட்டி கொண்டு இருக்கிறார்கள் ! ஆகா, எவ்வளவு திறமை என்று பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள் !

அப்படிப்பட்ட இடத்தில் இன்று என்ன நிலைமை ? அந்தப் பாலம் பொடிப்பொடியாக இடிந்து விழுந்து இருக்கிறது. அங்கே வேலை செய்து கொண்டிருந்த பெண்களுக்குக் காயம் ஏற்பட்டு இருக்கிறது. 25 தொழிலாளர்களைக் கூட தாங்காத ஒரு பாலத்தைக் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். (குறுக்கீடு) 25 தொழிலாளர்களைத் தாங்கக்கூடிய முறையில்கூட ஒரு பாலம் இல்லையென்றால், அவ்வளவு அக்கறை இல்லாமல் கட்டுகிறார்கள் என்றால், நாளைக்குப் பாலம் திறந்து அதன் மேல் 10 டன், 5 டன் லாரி போனால் என்ன ஆகும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும்.

என் இதைச் சொல்கிறேன் என்றால், ஒரு நாளைக்கு 100 பாலம், 150 பாலம் கட்டினோம் என்று பெருமை பேசிக்கொண்டு இருக்கும் நீங்கள், உங்கள் ஆட்சியில் கட்டிக்கொண்டிருக்கிற பாலம் இடிந்து

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 அக்டோபர் 31

கொண்டே இருக்கிற நிலைமையைப் பார்த்து உண்மையிலேயே உங்களுடைய நிர்வாகத் திறமையை நான் கண்டிக்காமல் இருக்க முடியாது. கார்ப்பரேஷனுக்கு ஏற்கனவே நல்ல பெயர்! எந்த முறையில் ஊழல் நடந்து இருக்கிறது என்று தெரியும். இத்தகைய கடுமையான நேரத்தில்கூட, இந்த அவசர கால நிலையில் கூட இவ்வளவு அஜாக்கிரதையாக நாம் நடந்து இருக்கிறோம்.

இந்த நிலைமையைப் பார்க்கையில் நமக்கு பயம் ஏற்படுகிறது. ஆகவே நான் ஒன்றைக் கூறிக்கொள்கிறேன். நீங்கள் ஆட்சிக்கு வந்த பின்னாலே கட்டிய பாலங்களை, கட்டிடங்களை ஒரு நிபுணர் குழு போட்டு, இது எப்போது இடிந்து விழும் என்று ஆராய்ச்சி செய்யச்சொல்லி, இந்த மன்றத்திற்கு ஒரு அறிக்கை கொடுத்தால் ரொம்ப நன்றாக இருக்கும். In the interest of the public மக்களின் நலனில் அக்கறை காட்டிச் சொல்கிறேன். ஒரு நிபுணர் குழுபோட்டு, இந்தக் கட்டடங்களில் எல்லாம் ஒழுங்காக சிமென்ட் போட்டு இருக்கிறார்களா, அந்தப் பாலங்கள் எல்லாம் சரியாகக் கட்டப்பட்டு இருக்கின்றனவா என்பதைத் தயவு செய்து இன்ஸ்பெக்ட் செய்து அறிக்கை கொடுக்கச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் இப்படிப்பட்ட அவலச் சம்பவங்கள்மூலம் தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் இருப்பார்கள்.

இந்தச் சம்பவத்தில் அதிகம் பேர் இறந்து போனதாகச் சொல்கிறார்கள். அந்தப் பாலம் என் வீடு இருக்கும் பகுதியில் இருப்பதால், அங்குள்ள மக்கள் இதில் சில பேர் இறந்து இருக்கக்கூடும் என்று என்னிடம் சொல்கிறார்கள். இந்த அவசர கால நிலையில் செய்திகளையெல்லாம் சென்சார் செய்வதாகச் சொல்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். இதை மத்திய சர்க்கார் சென்சார் செய்து இருக்கமாட்டார்கள். மாநில சர்க்கார் தங்களை இது பாதிக்கும் என்பதால் ஒரு வேளை செய்தார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஆகவே, அதை விளக்க வேண்டும்.

அந்தத் தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு சரியான முறையில் கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தச் சட்டசபையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, இந்தச் சம்பவம் குறித்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.



1975 அக்டோபர் 31]

DR. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, the object with which I am bringing this adjournment motion is to pinpoint two important factors.

Firstly Government is responsible for this. Government is incurring expenditure on this and their officials are supervising. Secondly this is a matter of public importance. I shall try to prove how it is a matter of public importance

Let me say that this is one of the series of things which have been happening for the past one or two years. To begin with, the auditorium at Madras Medical College collapsed. That was under the same Chief Engineer and under the same P.W.D. Minister. At that time, we could not give adjournment motion because the Assembly was not in session at that time.

Secondly the auditorium at Engineering College collapsed. Then there was the collapse at Coimbatore, Royapuram, etc.

I can cite many instances. Series of such incidents are taking place. My anxiety is that Government should put an end to such things. They must go into the whole issue and isolate the causative factor which contributes to these accidents. They should take immediate remedial action. What are their engineers doing? Surely they must have supervised properly. If only they had been vigilant, this would not have taken place.

So far as this bridge is concerned, it has a history behind it. The foundation for it was laid 4½ years ago, I think, by Dr. Nedunchezhian, when he was Local Administration Minister. At that time, the Hon. Chief Minister was away on foreign tour. The plaque signifying the foundation laying ceremony by Dr. Nedunchezhian was there for one year. Afterwards it was removed. Again after one year, the work slowly started. The previous contractor was removed and East Coast Construction Company had been given the work.

Now a curious argument is advanced that there was rain on that day. Let me say that on the day of mishap there was no rain and no flow of water in the Cooum. Even if there was flow prevailing, how did the scaffolding stand in its place? It ought to have been washed away. But that is safe. So, the argument that there was rain cannot hold water.

[Dr. H. V. HANDE] [1975 அக்டோபர் 31

My point is that scaffolding had not been properly done. That is my submission. In a scaffolding the load of the concrete slab should have been calculated and the scaffolding designed with sufficient cross tiers. This was presumbly not done. I am passing through that bridge at least four times a day. I had noticed that scaffolding had not been done in the proper way. I used to see only some ropes being tied in a loose manner. It ought to have been done under proper conditions and in a proper way. The scaffolding is resting on the earth bund under; therefore once the slab is loaded, the weight is transferred on the earth bund through the scaffolding post creating a shear in the earth bund below and results in the sliding away of the earth below. Therefore to prevent the sliding of the earth under the scaffolding they should have provided a coffer dam all round either with sheet piles of timber or timber planks. This would have prevented the sliding due to sheet force. But that coffer dam had not been prepared and so this mishap had occurred. This is a fundamental thing which should have been known to the technical personnel, the Government Engineer; he had overlooked this. That is my submission. So, Government's responsibility is involved in this. This is not an isolated instance but one of the series of incidents taking place for the past one or two years. It is not known how the P.W.D. Engineer had overlooked this.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Government have no responsibility.

அவருக்கு என்மீது கோபம். அந்தக் கோபத்தைக் காட்டுவதற்கு வேறு பாலத்திற்குப் போகலாம். இந்தப் பாலத்தை மட்டும் நம்பிக் கொண்டுஇருக்க வேண்டியதில்லை. திரு. ஹாண்டே அவர்களிடத்தில் நான் மரியாதை வைததிருக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அவர்மீது எனக்குக் கோபம் என்றால் அதைக் காட்டுவதற்குப் பல பாலங்கள் பயன்படும். இதைப்பற்றிக் கேட்பதற்குக் காரணம் ஒரு "பண்டமெண்டல்" காரணம் இருக்கிறது. அதுதான். அமைச்சருக்கு இது தெரியும். எனக்கு இந்த மன்றத்திலே பதில் கொடுக்க வேண்டியவர் அமைச்சர் அவர்கள்தான். கார்ப்பொரேஷன் ஸ்பெஷல் ஆபீசர் வந்து பதில் கொடுக்க மாட்டார்கள். இங்கே நடக்கக் கூடிய காரியங்கள் எதுவாக இருந்தாலும் அதிலே அரசாங்கத்திற்குப் பொறுப்பு இருக்கிறது. (டைரக்டிவ் ஆர் இன்டைரக்டிவ். தி



1975 அக்டோபர் 31] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

ரெஸ்பான்சிபிலிடி ஆப் தி கவர்ன்மெண்ட் இஸ்தேர்.) கார்ப்பரேஷன் செய்யக்கூடிய காரியமாக இருந்தாலும் அமைச்சர்தான் பதில் சொல்லியாக வேண்டும். இந்த அவைக்கு அரசாங்கம் பொறுப்பு. கார்ப்பொரேஷன் அந்தப் பாலத்தைக் கட்டினாலும், ஸ்பெஷல் ஆபீசர் அரசாங்கத்தின்கீழ் வருகிறார். பொறுப்பு இருக்கிறது. பொதுப்பணித்துறை அமைச்சர் வேகமாக எழுந்தெழுந்து பதில் சொல்வதைப் பார்த்தால் அவர்தான் இதற்குப் பதில் சொல்வார் என்று தோன்றுகிறது.

இந்தப் பாலத்தைப் பொறுத்த வரையில் அரசாங்கம் தான் செய்ய வேண்டிய காரியங்களைச் சரிவரச் செய்யவில்லை. சரிவரக் கண்காணிக்கவில்லை. சரியான மேற்பார்வை நடக்கவில்லை. "பண்டமெண்டலை" மறந்துவிட்டார்கள். அதனால் கன்ட்ராக்டர் தன்னுடைய பணியைச் சரிவரச் செய்யவில்லை. அதன் விளைவாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. அதனால் அரசாங்கத்திற்கு நேரிடையாகப் பொறுப்பு இருக்கிறது என்ற காரணத்தினால் இதை முழுமையாக விவாதிப்பதற்காக இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஸ்டர்லிங் ரோடையும், சேத்துப்பட்டையும் இணைக்கும் இந்தப் பாலத்தை ஒரு புதிய பாலமாகக் கட்ட வேண்டுமென்று மாநகராட்சி தீர்மானித்து அதற்கான வேலைகளை ஈஸ்ட் கோஸ்ட் கன்ஸ்ட்ரக்ஷன் அண்ட் இன்டஸ்டிரீஸ் என்ற நிறுவனத்தார் செய்து வருகிறார்கள். இந்தப் புதிய பாலத்தின் நீளம் 200' அகலம் 30'. அதிலே மொத்தம் 6 "ஸ்பேன்கள்" இருக்கின்றன. அவற்றிலே 4 "ஸ்பேன்" களின் வேலை ஏற்கெனவே முடிந்து விட்டது. 5-வது ஸ்பானின் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. 29—10—75 அன்று கன்ஸ்ட்ரக்ஷன் வேலை நடந்து கொண்டிருந்தது. மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதுபோல் "ஸ்காபோல்டிங்" சவுக்குக்கட்டையை முட்டுக்கட்டையாகக் கொடுத்து வேலையை ஆரம்பித்திருக்கிறார்கள் அந்த "ஸ்காபோல்டிங்"-க்கு பிளாக் அடிப்பது "செண்ட்ரிங்". இப்படி செண்ட்ரிங் அடித்து விட்டு கன்ஸ்ட்ரக்ஷன் வேலையைத் தொடங்கினார்கள். இந்த செண்ட்ரிங் நழுவி விட்டது. இப்படி நழுவி விட்டதன் விளைவாக மேலே கன்ஸ்ட்ரக்ஷன் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் கீழே விழுந்து விட்டார்கள். அதனால் கீழே இருந்தவர்கள் அடிப்பட்டிருக்கிறார்கள்.

[மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்] [1975 அக்டோபர் 31

சுமார் 10-3/4 மணிக்கு இது நடந்திருக்கிறது. அன்றைக்கு வேலை செய்து கொண்டு இருந்தவர்களில் 20 பேர். அதிலே 13 பேர் காயம் அடைந்திருக்கிறார்கள் 13 பேர்களும் கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். அந்த 13 பேர்களில் ஒருவர் அவுட்பேஷண்டாக சிகிச்சை பெற்றுக் கொண்டார்.

இதில் ஏதோ பெரிய நிகழ்ச்சி ஏற்பட்டு விட்டது போலவும், அவசரக் கால சட்டம் இருப்பதால் இது பற்றி செய்திகள் சரிவரப் போடப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். அவசர காலச் சட்டத்தைப் பற்றி அவநம்பிக்கை கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த விபத்து நடந்த உடனேயே காவல்துறை ஆணையாளரும், மாநகராட்சி ஆணையாளரும் அந்த இடத்திற்குச் சென்று அங்கிருந்தவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் தெரிவித்ததுபோல எந்த விதமான பெரிய விபத்தோ அல்லது பாதகமோ ஏற்பட்டுவிடவில்லை என்பதை நான் இந்தச் சபைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விபத்துபற்றி விசாரிக்க இ.பி.கோ. 337-ன்கீழ் குற்றம் பதிவுசெய்யப்பட்டு, புலன் விசாரணை நடைபெற்றுகொண்டிருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதைப் போல ஸ்காப்போல்டிங் சரியாகப் போட்டு, 'காஃபர் டாம்' கட்டினார்களா இல்லையா என்பதெல்லாம் பின்னர் விசாரணையில் தெரியவரும். இன்றைக்கு டாக்டர் ஹாண்டே அவர்கள் எஞ்சினியரிங் கற்றுவந்த ஒரு எஞ்சினியர்போலப் பேசியதை நான் ஒரு எஞ்சினீயர் என்ற முறையிலே பாராட்டுகிறேன். ஆனால் சாஃபர் டாம் என்பது குறுக்கே அணை கட்டித் தண்ணீரை வேறு திசையில் மாற்றிவிடுவது.

இந்த விபத்துக்கு என்ன காரணமாக இருக்க முடியும் என்று திட்டவட்டமாகத் தெரியவில்லை. நான் விசாரித்துப் பார்த்ததில் சவுக்குக் கட்டைகள் முட்டுக் கட்டைகளாக நிறுத்திய பிறகு, இரண்டு அடி 'பெட்டிலே' அதிகப்படுத்தி இருக்கிறார்கள். அதில் சவுக்குக் கட்டைகளை வைத்திருக்கிறார்கள். இரண்டு அடி அதிகப்படுத்திய பின்னால் 'மேட் அப் சாயிலும்' கீழே இருக்கிற தரையும் இரண்டும் ஒட்டியிருக்கிறதா அல்லது சறுக்கல் ஏற்பட்டிருக்கிறதா என்பது ஆராயப்படவேண்டியதாக இருக்கிறது. இதில் ஏதாவது தவறு இருக்குமானால் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறேன். ஆகவே, இது 'ஷீயர்' என்ற காரணத்தால் ஏற்பட்டிருக்கும் என்று எண்ணுகிறேன். என்ன காரணம் என்பதுபற்றி மாநகராட்சி மன்றம் ஆராய்ந்து தவறு இருக்குமானால் தகுந்த நடவடிக்கை எடுக்கும்.



1975 அக்டோபர் 31] [திரு. ச. இராமச்சந்திரன்]

அதுமட்டுமல்ல, திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் எல்லாப் பாலங்களையும் செக் பண்ண வேண்டுமென்று சொன்னார்கள். விழுந்தது சவுக்குக் கட்டைகள்தான். ஆகவே, திருமதி அனந்தநாயகி அவர்கள் அதிலே போய் நேரத்தைச் செலவழிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் தனியார் மசோதா வருகிற நாள். ஆகவே, சட்டமன்றத்தை ஒத்திவைத்து விவாதிக்கலாம் என்று கருதினால் அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள்தான் என்ற காரணத்தால் இதை வற்புறுத்த மாட்டார்கள் என்று கருதி, மேலும் இதுகுறித்து விவாதிக்க வேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இது ஷீயரிங்கினால் ஏற்பட்ட விபத்தாகத்தான் இருக்கும் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஷீயரிங் ஏற்படாமல் இருக்கப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முதலில் செய்திருக்க வேண்டும். அதற்குக் கொஞ்சம் பணம் அதிகமாகச் செலவாகும். அந்தப் பணத்தை மிச்சப்படுத்துவதற்காக கான்ட்ராக்டர்கள் இப்பேர்ப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செய்யாமல் வேலையை ஆரம்பித்திருக்கக் கூடும். அப்படியிருக்குமானால் கண்காணிக்க வேண்டியது அங்கேயிருக்கக் கூடிய அதிகாரிகள்தான். அதில் ஏதாவது தவறு நடந்திருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் விசாரிக்க வேண்டும்.

பாவிக்கலாமே என்ற பிரச்சினை வந்தபோது அதை மத்திய அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் செய்ய முடியாது என்ற நிலை இருந்தது.

ஆனுல், அதே அரசியல் சட்டத்திலே பின்தங்கிய வகுப்பைப் பொறுத்தவரை மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி நம்முடைய அரசாங்கம் அரிசனங்கள் கன்வர்டட் கிறிஸ்டியன்களாக இருந்தால் முதல் தலைமுறைக்கு பாக்வார்டு கிளாசசுக்குக் கொடுக்கப்படுகிற சில சலுகைகளைக் கொடுக்கலாம் என்று முடிவு எடுத்தோம்.

இந்த ஆண்டு எடுத்திருக்கும் முடிவு—அதையும் நீக்கி அவர்கள் முதல் தலைமுறையாக இருந்தாலும் அல்லது எந்தத் தலைமுறையாக இருந்தாலும் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள்—சிறித்தவர்களாக மாறியிருந்தால் பாக்வார்டு கிளாசசுக்குக் கொடுக்கப்பட்டு வருகிற சலுகைகள் உரிமைகள்—அட்மிஷன் உரிமை, வேலை வாய்ப்பு உரிமை கொடுக்கப்படும் என்பதுதான் புதிய முடிவு. இதிலே எந்தவிதமான குழப்பமும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் வாதம் பண்ணுகிற பிரச்சினைக்கு இடமேயில்லை. முதல் தலைமுறைக்கு மட்டும் கொடுத்ததை புதிய ஜி.ஓ. படி எந்தத் தலைமுறைக்கும் பொருந்தும் என்று செய்திருக்கிருேம். தலைவர் அவர்கள் 1974 ஜி.ஓ. புதிய ஜி.ஓ. எல்லாவற்றையும் பரிசீலித்து அதற்குப் பின்னுல் தீர்ப்புக் கொடுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். . . .

(திருமதி சத்தியவாணிமுத்து எழுந்து நின்ருர்கள்)

MR. DEPUTY SPEAKER: I have heard all the sides. I am not allowing any point of order. The arguments are closed. Now, it is time for judgment.



**திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே படித்தது—

"Fee concessions to Christian Scheduled Castes converts and their children are given from the State Funds as in the case of Scheduled Castes".

இதற்கு என்ன அர்த்தம்?

The State Governments are also giving State scholarships to them on a par with Scheduled Castes.

ஏற்கனவே கொடுத்திருக்கிறது. கன்வர்ட்சுக்கு கொடுத்திருக்கிறது. இப்போது புதிதாகவா சில்ட்ரனுக்குக் கொடுத்திருக்கிறது. கொடுத்தார்கள்?

**திரு. எம். சுரேந்திரன்:** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** No point of order. I am not allowing any point of order. The Chair is giving its ruling.

திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் 25—10—1975 இல் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை சப்ளிமென்டரி பட்ஜட்டில் சொல்லப்பட்ட அந்தக் முதலமைச்சர் கருத்துக்களுக்கு ஏற்கனவே 1975 ஜி. ஓ. வில் எல்லா உரிமைகளும் கொடுக்கப்பட்டுவிட்டதைப் போலவும். . . . (திரு. சுரேந்திரன் நின்று கொண்டிருந்தார்)

MR. DEPUTY SPEAKER: Will you please sit down? I am giving my ruling. No point of order. Will you please sit down? After my ruling, the hon. Member can raise a point of order.

(திரு. சுரேந்திரனும், திருமதி சத்தியவாணிமுத்துவும் நின்று கொண்டிருந்தனர்)

MR. DEPUTY SPEAKER: No. I am not allowing.

**திருமதி சத்தியவாணிமுத்து:** ஜி. ஓ. வில் இருந்து நான் சொல்லுகிறேன். . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பின்னால் மேலும் இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி அளிக்க மறுக்கப்படுகிறது.

அடுத்து, விதி 41-ன் கீழ் திருவாளர்கள் என். டென்னிஸ், ஆர். பொன்னப்ப நாடார், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். முதலில் திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் இது எப்படிப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதுபற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை இங்கே கேட்கக்கூடாது. என்னுடைய சேம்பரிலே கேட்கவேண்டும். அசெம்பிளி இன்றுடன் முடியவில்லை. எழாந்தேதிவரை நடக்கிறது. இடையிலே மூன்றுநாள் விடுமுறை. அவ்வளவு தான்.

**திரு. சோ. அழகர்சாமி:** * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏதாவது கேட்க வேண்டுமானால் என்னுடைய சேம்பரில் வந்து கேளுங்கள். தயவுசெய்து இப்போது இருக்கையில் அமருங்கள். நீங்கள் இப்போது குறிப்பிட்ட எதுவும் அவைக் குறிப்பில் இடம் பெறாது. பத்திரிகைகளும் பிரசுரிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தங்களுடைய தீர்ப்பை எதிர்த்து நான் வெளிநடப்புச் செய்கிறேன். (உறுப்பினர் வெளியேறினார்).

**(5) கவன ஈர்ப்பு**

**கன்னியாகுமரி மாவட்டத்தில் காலரா நோய் ஏற்பட்டதும், அதனால் பலர் உயிர் இழந்ததும் குறித்து.**

THIRU J. JAMES: Mr. Deputy Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Health to a matter of urgent public importance, namely, the outbreak of Cholera in Kanyakumari District resulting in fatal cases during September and October, 1975.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைப்படி நீக்க அகற்றப்பட்டது.





**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே,
1975 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் கன்னியாகுமரி
மாவட்டத்திலுள்ள கிள்ளியூர், மூன்சிறை, தக்கலை, மேல்புறம்,
திருவட்டாறு, குருந்தன்கோடு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில்
பரவலாக கடுமையான குடல் அழற்சி நோய் (Aucto gastro
Entoritis) ஏற்பட்டது. 22—10—1975 ஆம் நாள் முடிய,
50 பேருக்கு கடுமையான குடல் அழற்சி நோய் ஏற்பட்டு
அவர்களில் 19 பேர் சிகிச்சை அளிக்கப்பட்டும் இறந்தனர். இந்
நோய் காலரா நோயல்லவென்று நுண்ணுயிரியல் ஆய்வுக்காக
அனுப்பப்பட்ட மலங்களின் மாதிரியிலிருந்து தெரிய வருகிறது.
பாதிக்கப்பட்ட பகுதிகளில் 27—10—1975 முடிய, 56,998 பேருக்கு
தடுப்பு ஊசி குத்தப்பட்டது. 1,287 கிணறுகளில் 'குளோரின்'
மருந்து கலக்கப்பட்டது. நோய் பீடிக்கப்பட்ட வீடுகளுக்கு
கிருமி நாசினி தெளித்தல், சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாத்தல் முதலான தடுப்பு, கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டுள்ளன. எல்லாத் தடுப்பு நடவடிக்கைகளும்
உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டு, இவ்வேலை இன்னமும்
செய்யப்பட்டு வருகிறது.

இந்த நோய் பீடிக்கப்பட்டு, 19 பேர் இறந்துவிட்டாலும், இது
காலரா நோய் அல்ல என்று தெரிவிக்கப்படுகிறது. இருந்தாலும்
ஏறத்தாழ காலரா நோய் போல் மக்களுக்கு பீதி உணர்வு
ஏற்பட்டிருப்பதால் காலராவுக்குள்ள தடுப்பு நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எல்லாத் தடுப்பு நடவடிக்
கைகளும் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இது தொடர்ந்து அரசின் கவனத்தில் இருந்து வருவதால், இது
குறித்து மேலும் விவாதிக்க வேண்டியதில்லை என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்ச
ரவர்கள் விளக்கம் அளித்திருந்தாலும் இன்றையதினம் இந்து
பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தியைப் பார்க்கும்போது
இறந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்திருக்கிறது. ஆகவே
அரசாங்கம் மேற்கொண்ட தடுப்பு நடவடிக்கைகளினால் பலன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நானும் ஜி. ஓ. வை வைத்துக் கொண்டுதான் படிக்கிறேன். நான் சொல்லுகிற தீர்ப்பு தப்பு என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்.

ஏற்கனவே கொடுக்கப்பட்ட சலுகைகளை 1974 ஜி. ஓ.விலேயே கொடுக்கப்பட்ட சலுகைகளைத்தான் இப்போது புதிதாகக் கொடுத்தது போலச் சொன்னது அவையின் உரிமையை மீறிய செயல் என்று அம்மையார் அவர்கள் குற்றம் சாட்டியிருக்கிறார்கள்.

(இத்தருணத்தில் திரு. எம். சுரேந்திரன் தனக்கு ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப அனுமதி தராத காரணத்தால் வெளிநடப்பு செய்வதாகச் சொல்லி வெளியேறினார்.)

1974 ஜி.ஓ.வில்—

Paragraph 5(1) Educational concession—

Fee concessions to Christian Scheduled Castes converts and their children are given from the State Funds as in the case of scheduled Castes. Treating the Christian Scheduled Castes converts as other eligible communities, the State Government are also giving State scholarships to them on a par with Scheduled Castes.

(a) Reservation in public services and admission in educational institutions—

"........However, if they are themselves converts to Christianity, they are being treated as Backward Classes and made eligible for selection in the quota of 31 per cent allotted to the Backward Classes.

(b) In regard to reservation of seats in Educational Institutions also, they are being treated as Backward Classes, provided they are themselves converts, and made eligible out of the quota of 31 per cent allotted to the Backward Classes.

The restrictions regarding generation is only to Scheduled Castes Christians for admission to educational institutions and for entry to public service. As regards the other concessions, they are eligible irrespective of generations.



In the other portion of the G.O., excepting concessions relating to economic uplift regarding loans and other concessions, others were not made applicable to the Scheduled Castes converts to Christianity.

1975 ஜி.ஓ.வில்—

"The Government have examined the representations and have decided to extend the concessions granted to Scheduled Castes (Hindus) to Scheduled Castes converts to Christianity. Accordingly in supersession of the orders issued in this regard, the Government direct that all concessions granted to Scheduled Castes (Hindus) by the State Government be extended to Scheduled Castes converts to Christianity also. In respect of reservation in educational institutions and public services the orders in paragraph 2 below will be applicable.

The existing reservation of 18 per cent in the educational institutions and public service is only applicable to Scheduled Castes with reference to the orders of the Government of India. The Scheduled Castes converts will not therefore be eligible for the reservation. However, the State Government have decided to treat all the Scheduled Castes converts to Christianity irrespective of the generation of conversion as Backward Classes and to extend to them the reservation of 31 per cent for admission into educational institutions and reservation in public services.

Therefore, there is no misstatement made by the Hon. Chief Minister. The concessions that were existing in 1974 have been enlarged to various generations irrespective of the generation of conversion. These concessions have been given. There is no misstatement. There is no question of privilege. Therefore the motion has failed.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Concessions to Scheduled Castes..................

ஏற்படவில்லை என்று தெரிகிறது. அதோடு இந்த இரண்டு மாத காலத்தில் 20 பேர் சாகக் கூடிய அளவுக்கு இந்த நோய் இருக்கிறது.

MR. DEPUTY SPEAKER: You are entitled to ask one or two questions. You are not allowed to make a speech.

THIRU J. JAMES: I will stop with one question.

அந்த அளவுக்கு இந்த நோய் பரவி இருந்தபோதிலும், தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னும் 20 பேர் செத்திருக்கிருர்கள் என்பதை இந்த அரசு மனதிற்கொள்ள வேண்டும். ஆகவே, எடுத்த நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி இந்த நான்கு பஞ்சாயத்து யூனியன்களிலும் அதிகத் தடுப்பு வேலைகளைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எங்காவது இப்படி நோய் காணுகிறபோதுதான் தடுப்பு நடவடிக்கைப் பணிகளைத் தீவிரமாக மேற்கொள்ள முடியும். எல்லா நேரத்திலும் விரிவான முறையில் தீவிரமாகச் செயல்பட முடியாது. மற்றொன்று. இது காலரா நோய் அல்ல. இருந்தாலும் அதைக் கண்டறிந்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிருர்கள். கிணற்றுத் தண்ணீரில் குளோரின் கலந்திருக்கிருர்கள். தொடர்ந்து தடுப்பு நடவடிக்கைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இன்னொரு விளக்கத்தைப் பெறுவதற்காக ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். பல்வேறு இடங்களில், பல்வேறு மருத்துவ மனைகளில் இந்த அவசர நிலைக்கு ஏற்ப நோயாளிகளை அனுமதிக்கப் போதிய இடவசதி இல்லை. அதுமட்டுமல்லாமல் இந்த நோய் உணவுப் பண்டங்களின் மூலம் வந்தது என்ற ஒரு கருத்து இருக்கிறது. அப்படி உணவுப் பண்டங்களின் மூலம் இந்த நோய் வந்ததா அல்லது தண்ணீரில் இருந்து வந்ததா என்று ஆய்விலே திட்டவட்டமாக முடிவு தெரிந்திருக்குமானுல் அது சம்பந்தமாக என்னென்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?





(முற்பகல் 11-30)

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இதுவரையில் பல இடங்களில் ஏற்பட்ட நிலைமைகளைக் கவனித்தபொழுது எதனுல் ஏற்பட்டது என்பதைக் கண்டுபிடித்து சொல்கிற வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. அது காலராவாக இருந்தால் மிக வேகமாகப் பரவிவிடும் என்று எச்சரிக்கை உணர்வில் கருதுகிருர்கள். காலரா இல்லையென்ருல் குறிப்பிட்ட அளவில் நின்றுவிடும் என்று எதிர் பார்க்கிருர்கள். இருந்தாலும், சிகிச்சை வழங்கப்படுகிறது. ஆங்காங்குள்ள வசதிக்கேற்ப மக்களை கவனித்து ஆவன செய்வார்கள்.

திரு. என். டென்னிஸ்: ஆண்டுதோறும் இந்த வட்டாரங்களில் நோய் பலரைப் பாதித்து பலர் இறந்துபோகிற நிலைமை ஏற்படுகிறது. தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக இருந்ததாக இல்லை. இந்த நோய் பாதிக்கப்பட்டவுடனேயே அவர்களைக் கொண்டு போகக்கூடிய ஒரு நிலை ஏற்படுகிறது. இதன் காரணம் தரக்குறைவான அரிசி சாப்பிடுவதால் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதோடு ஒரு வகை மோசமான கண்வாய்மீன் சாப்பிடுவதால் நோய் வருவதாகச் சொல்லுகிருர்கள். எந்தக் காரணத்தால் இந்த நோய் வருகிறது என்பது ஆராயப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அதைத் தான் முன்பே சொன்னேன். அப்படி ஆராய்ச்சி நடத்த முடியுமா என்று துறை இயக்குநரை ஆலோசனை தெரிவிக்க கேட்டிருக்கிறேன். முடிந்தால் ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை எடுக்கலாம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம் சித்தாறு பட்டணங்கால் பாசனத் திட்டத்தின்கீழ் கருங்கல் பகிர்வு வாய்க்காலில் போதுமான அளவு நீர் விடப்படாதது குறித்து.

MR. DEPUTY SPEAKER: Thiru N. Dennis will call the விதத்தில் நியாயம் இருக்கிறது என்பதைக் கேட்டுக் கொள்கிறேன். urgent public importance.

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, namely, the inadequate supply of water in the Karungal

distributary particularly at the newly extended 'Kal' up to Ananvilai in the Devicode branch of the Chittar Pattanamkal Irrigation System in Kanyakumari district.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கருங்கல் பகிர்வு வாய்க்காலில் அதிக அளவு நீர் தரப்படுகிறது என்றும் மேற்படி வாய்க்காலில் நீர்த் தட்டுப்பாடு ஏதும் இல்லை என்றும் தகவல் கிடைத்துள்ளது. சித்தாறு பட்டணங்கால் பாசனத் திட்டத்தில் தேவிகோடு கிளையில் ஆனான்விளை வரை புதிய கால்வாய் பொதுப் பணித் துறையினால் வெட்டப்பட்டு அதனை சாலையின் குறுக்கே கொண்டு போகும் வேலைகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. குடியானவர்கள் 25 ஏக்கரா அளவு திட்டத்தின்படி கிளை வாய்க்கால்களை இன்னும் அமைக்கவில்லை. அவற்றை அமைக்குமாறு அவர்களுக்கு கோரிக்கைகள் விடப்பெற்று வருகின்றன. மேற்படி கிளை கண்ணி வாய்க்கால்கள் வெட்டப் பெற்றபின் இக்குறிப்பிட்ட பகுதி பாசன வசதி பெறும்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, புதிதாக வெட்டப்பட்ட ஆனான்விளை வாய்க்கால் வெகு நாட்கள் ஆகின்றன. ஒரு லட்ச ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. அந்தக் கால்வாயில் தண்ணீர் விடப்படவில்லை. தேவிகோடு கிளை வாய்க்காலில் எப்போதும் தொடர்பாக போதுமான தண்ணீர் விடுவதில்லை. ஆவலோடு இந்தக் கால்வாய் வெட்டப்பட்டதால் நெல்பயிர் வைப்பதற்கு கன்வெர்ட் செய்தார்கள். இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால் போதுமான தண்ணீர் விடாத காரணத்தால் திரும்பவும் மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் நிலையில் இருக்கிறார்கள். தொடர்பான அதிகாரிகளின் கவனக்குறைவாலும், வாட்சுமேன் கவனக்குறைவாலும் தண்ணீர் சப்ளை செய்யப்படாத நிலையை அரசு கவனிக்குமா, கவனித்து நடவடிக்கை எடுக்குமா, தேவிகோடு கிளையில் தண்ணீர் விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசுக்கு கிடைத்த தகவல்படி தண்ணீர் தட்டுப்பாடு இல்லை என்பதாகும். இருப்பினும் உறுப்பினர் குறிப்பிட்டது போல், தலைமைப் பொறியாளரை இது பற்றி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவேன். அப்படி தட்டுப்பாடு இருந்தால், பரிகாரம் தேடப்படும் என்று உறுதி அளிக்கிறேன்.



## (6) அறிவிப்புகள்

### (அ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் 28—10—1975 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு திருத்தம் ஏதுமின்றி ஒப்புதலளித்து நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது—

1. தமிழ்நாடு 1975-ம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/75).

2. 1975-ம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட மன்ற முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 47/75).

மேலும், கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் 29—10—1975 ஆம் நாளன்று சட்ட மன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு திருத்தம் ஏதுமின்றி ஒப்புதலளித்து, நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1975-ம் ஆண்டு பொது வளவுகள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/75).

2. 1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு மூன்றும் திருத்த) மற்றும் தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகளை மதிப்பிடுதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/75).

3. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் குத்தகை உடைமைகள், சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 32/75).

### (ஆ) மதுரைப் பல்கலைக் கழகப் பேரவைக்கு நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து ஓர் அறிவிப்பு. மதுரைப் பல்கலைக் கழகப் பேரவைக்கு Madurai University Senate , கீழ்க்கண்ட நால்வரின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளன :—

1. திரு. கே. பி. கோபால்.
2. திரு. இரா. ராமலிங்கம்.
3. திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்.
4. திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்.

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், மேற்கண்ட நால்வரும் மதுரைப் பல்கலைக் கழகப் பேரவைக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் அறிவிக்கிறேன்.

### (இ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (7) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



## (6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஈ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 8. நடைமுறைக் கேள்விகள்.

### (அ) சட்ட முன்வடிவுகளை எடுத்துக் கொள்வதற்கு விதிகளுக்கு ஏற்ப போதிய முன்னறிவிப்பு கொடுக்காதது குறித்து

THIRU R. PONNAPPA NADAR : Mr. Deputy Speaker, Sir, I would like to raise a point of order. As per our rules five days' notice is mandatory. In this connection I would like to refer to Rules 88 and 95 of our Rules. Rule No. 88 says :

" Any member who desires to move for leave to introduce a Bill, shall give five days' notice in the prescribed form of his intention and shall together with the notice, submit to the Secretary a copy of the Bill and a full Statement of Objects and Reasons. "

Rule No. 95 reads :

" (1) At any time after the publication of a Bill in the Gazette, the member-in-charge of the Bill may, after giving five days' notice, make one of the following motions in regard to the Bill, viz :—

(a) that it be taken into consideration;

(b) that it be referred to a Select Committee of the House or a Joint Select Committee; "

and all that.

Sir, this Bill has just been placed on our Table today morning. Five days' notice is not given to us. Why this rule has been observed by its breach, I know not. It should be made mandatory that the rule should be strictly enforced, so that we may also have an opportunity to know what is contained in the Bill to

[Thiru R. Ponnappa Nadar] [1975 அக்டோபர் 31

enable us to effectively participate in the discussion. I would like to have a ruling from the Chair whether the introduction of the Bill can be postponed to some other date or whether it will be taken up today itself.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அறிவிப்பு கொடுக்கிற விதிகளுக்கெல்லாம் விதிவிலக்கு கொடுக்கலாம் என்ற விதி இருப்பது பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெரியும். புதிதாக கொண்டு வந்திருக்கிற விதி இதுபோன்ற மசோதாக்களுக்கும் பொருந்தும். இந்த சட்ட முன்வடிவை 5-ம் தேதிதான் எடுக்கப் போகிறோம். எனவே, இன்றைக்கு அறிமுகப்படுத்துவதில் தவறு இருக்காது. அவசரமாக அனுப்பியிருக்கிறோம். அங்கத்தினர்களுக்கு அவகாசம் இல்லையென்ற வாதம் வாராது. விதிவிலக்கு கொடுத்திருப்பதுதான் நியாயம் என்று கருதுகிறேன்.

MR. DEPUTY SPEAKER: The hon. Member will know as a lawyer that 'shall' will mean 'may' and 'may' will mean 'shall' according to the occasion.

THIRU R. PONNAPPA NADAR: Now it is construed as 'may'.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) 1975 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



1975 அக்டோபர் 31].

(8) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) தனியார் அலுவல் நாளில் வேறு அரசு அலுவல்களை எடுத்துக் கொள்வது குறித்து.

* திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற விதிகளின்படி ஒவ்வொரு வியாழக்கிழமையையும் தனியார் அலுவல்களுக்காக ஒதுக்க வேண்டுமென்று இருக்கிறது. இந்த வாரம் அந்த வியாழக்கிழமையை மாற்றி வெள்ளிக்கிழமை என்று வைத்திருக்கிறோம். இன்றையதினம் தனியார் அலுவல்கள் இருந்தும் 11-40 வரை அரசாங்க அலுவல்களையும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும் உரிமைப் பிரச்சினைகளை எல்லாம் எடுத்துக்கொண்டுவிட்டு—இப்போது தனியார் அலுவலை எடுத்துக்கொள்கிறபோது இதற்கு நேரம் மிகவும் குறைந்து விடுகிறது. இப்படித் தனியார் அலுவல் தினத்தில் மற்ற அலுவல்களை எல்லாம் எடுத்துக்கொண்டு, இதற்கான நேரத்தை குறைப்பதில் பயனில்லை. இனிமேலாவது ஒவ்வொரு வியாழக்கிழமையும் கட்டாயம் தனியார் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும், தனியார் அலுவல் தினத்தில் வேறு அரசாங்க அலுவல்களை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று தாங்கள் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து பேசி, ஏகமனதாக எடுத்த முடிவு. அந்த ரூலிலேயே

"Provided however, that where a Thursday has been so taken over for the transaction of Government business under the above proviso, the Speaker may allot in lieu thereof any other day for the Private Members' Business."

என்று இருக்கிறது. அதனால் இன்றைக்கு தனியார் அலுவல்களை எடுத்துக்கொள்வதில் தவறு இல்லை.

"All Thursdays should be set apart for Private Members' Business".

என்று நமது கட்சித் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து முடிவு எடுத்தால் அப்படிச் செய்யலாம்.

**(9) தனியார் அலுவல்கள்.**

**தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் கடன்கள் சரிகட்டுதல் சட்ட முன்வடிவு — தொடர்ச்சி.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் கடன்கள் சரிக் கட்டுதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/74).

திரு. அழகர்சாமி தொடர்ந்து பேசலாம்.

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதை அறிமுகப்படுத்தும்போது பல விவரங்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக நம் இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் கிராமப் பகுதிகளில் உள்ள விவசாயிகள், தொழிலாளர்கள் அதிகமாகக் கடன் சுமையினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை புள்ளி விவரங்களில் இருந்து தெரிந்து கொள்கிறோம். அதுவும் இன்று ஏறக்குறைய இவர்கள் 500 கோடி ரூபாய் வரை கடன் சுமையினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இதில் குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள், சர்க்கார் கடன் ஆகியவை மொத்தமே 25 சதவிகிதம்தான் இருக்கும். மீதி பெரும் பகுதி தனியார்களிடத்தில் பட்டுள்ள கடன்களாகவேதான் இருக்கின்றன. அதுவும் சென்ற ஆண்டு ஏற்பட்ட கடுமையான வறட்சிக்குப் பிறகு மேலும் பலர் புதிய கடனாளியாக, பழைய கடன்களின் வட்டியைக் கூடக் கட்ட முடியாதவர்களாகத்தான் ஆகியிருப்பார்கள். இது நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற பெருந்தொல்லையாக இருக்கின்றது.

இதைத் தவிர்ப்பதற்க ஆரம்ப காலத்தில் இருந்தே பல நடவடிக்கைகள் பல சர்க்கார்களால் எடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. என்றாலும் கூட சரியான நிவாரணம் கடன்பட்ட மக்களுக்கு ஏற்படவில்லை.

இதற்கு முன்னாலேயே இது விபரிதமாகக் கூறியிருக்கிறேன். 1937-ஆம் ஆண்டிலேயே ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக வந்தபோது ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அதனால் சிறிது நிவாரணமும் அப்போது ஏற்பட்டது என்பது உண்மை. அதை முன்பே சொல்லியிருக்கிறேன். அப்போது



இருந்த நிலை—வாங்கிய தொகைக்கே கடன் பத்திரம் எழுதிக் கொடுத்து, செலுத்துகிற வட்டிக்கு எல்லாம் முறையாக ரசீது கொடுக்கப்பட்டு வந்த நிலை. ஆகவே, முதலைப்போல இரண்டு மடங்கு வட்டி செலுத்தியிருந்தால் கடன் தள்ளுபடியாகிவிடும் என்று அவர் சட்டம் கொண்டுவந்தபோது முறையாக கணக்கிட வாய்ப்பிருந்தது. எனக்குத் தெரியும்—பல கிராமங்களில் கடனுக்கு தம்முடைய சொத்தே மூழ்கிப் போய்விடுமோ என்று அஞ்சிய பல குடும்பங்கள் நிவாரணம் பெற்று வாழ்வு பெற்றன.

அதற்குப் பின்னால் நிலைமையே மாறிவிட்டது. கடன் கொடுப்பவர் 100 ரூபாய் கொடுத்தால் அதற்கு நான்கைந்து வருஷ வட்டியைக் கூட்டி 400 ரூபாய் கொடுத்ததாக எழுதி வாங்கிக் கொண்டதும், செலுத்துகிற வட்டிக்கு ரசீது கொடுக்க மாட்டேன் என்று சொல்லி வந்ததும்—கடன்பட்டவர்கள் இந்தக் கட்டுப்பாட்டுக்கு எல்லாம் உட்பட்டு கடன் பெற்றதும் ஆகிய நிலைமைகள் உருவாகிவிட்டன. இந்த நிலையில் 1972 ஆம் ஆண்டில் 1937-ல் ராஜாஜி எந்த மாதிரியாகச் சட்டம் போட்டாரோ அதையே காப்பி அடித்து அப்போது 5½ சதவிகிதம் இருந்த வட்டியை இவர்கள் 9 சதவிகிதம் என்று ஆக்கி—ஒரு கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இதனால் கடன் கொடுத்தவர்கள் பயன் அடைய முடிந்ததே தவிர கடனாளிகள் எந்தப் பயனையும் பெற முடியாது போய்விட்டது.

உண்மையாக வாங்கப்பட்ட கடனுக்கோ, செலுத்திய வட்டிக்கோ ரெக்கார்டு இல்லாமல்—இருந்தாலும் உண்மைக் கணக்காக இல்லாமல்—போய்விட்டது. 100 ரூபாய் கொடுத்தால் 400 ரூபாய் திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைகளின்கீழ் எல்லாம் கடன் வழங்கப்பட்ட நிலைமை வந்துவிட்டது. தானிய வட்டி என்று 100 ரூபாய் கொடுத்தால் நூறு ரூபாயும் கொடுக்க வேண்டும், ஒரு மூட்டை நெல்லும் கொடுக்க வேண்டும் என்கிற முறைகள் எல்லாம் வந்துவிட்டன. சர்க்காரிடம் இருந்து கடன் வாங்க வசதி இல்லை, குடும்பம் பிழைத்தாக வேண்டும். ஆகவே, பலர் இந்தத் தனியார்களிடம் கடன்படக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இதன்காரணமாக கிராமப் பகுதியில் கடன் சுமை அதிகமாகிவிட்டது.

அதுவும் இன்றையதினம் கிராமப்புறங்களில் கூட்டுறவு சங்கங்கள், நிலவள வங்கிகள் எல்லாம் வந்த பிறகு இவற்றிலே வாங்கிய கடன்களை ஏழை எளிய விவசாயிகள் எப்படித் திருப்பிச்

செலுத்துகிறார்கள் என்றும் பார்க்க வேண்டும். இவர்கள் ஜூன் மாதம் முதல் தேதியே வந்து தொண்டையை பிடித்துவிடுவார்கள். கட்டவில்லை என்றால் ஜப்தி செய்து விடுவார்கள். இதற்கு அஞ்சியே பலர் இந்தக் கூட்டுறவு, நிலவள வங்கிக் கடன்களுக்கு நூற்றுக்குப் பத்து ரூபாய் என்று தனியாரிடம் கடன் வாங்கி, அதைக் கொண்டு வந்து இந்த ஸ்தாபனங்களுக்குச் செலுத்த வேண்டிய தவணையைக் கட்டுவார்கள்.

ரொம்ப நாளாகவே சொல்லி வருகிறார்கள், விவசாயிகளை எடுத்துக்கொண்டால் கடனில் பிறக்கிறான், கடனில் வாழ்கிறான், கடனிலேயே சாகிறான், பிள்ளைகளுக்கும் கடனைக் கொடுத்துவிட்டுப் போகிறான் என்று.

பாரதப் பிரதமர் தம்முடைய உரையில்கூட, கிராம விவசாய தொழிலாள மக்களுடைய கடன் சுமையைக் குறைக்க வேண்டும், இந்தக் கடன் பளுவில் இருந்து அவர்களை விடுவிக்கவேண்டும் என்று சொன்னார்கள். இது இருபது அம்சத் திட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது. தமிழக அரசு இதை நிறைவேற்ற வேண்டுமென்றுதான் இந்த மசோதா வந்திருக்கிறது. இதற்கு முன்னால் இந்த அரசு நிறைவேற்றியுள்ள மசோதாவினால் எவ்வித பிரயோசனமும் இல்லை. ஆகவேதான் திரு. பழனிசாமி அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த மசோதாவின்படி நிவாரணம் அளிப்பதற்கு வேண்டிய காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள், நிலவள வங்கிகள் இவற்றில் இருந்து கடன் பெற்று கிணறு வெட்டுகிறார்கள். 10 ஆயிரம் கடன் பெற்று கிணறு வெட்டினால் தண்ணீர் வரவில்லை, அந்தக் கிணற்றினால் பயன் இல்லை என்றாலும்கூட உடனே முதல் தவணையை வசூலிக்க வந்துவிடுகிறார்கள்.

பம்புசெட்டுக்காக கடன் வாங்கி பம்புசெட்டு வாங்குகிறான். மின்சார இணைப்பு கொடுக்கவில்லை. பம்புசெட்டு வேலை செய்யவில்லை, தண்ணீர் பாய்ந்து விவசாயம் நடக்கவில்லை என்றாலும், பம்புசெட்டு கடனுக்கு முதல் தவணை வசூல் ஆரம்பமாகிவிடுகிறது. இதுபோன்று விவசாயிகளுக்கு பெரும் நெருக்கடி ஏற்படுத்தப்படுகிறது. ஒரு தொழிற்சாலைக்குக் கடன் கொடுத்தால் அந்தத் தொழிற்சாலை—உற்பத்தியைத் தொடங்கியவுடன்தான் கடனை வசூலிக்க ஆரம்பிக்கிறோம். ஆனால் அதுபோல இன்றி விவசாயிகளுக்கு





கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொடுக்கப்படுகிற கடன்கள் என்றால் —ஜூன் முதல் தேதி என்றால்—சரியாக மே கடைசியிலேயே வந்து இவர்களது தொண்டையைப் பிடித்துவிடுகிறார்கள். ஆகவே, இதற்கு இப்பொழுது ஆளுங் கட்சியிலேயிருக்கிற நீங்கள் சரியான நிவாரணம் ஒன்று செய்யவில்லையென்றால், பின்னாலே, எதிர்க் கட்சிக்கு வந்து இதே கோரிக்கையைச் செய்ய வேண்டுமென்று வாதாட வேண்டிய நிலை உங்களுக்கு ஏற்படும். ஆகவே, கண்டிப்பாக ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த மசோதாவிலே நியாயமான கடன் என்ன என்று கண்டு பிடிப்பதற்கு ஒரு கமிட்டி போட வேண்டுமென்றிருக்கிறது. இப்பொழுது கடன் எவ்வளவு என்றே கண்டுபிடிக்க முடியவில்லை. கடன் கொடுத்தவரைக் கேட்டால் ரூ. 2,000 என்கிறார். கடன் வாங்கியவரைக் கேட்டால், ரூ. 1,000 தான் வாங்கினேன், ரூ. 500 கட்டி விட்டேன் என்று சொல்கிறார். கடன் கொடுத்தவர் ரசீது காட்டு, ரெக்கார்டு காட்டு என்கிறார். எதைக் காட்டுவது? ஆகவே, நியாயமான கடனைக் கண்டுபிடிக்க, பஞ்சாயத்து யூனியன் சேர்மன், கிராம அதிகாரி அந்த ஊரிலுள்ள முக்கியமானவர்கள் ஆகியவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி போட்டு, இவ்வளவுதான் கடன் கொடுத்திருக்கிறார் என்று நியாயமான கடனை அவர்கள் ரெக்கமண்ட் பண்ணட்டும். அந்த மாதிரி இல்லாவிட்டால் கண்டு பிடிக்க முடியாது.

அதே மாதிரி, ரூ. 30,000 வரை கடன் வாங்கியவர்களுக்கு 50 சதவிகிதம் வரை கடனைக் குறைக்கவேண்டும். மீதிக் கடனைப் பெறுவதற்குத் தவணை கொடுக்கிறோம் என்றால், அவனால் வருஷத்திற்குக் கொஞ்சங் கொஞ்சமாகச் செலுத்த எவ்வளவு சக்தியிருக்கிறது என்பதைப் பார்த்து, தவணை கொடுக்கிறோம். சர்க்காருடைய கடனுக்குப் பல தவணைகளை நிர்ணயம் பண்ணுகிறோம். மூன்று, நான்கு வருஷங்களாக வறட்சி ஏற்பட்டிருக்கிறதென்று கடன் வசூலை ஒத்தி வைக்கிறோம். அடுத்த வருஷம் மொத்தமாகச் செலுத்த வேண்டுமென்று சொல்கிறோம். அவனுக்கென்ன திடீரென்று அதிகமாக விளையுமா? அல்லது நோட் அச்சடிக்கிறானா? வறட்சி நேரத்தில் கட்டாததையும் சேர்த்துக் கட்டுங்கள் என்றால் எப்படி? பத்து வருஷமாகக் கட்டவில்லை. அதற்குப் பிறகு கட்டு என்றால், 11 ஆவது வருஷம் எப்படி கட்டுவது? 10 வருஷம் கடன், இந்த வருஷம் வறட்சி, அவ்வளவையும் சேர்த்து அடுத்த வருஷம் கட்டு என்று சொன்னால் சரியல்ல,

[திரு. சோ. அழகர்சாமி] [1975 அக்டோபர் 31

ஆகவேதான், கடன் சுமை மற்ற எல்லா மாநிலங்களையும்விட நம்முடைய மாநிலத்தில் அதிகமாக அழுத்திக் கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, இன்றைக்கு விவசாயத் தொழிலாளி தொடர்ந்து எப்படி கடன் பட்டிருக்கிறான் என்று சொன்னால், குடிசை பிரிந்துவிட்டால் ரூ. 200, ரூ. 300 வேண்டியிருக்கிறது, மீண்டும் நெய்ய. பிரசவ அவசரம் வந்துவிடும், அதற்கு ரூ. 100 தேவைப்படும். இதற்கெல்லாம் வேலை பார்க்கிற முதலாளியிடம் கடன் வாங்கவேண்டும். ரூ. 100-க்கு ரூ. 10 வட்டி. கடன் பத்திரம் முதலாளியிடம் இருக்கும். ரூபாய் 10 வட்டியை மாதா மாதம் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். வட்டி கொடுக்கவில்லை, அல்லது அவன் சொல்கிற நேரத்திற்குக் குறைந்த கூலிக்கு வேலைக்கு வரவில்லையென்று சொன்னால், மறு நாளே கோர்ட்டில் போட்டு, ஜப்தி செய்து விடுவான், ஜெயிலில் வைத்து விடுவான்.

மற்ற மாநிலங்களில் கடனை ரத்து செய்திருக்கிறார்கள். நாம் ரத்து செய்திருக்கிறோமா? ஒரு குறிப்பிட்ட தொகை வரை வாங்கிய கடன்கள் பூராவும் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன மற்ற மாநிலங்களிலே.

அது மட்டுமல்ல, முன்னால் பட்ட கடனுக்காக கோர்ட்டில் வழக்கு போட்டு ஜப்தி செய்திருந்தாலும், திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற சட்டம் பல மாநிலங்களிலே வந்திருக்கிறது. இங்கே என்ன செய்திருக்கிறோம்?

மாண்புமிகு வணிக வரித் துறையமைச்சர் கூட இரண்டு நாளைக்கு முன்னாலே பேசும்பொழுது, ஜனவரியில் நிலைமை மேலும் இப்படியே இருந்தால் அப்பொழுது நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னார். ஜனவரிக்கு இன்னும் 3, 4 மாதங்கள் கூட இல்லை. சட்டம் கொண்டுவந்து நாளையே நிறைவேற்ற வேண்டும். ஜனவரி மாதம் எப்படி நெருக்கடி ஏற்படும் என்பதை நீங்களெல்லோரும் யோசித்துப் பார்க்க வேண்டும். ஜனவரி மாதத்தில் நிலவள வங்கிக்காரர் வந்துவிடுவார். கூட்டுறவு வங்கிக்காரர் வந்துவிடுவார். இத்தனை பேரும் சேர்ந்து அவனை அமுக்கினால் ஆட்டம் குளோஸ்.

இதனால் கிராமப் பகுதியிலேயுள்ள கிராம மக்களுடைய விவசாயம் பாதிக்கும். இந்த மாதிரி கடன்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.



1975 அக்டோபர் 31] [திரு. சோ. அழகர்சாமி]

மாதத்திற்கு ரூ. 200 என்று வைத்தால் வருடத்திற்கு ரூ. 2,400; அல்லது வருஷத்திற்கு ரூ. 3,000 வருமானமுள்ளவர்கள் அல்லது 5 ஏக்கர் புஞ்சை அல்லது அதற்குத் தகுந்த நஞ்சை நிலம் வைத்திருக்கிறவர்கள் பட்ட கடனை—யாராக இருந்தாலும் அந்தக் கடனைச் செலுத்த வேண்டியதில்லை என்று சட்டம் போட்டாலென்ன!

ஒரு விவசாயி கிணறு வைக்க ரூ. 10,000 கடன் வாங்க வேண்டியிருக்கிறது, பம்ப் செட் வைக்க ரூ. 10,000 கடன் வாங்க வேண்டியிருக்கிறது. மூன்று ஏக்கர் வைத்திருக்கிறவன் ரூ. 20,000 கடன் பட்டிருக்கிறான். கோயம்புத்தூரிலே கேணி வெட்ட ரூ. 20,000 செலவாகிறது. ரூ. 20,000, ரூ. 30,000 கடன் பெறுகிறவன், வறட்சி ஏற்படுகிற காலத்திலும் மற்ற காலத்திலும் கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லையென்றால், அவனுக்கு என்ன செய்ய வேண்டும்? அவனுக்கு 50 சதவிகிதம் நிவாரணம் கொடுக்க வேண்டும். மீதியைக் கொஞ்சங் கொஞ்சமாகத் திருப்பிச் செலுத்த வழி செய்யவேண்டும். அவன் செலுத்தக்கூடிய வகையில் தவணைகளை ஏற்படுத்த வேண்டும்.

உடனடியாக, நாம் செய்ய வேண்டியது என்ன? நாம் கடனை ஒத்தி வைக்கிறோம், 1971-லே சட்டம் கொண்டு வந்திருக்கிறோம், அது பிரயோஜனம் இல்லாத சட்டமாக இருக்கிறது. வறட்சி காரணமாக கடன்களை ஜனவரி வரைக்கும் ஒத்தி வைத்திருக்கிறோம். அப்படி ஒத்தி வைக்கப்பட்ட தொகையை எப்படி வசூல் செய்ய வேண்டும்? யார், யாருக்குக் கடன் தள்ளி வைக்கப்படும், நியாயமாகச் செலுத்த வேண்டியது எவ்வளவு? அதை எத்தனை தவணைகளிலே வசூல் செய்யலாம் என்று கொஞ்சம் சரியானபடி பரிசீலனை பண்ணி, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவில்லையென்று சொன்னால், ஒருவனிடம் இருக்கிற ஆடுமாடுகள் ஒன்றிரண்டாக இருந்தாலும் அதையும் பிடித்துக் கொண்டு விடுகிறார்கள் லேவாதேவிக்காரர்கள். ஆகவே இந்த மசோதா மிகமிக முக்கியமான மசோதா. பஞ்சம் ஏற்பட்ட பிறகு கடன்சுமை அதிகமாக இருக்கிறது. வேறுபல மாநிலங்களைவிட அதிகமாக இருக்கிறது என்று புள்ளிவிவரங்களே சொல்கின்றன. அதுவும் கிராமப் பகுதிகளிலே அதிகமாக இருக்கிறது. இந்தக் கடனை முடிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். [illegible]

பாங்குகளிலேயும் மற்ற ஏற்பாடுகளையும் செய்வதைவிட, கடன் பட்டவனுக்கு உடனடியாக நிவாரணம் கொடுக்க ஜனவரி 16-ந் தேதிக்குப் பிறகு யாரும் கோர்ட்டிலே ஜப்தியில் பொருள்களை விடாமலிருக்க எல்லாக் கடன் வசூல்களையும் மூன்று வருடத்திற்கு நிறுத்தி வைக்கலாம்.

நியாயமான கடனை ஒருவர் எவ்வளவு கொடுத்திருப்பார், எத்தனை முறை திருப்பி வாங்கியிருக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும், பத்து வருஷம் வட்டியை ஒழுங்காகச் செலுத்தியிருப்பார், அவரும் திருப்பிக் கொடுக்க வேண்டும், முழுத் தொகையை. ரூ. 100-க்கு ரூ. 10 என்று அவர்கள் கொள்ளை அடித்த பணத்தையும் மறுபடியும் கொடுக்க வேண்டுமா ?

குறிப்பாக, அடித்தட்டிலுள்ள அரிசனங்கள், மலைஜாதி மக்கள் ஆகியோருக்கெல்லாம் மற்ற மாநிலங்களில் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அடிமை வேலை இங்கே இல்லையென்று சொன்னார்கள். ரூ. 100-க்கு நோட்டு எழுதிக் கொடுத்துவிட்டு, அதற்காக வருஷம் பூராவும் பணம் கொடுத்தவன் சொல்கின்ற வேலையைச் செய்ய வேண்டும் அரைக் கூலிக்கு. அரைக் கூலி என்றால் கொடுத்தவன் சொல்கின்ற கூலி, எத்தனைக்குக் கடன் வாங்கினேன் என்று எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தானோ, அன்றே கொடுத்தவன் சொல்கிற வேலையைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்ய மறுத்தால், வாங்கிய கடனுக்கு வட்டியும் போட்டு, வட்டிக்கெல்லாம் சேர்த்து கோர்ட்டில் போட்டு, வீட்டைக் கூட, ஜப்தி வாங்கி விடுவான். ஆகவே இந்த நிலைமையிலிருந்து மீட்க வேண்டிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று சொன்னால், இந்த மசோதாவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நியாயமான கடனை முடிவு செய்ய, பரிசீலிக்க, அந்தந்த வட்டாரத்திலுள்ள ஊராட்சி மன்றத் தலைவர், அந்த டவர் கிராம அதிகாரி, அங்குள்ள பொது மக்களிலே முக்கியமானவர்கள் ஆகியோரைக் கொண்டு கமிட்டி போட்டு நியாயமான கடனைப் பரிசீலனை பண்ணி டிகிரி பண்ணினால், அந்த டிகிரி தொகையைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிடிக்க வேண்டும். சர்க்கார் இனாம் வெட்டக் கடன் கொடுத்திருக்குமானால், அதைப்போல, மற்றும்







சில கடன்களைத் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், முதலிலேயே சொன்னமாதிரி, இப்பொழுது நீங்கள் அலட்சியம் பண்ணுவீர்களானால், எதிர்க்கட்சியிலே நீங்கள் உட்காரும்போது இதனை மீண்டும் கிளப்ப வேண்டியிருக்கும். ஆகவே, அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக செலுத்த வேண்டிய தவணைக் காலத்தை ஜனவரி மாதம் 16-ந் தேதிக்குப் பின்னால் நீட்டிக்க வேண்டும். நீங்களாக இந்த மசோதாவை ஏற்றுக்கொண்டால் ரொம்ப நல்லது. அல்லது எதிர்க்கட்சிக்காரர்கள் கொண்டு வருவதை எப்படி ஏற்றுக் கொள்வது என்று அரசு எண்ணினால், பிறகு நீங்கள் சட்டம் கொண்டு வாருங்கள். அதற்குள், ஜனவரி 16, 1976 என்பதற்குப் பதிலாக, ஜனவரி 16, 1978 என்று வைத்து, பிறகு பரிசீலனை பண்ணுகிற நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

கூட்டுறவு சங்கங்கள் பலனற்றுப் போகின்றன என்றால், என்ன காரணம் ? லிஃப்ட் இரிகேஷன் சொஸைட்டிகள் என்று 2,400 சொசைட்டிகள் வந்தன. அவற்றில் 1,400 சொசைட்டிகளைக் கலைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ரிஜிஸ்திரார் கூட அதைப் பற்றி குறிப்பிடுகிறார். அவை எங்கெங்கு ஆரம்பிக்கப்பட்டன, எதற்காக ஆரம்பிக்கப்பட்டன என்பதெல்லாம் பல பேருக்குத் தெரியும். கூட்டுறவு சங்கங்களை ஜனநாயக முறையிலே செயல்பட முடியாமல் செய்ய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, அங்கெல்லாம் நியமனங்கள் நடந்தன. இதனால், கூட்டுறவு வங்கிகள் சரியான வகையில் கடன் கொடுக்க முடியவில்லை. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் நாம் எடுக்கவில்லை. இனி மேலாவது இந்தக் கூட்டுறவு சம்பந்தப்பட்ட மட்டில், தனியாரிடம் இருந்து வாங்குவதாக இருந்தாலும், பாங்கியிலிருந்து வாங்குவதாக இருந்தாலும் இந்தக் கூட்டுறவு சங்கங்களின் மூலமாகத்தான் வாங்க வேண்டுமென்று வைக்கவேண்டும்.

(நண்பகல் 12-00)

அந்தச் சங்கங்கள் ஜனநாயக முறையிலே செயல்படக்கூடிய முறையில் கூட்டுறவு அமைப்புகளில் மாற்றம் கொண்டு வரக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். செயல்படாத சங்கங்கள் பல இருக்கின்றன, ஏன் அவற்றை வைத்துக்கொண்டிருக்க வேண்டும்? அவை பூராவையும் கலைக்கவேண்டுமென்று ரிஜிஸ்திரார் அவர்கள்

அபிப்ராயம் சொன்னார்கள். இன்னும் இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றைக் கலைத்துவிட்டு நல்ல முறையில் செயல்படக்கூடிய சங்கங்களைக் கொண்டுவரவேண்டும்.

சர்க்கார், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து கடன் வாங்குவதற்கு உத்தரவாதம் கொடுக்கவேண்டும். பிற்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் கொடுப்பதற்காக சர்க்குலர் அனுப்பி, ஏகப்பட்ட மனுக்கள் ஆங்காங்கு ஊர்ஊராகச் சென்று வாங்கி, விசாரணை நடத்தி, கடன் பெறவேண்டுமென்ற நினைப்பில் 10, 20 ரூபாய் செலவழித்து கிராம அதிகாரிகளைக் கூட்டிப்போய் கேட்டால் என்ன சொன்னார்கள்? மாநில சர்க்கார் உத்திரவாதம் கொடுத்தால்தான் கொடுப்போம் என்றார்கள். அவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லையென்றால் அதற்காக மாநில சர்க்கார் உத்திரவாதம் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள், ஆனால் மாநில சர்க்கார் உத்திரவாதம் கொடுக்கவில்லை, ஏகப்பட்ட மனுக்களை வாங்கிக் கொடுத்ததோடு சரி, அதற்கு மாநில அரசாங்கம் உத்தரவாதம் கொடுத்திருக்கலாம், கொடுக்கவில்லை.

தனியார்களிடமிருந்து கடன்வாங்கி மூழ்கிப்போன விவசாயிகள் தங்களுடைய வருமானத்தை யெல்லாம் வட்டிக்காகவே கொடுத்துக்கொண்டிருக்கின்ற நிலைமைதான் இருக்கிறது. மத்திய சர்க்கார் விவசாயக் கூலிக்கு 4 சதவிகிதம் வட்டியில் கடன் கொடுக்கிறது, சிறிய விவசாயிகளுக்கு 5 சதவிகிதம் வட்டியில் கடன் கொடுக்கிறது, பெரிய விவசாயிகளுக்கு 6 சதவிகிதம் வட்டியில் கடன் கொடுக்கிறது. அதேமாதிரி சிறிய விவசாயிகளுக்கு செய்ய மாநில சர்க்கார் முயற்சி செய்ய-வேண்டும்.

அதிகமாகக் கடன் பெறுகிறவர்களுக்கு, 30 ஆயிரம் வரையில் கடன்பெறுகிறவர்களுக்கு அந்தக் கடனில் பேர்பாதியைக் குறைக்க வேண்டும்.

குறைந்த கடன் வாங்கிய சிறிய சிறிய விவசாயிகள் வாங்கிய கடன்களை யெல்லாம் ரத்துசெய்யவேண்டும்.

மூன்றாவதாக, நியாயமான கடன் என்று பார்ப்பதற்கு அந்த ஏரியா கோர்ட்டிற்குப் போனவுடனே அந்த குறிப்பிட்ட வட்டாரத்திலே இருக்கிற ஆட்களைக்கொண்ட கமிட்டியை வைத்து அந்தக் கமிட்டி உண்மையான கடன் என்ன என்பதைப் பார்த்து கோர்ட்



டிற்குச் செல்லவேண்டும். அதற்குப் பிறகு அந்தக் கடனைப்பற்றிய முடிவை கோர்ட் தெரிவிக்கவேண்டுமென்ற முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். கடன் சுமையிலிருந்து விவசாயிகளை விடுதலையடையச் செய்யவேண்டும். அந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற உண்மையான எண்ணம் இருந்தால் நல்ல எண்ணம் இருந்தால் இந்த அரசாங்கம் இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

தமிழகத்திலே உள்ள விவசாயிகள் கடன் பளு தாங்காத காரணத்தினாலே விவசாயத்திலே தங்களுடைய முழுக்கவனத்தையும் செலுத்த முடியாத அளவில் விவசாயம் சீரழிந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்றையதினம் கொண்டுவரப்பட்டிருக்கின்ற மசோதா நிறைவேறினால் பல்வேறு கஷ்டங்கள் தீர்கின்ற நிலைமை ஏற்பட்டு விவசாயம் செழிப்பாக நடக்கும் என்ற நிலைமையில் நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

இந்த மசோதாவின் ஒரு முக்கிய அம்சம், முப்பதாயிரம் ரூபாய் கடன் பெற்றிருந்தால் அதைப் பாதியாகக் குறைக்க வேண்டும், மீதியுள்ள கடனைத் தவணை முறைகளில் செலுத்த வேண்டும், கூட்டுறவுச் சங்கக் கடன்கள் தவணை முறைகளை, 5 ஆண்டுகளை 10 ஆண்டுகளாகவும், 10 ஆண்டுகளை 20 ஆண்டுகளாகவும் ஆக்கித் தருகின்ற வகையிலேயும், சிறிய விவசாயத் தொழிலாளர்கள் கொடுக்க வேண்டிய கடன்களை ரத்துச் செய்கின்ற முறையிலேயும் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இதை வரவேற்கின்ற வகையில் உறுப்பினர்கள் ஆதரவு தந்து சட்டமாக்கினால் தமிழகத்திலே இருக்கின்ற பல லட்சக்கணக்கான விவசாயிகள் நல்ல ஆதரவைப் பெறுவார்கள், அவர்களுடைய கடன் பளு தீர்க்கப்படும் என்ற நிலையில் நான் இதை ஆதரிக்கிறேன்.

இந்த மசோதா சபையின் முன்னல் எடுத்துக் கொள்ளப்பட கொடுக்கப்பட்டபோது பேசப்பட்ட நிலைமை இன்றைக்கு மாறி யிருக்கிறது. இன்றைக்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு பல்வேறு அவசரச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டு 20 அம்சத் திட்டத்தை இந்தியப் பிரதமர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதிலே முக்கியமான அம்சம், விவசாயிகள் பெற்றிருக்கிற கடன் களைத் தள்ளிவிடவேண்டும், பல்வேறு கடன்களை ரத்துசெய்ய வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள்.

கடந்த மூன்று நாட்களாக இங்கே விவாதம் நடந்த நேரத்திலே பல்வேறு நிலைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து பேசப்பட்ட பேச்சுக்களையும் அந்தப் பேச்சுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீண்டநேரம் பேசிய பேச்சையும் பார்க்கும் போது இந்த இருபது அம்சத் திட்டத்தில் இந்த அம்சம் மட்டு மல்ல, மற்ற அம்சங்களிலும் என்ன என்ன செய்திருக்கிறோம் என்று பட்டியல் போட்டுக் காட்டுவதுபோல் இருந்தது.

20 அம்சங்களையும் இந்த அமைச்சரவை மட்டுமல்ல, இதற்கு முன்னாலே இருந்த அமைச்சரவையும் செய்துதான் இருக்கும், அவசரநிலை ரத்து செய்யப்பட்ட பிறகும்கூட இனி வருகிற எந்த ஒரு அமைச்சரவையும்கூட இவற்றை நடத்தித்தான் தீர வேண்டும். அப்படி நடத்தமுடியாத எந்த அரசும் பதவியில் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவசரநிலைப் பிரகடனத்திற்குப் பிறகு மத்திய சர்க்கார் மட்டு மல்ல மாநில சர்க்கார்களுக்கும் சில சிறப்பான அதிகாரங்கள் வந்திருக்கின்றன, அவற்றைப் பயன்படுத்தி வேகமாக விறுவிறுப் பாக இருபது அம்சத் திட்டமல்ல, இங்கே சொல்லப்பட்டிருக்கிற இந்த அம்சமும் எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பது கேள்வியாக இருக்கிறது. அந்த வகையிலே இந்த அரசாங்கம் தவறு செய்திருக்கிறது. இந்தத் தவறை நீக்குகிற மிக முக்கியமான மசோதாவாக திரு. பழனிசாமி அவர்கள் கொண்டு வந்துள்ளார்கள்.

கடன்கள் ரத்து செய்யப்படவேண்டும். வேறு பல மாநிலங் களிலே—கருநாடகம் போன்ற மாநிலங்களிலே—விவசாயிகள் கடன்கள் முழுவதையும் ரத்து செய்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட ப்ராக்டிகலான நேரத்தில் இந்த அரசாங்கம் கொண்டுவர





வேண்டியதை திரு. பழனிசாமி அவர்கள் கொண்டு வந்திருக் கிறார்கள். அந்த வகையில் விவசாயிகளுக்கு நன்மைகள் கிடைக்கக் கூடிய ஒன்றாக இருப்பதால் நான் இதை ஆதரித்து அமர்கிறேன், வணக்கம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, திரு. என். கே. பழனிசாமி அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பெரும்பாலும் நம்முடைய நாடு விவசாயத்தை நம்பியுள்ள நாடு. இந்தத் தொழிலிலே ஈடுபடக்கூடிய 80 சதவீதம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற பல இடையூறுகளையும் கஷ்டங்களையும் நீக்க முடியாத அளவிற்கு அவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக் கிறார்கள். இந்த மன்றத்திலே பல்வேறு உறுப்பினர்கள் பல காரணங்களை எடுத்துச்சொல்லி இந்தக் கடன்களை ரத்துசெய்ய வேண்டுமென்ற முறையிலே, அல்லது தள்ளிவைக்கவேண்டுமென்ற முறையிலே கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

இந்த மசோதாவில் சொல்லப்பட்டு இருப்பது கடன்களை 10 ஆண்டுகளுக்குப் பிறகு வசூல் செய்வது என்றும் எப்படி வசூல் செய்வது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

விவசாயிகள் எப்படி கடன்படுகிறார்கள் என்ற நிலைமையை எண்ணிப் பார்க்கவேண்டும். ஒரு வகையில் கிணறுகள் வெட்டு வதற்காகவும் பம்புசெட்டுகள் வாங்குவதற்காகவும் கடன்கள் பெற்றிருக்கிறார்கள். இன்னொரு வகையில் பயிருக்காகக் கடன் வாங்குகிறார்கள். இன்னொன்று குடும்பச் செலவுகளுக்காக வாங்கி யிருக்கிறார்கள்.

கிணறுகள் வெட்டுவதற்காகவும் பம்புசெட்டுகள் வாங்குவதற் காகவும் வாங்கப்பட்ட கடன்களை அவர்களால் கட்ட முடியாமல் 10 ஆண்டுகளுக்குத் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது என்பது அரசாங் கத்திற்குத் தெரியும். கிட்டத்தட்ட இந்த அரசு பதவியேற்ற காலத்திற்கும் முன்பு இருந்தே இந்தக் கடன்கள் தள்ளிவைக்கப் பட்டு வந்திருக்கின்றன. விவசாயிகள் கிணறுகள் வெட்டுவதற்கும் பம்புசெட்டுகள் வைப்பதற்கும்—கோவை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் ஒரு கிணறுக்கு 50 ஆயிரம் ரூபாயும் ஒரு பம்பு செட்டுக்கு [illegible] ஆயிரம் ரூபாயும் கிட்டத்தட்ட 55 ஆயிரம் ரூபாய்

கடன்பெற்று கிணறுகள் வெட்டுகிறார்கள். வறட்சியின் காரணமாகப் பயிர் விளையாத நிலைமையில் இந்தக் கடன்கள் அப்படியே நின்று கொண்டிருக்கின்றன.

நியாயமாகப் பார்த்தால் பெரிய திட்டங்களை 34 கோடி ரூபாய் 34 கோடி ரூபாய் என்ற அளவில் பெரிய பாசனத் திட்டங்களைப் போட்டு பாசனவசதி செய்துகொடுக்கிறோம், அதற்காக தண்ணீர் வரி வசூல் செய்கிறோம். அரசாங்கமே கிணறு வெட்டி பம்புசெட்டு வைத்துக் கொடுப்பதற்குப் பதில் சொந்தமாகக் கடன் வாங்க முடியாத நிலைமையைப் பார்த்து இந்தக் கடன்களை ஏன் தள்ளுபடி செய்யக்கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

64 கோடி, 70 கோடி, 80 கோடி ரூபாய் என்று போட்டு 'டாம்' கட்டி அந்த விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்து வரி வசூல் செய்கிறார்கள். அத்தகைய சலுகைகள் இருக்கும் பொழுது, தாங்களாகவே கடன் பெற்று கிணறு வெட்டி, பம்பு செட்டுகளை வைத்து நீர்ப்பாசன வசதி செய்து கொண்டதற்காக அரசாங்கம் அவர்களுக்கு என்ன ஒத்தாசை செய்திருக்கிறது? கடன் கொடுத்திருக்கிறோம். ஆனால் அதைத் திருப்பிக் கட்ட முடியாத நிலையில் வஜா செய்ய வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கை நியாமான கோரிக்கை. சர்க்கார் செய்து கொடுக்க வேண்டிய சௌகரியங்களை அந்த விவசாயிகளே செய்துகொண்டால் அந்தக் கடன்களைக் கட்ட வேண்டுமென்று கேட்பதில் எந்த விதத்தில் நியாயம் இருக்கிறது என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தியின் பெயரால் ஏராளமான பணத்தைச் செலவு செய்கிறோம். ஆனால், இந்தப் பணிகளை அரசாங்கம் செய்து கொடுக்க முன்வராவிட்டாலும்கூட அவர்களே செய்யும்பொழுது, விளைச்சல் இருந்திருந்தால் நிச்சயமாக அவர்களே திருப்பிக் கட்டியிருப்பார்கள். விளைச்சல் இல்லை என்ற நிலைமையில் அவர்களால் கட்ட முடியாத நிலையில் 10, 12 ஆண்டுகள் தள்ளி வைத்திருக்கிறோம். அந்தக் கடன்களை, கிணறு வெட்ட, பம்பு செட்டுகளை வைக்கக் கொடுத்த கடன்களை ரத்து செய்ய வேண்டும்.

ஐந்து ஏக்கர் வரையிலுள்ள சிறு விவசாயிகள் அவர்கள் வாங்கிய கடன்களுக்கான வட்டியைக்கூட இந்தக் காலத்தில் கட்ட முடியாது. ஒன்று, சர்க்காரிடத்திலே அந்தப் பூமியை—ஒப்



கொடுத்து விட்டார்கள், தெற்கே கொடுக்கவில்லை என்ற எண்ணம் வரக்கூடாது. மக்கள் தொகை அடிப்படையில்தான் மூன்றாவது நகராக வருகின்ற நமக்கு அடுத்து அளிக்க கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது, இன் பிரின்சிபில் மோர் ஆர் லெஸ் அக்ரீட்.

திரு. மா. வே. நாராயணசாமி: தலைவரவர்களே, திருவொற்றியூரிலிருந்து திருவான்மியூர் வரையில் சுரங்க ரயில் பாதை அமைப்பதற்கு ஆய்வுகள் சில நாட்களுக்கு முன்னாலே நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் இன்றைக்கு சுரங்கப் பாதை அமைப்பதிலே நிரம்பச் செலவாகும் என்ற காரணத்தினால் பக்கிங்காம் கால்வாய் கரை ஓரத்தில் இரயில் பாதை அமைக்கலாம் என்று இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது பற்றி அரசு என்ன கருத்து கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மாற்று யோசனையாக "ஆல்டெர்னேடிவ்" சஜஷன் ஆக இதை வைத்தோம். இந்த இரண்டும் அவர்களுடைய பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் எவ்வளவு செலவாகும், எவ்வளவு காலத்தில் நிறைவேற்ற முடியும், நிறைவேற்றுகிற நேரத்தில் என்ன இடையூறுகள் ஏற்படும் என்று இவைகளெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. அவர்கள் இவைகளைப் பரிசீலனை செய்து, நமக்கு அனுகூலமாகப் பரிசீலித்து, முடிவு எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சென்னை மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக அண்ணா சாலையில் சுரங்கப்பாதை அமைக்க ஒரு திட்டம் பரிசீலனையில் இருப்பதாக நம்முடைய அரசு அறிவித்தது. அது எந்த அளவிற்குச் செயல் முறையில் இருக்கிறது, செயல் திட்டம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அண்ணா சாலையின் இரு மருங்கிலும் சுரங்கப் பாதை கட்டப்படலாம் என்பது கருத்தளவில் இடம் பெற்றது. செயல் முறையில், திட்ட அளவில் இடம் பெற்ற கருத்தல்ல. அதற்கு என்று ஏராளமான நிதி

சர்க்கார் முயற்சி செய்ததா ? உபரியாக இருக்கக்கூடிய 'ப்ரோக்கன் ரைஸை' இறக்குமதி செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆந்திர விவசாயிகள் தமிழ் நாட்டிலுள்ள பஞ்சத்தைப் பார்த்து, மனமிரங்கி, நெல், அரிசி, வைக்கோல் ஆகியவைகளைத் தருவதாகச் சொன்னார்கள். அதை மத்திய அரசு மறுத்துவிட்டது. ஆந்திர அரிசியை மற்ற மாநிலங்களுக்கு அனுப்ப அவர்கள் தயாராக இருந்தாலும் மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு என்று நிர்ணயித்து, அவர்களுடைய ஃபுட் கார்ப்பரேஷன் மூலம் தருகிறார்கள். அதிலே ஓரளவு நமக்குக் கிடைத்திருக்கிறது.

நாட்டறம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம்

* 156 **வினா—திரு. ஜி. ராமசாமி :**
**திரு. டி. சி. திம்மராய கவுண்டர் :** } மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டறம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம் தொடங்கும் யோசனை அரசுக்கு உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*Spare parts for buses*

* 157. Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to set up a Centralised Organisation to purchase spare parts and maintain inventory control for all the State Transport Corporations; and

**(b) if so, the details thereof?**

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.





**திரு. என். கே. பழனிசாமி :** சார், ஸ்பேர் பார்ட்ஸினால்தான் பஸ்களுக்கு அதிக நஷ்டம் ஏற்படுகிறது. காரணம் பல சமயங்களில் ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை; அதனால் பஸ்கள் ஓடவில்லை. அதுமட்டுமல்லாமல் திருட்டும் நடக்கிறது. இன்னும் ஏராளமான பஸ்களை நாம் எடுத்துக்கொள்ளப் போகிறோம். ஆகையால், இங்கேயே ஸ்பேர் பார்ட்ஸ் செய்ய திட்டம் வகுத்து, அதன் அடிப்படையில் செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல. இப்போது பல்லவன் போக்குவரத்து, சோழன் போக்குவரத்து போன்ற பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. அதை எல்லாம் சென்ட்ரலைஸ் செய்து, என்னென்ன சாமான்கள் எப்போது சப்ளை செய்ய வேண்டும் என்பதை அறிந்து உடனடியாக சப்ளை செய்யவும், திருட்டைத் தடுக்கவும் சர்க்கார் திட்டம் வைத்திருக்கிறதா ? அப்படியானால் அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வல்லுநர் குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் மூலம்தான் வாங்குகிறார்கள். ஸ்பேர் பார்ட்ஸ் நாமே உற்பத்திச் செய்யலாம் என்ற ஆலோசனை இருந்தது. எல்லாப் பொருட்களையும் உற்பத்தி செய்வது கடினம் என்று கருதி கைவிடப்பட்டிருக்கிறது. இப்போது ஸ்பேர் பார்ட்ஸ் சப்ளை செய்வதில் எந்த விதமான தொல்லையும் இல்லாமல் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு தி. பொன்னுமலை :** தலைவரவர்களே, இந்த ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வல்லுநர் குழு இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனாலும் நல்ல சாமான்களைக் கூட 'கண்டம்' செய்துவிட்டு, புதிய சாமான்களைப் பொருத்தி விடுகிறார்கள். பிறகு 'கண்டம்' ஆன சாமான்களை நல்ல விலைக்கு விற்று விடுகிறார்கள். அதைப் பரிசீலனை செய்து, நல்லமுறையில் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அதைக் கூட இப்போது ஒவ்வொரு இடத்திலும் போய் சோதனை செய்து பார்த்து, 'கண்டம்' ஆன பொருட்கள் என்னென்ன என்பதைப் பார்த்து, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அதிலும் அதிகமான தவறுகள் எதுவும் இல்லை.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவரவர்களே, அரசுத் துறையிலே இயங்குகின்ற போக்குவரத்துகளுக்கு ஆண்டுதோறும் எவ்வளவு உதிரி உறுப்புகளை வாங்குகிறோம்? அதிலே அன்றாடம் தேவைப்படுகிற உதிரி உறுப்புகள் எவ்வளவு? இன்றியமையாத உதிரி உறுப்புகளை நாமே அரசுத் துறையில் செய்வதற்கு முன்வந்தால் இன்றைக்கு பல கோடி ரூபாய் அரசுக்கு மிச்சமாகும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி கேட்கும் போது விளக்கம் கொடுக்க வேண்டியதில்லை. திரு. என். கே. பழனிசாமி அவர்கள் ஆரம்பித்தார்கள்; இப்போது எல்லோரும் ஆரம்பித்து விட்டார்கள். கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. சி. ஆறுமுகம்:** விளக்கம் கொடுத்தால்தான் பதில் சொல்ல வசதியாக இருக்கும். அதை கருத்திலே கொண்டு நம் அரசுத் துறையிலே உதிரி உறுப்புகளை உற்பத்தி செய்ய முன் வந்தால், வட மாநிலங்களிலிருந்து வருகிற மட்டமான பொருட்களைக் கூட வாங்கவேண்டியதில்லை. சில சமயங்களில் அவர்கள் மட்டமான பொருட்களைக் கூட அனுப்பி வைக்கிறார்கள். ஆகவே, முக்கியமான பொருட்களையாவது இங்கே உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வல்லுநர் குழு இருக்கிறது என்று ஏற்கெனவே சொன்னேன். எல்லா ஸ்பேர் பார்ட்ஸும் 'ஜெனுயின்'தானா என்று பார்த்துதான் வாங்குகிறோம். வட மாநிலங்களிலிருந்து வருகின்ற மட்டமான பொருட்களை அரசுத் துறையில் வாங்குவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள்தான் அந்த பொருட்களை வாங்குவது வழக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, இப்போது இந்த வல்லுநர் குழு ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குகிறது என்று சொன்னார்கள். அவர்கள் எந்த அடிப்படையிலே வாங்குகிறார்கள்? டெண்டர் போன்ற அமைப்புகளின் மூலம் வாங்குகிறார்களா அல்லது ஒரு குறிப்பிட்ட கம்பெனியிடம் ஒப்பந்தம் செய்து வாங்குகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஜெனுயின் பார்ட்ஸ்தான் வாங்கப்படுகிறது; இப்போது டி.வி.எஸ். லூக்காஸ் கம்பெனியிலிருந்து வாங்குகிறார்கள். அதற்கு மார்க்கெட் இருக்கிறது; அங்கிருந்து வாங்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசில் ஒரு குழு இருக்கிறது. எந்தெந்த பொருள்கள் தரமானவை என்று அந்த குழு, அங்கீகரித்திருக்கிறது; விலையையும் நிர்ணயித்து இருக்கிறது. அதைப் பார்த்து நியாயமான முறையில் வாங்குகிறார்கள்.

**திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, வாங்குகிற உதிரிப் பொருட்களில் எத்தனை சதவிகிதம் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றனவை? தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்ற பொருட்களுக்கு முதலிடம் தரவேண்டுமென்று நிபுணர் குழு ஏற்றுக் கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தமிழ்நாட்டில் தயாராகின்ற எல்லா மோட்டார் வாகனப் பொருட்களையும் தமிழ்நாட்டில்தான் வாங்குகிறார்கள்.

## மோட்டார் வாகனங்களில் ஒலியெழுப்பு கருவிகள்

*** 158 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பகுதிகளில் இரவு நேரங்களில் பேருந்துகள், லாரிகளில் "மியூசிக்கல் ஹார்ன்" ஒலிப்பதைத் தடை செய்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[1975 அக்டோபர் 31

மாண்புமிகு திரு. க. இராசாராம்: 1940 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதி 310-ன் கீழ், மோட்டார் வாகனங்களில் 'மியூசிக்கல் ஹார்ன்' ஒலிப்பது ஏற்கனவே தடை செய்யப்பட்டிருக்கின்றது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த 'மியூசிக்கல் ஹார்ன்' என்றிருப்பது இராட்சச ஒலியாக இருக்கிறது; பயங்கரமாக இருக்கிறது; கேட்பதற்கு அருவருப்பாக இருக்கிறது. இன்னும் பலர் இந்த ஹார்னை வைத்துதான் ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது அமைச்சரவர்களுக்கும் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். எனவே, ஒரு நல்ல நடவடிக்கை எடுத்து, மியூசிக்கல் ஹார்னை ஒழிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அதற்கான சட்டங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. 310, 311 என்று இரண்டு விதிகள் உருவாக்கப்பட்டு, நாட்டிலே பத்திரிகைகள் வாயிலாகவும் போலீஸ் நடவடிக்கைகள் மூலமும் இப்படிப்பட்ட மியூசிக்கல் ஹார்ன் போன்றவை காதுக்கு அருவருப்பு ஊட்டுபவையாக இருப்பதால் தடைசெய்யப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சிலர் வைத்திருக்கலாம். வைத்திருப்பது அரசுக்குத் தெரிய வருமானால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, இப்போது வருகின்ற லாரிகளிலும் பஸ்களிலும் "ஏர் ஹார்ன்" என்று இருக்கிறது. அது மியூசிக்கல் ஹார்னைவிட பயங்கரமாக இருக்கிறது. அரசாங்க பஸ்களில்கூட அதை வைத்திருக்கிறோம். மக்களுக்கு அச்சத்தைக் கொடுக்கக்கூடிய இப்படிப்பட்ட ஹார்னை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டு போக்குவரத்துத் துறையை அறிந்தவர்களுக்குத் தெரியும், சில இடங்களில் மிகுதியான சப்தம் கேட்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பது. ஏர் ஹார்ன் என்பது வண்டியோடு இயற்கையாகவே பொருத்தப்பட்டிருக்கிறது. தனியாகப் பணம் செலவு செய்து வாங்குகிற ஹார்ன் அல்ல. அந்த ஹார்ன் அடித்தே



1975 அக்டோபர் 31] [திரு. எம். ஏ. லத்தீப்]

ஒரு உண்மை எல்லோரும் அறிந்த ஒன்றாகும். அதை மறுத்துப் பயன் இல்லை. அதைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதைத்தான் நாம் ஆராய வேண்டும். ஆனால் சமுதாய ரீதியில் சில மாற்றங்கள் ஏற்பட்டாலொழிய, விவசாயப் பெருங்குடி மக்களிடையே இருக்கின்ற சில சமூகப் பழக்க வழக்கங்களிலே மாற்றங்கள் ஏற்பட்டாலொழிய சமுதாயத்திலே இருக்கிற செல்வாக்குப் பெற்றவர்கள், பெருந்தனக்காரர்கள், பணக்காரர்கள் இவர்களுடைய போக்கிலே ஒரு மாறுதல் வருகிற வரையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விடிவு காலம் இல்லை என்பதை உணர வேண்டும்.

விவசாயிகளுக்கு ஒரு சமுதாய மாற்றத்தை எந்த வகையில் கொண்டு வரமுடியும்? சட்டத்தால் கொண்டு வர முடியுமா அல்லது சில கட்டாயங்களை நாமாகவே ஏற்படுத்திக் கொண்டு அந்த நெறிகளை எல்லாம், முறைகளை எல்லாம் கடைப்பிடித்துத்தான் ஆக வேண்டுமென்ற கட்டாய முறையின் வாயிலாக இவைகளைக் கொண்டு வர முடியுமா என்பதை ஆராய்ந்து, எது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை பயக்குமோ அந்த முறைகளை நிச்சயமாகக் கடைப்பிடிக்க நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

இன்றைக்கு விவசாயிகள் பல்வேறு வகையிலே பணத்தை மற்றவர்களிடம் இருந்து பெற்று கடனாளியாகி இருக்கிறார்கள். ஏன் அவர்கள் கடன் வாங்க வேண்டுமென்ற கேள்வி எழுமானால் கடன் வாங்காமல் விவசாயத் தொழிலை நடத்த முடியாத நிலைமை இருக்கிறது. சிறிய விவசாயிகளாக இருந்தாலும், பெரிய விவசாயியாக இருந்தாலும் கடன் வாங்காமல் விவசாயத்தை நடத்த முடியாது என்ற நிலைமை இன்றைக்கு நாட்டிலே இருக்கிறது. அதற்குக் காரணம், நம்முடைய விவசாயம் என்பது ஒரு தொழிலைப் போல், தொழிற்சாலையில் மூலதனத்தைப் போட்டு இவ்வளவு 'ஆப்டிமம் லெவல் ஆப் ப்ரொடக்ஷன்' செய்ய வேண்டுமென்ற முறையில் சில திட்டங்களை வகுத்து இவ்வளவு ப்ரொடக்ஷன் செய்ய வேண்டுமென்று தொழிற்சாலையில் செய்கிறார்களே அந்த அளவுக்கு என்னதான் திட்டங்கள் வகுத்தாலும் விவசாயத் துறையில் அந்தத் திட்டம் நிறைவேறுவது இல்லை என்பதை நாமெல்லாம் உணர்ந்திருக்கிறோம்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 அக்டோபர் 31

(பிற்பகல் 12-30)

இதற்குக் காரணம் நம்முடைய விவசாயத் தொழில் பருவ மழைக்குக் கட்டுப்பட்டிருக்கிறது என்பது முக்கிய காரணங்களில் ஒன்று.

விவசாயிகள் கடன் வாங்கி, கடன் வாங்கிய பணத்தைக் கொண்டு விதை வாங்கி, உரம் வாங்கி, அல்லது விவசாயத் தொழிலுக்கான கருவிகள் வாங்கி விவசாயத்திலிருந்து பலன் கிடைக்கிற வரையில் தன் குடும்பத்தை நடத்துவதற்கான அத்தியாவசியப் பொருள்களையும், வாங்கி, அவன் நம்பிக்கையோடு விவசாயத்தைச் செய்கிறான் மழை வருவதில்லை. மழை வந்தால்தான் விவசாயி தான் நினைத்த அளவிற்குப் பயனைப் பெற முடியும். மழை பெரிதாக வந்தாலும் அதனால் பாதகம் ஏற்படும் நிலைதான் ஏற்படுகிறது. ஆக, இது ஒரு காம்ப்ளிங், ஒரு சூதாட்டம் போல் இன்று நடைபெறுவதால் எதிர்பார்க்கிற பலனை இந்த வகையில் பெறமுடியும் என்று எந்த விவசாயியாலும் பெற முடிவதில்லை.

கடன் வாங்கி விவசாயம் செய்தால் அதிலிருந்து கிடைக்கிற பலனை வைத்துக் கொண்டு கடனைத் திருப்பிக் கொடுத்துவிடலாம் என்று விவசாயி நினைக்கிறான். ஆனால் பல நேரங்களில் மழை யின்மை காரணமாகவோ அல்லது அதிகமான மழை காரண மாகவோ அல்லது இயற்கையின் கோளாறுகள் காரணமாகவோ விவசாயி நஷ்டத்திற்குள்ளாகிறான். கடனைப் பெற்ற பணத்தைத் திரும்பக் கொடுக்கமுடியாமல் கஷ்டப்படுகிறான். மீண்டும் அதே தொழிலை செய்ய வேண்டிய நிலையில்தான் அவன் இருக்கிறான். அந்தத் தொழிலை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டி யிருப்பதால் விவசாயி மேலும் கடன் வாங்கி தொழிலை நடத்தக் கூடிய நிலையில்தான் இருக்கிறான். ஆகவேதான், நம் விவசாயிகள் எப்போதும் கடன் தொல்லையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இது ஒரு உண்மை.

இன்று பல்வேறு வகைகளில் விவசாயிகளுக்கு அரசாங்கம் கடன் கொடுக்கிறது. அண்ணா அவர்களின் அறிவுரைப்படி நாட்டில் பசுமைப் புரட்சி ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல்வேறு வகைகளிலும் விவசாயிகளை முன்னேற்றுவிப்பதற்காக, பசுமைப் புரட்சி நாட்டில்



1975 அக்டோபர் 31] [திரு. எம். ஏ. லத்தீப்]

மலா வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட் டுள்ளன. விவசாய பெருங்குடி மக்களுக்கு மாடு வாங்க, உரம் வாங்க, விவசாயக் கருவிகள் வாங்க இன்று மானியமாகக் கூட அரசு வழங்கிக்கொண்டிருக்கிறது. விவசாயிகளுக்கு இன்று அரசு கடன்கள் தருகிறது. கூட்டுறவுத் துறையிலிருந்தும், கூட்டுறவு பாங்குகளிலிருந்தும் அவர்கள் கடன் பெறுகிறார்கள். தனிப் பட்டவர்களிடம் இருந்தும் கூட அவர்கள் கடன் பெற்று விவசாயம் செய்கிறார்கள். அரசாங்கத்திலிருந்து கடனைப் பெறுகின்ற ஒரு முறை இன்றைக்கு பரவலாக்கப் படவேண்டும் என்பது என் வேண்டுகோள். விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற மானியத் திற்கு மேலாக அவர்களுக்குக் கடனைக் கொடுப்பதற்கு ஒரு பெருந் தொகையை நிதி ஒதுக்கீடு செய்து விவசாயிகளுக்குப் போதிய அளவிற்குக் கடன் கொடுக்கக்கூடிய ஒரு நிலை உருவாக்கப்படு மானால் பெருமளவு வட்டியைக் கொடுத்துத் தனியார்களிடமிருந்து கடன் வாங்கும் தொல்லையிலிருந்து அவர்கள் விடுபடுவார்கள். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

இன்று நாட்டில் யாருக்கு முதலிடம் கொடுக்கவேண்டும்? உண்மை தொழிற்சாலைகள் நாட்டில் அதிகமாக ஏற்படவேண்டும், தான். பல்வேறு துறைகளில் வளர்ச்சி ஏற்படவேண்டும், உண்மைதான். நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் வேண்டும், உண்மைதான். கல்வித் துறையில் முன்னேற்றம் காணவேண்டும், உண்மைதான். யாரும் மறுக்கவில்லை. ஆனால் அட்மோஸ்ட் ப்ரயாரிட்டி யாருக்குக் கொடுக்கப்படவேண்டுமென்றால்—இந்த நாட்டில் கல்வி வளர்ச்சி ஏற்படவேண்டுமென்றால், பொருளாதார அடிப்படையைப் பலப்படுத்தவேண்டுமென்றால் விவசாயப் பெருங் குடிமக்களின் வாழ்க்கையில் ஒரு பெருத்த மாறுதலைக் கண்டேயாக வேண்டும். பசுமைப் புரட்சியின் உண்மைப் பலன்களை அவர்கள் அனுபவிக்கும் வகையில் திட்டங்கள் தீட்டப்படவேண்டும். ஆகவே, விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்காக ஒரு பெருந்தொகையை ஒதுக்கினால் நலமாகயிருக்கும். அப்படிச் செய்தால் தனிப்பட்ட வர்களிடம் கடன் வாங்கக் கூடிய ஒரு நிலை விவசாயிகளுக்கு ஏற் படாது. கூட்டுறவுத் துறையில் இன்று கடன் கொடுக்கிறார்கள். அது வரவேற்கக்கூடியதுதான். ஆனால் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அதிலுள்ள செயல்முறைச் சிக்கல்களை அரசு கவனிக்க வேண்டும்.

கூட்டுறவுத்துறையில் கடன் வாங்கவேண்டுமென்றால் சில அத்தாட்சிகளைச் சிலரிடமிருந்து பெறவேண்டியிருக்கிறது. கிராம அதிகாரிகளிடம் விவசாயிகள் சில அத்தாட்சிகளைப் பெற்றுத்தான் வங்கிகளை அணுக முடியும் என்ற நிலையைப் பார்த்தால் எல்லா கிராம அதிகாரிகளையும் நான் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. இன்றைக்கிருக்கிற செயல்முறை அப்படி இருக்கிறது. கிராம அதிகாரிகளிடம் அத்தாட்சி பெறுவது என்பது அவ்வளவு சாதாரண விஷயம் அல்ல. பல்வேறு வகைகளில் அத்தாட்சிப் பத்திரங்கள் அவர்களால் வழங்கப்படுகின்றன. கிராம அதிகாரிகளிடம் சென்றுதான் அல்லது ஏனைய அதிகாரிகளிடம் சென்று சில அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுத்தான் கூட்டுறவுத்துறையிலுள்ள வங்கிகளில் கடன் கோர மனு கொடுக்கவேண்டும் என்றிருக்கிற முறையில் சில மாற்றங்களைச் செய்தால் நன்றாகயிருக்கும்.

கூட்டுறவுத் துறையில் கடன் வாங்க அவர்கள் கேட்கிற பல்வேறு கேள்விகளுக்கு விளக்கங்கள் அளிக்க வேண்டியிருக்கின்றன. ஒரு சாதாரண விவசாயி தாமாகவே வங்கிக்குச் சென்று கடன் பெறுகிற அளவிற்கு இன்று செயல்முறை இல்லை. நடுநிலையாளர் சிலரை வைத்துக்கொண்டுதான் செல்லவேண்டியிருக்கிறது. அப்படிச் செல்லும்போது அவர்களுக்கு முழுப் பணமும் வந்து சேருவதில்லை. இது ஒரு உண்மை. ஆயிரம் ரூபாய் கடன் வாங்குவதாக இருந்தால் குறைந்தபட்சம் ரூ. 300 ஆவது செலவு செய்யவேண்டிய நிலையில் விவசாயி இருக்கிறான். கடன் வாங்குவதற்கு முன்பே முந்நூறு ரூபாய் செலவு செய்துவிட்டு ஆயிரம் ரூபாய் பெற்று அவன் எப்படி விவசாயத்தைச் செய்யமுடியும் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

கோவாப்பரேட்டிவ் சூப்பர்வைஸர்ஸ் ஃபார் லோன் கலக்ஷன் என்றிருக்கிறார்கள். திரு. செல்வராஜ் அவர்கள் உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்தத் துறையிலே ஈடுபட்டிருப்பவர் என்ற காரணத்தால் அவர்களைக் கவனமாகக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த சூப்பர்வைஸர்ஸ் கடன் தொகையை வசூலிக்கப் போகிறார்கள். ஆனால் உண்மையில் என்ன நடக்கிறது என்றால், ஒரு தவணையில் இவ்வளவு பணம் கட்டவேண்டும் என்ற ஒரு முறை இருக்கிறது.





இந்த சூப்பர்வைஸர் போய் கடன் தவணைத் தொகையைக் கேட்கிறார்கள். விவசாயி டைம் வேண்டுமென்று கேட்கிறான், போதிய பணம் இல்லாததால். கட்டாயப்படுத்தி வாங்குவது எவ்வளவோ நல்லது. ரூ. 500 பாக்கி இருந்தால் ஒரு ஐம்பது ரூபாயை வாங்கிக் கொண்டு—நான் நடப்பதைச் சொல்கிறேன், குற்றஞ்சாட்டவேண்டுமென்று சொல்லவில்லை, தயவுசெய்து குற்றச்சாட்டாக நினைக்க வேண்டாம், நடப்பதைச் சொல்கிறேன்—போய் விடுகிறார். இதற்கு அரசு என்ன செய்யமுடியும்? கீழ்நிலையில் இருப்பவர்கள் அப்படிச் செய்கிறார்கள். கிராம மக்களோடு பழகியிருப்பவன் என்ற முறையில் சொல்கிறேன். அமைச்சர்களும் பழகியிருப்பார்கள். விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் இருக்கிறார்கள் ஐம்பது ரூபாயை வாங்கிக் கொண்டு ஏதாவது எழுதிவிட்டு வந்து விடுவார்கள். மீண்டும் ஒரு மாதத்திற்குப் பிறகு செல்கிறார்கள். மீண்டும் இதே நடக்கிறது. ஆனால் விவசாயி திரும்ப ஒன்றும் செலுத்தவில்லை என்றுதான் ரிக்கார்டில் இருக்கிறது. இறுதியில் அந்தப் பணம் அக்யூமுலேட்டட் லோனாகி விடுகிறது. ரூ. 500 ரூ 5,000 ஆக உயருகிறது. விவசாயி கடன் தொல்லையில் மூழ்கி நிலத்தை விட்டுப் போகிற சூழ்நிலை உருவாகிறது.

ஆகவே நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு சாதாரண விவசாயி தானாகவே வங்கிகளுக்குச் சென்று கடன் பெறும் நிலை உருவாக்கப்படவேண்டும். மண்டிக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் சென்று பணம் கடன் வாங்குகிறார்கள் விவசாயிகள். பயிர் பக்குவப்பட்ட நிலையில் இருக்கும். மூன்று வாரங்களில் அறுவடையாகும், நான் பணத்தைக் கொடுத்துவிடுகிறேன், எனக்கு கொஞ்சம் பணம் தேவை என்று மண்டிக்காரரிடம் பணம் வாங்குகிறார்கள். அவன் ஒரு பத்திரத்தில் எழுதிப் பணம் கொடுக்கிறான்.

மண்டிக்காரன் என்ன செய்கிறான் என்றால், தன்னிடம் எந்த விவசாயி பணம் கடன் வாங்குகிறாரோ, அவர் தன்னிடமே அறுவடை செய்கிற நெல்லை அல்லது வேறு தானியங்களை விற்க வேண்டும் என்று எழுதி வாங்கிக்கொள்கிறான்.

திரு. எம். செல்வராஜ்: பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இங்கே கூட்டுறவுத் துறையைப் பற்றிச் சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

[திரு. எம். செல்வராஜ்] [1975 அக்டோபர் 31

பொதுவாக எல்லா மாவட்டங்களிலும் மத்திய கூட்டுறவு வங்கியின் மூலமாக விவசாயிகளுக்கு கார்டுகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. நாங்களே வழங்கியிருக்கிறோம். ஒவ்வொரு சொசைடியும் தெளிவாக ஒவ்வொரு உறுப்பினருக்குச் சொத்து இவ்வளவு, இந்த அளவுக்குக் கடன் வாங்கலாம் என்பதைக் குறித்துக் கொடுத்து இருக்கிறோம். கூட்டுறவுத் துறையில் கடன் பெறுவதில் விவசாயிகளுக்குக் கஷ்டம் இருப்பதாகச் சொன்னார்கள். 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த கஷ்டங்கள் இப்போது படிப்படியாகக் குறைத்து, உடனுக்குடன் கொடுப்பது மாத்திரம் அல்லாமல், விவசாயிகளுக்கு நேரடியாகச் செக் மூலமும் பணம் பட்டுவாடா செய்து வருகிறோம்.

அது மட்டுமல்லாமல், சூப்பர்வைஸ் செய்து வருகிறோம். செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் நியமித்து இருக்கிறோம். ஆகவே, குறிப்பிட்ட இடத்தில் தவறு நடந்து இருந்தால் முறைப்படி உடனடியாக தற்காலிகமாக வேலை நீக்கம் செய்தல் போன்றவற்றைச் செய்து வருகிறோம்.

கூட்டுறவுத் துறைக்கென்றே தனிப் போலீஸ் கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் கிரிமினல் வழக்குகள் எல்லாம் எடுத்து வருகிறார்கள். இன்று தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத் துறையில் விவசாயிகள் மிகவும் சுலபமாகக் கடன் பெறுகிறார்கள். அதில் எந்தவிதமான கஷ்டமும் இல்லை என்று நான் விளக்கிக் கூற விரும்புகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்** : மாண்புமிகு உறுப்பினர் விளக்கத்திற்கு நன்றி. மேலே இருப்பவர்கள் அந்தத் துறை நன்கு நடக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் பணியாற்றுகிறார்கள். அந்தத் துறை எந்த அடிப்படைக் கருத்தில் தொடங்கப்பட்டதோ, அந்த வகையில் அந்தத் துறை ஆரம்பித்த திட்டங்களின் பயன் முழு அளவில் யாருக்குக் கிடைக்கவேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேரவேண்டுமென்று பாடுபடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு மிக்க திறமையோடு பணியாற்றி வருகிறது என்பதை அறிவேன். நான் சொல்வது குற்றச்சாட்டு அல்ல என்று முன்பே சொன்னேன். நடைமுறையில் சில சிக்கல்கள் இருக்கின்றன.



1975 அக்டோபர் 31] [திரு. எம். ஏ. லத்தீப்]

நடைமுறையில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. கிராமப்புறங்களில் இப்படி நடக்கின்றது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகச் சொன்னேனே அல்லாமல் வேறு அல்ல.

செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள், சூப்பர்வைசர்கள் இருக்கிறார்கள் என்பது உண்மைதான். கொலை செய்வது குற்றம் என்று சட்டம் இருக்கிறது. ஆனால் கொலை நாட்டில் நிகழாமலா இருக்கிறது. அதனால் போலீஸ்காரர்கள் செயல்படவில்லை என்று சொல்வது? போலீஸ்காரர்கள் திறமையாகத்தான் வேலை செய்கிறார்கள். அப்படி இருந்தும் சில நேரங்களில் கொலை நடந்துவிடுகிறது. சிலர் திருடி விடுகிறார்கள். நாட்டிலே குற்றங்கள் நடைபெறுகின்றன என்ற காரணத்திற்காகத்தான் சட்டங்கள் இயற்றப்பட்டு, அவைகளை அமல் படுத்த நிர்வாகத்தை அமைக்கிறோம். அந்த நிர்வாகம் சரியான முறையில் திறமையோடு செயலாற்றினால், சிறப்பான சீர்திருத்தக் கொள்கைகள், முனைப்புத் திட்டங்கள் எல்லாம் நல்ல வகையில் நிறைவேறும். ஆகவே, இன்று விவசாயிகள் அனுபவித்து வரும் இன்னல்களை அரசு நல்ல முறையில் கவனித்து, அதற்குத் தகுந்த வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிலைமைகளை மாற்ற முடியுமா? முடியாது. இன்று இருக்கும் சட்ட திட்டங்களால் அதை மாற்ற முடியாது. ஆகவே, அதற்கு ஏற்ற வகையில் ஏதாவது சட்டத் திருத்தம் செய்ய முடியுமா என்பதை அரசு கவனிக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இன்று இருக்கும் சட்ட திட்டத்தின் வரையறையை மீறி நாம் ஒன்றும் செய்ய முடியாது. அதை நாங்கள் உணர்கிறோம். ஆகவேதான் இன்று இருக்கும் சட்ட திட்டங்களை, அதனால் நிர்வாகத்தில் ஏற்படும் குறைகளை எல்லாம் நீக்கும் வகையில் நீங்கள் சில வழி முறைகளை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னேன்.

மண்டிகளைப் பற்றிச் சொல்ல வருகிறேன். ஆயிரம் ரூபாய் முன்பணம் கொடுத்து விட்டு, கட்டாயமாகப் பொருள்களை அவர்களிடத்தில் கொடுக்க வேண்டுமென்று விவசாயிகளை வற்புறுத்துகின்றனர். கொள்முதல் செய்யும் போது மார்க்கெட் விலை எவ்வளவு இருந்தாலும், அந்த விலையை அவர்கள் கொடுப்பது இல்லை.

குறைந்த விலைக்குத்தான் எடுத்துக்கொள்கிறார்கள். அப்படி அவர்கள் கொடுக்கவில்லையென்றால், அவர்களை மிரட்டி நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்கிறார்கள். அவர்களும் வாக்கு கொடுத்து விட்டோம், கட்டுப்படுகிறோம் என்று சொல்லி கொடுத்து விடுகிறார்கள். நஷ்டம் ஆனாலும் பரவாயில்லை, நாளைக்கு கோர்ட்டுக்கு யார் போய்க்கொண்டு இருப்பது என்று கொடுத்து விடுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில் பாதுகாப்பு கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டங்களை வகுத்தால் நன்றாக இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக பிரையாரிட்டி கொடுத்து இதைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று விவசாயப் பெருங்குடி மக்களிடத்தில் பலவிதமான சிக்கல்கள் ஏற்பட்டு இருக்கின்றன. விவசாயத் துறைக்கு நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், பருவ காலத்தில் மழை பெய்தால்தான் தண்ணீர் உண்டு. காவேரி ஓடுகிற தஞ்சை மாவட்டமாக இருந்தாலும் சரி, வடாற்காடு மாவட்டமாக இருந்தாலும் சரி, தென்னாற்காடு மாவட்டமாக இருந்தாலும் சரி, எந்த மாவட்டமாக இருந்தாலும், அங்கே போதிய அளவுக்கு மழை பெய்யாவிட்டால் பயிர்கள் நாசமாகிவிடுகின்றன.

நாம் அதிகமாக ஏரிகளையும், ஊருணிகளையும்தான் பயன் படுத்துகிறோம். வடாற்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், பல—ஊருணிகள்—ஏரிகளில் தண்ணீர் கிடையாது. நாம் டாம்களைக் கட்டுகிறோம். நிறைய நீர்ப்பாசனத் திட்டங்களை வகுத்து இருக்கிறோம். பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இருந்த பெரியவர்கள் பல ஏரிகளை ஏற்படுத்திச் சென்று இருக்கிறார்கள். அப்போது எல்லாம் பெரிய பெரிய இன்ஜினியர்கள் இல்லை. அப்படியிருந்தும் ஒரு ஏரி நிரம்பி வழிந்தால், அதில் இருந்து வழியும் நீர் இன்னொரு ஏரிக்குப் போகும், இப்படி ஒரு ஏரிக்கும் இன்னொரு ஏரிக்கும் தொடர்பு வைத்து கால்வாய் வெட்டி நீர்ப்பாசன அமைப்புகளைச் செய்து வைத்திருந்தனர்.

ஆனால், இன்று வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். அந்த ஏரிகள் எல்லாம் இன்று சரிவர பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. மழை பெய்து இருக்கிறது. ஆனால் எல்லா ஏரிகளிலும் தண்ணீர்



இல்லை—வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்து மட்டும் சொல்லிக் கொள்கிறேன்—பாலாற்றில் கடந்த 6 மாதகாலமாக தண்ணீர் போய்க்கொண்டு இருக்கிறது. நீண்ட நாட்களாக ஒரு திட்டம் இருக்கிறது, பாலாற்றின் படுகையிலிருந்து கால்வாய்களை வெட்டி ஏரிகளுக்குத் தண்ணீர் விடுகின்ற திட்டம். அத்திட்டத்தின் பெயர் "பாலாறு நீர்ப்பாசனத் திட்டம்" என்று இருக்கிறது. அந்த நீர்ப் பாசனத் திட்டத்தின்கீழ் தாமல் என்ற ஏரிக்குத் தண்ணீர் கொண்டுவருவது என்று திட்டம் இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார் மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் கொடுத்துள்ள சட்ட முன்வடிவு விவசாயக் கடன் பற்றித்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் நீர்ப்பாசனத்தைப் பற்றி பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இது எந்த விதத்தில் பொருத்தம் ?

திரு. எம். ஏ. லத்தீப் : புரிந்து கொள்பவர்களுக்குப் பொருத்தம் தெரியும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : எந்த விதத்தில் பொருந்தும் என்பதை திரு. லத்தீப் அவர்களே சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்த உறுப்பினர் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இன்று பேசலாம். மேலும், வெளியே மழை பெய்து கொண்டு இருக்கிறது. சீக்கிரம் அட்ஜர்ன் செய்தாலும் ஒருவரும் வெளியே போகப் போவது இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் சொல்ல வந்தது, விவசாயப் பெருங்குடி மக்கள் கடன் தொல்லையால் கஷ்டப்படுவதற்குக் காரணம், அவர்களுக்கு வேண்டிய நீர் ஆதாரங்கள் சரியாக பராமரிக்கப்படவில்லை, அவற்றை நாம் இழந்து இருக்கிறோம். நீர்ப்பாசனம் என்பது விவசாய விளைச்சலுக்கு மிகவும் ஆதாரமான ஒன்று. அதில் குறைவு ஏற்பட்டால் நிச்சயமாக விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அவர்கள் கடன் தொல்லையிலிருந்து மீள வேண்டுமானால் அவர்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுத்து நல்ல முறையில் விவசாயம் செய்ய வழி வகுத்தால்

தரவேண்டும் என்பதுதான். மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சப்ஜெக்ட்டுக்கு உட்பட்டுத்தான் பேசுகிறார்களா என்பது எனக்குத் தெரியும். நான் அந்த விஷயத்திற்குள் செல்ல விரும்பவில்லை.

What I want tosay in this connection is this. It is likely that we traverse fields which are not strictly relevant to the subject on hand It happens at times. That cannot be avoided altogether.

What I am trying to point out is that it is very important that Government should provide the wherewithal for agricultural development and for development of agriculturists of the State. The rural indebtedness is there. That problem is there. You cannot weed it out and you cannot eradicate that problem, whatever may be the law that you pass, whatever may be the concessions that you may extend. You cannot completely annihilate rural indebtedness; you cannot completely weed out rural indebtedness. That can be tackled only by proper agricultural development. That is what I want to impress upon all of you.

அதைத்தான் நான் சொன்னேன். நான் தயவுசெய்து இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன், எல்லா ஏரிகளும் காய்ந்து போய்க் கிடக்கின்றன. நான் தாமலைப் பற்றி மட்டும் சொல்ல வந்ததற்குக் காரணம், மாண்புமிகு அமைச்சர்கள் அந்த ஏரிப் பக்கமாக அடிக்கடி போகிறார்கள். ஆகவே, அவர்கள் அதனைப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதால் சொன்னேன். பாலாற்றில் இருந்து நீர் எடுத்து வருவதற்குப் பல திட்டங்கள் இருக்கின்றன. பாலாற்றில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஆனால் தாமல் ஏரியில் தண்ணீர் இல்லை. ஏனென்றால் சப்ளை சானல்கள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. கால்வாய்கள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாவட்டத்தில் இருக்கிற பெரும்பாலான ஏரிகள், சப்ளை சேனல்கள் ஆக்கிரமிப்பு ஏற்பட்ட காரணத்தினால் அதற்குச் செல்ல வேண்டிய நீர் முறையாகச் செல்லாத காரணத்தினால் பல நீர்த்தேக்கங்களில் நீர் இல்லாமல் வறட்சி ஏற்படுகிற சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன் அரசாங்கம் தயவு தாட்சண்யமின்றி, இதற்குள் சென்று, யார் இந்த ஏரி, கால்வாய், குளத்திற்குச்



செல்லக்கூடிய நீர் ஆதாரங்களைத் தடுத்திருந்தாலும், ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து அவர்களை அப்புறப்படுத்த வேண்டும். அப்போதுதான் விவசாயத்திற்கு நீர் கிடைக்க முடியும்.

விவசாயிகளுக்கு விவசாயத்திற்காகக் கடன் கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு அரசாங்கம் என்ன செய்ய முடியும்? எவ்வளவுதான் கடன் கொடுக்க முடியும்? தனிப்பட்டவர்களிடத்திலே விவசாயிகள் வாங்கிய கடன் சுமையும் இருக்கிறது. இவர்களின் கடன் சுமையைக் கணக்கிட்டு அந்தச் சுமையைப் போக்குவதற்குப் பெருமளவில் திட்டம் தீட்ட வேண்டும். விவசாயிகளின் வாழ்வில் ஒரு சில மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

விவசாயிகள் விவசாயக் காரியங்களுக்காகக் கடன் வாங்கினால் அதை அந்தக் காரியத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஆனால் நம்முடைய நாட்டு சமுதாயப் பழக்க வழக்கங்கள், சில நடைமுறைகள், எந்தக் காரியத்திற்காகக் கடன் வாங்குகிறோமோ அந்தக் காரியத்திற்காகச் செலவழிக்காமல் மற்ற காரியங்களுக்குச் செலவு செய்து விடுகிறோம். கல்யாணத்திற்குச் செலவு செய்கிறோம், பிணம் விழுந்து விட்டால் அதற்குச் செலவு செய்கிறோம். நம்முடைய வீட்டிலே பெண் புஷ்பவதியாகி விட்டால் அதற்குப் பணம் செலவு செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இஸ்லாமிய சமுதாயத்தில் செலவாகிற அளவிற்கு இந்து சமுதாயத்தில் செலவு ஆவதில்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: அது வேறு விஷயம். அன்றைக்கு இஸ்லாமிய சமூகத்தினர் பணக்காரர்களாக இருந்த நேரத்தில் அப்படி நடந்திருக்கலாம். இன்றைக்கு நிலைமை அப்படியில்லை. இன்றைக்கு இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பிச்சை எடுப்பதில்லை, அவ்வளவுதான். நான் சொல்வது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைப் பற்றி அல்ல. இந்து சமுதாயத்தைப் பற்றியோ, முஸ்லிம் சமுதாயத்தைப் பற்றியோ, கிருஸ்தவ சமுதாயத்தைப் பற்றியோ அல்ல. பொதுவாக சமுதாயத்தைப் பற்றிச் சொல்கிறேன். விவசாய சமுதாயத்தைப் பற்றிச் சொல்கிறேன், மனித சமுதாயத்தைப் பற்றிச் சொல்கிறேன். நான் பசிக்கொடுமையைப் பற்றிப் பேசுகிறேன். பசி வந்துவிட்டால் பத்தும் பறந்து போகும்.

பசி வந்து விட்டவனுக்கு என்ன வேண்டியிருக்கிறது? அவனுக்குப் பசி போக வேண்டும். வயிற்றுக்குச் சோறு வேண்டும். மற்ற பிரச்னைகளைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை. வசதி படைத்தவர்கள் நன்றாகச் சாப்பிட்டுவிட்டு உறங்குவார்கள்; சும்மா இருப்பவர்கள்தான் பிரச்னைகளை நாட்டிலே உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். பசித்தவன் வயிற்றுக்கு உணவு தேடி அலைந்து கொண்டிருக்கிறான். நான் பணக்காரர்களைப் பற்றிப் பேச வில்லை. ஏழைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன்.

விவசாயிகள் பெறுகின்ற பணத்தை விவசாயத்திற்காக, அந்தக் காரியத்திற்காக மட்டும் செலவு செய்யாமல் வேறு காரியங்களுக்குச் செலவு செய்து கொண்டு இருக்கிறார்கள். கிணறு வெட்டக் கடன் வாங்கினால் கிணறு தான் வெட்ட வேண்டும். விதை வாங்குவதற்காகக் கடன் வாங்கினால் விதை தான் வாங்க வேண்டும். உரம் வாங்குவதற்கு கடன் வாங்கினால் உரம்தான் வாங்க வேண்டும். மற்றும் விவசாயக் கருவிகள் வாங்குவதற்காகக் கடன் வாங்கினால் விவசாயக் கருவிகள் தான் வாங்க வேண்டுமே தவிர, வேறு காரியங்களுக்கு அதைப் பயன்படுத்தக்கூடாது.

The purpose for which the loan is granted must be accomplished and there should be some machinery to ensure the accomplishment of the purpose.

இதுதான் என்னுடைய வேண்டுகோள் என்பதை இந்த நேரத்திலே நான் வலியுறுத்துகிறேன்.

இந்தச் சூழ்நிலையில் சில முறைகளை வகுத்து விவசாயிகளின் தொல்லைகளை நீக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். அதை நல்ல நோக்கமாக நான் கருதுகிறேன்.

இது சட்டமாக நிறைவேறுமா, நிறைவேறாதா என்பதல்ல பிரச்னை. இது சட்டமாக நிறைவேற்றப்படும் என்ற எண்ணத்திலே இதை அவர் கொண்டுவரவில்லை. அந்த எண்ணத்திலே அவர் கொண்டுவந்திருக்க மாட்டார்கள். எனக்குத் தெரியும். இருந்தாலும், சில பிரச்னைகளைப் பற்றி இந்த மன்றத்திலே வைக்கலாம், அதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்ற நல்ல நோக்கத்தோடு தான் இதனைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிக் கொண்டு வருகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்



அவர்கள் பல நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இவைகளைச் சட்டமாக அரசு கொண்டுவந்து விவசாயிகளுக்கு உள்ள தொல்லைகளை நீக்க பாடுபட வேண்டும் என்று கூறி இந்த சட்ட முன்வடிவை நான் ஆதரிக்கிறேன்.

அரசாங்கத்திற்கு ஒன்று நான் சொல்லிக்கொள்கிறேன். எந்த ஒரு முன்னேற்றமும் விவசாயத் துறையில் ஏற்படாவிட்டால், முழுமையாக ஏற்பட முடியாது. விவசாயத் துறையில் முன்னேற்றம் ஏற்படாமல் இந்த நாடு முன்னேற முடியாது. எந்த ஒரு முன்னேற்றமும் விவசாயிகளுடைய வாழ்வில் ஏற்படுகிற முன்னேற்றத்தைப் பொறுத்தே இருக்கிறது. விவசாயிகளுடைய வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென்றால் அவர்களுடைய கடன் சுமை குறைக்கப்பட்டு, அவர்களுக்கு உள்ள கஷ்ட நஷ்டங்கள் போக்கப்பட வேண்டும்.

கடன் இல்லாமல் வாழ்கிறோம் என்ற மன நிம்மதியோடு விவசாயிகள் வாழ்வதற்கு வழி செய்ய வேண்டியது இந்த அரசின் கடமை என்பதை எடுத்துச் சொல்லி; ஏரி, குளங்களில், கால்வாய்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்ற வேண்டும் என்று நான் சொன்னதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் அனுதாபத்தோடு கவனித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த முறையை அகற்றுவதற்கு மாநிலம் முழுவதிற்கும்

A high level committee must be constituted to make a proper survey of all the tanks in the state

ஏரி, குளங்களை சர்வே செய்ய வேண்டும் என்று கேட்கிறேன். எங்கள் பகுதிக்கு மட்டும் கேட்கவில்லை. மாநிலம் முழுவதிற்கும் சேர்த்தே கேட்கிறேன். எங்கெங்கு ஆக்கிரமிப்பு இருக்கிறதோ அந்த இடங்களில் எல்லாம் தயவு தாட்சண்யம் இன்றி அவைகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதை அனுப்பி வைத்து, ஒரு காலவரையறையும் நிர்ணயிக்க வேண்டும்.

There should be a time-limit. Within that time all the encroachments should be removed.

இந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் இவைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்று ஒரு உத்திரவைப் போட வேண்டும். விவசாயிகளுக்கு உள்ள தொல்லையைத் தீர்ப்பதற்கு இது ஒரு நல்ல முயற்சி;

சட்ட மன்றத்திற்கு இது முனைப்பான முயற்சி என்ற வகையில், இது ஒரு நல்ல சட்டம் என்ற நோக்கத்தோடு அந்த அடிப்படையில் அரசாங்கம் சில முறைகளைச் சிந்திக்க வேண்டும். அதனை நிறைவேற்ற இந்தச் சட்டம் ஒரு தூண்டுகோலாக இருக்கும் என்ற வகையில் நான் இதனை ஆதரிக்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன்.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். கே. பழனிசாமி அவர்கள் இந்த மாமன்றத்தில் கொண்டு வந்துள்ள மசோதாவை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கிராமப்புறங்களில் இருக்கின்ற, கடன்பட்டு, துன்பப்பட்டுக் கொண்டிருக்கிற மக்களுடைய கடன் சுமையைக் குறைப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று இந்த மசோதா விரும்புகிறது.

கிராமப்புறத்து மக்களுடைய கடன் பளு இந்த நாட்டிலே மிக அதிகமாக வளர்ந்து இருப்பதை நாம் அறிவோம். அண்மையில் குறிப்பாக பிரதம மந்திரியவர்கள் கிராமப்புறத்து மக்களுடைய வாழ்வைத் திருத்தி அமைப்பதற்காக, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக 20 அம்ச பொருளாதாரத் திட்டத்தினை அறிவித்தார்கள். இன்றைக்கு கிராமப்புறத்து கடன் சுமை எவ்வளவு இருக்கும் என்ற ஒரு கணக்கினை எடுத்ததில் ரூ. 4,000 கோடி வரையில் இருக்கும் என்று சொல்கிறார்கள். இன்னும் சில பேர் ரூ. 10,000 கோடி வரையில் இருக்கும் என்று சொல்கிறார்கள். இந்தக் கணக்கிலே இத்தகைய ஏற்றத் தாழ்வு வருவதிலே வியப்பில்லை. காரணம், கிராமப்புறத்து கடன்களில் பெரும்பாலும் "ஐஸ்பர்க்" பனிப்பாறை போன்று நீருக்கு மேலே சிறுபகுதி தான் தெரியும், நீருக்கு அடியிலே அதன் பெரும்பகுதி அமிழ்ந்து கிடக்கும். ஐஸ்பர்க் இருப்பதைப் போல கிராமப்புறத்து மக்களுடைய கடன்களில் பல வெளியே தெரியாது. ரூ. 1,500 கடன் வாங்கியிருந்தால், பத்திரம் எழுதப்பட்டிருந்தால், ரூ. 1,000 தான் கையில் கொடுக்கப்பட்டிருக்கும்.

இப்படியெல்லாம் பல்வேறு முறைகளில் கடன் பட்டு இருக்கிற விவசாயிகளின் கடனைப் பற்றி முழுமையாகத் தெரியாது.





(பிற்பகல் 1-00)

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். மிக அதிகமான கடன் பளுவினால் கிராமப்புற மக்கள், ஏழை எளிய மக்கள் அழுந்திக் கிடக்கிறார்கள். நாள்தோறும் அவர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போகிறது என்பதை இந்த நாட்டிலே இருக்கிறவர்கள் எல்லாம் ஒப்புக்கொள்வார்கள். அதிலே கருத்து வேற்றுமை இருக்க முடியாது. அதற்கு என்ன செய்வது? பல காலமாக இந்தப் பிரச்சனை சொல்லப்படுகிறது. பாங்குகள் மூலம் ஓரளவு கடன் வசதி அளிப்பதன் மூலம் இம்மாதிரி கொள்ளையடிக்கின்ற லேவாதேவிக்காரர்களிடமிருந்து அவர்களை விடுதலை செய்யலாம் என்ற கருத்து பரவலாக இருந்துவந்தது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக வங்கிகளும் கிராமப்புற மக்களிடம் அடுத்தோடிச் சென்று இந்த உதவியைச் செய்ய முன்வரவில்லை. வழங்குகின்ற கடன்களில் 6 சதவிகிதம் தான் கிராமப்புற மக்களுக்குச் செல்கிறது என்று நினைக்கிறேன். பெரும்பகுதி கடன் வசதி படைத்தவர்கள், ஆலை அதிபர்கள், மோட்டார் மன்னர்கள், இன்னும் கிராமப்புறங்களிலே ஏராளமான நிலபுலன்கள் வைத்திருப்பவர்கள் ஆகியோர்களுக்குத்தான் போய்ச்சேர்ந்தது; போய்ச் சேர்ந்துகொண்டே இருக்கிறது. அதல்லாமல் கிராமப் புறங்களிலே இருக்கிற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், சிறு சிறு தொழில் நடத்துகிறவர்களுக்குப் போய் சேரவில்லை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அதனால் அந்த ஏழை எளிய மக்கள் எல்லாம் கொள்ளைலாப லேவாதேவிக் காரர்களைத்தான் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. அதனால் பெரும் துன்பத்திற்கு ஆளாகிறார்கள். அதுபற்றி எவ்வளவு நேரம் பேசினாலும் கதை கதையாகப் பேசிக்கொண்டே இருக்கலாம்.

'பாண்டட் லேபர்', அடிமைத் தொழில் இருக்கிறது. இது ஒழிக்கப்பட வேண்டுமென்று 20 அம்சத் திட்டத்திலே இருக்கிறது. பல மாநிலங்களிலே, அண்மை மாநிலங்களிலே கூட இது குறித்து அவசரச் சட்டம் இயற்றியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே முடியாது என்று அரசு கருதுவதுபோல எனக்குத் தோன்றுகிறது. ஒருவேளை இங்கே அடிமைத் தொழில் இல்லை என்று கருதுகிறார்களோ என்னவோ. அடிமைத்தொழில் இங்கே இருக்கிறது. தமிழ்நாட்டிலே பல இடங்களில் இருக்கிறது. கோவை மாவட்டத்தில் கூட இருக்கிறது. இங்கே இருப்பது ஒருவகையான

'பாண்டட் லேபர்'. சத்தியமங்கலம் தாலுகாவில் இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவரோ ஒரு முறை என்னிடம் சொன்னார். அதைப்போய்ப் பார்க்க வேண்டுமென்று என்னை அழைத்தார்.

சத்தியமங்கலம் தாலுகாவில் மலையடிவாரத்தில் பல கிராமங்கள் இருக்கின்றன. அங்கே கன்ட்ராக்டர்கள் கிராமமக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அந்தக் கிராமங்களின் பெயர் இப்போது என் நினைவில் இல்லை. அங்கே இருக்கிற மக்கள் நாகரிகத்தையே எட்டிப்பார்க்காதவர்கள். வெளி உலகத்திலிருந்து அவர்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். கன்ட்ராக்டர்கள் ரோடு போடுவது போன்ற வேலைகளை எடுக்கிறார்கள். அவர்களை இந்த வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். அவர்களுக்குக் கடனாக ஐந்து ரூபாய், பத்து ரூபாய் கொடுத்து, மிகக் குறைந்த கூலி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கடன்பட்டிருப்பதால் அவர்கள் வேறு வேலைக்கு போகமுடியவில்லை. வெளி உலகத்தை அவர்கள் அறிய வேண்டும் என்ற முறையிலே அங்கே ரோடு போடச்சென்றால் கான்ட்ராக்டர்கள் தடுக்கிறார்கள்; பள்ளிக்கூடம் கட்டுவது என்றால் அதையும் தடுக்கிறார்கள். அந்தக் கிராமங்களை முன்னேறச் செய்ய வேண்டுமென்று அரசு எவ்வளவு செய்ய வேண்டுமென்று கருதினாலும் அவைகளை அவர்கள் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பார்க்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமை பல இடங்களில் இருக்கிறது. அதற்கு எது காரணம் என்று பார்த்தால் இந்தக் கடன் தான்.

ஏழை எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. அதனால் நலிந்த நிலையில் இருக்கிறார்கள். அதனால் வாழ்க்கை நிலையில் உயர முடியவில்லை. சாப்பாட்டிற்குக் கஷ்டப்படுகிறார்கள். அதனால் மற்றவர்களிடம் கடன்பட வேண்டியதிருக்கிறது. தங்கள் உடல், ஆவி அனைத்தையும் லேவாதேவிக்காரர்களிடம் அடகு வைத்துத் தான் கடனை வாங்குகிறார்கள். அவர்களிடம் பொருள் கிடையாது; இருந்தால் அதையும் அடகு வைத்துதான் வாங்குவார்கள். பொருள் இல்லாததால் உடலை அடகு வைக்க நேரிடுகிறது. இந்த நிலை இந்த நாடு பூராவும் இருக்கிறது. இதிலிருந்து அவர்கள் விடுதலை பெறுவது எப்படி?



நம் நாடு முன்னேற்றமடைய வேண்டுமென்று பேசுகிறோம். கிராமம் தான் இந்த நாட்டுக்கு முதுகெலும்பு, அச்சாணி என்று சொல்கிறோம். கிராம மக்களை வாழ வைக்க வேண்டுமென்றால், ரூரல் எக்கானமியை சமநிலைக்குக் கொண்டுவரவேண்டும். இல்லை என்றால் கிராமப்புற மக்கள் நல்வாழ்வு பெறமாட்டார்கள் என்பது மட்டுமல்ல, இந்த நாட்டின் பொருளாதாரம் ஒற்றைச் சக்காத்தில் போய்க்கொண்டிருப்பது போல—சர்க்கஸ் வேலை போல—இருக்கும். ஆகையால் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற பிரச்சனையை வைத்துதான் இதைப் பார்க்க வேண்டும். இந்த மசோதாவை இங்கே கொண்டு வந்த உறுப்பினர் நோக்கமும் சரி, அதிலே பங்குபெற்று பேசியவர்களின் நோக்கமும் சரி கடன் பளுவை ஒட்டு மொத்தமாக ஒழிக்க வேண்டுமென்பதுதான்.

கிராமப்புற மக்களின் வாழ்வை மேம்படுத்த வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதில் இது ஒரு பகுதி. இந்தக் கடன் பளு மற்றவற்றோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. ஏராளமானவர்கள் கடன்பட்டிருக்கிறார்கள். அதைக் கருதித்தான் இந்தச் சட்ட மன்றத்திலே கடன் நிவாரணச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதில் என்ன செய்திருக்கிறோம்? கடனை எல்லாம் வஜா செய்யவில்லை. அதற்குப் பதிலாக மாரட்டோரியம் கொடுத்திருக்கிறோம். கடனைச் செலுத்துவதற்கு வாய்தா கொடுத்திருக்கிறோம். இது பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பயன்படாது. இந்தக் காரணத்தினால் . . . .

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, பாண்டட் லேபர் என்பது சத்தியமங்கலம் தாலுகாவில் இருக்கிறது என்றும், வாழ்நாள் முழுவதும் தங்களை அடகு வைத்திருக்கிறார்கள் என்றும், கடனுக்குத் தங்களைத் தாங்களே விற்றிருக்கிறார்கள் என்றும் திரு. சுப்பிரமணியம் அவர்கள் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த பாண்டட் லேபர் பற்றி மத்திய அரசிலே தீர்மானம் வந்தபோது அங்கே கூறப்பட்ட கருத்து வேறானது. ஆண்டான் அடிமை என்று தஞ்சாவூரிலே முன்னால் இருந்தது. இப்போது இல்லை. ஆனால் வட மாநிலங்களிலே இருக்கிறது. தென்னாட்டில் அப்படி இல்லை. ஜாதி காரணமாகவோ அல்லது மற்ற வகைகளினாலோ அடிமை வேலை வாங்கும் சூழ்நிலை இங்கே இல்லை.

நான் இதுபற்றி ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரையும் அழைத்துக் கேட்டேன். ஏனென்றால் இந்தத் தீர்மானத்தை பிரதம அமைச்சர் கொண்டு வந்தபோது நம்முடைய மாநிலத்திலே தவறு

இருந்துவிடக் கூடாது என்ற அக்கறையோடு அழைத்து, ஆலோசனை நடத்தினேன். நீலகிரி மாவட்டத்தில் ஒரு பகுதியில் இருக்கலாம் என்ற சந்தேகம் கூட ஏற்பட்டது. அங்கே போய் பார்த்ததில் அப்படி ஒன்றும் இல்லை. நேற்றுகூட அதுபற்றி விளக்கம் சொல்லி இருக்கிறேன். ஆகவே, பாண்டட் லேபர் நம்முடைய மாநிலத்திலே இல்லை என்று இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பாண்டட் லேபர் என்பதற்கு அகராதியில் இருக்கிற பொருள்படி இல்லை என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அகராதியில் இருக்கிற பொருள்படியும் இல்லை; நடைமுறைப்படியும் இல்லை. இரண்டு வகையிலும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கு. காமாட்சி:** கோவை மாவட்ட ஆட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் இந்த பாண்டட் லேபரர்ஸ் இருக்கிறார்கள்; வந்து பாருங்கள் என்று தன்னை அழைத்ததாகச் சொல்கிறார்கள் என்பதை அமைச்சரவர்களின் தகவலுக்காகச் சொல்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** சார். இந்த பாண்டட் லேபர் முறை வடக்கேயும் இருக்கிறது; தெற்கேயும் இருக்கிறது. ஆனால் வடக்கே இருப்பதற்கும் தெற்கே இருப்பதற்கும் சில வித்தியாசங்கள் இருக்கலாம். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் ஊரிலே ஒரு துக்கம் ஏற்பட்டுவிட்டால், குறிப்பிட்ட சில நபர்கள் தான் அதை வெளி ஊர்களில் போய்ச் சொல்ல வேண்டும். ஆகவே, இப்போது இல்லை என்று சொல்வது சரியல்ல. இங்கே பாண்டட் லேபர் பல்வேறு ரூபத்தில் இருக்கிறது. சத்தியமங்கலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் யாருக்கும் பூமி சொந்தம் இல்லை. எல்லாம் அடமானம் வைத்திருக்கிறார்கள். அடமானம் வைத்துவிட்டு அடிமை மாதிரி வேலை செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்:** துணைத் தலைவரவர்களே, பாண்டட் லேபர் என்பது பற்றி அண்மையில் டில்லியில் அமைச்சர்கள் மாநாடு நடந்தபோது விளக்கம் தந்தார்கள். அதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.



ஓரிசா மாநிலத்தில் இது பரவலாகக் காணப்படுகிறது. திட்டக் குழுவிலே இருந்து சென்றுவந்த உறுப்பினர் ஒன்றைச் சொன்னார். எங்கே பணம் அதிகமாக புழக்கம் இல்லாத இடம் இருக்கிறதோ அந்தப் பகுதியில்தான் இந்த பாண்டட் லேபர் முறை இருக்கிறது. ஒருவரிடமிருந்து கடனுக்கு எடுத்த நிலத்தை அல்லது வீட்டை திருப்பிக் கொடுத்தாலும் அதற்கு மதிப்பு இல்லாத சூழ்நிலை இருக்கும்போது, அதை வாங்க மானிட்டரி எக்கானமி இருப்பதில்லை. அதனால் அவர்களுடைய உழைப்புக்குத் தான் மரியாதை. ஆகையால் அந்த உழைப்பை தங்களுடைய கடனுக்கேற்ற வகையில் எழுதி வாங்கிக் கொண்டால் அது தான் 'பான்டட் லேபர்' என்பதன் பொருளாகும். அத்தகைய பழக்க வழக்கங்கள் தான் இருக்கின்றன. நம் நாட்டில் பணப் பொருளாதாரம் வளர்ந்திருக்கிறதென்றால் பணம் இல்லையே என்ற குறை தான்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, அதைத் தான் சொல்ல வந்தேன். பான்டட் லேபர் என்பது பற்றி இரண்டு அமைச்சர்களும் சட்டரீதியான ஏற்பாடுகளைப் பற்றிச் சொன்னார்கள். நான் பேச்சின் துவக்கத்திலேயே சொன்னேன். கிராமப்புற மக்கள் சட்டரீதியாக மட்டும் கட்டுப்படுத்தி வைக்கப் படவில்லை. பல்வேறு வகைகளில் சட்டத்தைவிட கொடுமையான பல்வேறு பிணைப்புகளில் பிணைக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் தான் பான்டட் லேபர் போன்ற அடிமைத்தனம் நிலவுகிறது என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதுவும் கோவை மாவட்டத்தில் சத்தியமங்கலம் பகுதியில் இன்றைக்கும் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் உண்டாக்கினார்கள் என்று சொல்ல வரவில்லை. இது தொழிலாளர் அமைச்சரிடம் வருகிறதா என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நிலைமையை விளக்கவேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். அப்படி இருந்தால் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி இழவு விழுந்துவிட்டால் ஒருவர் போய் மற்ற ஊர்களுக்குச் சென்று சொல்லுகிறார்கள் என்று கூறினார். அது சமுதாயத்திலுள்ள பழக்க வழக்கங்கள் தான். அதற்கும் பான்டட் லேபருக்கும் சம்பந்தம் இல்லை.

சில கிராமங்களில் சலவையாளர்கள்—நடக்கும்போது—துணியைக் கொண்டு வந்து போடுவார்கள். அதற்கு சில ஊதியம் பெறுகிறார்கள். அது எல்லாம் ஒரு வழக்கம்.

இதைச் செய்தாக வேண்டுமென்ற சூழ்நிலை இல்லை. தந்தி தபால் இல்லாத காலம் இருந்தது. அப்போது சுற்றத்தார்கள் உறவினர்கள் நடந்து போகிற தூரத்தில் தான் இருந்தார்கள். ஒருவர் மறைந்து விட்டார் என்று செய்தி சொல்லும் வாடிக்கை இருந்தது, இப்போது பஸ்கள் போக்குவரத்து உள்ள காலம். பஸ்ஸில் போய் செய்திகளைச் சொல்லுகிறார்கள். இல்லாவிட்டால் பஸ் கண்டக்டரிடமே சொல்லிவிடுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகத்தில் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இது இன்றைய அமைச்சரவைக்கு பிளாக் மார்க் குத்துவதற்காகச் சொல்வதாக நினைக்கக் கூடாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** சட்டரீதியான பாதுகாப்பு பொருளாதார வகையில், ஜாதி வகையில் நல்ல நோக்கத்தோடு செய்தாலும் கூட சட்டத்தின் பயன்கள் அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. தொன்றுதொட்டு வளர்ந்துவிட்ட சமுதாய பிணைப்புகளில் அம்மாதிரி வந்துவிடுகிறது. எல்லாம் சரியாகி விடாது. காம்ப்ளெஸன்டாக அதீதமான நம்பிக்கையோடு இருந்து விடக்கூடாது. பல பகுதிகளில் கறுப்புப்புள்ளிகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதைத் துடைக்க முயலவேண்டுமென்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். அதைச் சான்றாகக் குறிப்பிட்டேன்.

இம்மாதிரியான நிலைமையில் இவர்களை இந்தக் கடன் சுமையிலிருந்து எப்படி விடுவிப்பது? அவர்கள் காலில் கட்டப்பட்ட பாறையை அவிழ்த்துவிடவேண்டும். இது அல்லாமல் என்ன செய்தாலும் சரி; பல மேம்பாட்டுத் திட்டங்களை அறிவிக்கிறோம், கடன் தருகிறோம் என்று சொல்லுகிறோம். கிராமங்களில் பள்ளிகளைத் திறக்கிறோம். கடன் வாங்கிய பணம் பழைய கடனுக்கு வட்டி கட்டுவதற்குத் தான் உதவுகிறது. பள்ளிகள் திறக்கப்படுகின்றன. பிள்ளைகளை எப்படி அனுப்புவது? அவன் வேலைக்கு போக முடியாது. ஏதாவது ஆடு மாடு மேய்க்க பிள்ளைகளை அனுப்பினால் தான் இந்தக் கடன் சுமையை அவன்



கொஞ்சம் குறைக்கக்கூடும். ஆகவே, பள்ளிக்கூடம் திறப்பது வீணாகப் போகிறது. நமது கல்வி இலாகாவின் அறிக்கையின்படி சில இடங்களில் 40, 45 சதவிகிதம் டிராப் அவுட்ஸ், இன்னும் சில இடங்களில் 70 சதவிகிதம் டிராப் அவுட்ஸ் வருகிறது. காரணம், இவர்களுடைய இந்தக் கடன் சுமை. அந்தச் சுமையை அகற்றாத வரையில், குறைக்காத வரையில் நாம் என்னதான் நல்ல திட்டங்களைச் செய்தாலும், விழலுக்கு இறைத்த நீராகவே மாறும்.

ஆகவே, இந்தப் பிரச்னை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். மற்ற மாநிலங்களில் 5 ஏக்கரா நிலத்திற்குக் கீழ் வைத்திருப்பவர்களுக்கு இந்தக் கடனை வஜா செய்திருக்கிறார்கள். இதை கர்நாடகம், மகாராஷ்டிராம், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் செய்திருக்கிறார்கள். மாரட்டோரியம் கொடுத்து விட்டால் வாய்தா கொடுத்தால் மறுபடியும் கடன் ஏறுகிறது. ஆறு மாதம் வட்டி கொடுக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் பிறகு வட்டி ஏறிக் கொண்டே இருக்கும். அவன் எப்படி விடுதலை பெறுவது? அது சாத்தியமில்லை.

ஒரு சில கடன் கொடுத்தவர்கள் சாதாரணமானவர்களாக இருக்கலாம். ஆனால் பலர் பெரும்பாலானவர்கள் கொடுத்த பணத்தைவிட வட்டியாக பல மடங்கு பெற்றுவிட்டவர்கள் தான். கடனை வஜா செய்வதால் அவர்களுக்கு நிச்சயமாக மனவருத்தம் இருக்கும். ஏற்கனவே வசதியோடு இருந்தவர்களின் வசதியைக் குறைத்தால் மனவருத்தம் வருகிறது.

பெரிய பங்களா ஒன்றில் இரண்டு பேர்களாக இருந்தவர்களை உங்களுக்கு ஏன் இவ்வளவு பெரிய பங்களா, ஒரு சிறிய வீட்டுக்குப் போய்விடுங்கள், அந்த பங்களாவை நல்ல விதத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொன்னால் அது அவர்களுக்கு மன வருத்தமாகத் தான் இருக்கும்.

பல தொழிற்சாலைகள் வைத்திருப்பவர்களிடத்தில் அவைகளைப் பிடுங்கிக் கொண்டால் வேதனையாகத் தான் இருக்கும். அது மனித இயல்பு.

வெஸ்டட் இன்டரஸ்ட்ஸ் உள்ளவர்களுக்கு அவர்களுடைய வசதிகளில் கடுகளவு இழந்தாலும் உயிர் போவது போல் தான் இருக்கும். அதைவிட காலமெல்லாம் உழைத்து வாழ முடியாமல் மேலும் மேலும் கடன் சுமையில் ஆழ்ந்து சேற்றில் சிக்கிவிட்டது

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1975 அக்டோபர் 31

போல், புதை மணலில் சிக்கிக் கொண்டது போல் கீழே போய்க் கொண்டிருக்கிற மக்களைப் பாதுகாப்பது அரசின் தலையாய கடமையாகும். அந்த வகையில் பார்க்கும்போது இந்தக் கடன்களை, பல மாநிலங்களில் செய்திருப்பது போல், ரத்து செய்வது தான் சரியான பரிகாரமாக இருக்கும். மற்றபடி என்ன செய்தாலும் புண் மேல் புனுகு பூசுவது போல் தான் இருக்கும். வேறு எந்தவிதமான பயனும் இருக்காது.

அடுத்ததாக, இப்படி சொல்லும்பொழுது இன்னொன்றையும் சொல்லியாக வேண்டும். பல கிராமங்களில் சர்க்கார் கடன் கொடுத்திருக்கிறார்கள். நேரடியாகவோ அல்லது நிலவளவங்கி மூலமாகவோ கிணறு வெட்டுவதற்கு கொடுத்திருக்கிறார்கள். பல பகுதிகளில் வறட்சியின் காரணமாக கிணறுவெட்ட வாங்கிய பணத்தை கிணற்றுக்குள்ளேயே போட்டிருக்கிறார்கள். தண்ணீர் வந்தபாடில்லை. இந்தப் பணத்தை எப்படித் திருப்பிக் கட்டுவது என்பதற்கு ஒரு வரியையும் காணோம். அந்த நிலையில் பெரும்பாலானவர்கள் இருக்கிறார்கள். ஒரு சிலர் வசதியுள்ளவர்களாக இருக்கலாம். ஆனால் பெரும்பாலான சாதாரண விவசாயிகள் இரண்டு ஏக்கர் முதல் ஐந்து ஏக்கர் வரை வைத்திருப்பவர்கள் சர்க்காரிடம் கடனை வாங்கிவிட்டு கிணறுகளை கால்வாசி கூட முடிக்காமல் விட்டு வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தான் பெரும்பாலானவர்கள்.

இந்தக் கடன்களை அரசு நிச்சயமாக வஜா செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுவேன். காரணம் இப்போது தான் நல்ல சந்தர்ப்பம். அவசரநிலை காலத்தில் தான் பல நல்ல காரியங்களைச் செய்ய முடியும். சாதாரண காலத்தில் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய முடியாது. நல்ல காரியங்களை இந்தக் காலத்தில் தான் செய்தாக வேண்டும். அந்த வகையில் இந்த நடவடிக்கையை எடுத்தாக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன்.

இப்படி கடன்களை வஜா செய்கிறோம் என்றால் மாற்றுக் கடன் வசதி என்ன? இருக்கிற கடனைக் கொடுக்க வேண்டாம் என்பதற்கு மசோதா வந்திருக்கிறது. உறுப்பினர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விரிவாகச் சொன்னார்கள். அந்த மசோதாவை எதிர்ப்பதற்கான வாதங்களை எல்லாம் சொல்லி கடைசியில் ஆதரிப்பதாகச் சொன்னார்கள். உண்மையில் இது ஒரு பிரச்சினை. மாற்றுக் கடன் வசதி ஏற்படுத்தி ஆக வேண்டும்.



1975 அக்டோபர் 31] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

மத்திய அரசு ரூரல் பாங்குகளை ஏற்படுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். நம்முடைய மாநில அரசு 15 சதவிகிதம் பங்கேற்க வேண்டுமென்று நினைக்கிறேன். அதுமட்டுமல்லாமல் இன்னும் முக்கியமான நகரப் பஞ்சாயத்துக்களிலே சாதாரண மக்களுக்குக் குறைந்த வட்டியிலே, கிராமப்புற விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் விவசாயத் தொழிலாளர்களுக்கும் கடன் கிடைக்க வழிவகை கண்டாக வேண்டும். அதை முனைப்புத் திட்டமாக வைத்துச் செயல்படுத்தியாக வேண்டும்.

அதற்கு இத்தனை கோடி வேண்டும், அத்தனை கோடி வேண்டும் என்று மலைப்பதில் பயன் இல்லை. செய்தாக வேண்டும். எந்த அரசாக இருந்தாலும் அவர்கள் செய்கிற காரியங்களால் பெரும் பகுதி நகர்ப்புற மக்கள்தான் பயனடைகிறார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): திரு. சுப்பிரமணியம் அவர்கள் இந்தக் கடன்களை எல்லாம் ரத்து செய்து விட வேண்டுமென்று சொல்லுகிறார்கள்; சுத்தமாக ரைட் ஆப் செய்து விட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஒத்தி வைத்துப் பயனில்லை என்று சொல்லுகிறார்கள். எமர்ஜன்சியைப் பயன்படுத்தி அதைச் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

இது கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கிற கதையாக இருக்கிறது. காசு கொடுத்து வாங்கி உடைத்தால் கஷ்டம் தெரியும். அவர்கள் கட்சியின் தலைமையின் சார்பாக கடன் கொடுத்தவர்களை எல்லாம் அழைத்து 'நீங்கள் ஏன் கோர்ட்டுக்குப் போகிறீர்கள்? நாங்கள் ரைட் ஆப் செய்து விடுகிறோம்; அதற்குப் பதிலாக நாங்கள் டிரஷரியிலிருந்து பணமாகக் கொடுத்து விடுகிறோம்; இதற்காக எமர்ஜன்சியில் ஒரு திட்டத்தை வைத்து இரண்டாயிரம், மூவாயிரம் கோடி ஒதுக்கி இதை லிக்விடேட் செய்கிறோம்' என்று சொன்னால், அது சிறந்த யோசனையாக இருக்கும். இதை ஏன் மத்திய அரசாங்கத்திற்கு யோசனையாக அவர்கள் சொல்லக் கூடாது?

திரு. ஏ. சுப்பிரமணியம்: இத்தகைய வாதங்களை நான் நிரம்பக் கேட்டிருக்கிறேன். எந்த முற்போக்குத் திட்டத்தைச் சொன்னாலும், எந்த முற்போக்குத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் இப்படித் தான் சொல்லுவார்கள். ஏற்கனவே அனுபவித்துவிட்டவர்கள்,

இப்படித்தான் சொல்லுவது வாடிக்கை. இதிலே பெரிய முதலாளியாக இருந்தால் . . . (திரு. கிருஷ்ணமூர்த்தி எழுந்தார்) 'ஐ ஆம் நாட் ஈல்டிங்' . . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். கனம் அங்கத்தினர் அவர்கள் முற்போக்குத் திட்டத்திற்கு இப்படித்தான் எதிர்ப்பு இருக்குமென்று சொல்லுகிறார்கள். அம்மையார் அவர்கள் போனஸ் திட்டத்தில் சொன்ன முடிவுகள் முற்போக்குத் திட்டத்தில் சொன்னதாக நினைக்கவில்லையா? நீங்கள் அங்கே போய் போனஸ் 81/3 சதவிகிதம் கொடுத்தால்தான் கட்சி இங்கே நிலைக்கும் என்று ஏன் போய்ச் சொல்லுகிறீர்கள்? நமக்கு என்று வந்தால் ஒன்று; வேறு எவனுக்கோ என்றால் வேறு ஒரு வாதமா?

திரு. ஏ. சுப்பிரமணியம் : இது என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் என்று தெரியவில்லை. ஏழைத் தொழிலாளியையும், வட்டிக்கு விட்டு அதற்கு மேல் வட்டி வாங்கும் வட்டிக்கடைக்காரரையும் ஒரே நிலையில் வைத்துப் பேசுவதைக் கேட்க வியப்பாக இருக்கிறது. அதுவும் அந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பேச்சு வருவது ஆச்சரியமாக இருக்கிறது.

ஏற்கனவே பல வசதிகளை அனுபவித்து விட்டவர்கள் அப்படித்தான் சொல்லுவார்கள். சாதாரண நிலையில் வட்டிக்குக் கொடுப்பவர்கள் மிகவும் குறைவு. மிகப் பெரும்பாலானவர்கள் வட்டிதான் முதல் என்ற நிலையில் முதலுக்கு மேல் வட்டியை ஒன்றுக்குப் பத்தாக வாங்குகிறார்கள். இது எல்லோருக்கும் தெரியும். அவர்களுக்காக இப்போது பரிந்து பேசவேண்டாம். அது முறையல்ல. சரியானதும் அல்ல.

நிலச் சீர்திருத்தச் சட்டம் வரும்போது, சமுதாயச் சீர்திருத்தத் திட்டங்கள் வரும்போது, நலிந்த மக்கள் வாழ திட்டம் கொண்டு வரும்போது சாதாரணமானவர்கள் ஒரு சிலருக்குப் பாதகம் ஏற்படலாம். அறுவை சிகிச்சை செய்யும்போது சில நேரங்களில் [illegible]ட்லில் இருக்கும் நல்ல ரத்தம் கூடப் போய் விடக்கூடும். நல்ல [illegible] கூடப் போய்விடக்கூடும். ஆனால் நோய் தீர அறுவை [illegible]ச மிக அவசியம். சமுதாயத்தில் அறுவை சிகிச்சை



செய்யப்பட வேண்டிய அளவுக்குப் பல நோய்கள் புரையோடிக் கிடக்கின்றன. அவற்றைப் போக்க அறுவை சிகிச்சை தான் தேவை.

மத்திய அரசு சொல்லிவிட்டது. அதன் பேரில் பல மாநிலங்களில் ஐந்து ஏக்கருக்குக் கீழ் வைத்திருப்பவர்களுடைய கடன்களை ரத்து செய்திருக்கிறார்கள். அம் மாதிரிச் செய்ய வேண்டும். இதற்கு மாற்று ஏற்பாடுகளையும் தெளிவாகச் செய்ய வேண்டும்.

சிட் பண்ட்ஸ் ஒரு பிரச்சினை. இவற்றை ஒழுங்காக நடத்தினால் கிராமப் புற மக்களுக்கு ஓரளவுக்குப் பயனாக இருக்கும். ஆனால் இப்பொழுதோ சிட்பண்ட்ஸ் பெரும்பாலும் சுரண்டல் முறையாக இருக்கிறது. மகாராஷ்டிர மாநிலத்திலே அதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன்பேரில் சிட் பண்ட் காரர்கள் சுப்ரீம் கோர்ட்டில் தடை வாங்கியிருக்கிறார்கள். சிட் பண்ட் என்று ஒரு போர்டை மாட்ட வேண்டியது; பணத்தை வசூல் செய்வது, கொஞ்ச நாள் கழித்து ஆள் மறைந்து விடுவது என்ற வகையில் பல இடங்களில் நடக்கிறது. நிறைய இம்மாதிரி நடந்து கொண்டிருக்கிறது. இது ஒரு சுலபமான ராக்கெட். ஆகவே, இதைச் சரிப்படுத்த, அவர்கள் மக்கள் பணத்தைச் சுரண்டுவதைத் தடுக்க, இந்த முறைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து சிட் பண்ட்ஸ் சட்டத்தை ஒழுங்காகத் திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். இந்தக் கடன் பளுவைக் குறைப்பது, தவிர்ப்பது என்பது ஒன்று. கிராமப் புறப் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசினார்கள். போதுப் பணித் துறையைப் பற்றிப் பேசுகிறார்களோ என்று ஐயம் கொண்டேன். அளவுக்குப் பேசினார்கள். அது ஒரு பகுதி. கிராமப் புற மக்கள் சுமையை இறக்க வேண்டுமென்று சொன்னால், அவர்களுடைய பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று சொன்னார். அதற்கு இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று விவசாயிகள் வாழ்வு ஒழுங்காக அமைய வழிவகை காண வேண்டும். அதிலே பாசன வசதிகள் ஒன்று. நம்முடைய மாநிலத்தில் பல நீர்நிலைகள் தூர்ந்து கிடக்கின்றன. முழுப் பயன் அடைய முடியாது கிடக்கின்றன. இன்னும் பல இடங்களில் நீர்நிலைகள் அமைத்துக் கொள்ள வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த நீர்

நிலைகள் பயன்படும் அளவுக்கு சீர்திருத்தி, செம்மைப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

பல இடங்களில் இம் மாதிரி சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லும்போது அதிலே இன்னும் போதுமான கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. பெரிய திட்டங்கள் பேரில் ஒரு கவர்ச்சி. இந்தக் கவர்ச்சிக்கு அதிகாரிகளும் உள்ளாகிவிட்டார்கள். இந்தக் கவர்ச்சியிலிருந்து அவர்கள் கொஞ்சம் விடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் அடுத்த தனியார் அலுவல்கள் நாளன்று தொடர்ந்து உரை நிகழ்த்துவார்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று பேரவை 4—11—1975 செவ்வாய்க்கிழமை அன்று காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணி அளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

## (10) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

204. Notification issued in G.O. Ms. No. 948, Rural Development and Local Administration, dated 3rd June, 1975 in regard to an amendment to the Tamil Nadu Municipal Services (Discipline and Appeal) Rules, 1970. [Laid on the table of the House under section 204 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

### *B. Reports, Notifications and Other Papers*

* 106. Statement of action taken on the suggestions made by the Members of the Tamil Nadu Legislature during the discussions on the Annual Financial Statement of the Tamil Nadu Electricity Board for the year 1974-75. (English and Tamil).



### *B. Reports, Notifications and Other Papers*—cont.

* 107. The Sakthi Pipes Limited, (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 38 of 1975).

* 108. The Southern Structurals Limited, (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 39 of 1975).

* 109. The Lasco Steels Limited, (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 40 of 1975).

* 110. The Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Amendment Bill, 1975 (L.A. Bill No. 42 of 1975) (with annexure).

* 111. The Tamil Nadu State Wakf Board (Validation of Functions of Special Officer) Bill, 1975 (L.A. Bill No. 43 of 1975).

* 112. The Textool Company Limited, (Acquisition of Undertaking Bill, 1975 (L.A. Bill No. 41 of 1975).

---

* Despatched to Members on 30th October 1975.

# HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidate under the said main headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Board(s)' 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the papers laid on the Table of the House are indexed only under the main heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the main heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion. |
| Ann. | ... | Announcement. |
| B.O.H. | ... | Business of the House. |
| C.A. | ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A. (St.) | ... | Calling Attention Statement. |
| Consid. | ... | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select/Joint Select Committee. |

(ii) Amendment to refer to Select/Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | | |
|---|---|---|
| Consid Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D. E. E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S. D. or D.S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H Dis./H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a bill |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C | .. | Legislative Council. |
| M | .. | Motion. |
| P M | .. | Privilege Motion. |
| R/Res | | Resolution |
| St | | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

Fourteenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.

*28th to 31st October* 1975.

VOLUME LXXIV (Nos. 1 to 4).

## A


PAGES

ABDUL JABBAR, Thiru V. M.—
Apple trees, raising ... ... ... ... 32—33

ACCIDENTS—
Explosion at Keezhathattapparai, details ... ... 10—13

AGRICULTURE—
Agrarian History of Tamil Nadu, seminar .. .. 17—20
Bargur Hill area, loan assistance ... ... 321
Rent cases in Tirunelveli district, disposal ... ... 25—26
Small Farmers' Development Agency Scheme, assistance ... ... ... ... ... 34—37

ALAGARSAMY, Thiru S.—
Agriculturists and Agricultural Labourers' Debts Adjustment Bill, 1974 ... ... ... ... 570—579

ANANDANAYAKI, Thirumathi T. N.—
Censure Motion against Ministry (M) ... ... 280—289

PAGES

A—*cont.*

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—*cont.*

Collapse of bridge at Chetpet causing injuries to labourers (A.M.) ... ... ... ... 553—554

Concessions to Harijans already converted to Christianity, alleged misleading statement by Chief Minister (Privilege Matter) ... ... ... ... 536

ANBAZHAGAN, Thiru K.—

Cholera, deaths in Kanniyakumari district (C.A.St.). 561, 562, 563

Death of Staff Nurse on administering injection in Egmore Eye Hospital (A.M.) ... ... ... 547—549, 550

ANIMAL HUSBANDRY—

Hosur Cattle Farm, Central assistance .. .. 182—183

ARANGANAYAKAM, Thiru S.—

Agriculturists and Agricultural Labourers' Debts Adjustment Bill, 1974 ... ... ... 579—581

Government Arts College, Kumbakonam, starting of M.Sc. course in Chemistry ... ... 162—163

ARANGANNAL, Thiru RAMA—

Censure Motion against Ministry (M) ... ... 105—121

B

BALASUNDARAM, Thiru V.—

Censure Motion against Ministry (M) ... ... 273—279

Fishing Harbours, Thanjavur district ... 329—331

Harijan Hostel for Chunambedu ... ... 188—189

Hostel for Backward classes students at Achirapakkam, opening ... ... 160—162

Tamil Pandits (Grade II), promotion ... 163—166



PAGES

B—*cont.*

BILL(S)—

Additional Sales Tax and Sales Tax (Surcharge) Amendment Bill, 1975—

Message from Legislative Council agreeing without amendment ... ... ... ... 190

Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 (Non-official Bill)—

Consid. ... ... ... ... 570—616

Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Bill, 1975—

Message from L.C. agreeing without amendment ... 565

Contingency Fund (Second Amendment) Bill, 1975—

Message from L.C. agreeing without amendment 53

District Development Councils (Amendment) Bill, 1975—

Int. ... ... ... ... ... 54

District Municipal Councillors (Extension of Term of Office) Bill, 1975 :

Message from L.C. agreeing without amendment ... 339

Educational Institutions (Temporary Control of Property) Amendment and Validation Bill, 1975:

Message from L.C. agreeing without amendment ... 190

Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1975:

Message from L.C. agreeing without amendment ... 339

General Sales Tax (Second Amendment) Bill, 1975 :

Message from L.C. agreeing without amendment ... 189

General Sales Tax (Third Amendment) Bill, 1975:

Message from Governor ... ... ...

Int. ... ... ... ... ... 566

B—*cont.*

BILL(S)—*cont.*

Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1975—
Message from L.C. agreeing without amendment ... 190

Homoeopathy System of Medicine and Practitioners of Homoeopathy (Amendment) Bill, 1975—
Message from L.C. agreeing without amendment ... 54

Inam Estates, Leaseholds and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1975—
Message from L.C. agreeing without amendment ... 565

Indebted Persons (Temporary Relief) Bill, 1975:
Message from L.C. agreeing without amendment ... 190

Indian Stamp (Tamil Nadu Second Amendment) Bill, 1975—
Message from L.C. agreeing without amendment ... 189

Indian Stamp (Tamil Nadu Third Amendment) and Tamil Nadu Court Fees and Suits Valuation (Amendment) Bill, 1975—
Message from L.C. agreeing without amendment ... 565

Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1975—
Int. ... ... ... ... ... 195—196

Motor Transport Workers (Tamil Nadu Amendment) Bill, 1975:
Message from L.C. agreeing without amendment ... 54

Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Second Amendment Bill, 1974—
Consid. ... ... ... ... 195

Panchayats and Panchayat Union Councils (Extension of Term of Office) Bill, 1975—
Message from L.C. agreeing without amendment ... 340

Payment of Salaries (Amendment) Bill, 1975—
Message from L.C. agreeing without amendment ... 565



B—*cont.*

BILL(S)—*cont.*

Public Premises (Eviction of Unauthorised Occupants) Bill, 1975:
Message from L.C. agreeing without amendment ... 565

Relief Undertakings (Special Provision) Amendment Bill, 1975:
Message from L.C. agreeing without amendment ... 54

Restriction of Habitual Offenders (Amendment) Bill, 1975:
Message from L.C. agreeing without amendment ... 54

Towns Nuisances (Amendment) Bill, 1975:
Message from L.C. agreeing without amendment ... 54

Urban Land Tax (Amendment) Bill, 1975:
Message from Governor ... 87
Int. ... ... ... 568

BOARD(S)—
Secondary Education Board, reconstitution ... ... 485—488
Slum Clearance Board, allotment of plots ... ... 180—181

BOOKS AND PUBLICATIONS—
Text Books in Telugu ... ... 13—16

BRIDGES AND CULVERTS—
Causeway across Manimutharu ... ... 515

C

CALLING ATTENTION—
Cholera, deaths in Kanniyakumari district ... ... 560—563
Karungal distributary of Chittar-Pattanamkal system, inadequate water supply ... ... ... 563—564
Paddy procurement, new policy ... ... ... 336—339

CHAIR—
Announcement—
Madurai University Senate, election to ... ... 506

CHAIR—*cont.*

Rulings and Observations:

Adjournment Motions:

*Collapse of a road bridge at Chetput, Madras and consequent injuries to some workers*:

Consent was withheld on the ground that there was no need for a discussion on the subject after the clarification by the Minister for Local Administration ... ... ... 551—560

*Death of a staff nurse in the Eye Hospital, Madras, after injection*:

Consent was withheld on the ground that no discussion was called for after the explanatory statement made by the Minister for Public Health .. .. .. .. .. 545—550

*Deaths due to stampede in the Sourashtra High School Campus, Madurai, and its consequences*:

Consent was withheld on the ground that there was no need to adjourn the other business to discuss the subject in the light of the Chief Minister's statement ... ... ... 52

Calling Attention:

After the Minister had made a statement on a Call Attention Notice, the Member who had called the Minister's attention was entitled to ask one or two questions but he was not allowed to make a speech ... ... 562

Debate:

If any Member thought that another Member gave false information, he should raise it as a matter of privilege .. .. .. .. 277

Members should speak only on the subject under discussion ... ... ... ... 349

*Time limit*: Members should conclude their speeches within the time allotted to them. Only then, the items in the agenda could be completed ... ... 352







CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Enquiry Commission Report:

With reference to a point of order raised that the report of the Ramaprasad Rao's Enquiry Commission ought to have been placed before the House before it was released to the Press, the Speaker observed that the said Commission was not appointed by the House but was appointed by the Government. Therefore, the issue could not be raised under the pretext of a point of order but could be raised only as a point of information. He added that the Chair could give directions only on such matters on which a direction could be given it is not proper to ask the Chair to give directions for anything and everything ... ... ... 192, 194, 195

Matters *Sub-judice* :

Members should avoid a discussion on a matter which is pending before a Court ... ... 124

When a Member referred to the judgment of the High Court on a particular matter while an appeal on it was pending before the Supreme Court, the Chair observed that Members should not probe into a matter which was pending before the Supreme Court. Even though a judgment had already been delivered on the same case by the High Court, as no judgment reached finality unless the appellate body or revisionary forum confirmed it, reference to the matter was out of order .. .. .. 388

Non-Official Business:

During the discussion on a non-official day, a Member could speak for any length of time ... 599

Point of Information:

Information about Call Attention Notices could be sought only in the Speaker's Chamber ... 195

**CHAIR—cont.**

Rulings and Observations—cont.

Point of Order:

*Transaction of Government business on a Non-Official day.*

A point of order was raised by an Opposition Member about the transaction of official business on a non-official day and the Government taking a lot of time to transact official business on a non-official day allotted in lieu of the previous non-official day having been utilised for transaction of official business.

The Chair observed that the particular day was allotted for non-official business in accordance with the unanimous decision of the Business Advisory Committee. He also added that in the rules it was stated that "where a Thursday has been so taken over for the transaction of Government business, the Speaker may allot in lieu thereof any other day for the Private Member' Business .. .. 569

Privilege Matter:

*Alleged furnishing of wrong information by the Chief Minister regarding concessions granted to Harijan converts.*

On 31st October 1975, a Member raised a matter of privilege against the Chief Minister that he misled the House by stating that concessions regarding admissions to educational institutions and reservation in public services had been newly extended to Harijan converts to Christianity on a par with the members of the Backward Classes, even though the concessions had already been granted in the year 1974 itself by a Government Order. The Chief Minister's statement that he gave the concessions only just then for the first time was not correct as those concessions were already in existence. So, the Member contended that it was a misleading statement.



**CHAIR—cont.**

Rulings and Observations—cont.

Privilege Matter—cont.

*Alleged furnishing of wrong information by the Chief Minister regarding concessions granted to Harijan Converts*—cont.

The Chief Minister stated that the concessions granted to Harijan converts in the year, 1974 were applicable only to those who were themselves converts to Christianity and that by a recent Government Order those concessions were made applicable to Harijan converts irrespective of generations. In his speech in the House he had only referred to the recent order and therefore there was no breach of privilege.

The Chair after referring to the facts of the case and the relevant Government Orders observed that the Government had decided to treat all the Scheduled Caste converts to Christianity irrespective of the generation of conversion, as Backward Classes and to extend them the concessions and held that there was no *prima facie* case of breach of privilege involved in the matter. Inasmuch as the other concessions that existed in 1974 had been enlarged irrespective of the generation of conversion, no misstatement had been made by the Chief Minister and there was no *prima facie* case for reference of the matter to the Committee of Privileges. 523—545

Questions and Answers:

Members should only put supplementaries and no explanation thereto was necessary .. 508

Supplementaries should be brief .. .. 7

Speech:

A Member (Thiru Manali Kandasami) was allowed by the Chair to speak sitting .. 364

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
Walk-out :
It is a contempt of the House to stage a walk-out as a protest against the Speaker's ruling. 545

CHITS—
Chit Fund Companies, action taken for defrauding customers ... ... ... ... ... 183—186

COLLEGES—
Agricultural College for Thanjavur ... ... ... 325—327
Government Arts College, Kumbakonam, starting of M.Sc. Course in Chemistry ... ... ... 162—163
Presidency,—Starting of evening classes for Post-graduate Courses ... ... ... ... ... 162

CO-OPERATIVES—
Palm-gur Co-operative Society, formation at Vilathikulam ... ... ... ... ... ... 335—336

D.

DENNIS, Thiru N.—
Cholera, deaths in Kanniyakumari district (C.A.) ... 563
Karungal distributary of Chittar-Pattanamkal System, inadequate water-supply (C.A.) .. .. 563—564

DISEASES—
Cholera, deaths in Kanniyakumari district (C.A.) .. 560—563

DISTRICT ADMINISTRATION—
Natrampalli, upgrading as sub-taluk ... ... 313—314
Thovalai taluk, reorganisation of certain village boundaries ... ... ... ... ... 314

DORAISAMY, Thiru S.—
Censure Motion against Ministry (M) ... ... 369—373



PAGES

D—*cont.*

DORAISAMY, Thiru S.—*cont.*
Coimbatore Medical College Hospital, number of Doctors ... ... ... ... ... 307—308

DROUGHT—
Relief Works, gift from Andhra ... ... ... 505—506

DURAI MURUGAN, Thiru—
Censure Motion against Ministry (M) ... ... 289—294

E.

EDMUND, Thiru G. R.—
Censure Motion against Ministry (M) ... ... 382—402

ELECTRICITY—
Hogenakkal Hydro-Electricity Project, commissioning 27—30
Transmission loss, steps to prevent .. .. 316—321
Upper Thambaraparani Electricity Scheme, implementation ... ... ... ... ... 30—32

EXPUNCTION(S)—
Concessions to Harijans converted to Christianity, alleged misleading statement by Chief Minister (Privilege Matter) ... ... ... ... 545
Deaths due to stampede in Madurai Sowrashtra High School campus (A.M.) .. .. .. 51

EX-SERVICEMEN—
Amalgamated fund, administration ... ... ... 327—329

F.

FAMILY PLANNING—
Family Planning drive in Madras City, details ... 20—22

FISHERIES—
Fishing Harbours, Thanjavur district ... ... 329—331

FOODGRAINS—
Paddy procurement, new policy (C.A.) ... ... 336—339

FRUITS—
Apple trees, raising ... ... ... ... 32—33

G.

GANESAN, Thiru L.—
Agricultural College for Thanjavur ... ... ... 325—327

H.

HANDE, Dr. H. V.—
Censure Motion against Ministry (M) ... ... 121—137, 446
Collapse of bridge at Chetpet causing injuries to labourers (A.M.) ... ... ... ... ... 555—557 559
Concessions to Harijans already converted to Christianity, alleged misleading statement by Chief Minister (Privilege Matter) ... ... ... ... ... 538
Deaths due to stampede in Madurai Sourashtra High School campus (A.M.) ... ... ... 46—47
Doctors of Rural dispensaries, representation from ... 168—169
Ramprasada Rao Commission's report, releasing to press before placing it on the Table (Point of Order) 192—193 194

HANDLOOM(S)—
Price fixation of cloth .. .. .. .. 175—179

HARIJAN WELFARE—
Harijan cultivators, training ... ... ... 519—521
Harijans of Kodhaimangalam, allotment of house-sites ... ... ... ... ... ... 521—523



HOSPITALS AND DISPENSARIES—
Children's Hospital, Madras, shifting .. .. 493—494
Coimbatore Medical College Hospital, number of Doctors ... ... ... ... ... ... 307—308
Dispensary for Pudupet ... ... ... ... 494
Doctors, allowance for conducting Post-mortem examination ... ... ... ... ... 167—168
Doctors of Rural dispensaries, representation from ... 168—169
Hospital for Palaiyanur ... ... ... ... 303
Mayuram Government Hospital, Cardiac Care Unit for ... ... ... ... ... ... 304—307
Sankari Government Hospital, bed strength ... ... 166—167
Siddha dispensaries in rural areas ... ... ... 169—175
T.B. Hospital, Thoppur, bed strength ... ... 494—500
Thiruppuvanam Government Hospital, expansion ... 303—304

HOSTELS—
Backward classes students, Hostel at Achirapakkam, opening ... ... ... ... ... ... 160—162
Harijan Hostel for Chunambedu ... ... ... 188—189
Harijan hostel for North Chennimalai .. .. 187, 188

HOUSING—
Construction cost, reduction .. .. .. 181—182
Fishermen of Nettukuppam, quarters ... ... 332—333

PAGES

I.

Neem oil, production ... ... ... ... 519

INSTITUTES—

Industrial Training Institute for Natrampalli ... 329

IRRIGATION—

Athur village, facilities for ... ... ... ... 312

Karungal distributory of Chittar-Pattanamkal System, inadequate water-supply ... ... ... ... 563—564

Vikraman river, strengthening of banks ... ... 312—313

J.

AMES, Thiru J.—

Cholera deaths in Kanniyakumari district (C.A.) .. 560, 561—562

Deaths due to stampede in Madurai Sourashtra High School campus (A.M.) ... ... ... ... 44—46

JAYARAMAN, Thiru K.—

Censure Motion against Ministry (M) ... ... 254—260

K.

KANDASAMI, Thiru MANALI C.—

Censure Motion against Ministry (M) ... 354—369

KARUNANIDHI, Dr. M.—

Censure Motion against Ministry (M) ... ... 68, 73, 85, 403—406, 474, 475, 476



PAGES

K—*cont.*

KARUNANIDHI, DR. M.—*cont.*

Concessions to Harijans already converted to Christianity, alleged misleading statement by Chief Minister (Privilege Matter) ... ... 524, 526, 528, 529, 530, 531, 532, 533, 534, 535, 536, 537

Deaths due to stampede in Madurai Sourashtra High School campus (A.M.) .. .. .. .. 47—51

Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1975 ... ... ... ... ... 195—196

Seizure of "Makkal Kural" (Point of information). 53

Irrigational facilities in Athur village ... ... ... 312

KHADI AND VILLAGE INDUSTRIES—

Khadi Krafts, turn-over for 1973-74 ... ... 333—335

KITTAPPA, Thiru N.—

Board of Secondary Education, reconstitution ... 485—488

Coimbatore City, aid for development ... ... 186

Drought relief, gift from Andhra ... ... ... 505—506

Fishing Harbours, Thanjavur district .. .. 329—331

Handloom cloth, price fixation .. .. .. 175—179

House construction cost, reduction ... ... ... 181, 182

Khadi Krafts, turn-over for 1973-74 ... ... 333—335

Mayuram Government Hospital, Cardiac Care Unit for ... ... ... ... ... ... 304—307

Musical horns, ban on use ... ... ... ... 509—514

Non-teaching staff, summer vacation for ... ... 16—17

Power, steps to prevent transmission loss ... ... 316—321

Religious Endowments Office, Kumbakonam, shifting 518, 519

Siddha dispensaries in rural areas ... ... ... 169—175

PAGES

K—*cont.*

KITTAPPA, THIRU N.—*cont.*

Small Farmers Development—Agency scheme, assistance ... ... ... ... ... ... 34—37

Tube railway for Madras City ... ... ... 501—504

Vikraman river, strengthening of banks ... ... 312—313

KOTHANDARAMIAH, THIRU K. S.—

Text books in Telugu ... ... ... ... 13—16

KRISHNAMOORTHI, THIRU V. (Nellikuppam)—

Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 ... ... ... ... 613, 614

KUMARASAMI, THIRU K. N.—

Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 .. .. .. .. 581—586

L.

LATHEEF, Thiru M. A.—

Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 ... ... ... ... 589—604

Censure Motion against Ministry (M) ... ... 343—354

LOCAL BODIES—

Coimbatore City, aid for development ... ... 186

Coimbatore Municipality, service conditions of electricity workers ... ... ... ... ... 515—518

M.

MADHAVAN, THIRU S.—

Censure Motion against Ministry (M) ... ... 466

Concessions to Harijans already converted to Christianity, alleged misleading statement by Chief Minister (Privilege Matter) .. .. .. .. 538—540



PAGES

M—*cont.*

MADHAVAN, THIRU S.—*cont.*

Non-compliance of rules *re*: advance notice for taking up of Bills (Point of order) ... ... 568

Paddy procurement, new policy (C.A. St.) ... ... 337—338, 338—339

Ramaprasada Rao Commission's report, releasing to press before placing it on the Table (Point of Order) ... ... ... ... ... ... 191, 193, 194

Urban Land Tax (Amendment) Bill, 1975 ... 568

MANICKAM, THIRU N.—

Hogenakkal Hydro-Electricity Project, establishment 27—30

MARIMUTHU, THIRU A. R.—

Censure Motion against Ministry (M) ... ... 55—82, 467—477

Collapse of bridge at Chetput causing injuries to labourers (A.M.) .. .. .. .. 551

Deaths due to stampede in Madurai Sourashtra High School campus (A.M.) ... ... ... ... 43—44

MARIMUTHU, THIRU M.—

Harijan hostel for North Chennimalai ... ... 187—188

MARUDACHALAM, THIRU N.—

Coimbatore Municipality, service conditions of Electricity workers ... ... ... ... ... 515—518

MEDICAL—

Doctors, allowance for conducting post-mortem ... 167—168

Doctors, rural dispensaries, representation .. 168—169

Drug stores, functioning ... ... ... ... 22—24

M—*cont.* PAGES


MINES AND MINERALS—
Gold and platinum deposits, occurrence in Chalk hills of Salem district ... ... ... ... 314—316

MOTION(S):
Ad Motions:
Collapse of bridge at Chetput c ausing injuries to labourers ... ... ... ... ... 551—560
Death of Staff Nurse in Eye Hospital, Egmore after injection .. .. .. .. .. 545—550
Deaths due to stampede in Madurai Sourashtra High School campus ... ... ... ... ... 41—52
Censure Motion against Ministry ... ... ... 55—137, 196—294, 340—477

MUNUSAMI, THIRU R. R.—
Hogenekkal Hydro-Electricity project, commissioning 27—30

MUSEUM—
Children's Museum, establishment ... ... ... 489—492

MUTHIAH, THIRU M.—
Collectorate of Tirunelveli, shifting ... ... 26—27
High Schools in Tirunelveli district, provision of Science Laboratories ... ... ... ... 308—310
Kalampatti Government High School, construction of Laboratory ... ... ... ... ... 311
Palm-gur Co-operative Society, formation at Vilathikulam ... ... ... ... ... ... 335—336
Starting of Presidency College, Evening Classes for Post Graduate courses .. .. .. .. 162

MUTHU, THIRU V.—
Sankari Government Hospital, bed strength .. .. 166—167

N.

NARAYANASWAMY, THIRU M. V.—
Fishermen of Nettukuppam, quarters for ... ... 332—333

NATARASAN, THIRU E. M.—
Bargur Hill area, agricultural loans .. .. 321

O

OBITUARY REFERENCE—
Thirupathy Thiru K., ex-M.L.A. .. 481




O—*cont.* PAGES


OFFICES—
Collectorate of Tirunelveli, shifting .. .. .. 26—27
Religious Endowments Office, Kumbakonam, shifting 518—519
Sub-Registrar's Office for Natrampalli .. .. 506

P.

PALANISAMY, PULAVAR C.—
House sites for Harijans of Kodhaimangalam .. 521—523
Varadhapattinam road, improvements ... ... 514

PALANISWAMY, THIRU N. K.—
Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 ... ... ... ... 608
Amalgamated Fund for Ex-servicemen, administration 327—329
Censure Motion against Ministry (M) .. .. 378—382
Children's Museum, establishment .. .. 489—492
Deaths due to stampede in Madurai Sourashtra High School campus (A.M.) .. .. .. 41—52
Doctors, allowance, for conducting post-mortem examinations ... ... ... ... ... 167—168
Explosion at Keezhathattapparai, details .. .. 10—13
Family Planning drive in Madras City, details .. 20—21
Harijan cultivators, training for .. .. .. 519—521
Hogenekkal Hydro-Electricity Project, establishment 27—30
Neem oil, production ... ... ... ... 519
Platinum and Gold deposits, occurrence in Chalk hills of Salem district .. .. .. .. .. 314—316
Police Training College, Vellore, shifting .. 157—160
Social Security Scheme, details ... ... ... 1—10
Transportation plan for Coimbatore, details .. 24—25
Transport Corporations, purchase of spare parts .. 506—509
Tube railway for Madras City .. .. .. 501—504
Upper Thambaraparani Electricity Scheme, implementation ... ... ... ... ... ... 30—32

PANCHAYATS—
Vikramasingapuram Town Panchayat, declaration as Hill area .. .. .. .. .. 179—180

P—cont.

PAPERS LAID ON THE TABLE—
Co-operative Land Development Banks Act, 1934, notification .. 294
District Municipalities Act, 1920, notification ... 616
Electricity Board, statement of action taken on suggestions made by Members on Annual Financial statement for 1974-75 .. .. .. 616
General Sales Tax Act, 1959, notification .. .. 137
Lasco Steels Limited (Acquisition of undertaking) Bill, 1975 ... .. .. .. .. .. 617
Motor Vehicles Taxation Act, 1974, notifications ... 294, 295
Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Second Amendment Bill, 1974, report of Joint Select Committee ... ... ... 295
Private Electricity Supply undertakings (Acquisition) Amendment Bill, 1975 with annexure .. .. 617
Prohibition Act, 1937, notification .. .. .. 478
Sakthi Pipes Limited (Acquisition of undertaking) Bill, 1975 .. .. .. .. .. 617
Southern Structural Limited (Acquisition of undertaking) Bill, 1975 .. .. .. ... 617
Textool Company Limited (Acquisition of undertaking) Bill, 1975 .. .. .. .. .. 617
Town and Country Planning Act, 1971, notification .. 478
Wakf Board (Validation of Functions of Special Officer) Bill, 1975 .. .. .. .. 617
PAULIAH, THIRU A.—
Chettiarmadam Higher Elementary School building, repairs .. .. .. .. .. .. 488—489
PERUMAL, THIRU A. R.—
Censure Motion against Ministry (M) .. .. 209—219





P—cont.

POLICE—
Training College, Vellore, shifting .. .. 157—160
PONNAPPA NADAR, THIRU R.—
Censure Motion against Ministry (M) .. .. 196—207, 208, 233
Cholera, deaths in Kanniyakumari district (C.A.). 562
Explosion at Keezhathattapparai, details .. .. 10—13
Non-compliance of rules re. advance notice for taking up of Bills (Point of Order) .. .. .. 567—568
Union Schools, awards for talented students of Secondary School stage ... ... ... ... ... 311
PRIVILEGE—
Concessions to Harijans already converted to Christianity, alleged misleadiing statement by Chief Minister .. .. .. .. .. .. 523—545

R

RADHAKRISHNAN, THIRU M. S.—
Samalpatti—Virudhuvilanginan Bus service, discontinuance ... ... ... ... ... ... 38
RAILWAYS—
Tube railway for Madras City .. .. .. 501—504
RAJAH PILLAY, THIRU V. K.—
Bheemanagari Road, repairs ... ... ... ... 187
Thovalai taluk, reorganisation of certain village boundaries .. .. .. .. .. 314
RAJARAM, THIRU K.—
Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 .. .. .. .. 607, 608, 609—610
Censure motion against Ministry (M) ... ... 445—446
RAMACHANDAN, THIRU S.—
Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 .. .. .. .. 608—609

PAGES

*R*—cont.

RAMACHANDRAN, THIRU S.—cont.

Collapse of bridge at Chetpet causing injuries to labourers (A.M.) .. .. .. .. 557—559

District Development Councils (Amendment) Bill, 1975 .. .. .. .. .. .. 54

RAMAKRISHNAN, THIRU Kuppal K. S.—

Central bus stand—East Madurai Railway station plying of buses .. .. .. .. .. 38—40

T.B. Hospital, Thoppur, bed strength .. .. 494—500

RAMAN, THIRU O. P.—

General Sales Tax (Third Amendment) Bill, 1975 .. 566

RAMASAMY, THIRU G.—

Dispensary for Pudupet ... ... ... 494

Natrampalli, upgrading as sub-taluk .. .. 313—314

Sub-Registrar's Office for Natrampalli .. .. 506

ROADS—

Bheemanagari Road, repairs .. .. .. 187

Varadhapattinam road, improvements ... 514

*S.*

SADIQ PASHA, THIRU S. J.—

Occupants of Kudiyiruppu (Conferment of ownership) Second Amendment Bill, 1974 .... 195

SANGUMUTHU THEVAR, THIRU S.—

Causeway across Manimutharu .. .. .. 515

Rent cases in Tirunelveli district, disposal .. .. 25—26

Vikramasingapuram Town Panchayat, declaration as Hill area .. .. .. .. .. 179—180

SATHYAVANIMUTHU, THIRUMATHI—

Censure Motion against Ministry (M) ... ... 264—273, 275, 445, 446



PAGES

S—cont.

SATHYAVANIMUTHU, THIRUMATHI—cont.

Concessions to Harijans already conversed to Christianity, alleged misleading statement by Chief Minister (Privilege Matter) .. .. .. .. 524—532, 534, 541

SCHOOLS—

Chettiarmadam Higher Elementary School building, repairs ... ... ... ... ... 488—489

Kalampatti Government High School, construction of Laboratory .. .. .. .. .. 311

Non-teaching staff, summer vacation for .. .. 16—17

Tirunelveli district, provision of Science Laboratories in High Schools .. .. .. .. .. 308—310

Union Schools, awards for talented students of secondary school stage .. .. .. .. 311

SEENIVASAN, THIRU P.—

Censure M[illegible]on against Ministry (M) ... ... 232—244, 276, 277, 293—294

SELVARAJ, THIRU M.—

Agriculturists and Agricultural Labourers Debts Adjusment Bill, 1974 .. .. .. .. 595—596

SHANMUGAM, THIRU P. U.—

Karungal distributory of Chittar—Pattanamkal System inadequate water supply (C.A.St.) .. .. 564

SOCIAL WELFARE—

Social Security Scheme, details .. .. .. 1—10

SONIAH, THIRU T.—

Hospital for Palaiyanur ... ... .. 303

Madurai Bus Stand, expansion .. .. .. 187

Thiruppuvanam Government Hospital, expansion .. 303—304

PAGES

S—cont.

SOUNDARAPANDIAN, THIRU P.—
Hogenekkal Hydro-Electric Project, commissioning ... 27—30
Hosur Cattle farm, Central assistance .. .. 182—183
Jeeno variety carrot, cultivation ... ... ... 33
Private Member's Business, transaction of Government business on the day allotted for—(Point of order). 569
Sivayam tank, Kulithalai, renovation ... ... 504—505
Slum Clearance Board, allotment of plots .. .. 180—181
Tapioca seedlings (high yielding variety) purchase ... 322—325
322—325

STADIA—
Stadium at Coimbatore, demolition .. .. 482—485

SUBRAMANIAM, THIRU A.—
Agriculturists and Agricultural Labourers Adjustment Bill, 1974 ... ... ... ... 604—616
Explosion at Keezhathattapparai, details ... 10—13
Stadium at Coimbatore, demolition ... ... ... 482—485

SUPPU, Thiru K.—
Censure Motion against Ministry (M) ... ... 219—232
236—237
238

SURENDRAN, THIRU M.—
Censure Motion against Ministry (M) ... ... 373—378

T.

TANGAMANI, THIRU K. T. K.—
Censure Motion against Ministry (M) ... ... 82—105, 414, 437, 445
Collapse of bridge at Chetpet causing injuries to labourers (A.M.) .. .. .. .. 551—553
Concessions to Harijans already converted to Christianity, alleged misleading statement by Chief Minister (Privilege Matter) ... 534—535, 544



PAGES

T—cont.

Death of Staff Nurse on administering injection in Egmore Eye Hospital ... ... ... ... 545—547, 549—550
Deaths due to stampede in Madurai Sourashtra High School campus (A.M.) .. .. .. 41—43, 52
Paddy procurement, new policy (C.A.) ... ... 336—337, 338
Ramaprasad Rao Commission's report, releasing to press before placing it on the Table (Point of order) ... ... ... ... ... ... 190—191, 192
Seizure, "Makkal Kural" (Point of information) .. 53

TANKS—
Kolunchipatti, formation of new ... ... ... 504
Sivayam tank, Kulithalai, renovation ... ... 504—505

TAPIOCA—
Seedlings (High yielding variety), purchase .. 322—325

TEACHERS—
Tamil Pandits (Grade II), promotion ... ... 163—166

THIMMARAYA GOUNDER, THIRU T. C.—
Industrial Training Institute for Natrampalli ... 329
Natrampalli, upgrading as sub-taluk .. .. 313—314
Sub-Registrar's Office for Natrampalli ... ... 506

THYAGARAJAN, THIRU E. S.—
Censure Motion against Ministry (M) ... ... 340—343

TRANSPORT AND COMMUNICATIONS—
Central bus stand — East Madurai Railway station, plying of buses ... ... ... ... ... 38—40
Corporations, purchase of spare parts ... ... 506—509
Madurai Bus stand, expansion ... ... ... 187
Musical horns, ban on use ... ... ... 509—514
Samalpatti-Virudhuvilanginam bus service, discontinuance ... ... ... ... ... ... 38
Transportation plan for Coimbatore, details ... ... 24—25

V. PAGES

VADIVEL, THIRU S.—
Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 ... ... ... ... 586—589

VADIVEL, THIRU S. K.—
New tank for Kolunchipatti ... ... ... ... 504

VEGETABLES—
Geeno variety carrot, cultivation ... ... ... 33

VENKATASWAMY, THIRU B.—
Agrarian History of Tamil Nadu, seminar on ... 17—20
Censure Motion against Ministry (M) ... ... 260—264
Drug Stores, functioning ... ... ... 22—24

W.

V211,31'N75
D
31N76-64-32

WAHAB, THIRU K. A.—
Censure Motion against Ministry (M) ... ... 244—254
Children's Hospital, Madras, shifting ... ... 493—494
Chit Fund Companies, action taken for defrauding customers ... ... ... ... ... 183—186
Family Planning drive in Madras City, details ... 21—22

WALK-OUTS—
Walk-out by Members ... ... ... ... 542, 545, 560

61720